தஸ்கீருல் குர்ஆன்

திருக்குர்ஆனின் நினைவூட்டல்

மூலம் • தமிழாக்கம் • விரிவுரை

1

அத்தியாயம் 1 - 4

மவ்லானா வஹீதுத்தீன் கான்

தமிழில்

Dr. சையத் ரஃபீக் பாஷா Ph.D.,

மொழியாக்க மேலாய்வு

அபி (எ) Dr. ஹபீபுல்லாஹ் Ph.D.,

தஸ்கீருல்
குர்ஆன்

திருக்குர்ஆனின் நினைவூட்டல்

மூலம் • தமிழாக்கம் • விரிவுரை

1

அத்தியாயம் 1 - 4

மவ்லானா வஹீதுத்தீன் கான்

தமிழில்
Dr. சையத் ரஃபீக் பாஷா Ph.D.,

மொழியாக்க மேலாய்வு
அபி (எ) Dr. ஹபீபுல்லாஹ் Ph.D.,

மூலத்துடன் ஒப்பீடு
ஃபைஸ் காதிரி

குட்வேர்ட் புக்ஸ்

This Tamil translation of Tazkirul Quran is copyright free
இந்நூல் காப்புரிமையற்றது

முதல் பதிப்பு : ஜனவரி 2026
First published : January 2026

Tazkirul Quran by
Maulana Wahiduddin Khan

Tamil Translation of Tazkirul Quran by
Dr. Syed Rafeeq Basha M.A., Ph.D.,

Tamil Translation and Editorial Board
Dr. Habibullah (Abi) M.A., Ph.D.,
Nariyambut Abdussalam
Abu Nathera Omeri
Yusuf Raja B.Sc.,
Faiz Qadiri M.A.,
Hafiz Syed Iqbal Ahmed Omeri
Khateeb Asrarul Hasan Omeri
Kollu Nadeem M.A.,

Goodword Books
A-21, Sector 4, Noida - 201 301.
Tel : +91-8588822672
email : info@goodwordbooks.com
Web : www.goodwordbooks.com

CPS Internarional
Centre for Peace and Spirituality International
1, Nizamuddin West Market, New Delhi - 110 013.
Mob. +91-9999944119
email: info@cpsglobal.org
Web : www.cpsglobal.org

Goodword Books, Chennai
324, Triplicane High Road, Chennai - 600005.
Mob : +91-9600105558
email : chennaigoodword@gmail.com

ISBN : 978-93-49952-47-8

Printed in India

பொருளடக்கம்

பதிப்புரை		4
திருக்குர்ஆன் தமிழாக்க முன்னுரை		6
தஸ்கீருல் குர்ஆன் முன்னுரை		16

அத்தியாயங்களின் பெயர்கள்

தமிழில்	அரபியில்	
1. தோற்றுவாய்	அல்ஃபாத்திஹா	30
2. பசுமாடு	அல்பகரா	32
3. இம்ரானின் குடும்பத்தினர்	ஆலு இம்ரான்	207
4. பெண்கள்	அன்னிஸா	300

பதிப்புரை

'தஸ்கீருல் குர்ஆன்' (திருக்குர்ஆனின் நினைவூட்டல்) எனும் இந்த விரிவுரை மவ்லானா வஹீதுத்தீன் கான் அவர்களால் உருதுவில் எழுதப்பட்டு 1986 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பிற்காலத்தில் இவ்விளக்கவுரை அரபியிலும் (2009) ஹிந்தியிலும் (2008) ஆங்கிலத்திலும் (2011) இன்னபிற மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்பொழுது இந்த விளக்கவுரையின் முதல் பாகம் (அத்தியாயங்கள் 1 முதல் 4 வரை) தமிழில் வெளியிடப்படுகிறது.

உலக அளவில் திருக்குர்ஆனுக்கு இதுவரை ஏராளமான விளக்க உரைகள் எழுதப்பட்டிருந்த போதிலும் மவ்லானாவுடைய இவ்விளக்கவுரை அவற்றிலிருந்து தனித்து நிற்கிறது. குர்ஆன், அடிப்படையில் மனிதர்களுக்கான நினைவூட்டலாகவும் அறிவுரையாகவும் இருப்பதால் ஒவ்வொரு வசனத்திற்குள்ளும் பொதிந்துள்ள அறிவுரையையும் ஞானத்தையும் மட்டுமே இவ்விளக்கவுரை பிழிந்தெடுத்துத் தருகிறது. எனவே, பொதுவாகக் குர்ஆன் விரிவுரைகளில் காணப்படும் சொற்பொருள்/இலக்கணம் தொடர்பான விவாதங்களும் பிற விரிவுரைகளுடனான ஒப்பீடுகளும் இதில் இல்லை.

குர்ஆன் பொதுவாக மனிதர்களால் எழுதப்படும் நூல்களைப் போன்ற பாகங்களைக் கொண்டது அல்ல. அது அடிப்படையில் சிதறிக்கிடக்கும் கருத்துகளின் தொகுப்பைப் போன்ற ஓர் அமைப்பைக் கொண்டிருக்கிறது. குர்ஆனின் அத்தியாயங்களுக்கிடையிலும் வாக்கியங்களுக்கிடையிலும் ஆழமான ஓர் ஒழுங்குமுறை இருப்பது உண்மைதான் என்றாலும் சிறு சிறு வாக்கியத்துண்டுகளில் ஒரு முழுமையான செய்தியைக் கூறுவதென்பதே அதன் பொதுவான அமைப்பாக இருக்கிறது.

ஒவ்வொரு பத்தியிலும் 'தஸ்கீர்' (நினைவூட்டல்) அடிப்படையில் குறிப்பிட்ட கருத்தைப் புரிய வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வாறு இதை வாசிப்பவர், இவ்விளக்கவுரையின் எப்பக்கத்தைத் திருப்பினாலும் - எந்தப் பத்தியைப் படித்தாலும் இறைவன் புறத்திலிருந்து அளிக்கப்படும் ஆன்மாவுக்கான உணவைப் பெற்றுப் பசியாறலாம்.

மவ்லானா வஹீதுத்தீன் கான் அவர்களுக்கே உரிய தர்க்க ரீதியிலான எளிய திருக்குர்ஆன் விளக்கங்கள் அல்லாஹ்வின் அருளால் வாசகர்களின் நெஞ்சைத் திறக்கச்செய்பவை; படைப்பாளனோடு மனிதர்களை நெருங்கச்

செய்பவை; குர்ஆனின் ஆழங்களுக்கு அழைத்துச் செல்பவை; செயலின் முழு உருவாக வாழ்ந்திட நம்மை வார்த்தெடுப்பவை; சத்தியத் தேடல் உள்ள ஒருவனுக்கு வாழ்க்கையின் யதார்த்தத்தைப் புரிய வைப்பவை; இறைவனை மட்டுமே சார்ந்து வாழும் தூய வாழ்க்கைக்கு (God oriented life) வித்திடுபவை.

இந்த விரிவுரையைத் தமிழில் கொண்டுவர வேண்டும் என்று நாங்கள் கவலை கொண்டிருந்த நேரத்தில், உருது - தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் நல்ல புலமை கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய முனைவர். ரஃபீக் பாஷா அவர்கள் இந்தப் பணியைச் செய்து தருவதாகப் பொறுப்பேற்று மிகக் குறுகிய காலத்தில் இதன் முதல் பகுதியை மொழிபெயர்த்தும் தந்துவிட்டார். இதன் அடுத்த பகுதிகளையும் மிகுந்த ஈடுபாட்டோடு முழு நேரப்பணியாகச் செய்து வருகிறார். அவருக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இதைப்போலவே எங்களது பதிப்பகத்தின் சார்பாக வெளியிடப்பட்டிருக்கும் திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பைச் செம்மைப்படுத்திய நாடறிந்த கவிஞரும் தமிழ்ப் பேராசிரியருமான ஹபீபுல்லாஹ் (அபி) அவர்கள், இந்த விரிவுரையின் தமிழ் மொழிபெயர்ப்பையும் தம்முடைய உடல்நிலையைப் பொருட்படுத்தாமல் மேலாய்வு செய்திருக்கிறார். அவருக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வது மட்டுமின்றி அவரது உடல்நலத்திற்காக இறைவனிடம் இறைஞ்சுகிறோம். 'தஸ்கீருல் குர்ஆனி'ன் இந்த முதல் பாகம் வெளிவருவதற்காகப் பல்வேறு வகையில் பங்களிப்பு செய்த அனைவருக்கும் எங்கள் பதிப்பகத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இம்மொழிபெயர்ப்பின் மூலமாக மக்கள் அனைவரும் பெரிய அளவில் பயன்பெற ஏக இறைவன் அருள் புரிவானாக!

குட்வேர்ட் புக்ஸ்
சென்னை.

முன்னுரை

திருக்குர்ஆன்: இயற்கை மொழி

குர்ஆன் இறை வேதமாகும். காலாகாலத்திற்குமாக முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட நிலையில் அது உள்ளது. அரபு மொழியில் எழுதப்பட்டிருந்தாலும் அந்த மொழி தெரியாதோர் குர்ஆனை அறிந்துகொள்ள வாய்ப்பாக மொழிபெயர்ப்புகள் உள்ளன. மூலமொழிக்கு மாற்றாக மொழிபெயர்ப்பு இருக்க முடியாது. எனினும் அரபுமொழி பேசும் மக்களுக்கு அப்பாற்பட்டு ஒட்டு மொத்த மனிதகுலத்திற்கும் இறை வசனத்தைப் பரப்பும் முக்கிய நோக்கம் நிறைவேற மொழிபெயர்ப்புகள் உதவுகின்றன.

குர்ஆன் அரபு மொழியில் எழுதப்பட்டுள்ளது என்பது வெளிப்படைதான். ஆனால் உண்மையில், ஆதிப் படைப்பின் போது மனிதர் அனைவரிடமும் இறைவன் நேரடியாகப் பேசிய 'இயற்கை மொழி'யில் அது (குர்ஆனின் அடிப்படை ஞானம்) இருக்கிறது. இவ்வகையில் மனிதகுலத்தை நோக்கிய இறை அழைப்பு மனிதர் அனைவரின் பிரக்ஞையிலும் எப்போதும் இருந்துவருகிறது. இதன் காரணமாகத்தான் குர்ஆன் முழுஉலகும் புரிந்துகொள்ளத்தக்க வேதமாக உள்ளது; சிலரிடம் உணர்வின் தளத்தில்; பிறரிடம் ஆழ்மனத்தில். இந்த உண்மை குர்ஆனில் இவ்விதம் விவரிக்கப்பட்டுள்ளது:

"மாறாக இவை அறிவு வழங்கப்பட்டோரின் உள்ளங்களில் (பதிவாகக்கூடிய) தெளிவான வசனங்களாகத் திகழ்கின்றன. தீவினையாளர்களைத் தவிர (வேறு எவரும்) எம் வசனங்களை நிராகரிக்கமாட்டார்கள்." (29:49)

உணர்வுத்தளத்தில் குர்ஆன் விளக்கும் இறை உண்மை மனிதனின் ஆழ்மனத்தில் ஆதியிலிருந்தே இருந்துவருகிறது என்பதுதான் இதன் பொருளாகும். எனவே குர்ஆனின் செய்தி மனிதனுக்கு அந்நியமானதன்று. அது மானிட இயற்கையில் இசைந்துள்ளதும் மனித அறிவுக்கு ஏற்கனவே நெருக்கமாகி விட்டதுமாகும்.

முதல் மனிதர் ஆதம் படைக்கப்பட்ட போதே பின்னாளில் பிறக்கவிருக்கும் மனிதர்கள் அனைவரும் தொடக்கமாகப் படைக்கப்பட்டு விட்டனர் எனக் குர்ஆன் கூறுவது இவ்வுண்மையைப்

புலப்படுத்துகிறது. அந்தச் சமயத்தில்தான் இறைவன் அனைத்து மனிதர்களுடனும் நேரடியாக உரையாடினான்.

இந்த நிகழ்வு திருக்குர்ஆனில் இவ்விதம் மறைமுகமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது :

"(நபியே!) உம் இறைவன் ஆதமுடைய மக்களின் முதுகுத் தண்டிலிருந்து அவர்களின் வழித்தோன்றல்களை வெளியாக்கி அவர்களுக்கு அவர்களையே சாட்சியாக்கி "நான் உங்கள் இறைவன் அல்லவா?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் "ஆம் இதற்கு நாங்களே சாட்சியாக இருக்கிறோம்" என்றனர். மறுமை நாளன்று "இதைப்பற்றி நாங்கள் எதுவும் அறிந்திருக்கவில்லையே" என்று நீங்கள் கூறக்கூடாது என்பதற்காகவே (உங்கள்) முன்னோர் அளித்த சாட்சியத்தை நாம் நினைவுபடுத்துகிறோம்." (07:172)

கீழ்க்கண்ட வசனத்தில் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயான உரையாடலைப் பற்றி குர்ஆன் மேலும் தெரிவிப்பதாவது:

'நாம் (செயலுரிமை எனும்) இந்தப் பொறுப்பை வானங்கள், பூமி, மலைகள் (ஆகியவற்றின்) முன்னால் வைத்தபோது அவை அதனைச் சுமக்க அஞ்சி மறுத்துவிட்டன. ஆனால் மனிதன் அந்தச் சுமையை ஏற்றுக் கொண்டான். உறுதியாக அவன் தீவினையாளனாகவும் அறிவிலியாகவும் ஆகிவிட்டான்'. (33:72)

குர்ஆனின் சாரம் ஏற்கனவே மனிதன் அறிந்ததுதான்; முற்றிலும் புதிதன்று. உண்மையில் குர்ஆன் மனித மனத்தை மலரச்செய்கிறது. பின்னர் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து தன்னைக்காத்து, தன் இயல்பை உயிர்ப்புடன் வைத்துக் கொண்டிருக்கும் ஒருவன், குர்ஆனை ஓதும் போது அவன் மனம் திறக்கிறது; அங்குத்தான் இறைவனின் உரையாடல் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதனை மனத்தில் கொண்டால் குர்ஆன் மொழிபெயர்ப்பு அதனைப் புரிந்துகொள்ளச் சிறந்த கருவியாகத் திகழ்வதை உணரலாம்.

மனிதருடனான இறைவனின் உரையாடல் முதல் உடன்படிக்கை எனில் குர்ஆன் இரண்டாம் உடன்படிக்கையாகும். ஒன்று மற்றதற்குச் சாட்சியாக இருக்கிறது. அரபுமொழியை மிகக்குறைவாக அறிந்த அல்லது அறவே அறியாத ஒருவனும் மொழிபெயர்ப்புகள் மூலம் குர்ஆனை வாசிக்கிறான்; இதனால் குர்ஆனை அதன் முழுமையில் புரிந்துகொள்ள முடியவில்லையே என அவன் நிராசை கொள்ளவேண்டியதில்லை. ஏனெனில் இறைவேத வசனங்களை இயற்கையாகவே பெறுபவன் என்பதே மனிதனைப் பற்றிய குர்ஆனின் கருத்தாக்கமாகும். தற்காலத்திய மரபணு

தொடர்பான அறிவியலும் மானுடவியல் கண்டுபிடிப்புகளும் இதனை வலுப்படுத்துவதாக உள்ளன.

திருக்குர்ஆன்: இறைவாக்கு

குர்ஆனைப் படிக்கும்போது 'இது இறைவசனம்' என மீண்டும் மீண்டும் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். சாதாரணப் பார்வையில் இது ஒரு நேரான உண்மை. ஆனால் குறிப்பிட்ட சூழல்களில் வைத்துப் பார்க்கும்போது இது மிக அசாதாரணமான அறிவிப்பு. உலகில் எத்தனையோ நூல்கள் புனித நூல்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், குர்ஆனைத் தவிர வேறு எந்த மத நூலும் தன்னைக் கடவுளின் வசனம் என முன்னிறுத்தியதில்லை. குர்ஆனின் இத்தகைய தனித்தன்மை வாய்ந்த கூற்று, வாசகனுக்குச் சிறந்த தொடக்கப் புள்ளியாக அமைகிறது. பின்னர் அவன் மனிதர்கள் படைத்த நூல்களிலிருந்து வேறுபட்ட தனிச்சிறந்த நூலாகக் கண்டுக் குர்ஆனை வாசிக்கிறான். 'மனிதனே! உன் இறைவனே உன்னுடன் பேசிக்கொண்டிருக்கிறான். அவனுடைய வசனங்களுக்குச் செவிசாய்த்து அவற்றைப் பின்பற்று' என்ற விதமாக வரும் அறிவிப்புகளைக் குர்ஆனில் திரும்பத் திரும்பக் காணலாம். இத்தகைய நேர்ப்பேச்சுமுறை வித்தியாசமானது; வேறு எந்த நூலிலும் இல்லாதது; வாசகனிடம் அழுத்தமான பாதிப்பை உண்டாக்குவது. இறைவன் தன்னிடம் நேரடியாகப் பேசுவதாக அவன் உணர்கிறான். இந்த உணர்வு, குர்ஆனின் உறுதிவாய்ந்த வசனங்களைத் தீவிரமாகக் கருத்தில்கொள்ள அவனைத் தூண்டுகிறது.

குர்ஆன் வசனங்களின் தொகுப்புமுறை தனித் தன்மையுடையது. மனிதர்களால் எழுதப்படும் நூல்களில் கருத்துக்கள் தலைப்புகளின் அடிப்படையில் வரன்முறைப் படுத்தப்பட்டிருக்கும். ஆனால் குர்ஆன் இத்தகைய பாணியைப் பின்பற்றுவதில்லை. சாதாரண மனிதனுக்கு அது முறைப்படி அமையாதது போலத் தோன்றும். உண்மையில் ஆழ்ந்து நோக்கும்போது மிகச்சிறப்பான ஒழுங்கு முறையில் அமைந்திருப்பது புலப்படும். அதன் நடை கம்பீரமானது. அதைப் படிக்கும் போது, அதனை எழுதியவர் உன்னதமான உயரிய இடத்திலிருந்து ஒட்டுமொத்த இனத்தை நோக்கித் தனித்த அக்கறையுடன் பேசுவதாகத் தோன்றும்.

குர்ஆனின் ஒரு சிறப்பியல்பு, எந்த நேரத்திலும் அதனை எழுதிய ஆசிரியருடன் அதனை ஓதுபவர் தொடர்பு கொள்ளலாம், வினாக்களை எழுப்பி விடைகளைப் பெறலாம் என்பதாகும்.

படைத்தவனே அவன்தான் என்பதால் மனிதனின் அழைப்பிற்கு அவன் செவிசாய்க்கிறான்; பதில் தருகிறான். அவன் வாழும் இறைவன்.

இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட வேதம்

இறைத்தூதர் முஹம்மதுக்கு இறைவனால் அருளப்பட்ட வேதம் குர்ஆன். ஒரே சமயத்தில் முழுவதுமாக அது வெளிப்படுத்தப் படவில்லை. பகுதி பகுதியாகப் பல்வேறு சூழ்நிலைகளில் 23 ஆண்டுகளில் அது அருளப்பட்டது. குர்ஆனின் முதற் பகுதி கி.பி. 610-ஆம் ஆண்டில் இறைத்தூதருக்கு மக்காவில் இருந்தபோது அருளப்பட்டது. அதன்பின் குர்ஆனின் அடுத்தடுத்த பகுதிகள் தொடர்ந்து அவருக்கு அருளப்பட்டன. குர்ஆனின் இறுதிப் பகுதி கி.பி.632-ஆம் ஆண்டு அவர் மதீனாவில் இருந்தபோது அருளப்பட்டது.

சிறிதும் பெரிதுமாக 114 அத்தியாயங்கள் குர்ஆனில் உள்ளன. வசனங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 6600 ஆகும். மனனம் செய்து ஓதுவதற்கு எளிதாகக் குர்ஆன் 30 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வானவர் கேப்ரியேலின் வழிகாட்டுதலில் இப்பகுதிகள் இறுதியாக ஒழுங்குபடுத்தப்பட்டன. கேப்ரியேல் மூலமாகவே இறைவன் தூதர் முஹம்மதுவுக்குத் திருக்குர்ஆனை வெளிப்படுத்தினான்.

குர்ஆன் அருளப்பட்ட 7-ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டிலேயே காகிதம் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்பாட்டில் இருந்தது. 'பேப்பிரஸ்' என வழங்கப்படும் இந்தக் காகிதம் குறிப்பிட்ட மரங்களின் நார்களைக் கொண்டு கைகளால் தயாரிக்கப்படுவதாகும். குர்ஆனின் ஒவ்வொரு பகுதியும் அருளப்பட்ட சமயத்திலேயே உடனுக்குடன் அது பேப்பிரஸில் அரபு மொழியில் (6:7) எழுதப்பட்டது. மக்களும் அந்தக் குர்ஆன் வசனங்களை அவ்வப்போதே மனனம் செய்துகொண்டனர். இறைவழிபாட்டின் போதும் இஸ்லாமிய அழைப்பிற்கான அழைப்புப் பணியின் போதும் குர்ஆன் வசனங்களே ஓதப்பட்டு வருகின்றன. இவ்விதமாக ஒரே சமயத்தில் குர்ஆன் எழுதப்பட்டும் மனனம் செய்யப்பட்டும் வந்தது. இறைத்தூதர் வாழ்ந்த காலக்கட்டம் வரை இவ்விதமாகவே குர்ஆன் பாதுகாக்கப்பட்டது.

இறைவனின் படைப்புத் திட்டம்

ஒவ்வொரு நூலுக்கும் ஒரு நோக்கம் உண்டு. குர்ஆனின் நோக்கம் இறைவனின் படைப்புத் திட்டத்தை மனிதன் உணரும்படி செய்வதே ஆகும். அதாவது, இந்த உலகை இறைவன்

ஏன் படைத்தான்? மனிதனைப் பூமியில் வாழச் செய்வதற்கான காரணம் என்ன? இறப்பிற்கு முன்புள்ள உலக வாழ்க்கையில் மனிதனிடமிருந்து இறைவனின் எதிர்பார்ப்பு என்ன? இறந்தபின் அவன் எதிர்கொள்ளவேண்டியது என்ன? இவற்றை மனிதனுக்கு விளக்குவதே குர்ஆனின் நோக்கம். முடிவற்றவனாகவே மனிதன் படைக்கப்படுகிறான். அவ்வாறு அவனைப் படைக்கும்போது அவனது வாழ்வை இறைவன் இரு பகுதிகளாகப் பிரிக்கிறான். ஒன்று, இறப்புக்கு முன்புள்ள சோதனைக் காலப் பகுதி; அடுத்தது, இறந்தபின்புள்ள மறுமைக்காலப்பகுதி. இம்மை வாழ்வில் மனிதன் செய்த நற்செயல்களுக்கான கூலியும் தீச்செயல்களுக்கான தண்டனையும் வழங்கப்படும் பகுதி அது. இவை முறையே முடிவற்ற சொர்க்கமும் முடிவற்ற நரகமும் ஆகும். இந்த உண்மையை மனிதன் உணரும்படி செய்வதே குர்ஆனின் நோக்கமாகும். இப்புனித நூலின் கருப்பொருளும் இதுவேயாகும். இம்மையிலிருந்து மறுமைக்கான பயணத்தில் அவனுக்கு முழுவதுமாக வழிகாட்டி உதவுவது திருக்குர்ஆனின் கருப்பொருள்.

எச்சரிக்கை தரும் இறைவேதம்

திருக்குர்ஆன் படிப்பினைகளும் இறை எச்சரிக்கைகளும் கொண்ட நூல். இன்னும் சரியாகச் சொல்வதென்றால் அது ஒரு ஞான நூல். மரபான அறநூலின் வழிமுறையைக் குர்ஆன் பின்பற்றவில்லை. ஒரு சராசரி மனிதன் குர்ஆனை ஓதுகையில் துண்டு துண்டான அறிவிப்புகளின் தொகுப்பாக அவனுக்கு அது தோன்றலாம். மேலோட்டமான பார்வையில் இந்த உணர்வு உண்மைதான். குர்ஆனின் இந்த அமைப்பு ஒரு குறைபாடு அல்ல; முதன்முதலாக இறைத்தூதருக்கு அருளப்பட்ட மூலவடிவத்தை மாற்றாமல் பாதுகாக்கும் குர்ஆனியத் திட்டம் இது. வேதத்தில் தேடுதலில் ஈடுபடும் ஒருவன் ஒரு நேரத்தில் ஒரு பக்கத்தை அல்லது ஒரு வசனத்தை அல்லது ஒரு வரியை மட்டும் வாசித்தாலும் சத்தியத்தின் செய்தியை அவனுக்குத் தெரிவித்துவிடும் நோக்கம் இதனால் நிறைவேறிவிடுகிறது.

குர்ஆனின் அடிப்படையான ஓர் அம்சம் மாபெரும் கொடையாளனின் அருட்கொடைகளை மனிதனுக்கு நினைவூட்டுவதாகும். அவனது கொடைகளில் மிகச்சிறந்தது மனிதனைப் படைக்கையில் தனிச் சிறப்புமிக்க தன்மைகளை இறைவன் அவனுக்கு வழங்கியதாகும். மற்றொரு சிறந்த கொடை மனிதனுக்கு உதவும் அனைத்து ஆதாரங்களையும் கொண்ட பூமியில் அவனை வாழச் செய்ததாகும். இயற்கையின் இந்தக்

கொடைகளை அனுபவிக்கும்போது தனக்கு அருள்கின்றவனை மனத்தில் கொள்ளவும் தன்னைப் படைத்தவனின் உன்னதத்தை உணர்ந்து ஏற்றுக்கொள்ளவும் செய்வது குர்ஆனின் நோக்கம். இவ்வாறு செய்தால் மனிதன் நிலையான சொர்க்கத்தில் நுழையும் பேறு பெறுவான். அருளாளனைப் புறக்கணிப்பது நரகத்திற்கு இட்டுச் செல்லும் செயலாகும். தப்பமுடியாத இந்தத் தண்டனை உறுதியை நினைவுறுத்துகிறது குர்ஆன்.

ஆன்மிக உள்ளொளியும் இறைவனை உணர்தலும்

குர்ஆனின் ஒரு முக்கியமான தகுதி, அது நமக்கு அடிப்படையான, இன்றியமையாத கொள்கைகளை மட்டுமே விளக்கி, அடிக்கடி அவற்றையே வலியுறுத்துவதாகும். மாறாக அடிப்படையானவை அல்லாதவையும் வடிவம் தொடர்பானவையும் குர்ஆனில் ஆகக்குறைவாகவே காணப்படுகின்றன. குர்ஆனிய அமைப்பின்படி வடிவத்திற்கு இரண்டாமிடமே அளிக்கப்பட்டுள்ளது. வாசகன் உணர்ந்து போற்றும் வண்ணம் குர்ஆன் இவ்வியல்பில் மிகத் தெளிவாக உள்ளது.

இஸ்லாமிய ஆளுமை உருவாக்கத்தில் உள்ளுணர்வுக்கு மிக மிக முக்கியமான பங்குண்டு. உள்ளுணர்வு வளருமேயானால் இஸ்லாமிய அமைப்பு இயற்கையாகவே உருவாகிவிடும். ஆனால் அமைப்புமுறைச் செயல்பாட்டால் ஆன்மிக உள்ளுணர்வை ஒருபோதும் உருவாக்கமுடியாது. இதன் காரணமாகவே மனிதனுக்குள் ஒரு ஞானப்புரட்சியை உருவாக்கி அதனை வளர்த்தெடுப்பதைக் குர்ஆன் நோக்கமாகக்கொண்டுள்ளது. இந்தப் புரட்சியை 'மஃரிஃபா' (சத்தியத்தை உணர்தல்) என்று குர்ஆன் குறிப்பிடுகிறது. (05:83)

குர்ஆன், அறிதல் நிலையில் மனிதன் சத்தியத்தைக் கண்டடைவதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. இந்த நிலையில் இறைவன் மீது உண்மையான நம்பிக்கை பிறக்கிறது. ஆன்மிக உள்ளுணர்வு இல்லையெனில் அங்கே இறைநம்பிக்கை இல்லை.

ஜிஹாத்: அமைதியான கொள்கைப் போராட்டம்

ஊடகங்கள் மூலமாக மட்டுமே குர்ஆனை அறிபவர்களிடம் குர்ஆன் 'ஜிஹாத்'திற்கான வேதம் எனவும் ஜிஹாத் என்பது வன்முறையின் மூலம் நோக்கத்தை அடைதல் எனவும் கருத்துப் பதிவாகியிருக்கிறது. இது மிகத்தவறான புரிதல். குர்ஆனைச் சுயமாக வாசிப்பவர்களுக்கு அது வன்முறையைப் போதிக்கும் வேதம் அல்ல என்பது தெளிவாகத் தெரியும். குர்ஆன் தொடக்கம் முதல்

இறுதி வரை அமைதியையே பரப்பும் வேதமாகும்; எவ்வகையிலும் அது தீவிரவாதத்தை ஆதரிப்பதன்று. குர்ஆனின் போதனைகளில் ஜிஹாத்தும் ஒன்று. ஆனால் 'ஜிஹாத்'தின் சரியான பொருள் 'அமைதியான அருமுயற்சி' என்பதுதான். ஜிஹாத் பற்றிய குர்ஆனியக் கருத்தாக்கத்தைக் கீழ்வரும் வசனம் தெளிவாக்கும்.

"எனவே நீர்மறுப்பாளர்களுக்குக் கீழ்ப்படியாதீர். (குர்ஆனாகிய) இதன் மூலம் அவர்களிடம் (இறைச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதற்காகக்) கடும் முயற்சி மேற்கொள்வீராக!" (25:52) என்பது இறைத்தூதருக்கு இறைவன் இட்ட கட்டளை.

குர்ஆன் என்பது ஆயுதமன்று; 'அமைதிப் போராட்டம்' எனும் புனிதக் கருத்தியலை அறிமுகம் செய்யும் வேத நூல். குர்ஆனைப் பொறுத்தவரை அத்தகைய போராட்டத்தின் வழிமுறை மனிதர்களின் உள்ளங்களில் ஆழப்பதிந்துவிடும் வார்த்தைகள் கொண்டு பேசுவதாகும். (4:63)

ஆக, மனிதனின் மனத்தையும் அறிவையும் தொட்டு ஈர்ப்பதுவே குர்ஆனிய அணுகுமுறையாகும். இவ்வாறு மக்களின் மனங்களை நோக்கிப் பேசுவதன்மூலம் அவர்களை நிறைவடையச் செய்யலாம்; குர்ஆனின் உண்மைத் தன்மையை உணரச் செய்யலாம். சுருக்கமாகச் சொல்வதென்றால் அவர்களுள் ஓர் அறிவுப் புரட்சியை உண்டாக்கலாம். இதுவே குர்ஆனின் நோக்கம். இவ்வகையிலான நோக்கங்களை விவேகமான விவாதங்கள் மூலமே அடைய முடியும்; வன்முறையாலோ ஆயுதம் தாங்கிய போராட்டத்தாலோ அல்ல.

"ஆகவே (உங்களுடன் போரிடும்) அவர்களை எங்குக் கண்டாலும் கொல்லுங்கள்" (02:191) எனப் போர்புரியஅனுமதி அளிக்கும் இதுபோன்ற சில வசனங்கள் குர்ஆனில் உள்ளன என்பது உண்மையே.

சிலர் இதுபோன்ற வசனங்களைக் சுட்டிக்காட்டி இஸ்லாம் போர் மற்றும் வன்முறையின் மார்க்கம் எனக் கருத்துருவாக்க முயல்கின்றனர். இது முற்றிலும் தவறானது. முஸ்லிம்கள் மீது வலுத்தாக்குதல் நிகழ்த்தியவர்கள் தொடர்பாக மட்டுமே, வரையறைக்குட்பட்ட பொருளில் அமைந்தவை இவ்வசனங்கள். மேற்குறித்த வசனம் இஸ்லாத்தின் பொதுவான கட்டளை அன்று.

குர்ஆன் முழுவதும் ஒரே சமயத்தில் இன்றுள்ள வடிவத்தில் அருளப்பட்டதன்று. சூழ்நிலைக்கு ஏற்ப 23 ஆண்டுகள் பகுதி பகுதியாக அவ்வப்போது குர்ஆன் வெளிப்படுத்தப்பட்டது. இதில் போர் நடைபெற்ற காலம் மூன்று ஆண்டுகளே. மீதி 20 ஆண்டுகள் அமைதியான காலக் கட்டமாகும். இந்தச் சமயத்தில் அருளப்பட்ட

குர்ஆன் வசனங்கள் இறைவனை அறிதல், இறை வணக்கம், ஒழுக்கம், நீதிநெறிமுறை முதலிய இஸ்லாத்தின் அமைதி அறிவுரைகளையே தாங்கியுள்ளன.

இவ்விதம் இறைவேதத்தின் செய்திகள், கொள்கைகள் முதலியவை பல்வேறு வகைகளாய்ப் பிரிந்திருப்பது இயல்பானதும் சமய நூல்கள் அனைத்திலும் பொதுவாகக் காணப்படுவதுமாகும். உதாரணமாக, இந்துக்களின் புனித நூலான கீதை, ஞானம் மற்றும் நீதிநெறிகள் தொடர்பானது. இவற்றுடன் கிருஷ்ணன் அர்ஜுனனைப் போர்புரிய ஊக்குவிக்கும் வசனமும் கீதையில் உள்ளது. (பகவத்கீதை 03:30) கீதை மீது நம்பிக்கை கொண்டோர் எப்போதும் போர் செய்வதில் ஈடுபட வேண்டும் என்பதல்ல இதன் பொருள். மகாத்மா காந்தி தமது அகிம்சைக் கொள்கையை அதே கீதையிலிருந்து பெற்றார். வேறுவழியே இல்லாத, விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே கீதையிலுள்ள போர்புரியத்தூண்டும் வசனங்கள் பொருந்தும். ஆனால் அன்றாட வாழ்வுக்கு மகாத்மாகாந்தி பெற்றுக்கொண்ட அமைதி அறவுரைகளையே கீதை போதிக்கிறது.

இதுபோலவே இயேசு கிறிஸ்துவும் 'பூமியின்மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள்: சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன்" (மத்தேயு 10:34) என்று கூறினார்.

இயேசு கிறிஸ்து இவ்விதம் கூறியதால் அவர் போதித்த சமயம் போரையும் வன்முறையையும் கொண்டதெனத் தீர்மானிப்பது சரியன்று. இயேசுவின் இந்தக் கூற்று குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே பொருந்துவது. மற்றபடி மனிதவாழ்வில் நற்குணத்தை வளர்த்துக்கொள்ளுதல், ஒருவரை ஒருவர் நேசித்தல், ஏழைகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் உதவுதல் எனும் அமைதி விழுமியங் களையே அவர் போதித்தார்.

இதுவே குர்ஆனுக்கும் பொருந்தும். இறைத்தூதர் முஹம்மது மக்காவிலிருந்து மதீனாவிற்குப் புலம்பெயரும் நிலையில், சிலை வணக்கம் புரிந்துவந்த மக்காவாசிகள் அவரிடம் மிகக் கடுமையாக நடந்து கொண்டனர். ஆனால் இறைத்தூதர் எப்போதும் பொறுமை யுடனும் மோதலைத் தவிர்க்கும் உத்தியுடனும் போரைத் தவிர்த்தே வந்தார். எனினும் தவிர்க்கவே முடியாத சூழ்நிலைகளில் வேறு வழியே இல்லாத காரணத்தால் தற்காப்பிற்காகச் சில சந்தர்ப்பங்களில் போர்புரிய வேண்டியிருந்தது. இதுபோன்ற சமயங்களிலேயே போர் தொடர்பான இறைவசனங்கள் வெளிப்பட்டன. இத்தகைய இறைக்கட்டளைகள் குறிப்பிட்ட அந்தச் சூழ்நிலைகளுக்கு மட்டுமே தவிரப் பொதுவாகப்

பின்பற்றப்பட வேண்டியவை அல்ல; எல்லா காலங்களுக்கும் பொருந்துவனவும் அல்ல.

அதனால்தான் இறைத்தூதரின் நிலையான உயர் தகுதியை உணர்த்தவரும் குர்ஆன், 'அனைத்துலகத்தார்க்கும் ஓர் அருட்கொடை' எனக் குறிப்பிடுகிறது. இஸ்லாம் என்னும் அரபிச் சொல்லின் பொருளுக்கேற்ப, அதன் முழு அர்த்தத்தில், அது 'அமைதி மார்க்கம்' தான்.

குர்ஆன் தனது வழியை 'அமைதிக்கான வழிகள்' (5:16) எனக் குறிப்பிடுகிறது. 'சமாதானமே சிறந்தது' (4:128) எனவும் விளக்குகிறது.

'(அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில்) குழப்பம் ஏற்படுவதை இறைவன் விரும்புவதில்லை' (2:205) என்றும் குர்ஆன் தெளிவுபடுத்துகிறது. ஆகவே இஸ்லாமிய மார்க்கமும் வன்முறையும் ஒன்றுக்கொன்று முரணானவை என்பது மிகைக்கூற்று ஆகாது.

'இஸ்லாமிய வன்முறை' என்ற கருத்தாக்கம் எடுத்த எடுப்பிலேயே புறந்தள்ளப்படவேண்டிய ஒன்று. இன்றைய உலகில் வன்முறை நிலையானதன்று என்னும் உண்மையே இஸ்லாமியக் கொள்கைக்கு வன்முறை அந்நியமானது என்பதற்குப் போதுமானதாகும். சோதனையான எத்தனையோ காலக்கட்டங்களைத் தாண்டி நிலைத்திருக்கும் மார்க்கம் இஸ்லாம். அதனால் வன்முறை போன்ற எந்தக் கொள்கைக்கும் ஆதரவாக அது இருக்க முடியாது. இஸ்லாமிய மார்க்கத்துடன் வன்முறையை இணைக்க முற்படுவது நீடித்து வந்திருக்கும் இஸ்லாத்தின் தன்மையையே சந்தேகிக்கும் செயலாகும். எனவே 'இஸ்லாமிய வன்முறை' என்று கூறுவது 'அமைதியான வன்முறை' எனக் குறிப்பிடுவது போல முரணான ஒன்றாகும். இஸ்லாத்தின் போதனைகள் அனைத்திற்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அமைதியே அடிப்படையானதாகும்.

திருக்குர்ஆனை வாசிப்பது எப்படி?

'குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதுவீராக!' (73:4) எனக் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. மெதுவாக, அளவான ஒலிநயத் தொனியில் குர்ஆனைச் சீராக ஓத வேண்டும் என்பது இதன் பொருள். அதாவது உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் தந்து முழுக் கவனத்துடன் ஓதவேண்டும். அவ்வாறு ஓதும்போது குர்ஆனுக்கும் ஓதுபவருக்குமிடையே இருவழிச் செயல்பாடு நிகழ்கிறது.

ஓதுபவருக்குக் குர்ஆன் இறைவனின் பேச்சு. ஒவ்வொரு வசனத்திற்கும் அவர் உள்ளம் அப்பேச்சுக்குப் பதிலளிக்கத் தொடங்குகிறது.

இறைவனின் மாட்சிமையைக் குர்ஆன் கூற, வாசிப்பவர் அதனை உணரும்போது அவரது முழு வாழ்வும் வலுவான தாக்கத்திற்குள்ளாகிறது. இறைவனின் அருட்கொடைகளைக் குர்ஆன் அடுக்குகையில் வாசிப்பவர் உள்ளம் நன்றிப் பெருக்கால் நிறைகிறது. இறைவனின் தண்டனைகள் விவரிக்கப்படும்போது அவர் நடுநடுங்கிப் போகிறார். இறைவனின் கட்டளையைக் குர்ஆன் தெரிவிக்கையில் அதனை நிறைவேற்றி இறைவனின் அடியான் ஆகிவிட வேண்டும் எனும் தீவிர உணர்ச்சி அவருள் எழுகிறது.

வஹீதுத்தீன் கான்
டிசம்பர் 2015
புது டில்லி.

தஸ்கீருல் குர்ஆன்

குர்ஆன் மிக உயர்ந்த ஓர் அறிவுசார்ந்த நூலாக இருந்தாலும், அது இயற்கையான வரம்புகளுக்குள் கல்வியையும், அறிவையும் முழுமையாக உள்ளடக்கியதாய் இருக்கிறது. ஆனால், குர்ஆனில் எதையும் நிரூபிக்க வழக்கிலிருக்கும் அறியப்பட்ட அறிவியல், கலைநுட்பம் சார்ந்த பாணி மேற்கொள்ளப்படவில்லை.

குர்ஆனின் வழிமுறையானது, கலைநுட்ப நெறிமுறைகள் மற்றும் அறிவுசார்ந்த விவரங்களைப் புறம் வைத்துவிட்டு உண்மையான கருத்தை ஒரு பயனுள்ள அழைப்பியல் பாணியில் முன்வைப்பதாகும். இதற்குக் காரணம், குர்ஆனின் நோக்கம் ஓர் அறிவுசார்ந்த வாசிப்பை முன்னிறுத்துவது அல்ல. அதன் நோக்கம் நினைவூட்டுவதும் அறிவுறுத்துவதும் ஆகும். நினைவூட்டலுக்கும் அறிவுறுத்தலுக்கும் எளிமையான பாணி எப்போதும் பயன் தரக்கூடியதாக இருக்கும். கலைநுட்ப, அணுகுமுறையல்ல.

ஆயினும், குர்ஆனைப் படிக்கும் போது, ஒருவர் குர்ஆனிய கூற்றுகளின் அறிவியல் விவரங்களையும் அதன் கலைநுட்ப அம்சங்களையும் அறிய விரும்புவது, ஒரு கற்றலுக்கான அறிவார்ந்த தேவையாகும். அத்தகைய சூழ்நிலையில் எழும் கேள்வி, குர்ஆனை விளக்குவதற்கு எப்படிப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான். குர்ஆனின் விளக்கம் அதற்குரிய எளிமையான, அழைப்பியல் பாணியில் அளிக்கப்பட வேண்டும், அதன் பயனாக, அவ்விளக்கம் குர்ஆனின் மூல நோக்கமான அறிவுறுத்தல் - நினைவூட்டல் சூழலைத் தக்கவைத்துக்கொள்ள இயலும். ஆனால் அத்தகைய சூழ்நிலையில், முற்றிலும் கல்வித் தேவைகளைக் கவனத்தில் கொள்ள முடியாது. மறுபுறம், கல்வி மற்றும் கலைநுட்ப அம்சங்களை முன்னிறுத்தி ஒரு விரிவான விளக்கவுரை எழுதப்பட்டால், அது சில குறிப்பிட்ட நபர்களின் விருப்பத்திற்குரியதாக இருக்கலாம். ஆனால் பொதுமக்களுக்கு அது ஒரு வறண்ட ஆவணமாகவே இருக்கும். அது குர்ஆனின் உண்மையான நோக்கமான நினைவூட்டல் - அறிவுறுத்தல் ஆகியவற்றுக்கு ஊறு விளைவிக்கும்.

இந்தப் பிரச்சினைக்கான எளிய தீர்வு, குர்ஆன் விளக்கம், அறிவுறுத்தல், நினைவூட்டல் கொண்ட வடிவில் அமைய வேண்டும். தகவல்கள், வரலாற்றுக் குறிப்புகள் போன்றவை தனியே குர்ஆன் கலைக்களஞ்சியம் எனும் பிரிவில் சேர்க்கப்பட வேண்டும். பின்னர், தகவல்கள் மற்றுமுள்ள குறிப்புகள் குர்ஆன் கலைக்களஞ்சியம் என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுத் தனி நூலாக வெளியிடப்பட வேண்டும். இந்த இரண்டாவது நூலில் குர்ஆனியக் குறிப்புகளை விரிவாகப் புரிந்துகொள்வதற்குத் தேவையான அனைத்துக் கலைநுட்ப விவாதங்களும் அறிவியல், வரலாற்றுத் தகவல்களும் இருக்க வேண்டும். உதாரணமாக, இறைத்தூதர் ஆப்ரஹாம் தொடர்பான வசனங்களின் கீழ் எழுதப்படும் விளக்கவுரையில், குர்ஆனில் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் இறைத்தூதருடைய வாழ்க்கையின் படிப்பினைகள் தொடர்பான அம்சங்களை மட்டுமே எழுத வேண்டும். இவை தவிர, அவரைப் பற்றிய வரலாற்றுத் தகவல்களும், சமகாலத் தகவல்களும் குர்ஆன் கலைக்களஞ்சியத்தில் சேர்க்கப்பட வேண்டும். அதை ஒருவர் 'ஆப்ரஹாம்' என்கின்ற வார்த்தையின் கீழ்ப் பார்த்துக்கொள்ளலாம். அதேபோல், இலக்கணம், இஸ்லாமிய சட்டங்கள், இறையியல் மற்றும் இயற்பியல் பிரச்சினைகள் குறித்த விவரங்களும் குர்ஆன் கலைக்களஞ்சியத்தில் சேர்க்கப்பட வேண்டும்; குர்ஆனின் விளக்கவுரையில் அல்ல.

'தஸ்கீருல் குர்ஆன்' இந்த வகையான ஒரு சேவையாகும். தஸ்கீருல் குர்ஆனை நாம் குர்ஆனின் மூல உட்பொருட்களின் நினைவூட்டல் எனும் வரையறைக்குள் மட்டுமே வைத்திருக்கிறோம். இது குர்ஆன் இறக்கியருளப்பட்ட பாணி. குர்ஆன் மேற்கொண்டிருக்கும் முறை இதுதான். குர்ஆனில் இயற்பியல் மற்றும் வானியல் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆனால் இறைவன் அவற்றின் விவரங்களைக் கண்டுபிடித்துத் தொகுக்கப் பிற்கால அறிஞர்களிடம் விட்டுவிட்டான். குர்ஆன் பண்டைய ஆளுமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது, ஆனால் இறைவன் இந்தப் பணியை எதிர்கால நவீனவியல் வல்லுநர்களிடம் விட்டுவிட்டான், அவர்கள் ஆராய்ந்து அவர்களின் வரலாற்று விவரங்களை உலகுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக. இந்த நிகழ்வுகள் அனைத்தையும் இறைவன் குர்ஆனிலேயே சேர்த்திருக்கலாம். ஆனால், அது குர்ஆனில் உள்ள படிப்பினைகள், அறிவுரைகள் ஆகியவற்றின் சூழலை நீக்கிவிடும். ஆகையால், எல்லாவற்றையும் அறிந்திருந்தும், இறைவன் அறிவுரை சார்ந்த விஷயங்களுக்கு மட்டுமே மிக அதிக முக்கியத்துவம் கொடுத்து, மீதமுள்ள விவரங்களை மற்றவர்களுக்காக விட்டுவிட்டான்.

குர்ஆனில், ஒருபுறம் தகவல் சார்ந்த விவரங்களில் மிகப் பல தவிர்க்கப்பட்டுவிட்டன. மறுபுறம், அடிப்படை அறிவுரைகள் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளன. இதனால் பலருக்குக் குர்ஆனில் ஒரே கருத்து மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது எனக் கூறும் வாய்ப்பு கிடைக்கிறது. இதற்குக் காரணம், குர்ஆனின் நோக்கம் மக்கள் அதை ஒரு தகவல் நூலாக வாசிக்க வேண்டும் என்பது அல்ல. குர்ஆன் இறைவனின் வார்த்தைகளையும் மறுமை வாழ்க்கையையும் மக்களின் ஆன்மாக்களுக்கு உணவாக மாற்ற முயல்கிறது. தகவல் நோக்கங்களுக்காக ஒன்றைப் படிக்கும்போது அது கூறியது கூறலாகத் தொடர்ந்து வந்தால் அது அவருக்கு விரும்பத்தகாததாக இருக்கும். ஆனால் ஒருவரின் வாழ்க்கையில் ஒரு விஷயம் ஆன்மாவின் உணவாக உள்ளிறங்கினால், அதை மீண்டும் மீண்டும் வாசிப்பது அந்த மனிதருக்குப் புதிய மகிழ்ச்சியைத் தரும். இன்பம் இருக்குமிடத்தில், கூறியது கூறல் என்ற எண்ணம் மறைந்துவிடுகிறது.

குர்ஆனில் இந்த அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டதெல்லாம், தகவல்கள், கூறியது கூறல் போன்ற கலைச்சொற்களில் சிக்கிக் கிடப்பவர்கள் விளக்கப்படுவதற்கும், குர்ஆனிய உண்மைகளால் ஆன்மீக இன்பத்தின் நிலையை அடையும் மக்கள் தெரிந்தெடுக்கப்படுவதற்கும்தான்.

குர்ஆன் ஓர் அழைப்பியல் நூல்

குர்ஆன் பொதுவாகக் காணப்படும் கல்வியறிவு சார்ந்த படைப்பு அல்ல, அது ஓர் அழைப்பியல் நூல். ஏழாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் ஒரு குறிப்பிட்ட நாட்டினரிடையே இறைவன் தனது அடியார்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தனது பிரதிநிதியாக நியமித்துத் தனது செய்தியை அறிவிக்கப் பணித்தான். இந்த இறைத்தூதர் தனது சொந்தச் சூழலில் இந்தப் பணியைத் தொடங்கினார். அதனுடன், தேவைக்கேற்பக் குர்ஆனின் பகுதிகள் சிறிது சிறிதாக அவர் மீது இறக்கியருளப்பட்டு வந்தன. 23 ஆண்டுகளில் இறைத்தூதரின் அழைப்புப் பணி நிறைவடைந்தவுடன், குர்ஆனும் நிறைவு பெற்றது.

குர்ஆன் இறைவனின் நிரந்தர வழிகாட்டியாக இருந்தாலும், மேற்கண்ட முறைமை அதை ஒரு வரலாற்று நூலாகவும் ஆக்கி விடுகிறது. குர்ஆன், இறைவன் தனது நிரந்தர வழிகாட்டுதலை வரலாற்று வார்ப்பில் வடித்து வழங்கிய நூல் ஆகும்.

இத்தகைய சூழ்நிலையில், பிற்காலத்தில் குர்ஆனை விளக்குவது மனிதனை ஒரு புதிய சிக்கலை எதிர்கொள்ளுமாறு செய்கிறது. குர்ஆன்,

அதன் கட்டளைகள் வெளிப்படுத்தப்பட்ட ஆரம்பச் சூழலின் வெளிச்சத்தில் விளக்கப்பட்டால், பண்டைய காலங்களிலிருந்து வந்த ஒரு வரலாற்று நூலாகத் தோன்றும். மாறாக, குர்ஆனின் விளக்கம் அதன் நிரந்தர முக்கியத்துவத்தின் அடிப்படையில் செய்யப்பட்டால், அதன் வரலாற்று அம்சம் பாதிப்புக்கு உட்படுவதாகத் தெரியும். இந்தப் பிரச்சினையின் காரணமாகப் பிற்காலத்தில் குர்ஆனை விளக்குவது இரண்டு அம்சங்களைக் கருத்தில் கொண்டு ஆற்ற வேண்டிய ஒரு பணியாகியுள்ளது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், குர்ஆனின் நிரந்தர வழிகாட்டுதலைப் புரிந்துகொள்வதற்குரிய ஒரு முக்கியமான வழி, குர்ஆன் பெரும்பாலும் ஒரு தற்காலிகக் குறிப்பின் ஊடாக நிரந்தரமான அறத்தைப் பேசுவதை உணர்வதுதான். உதாரணமாக, மதீனாவில் ஒரு குடும்பத் தகராறு குறித்து ஒரு வசனம் அருளப்பட்டது, அதன் ஒரு பகுதி: 'சமாதானமே சிறந்தது' (4:128). தொடக்க கால குர்ஆனிய வெளிப்பாட்டின் அடிப்படையில் இது ஒரு தற்காலிக, சிறப்புக் குறிப்பாகும். ஆனால், பரந்த பொருந்துதன்மையின் (Universal application) அடிப்படையில், இது எக்காலத்திற்குமான போதனையாக இருக்கிறது. இது வாழ்க்கையின் ஒவ்வொரு காலத்திற்குமானது. அதாவது, வாழ்க்கையின் அனைத்துக் களங்களிலும் சமாதானமே சிறந்தது. குர்ஆனைப் புரிந்துகொள்ள இந்தக் குறிப்பை அறிந்து கொள்வது அவசியம்.

'தஸ்கீருல் குர்ஆனி'ல் இந்த இரண்டு அம்சங்களும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. வரலாற்றுப் பின்னணியும் இதில் சுருக்கமாக முன்வைக்கப்பட்டுள்ளது, எனினும் குர்ஆன் ஒரு வரலாற்று நூலாகத் தோன்றும் வகையில் அல்ல. அதேபோல், இன்றைய சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான வகையில் குர்ஆனிய போதனைகளை இது விவரிக்கிறது. ஆனால் இது குர்ஆனை அதன் வரலாற்று அடித்தளத்திலிருந்து முழுமையாகப் பிரிக்கவில்லை.

குர்ஆன் அருளப்பட்டதன் நோக்கம்

குர்ஆன் ஏன் அருளப்பட்டது? சுருங்கச் சொன்னால், இவ்வினாவுக்கான விடை மனிதனுக்கான இறைவனின் திட்டத்தை விளக்குவது என்பதுதான். மனிதன் இறைவனால் நிரந்தரப் படைப்பாகப் படைக்கப்பட்டான். தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட உலகில் 50 அல்லது 100 ஆண்டுகள் கழித்த பிறகு, ஒருவன் மறுமை உலகில் நுழைவு பெறுகிறான். அங்கே அவன் நிரந்தரமாகத் தங்க வேண்டியிருக்கிறது. இந்த உலகம் செயலிடமாகும்; மறுமை உலகம்

அதன் விளைவுக்கான இடமாகும். ஒரு மனிதன் இந்த வாழ்க்கையில் செய்யும் செயல்கள் அவனது அடுத்த வாழ்க்கையில் பெறப்போகும் நல்ல அல்லது கெட்ட வெகுமதியைத் தீர்மானிக்கும். சிலர் தங்கள் நற்செயல்களின் விளைவாக நிரந்தரமாக சொர்க்கத்திற்குச் செல்வார்கள், சிலர் தங்கள் தீயசெயல்களின் காரணமாக நிரந்தரமாக நரகத்திற்குச் செல்வார்கள். தீவிரமான இந்தப் பிரச்சினையைப் பற்றி மனிதனுக்கு எச்சரிக்கையூட்டவும், பிந்தைய வாழ்வில் தீய விளைவுகளைத் தவிர்க்க தற்போதைய வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும் என்பதை அவனுக்கு அறிவுறுத்தவும் குர்ஆன் இறக்கியருளப்பட்டது.

இறைவன், மனிதனிடம் தனக்கு இருக்கும் எதிர்பார்ப்பின் அடிப்படையில் அறிவு மற்றும் உணர்வுநிலையின், அதே சரியான இயல்புடன் மனிதனைப் படைத்துள்ளான். அவன் சுற்றியுள்ள முழுப் பிரபஞ்சத்தையும் தான் விரும்பிய சரியான தன்மையின் நடைமுறை வெளிப்பாடாக உருவாக்கினான். இருப்பினும், இவை அனைத்தும் மௌன மொழியில் உள்ளன. மனித இயல்பு உணர்வுகளின் வடிவத்தில் செயல்படுகின்றது, இயற்கையின் வெளிப்பாடுகள் உருவகங்களின் வடிவத்தில் செயலாற்றுகின்றன. இயற்கையிலும் பிரபஞ்சத்திலும் மௌன மொழியில் உள்ளதைப் புரிந்துகொள்வது யாருக்கும் சிரமமாக இருக்கக் கூடாது என்பதற்காகப் பேச்சு மொழியில், குர்ஆன் பிரகடனப்படுத்த வந்தது. இயற்கையும் பிரபஞ்சமும் மனிதனுக்கு அமைதியான வழிகாட்டிகள் என்றால், குர்ஆன் ஒரு பேசும் வழிகாட்டியாகும்.

இதற்கும் மேலாக, குர்ஆன் அருளப்பட்ட இறைத்தூதர் ஒரு மேலோங்கிய இறைத்தூதராக இருந்தவர். முந்தைய இறைத்தூதர்கள் இறை அழைப்பாளர்களாக மட்டுமே அனுப்பப்பட்டனர். தம்முடைய அழைப்பிற்குரிய சமூகத்திற்கு இறை விருப்பத்தை முழுமையாகத் தெரிவித்து விடும்போதே அவர்களுடைய பணி முடிவடைந்து விடுகிறது.

அவர்கள் தம்முடைய அழைப்பிற்குரிய மக்களின் மொழியில் பேசினார்கள். ஆனால் மனிதன் தனது சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி அவற்றை ஏற்கவில்லை. இதனால், கடந்த காலங்களில், இறைவனின் விருப்பம் மனித வாழ்க்கையில் செயல் வடிவம் பெறவில்லை. இறைவன் இறுதித்தூதருக்கு மேலாதிக்கத்தொடர்பு வழங்கினான். அதாவது, அவரது பணித்திட்டம் செய்தியை வழங்குவதோடு முடிந்து விடாது; இறைவனின் சிறப்பு உதவியுடன், அது ஒரு நடைமுறை நிகழ்வாக மாறும் வரை கொண்டு சேர்க்கப்பட

வேண்டும் என்று அவருக்காக இறைவன் முடிவு செய்துவிட்டான். விளைவாக, இறை மார்க்கத்திற்கு இன்னொரு நிரந்தர ஆதரவுக்கான அடித்தளம் உருவானது. மேலே குறிப்பிட்ட ஏற்பாட்டின்படி மனிதனின் உண்மை வாழ்வு, இறைவன் விரும்பியவாறு ஒரு முழுமையான நடைமுறையில் அமையும்.

கடந்த காலங்களில் வந்த இறைத்தூதர்கள் அனைவரும், இறுதித்தூதருக்கு அனுப்பப்பட்ட அதே அழைப்பைத்தான் கொண்டு வந்தார்கள். ஆனால் முந்தைய தூதர்களுக்குப் பொதுவாக நடந்தது என்னவென்றால், மக்கள் அவர்களின் செய்தியை ஏற்கவில்லை. அது தங்களின் உலக நலன்களுக்கு எதிரானது என்று அவர்கள் எண்ணியதே அதற்குக் காரணம். இறைவனின் உண்மையான மார்க்கத்தை ஏற்றுக்கொண்டால், கட்டமைத்து உருவாக்கப்பட்ட அவர்களின் உலகம் அழிக்கப்பட்டுவிடும் என்று அவர்களுக்குத் தவறான அச்சமிருந்தது. குர்ஆனின் வரலாறு இந்த அச்சத்துக்கு நடைமுறை ரீதியான மறுப்பாகும்.

குர்ஆன் மூலம் செயல்படுத்தப்பட்ட இந்த இயக்கம் இறைவனின் சிறப்பு உதவி கொண்டு, அழைப்பில் தொடங்கி ஓர் உண்மை நிகழ்வாக மாறி அதன் நடைமுறை விளைவுகளைத் தரும் நிலையை அடைந்தது. இவ்வாறு இறை மார்க்கத்தின் நிரந்தர வரலாறு ஒன்று உருவாக்கம் பெற்றது.

இனி நியாயத்தீர்ப்பு நாள் வரை, இறைவனின் உண்மையான மார்க்கத்தை ஏற்றுக்கொள்வதன் பயனாக பூமி மற்றும் வானங்களின் அனைத்து அருட்கொடைகளும் எவ்வாறு அருளப்படுகின்றன என்பதை மக்கள் உண்மையான வரலாற்று மொழியில் காண முடியும்.

பின்னர், இதன் மூலம், குர்ஆனின் நிரந்தரப் பாதுகாப்பிற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுவிட்டது. ஒரு பெரிய புவியியல் பரப்பளவில் இஸ்லாமிய மக்களின் அதிகாரமும், அங்கு இஸ்லாமிய நாகரிகத்தின் ஆதிக்கமும், குர்ஆனில் யாரும் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாத ஒரு பாதுகாப்பான சூழல் கிடைக்க உத்திரவாதமாக அமைந்து விட்டன. கிட்டத்தட்ட ஒன்றரை ஆயிரம் ஆண்டுகளாக முஸ்லிம்களின் மேலாதிக்கம் குர்ஆனின் பாதுகாவலனாக இருந்து வருகிறது என்பது ஒரு வரலாற்று உண்மை.

சிலர் குர்ஆனை நன்மைகளின் நூலாகவும், சிலர் மார்க்கச் சட்ட நூலாகவும், சிலர் அரசியல் நூலாகவும் கருதுகின்றனர். இந்த மூன்றிலும் ஓரளவு உண்மை இருக்கிறது. ஆனால் இவற்றில் எதுவும் குர்ஆனுக்கான முழுமையான விளக்கம் அல்ல. குர்ஆனை ஒரு

நன்மைகளின் நூலாகக் கருதுவதன் பொருள் என்னவென்றால் அதன் வசனங்களிலும் அத்தியாயங்களிலும் மாய மந்திர அருட்கொடைகள் அல்லது நன்மைகள் உள்ளன என்பதும் குர்ஆனின் வார்த்தைகளை மீண்டும் மீண்டும் உச்சரிப்பது மட்டுமே இந்த அருட்கொடைகளைப் பெறப் போதுமானது என்பதும்தான். இந்த வாதத்தை ஏற்றுக் கொண்டால், மனிதனைச் சிந்திக்க ஊக்குவிக்கும் குர்ஆனின் அனைத்து வசனங்களும் பொருளற்றவையாகிவிடும்.

வார்த்தைகளுக்கு அப்பால் சென்று பொருளின் ஆழத்தில் மூழ்கி முயற்சி செய்ய வேண்டும் என மனிதனை ஊக்குவிக்கும் வசனங்களால் குர்ஆன் நிறைந்துள்ளது. அவன் குர்ஆனைப் பற்றிச் சிந்தித்து, தன்னையும் பிரபஞ்சத்தையும் குர்ஆனின் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். இந்த போதனைகளின் வெளிச்சத்தில் பார்த்தால், குர்ஆனின் நோக்கம், சிந்தனை ஆற்றல்களைக் கொண்ட மக்களை உருவாக்குவதும், அவர்கள் குர்ஆனிலிருந்து அறிவுசார்ந்த உணவைப் பெற்று, உலகில் படிப்பினைகளைக் காணும் பார்வையுடன் வாழ வேண்டும் என்பதும் தான்.

இத்தகைய சூழ்நிலையில், குர்ஆனை நன்மைகளின் நூல் என்று அழைப்பது குர்ஆனைக் குறைத்து மதிப்பிட்டுச் *(Under Estimation)* சித்திரிப்பதாகும். ஏனெனில் இதற்குப் பொருள் குர்ஆன் உள்ளங்களைத் திறக்கும் நூல் அல்ல, அது வெறுமனே இறையருள் பெற்றுத் தரும் ஒரு நூல் என்பதுதான். அதை மூடிய மனதுடன் படித்து, பின்னர் மூடிய உறையில் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பதையே இது குறிக்கிறது.

இதைப்போன்றே, குர்ஆனை மார்க்கச் சட்டங்களின் நூல் என்று கூறுவதும் குர்ஆனுக்கு செய்யும் அநீதியாகும். மார்க்கச் சட்டங்கள் என்ற சொல்லாடல் குர்ஆன் புறவயமான ஒழுக்கத்தைப் பேணி நிறைவேற்றினால் போதும் என்று கருதும் நற்செயல்களின் ஒரு நூல் என்கின்ற தோற்றத்தை அளிக்கிறது, ஆனால் இதற்கு மாறாக, குர்ஆன் அது எதிர்பார்க்கும் மார்க்கக் கடமைகளின் வெளிப்புற ஒழுக்கத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. குர்ஆன் மனிதனை நம்பிக்கையின் பால் அழைக்கிறது, ஆனால் அது இதயங்களில் நுழையாத நம்பிக்கையை நம்பிக்கையாகக் கருதுவதில்லை *(49:14)*; அதில் நம்பிக்கைக்கான வார்த்தைகள் சரியான உச்சரிப்புடன் திரும்பத் திரும்ப உச்சரிக்கப்பட்டாலும் சரியே. குர்ஆனின்படி, நம்பிக்கை என்பது ஆன்மாவிற்குள் இறங்கிவிடுவதாகும். அதில் ஒரு மனிதனின் இதயத் துடிப்பும் அடங்கும். குர்ஆன் தொழுகையை

வெற்றியின் வழியாக விவரிக்கிறது, ஆனால் குர்ஆனின் விரும்பத்தக்க தொழுகை என்பது உள்ளச்சம் கொண்ட தொழுகையாகும், மனம் ஒன்றாத மறதியின் தொழுகை அல்ல. குர்ஆன் மனிதர்கள் இறைவனை நினைவுகூர வேண்டும் என்று விரும்புகிறது, ஆனால் அது வெறும் நாவால் திரும்பத் திரும்ப உச்சரிக்கப்படுவதல்ல. மாறாக அது நாட்டின் நாயகர்களைக் குறிப்பிடும் உணர்ச்சிமேலிட்ட பாசத்தை உள்ளடக்கிய நினைவுகூர்தலாகும். சொல்லப்போனால் அதை விடவும் அதிகமான ஒன்று. குர்ஆனின் படி, பிராணிகளைப் பலியிடுதல் (குர்பானி) என்பது ஒரு சிறந்த செயல், ஆனால் அது இறைச்சியுடனும் இரத்தத்துடனும் தொடர்புடைய தியாகம் அல்ல; மாறாக ஒரு மனிதனின் இறையச்சத்திற்குக் காரணமாக அமையும் தியாகம்.

குர்ஆன் நன்கு அறியப்பட்ட பொருளில் மார்க்கச் சட்டங்களின் நூல் அல்ல. மாறாக யதார்த்தத்தின் நூல் என்பதைக் காட்டும் இதுபோன்ற எண்ணற்ற கட்டளைகள் உள்ளன.குர்ஆன் மனிதனுக்குள் உயிரோட்டமுள்ள செயல்பாட்டைக் காண விரும்புகிறதே அன்றி, புறவயமான சடங்குகளைக் கடைப்பிடிப்பதையும் கண்மூடித் தனமாக விதிகளை அனுசரிப்பதையும் அல்ல.

குர்ஆனில் அரசியல் நோக்கிலான சில கட்டளைகள் இருப்பது உண்மையே. ஆனால் குர்ஆனை அரசியல் நூலாகக் கருதுவது, சில சிறிய ஒப்புமைகளின் அடிப்படையில் மனிதனை ஒரு பொருளாதார விலங்காகக் கருதுவது போன்றதே. இந்தக் கண்ணோட்டத்தைக் கொண்டவர்கள், இறுதித்தூதர் நபி (ஸல்) அவர்களால் தொடங்கப்பட்ட அழைப்புப் பணி ஆட்சியையும் அரசியலையும் அடைந்தது என்பதைக் காண்கிறார்கள். இந்த அடிப்படையில், இறைத்தூதர்கள் குறிப்பிட்ட கட்டளைகளின் அடிப்படையில் இறையாட்சியை நிறுவ வந்தார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இறைவனிடமிருந்து வந்த இறைத்தூதர்கள் அனைவருக்குமான பணித்திட்டம் ஒன்றுதானே தவிரத் தனித்தனியாக இருக்கவில்லை என்பது குர்ஆனிலிருந்து நிரூபணம் ஆகிறது. எந்த அளவுக்கென்றால், குர்ஆனில் கூட, (6-90) இறுதித்தூதர் முந்தைய இறைத்தூதர்களைப் பின்பற்றும்படி வலியுறுத்தப்படுகிறார். (فَبِهُدَاهُمُ اقْتَدِهْ). இத்தகைய சூழ்நிலையில், ஒரு கேள்வி எழுகிறது: இறைத்தூதர்களின் பணி ஓர் இறையாட்சியை நிறுவுவதாக இருந்தது என்றால், இறுதித்தூதரைத் தவிர மற்ற இறைத்தூதர்கள் ஏன் அவரைப் போன்ற ஓர் அரசாங்கத்தை நிறுவவில்லை? என்பதுதான் அது.

இந்தக் கருத்தைக் கொண்டவர்கள், அனைத்து இறைத்தூதர்களும் நடைமுறை அளவில், இறையாட்சியை நிறுவப் போராடினர் என்று பதிலளிக்கின்றனர். இருப்பினும், சிலரின் செயல்பாடு முயற்சியின் கட்டத்திலேயே இருந்தது, சிலரின் செயல்பாடு இறுதிக் கட்டத்தை அடைந்தது என்கின்றனர். ஆனால் அவர்களின், இந்த பதில் தவறானது என்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன.

எடுத்துக்காட்டாக, இறைத்தூதர் மோசேவை எடுத்துக் கொள்ளுங்கள். எகிப்தில் ஃபாரோவை அதிகாரத்திலிருந்து வெளியேற்றி, அங்கு இறைச்சட்டத்தின் ஆட்சியை நிறுவுவதே அவரது நோக்கமாக இருந்திருந்தால், இறைவன் ஃபாரோவை அழித்து, அவனது முழு போர்ப் படையையும் கடலில் மூழ்கடித்த போது, இறைத்தூதர் மோசே எகிப்தை விட்டு வெளியேறி சினாய் பாலைவனத்திற்கு ஏன் சென்றார்?

எகிப்தில் இறையாட்சியொன்றை நிறுவுவதே அவரது பணியாக இருந்திருந்தால், ஃபாரோ மூழ்கடிக்கப்பட்ட பிறகு, அதற்கான முழு வாய்ப்பும் எகிப்தில் அவருக்குத் திறக்கப்பட்டிருந்தது. அத்தகைய சூழ்நிலையில், எகிப்தை விட்டு வெளியேறுவதற்கு என்ன நியாயம் கற்பிக்க முடியும்?

உண்மை என்னவென்றால், குர்ஆன் இறை அருட்கொடைகளின் நிரந்தரப் புதையலாக இருக்கிறது. குர்ஆன் இறைவனின் அறிமுகம்; குர்ஆன் அடியாருக்கும் இறைவனுக்கும் இடையிலான சந்திப்பு நிகழுமிடம். ஆனால் இதுபோன்ற முன்கூட்டிய அனுமானக் கருத்துக்கள் குர்ஆனை மனித ஆன்மாவுக்கு உணவில்லாத ஒரு தரிசு நிலமாகவோ ஒரு கவிஞனின் கவிதைத் தொகுப்பு போன்ற சொற்களின் சேகரிப்பாகவோ ஆக்கி விடுகின்றன. அதிலிருந்து ஒவ்வொரு மனிதனும் தனக்கான ஒரு குறிப்பிட்ட மனப்போக்கை உறுதிப்படுத்திக் கொள்கிறான். அவன் உண்மையில் அதில் தன்னைக் கண்டடைந்து விட்டு, இறைவனைக் கண்டடைந்து விட்டதாக எண்ணி மகிழ்ச்சி அடைகிறான்.

குர்ஆனைப் புரிந்துகொள்வதற்கான விதிமுறைகள்

குர்ஆன் ஓர் அறிவுசார்ந்த நூல். ஓர் அறிவுசார்ந்த நூலில் ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்களுக்கு எப்போதும் இடம் உண்டு. எனவே, குர்ஆனைச் சரியாகப் புரிந்துகொள்ள, வாசகன் திறந்த மனம் கொண்டிருப்பது அவசியம். வாசகனின் மனம் திறந்த நிலையில் இல்லாவிட்டால், அவன் குர்ஆனில் தனது சொந்தக் கருத்துகளைப்

படிப்பான். இதைப் புரிந்துகொள்ள, குர்ஆனின் ஒரு வசனத்தை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

وَمِنَ النَّاسِ مَنْ يَّتَّخِذُ مِنْ دُوْنِ اللّٰهِ اَنْدَادًا يُّحِبُّوْنَهُمْ كَحُبِّ اللّٰهِ وَالَّذِيْنَ اٰمَنُوْٓا اَشَدُّ حُبًّا لِّلّٰهِ (2:165)

'மனிதர்களில் சிலர் அல்லாஹ்வையன்றி மற்றவைகளை அவனுக்கு இணையாக்குகின்றனர். அல்லாஹ்வை நேசிப்பது போன்றே அவற்றையும் நேசிக்கின்றனர். ஆனால், நம்பிக்கையாளர்கள் (அனைத்தையும்விட) அல்லாஹ்வையே அதிகமாக நேசிக்கின்றனர்'.

அரசியல் ஆர்வம் கொண்ட - போராட்ட அரசியலில் களமாடுவதை ஒரு வேலையாகக் கருதும் ஒருவர், இந்த வசனத்தைப் படிக்கும் போது அவரது சிந்தனை முழு வசனத்தில் 'மற்றவை' ('அந்தாத்') என்ற வார்த்தையில் நின்றுவிடும். அவர் குர்ஆனிலிருந்து 'மற்றவை' என்ற வார்த்தையை எடுத்துக்கொள்வார். மீதமுள்ள பொருளைத் தனது மனத்துடன் இணைத்து, இதன் பொருள் ஒருவரை அரசியல் எதிரியாக்குவது என்றும் இந்த வசனத்தில் ஒருவனை இறைவனுக்கு அரசியல் எதிரியாக்குவது அனுமதிக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது என்றும் கூறுவார். இந்த விளக்கத்தின்படி, இந்த வசனம், இறைவனின் 'அரசியல் எதிரி' என்று அவர் கருதும் எவருடனும் மோதத் தொடங்குவதற்கான உரிமமாக மாறிவிடுகிறது.

மாறாக, எளிமையான மனதுடன் இதைப் படிக்கும் ஒருவர், 'எதிரி' என்ற வார்த்தையுடன் நிற்க மாட்டார். மாறாக முழு வசனத்தின் வெளிச்சத்தில் அதன் பொருளைத் தீர்மானிப்பார். அத்தகைய நபருக்கு இங்கு ஒருவரைப் போட்டியாளராக முன்னிறுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது அரசியல் அடிப்படையில் அல்ல; அன்பின் அடிப்படையில் என்பதைப் புரிந்துகொள்ள அதிக நேரம் எடுக்காது.

அதாவது, மனிதன் இறைவனை மட்டுமே அதிகமாக நேசிக்க வேண்டும் என்று இந்த வசனம் கூறுகிறது.

'தீவிரமான அன்பில்' வேறு யாரையும் இறைவனுக்குச் சமமாக ஆக்கிவிடக்கூடாது.

இதுவே குர்ஆனின் பொதுவான பொருள், இதைப் புரிந்து கொள்வதற்கான நிபந்தனை என்னவென்றால், ஒருவர் குர்ஆனைத் திறந்த மனதுடன் படிப்பதுதான். ஆனால் குர்ஆனின் ஆழமான பொருளை அடைய விரும்பும் எவரும் மற்றொரு நிபந்தனையை

நிறைவேற்ற வேண்டும். அதாவது, குர்ஆன் எந்தப் பாதையின் பயணியாக உருவாக்க விரும்புகிறதோ அவர் அந்தப் பாதையின் பயணியாக மாற வேண்டும்.

குர்ஆன் மனிதனின் நடைமுறை வாழ்க்கைக்கான வழிகாட்டி நூல். ஒரு நடைமுறை நூலை அதன் ஆழங்களுடன் புரிந்து கொள்வதென்பது, மனிதன் அந்த நூலால் வழிகாட்டப்பட்டுள்ள செயல்வடிவிலான அனுபவங்களின் ஊடாகச் செல்லும்போது மட்டுமே சாத்தியமாகிறது.

இது ஓர் அரசியல் செயல்முறையோ சமூகச் செயல்முறையோ அல்ல, மாறாக முற்றிலும் உளவியல் சார்ந்த செயல்முறை. இந்தச் செயல்பாட்டில் மனிதன் தன் மனவிருப்பங்களுக்கு எதிராக நிற்க வேண்டியிருக்கிறதே அன்றி உண்மையில் வெளியே உள்ள ஒன்றுக்கு எதிராக அல்ல. மனிதன் புறஉலக மட்டத்தில் வாழாமல் மறைவான உலகின் மட்டத்தில் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று குர்ஆன் விரும்புகிறது.

இந்த நிலைகளைப் பற்றி நன்கு பரிச்சயம் இல்லாத ஒருவன் குர்ஆனில் அடையாளம் காணப்பட்ட இந்நிலை களை எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்? மனிதன் இறைவனுக்கு மட்டுமே அஞ்சி, இறைவனை மட்டுமே நேசிக்க வேண்டும் என்று குர்ஆன் விரும்புகிறது. இறைவனின் அன்பில் துடிக்காத, இறைவனின் அச்சத்தால் மெய்சிலிர்த்துப் போகாத ஒருவனுக்கு, இறைவனுக்கு அஞ்சுவது என்றால் என்ன, இறைவனை நேசிப்பது என்றால் என்ன என்பது எப்படித் தெரியும்?

மனிதர்கள் இறைவனின் பணித் திட்டத்தில் தங்களை எவ்வாறு ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று குர்ஆன் விரும்புகிறதெனில் அவர்கள் அதைத் தங்களுடைய தனிப்பட்ட பணியாகவே ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான். இறைப் பணியைத் தனது சொந்தப் பணியாகக் கொள்ளாத ஒருவனுக்கு இறைவனுடன் ஐக்கியமாக இருப்பதன் பொருள் என்னவென்று எப்படித் தெரியும்? மனிதனால் எழுப்பப்பட்ட பிரச்சினைகளில் மனிதன் தொலைந்து போகாமல், இறைவன் பொழியும் அருட்கொடைகளில் அவன் தன்னை இழந்துவிட வேண்டும் என்று குர்ஆன் விரும்புகிறது.

இறைவனின் அருட்கொடைகளில் நனையும் இதுபோன்ற காலை மாலை நேரங்களை அனுபவிக்காத ஒருவனால் இறைவனின் அருட்கொடைகளில் நனைவதன் பொருள் என்ன என்பதை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? மனிதன் நரகத்திலிருந்து

தப்பித்துச் சொர்க்கத்தை நோக்கி ஓட வேண்டும் என்று குர்ஆன் விரும்புகிறது. நரகத்தைத் தனது பிரச்சினையாகவும் சொர்க்கத்தைத் தனது தேவையாகவும் ஆக்கிக்கொள்ளாத வாழ்க்கையை வாழும் ஒருவன், நரகத்திலிருந்து தப்பி ஓடுவது என்றால் என்ன சொர்க்கத்தை நோக்கி விரைவது என்றால் என்ன என்பதை எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்? இறைவனின் மகத்துவத்தாலும் பேருணர்வாலும் மனிதன் நிரப்பப்பட வேண்டும் என்று குர்ஆன் விரும்புகிறது. தனது சொந்த மகத்துவம், பெருமை ஆகியவற்றின் கோபுர உயர்வை அனுபவிக்கும் ஒரு மனிதனால் இந்த நிலையை எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்? உண்மையில் ஒரு மனிதன் இறைவனின் பெருமையைக் கண்ணுறும் போது தன் இயலாமையைத் தவிர அவனுக்கு எதுவும் தெரிவதில்லை.

குர்ஆனியச் செயல்பாடு அடிப்படையில் சுயத்திலோ மனிதனின் உள் இருப்பின் மட்டத்திலோ நடைபெறுகிறது. ஆனால் மனிதன் வெற்றிடத்தில் வாழ்வதில்லை. மாறாக, பல மனிதர்களுக்கிடையில் வாழ்கிறான். எனவே, குர்ஆனியச் செயல்பாடு ஒரு தனிப்பட்ட செயல்பாடாக இருந்தாலும், அது இரண்டு அம்சங்களில் ஏனைய மனிதர்களுடன் தொடர்புடையதாகிறது. ஒன்று, ஒரு மனிதன் தான் ஏற்றுக்கொண்ட அதே குர்ஆனிய வழியை ஏற்றுக்கொள்ள மற்றவர்களை அழைப்பது. இதன் விளைவாக, ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையே அழைப்பவர் - அழைக்கப்படுவர் என்ற உறவு நிறுவப்படுகிறது. இந்த உறவு, எண்ணற்ற அனுபவங்களின் வழியாக மனிதனை இட்டுச் செல்கிறது. இறுதிக் காலம் வரை பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது.

இரண்டாவதாக, பல்வேறு வகையான மனிதர்களிடையே வாழும்போது, பல்வேறு வகையான தொடர்புகளும் விவகாரங்களும் வந்துசேர்கின்றன. ஒருவர் சிலரிடமிருந்து பெற வேண்டியிருக்கிறது; சிலரிடம் கொடுக்க வேண்டியிருக்கிறது; சிலருடன் உடன்பாடும், சிலருடன் முரண்பாடும் ஏற்படுகிறது. சிலரிடம் இடைவெளியும், வேறு சிலரிடம் நெருக்கமும் ஏற்படுகிறது. இந்தச் சந்தர்ப்பங்களில், ஒரு மனிதன் எத்தகைய மனப்பான்மையும் எதிர்வினையும் கொண்டு செயலாற்ற வேண்டும் என்பது குறித்துக் குர்ஆன் முழுமையாக வழிநடத்துகிறது. ஒருவர் தனது சொந்த விருப்பங்களைப் பின்பற்ற விரும்பினால், குர்ஆனின் இந்த வாசல் அவருக்கு மூடப்பட்டிருக்கும். அவர் குர்ஆனின் ஆதிக்கத்தின் கீழ்த் தன்னை ஒப்படைத்தால் வேறு எவ்வகையிலும் வெளிப்பட வாய்ப்பில்லாத குர்ஆனிய போதனைகளின் இரகசியங்கள் அவருக்கு வெளிப்படும்.

குர்ஆன் மனிதனுக்கு வழங்கும் பணி உண்மையில் ஓர் அமைப்பை நிறுவுவதற்கான பணித்திட்டம் அல்ல. மாறாக, குர்ஆனிய ஆளுமையின் வடிவத்தில் தன்னை வார்த்துக்கொள்ளும் பணி. குர்ஆன் உண்மையில் தனிநபரை விளித்துப் பேசுகிறதே அன்றி சமூகத்தை விளித்து அல்ல. எனவே குர்ஆனின் பணித் திட்டம் தனி மனிதனின் மீது விதிக்கப்படுகிறதே அன்றிச் சமூகத்தின் மீது அல்ல. கணிசமான எண்ணிக்கையிலான தனிநபர்கள் குர்ஆனுடன் தங்களை இணைத்துக் கொள்ளும்போது, சமூக விளைவுகளும் தவிர்க்க முடியாமல் வெளிப்படத் தொடங்கிவிடுகின்றன. இந்த விளைவுகள் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை, மாறாக, சூழ்நிலைகளைப் பொறுத்து அவற்றின் முகங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. குர்ஆனில் உள்ள பல்வேறு இறைத்தூதர்களின் நிகழ்வுகள் பல்வேறு சமூக விளைவுகளையும் சமூக எதிர்வினைகளையும் கொண்டுள்ளன. ஒரு மனிதன் தனது கண்களைத் திறந்து வைத்திருந்தால், ஒவ்வொரு சூழ்நிலைக்கும் அவன் குர்ஆனில் வழிகாட்டுதலைப் பெற்றுக்கொண்டே இருப்பான். குர்ஆன் மனித இயல்பின் நூல். குர்ஆனின் இயல்பைத் தன் இணை இயல்பாக மாற்றிக்கொள்ளும் ஒருவரால் மட்டுமே குர்ஆனை மிகச்சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

'தஸ்கீருல் குர்ஆனி'ன் அம்சங்கள்

1. 'தஸ்கீருல் குர்ஆனி'ன் முக்கிய நோக்கம் குர்ஆனை நினைவூட்டல் ஆகும். குர்ஆனின் உண்மையான தகுதி அது ஓர் அறிவுரையாக இருப்பதாகும். 'தஸ்கீருல் குர்ஆனை'ச் சீரமைப்பதில் கருத்தில் கொள்ளப்பட்ட மிக முக்கியமான அம்சம் இதுதான். அது வாசகருக்கு ஒரு நினைவூட்டலாக இருக்க வேண்டும் என்பதுதான்.

2. குர்ஆன் ஒரு சாதாரண மனித நூலைப் போல வழக்கமான அத்தியாயங்களின் வடிவத்தில் இல்லை. மாறாக, அது துண்டுகளின் அமைப்பில் உள்ளது. குர்ஆனின் அத்தியாயங்களிலும் உரை வடிவங்களிலும் ஆழமான தொடர்பு உள்ளது. ஆனால் அதன் பொதுவான பாணியானது, சிறுசிறு துண்டுகளின் ஒரு முழுமையான செய்தி ஆகும். ஒவ்வொரு பத்தியிலும் ஒரு விஷயத்தை மனதில் பதிக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. 'தஸ்கீருல் குர்ஆனி'ல், விளக்கவுரைக்காக இதே பாணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது, குர்ஆனின் ஒரு துண்டுப்பகுதியோ ஒரு பத்தியோ எடுக்கப்பட்டு, அதில் கூறப்பட்டுள்ள கருத்து தொடர் கட்டுரையின் வடிவத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான காரணம் தொடர்புடைய விளக்கத்தைப் படிக்கும்போது, வாசகரின் மனதில் அதன்

பொருளின் தொடர்ச்சி உடைபடாமல் இருக்க வேண்டும் என்பதும், அவர் தொடர்ந்து குர்ஆனால் நினைவூட்டலென்னும் உணவைப் பெற்றுக்கொண்டே போக வேண்டும் என்பதும்தான்.

3. 'தஸ்கீருல் குர்ஆனி'ன் சீரமைப்பில், குர்ஆனின் விளக்கத்திற்குரிய பகுதி (அரபி) முதலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து அதன் மொழிபெயர்ப்பும், அதன் பிறகு, ஒரு கோடிடப்பட்டுத் தொடர்புடைய பகுதியின் விளக்கமும் தரப்பட்டுள்ளன. விளக்கம் முடியும் இடத்தில், குர்ஆனின் அடுத்த பகுதி தரப்பட்டு, தொடர்ந்து மொழிபெயர்ப்பு மற்றும் விளக்கம் மேற்கண்ட அதே வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன. இதைப்போலவே, முழு அத்தியாயத்திற்கும் ஒன்றன் பின் ஒன்றாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இதே அமைப்பில், ஒரு வாசகர் ஒவ்வொரு விளக்கத்தையும் படிக்கும்போது ஒரே நேரத்தில் அதன் உரையையும் அதன் மொழிபெயர்ப்பையும் தனக்கு முன்னால் வைத்துக்கொள்ளலாம்.

4. 'தஸ்கீருல் குர்ஆனி'ல் ஒவ்வொரு பகுதிக்குரிய முழு விஷயமும் வந்துவிட வேண்டும் என்கிற விவேக அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதன் குர்ஆனின் ஒரு பக்கத்தைப் படித்தாலும் சரி, அதிக பக்கங்களைப் படித்தாலும் சரி அவனுக்குக் குர்ஆனின் அறிவுரைகளின் ஏதாகிலும் ஒரு பங்கு கிடைக்க வேண்டும்.

5. 'தஸ்கீருல் குர்ஆனி'ல் பின்பற்றப்பட்டிருக்கும் மொழிபெயர்ப்பு பாணி முற்றிலும் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பாகவும் இல்லை முற்றிலும் மரபு தழுவியதாகவும் இல்லை. மாறாக, ஒரு நடுநிலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு அணுகுமுறைகளும் அவற்றுக்கே உரிய நன்மைகளைக் கொண்டுள்ளன. இரண்டு அம்சங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகவே நடுத்தர அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது.

6. விளக்கவுரையில், பொதுவாக விவரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் கவனத்தில் கொள்ளப்பட்ட விஷயம், குர்ஆனின் இயற்கையான எளிமை அதன் விளக்கவுரையிலும் இருக்க வேண்டும் என்பதுதான். ஒருபுறம், குர்ஆன் இறைவனுடைய மகிமையின் வெளிப்பாடாகவும், மறுபுறம், அது மனித அடிமைதனத்தின் கண்ணாடியாகவும் உள்ளது. விளக்கவுரையில், இந்த அடிப்படை அம்சங்களைக் கலைநுட்ப பாணியைச் சாராத முறையில் முன்னிலைப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

- வஹீதுத்தீன் கான்.

நவம்பர் 13, 1981.

1. தோற்றுவாய் (அல்ஃபாத்திஹா)

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ ١

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۙ﴿١﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۙ﴿٢﴾ مٰلِكِ
يَوْمِ الدِّيْنِ ؕ﴿٣﴾ اِيَّاكَ نَعْبُدُ وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ؕ﴿٤﴾ اِهْدِنَا
الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۙ﴿٥﴾ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ
الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَ لَا الضَّآلِّيْنَ ﴿٧﴾ ع

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்...

[1]அனைத்துலகங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். [2]அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்பாளன். [3]தீர்ப்பு நாளின் அதிபதி. [4](இறைவா!) உன்னையே நாங்கள் வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம். [5]எங்களுக்கு நேர்வழியைக் காட்டுவாயாக! [6]அது நீ யாருக்கெல்லாம் அருள்புரிந்தாயோ அவர்களின் வழி; [7]உன் சினத்திற்குள்ளானோர் வழியன்று; நெறிதவறியோரின் வழியும் அன்று.

எந்தப் பணியையும் தொடங்குவதற்குரிய மிகச்சிறந்த முறை அதனை இறைவன் பெயரால் தொடங்குவதாகும். அவனே அனைத்திற்கும் உரிமையாளன்; எல்லா அருளுக்கும் கருவூலம்; அவனுடைய அருளும் பெருங் கருணையும் அவன் படைப்புகள் மீது இடையறாது பொங்கி வழிகின்றன. அவன் பெயரால் பணி தொடங்குவது, அவனது எல்லையற்ற பேரருள் அடியானின் உதவிக்கு வரவும் அவனது பணியைச் சிறப்பாக முடிவுறச் செய்யவும் இறைவனைப் பிரார்த்திப்பதாகும்; மனிதன் தான் இறைவனின் அடியான் என்பதற்கான ஒப்புகை உறுதிமொழியும் ஆகும்; அதனுடன் இறைவனிடமிருந்து கிடைக்கும் அடியானின் வெற்றிக்கான உத்திரவாதமும் ஆகும்.

குர்ஆனின் சிறப்பம்சங்களில் ஒன்று, அது இறைநம்பிக்கையாளனின் உள்ளுணர்வுகளை மிகப் பொருத்தமான வார்த்தைகளில் துல்லியமாக வெளிப்படுத்துவதாகும். 'பிஸ்மில்லாஹ்வும்' 'தோற்றுவாய்' என்ற இந்த

அத்தியாயமும் இவ்வகையைச் சேர்ந்த பிரார்த்தனை மொழிகள்தாம். உண்மையைத் தேடி அடைந்த பிறகு ஒரு மனிதனுக்குள் இயற்கையாகவே எந்த உணர்வுகள் எழுமோ, அவை இந்த வார்த்தைகளில் வடிவம் பெறுகின்றன.

மனிதனிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது இறைவனைப் போற்றுவதும் 'புகழனைத்தும் இறைவனுக்கே' (அல்ஹம்துலில்லாஹ்) எனும் கலாசாரத்தைக் கடைப்பிடிப்பதும்தான். மனிதனின் இருப்பு இறைவன் கொடுத்த ஒரு மாபெரும் கொடை. இதன் மகத்துவத்தை அறிய வேண்டுமானால், ஒரு மனிதனிடம் நீ உன் இரண்டு கண்களையும் பிடுங்கி எறிந்துவிடு அல்லது இரண்டு கால்களையும் வெட்டி எறிந்துவிடு. அப்படிச் செய்தால் உனக்கு ஒரு நாட்டின் அரசாட்சி வழங்கப்படும் என்று கூறினால் எந்த மனிதனும் அதற்குத் தயாராக மாட்டான். அதாவது மனிதன் பெற்றிருக்கும் இந்த அடிப்படையான, இயற்கையான கொடைகள் கூட அரசனின் அரசாட்சியை விட அதிக மதிப்புள்ளவை.

இதேபோல், மனிதன் தன்னைச் சுற்றி உள்ள உலகத்தைப் பார்க்கும் போது இங்கே எல்லா பக்கமும் இறைவனின் அரசாட்சி கோலோச்சி இருப்பதையும், அவனது பேரருள் பொங்கிப் பெருகுவதையும் காண்கிறான். அவன் எல்லா இடங்களிலும் ஓர் அசாதாரண ஏற்பாட்டைக் காண்கிறான். உலகிலுள்ள அனைத்துப் பொருட்களும் மனித வாழ்க்கைக்கு ஏற்றபடி அற்புதமாகத் தகவமைக்கப்பட்டிருப்பதாக அவனுக்குத் தோன்றுகிறது. இந்த அவதானிப்பு, பிரபஞ்சத்தின் இந்தப் பெரிய படைப்புச்சாலை, நோக்கமின்றி இருக்க முடியாது என்பதை அவனுக்கு எடுத்துச் சொல்கிறது.

ஆக, நன்றிகெட்டவர்களிடம் அவர்களின் நன்றியற்ற வாழ்க்கைக்கு கேள்வி கேட்கப்படவும், நன்றியுள்ளவர்களுக்கு அவர்களின் நன்றியுள்ள வாழ்க்கைக்கான வெகுமதி அளிக்கப்படவும் ஒரு நாள் கண்டிப்பாக வர வேண்டும்.

இந்நிலையில் அவன் (மனிதன்) தன்னையறியாமலேயே, ''இறைவா! நீயே தீர்ப்பு நாளின் அதிபதி. நான் என்னை உன்னிடம் ஒப்படைத்து உன்னுடைய உதவியை வேண்டுகிறேன். தயவுசெய்து என்னை உன் நிழலின்கீழ் அழைத்துக் கொள். இறைவா! உன் பார்வையில் எது உண்மையான பாதையாக இருக்குமோ அப்பாதையில் எங்களை வழிநடத்து'' என்று கூறுகிறான். ''உன்னுடைய ஏற்றுக்கொள்ளப்பட்ட அடியார்களின் பாதையைப் பின்பற்ற எங்களுக்கு வழிகாட்டுதலை நல்குவாயாக, வழிதவறிச் சென்றவர்களின் பாதையிலிருந்து அல்லது ஆணவத்தால் உன் கோபத்திற்கு ஆளானவர்களின் பாதையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக'' என்று இறைஞ்சி வேண்டுகிறான்.

இறைவனின் விருப்பமான அடியான் யாரெனில், இந்த உணர்வுகளுடனும் இந்த நிலைப்பாடுகளுடனும் இவ்வுலகில் வாழ்பவன்தான். 'தோற்றுவாய்' (சூரா ஃபாத்திஹா) என்ற இவ்வத்தியாயம் இஸ்லாமிய நம்பிக்கையின் ஒரு செறிவூட்டப்பட்ட குறுஞ்சித்திரம்; குர்ஆனின் எஞ்சிய பகுதிகள் இச்சித்திரத்தின் பெரு விரிவாகும்.

2. பசுமாடு (அல்பகரா)



بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

الٓمّٓ ۝١ ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ ۛ فِيْهِ ۛ هُدًى لِّلْمُتَّقِيْنَ ۝٢ الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ وَيُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ۝٣ وَالَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِمَآ اُنْزِلَ اِلَيْكَ وَمَآ اُنْزِلَ مِنْ قَبْلِكَ ۚ وَبِالْاٰخِرَةِ هُمْ يُوْقِنُوْنَ ۝٤ اُولٰٓئِكَ عَلٰى هُدًى مِّنْ رَّبِّهِمْ ۗ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ۝٥

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்...

[1]அலிஃப் - லாம் - மீம். [2]இது இறைவேதமாகும். இதில் எத்தகைய ஐயமும் இல்லை; இறையச்சமுடையோருக்கு இது நேர்வழிகாட்டியாகும். [3]அவர்கள் மறைவானவற்றை நம்புகின்றனர். தொழுகையைக் கடைப்பிடிக்கின்றனர். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து (அறச்)செலவும் செய்கின்றனர். [4](நபியே!) அவர்கள் உமக்கு அருளப்பட்ட இவ்வேதத்தின்மீதும் உமக்கு முன்னர் அருளப்பட்ட வேதங்களின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். மறுமையின் மீதும் உறுதியான நம்பிக்கை கொள்கிறார்கள். [5]அவர்கள்தாம் தம் இறைவனின் நேர்வழியில் இருப்பவர்கள்; அவர்கள்தாம் வெற்றியாளர்கள்.

குர்ஆன் ஒரு வழிகாட்டி நூல் என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால் குர்ஆனைப் புரிந்துகொள்வதற்கான முதன்மைத் திறவுகோல் இறையச்சமாகும். அதாவது, இது, யார் உண்மையைத் தேடுவதில் முழு ஈடுபாட்டுடன் இருக்கிறார்களோ அவர்களுக்கும், யார் வழிகாட்டப்படுவதில் பேரார்வம் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கும் மட்டுமேயான வழிகாட்டி நூல். யாரிடம் இந்த நிபந்தனை காணப்படுகிறதோ அவர் குர்ஆனைப் புரிந்துகொள்வார். இந்த அடிப்படை நிபந்தனை இல்லாத ஒருவர்,

மற்ற அனைத்து குணங்களைப் பெற்றிருந்தும் வழிதவறிச் சென்றுவிடுகிறார். அவர் குர்ஆனில் கலைநுட்ப நிபுணராக இருந்தாலும் கூட, குர்ஆனின் புரிதலின்றியே இருப்பார். இயற்கையின் மண்ணில் விளையும் உண்மையான தேடல் என்பது, அடைதலுக்கான ஒரு தொடக்கம்தான். உண்மையான தேடலும் உண்மையான கண்டறிதலும் ஒரே பயணத்தின் முந்தைய மற்றும் பிந்தைய கட்டங்கள் ஆகும். இது தனது சொந்த இயல்பின் மூடிய பக்கங்களைத் தானே திறப்பது போன்றது. ஒருவர் அதை உண்மையாகவே நோக்கமாகக் கொள்ளும்போது, உடனடியாக இயற்கையின் இணக்கமும் இறைவனின் உதவியும் அவருக்கு ஆதரவு நல்கத் தொடங்குகின்றன, மேலும் அவர் தனது இயல்பின் தெளிவற்ற அழைப்புக்கு ஒரு திட்டவட்டமான பதிலைப் பெறத் தொடங்குகிறார்.

ஒரு மனிதனுக்குள் உண்மையான தேடலின் விழிப்பு என்பது வெளி உலகத்திற்குப் பின்னால் உள்ள மறைவுலகைக் காணும் முயற்சியாகும். இந்தத் தேடல் கண்டடைதல் எனும் நிலையை அடையும்போது, மறைவான வற்றின் மீதான நம்பிக்கையாக மாறுகிறது. முந்தைய கட்டத்தில் உயர்ந்த உண்மையின் முன் தன்னை ஒப்படைத்து விடத் துடிப்பதாய் அறியப்படும் அதே அமைதியின்மை, பிந்தைய கட்டத்தில், இறைவனைத் தொழுகின்ற ஒருவனுடைய வடிவத்தில் உருமாற்றம் பெறுகிறது. தொடக்கத்தில் உயர்ந்த நன்மைக்காகத் தன்னை அர்ப்பணம் செய்வதைக் குறிக்கும் அதே ஆர்வம், பிந்தைய கட்டத்தில், இறைவனின் பாதையில் தன் செல்வத்தைச் செலவிடும் நிலையை மேற்கொள்கிறது. வாழ்க்கையின் ஆரவாரத்தை எதிர்கொள்ளும் போது அதன் இறுதி விளைவை அறிந்துகொள்ளும் வடிவத்தில் ஒருவனுக்குள் தலைதூக்கும் அதே தேடல், மறுமையின் மீதான நம்பிக்கையின் வடிவத்தில் தன் வினாவிற்கான விடையைப் பெறுகிறது.

உண்மையைக் கண்டறிவதென்பது தன் மெய்யுணர்வை யதார்த்தத்தின் மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்துவது. இந்த வழியில் உண்மையைக் கண்டறிபவர்கள் எல்லா வகையான உளவியல் பிரிவுகளிலிருந்தும் விடுபடுகிறார்கள். அவர்கள் உண்மையை அதன் கலப்படமற்ற தோற்றத்தில் காணத் தொடங்குகிறார்கள். எனவே, உண்மை எங்கிருந்தாலும், இறைவனின் எந்த அடிமையின் நாவிலிருந்து அது அறிவிக்கப்பட்டாலும், அவர்கள் அதை உடனடியாக அடையாளம் கண்டு அதற்கு ஒப்புதலாய்ப் பதிலளிக்கிறார்கள். எந்தத் தேக்கமும், எந்தப் போலிச்சாயலும், எந்தப் பாரபட்சச் சுவரும் உண்மையை ஒப்புக்கொள்வதில் அவர்களுக்கு ஒரு தடையாக ஆவதில்லை. இந்தச் சிறப்பு குணங்களைப் பெற்றவர்கள் இறைவனின் நிழலின் கீழ் வந்துவிடுகிறார்கள். இறைவனால் உருவாக்கப்பட்ட அமைப்பு அவர்களை ஏற்றுக்கொள்கிறது.

அவர்கள் இந்த உலகில் உண்மையான பாதையைப் பின்பற்றச் சாதகமான சூழல் கிடைத்து விடுகிறது, இதன் இறுதி இலக்கு மனிதன் மறுமையின் நிரந்தர அருட்கொடைகளில் நுழைவதாகும்.

தேடல் உள்ளவர்களால் மட்டுமே உண்மையைக் கண்டறிந்து பெற முடியும், அதை யார் தேடுகிறார்களோ அவர்கள் உறுதியாக அதைக் கண்டறிவார்கள். இங்கே தேடலுக்கும் அடைதலுக்கும் எந்த இடைவெளியும் இல்லை.

إِنَّ الَّذِيْنَ كَفَرُوْا سَوَآءٌ عَلَيْهِمْ ءَاَنْذَرْتَهُمْ اَمْ لَمْ تُنْذِرْهُمْ لَا يُؤْمِنُوْنَ ۝٦ خَتَمَ اللّٰهُ عَلٰى قُلُوْبِهِمْ وَ عَلٰى سَمْعِهِمْ ؕ وَعَلٰٓى اَبْصَارِهِمْ غِشَاوَةٌ ۫ وَّلَهُمْ عَذَابٌ عَظِيْمٌ ۝٧ ع

[6](ஓரிறை)மறுப்பாளர்களை நீர் எச்சரிப்பதும் எச்சரிக்காமல் இருப்பதும் ஒன்றுதான். அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். [7]அல்லாஹ் அவர்களுடைய உள்ளங்களின் மீதும் செவிப்புலன்களின் மீதும் முத்திரையிட்டுவிட்டான். அவர்களுடைய பார்வைகளின் மீதும் திரையுள்ளது. அவர்களுக்குக் கடும் வேதனையும் உண்டு.

ஒருவன் தன் கண்களை மூடிக்கொண்டால், கண்கள் இருந்தும் அவன் சூரியனைப் பார்க்க முடியாது. ஒருவன் காதைப் பஞ்சைக் கொண்டு அடைத்துக்கொண்டால், காதுகளிருந்தும் கூட, வெளி ஓசை கேட்காது. சத்தியத்தின் விஷயமும் இப்படிப்பட்டதுதான். உண்மை எவ்வளவு தெளிவாக அறிவிக்கப்பட்டாலும், ஒருவர் தமது இதயக் கதவுகளைத் திறந்து வைத்திருந்தால் மட்டுமே அது அவருக்குப் புரியும் அல்லது ஏற்றுக் கொள்ளப்படும் ஒன்றாக ஆகும். தன் இதயக் கதவுகளை அடைத்துக் கொண்டவனுக்கு, பிரபஞ்சத்தில் இறைவனின் அமைதியான அழைப்பும், ஓர் இறை அழைப்பாளரின் நாவின் மூலம் செய்யப்படும் சொற்பிரகடனமும் ஆகிய இரண்டுமே பயனற்றதாகிவிடும்.

உண்மைக்கான அழைப்பு அதன் கலப்படமற்ற, தூய்மையான வடிவத்தில் எழும்போது அது யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும், இயற்கையுடன் மிக இணக்கமானதாகவும் இருக்குமென்றால், அதன் இயல்பை யாரும் புரிந்துகொள்ளாமல் இருக்க முடியாது. இதைப் பார்க்கும் ஒருவரின் திறந்த மனம் இதுவே மிகச் சரியான உண்மை என்று சாட்சியமளிக்கும். எனினும், அந்த நேரத்தில் நடைமுறை நிலைமை எப்படி இருக்குமென்றால், ஒருபுறம் ஒரு காலக் கட்டமைப்பு பல நூற்றாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட வடிவத்தில்

நிறுவப்பட்டிருக்கும். இந்த அமைப்பின்கீழ், சில மத அல்லது மதச்சார்பற்ற இருக்கைகள் உருவாக்கப்பட்டு, அதில் சிலர் அமர்ந்து கொண்டிருப்பார்கள். கண்ணியத்திற்கும் புகழுக்குமான சில வழிமுறைகள் நடைமுறைக்கு வந்துவிடுகின்றன, அதன் கொடிகளை உயர்த்திச் சிலர் காலத்தின் 'பெரிய மனிதர்கள்' எனும் உயர்ந்த நிலையை அடைந்து கொள்கின்றனர். சில வணிகங்களும் பலன்சார் ஆர்வங்களும் நிறுவப்பட்டு, அவற்றுடன் பலர் தங்களை இணைத்துக்கொள்வதன்மூலம் மனநிறைவுள்ள வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருப்பர்.

இந்தச் சூழ்நிலையில், இறைவன் தன் அடியார்களில் ஒருவரை அறியாத ஒரு மூலையிலிருந்து எழுப்பி, அவரது வாய் வழியாகத் தனது விருப்பத்தை அறிவிக்கச் செய்யும்போது, பெரும்பாலும் அத்தகைய மக்களுக்குத் தங்கள் சொந்த உலகங்கள் நொறுங்கிப் போவதைக் காண நேர்கிறது.

சத்தியச் செய்தியின் அனைத்து உண்மைத் தன்மையையும் மீறி, அதைச் சரியாகப் புரிந்துகொள்வதிலிருந்து இரண்டு விஷயங்கள் அவர்களைத் தடுக்கின்றன. ஆணவம் மற்றும் உலகியல் சார்பு. நடைமுறையில் உள்ள கட்டமைப்பில் உயர்ந்த பதவிகளை வகிப்பவர்கள், ஒரு தாழ்ந்த மனிதனுக்குக் கீழ்ப்படிவதில் தங்கள் கௌரவத்திற்கு ஆபத்து ஏற்படுவதாக உணர்கிறார்கள். இந்த உணர்வு அவர்களுக்குள் இருக்கும் ஆணவத்தின் உளவியலை விழித்துக்கொள்ளச் செய்கிறது. அவர்கள் அழைப்பவரைத் தங்களை விடத் தாழ்ந்தவராகக் கருதி, அவரது அழைப்பைப் புறக்கணிக்கிறார்கள். அதே போல், உலக நலன்கள் பற்றிய கேள்வியும் உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு ஒரு தடையாகிறது, ஏனெனில் சத்தியத்தின் அழைப்பாளர் நடைமுறையில் உள்ள சமூக மரபின் பிரதிநிதியாக இருப்பதில்லை. அவர் ஒரு புதிய – அறிமுகமில்லாத குரலுடன் எழுகிறார். எனவே மக்கள் அவரை ஏற்றுக் கொள்ளும்போது, அவர்களது நலன்களின் கட்டமைப்பு சரிவதாக அவர்களுக்குத் தோன்றுகிறது.

இந்நிலையே குர்ஆனில் முத்திரையிடப்பட்ட நிலை என்று விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. சத்தியத்தை நோக்கி அழைப்பதை ஒரு தீவிரமான விஷயமாகக் கருதாதவர்கள், ஆணவம், உலகியல் சார்பு ஆகியவற்றின் உளவியலில் வெறி கொண்டவர்களின் உள்ளங்களின் மீது, உண்மையைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குத் திரைகள் விழுந்து விடுகின்றன. அவை உண்மையை உள்ளத்தில் நுழைய அனுமதிப்பதில்லை. மனிதனுக்குள் ஏதாவது ஒன்றைப் பற்றி எதிர்ப்பு உளவியல் உணர்வுகள் விழித்துக் கொண்டால், பிறகு அதற்கு ஆதரவாக எவ்வளவு தெளிவான வாதங்கள் முன்வைக்கப்பட்டாலும், அதன் பகுத்தறிவுத் தன்மையை அவனால் புரிந்துகொள்ள முடிவதில்லை.

وَ مِنَ النَّاسِ مَنۡ يَّقُوۡلُ اٰمَنَّا بِاللّٰهِ وَ بِالۡيَوۡمِ الۡاٰخِرِ وَ مَا هُمۡ
بِمُؤۡمِنِيۡنَ ۘ﴿۸﴾ يُخٰدِعُوۡنَ اللّٰهَ وَ الَّذِيۡنَ اٰمَنُوۡا ۚ وَ مَا يَخۡدَعُوۡنَ
اِلَّاۤ اَنۡفُسَهُمۡ وَ مَا يَشۡعُرُوۡنَ ﴿۹﴾ فِىۡ قُلُوۡبِهِمۡ مَّرَضٌ ۙ فَزَادَهُمُ
اللّٰهُ مَرَضًا ۚ وَ لَهُمۡ عَذَابٌ اَلِيۡمٌ ۢ بِمَا كَانُوۡا يَكۡذِبُوۡنَ ﴿۱۰﴾ وَ اِذَا قِيۡلَ
لَهُمۡ لَا تُفۡسِدُوۡا فِى الۡاَرۡضِ ۙ قَالُوۡۤا اِنَّمَا نَحۡنُ مُصۡلِحُوۡنَ ﴿۱۱﴾
اَلَاۤ اِنَّهُمۡ هُمُ الۡمُفۡسِدُوۡنَ وَ لٰكِنۡ لَّا يَشۡعُرُوۡنَ ﴿۱۲﴾ وَ اِذَا قِيۡلَ
لَهُمۡ اٰمِنُوۡا كَمَاۤ اٰمَنَ النَّاسُ قَالُوۡۤا اَنُؤۡمِنُ كَمَاۤ اٰمَنَ السُّفَهَآءُ ؕ
اَلَاۤ اِنَّهُمۡ هُمُ السُّفَهَآءُ وَ لٰكِنۡ لَّا يَعۡلَمُوۡنَ ﴿۱۳﴾ وَ اِذَا لَقُوا الَّذِيۡنَ
اٰمَنُوۡا قَالُوۡۤا اٰمَنَّا ۚ وَ اِذَا خَلَوۡا اِلٰى شَيٰطِيۡنِهِمۡ ۙ قَالُوۡۤا اِنَّا مَعَكُمۡ ۙ
اِنَّمَا نَحۡنُ مُسۡتَهۡزِءُوۡنَ ﴿۱۴﴾ اَللّٰهُ يَسۡتَهۡزِئُ بِهِمۡ وَ يَمُدُّهُمۡ فِىۡ
طُغۡيَانِهِمۡ يَعۡمَهُوۡنَ ﴿۱۵﴾ اُولٰٓئِكَ الَّذِيۡنَ اشۡتَرَوُا الضَّلٰلَةَ بِالۡهُدٰى ۪
فَمَا رَبِحَتۡ تِّجَارَتُهُمۡ وَ مَا كَانُوۡا مُهۡتَدِيۡنَ ﴿۱۶﴾

[8]மனிதர்களில் சிலர், நாங்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று (உதட்டளவில்) கூறுகின்றனர். உண்மையில் அவர்கள் நம்பிக்கையாளர் அல்லர். [9]அவர்கள் அல்லாஹ்வையும் (ஓரிறை) நம்பிக்கையாளர்களையும் ஏமாற்ற எண்ணுகின்றனர். அவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கின்றனர் அதனை அவர்கள் உணர்ந்துகொள்வதில்லை. [10]அவர்களின் உள்ளங்களில் நோய் இருக்கிறது. அல்லாஹ் அதனை இன்னும் மிகுதியாக்கி விட்டான். பொய்யுரைத்துக் கொண்டிருப்பதன் காரணமாக அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு. [11]''நாட்டில் குழப்பம் உண்டாக்காதீர்கள்'' என்று அவர்களிடம் கூறப்பட்டால் ''நாங்கள் அமைதியை ஏற்படுத்தக் கூடியவர்கள்தாம்'' என்று கூறுகின்றனர். [12]எச்சரிக்கை! அவர்கள்தாம் குழப்பவாதிகள். ஆயினும் அவர்கள் (அதனை)

உணர்ந்துகொள்வதில்லை. [13]''மற்ற மக்கள் நம்பிக்கை கொண்டதைப் போல நீங்களும் நம்பிக்கை கொள்ளுங்கள்'' என்று அவர்களிடம் கூறப்பட்டால் ''மூடர்கள் நம்பிக்கை கொண்டதைப் போல நாங்களும் நம்பிக்கை கொள்ள வேண்டுமா?'' என்று கேட்கின்றனர். எச்சரிக்கை! உறுதியாக அவர்கள்தாம் மூடர்கள். ஆயினும் அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. [14]அவர்கள் நம்பிக்கையாளர்களைச் சந்தித்தால் ''நாங்களும் நம்பிக்கை கொண்டுள்ளோம்'' என்று கூறுகின்றனர். ஆனால் தங்கள் சாத்தான்களுடன் தனித்திருக்கும் போது ''நாங்கள் உங்களுடன்தான் இருக்கிறோம். நாங்கள் அவர்களை ஏளனம் செய்து கொண்டிருக்கிறோம்'' என்று கூறுகின்றனர். [15]அல்லாஹ் அவர்களை ஏளனம் செய்கிறான். அவர்களுடைய வரம்பு மீறலில் தடுமாறித் திரியுமாறு அவர்களை விட்டு விடுகிறான். [16]அவர்கள்தாம் நேர்வழிக்குப் பதிலாகக் கெடுவழியை விலைக்கு வாங்கிக்கொண்டவர்கள். எனவே, அவர்களின் இந்த வணிகம் பயனளிக்கவில்லை. அவர்கள் நேர்வழி பெற்றவர்களாகவும் இல்லை.

இலாபங்களுக்கும், பிற நலன்களுக்கும் முன்னுரிமை கொடுப்பவர்களைப் பொறுத்தவரை, ஒருவர் எந்தக் காப்பு நிபந்தனையும் இல்லாமல் தன்னை முழுமையாகச் சத்தியத்திற்கு ஒப்படைப்பதென்பது முட்டாள்தனமாக இருக்கிறது. இத்தகைய மக்களின் உண்மையான நம்பிக்கை அவர்களின் உலக நலன்களை ஒட்டியே இருக்கும். எனினும், இதனுடன், அவர்கள் சத்தியத்துடன் ஒரு வெளிப்படையான உறவையும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் இதைப் புத்திசாலித்தனமாகக் கருதுகிறார்கள். இப்படியாகத் தங்கள் உலகமும் பாதுகாப்பாக இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். மேலும் அதனுடன் அவர்களுக்குச் சத்திய வழியில் நடப்பதற்கான பதக்கமும் கிடைக்கிறது. ஆனால் இது ஒருவனுடைய மனதில் மட்டுமே இருக்கும் ஓர் ஆசைக் கற்பனையாகும். அவன் மனதிற்கு வெளியே அதற்கான இருப்பு இல்லை. சோதனைக்கான ஒவ்வொரு சந்தர்ப்பமும் அவர்களை உண்மையான மார்க்கத்திலிருந்து தொலைவிலும், அவர்களுடைய சுயநல மார்க்கத்திற்குச் சற்று நெருக்கமாகவும் கொண்டுவருகிறது. அதாவது இதனால், அவர்களின் நயவஞ்சக நோய் தொடர்ந்து வளர்ந்து கொண்டே போகிறது. அப்படிப்பட்டவர்கள் உண்மையான இறை நம்பிக்கையாளர்களைப் பார்க்கும்போது, அவர்கள் உண்மைக்காகத் தேவையின்றித் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்வதாக உணர்கிறார்கள், அவர்கள் தங்கள் சொந்த வழியைச் சீர்திருத்த வழி என்று அழைக்கிறார்கள், ஏனென்றால் இந்த வழியில் யாருடனும் சண்டையிடாமல் தங்கள் பயணத்தை வெற்றிகரமாக

முடிக்க முடியும் என்பதாக அவர்களுக்குத் தோன்றுகிறது. ஆனால் இது அறியாமை மட்டுமே. அவர்கள் ஆழமாகச் சிந்தித்தால், அடியார்கள் தங்களை இறைவனுக்குரியவர்களாக ஆக்கிக் கொள்வதுதான் சீர்திருத்தம் என்பது அவர்களுக்குத் தெளிவாகப் புரியும். இதற்கு மாறாக, கலகம் என்பது இறைவனுக்கும் அவனுடைய அடியார்களுக்கும் இடையிலான உறவைச் சரி செய்ய நடக்கும் இயக்கத்தின் பாதையில் தடைகளை உருவாக்கும் செயலாகும்.

அவர்களின் இலாபகரமானதாகத் தோன்றும் இந்த வணிகம் உண்மையில் இழப்பை ஏற்படுத்தும் பேரமாகும். ஏனென்றால் அவர்கள் தூய சத்தியத்தைக் கைவிட்டு, யாருக்கும் பயனற்ற கலப்பட உண்மையைத் நாடுகிறார்கள். தம் உலக விவகாரங்களில் கவனமாக இருப்பதும், மறுமை விஷயங்களில் அக்கறையற்ற மேம்போக்கான எதிர்பார்ப்புகளைப் போதுமெனக் கருதுவதும் இறைவனிடம் பொய் சொல்வதைப் போன்றது. இதைச் செய்பவர்கள், இவ்வகையான பொய்யான வாழ்க்கை, மனிதனை இறைவனின் தண்டனையைத் தவிர வேறு எதற்கும் தகுதியானவனாக மாற்றாது என்பதை விரைவில் அறிந்து கொள்வார்கள்.

مَثَلُهُمْ كَمَثَلِ الَّذِى اسْتَوْقَدَ نَارًا ۚ فَلَمَّآ اَضَآءَتْ مَا
حَوْلَهٗ ذَهَبَ اللّٰهُ بِنُوْرِهِمْ وَ تَرَكَهُمْ فِىْ ظُلُمٰتٍ لَّا يُبْصِرُوْنَ ⑰
صُمٌّۢ بُكْمٌ عُمْىٌ فَهُمْ لَا يَرْجِعُوْنَ ⑱ اَوْ كَصَيِّبٍ مِّنَ السَّمَآءِ
فِيْهِ ظُلُمٰتٌ وَّرَعْدٌ وَّبَرْقٌ ۚ يَجْعَلُوْنَ اَصَابِعَهُمْ فِىْٓ اٰذَانِهِمْ مِّنَ
الصَّوَاعِقِ حَذَرَ الْمَوْتِ ؕ وَاللّٰهُ مُحِيْطٌۢ بِالْكٰفِرِيْنَ ⑲ يَكَادُ
الْبَرْقُ يَخْطَفُ اَبْصَارَهُمْ ؕ كُلَّمَآ اَضَآءَ لَهُمْ مَّشَوْا فِيْهِ ۙ وَاِذَآ
اَظْلَمَ عَلَيْهِمْ قَامُوْا ؕ وَلَوْ شَآءَ اللّٰهُ لَذَهَبَ بِسَمْعِهِمْ وَ
اَبْصَارِهِمْ ؕ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ⑳

[17]அவர்களின் நிலை, இருளில் (வழிகாட்ட) நெருப்பு மூட்டிய ஒருவனின் நிலையைப் போன்றது. அது அவர்களைச் சுற்றி ஒளி வீசியபோது அல்லாஹ் அவர்களுடைய (கண்களின்) ஒளியைப் பறித்துவிட்டான். எதையும் பார்க்க முடியாத காரிருளில் அவர்களை விட்டு விட்டான். [18]அவர்கள் செவிடர்கள், ஊமையர்கள்,

குருடர்கள். எனவே நேர்வழியின் பக்கம் திரும்பமாட்டார்கள்.
[19]அல்லது அவர்களின் நிலை, காரிருளில் இடி மின்னலுடன் வானிலிருந்து பொழியும் மழையில் சிக்கிக் கொண்டவர்களின் நிலையைப் போன்றது. இடி முழக்கம் கேட்டுச் சாவுக்கு அஞ்சி அவர்கள் தம் காதுகளில் விரல்களைத் திணித்துக் கொள்கிறார்கள். அல்லாஹ் அந்த மறுப்பாளர்களைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றான்.
[20]அம்மின்னல் அவர்களின் பார்வைகளைப் பறித்துவிடப் பார்க்கிறது. அது அவர்களுக்கு வெளிச்சம் தரும்போதெல்லாம் அதில் அவர்கள் நடக்கிறார்கள். இருள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும்போது நின்று விடுகிறார்கள். அல்லாஹ் விரும்பினால் அவர்களின் செவிப் புலனையும் பார்வைகளையும் பறித்து விடுவான். உறுதியாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன்.

ஓர் அறையில் கறுப்பு, வெள்ளை நிறப் பொருட்கள் இருந்தால், இருட்டாக இருக்கும் வரை அவை இருளில் மறைந்திருக்கும். ஆனால் நீங்கள் ஒளியேற்றியவுடன், கறுப்புப் பொருட்கள் கறுப்பாகவும், வெள்ளைப் பொருட்கள் வெண்மையாகவும் தோன்றும். இறைவனிடமிருந்து எழும் இறைச்செய்திக்கான அழைப்பின் நிலையும் இதுபோன்றதுதான், அந்த இறை ஒளி வெளிப்படும்போது, நேர்வழியும் கெடுவழியும் தெளிவாகத் தெரியத் தொடங்கும். ஒரு நல்ல செயல் என்றால் என்ன, அதன் பலன்கள் என்ன? ஒரு கெட்ட செயல் என்றால் என்ன? அதன் பலன்கள் என்ன? அனைத்தும் வெளிப்படையாகவும் மிகச் சரியாகவும் தெளிவாகவும் நமக்குமுன் வந்துவிடும். ஆனால், சத்தியத்திற்குத் தங்களைக் கீழ்ப்படியச் செய்வதற்குப் பதிலாக, சத்தியத்தைத் தங்களுக்குக் கீழ்ப்படியச் செய்து கொண்டவர்கள், இந்தச் சூழ்நிலையால் பயப்படுகிறார்கள். மறைந்திருக்கும் அவர்களின் பொறாமையும், பெருமையும் உயிர் பெற்று அவர்களைத் தம் பிடிக்குள் சிக்க வைத்துக்கொள்கின்றன. இறைவனின் கண்ணாடியில் தங்கள் முகத்தைக் கண்டவுடன் அவர்களின் எதிர்மறை உளவியல் வெளிப்பட்டுவிடுகிறது.

அவர்களின் உள்ளார்ந்த பாரபட்சங்கள் அவர்களுடைய புலன்களைச் சூழ்ந்து கொள்கின்றன. அவர்களுக்கு கண்கள், காதுகள் மற்றும் நாவு ஆகியவை இருந்தாலும், அவர்கள் குருடர்கள், செவிடர்கள், ஊமைகளாக இருக்கின்றனர். இப்போது அவர்களால் ஓர் அழைப்பாளரின் அழைப்பைக் கேட்கவோ, அந்த அழைப்பிற்குப் பதிலளிக்கவோ முடியாது, எந்தச் சான்றைக் கொண்டும் நேர்வழியைப் பெற முடியாது. அழைப்பாளரின் அழைப்பைக் கருத்தில் கொள்வதே அவர்களுக்குச் சரியான அணுகுமுறையாக இருந்தது. ஆனால் அதற்குப் பதிலாக அதைத் தவிர்ப்பதற்கான ஓர் எளிய தீர்வாக

அவர்கள் கண்டுபிடித்துள்ளதெல்லாம், அவர் சொல்வதைக் கேட்காமலேயே இருப்பதும், அதற்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்காமல் இருப்பதும்தான்.

இதைப்போலவே இன்னொரு உளவியல் உள்ளது. அது உண்மையை ஏற்றுக்கொள்வதற்குத் தடையாகிறது. இது அச்சத்தின் உளவியல். மழை இறைவனின் ஒரு பெரும் அருட்கொடை. ஆனால் அது வரும்போது, தன்னுடன் இடியையும், மின்னலையும் கொண்டு வருகிறது. இதனால் பலவீனமான மக்கள் அச்சமுறுகிறார்கள். இதைப்போலவே, சத்தியத்திற்கான அழைப்பு இறைவனிடமிருந்து வரும்போது, ஒருபுறம், அது மனிதர்களுக்குப் பெரிய வெற்றிகளுக்கான வாய்ப்பைத் திறந்தாலும், மறுபுறம், அது சில தற்காலிக அச்சங்களையும் தருகிறது. இதை ஏற்றுக்கொள்வதென்பது ஒருவர் தன் தற்பெருமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதும், கட்டமைக்கப்பட்ட வாழ்க்கை வரைபடத்தை மாற்ற வேண்டியதும், பாரம்பரிய அமைப்புடன் மோதுவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் மறுமை வாழ்க்கை பற்றிய ஆசைக் கற்பனைகள் ஆகியவற்றுக்குப் பதிலாக உண்மைகளை நம்புவதுமாகும். இத்தகைய அச்சங்களைக் கண்டு, அவர்கள் சில சமயங்களில் நின்று விடுகிறார்கள். சில சமயங்களில் தயக்கத்துடன் சில அடிகள் முன்னேறிச் செல்கிறார்கள். ஆனால் இந்த முன்னெச்சரிக்கைகள் அவர்களுக்கு எந்தப் பயனும் அளிக்கப் போவதில்லை. ஏனென்றால், இறை அழைப்புக்கு முழுமனத்துடன் தங்களை முன்னிறுத்தாமல் இருப்பதன் மூலம், அவர்கள் இறைவனின் பார்வையில் தங்களை மிகவும் கடுமையான தண்டனைக்குரியவர்களாய் ஆக்கிக் கொள்கிறார்கள்.

يَاَيُّهَا النَّاسُ اعْبُدُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ وَالَّذِيْنَ مِنْ
قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿٢١﴾ الَّذِىْ جَعَلَ لَكُمُ الْاَرْضَ فِرَاشًا
وَّالسَّمَآءَ بِنَآءً ۖ وَّاَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَخْرَجَ بِهٖ مِنَ
الثَّمَرٰتِ رِزْقًا لَّكُمْ ۚ فَلَا تَجْعَلُوْا لِلّٰهِ اَنْدَادًا وَّاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿٢٢﴾
وَاِنْ كُنْتُمْ فِىْ رَيْبٍ مِّمَّا نَزَّلْنَا عَلٰى عَبْدِنَا فَاْتُوْا بِسُوْرَةٍ مِّنْ
مِّثْلِهٖ ۖ وَادْعُوْا شُهَدَآءَكُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿٢٣﴾
فَاِنْ لَّمْ تَفْعَلُوْا وَلَنْ تَفْعَلُوْا فَاتَّقُوا النَّارَ الَّتِىْ وَقُوْدُهَا

فَاِنْ لَّمْ تَفْعَلُوْا وَلَنْ تَفْعَلُوْا فَاتَّقُوا النَّارَ الَّتِيْ وَقُوْدُهَا
النَّاسُ وَالْحِجَارَةُ ۖ اُعِدَّتْ لِلْكٰفِرِيْنَ ﴿٢٤﴾ وَ بَشِّرِ الَّذِيْنَ
اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ اَنَّ لَهُمْ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا
الْاَنْهٰرُ ؕ كُلَّمَا رُزِقُوْا مِنْهَا مِنْ ثَمَرَةٍ رِّزْقًا ۙ قَالُوْا هٰذَا
الَّذِيْ رُزِقْنَا مِنْ قَبْلُ ۙ وَاُتُوْا بِهٖ مُتَشَابِهًا ؕ وَلَهُمْ فِيْهَآ اَزْوَاجٌ
مُّطَهَّرَةٌ ۙ وَّهُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿٢٥﴾

[21]மனிதர்களே! உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். அதனால் நீங்கள் நரகத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். [22]அவன்தான் உங்களுக்காக பூமியை விரிப்பாகவும் வானத்தைக் கூரையாகவும் அமைத்தான்; உங்கள் உணவிற்காக வானத்திலிருந்து மழை பொழியச் செய்து அதன் மூலம் கனி வகைகளை வெளிப்படுத்துகிறான். எனவே (இவற்றையெல்லாம்) அறிந்திருந்தும் நீங்கள் அல்லாஹ்வுக்கு இணைகளைக் கற்பிக்காதீர்கள். [23]நாம் எமது அடியாருக்கு அருளிய (இவ்)வேதத்தின் மீது நீங்கள் ஐயம் கொண்டால் - நீங்கள் உண்மையாளர்களாயின் - இதைப் போன்ற ஓர் அத்தியாயத்தையேனும் கொண்டுவாருங்கள். அல்லாஹ் அல்லாத உங்கள் உதவியாளர்களையும் (துணைக்கு) அழைத்துக் கொள்ளுங்கள். [24]நீங்கள் அவ்வாறு செய்யா விட்டால் - உங்களால் ஒருபோதும் அவ்வாறுசெய்ய முடியாது - மனிதர்களையும் கற்களையும் எரிபொருளாகக் கொண்ட (நரக) நெருப்புக்கு அஞ்சுங்கள். அது மறுப்பாளர்களுக்காகவே தயார் செய்யப்பட்டுள்ளது. [25](நபியே!) நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிவோருக்குச் சொர்க்கச் சோலைகள் உண்டு. அவற்றில் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும் எனும் நற்செய்தியைக் கூறுவீராக! அவர்களுக்கு அங்கு ஏதேனும் கனி உணவாக வழங்கப்படும் போதெல்லாம் ''இதற்கு முன்பும் எங்களுக்கு வழங்கப்பட்டது இதுதானே!'' என்று கேட்பார்கள். ஏனெனில் அவர்களுக்கு வழங்கப்படுபவை ஒன்றையொன்று ஒத்தவையாக இருக்கும். அங்குத் தூய்மையான இணைகளும் அவர்களுக்கு உண்டு. அங்கு அவர்கள் என்றென்றும் இருப்பார்கள்.

மனிதனை மட்டுமின்றி, வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்தையும் படைத்தவன் ஏக இறைவன் ஒருவனே. அவன் மிகுந்த ஞானத்தால் முழுப் பிரபஞ்சத்தையும் நிறுவியுள்ளான். அவன் அவற்றை ஒவ்வொரு நாளும் பராமரித்து வருகிறான். எனவே, மனிதனுக்குச் சரியான அணுகுமுறை என்னவென்றால், ஏக இறைவனுக்கு யாரையும் இணையாக்காமல் படைப்பாளனாகவும், உரிமையாளனாகவும், பராமரிப்பவனாகவும் ஏற்றுக்கொண்டு, அவனையே தனக்கு எல்லாமுமாக ஆக்கிக் கொள்வதாகும். ஆனால் இறைவன் கண்ணுக்குத் தெரிவதில்லை என்பதால், பெரும்பாலும் மனிதன் காணக்கூடிய ஒன்றை முக்கியமானதாகக் கருதி அதை இறைவனுக்குரிய இடத்தில் வைத்து விடுகிறான். அவன் ஒரு படைப்பைப் பகுதியாகவோ முழுமையாகவோ படைப்பாளனுக்கு இணையாக நிறுவிக்கொள்கிறான்; சிலவேளை அதற்கு இறைவனின் பெயரைச் சூட்டியும், சிலவேளை அதற்கு இறைவனின் பெயரைச் சூட்டாமலும்.

இதுதான் மனிதனின் முதன்மையான வழிபிறழ்வு. இறைத்தூதரின் அழைப்பு, மனிதன் ஒரே இறைவனுக்கு மட்டுமே மகத்துவம் கொடுக்க வேண்டும் என்பதே. இது தவிர, அவன் யார் யாரையெல்லாம் இறைமகத்துவத்தின் நிலைக்கு உயர்த்தி வைத்திருக்கிறானோ, அவற்றையெல்லாம் அந்த மகிமையின் நிலையிலிருந்து கீழே இறக்கிவிட வேண்டும். யாருடைய இதயங்கள் இறைவனைத் தவிர வேறிடத்தில் சிக்குண்டு கிடக்கின்றனவோ அவர்கள் அனைவரும் தூய இறைவழிபாட்டிற்கான அழைப்பு எழும் போதெல்லாம், அதன் தாக்கத்தைத் தம் மீது உணரத் தொடங்குகிறார்கள். இறைவனைத் தவிர வேறு யாருக்கேனும் மகத்துவத்தை ஒதுக்கி வைத்திருக்கும் இத்தகைய மக்கள் தங்கள் கற்பனைக் கடவுள்கள் மீது கொண்டிருக்கும் தீவிரப் பற்றுதலின் காரணமாக, அவை உண்மையற்றவை என்பதையும், மனிதர்களுக்குள்ளிருந்து வந்த ஒருவரின் நாவால் சொல்லப்பட்ட செய்தி மட்டுமே உண்மை என்பதையும் நம்புவது அவர்களுக்குக் கடினமாக உள்ளது.

இறைவனிடமிருந்து எழும் அழைப்பில் தவிர்க்க முடியாத வகையில் இறைவனின் மகிமையும் இணைந்து விடுகிறது. அதன் ஒப்பற்ற பாணியும், அதன் அசைக்க முடியாத வாதமும் அது இறைவனிடமிருந்து வந்தது என்பதற்கான தெளிவான சான்றுகளாகும். இவ்வாறிருந்தும், மறுப்பவர்களால் இறைவனுடைய உலகில் நரகத்தைத் தவிர வேறெங்கும் புகலிடம் காண முடியாது. எனினும், இறைவனை அவனது வேத வார்த்தைகளில் கண்டடைபவர்கள், இன்றைய உலகில் நாளைய உலகத்தைக் கண்டு

கொண்டவர்களைப் போன்றவர்கள். இவர்கள்தாம் சொர்க்கத்தின் தோட்டங்களில் நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.

اِنَّ اللّٰهَ لَا يَسْتَحْيٖۤ اَنْ يَّضْرِبَ مَثَلًا مَّا بَعُوْضَةً فَمَا فَوْقَهَا ؕ
فَاَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا فَيَعْلَمُوْنَ اَنَّهُ الْحَقُّ مِنْ رَّبِّهِمْ ۚ وَ اَمَّا
الَّذِيْنَ كَفَرُوْا فَيَقُوْلُوْنَ مَاذَاۤ اَرَادَ اللّٰهُ بِهٰذَا مَثَلًا ۘ يُضِلُّ
بِهٖ كَثِيْرًا ۙ وَّ يَهْدِيْ بِهٖ كَثِيْرًا ؕ وَ مَا يُضِلُّ بِهٖۤ اِلَّا الْفٰسِقِيْنَ ۙ﴿۲۶﴾
الَّذِيْنَ يَنْقُضُوْنَ عَهْدَ اللّٰهِ مِنْۢ بَعْدِ مِيْثَاقِهٖ ۪ وَ يَقْطَعُوْنَ مَاۤ
اَمَرَ اللّٰهُ بِهٖۤ اَنْ يُّوْصَلَ وَ يُفْسِدُوْنَ فِي الْاَرْضِ ؕ اُولٰٓئِكَ هُمُ
الْخٰسِرُوْنَ ﴿۲۷﴾ كَيْفَ تَكْفُرُوْنَ بِاللّٰهِ وَ كُنْتُمْ اَمْوَاتًا فَاَحْيَاكُمْ ۚ ثُمَّ
يُمِيْتُكُمْ ثُمَّ يُحْيِيْكُمْ ثُمَّ اِلَيْهِ تُرْجَعُوْنَ ﴿۲۸﴾ هُوَ الَّذِيْ خَلَقَ
لَكُمْ مَّا فِي الْاَرْضِ جَمِيْعًا ۗ ثُمَّ اسْتَوٰۤى اِلَى السَّمَآءِ فَسَوّٰىهُنَّ
سَبْعَ سَمٰوٰتٍ ؕ وَ هُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿۲۹﴾ ع

[26]கொசுவையோ அதைவிட அற்பமானதையோ உவமையாகக் கூறுவதற்கு அல்லாஹ் வெட்கப்பட மாட்டான். நம்பிக்கையாளர்கள், ''அந்த உவமை (உணர்த்துவது) தம் இறைவனிடமிருந்து வந்துள்ள சத்தியமே'' என்பதை அறிந்து கொள்வார்கள். மறுப்பாளர்களோ ''இத்தகைய உவமைகள் மூலம் அல்லாஹ் என்னதான் (உணர்த்த) விரும்புகிறான்?'' என்று (ஏளனமாகக்) கேட்கின்றனர். இதன்மூலம் அவன் பலரை வழிதவறச் செய்கிறான்; பலருக்கு நேர்வழி காட்டுகிறான். அவன் (தனக்குக்) கீழ்ப்படியாத மக்களைத்தான் வழிதவறச் செய்கிறான். [27]அவர்கள் அல்லாஹ்விடம் செய்த (ஓரிறைக் கோட்பாட்டு) உடன்படிக்கையை உறுதிப்படுத்தியபின் முறித்துவிடுகின்றனர். (உறவுகளை) இணைத்து வைக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டிருக்க (அவற்றைத்) துண்டித்து உலகில் குழப்பம் விளைவிக்கிறார்கள். அவர்கள்தாம் இழப்பிற்குரியவர்கள். [28](மனிதர்களே!) நீங்கள் எப்படி அல்லாஹ்வை மறுக்கிறீர்கள்? நீங்களோ உயிரற்றவர்களாக

இருந்தீர்கள். அவன்தான் உங்களுக்கு உயிரளித்தான். பின்னர் உங்களை இறக்கச் செய்வான்; மீண்டும் உங்களை (மறுமை நாளில்) உயிர்ப்பிப்பான். பின்னர் அவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள். [29]அவன்தான் பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான். பின்னர் வானத்தின் பக்கம் கவனம் செலுத்தி அவற்றை ஏழு வானங்களாக ஒழுங்குபடுத்தினான். அவன் யாவற்றையும் நன்கறிந்தவன்.

இறைவனுக்குள்ள உரிமையா, அடியானுக்குள்ள கடமையா? இறைவன்பால் மனிதனுக்குள்ள முதற்கடமை, உலகின் தொடக்கத்தில், 'மனிதன் இறைவனின் அடிமையாகவே நிலைநிற்க வேண்டும்' எனப் படைத்தவனுக்கும் படைக்கப்பட்டவற்றுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கைக்கு உண்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான். அதன்பின் இறைவன் மனிதர்களிடையே நிலைநாட்டக் கட்டளையிட்ட அனைத்து உறவுகளையும் தொடர்புகளையும் முழுமையாகப் பிணைத்து வாழ வேண்டும். மூன்றாவது விஷயம், இறைவன் தன் அடியார்களில் ஒருவரின் நாவினால் தனது செய்தியை அறிவிக்க வைக்கும்போது, அவருக்கு எதிராக ஆதாரமற்ற வாதங்களைச் சொல்லி இறைவனின் அடியார்களை அவரிடமிருந்து விலகிச் செல்லும்படி செய்யக்கூடாது. மக்களை உண்மையின் பால் அழைப்பது உண்மையில் மக்களை அவர்களின் இயல்பான நிலைக்கு மீளச் செய்வதற்கான ஒரு முயற்சியாகும். எனவே இதிலிருந்து மக்களைத் தடுப்பவர் பூமியில் கலகம் பரப்பிய குற்றவாளியாகிறார்.

மனிதனை ஒன்றுமில்லாத நிலையிலிருந்து படைத்தது இறைவனின் அருட்கொடை. இது எவ்வளவு பெரிய அருட்கொடை எனில் மனிதன் அவனுக்கு முன்பாக முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இறைவன் மனிதனைப் படைத்து அவனை அப்படியே விட்டு விடவில்லை, மாறாக அவனுக்கு மிகவும் பொருத்தமான முறையில் படைக்கப்பட்ட ஒரு பூமியை அவனுக்கு வசிக்கக் கொடுத்தான். விஷயம் இது மட்டுமல்ல; இதையும் தாண்டி அடுத்தக் கட்டத்தைப் பற்றியது. மனிதன் எப்போதும் ஒரு நுட்பமான சாத்தியக்கூறின் விளிம்பில் நிற்கிறான். மரணம் வந்து, அவன் பிரபஞ்சத்தின் இறைவனுக்கு முன் விசாரணைக்காக நிறுத்தப்படுவான். இந்த உண்மைகள் கோருவதெல்லாம் ஒரு மனிதன் முழுமையாக ஏக இறைவனுக்குரியவனாக ஆகிவிட வேண்டும்; அவனது நினைவிலும் அவனைக் கீழ்ப்படிந்தும் தனது வாழ்க்கையை வாழ வேண்டும்; அவன் வாழ்நாள் முழுவதும் அவனது அடியானாகவே இருக்க வேண்டும் என்பவைதாம்.

இறைத்தூதர்களின் அழைப்பு இவ்வளவு தெளிவாக - பகுத்தறிவு கொண்டதாக இருந்தபோதிலும், அதை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாமல் போகிறது? இதற்கு மிகப்பெரிய காரணம், அற்பமான அல்லது பொருத்தமற்ற விஷயங்களைக் கொண்டுவந்து குழப்பம் விளைவிப்பதாகும். மனிதனுக்குள் உறுதியான அறிவுரையை ஏற்கும் மனம் இல்லையென்றால், அவன் எதையும் தீவிரமாக எடுத்துக்கொள்வதில்லை. இப்படிப்பட்ட ஒருவனுக்கு முன் ஒரு சான்று வரும்போதெல்லாம், அவன் அதை மேலோட்டமாகப் பார்த்து, பொருத்தமற்ற ஒரு கருத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறான். இவ்வாறு இந்த அழைப்பு ஒரு ஏற்கத்தகுந்த அழைப்பு அல்ல எனவும் அது ஒரு ஏற்கத்தகுந்த அழைப்பாக இருந்திருந்தால், அதில் இதுபோன்ற வலுவில்லாத பேச்சு எவ்வாறு இருக்க முடியும்? எனவும் அவன் காட்ட விழைகிறான்.

ஆனால், விஷயங்களைக் கவனமாகவும் தீவிரமாகவும் சிந்திக்கும் மனம் கொண்டவர்களுக்கு, கொசு போன்ற முக்கியமற்ற உதாரணங்களைக் கொண்டு சத்தியத்தை விளக்கினாலும் அதனை அங்கீகரிக்க அதிக நேரம் எடுப்பதில்லை.

وَ اِذْ قَالَ رَبُّكَ لِلْمَلٰٓئِكَةِ اِنِّیْ جَاعِلٌ فِی الْاَرْضِ خَلِیْفَةً ؕ
قَالُوْۤا اَتَجْعَلُ فِیْهَا مَنْ یُّفْسِدُ فِیْهَا وَ یَسْفِكُ الدِّمَآءَ ۚ وَ نَحْنُ
نُسَبِّحُ بِحَمْدِكَ وَ نُقَدِّسُ لَكَ ؕ قَالَ اِنِّیْۤ اَعْلَمُ مَا لَا تَعْلَمُوْنَ ۝۳۰
وَ عَلَّمَ اٰدَمَ الْاَسْمَآءَ كُلَّهَا ثُمَّ عَرَضَهُمْ عَلَى الْمَلٰٓئِكَةِ ۙ فَقَالَ
اَنْۢبِـُٔوْنِیْ بِاَسْمَآءِ هٰۤؤُلَآءِ اِنْ كُنْتُمْ صٰدِقِیْنَ ۝۳۱ قَالُوْا سُبْحٰنَكَ لَا
عِلْمَ لَنَاۤ اِلَّا مَا عَلَّمْتَنَا ؕ اِنَّكَ اَنْتَ الْعَلِیْمُ الْحَكِیْمُ ۝۳۲ قَالَ
یٰۤاٰدَمُ اَنْۢبِئْهُمْ بِاَسْمَآىِٕهِمْ ۚ فَلَمَّاۤ اَنْۢبَاَهُمْ بِاَسْمَآىِٕهِمْ ۙ قَالَ
اَلَمْ اَقُلْ لَّكُمْ اِنِّیْۤ اَعْلَمُ غَیْبَ السَّمٰوٰتِ وَ الْاَرْضِ ۙ وَ اَعْلَمُ مَا
تُبْدُوْنَ وَ مَا كُنْتُمْ تَكْتُمُوْنَ ۝۳۳

30உம் இறைவன் வானவர்களிடம், ''நான் பூமியில் ஒரு வழித்தோன்றலைப் படைக்கப் போகிறேன்'' என்று கூறிய போது அவர்கள், ''நாங்களோ உன்னைத் துதித்துப் புகழ்ந்து உன் தூய்மையைப் போற்றிக் கொண்டிருக்கிறோம். (ஆனால்)

நீ பூமியில் குழப்பம் விளைவித்து ரத்தம் சிந்தக்கூடிய மக்களையா படைக்கப்போகிறாய்?'' என்று கேட்டனர். (அதற்கு) அவன், ''நீங்கள் அறியாதவற்றை எல்லாம் நான் அறிவேன்'' என்று கூறினான். [31]அவன் ஆதமுக்கு (ஆதமின் வழித்தோன்றல்களில் வரவிருக்கும் நல்லோர்களின்) எல்லாப் பெயர்களையும் கற்றுக் கொடுத்தான். பின்னர் அவர்களை வானவர்கள்முன் நிறுத்தி, ''நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் இவர்களின் பெயர்களை எனக்குக் கூறுங்கள்'' என்றான். [32]அதற்கு அவர்கள், ''நீ மிகவும் (அப்பாற்பட்டுத்) தனித்துயர்ந்தவன். நீ எங்களுக்கு எதைக் கற்றுக்கொடுத்தாயோ அதை மட்டுமே நாங்கள் அறிவோம். உறுதியாக நீயே முற்றும் அறிந்தவன்; ஞானம் மிக்கவன்'' என்று கூறினர். [33]அவன் ''ஆதமே! அவர்களின் பெயர்களை இவர்களுக்கு எடுத்துக் கூறும்'' என்று கூறினான். அவர்களின் பெயர்களை ஆதம் எடுத்துக்கூறியபோது, ''வானங்களிலும் பூமியிலும் உள்ள மறை(பொருள்)களை நான் அறிவேன். நீங்கள் வெளிப்படுத்துவதையும் மறைத்துக் கொண்டிருப்பதையும் நன்கறிவேன் என்பதை உங்களிடம் நான் கூறவில்லையா?'' என்று அவன் கேட்டான்.

கலீஃபா என்பதன் சொற்பொருள், ஒருவரை அடுத்து அவரது இடத்தைப் பெறும் வழித்தோன்றல் என்பதாகும். பரம்பரை ஆட்சியின் காலத்தில், இந்தச் சொல் பெரும்பாலும் ஒருவரையடுத்து ஒருவராக அரியணையேறிய ஆட்சியாளர்களைக் குறிக்கப் பயன்பட்டது. இதனால், பயன்பாட்டுப் பொருளின் அடிப்படையில், 'கலீஃபா' என்ற சொல் 'ஆட்சியாளர்' என்பதற்கு இணையாக மாறியது.

இறைவன் மனிதனைப் படைத்தபோது, அவன் பூமியில் ஒரு சுதந்திரமான படைப்பாக வாழ வேண்டும் என்று முடிவு செய்தான். மனிதர்கள் தேர்வுச் சுதந்திரமும் அதிகாரமும் பெற்ற பிறகு, பூமியில் வழி கெட்டுப்போய் இரத்தம் சிந்த வழிவகுப்பார்கள் என்று வானவர்கள் அஞ்சினர். வானவர்களின் இந்த ஐயம் தவறானதாய் இருக்கவில்லை. இறைவனும் இந்தச் சாத்தியக்கூற்றை முழுமையாக அறிந்தவனே. ஆனால், மனிதர்களில் பலர் சுதந்திரம் பெற்ற பிறகு வழிபிறழ்ந்துவிட்டாலும், அவர்களின் சொல்லத்தகுந்த எண்ணிக்கையினர் சுதந்திரம், தேர்வதிகாரம் ஆகியவற்றைப் பெற்றிருந்தும், தங்கள் தகுதியையும் தங்கள் இறைவனின் அந்தஸ்தையும் உணர்ந்து, எந்த வற்புறுத்தலும் இல்லாமல், தாமாக முன்வந்து ஒப்புதல் / கீழ்ப்படிதல் ஆகியவற்றின் பாதையை ஏற்றுக்கொள்வார்கள் என்பதன் மீதுதான் இறைவனின் பார்வை இருந்தது. இந்த இரண்டாம் வகையைச் சேர்ந்த மக்கள்,

ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும், அறுவடையில் தானியங்களைப் போலவே விலைமதிப்பு மிக்கவர்களாக இருப்பார்கள். அறுவடையில் சுள்ளி விறகு மற்றும் வைக்கோலின் அளவு எப்போதும் மிக அதிகமாக இருக்கும். ஆனால் தானிய விதைகள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பினும், அவை மிகவும் விலைமதிப்புள்ளவை. அவற்றின் பொருட்டால் சுள்ளி விறகுக்கும் வைக்கோல் குவியலுக்கும் கூடவே வளர்ந்து பரவ வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இறைவன், தன் ஆற்றலால் ஆதாமின் வழித்தோன்றல்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் அவர்கள் முன் கொண்டு வந்தான். பின்னர் அவன் வானவர்களிடம், "பாருங்கள், இவர்கள் ஆதாமின் வழித்தோன்றல்கள்; இப்போது இவர்கள் யார் யார் இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று எனக்குச் சொல்லுங்கள்" என்றான். அதைக் குறித்த அறிவு இல்லாததால் வானவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. இறைவன் ஆதாமுக்கு அவர்களின் பெயர்களை, வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் பிற ஆளுமைகளைக் குறித்து அறியச் செய்தான். பின்னர் அவர்களை வானவர்களுக்கு அறிமுகப்படுத்தச் சொன்னான். ஆதாம் அவர்களை அறிமுகப்படுத்தியபோது, ஆதாமின் வழித்தோன்றல்களில், குழப்பம் செய்பவர்கள், தீயவர்கள் ஆகியோரை அன்றி, எப்படிப்பட்ட நேர்மையாளர்களும் இறையச்சம் கொண்டோரும் இருப்பார்கள் என்பதை வானவர்கள் அறிந்துகொண்டனர்.

இறை மறுப்புக்குப் பின் மனிதன் செய்யும் மிகப்பெரிய குற்றம் பூமியில் குழப்பத்தை ஏற்படுத்துவதும் இரத்தம் சிந்துவதும் ஆகும். பூமியில் இறைவன் நிறுவிய இயற்கை ஒழுங்கைச் சீர்குலைத்து, மனிதர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யும் செயல்களைச் செய்ய எந்தவொரு தனிநபருக்கோ குழுவுக்கோ அனுமதி இல்லை. இதுபோன்ற ஒவ்வொரு செயலும் மனிதனை இறைவனின் அருட்கொடைகளைப் பெறத் தகுதியற்றவன் ஆக்குகிறது. பூமியில் இறைவனால் உருவாக்கப்பட்ட இயற்கை ஒழுங்கை நிலைநாட்டுவது அதன் சீர்திருத்தமாகும், மேலும் பூமியின் இயற்கை ஒழுங்கைச் சீர்குலைப்பது அதன் குழப்பமும் கலவரமுமாகும்.

وَ اِذۡ قُلۡنَا لِلۡمَلٰٓئِكَةِ اسۡجُدُوۡا لِاٰدَمَ فَسَجَدُوۡۤا اِلَّاۤ اِبۡلِيۡسَ ؕ اَبٰى
وَاسۡتَكۡبَرَ ۫ وَكَانَ مِنَ الۡكٰفِرِيۡنَ ﴿۳۴﴾ وَ قُلۡنَا يٰۤاٰدَمُ اسۡكُنۡ اَنۡتَ
وَزَوۡجُكَ الۡجَنَّةَ وَكُلَا مِنۡهَا رَغَدًا حَيۡثُ شِئۡتُمَا ۪ وَلَا تَقۡرَبَا
هٰذِهِ الشَّجَرَةَ فَتَكُوۡنَا مِنَ الظّٰلِمِيۡنَ ﴿۳۵﴾ فَاَزَلَّهُمَا الشَّيۡطٰنُ
عَنۡهَا فَاَخۡرَجَهُمَا مِمَّا كَانَا فِيۡهِ ۪ وَقُلۡنَا اهۡبِطُوۡا بَعۡضُكُمۡ لِبَعۡضٍ

عَدُوٌّ ۚ وَلَكُمْ فِي الْاَرْضِ مُسْتَقَرٌّ وَّمَتَاعٌ اِلٰى حِيْنٍ ﴿٣٦﴾ فَتَلَقّٰٓى اٰدَمُ مِنْ
رَّبِّهٖ كَلِمٰتٍ فَتَابَ عَلَيْهِ ؕ اِنَّهٗ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ ﴿٣٧﴾ قُلْنَا اهْبِطُوْا
مِنْهَا جَمِيْعًا ۚ فَاِمَّا يَاْتِيَنَّكُمْ مِّنِّيْ هُدًى فَمَنْ تَبِعَ هُدَايَ فَلَا
خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ﴿٣٨﴾ وَالَّذِيْنَ كَفَرُوْا وَكَذَّبُوْا
بِاٰيٰتِنَآ اُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿٣٩﴾

[34]''ஆதமுக்குத் தலைபணியுங்கள்'' என்று நாம் வானவர்களிடம் கூறியபோது இப்லீஸைத் தவிர அவர்கள் அனைவரும் தலை பணிந்தனர். அவன் மறுத்ததோடு செருக்கும் கொண்டான். அவன் மறுப்பாளனாகி விட்டான். [35](பின்னர் ஆதமை நோக்கி) ''ஆதமே! நீரும் உமது மனைவியும் சொர்க்கத்தில் வசியுங்கள். இங்கே நீங்கள் விரும்பிய இடங்களில் எல்லாம் (சென்று விரும்பும் உணவை) உண்ணுங்கள். ஆனால் இந்த மரத்தை நெருங்காதீர்கள், நெருங்கினால் தீவினையாளர்களாகி விடுவீர்கள்'' என்று நாம் கூறினோம். [36]ஆனால் அந்த மரத்தின் மூலம் சாத்தான் அவ்விருவரையும் தவறிழைக்கச் செய்துவிட்டான். அவர்களிருந்த நிலையிலிருந்து அவ்விருவரையும் அவன் வெளியேற்றி விட்டான். நாம் (அவர்களிடம்:) ''நீங்கள் இங்கிருந்து இறங்கிவிடுங்கள். உங்களில் சிலர், சிலருக்குப் பகைவர்களாக இருப்பீர்கள். பூமியில் ஒரு குறிப்பிட்ட காலம்வரை உங்களுக்கு உறைவிடமும் வாழ்க்கை வசதிகளும் உண்டு'' என்று கூறினோம். [37]ஆதம் தம் இறைவனிடமிருந்து (பாவ மன்னிப்புக்கான) சில சொற்களைக் கற்றுக் கொண்டார். இறைவன் அவரின் பாவ மன்னிப்புக் கோருதலை ஏற்றுக்கொண்டான். உறுதியாக அவன் பாவ மன்னிப்பை ஏற்றுக் கொள்பவன்; நிகரற்ற அன்பாளன். [38]''நீங்கள் அனைவரும் இங்கிருந்து இறங்கி விடுங்கள். என்னிடமிருந்து உங்களுக்கு வழிகாட்டுதல் வரும் போது யாரெல்லாம் என் வழிகாட்டுதலைப் பின்பற்றுவார்களோ அவர்களுக்கு எத்தகைய அச்சமும் இல்லை; அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். [39]மறுத்து, எமது சான்றுகளைப் பொய்மைப்படுத்துவோர் நரகவாசிகள். அதில் அவர்கள் என்றென்றும் இருப்பார்கள்'' என்று நாம் கூறினோம்.

ஏக இறைவன் ஆதாமை வானவர்களுக்கும் இப்லீஸுக்கும் இடையில் நிறுத்தி, தலைபணியும் சோதனையின் மூலம், ஆதாமிடம் நடைமுறை விளக்கமாகப் பூமியில் அவருக்குச் சாத்தியமான இரண்டு வழிகள் இருக்கும் என்று கூறினான். ஒன்று, வானவர்களைப் போன்று இறைக் கட்டளைக்கு முன்பாகத் தலைவணங்குவது; அது தன்னை விடத் தாழ்ந்த ஓர் அடியார் முன் தலைபணிவதாக இருந்தாலும் சரியே. இரண்டாவது, தன்னை இப்லீஸைப் போல உயர்ந்தவனாகக் கருதி, மற்றவர்களுக்குக் கீழ்ப்படிய மறுத்து விடுவது. மனிதனின் முழு வாழ்க்கையும் இந்தச் சோதனைக்கான போர்க்களமாகும். இங்கே, மனிதன் எப்போதும் இரண்டு வழிமுறைகளுக்கு இடையே ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டியிருக்கிறது. ஒன்று வானவர்களின் மனப்பான்மை, அதாவது உலக வாழ்க்கையில் தன் செயல் அனைத்திலும் இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உண்மைக்கும் நீதிக்கும் தலைபணிய வேண்டும் என்பது. மற்றொன்று சாத்தானிய மனப்பான்மை. அதாவது ஒரு விஷயம் நேரும் போது, ஒரு நபருக்குள் பொறாமையும் பெருமையும் விழித்தெழுந்து, அவற்றின் தாக்கத்தின் கீழ், அந்த விஷயத்திற்குக் காரணமானவருக்குப் பணிய மறுப்பது.

இதன் கீழ் தடைசெய்யப்பட்ட மரம் தொடர்பாக ஒரு நடைமுறைப் படிப்பினை உள்ளது. இன்றைய உலகில், ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆணுக்குமான தடைசெய்யப்பட்ட ஏதாவது ஒரு மரம் (forbidden Tree) இருக்கவே செய்கிறது. மனிதன் வழி தவறுவது இங்கிருந்து தொடங்குகிறது. அவன் சாத்தானின் வசீகரிப்பில் விழுந்து இறைவன் தடைசெய்த வரம்புகளுக்குள் நுழையும்போதுதான் ஒரு மனிதன் 'விலக்கப்பட்ட கனி'யை உண்டவனாகி, இறைவனின் ஆதரவை இழக்கிறான், வேறுவிதமாகக் கூறினால், சொர்க்கத்தின் உரிமையை இழக்கிறான் இருப்பினும், இந்த இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றல்ல. மனிதன் தன் இறைவனிடம் திரும்பிச் சென்று, தன் நடத்தையைச் சரிசெய்து கொண்டு இறைவனிடம் மன்னிப்புக் கோருவதற்கான வாய்ப்பு இப்பொழுதும் திறந்தே இருக்கிறது. ஓர் அடியான் இவ்வாறு திரும்பும்போது, இறைவனும் அவன் பக்கம் திரும்பி, பாவமே செய்யாதது போல் அவனைத் தூய்மைப்படுத்தி விடுகிறான்.

மனித சமூகத்திற்கிடையே இறைவனின் அழைப்பின் எழுச்சியும் இதேபோன்ற ஒரு கடுமையான சோதனைதான். சத்தியத்தைக் கொண்டு அழைப்பவரும் 'ஆதாமைப்' போன்றவர்தான், அவருக்கு முன் மனிதர்கள் பணிய வேண்டும். அவர்கள் தங்கள் ஆணவம், பாரபட்சம் ஆகியவற்றின் காரணமாக அதை ஏற்கவில்லை என்றால், அவர்கள் இப்லீஸைப் பின்பற்றியவர்கள் ஆவர். இறைவன் இந்த உலகில் வெளிப்படையாகத் தோன்றுவதில்லை; சான்றுகளின் ஊடாக அவன் மக்களைச் சோதிக்கின்றான்.

இந்தச் சான்றுகளில் இறைவனைக் கண்டவனே இறைவனைக் கண்டடைந்தவன். இந்தச் சான்றுகளில் இறைவனைக் காணாதவன் இறைவனைக் கண்டடையாமல் போனவன்.

''உங்களில் சிலர் சிலருக்குப் பகைவர்களாக இருப்பீர்கள்.'' பகை என்பது ஒரு தார்மீக தீமை. ஆனால் இங்கே பகை என்பது அதன் முழுமையான பொருளில் இல்லை. உலகைப் படைத்தவன் அதனைச் சுதந்திரம் போட்டி ஆகிய நியதிகளின் அடிப்படையில் படைத்துள்ளான். இங்கே, ஒவ்வொரு மனிதனுக்கும் முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது, ஒருவன் தனது சுதந்திரத்தை விரும்பியபடி பயன்படுத்தும்போது, இயற்கையாகவே உலகில் போட்டி மற்றும் சவாலான சூழல் உருவாகிறது. ஒருவருக்கு மற்றவரிடமிருந்து ஏதாவதொரு சிரமத்திற்கான அனுபவம் ஏற்படுகிறது. ஆனால் இந்தப் பகைமை (போட்டி) உலகின் அனைத்து முன்னேற்றத்திற்குமான மிகப்பெரிய ஒற்றைக் காரணமாக இருந்திருக்கிறது என்பதை மனித வரலாறு காட்டுகிறது. இந்த உலகில், ஒருவருக்கு மிகப் பெரிய உதவியாளன் பகைவன் தான். அறிவிலியாக இருக்கும் ஒரு நண்பன் மனிதனை அலட்சியத்தில் சிக்க வைத்துவிடுகிறான். பகைவனோ எச்சரிக்கையாக வைத்திருக்கிறான்.

يٰبَنِيۡۤ اِسۡرَآءِيۡلَ اذۡكُرُوۡا نِعۡمَتِىَ الَّتِىۡۤ اَنۡعَمۡتُ عَلَيۡكُمۡ وَاَوۡفُوۡا
بِعَهۡدِىۡۤ اُوۡفِ بِعَهۡدِكُمۡ ۚ وَاِيَّاىَ فَارۡهَبُوۡنِ ﴿۴۰﴾ وَ اٰمِنُوۡا بِمَاۤ
اَنۡزَلۡتُ مُصَدِّقًا لِّمَا مَعَكُمۡ وَلَا تَكُوۡنُوۡۤا اَوَّلَ كَافِرٍۢ بِهٖ ۪ وَ لَا
تَشۡتَرُوۡا بِاٰيٰتِىۡ ثَمَنًا قَلِيۡلًا ۫ وَّاِيَّاىَ فَاتَّقُوۡنِ ﴿۴۱﴾ وَلَا تَلۡبِسُوا الۡحَقَّ
بِالۡبَاطِلِ وَتَكۡتُمُوا الۡحَقَّ وَاَنۡتُمۡ تَعۡلَمُوۡنَ ﴿۴۲﴾ وَ اَقِيۡمُوا الصَّلٰوةَ
وَاٰتُوا الزَّكٰوةَ وَارۡكَعُوۡا مَعَ الرّٰكِعِيۡنَ ﴿۴۳﴾ اَتَاۡمُرُوۡنَ النَّاسَ بِالۡبِرِّ
وَتَنۡسَوۡنَ اَنۡفُسَكُمۡ وَ اَنۡتُمۡ تَتۡلُوۡنَ الۡكِتٰبَ ؕ اَفَلَا تَعۡقِلُوۡنَ ﴿۴۴﴾
وَاسۡتَعِيۡنُوۡا بِالصَّبۡرِ وَالصَّلٰوةِ ؕ وَ اِنَّهَا لَكَبِيۡرَةٌ اِلَّا عَلَى الۡخٰشِعِيۡنَ ﴿۴۵﴾ ۙ
الَّذِيۡنَ يَظُنُّوۡنَ اَنَّهُمۡ مُّلٰقُوۡا رَبِّهِمۡ وَاَنَّهُمۡ اِلَيۡهِ رٰجِعُوۡنَ ﴿۴۶﴾ ع

[40]இஸ்ராயீலின் மக்களே! நான் உங்களுக்கு வழங்கிய அருட்கொடைகளை நினைவுகூருங்கள். நீங்கள் எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். நான் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவேன். எனக்கே அஞ்சுங்கள். [41]நான் அருளியுள்ளதன் (குர்ஆன்) மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அது உங்களிடம் உள்ள(தவ்ராத் வேதத்)தை உண்மைப்படுத்துகிறது. அதனை மறுப்பவர்களில் முதன்மையானவர்களாக ஆகி விடாதீர்கள். எமது வசனங்களை அற்ப ஊதியத்திற்கு விற்று விடாதீர்கள். எனக்கே அஞ்சுங்கள். [42]அறிந்துகொண்டே மெய்யைப் பொய்யுடன் கலக்காதீர்கள். உண்மையை மறைக்கவும் செய்யாதீர்கள். [43]தொழுகையைக் கடைப்பிடியுங்கள்; (ஜகாத் எனும்) கடமையாக்கப்பட்ட கொடையையும் கொடுத்து வாருங்கள். (தொழுகைக்காகக்) குனிபவர்களுடன் நீங்களும் குனியுங்கள். [44]பிற மக்களை நன்மை செய்யும்படி தூண்டிவிட்டு உங்களை நீங்களே மறந்து விடுகிறீர்களா? நீங்களோ (தவ்ராத்) வேதத்தை வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள்! நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்களா? [45]பொறுமையின் மூலமும் தொழுகையின் மூலமும் (இறைவனிடம்) உதவி தேடுங்கள். இது உள்ளச்சமுடையவர்களுக்கே தவிர உறுதியாக மற்றவர்களுக்கு மிகவும் பாரமானதாகவே இருக்கும். [46](உள்ளச்சமுடைய) அவர்கள் தங்கள் இறைவனைச் சந்திக்கவிருக்கிறோம், அவனிடமே திரும்ப இருக்கிறோம் என்பதை உறுதியாக அறிவார்கள்.

யூதர்கள் அல்லது இஸ்ராயீலின் மக்கள் யார்? இவர்கள் ஆப்ரஹாமின் மகன் ஈசாக் வழி பேரரான யாகூப் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். யாகூப்பின் நான்காவது மகனின் பெயர் யூதா (Juda). அவரைக் குறிக்கும் வகையில், இந்த மக்கள் பொதுவாக, 'யூதர்கள்' என்று அழைக்கப்படத் தொடங்கினர். யாகூப்பின் செல்லப் பெயர் 'இஸ்ராயீல்.' இந்த வகையில், யூத நாட்டினர் இஸ்ராயீல் மக்கள் (Children of Israel) என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

குர்ஆனில் யூத சமூகம் குறித்துப் பல்வேறு இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் அவர்கள் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த விமர்சனம் உண்மையில் யூதர்களுக்கு மீதான புகாராக அல்லாமல், முஸ்லிம் சமூகத்திற்கான அறிவுரையாக இருக்கிறது. ஒரு சமூகம் வீழ்ச்சி அடையும் போது அவர்களுடைய நிலை என்னவாகிறது? குர்ஆனில் இறைவன் யூத (அல்லது கிறிஸ்தவ) சமூகம் தொடர்பான இத்தகு வீழ்ச்சியின் பெருநிகழ்வைச் சுட்டிக்காட்டியுள்ளான். மேலும் அந்த நேரத்தில் இறைநம்பிக்கையாளர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவர்களுக்குத் தெரிவிக்கின்றான்.

ஒரு கூட்டத்தினருக்கு இறைவனின் மிகப்பெரிய கொடை, அவனுடைய தூதரை அவர்களிடம் அனுப்பி, அவர் மூலம் அந்தக் கூட்டத்தினருக்கு நிரந்தர வெற்றிக்கான வழியைத் திறப்பதாகும். இந்த அருட்கொடை இறுதித்தூதரின் வருகைக்கு முன்பே இஸ்ராயீலின் மக்களுக்கு வழங்கப்பட்டது, ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, அவர்களின் மார்க்கம் அவர்களுக்குக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் ஒரு வகைச் சடங்காக மாறியது. அது விழிப்புணர்வுடன் முடிவெடுத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை. இறுதித்தூதரின் தூதுத்துவம் உண்மை நிலையை வெளிப்படுத்திவிட்டது. அவர்களில், விழிப்புணர்வு ரீதியாக உயிர்ப்புடன் இருந்தவர்கள் உடனடியாக உண்மையை அடையாளம் கண்டுகொண்டு அவருடைய தோழர்களாக மாறினர். யாருக்கெல்லாம் அவர்களின் மதம் அவர்களின் மூதாதையர் சடங்காக மாறியிருந்ததோ அவர்களுக்கு இறைத்தூதரின் அழைப்புக் குரல் அந்நியமான ஒன்றாகத் தெரிந்தது. அவர்கள் பின்வாங்கி இறைத்தூதரின் எதிரிகளாக எழுந்து நின்றனர்.

முந்தைய வேதங்களில் அவரது தூதுத்துவத்தைப் பற்றிய தெளிவான அறிகுறிகள் இருந்தன. ஆகவே, அவரது உண்மைத்தன்மையைப் புரிந்துகொள்வது அவற்றின்மீது நம்பிக்கை கொண்டிருந்தவர்களுக்குக் கடினமாக இருக்கவில்லை. ஆனால், உலக நலன்கள் மற்றும் வசதிகளுக்காக அவர்கள் அவர்மீது நம்பிக்கைகொள்ள மறுத்துவிட்டனர். பல நூற்றாண்டுகளாக அவர்களிடையே வளர்ந்த மதக் கட்டமைப்பில் அவர்களுக்குத் தலைமைத்தன்மை கிடைத்திருந்தது. அவர்கள் பெரியோர்களின் பீடங்களில் அமர்ந்து மக்களுக்கு அடைக்கலமாக மாறிப் போயிருந்தனர். அவர்கள் ஆண்டு முழுவதும் மதத்தின் பெயரால் வித விதமான காணிக்கைகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

இறுதித்தூதரை உண்மையானவர் என ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், அவர்களின் மதப்பெருமை முடிவுக்கு வந்துவிடும்; நலன்களின் முழுக் கட்டமைப்பும் உடைக்கப்பட்டு விடும் என்று அவர்களுக்குத் தோன்றியது. அந்தக் காலத்தில் அரேபியாவில் வேதமுடையோர் மதப் பிரதிநிதிகளாக இருந்ததால் மக்கள் அவர்களிடம் இறுதித்தூதரைப் பற்றிக் கேட்டு வந்தனர். அவர்கள் தம் வீழ்ச்சியுற்ற மனநிலை காரணமாக மக்களின் பார்வையில் இறைத்தூதரின் ஆளுமை, பணி ஆகியவற்றின் மீது ஐயத்தை ஏற்படுத்தும் வகையில் அவர்கள் குழப்பத்தை உண்டாக்கும் வார்த்தைகளைச் சொல்லி விடுவார்கள். அவர்கள் தங்கள் சொற்பொழிவுகளில், மக்களை நேர்மையானவர்களாக இருக்கும் படியும், சத்தியத்தை ஆதரிக்கும் படியும் கூறுவார்கள். ஆனால் நடைமுறையில், சத்தியத்தை ஆதரிக்க வேண்டிய நேரம் வந்தபோது, அவர்கள் சத்தியத்தை ஆதரிக்கவில்லை.

இறைவனின் அழைப்புக்கு ஒப்புதலாகப் பதிலளிப்பதற்கு விலையாக அவர்கள் தமது வாழ்க்கைக் கட்டமைப்பை மாற்றிக்கொள்ள வேண்டும். கௌரவம் மற்றும் கண்ணியத்தின் பீடங்களிலிருந்து இறங்கியாக வேண்டும். உலக விவகாரங்களில் தங்கள் மத அந்தஸ்தை உருவாக்கி வைத்திருப்பவர்களுக்கு இது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆனால் உண்மையான பணிவாளர்களுக்கு, இந்த விஷயங்கள் ஒரு தடையாக இருப்பதில்லை. அவர்கள் இறைவனை நினைவுகூர்வதிலும், இறைவனுக்காகச் செலவு செய்வதிலும், இறைவனின் கட்டளைக்குத் தலைபணிவதிலும், இறைவனுக்காகப் பொறுமையைக் கடைப்பிடிப்பதிலும், மற்றவர்கள் உலகக் கேளிக்கைகளில் ஈடுபட்டு பெறும் நிறைவுகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். அச்சம்கொள்ள வேண்டியது உலக இன்ப இழப்புக்கா அல்ல, இறைவனின் கோபத்திற்காகத்தான் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

يٰبَنِيۡۤ اِسۡرَآءِيۡلَ اذۡكُرُوۡا نِعۡمَتِىَ الَّتِىۡۤ اَنۡعَمۡتُ عَلَيۡكُمۡ وَاَنِّىۡ
فَضَّلۡتُكُمۡ عَلَى الۡعٰلَمِيۡنَ ﴿۴۷﴾ وَاتَّقُوۡا يَوۡمًا لَّا تَجۡزِىۡ نَفۡسٌ عَنۡ
نَّفۡسٍ شَيۡـًٔا وَّلَا يُقۡبَلُ مِنۡهَا شَفَاعَةٌ وَّلَا يُؤۡخَذُ مِنۡهَا عَدۡلٌ وَّلَا
هُمۡ يُنۡصَرُوۡنَ ﴿۴۸﴾ وَاِذۡ نَجَّيۡنٰكُمۡ مِّنۡ اٰلِ فِرۡعَوۡنَ يَسُوۡمُوۡنَكُمۡ سُوۡٓءَ
الۡعَذَابِ يُذَبِّحُوۡنَ اَبۡنَآءَكُمۡ وَيَسۡتَحۡيُوۡنَ نِسَآءَكُمۡ ؕ وَفِىۡ
ذٰلِكُمۡ بَلَآءٌ مِّنۡ رَّبِّكُمۡ عَظِيۡمٌ ﴿۴۹﴾ وَاِذۡ فَرَقۡنَا بِكُمُ الۡبَحۡرَ فَاَنۡجَيۡنٰكُمۡ
وَاَغۡرَقۡنَآ اٰلَ فِرۡعَوۡنَ وَاَنۡتُمۡ تَنۡظُرُوۡنَ ﴿۵۰﴾ وَاِذۡ وٰعَدۡنَا مُوۡسٰٓى
اَرۡبَعِيۡنَ لَيۡلَةً ثُمَّ اتَّخَذۡتُمُ الۡعِجۡلَ مِنۡۢ بَعۡدِهٖ وَاَنۡتُمۡ
ظٰلِمُوۡنَ ﴿۵۱﴾ ثُمَّ عَفَوۡنَا عَنۡكُمۡ مِّنۡۢ بَعۡدِ ذٰلِكَ لَعَلَّكُمۡ تَشۡكُرُوۡنَ ﴿۵۲﴾
وَاِذۡ اٰتَيۡنَا مُوۡسَى الۡكِتٰبَ وَالۡفُرۡقَانَ لَعَلَّكُمۡ تَهۡتَدُوۡنَ ﴿۵۳﴾
وَاِذۡ قَالَ مُوۡسٰى لِقَوۡمِهٖ يٰقَوۡمِ اِنَّكُمۡ ظَلَمۡتُمۡ اَنۡفُسَكُمۡ
بِاتِّخَاذِكُمُ الۡعِجۡلَ فَتُوۡبُوۡۤا اِلٰى بَارِئِكُمۡ فَاقۡتُلُوۡۤا اَنۡفُسَكُمۡ ؕ

ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ عِنْدَ بَارِئِكُمْ ؕ فَتَابَ عَلَيْكُمْ ؕ اِنَّهٗ هُوَ التَّوَّابُ
الرَّحِيْمُ ﴿۵۴﴾ وَاِذْ قُلْتُمْ يٰمُوْسٰى لَنْ نُّؤْمِنَ لَكَ حَتّٰى نَرَى اللّٰهَ
جَهْرَةً فَاَخَذَتْكُمُ الصّٰعِقَةُ وَاَنْتُمْ تَنْظُرُوْنَ ﴿۵۵﴾ ثُمَّ بَعَثْنٰكُمْ
مِّنْۢ بَعْدِ مَوْتِكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿۵۶﴾ وَظَلَّلْنَا عَلَيْكُمُ الْغَمَامَ
وَاَنْزَلْنَا عَلَيْكُمُ الْمَنَّ وَالسَّلْوٰى ؕ كُلُوْا مِنْ طَيِّبٰتِ مَا
رَزَقْنٰكُمْ ؕ وَمَا ظَلَمُوْنَا وَلٰكِنْ كَانُوْۤا اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ﴿۵۷﴾

[47]இஸ்ராயீலின் மக்களே! நான் உங்களுக்கு வழங்கிய அருட்கொடையையும் உலகத்தார் அனைவரையும்விட உங்களைச் சிறப்பாக்கி வைத்திருந்ததையும் நினைவுகூருங்கள். [48]நீங்கள் (மறுமையாகிய) ஒரு நாளை(க் குறித்து) அஞ்சி நடந்துகொள்ளுங்கள். அந்நாளில் எந்த ஆன்மாவும் மற்றோர் ஆன்மாவுக்கு எத்தகைய பயனையும் அளிக்க முடியாது; எவரிடமிருந்தும் எந்தப் பரிந்துரையும் ஏற்கப்படாது; எவரிடமிருந்தும் ஈடாக (மீட்புத் தொகை) எதுவும் ஏற்றுக் கொள்ளப்படாது; அவர்களுக்கு எத்தகைய உதவியும் கிடைக்காது. [49]ஃபாரோவுடைய கூட்டத்தாரிடமிருந்து நாம் உங்களைக் காப்பாற்றியதை எண்ணிப்பாருங்கள். அவர்கள் உங்களுக்குக் கொடிய வேதனை அளித்து வந்தனர். அவர்கள் உங்களுடைய ஆண்மக்களை அறுத்(துக் கொலை செய்)தனர்; பெண் மக்களை (மட்டும்) உயிருடன் விட்டுவைத்தனர். இவ்வகையில் உங்கள் இறைவனிடமிருந்து பெரும் சோதனை ஏற்பட்டிருந்தது. [50]நாம் கடலைப் பிளந்து உங்களைக் காப்பாற்றி நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஃபாரோவுடைய கூட்டத்தாரை மூழ்கடித்தோம். [51](தவ்ராத் வேதத்தை அருள்வதற்காக) நாம் மோசேவுக்கு நாற்பது இரவுகளை வாக்களித்தோம். (அதற்காக) அவர் (ஸினாய் மலைக்குச்) சென்ற பிறகு நீங்கள் காளைக் கன்றைக் கடவுளாக ஆக்கிக்கொண்டீர்கள். நீங்கள் வரம்பு மீறியவர்களாகவே இருந்தீர்கள். [52]நீங்கள் நன்றிசெலுத்தக் கூடும் என்பதற்காக அதன் பின்னரும் நாம் உங்களை மன்னித்தோம். [53]நீங்கள் நேர்வழி பெறவேண்டும் என்பதற்காக நாம் மோசேவுக்கு (தவ்ராத்) வேதத்தையும் (சத்தியத்தையும்

அசத்தியத்தையும்) பிரித்தறிவிக்கும் (பிற) சான்றுகளையும் வழங்கினோம். [54]மோசே தம் சமூகத்தாரிடம், ''என் சமூகத்தோரே! நீங்கள் காளைக் கன்றை கடவுளாக்கிக் கொண்டதன்மூலம் உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக்கொண்டீர்கள். ஆகவே உங்களைப் படைத்தவனிடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். உங்(களிலுள்ள குற்றவாளி)களை நீங்களே மாய்த்துவிடுங்கள். இதுவே உங்களைப் படைத்தவனிடம் உங்களுக்குச் சிறந்ததாகும்'' என்று கூறியதை நினைவுகூருங்கள். அவன் உங்கள் பாவ மன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டான். உறுதியாக அவன் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன். [55]நீங்கள் மோசேயிடம், ''மோசே! அல்லாஹ்வை நாங்கள் கண்கூடாகக் காணும்வரை உம்மை ஒருபோதும் நம்பமாட்டோம்'' என்று கூறியதை (நினைவுகூருங்கள்). அப்போது நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பேரிடி உங்களைத் தாக்கியது.

[56]நீங்கள் இறந்துவிட்ட பின்னரும் நன்றி செலுத்தும்பொருட்டு மீண்டும் உங்களை உயிர்ப்பித்தோம். [57](பாலைவனத்தில் நீங்கள் திரிந்த காலத்தில் வெப்பத்திலிருந்து காக்க) உங்கள் மீது மேகத்தை நிழலிடச் செய்தோம். உங்களுக்கு 'மன்னு', 'சல்வா' (எனும் உணவுகளை) வழங்கினோம். ''நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையான உணவுகளை உண்ணுங்கள்'' (என்றோம்; எனினும் அவர்கள் எமது கட்டளையை மீறினர்). அதனால் அவர்கள் எமக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்தவில்லை. மாறாகத் தமக்குத்தாமே இழப்பை ஏற்படுத்திக்கொண்டனர்.

ஏக இறைவன் இஸ்ராயீலின் மக்களுக்கு உலகத்தார் அனைவரையும் விட மேன்மையும் சிறப்பும் அளித்திருந்தான். அதாவது, தனது சிறப்புப் பணிக்காக அவர்களைத் தேர்ந்தெடுத்திருந்தான், அவர்களுக்குத் தனது இறையறிவிப்புகள் அனுப்பி, அவர்கள் மூலம் தனது விருப்பத்தை மற்ற சமூகங்களுக்குத் தெரிவிக்க நாடினான். பின்னர், இந்தப் பொறுப்பின் தொடர்பாக, அவர்களுக்கு வேறு பல அருட்கொடைகளும் சலுகைகளும் வழங்கப்பட்டன. தம் எதிரிகள் மீது மேலாதிக்கம்; அவ்வப்போது செய்யும் தவறுகளுக்கு மன்னிப்பு; அசாதாரண சூழ்நிலைகளில் அசாதாரண உதவி; மற்றும் 'இறைவனிடமிருந்து அவர்களுக்கு உணவளித்தல்' போன்றவை. இதைக் கொண்டு அவர்களின் பிற்காலத் தலைமுறையினர் நாம் ஏக இறைவனின் சிறப்புமிக்க சமூகம் என்ற தவறான புரிதலுக்கு ஆளாயினர். நாம் மறுமையில் எப்படியும் வெற்றி பெற்றே தீர்வோம் என்றெண்ணினர்.

ஆனால் இறைவனைச் சார்ந்த இத்தகைய விஷயங்கள் யாருக்கும் பரம்பரை வழியில் வழங்கப்படுவன அல்ல. ஒரு கூட்டத்தினரில் அடுத்த தலைமுறை மனிதர்கள் அவர்களின் முந்தைய தலைமுறை மனிதர்களைக் கொண்டு மதிப்பீடு செய்யப்படுவதில்லை. மாறாக. ஒவ்வொரு தனி மனிதனும் சொந்தத் தகுதிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறான். இறைவனின் தீர்ப்பு நாள் மிகவும் கடுமையானதாக இருக்கும். அங்கு யாருக்கும் அவர்களின் சொந்த நற்செயல்களைத் தவிர வேறு எதுவும் பயனளிக்காது.

உண்மையான மார்க்கப்பற்று என்பது மனிதன் ஏக இறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்கக்கூடாது; இறைவனைப் பார்க்காமலேயே அவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்; மறுமைக்கு அஞ்சித் தனது வாழ்க்கையை வாழ வேண்டும்; தனது தேவைகளைத் தூய்மையான வாழ்வாதாரத்தின் மூலம் நிறைவு செய்துகொள்ள வேண்டும்; அவனுக்கு யார் மீது அதிகாரம் உள்ளதோ அவர்கள் குற்றங்கள் செய்வதிலிருந்து தடுக்க வேண்டும்.

وَ اِذْ قُلْنَا ادْخُلُوْا هٰذِهِ الْقَرْيَةَ فَكُلُوْا مِنْهَا حَيْثُ شِئْتُمْ
رَغَدًا وَّادْخُلُوا الْبَابَ سُجَّدًا وَّ قُوْلُوْا حِطَّةٌ نَّغْفِرْ لَكُمْ
خَطٰيٰكُمْ ؕ وَسَنَزِيْدُ الْمُحْسِنِيْنَ ﴿۵۸﴾ فَبَدَّلَ الَّذِيْنَ ظَلَمُوْا قَوْلًا
غَيْرَ الَّذِىْ قِيْلَ لَهُمْ فَاَنْزَلْنَا عَلَى الَّذِيْنَ ظَلَمُوْا رِجْزًا مِّنَ
السَّمَآءِ بِمَا كَانُوْا يَفْسُقُوْنَ ﴿۵۹﴾ ع وَ اِذِ اسْتَسْقٰى مُوْسٰى لِقَوْمِهٖ
فَقُلْنَا اضْرِبْ بِّعَصَاكَ الْحَجَرَ ؕ فَانْفَجَرَتْ مِنْهُ اثْنَتَا
عَشْرَةَ عَيْنًا ؕ قَدْ عَلِمَ كُلُّ اُنَاسٍ مَّشْرَبَهُمْ ؕ كُلُوْا وَاشْرَبُوْا
مِنْ رِّزْقِ اللّٰهِ وَلَا تَعْثَوْا فِى الْاَرْضِ مُفْسِدِيْنَ ﴿۶۰﴾ وَ اِذْ
قُلْتُمْ يٰمُوْسٰى لَنْ نَّصْبِرَ عَلٰى طَعَامٍ وَّاحِدٍ فَادْعُ لَنَا رَبَّكَ
يُخْرِجْ لَنَا مِمَّا تُنْۢبِتُ الْاَرْضُ مِنْۢ بَقْلِهَا وَ قِثَّآئِهَا وَفُوْمِهَا
وَعَدَسِهَا وَبَصَلِهَا ؕ قَالَ اَتَسْتَبْدِلُوْنَ الَّذِىْ هُوَ اَدْنٰى بِالَّذِىْ
هُوَ خَيْرٌ ؕ اِهْبِطُوْا مِصْرًا فَاِنَّ لَكُمْ مَّا سَاَلْتُمْ ؕ وَضُرِبَتْ

عَلَيۡهِمُ الذِّلَّةُ وَالۡمَسۡكَنَةُ ۗ وَبَآءُوۡ بِغَضَبٍ مِّنَ اللّٰهِ ؕ ذٰلِكَ
بِاَنَّهُمۡ كَانُوۡا يَكۡفُرُوۡنَ بِاٰيٰتِ اللّٰهِ وَيَقۡتُلُوۡنَ النَّبِيّٖنَ بِغَيۡرِ
الۡحَقِّ ؕ ذٰلِكَ بِمَا عَصَوۡا وَّكَانُوۡا يَعۡتَدُوۡنَ ﴿۶۱﴾

[58]*'(பைத்துல் மக்திஸ் - என்னும்) இந்நகருக்குள் நுழைந்து நீங்கள் விரும்பியவாறு தாராளமாக உண்ணுங்கள். அதன் வாயிலில் தலைபணிந்து, 'இறைவா! எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக!' என்று கூறியவாறு நுழையுங்கள். நாம் உங்கள் பாவங்களை மன்னித்து விடுவோம். நன்மை செய்வோருக்கு அதிகமாகவும் வழங்குவோம்' என்று நாம் கூறியதை நினைவுகூருங்கள்.* [59]*ஆனால் தீவினையாளர்கள் தமக்குச் சொல்லப்பட்ட சொல்லை மாற்றி வேறொரு சொல்லைச் சொன்னார்கள். ஆகவே வரம்பு மீறிய அவர்கள் மீது அவர்களின் கீழ்ப்படியாமையின் காரணமாக வானத்திலிருந்து வேதனையை நாம் இறக்கினோம்.* [60]*(பாலைவனத்தில்) மோசே தம் சமூகத்தாருக்காகத் தண்ணீர் வேண்டி இறைஞ்சியபோது, ''உம் கைத்தடியால் பாறையின் மீது அடிப்பீராக!'' என்று நாம் கூறினோம். அப்போது அதிலிருந்து பன்னிரண்டு ஊற்றுகள் பீறிட்டு வந்தன. ஒவ்வொரு பிரிவினரும் தாம் அருந்த வேண்டிய பகுதியை அறிந்துகொண்டனர். அவர்களிடம் ''அல்லாஹ் வழங்கியவற்றிலிருந்து உண்ணுங்கள், பருகுங்கள்; ஆனால் பூமியில் குழப்பம் செய்துகொண்டு திரியாதீர்கள்'' என்று நாம் கூறியதை நினைவுகூருங்கள்.* [61]*''மோசே! நாங்கள் ஒரே வகையான உணவை உட்கொண்டு சகித்திருக்க முடியாது. ஆகவே எங்களுக்காக உம் இறைவனிடம் இறைஞ்சி வேண்டிக்கொள்ளும்! நிலம் விளைவிக்கின்ற கீரை, வெள்ளரிக்காய், கோதுமை, பருப்பு, வெங்காயம் ஆகியவற்றை அவன் எங்களுக்கு வெளிப்படுத்தித் தரட்டும்'' என்று நீங்கள் கூறியபோது ''சிறந்த பொருளுக்குப் பதிலாக அற்பப் பொருளையா வேண்டுகிறீர்கள்? அப்படியானால் நீங்கள் ஏதாவது ஒரு ஊருக்குச் சென்று விடுங்கள். அங்கு நீங்கள் கேட்பவையெல்லாம் கிடைக்கும்'' என்று மோசே கூறினார். அவர்கள்மீது இழிவும் வறுமையும் சாட்டப்பட்டன. அவர்கள் அல்லாஹ்வின் சினத்திற்கு ஆளாகிவிட்டார்கள். ஏனெனில், அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை மறுத்துக்கொண்டும் தூதர்களை நியாயமின்றிக் கொலை செய்துகொண்டும் இருந்தனர்.*

இதற்குக் காரணம் அவர்கள் கீழ்ப்படியாமல் வரம்பு மீறிக் கொண்டிருந்ததேயாகும்.

ஏக இறைவன் முந்தைய இறை வேதங்களை நம்பிய மக்களுக்குச் சிறப்பான வெகுமதிகளை அருளினான். இதன் விளைவாக அவர்கள் இறைவனுக்கு நன்றியுள்ள அடியார்களாக மாறியிருக்க வேண்டும். ஆனால் அதற்கு நேர்மாறானவர்களாகத் தம்மை அவர்கள் நிரூபித்தனர். உதாரணமாக, ஒரு பெரிய நகரம் யூதர்கள் வசம் வழங்கப்பட்டது. அதில் வெற்றிப் பெருமையுடனும், ஆரவாரத்துடனும் பெருமிதத்துடனும் அல்லாமல், மனத்தாழ்மையுடனும் இறைவனிடம் மன்னிப்பைக் கோரியபடியும் நுழைய வேண்டும் என்று அவர்கள் கூறப்பட்டனர். ஆனால், அதற்கு பதிலாக, அவர்கள் வேடிக்கையான வார்த்தைகளைப் பேசத் தொடங்கினர். உணவைத் தேடும் போராட்டத்திலிருந்து விடுபட்டு, இறைக் கட்டளைகளை நிறைவேற்றுவதில் அதிக ஈடுபாடு காட்ட வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு மன்னு, சல்வா போன்ற இயற்கை உணவுகள் வழங்கப்பட்டன. ஆனால் அவர்கள் காரமான, சுவையூட்டும் உணவுகளுக்கான கோரிக்கையை விடுத்தனர். அவர்கள் தங்கள் தேவைகளில் மனநிறைவு கொள்ளாமல், இன்பத்தைத் தேடினார்கள். இறைவனின் தெளிவான சான்றுகள் கூட அவர்களின் இதயங்களை உருக வைக்கப் போதுமானதாக இல்லாத அளவுக்கு அவர்களின் அலட்சியம் மிகவும் அதிகரித்திருந்தது.

அவர்களை எச்சரிப்பதற்காக எழுந்த இறைவனின் அடியார்களை அவர்கள் மறுத்தனர். தம்மை ஓர் இரட்சிக்கப்பட்ட கூட்டம் என்று அவர்கள் புரிந்துகொண்டதே இந்தத் துணிச்சல் அவர்களுக்குள் எழுந்ததற்கான காரணம். ஆனால் இனம் அல்லது இனக்குழுவின் அடிப்படையில் இறைவன் முடிவுகளை எடுப்பதில்லை. ஒரு கிறிஸ்தவரோ முஸ்லிமோ சோதிக்கப்படுகின்ற அதே இறைச் சட்டத்தைக் கொண்டுதான் ஒரு யூதனும் சோதிக்கப்படுவான். சொர்க்கம் என்பது சொர்க்கத்திற்குரிய செயல்களைச் செய்பவர்களுக்கானதே அன்றிக் குறிப்பிட்ட இனத்துக்கோ குழுவுக்கு உரியது அன்று.

பூமியின் மீது நன்றியுணர்வு, பொறுமை, பணிவு மற்றும் மனநிறைவுடன் வாழ்வது பூமியின் சீர்திருத்தமாகும். மாறாக, நன்றியின்மை, பொறுமை யின்மை, ஆணவம் மற்றும் பேராசையுடன் வாழ்வது பூமியில் குழப்பம் ஏற்படுத்துவதாகும். ஏனென்றால் இதனால் இறைவனால் நிறுவப்பட்ட இயற்கை ஒழுங்கமைப்பு சீர்குலைகிறது. இது வரம்புகளை மீறுவதாகும். இறைவனோ ஒவ்வொருவரும் தங்கள் வரம்புகளுக்குள் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறான்.

إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَادُوا وَالنَّصَارَىٰ وَالصَّابِئِينَ مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ﴿٦٢﴾

[62]நம்பிக்கையாளர்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள், சாபியீன்கள் ஆகியோரில் யார் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கைகொண்டு, நற்செயல் புரிகிறார்களோ அவர்களுக்கு இறைவனிடம் கூலி இருக்கிறது. அவர்களுக்கு எத்தகைய அச்சமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.

இந்த வசனத்தில் நான்கு கூட்டத்தினரைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒன்று இறைத்தூதரைப் பின்பற்றும் முஸ்லிம்கள், மற்றொன்று தங்களை மோசேவின் சமூகத்தினர் என்று அழைத்துக் கொள்ளும் யூதர்கள், மூன்றாவதாக, இயேசுவின் சமூகத்தினர் என்று உரிமைகோரும் கிறிஸ்தவர்கள், நான்காவது ஸாபியீன்கள். அவர்கள் தங்களை ஜானின் சமூகம் (யஹ்யா) என்று அழைத்துக்கொண்டவர்களாகவும், பண்டைய காலங்களில் ஈராக் பகுதியில் வாழ்ந்த அவர்கள் வேதமுடையோராகவும், கஅபாவை நோக்கித் தொழக் கூடியவர்களாகவும் இருந்தனர். ஆனால் இப்போது ஸாபியீன் பிரிவு முடிவுற்றுப் போனது. அது தற்போது உலகில் எங்கும் இல்லை.

இங்கு முஸ்லிம்களைத் தனியாகப் பிரிக்கவில்லை. மாறாக, அவர்களை ஏனைய இறைத்தூதர்களுடன் தொடர்புடைய சமூகங்களுடன் சேர்த்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருள், ஒரு குழு என்ற அளவில், இறைவனுக்கு முன் அனைவரும் சமம். ஒரு குழுவினருக்கும் மற்றொரு குழுவினருக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை. அனைவரது விடுதலைக்குமான அசைக்கமுடியாத கொள்கை ஒன்றுதான், அது நம்பிக்கையும் நற்செயல்களும் ஆகும். ஒரு கூட்டம் தன்னை முஸ்லிம் என்று அழைத்துக் கொண்டாலும் சரி, யூதர்கள், கிறிஸ்தவர்கள் அல்லது ஸாபியீன்கள் என்று அழைத்துக் கொண்டாலும் சரி, அவர்கள் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் மட்டுமே அவர்களுக்கு இறைவனிடம் எந்தச் சிறப்புத் தகுதியும் இல்லை. இறைவனின் விருப்பப்படி தங்கள் நடைமுறை வாழ்க்கையை யார் வடிவமைத்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்துத் தரவரிசை வேறுபடும்.

இறைத்தூதர்களின் காலத்தில், அவர்களைப் பின்பற்றும் ஒரு கூட்டம் உருவாகும்போது, அது நம்பிக்கை மற்றும் நற்செயல்களையே

அடிப்படையாகக் கொண்டிருக்கும். அந்த நேரத்தில், இறைத்தூதரின் அழைப்பைக் கேட்டவுடன், சிலருக்குள் அறிவு மற்றும் சிந்தனை சார்ந்த புரட்சி ஏற்படுகிறது. அவர்களுக்குள் ஒரு புதிய மனஉறுதி எழுகிறது. இதுவரை தம் தனிப்பட்ட ஆசைகளின் அடிப்படையில் நடந்து கொண்டிருந்த அவர்களின் வாழ்க்கைத் திட்டம், இப்போது இறை போதனைகளை அடிப்படையாகக் கொண்டதாகி விடுகிறது. இவர்கள்தாம் உண்மையிலேயே இறைத்தூதரின் சமூகத்தினர். இவர்களுக்குத்தான் இறைத்தூதர்களின் நாவினால் மறுமையின் அருட்கொடைகளைப் பற்றிய நற்செய்தி வழங்கப்படுகிறது.

ஆனால் பிந்தைய தலைமுறைகளில் நிலைமை மாறிவிடுகிறது. இப்போது இறை மார்க்கம் அவர்களுக்கு ஒரு வகையான சமூக மரபாக ஆகி விடுகிறது. நம்பிக்கை, செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்ட நற்செய்திகள், குறிப்பிட்ட கூட்டத்துடனான தொடர்பின் விளைவு எனக் கருதப்படத் தொடங்குகின்றன. மற்றவர்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு உறவைத் தங்கள் கூட்டம் இறைவனுடன் கொண்டிருப்பதாகவும் இந்தக் குறிப்பிட்ட கூட்டத்தைச் சேர்ந்தவர்களின் கொள்கை, நற்செயல்கள் ஆகியவை எப்படிப்பட்டவையாக இருந்தாலும் அவர்கள் விடுதலை அடைந்தே தீர்வார்கள் என்றும் சொர்க்கம் தம் கூட்டத்தினருக்கு மட்டுமே, நரகம் மற்ற கூட்டத்தினருக்கு என்றும் அவர்கள் ஊகித்துக் கொள்கின்றனர்.

ஆனால் இறைவனுக்கு எந்தக் கூட்டத்தினருடனும் சிறப்பு உறவு இல்லை. ஒரு மனிதர் தனது எண்ணங்களிலும் செயல்களிலும் எப்படி இருக்கிறார் என்பதுதான் இறைவனிடம் முக்கியத்துவம் பெறுகிறது. மறுமையில், ஒரு மனிதரின் முடிவு அவரது உண்மையான குணத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுமே அன்றி, அவர் சார்ந்த கூட்டத்தின் தொடர்பு அடிப்படையில் அல்ல.

وَ اِذۡ اَخَذۡنَا مِيۡثَاقَكُمۡ وَرَفَعۡنَا فَوۡقَكُمُ الطُّوۡرَ ؕ خُذُوۡا مَاۤ
اٰتَيۡنٰكُمۡ بِقُوَّةٍ وَّ اذۡكُرُوۡا مَا فِيۡهِ لَعَلَّكُمۡ تَتَّقُوۡنَ ﴿۶۳﴾ ثُمَّ تَوَلَّيۡتُمۡ
مِّنۡۢ بَعۡدِ ذٰلِكَ ۚ فَلَوۡلَا فَضۡلُ اللّٰهِ عَلَيۡكُمۡ وَرَحۡمَتُهٗ لَكُنۡتُمۡ مِّنَ
الۡخٰسِرِيۡنَ ﴿۶۴﴾ وَلَقَدۡ عَلِمۡتُمُ الَّذِيۡنَ اعۡتَدَوۡا مِنۡكُمۡ فِى السَّبۡتِ
فَقُلۡنَا لَهُمۡ كُوۡنُوۡا قِرَدَةً خٰسِـئِيۡنَ ﴿۶۵﴾ ۚ فَجَعَلۡنٰهَا نَكَالًا لِّمَا بَيۡنَ
يَدَيۡهَا وَمَا خَلۡفَهَا وَمَوۡعِظَةً لِّلۡمُتَّقِيۡنَ ﴿۶۶﴾

[63](இஸ்ராயீலின் மக்களே!) நாம் (ஸினாய்) மலையை உங்கள்மீது உயர்த்தி உங்களிடம் உறுதிமொழி பெற்றபோது, ''உங்களுக்கு வழங்கிய (வேதத்)தை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள் அதிலுள்ளவற்றை நினைவில் வையுங்கள். அதன் மூலம் நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ளலாம்'' (என்று நாம் கூறியதை நினைவுகூருங்கள்). [64]அதன் பின்னரும் நீங்கள் புறக்கணித்து விட்டீர்கள். அல்லாஹ்வின் அருளும் பரிவும் உங்கள்மீது இல்லாதிருந்தால் உறுதியாக நீங்கள் அழிந்து விட்டிருப்பீர்கள். [65](உங்கள் முன்னோர்களில்) சனிக்கிழமை(களில் மீன் பிடிக்கக் கூடாது என்ற) வரம்பை மீறியவர்களைப்பற்றி நீங்கள் நன்றாக அறிந்திருக்கிறீர்கள். அவர்களை நோக்கி,''நீங்கள் இழிவான குரங்குகளைப் போலாகி விடுங்கள்'' என்று கூறினோம். [66]நாம் அதனை அன்று வாழ்ந்த மக்களுக்கும் அதற்குப்பின் வரக்கூடிய மக்களுக்கும் படிப்பினையாகவும் இறையச்சமுடையோருக்கு அறிவுரையாகவும் ஆக்கினோம்.

மோசேயின் காலத்தில், யூதர்களிடம் இறைவனின் போதனைகளைச் சரியாகப் பின்பற்றுவோம் என்று உறுதிமொழி பெறப்பட்டபோது, இறைவன் அவர்கள் மேல் மலையைத் தலைகீழாகக் கவிழ்த்து, தோராவை ஏற்றுக் கொள்ளுங்கள், இல்லையெனில் நீங்கள் அனைவரும் அழிக்கப்படுவீர்கள் (Talmud) என்று கூறியதாக பைபிளின் விவரிப்பு ஒன்று நமக்குச் சொல்கிறது. இறைவன் மீது நம்பிக்கை கொண்டவனின் நிலையும் இதுதான். நம்பிக்கைக் கொள்வதென்பது ஒருவரின் வாழ்க்கையும் மரணமும் இறை விருப்பத்தின் அடிப்படையிலானதாக இருக்கும் என்று இறைவனிடம் வாக்குறுதி அளிப்பதாகும். இது மிகவும் கடுமையான ஒப்புதல் வாக்குமூலம். அதில், ஒரு புறம் பணிவான அடியானும், மறுபுறம் தன் கையில் வானம், பூமி ஆகியவற்றின் ஆற்றல்களைக் கொண்ட இறைவனும் இருக்கிறார்கள். ஓர் அடியான் தன் வாக்குறுதியை நிறைவேற்றினால், இறைவனின் நிரந்தரமான அருட்கொடைகள் அவனுக்காக இருக்கும். அவன் வாக்குறுதியை அளித்துவிட்டு அதை மீறினால், அவனது இறைவன் அவனை நரகத்தில் தள்ளிவிடும் கடும் அபாயம் உள்ளது. அங்கு அவன் வெளியேற வழியே இல்லாத வகையில் எரிந்து கொண்டிருப்பான்.

நம்பிக்கை உடன்படிக்கையின்போது இறைத்தூதர் மோசேயின் மக்களுக்கு ஏற்பட்ட நிலையே, ஒவ்வொரு நம்பிக்கை கொண்ட அடியானிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது. இறைவனோடு நம்பிக்கை என்னும் கயிற்றால் தன்னைக் கட்டிக் கொண்ட ஒவ்வொரு நபரும், இந்த

உடன்படிக்கையை மீறினால் 'வானமும் பூமியும் அவன் மீது விழுந்து விடும்' என்பது போல அதன் தீவிரத்தைக் கண்டு நடுங்க வேண்டும்.

ஏக இறைவனால் மார்க்கச் சட்டம் வழங்கப்பட்ட ஒரு கூட்டத்தினரின் கெடுவழியின் ஒரு வகையானது, அவர்கள் நடைமுறையில் அதற்கு எதிராகச் செயல்பட்டு, இறைவனின் கட்டளைகளை மிகச் சரியான முறையில் பின்பற்றுவதைப் போன்று விளக்கங்கள் மூலம் காட்ட முற்படுவதுதான். நோன்பு மற்றும் வழிபாட்டிற்காக ஒரு குறிப்பிட்ட நாளை ஒதுக்கி வைக்க வேண்டும்; அந்த நாளில் எந்த உலக வேலையும் செய்யக் கூடாது என்று அவர்களுக்கு ஒரு கட்டளையிடப்பட்டது. ஆனால் அவர்கள் இந்தத் தடையைப் பேணவில்லை. மற்ற நாட்களைப் போலவே, அவர்கள் இந்தக் குறிப்பிட்ட நாளிலும் தங்கள் உலக வணிகச் செயல்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். இருப்பினும், அவர்கள் செய்வது இறைவனின் கட்டளைப்படிதான் என்பதைக் காட்ட பல்வேறு வார்த்தை விளக்கங்களைப் பயன்படுத்தினர். அவர்களுடைய ஆணவம் எந்த அளவுக்கு இறைவனின் விருப்பத்திற்கு மாறாக இருந்ததென்றால், அவர்கள் குரங்குகளாக மாற்றப்பட்டனர். ஒருவர் மார்க்கச் சட்டத்திலிருந்து விலகும் போதெல்லாம், எந்த ஒழுக்க நெறிகளுக்கும் கட்டுப்படாத விலங்குகளின் நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறார். எனவே, இறைவனின் மார்க்கத்தைப் பின்பற்றுவதாக வெளியே சொல்லிக்கொண்டு, அதை தங்கள் உலக நலன்களுக்காக சூழ்ச்சியான விதத்தில் பயன்படுத்துபவர்கள் இறைவனின் சட்டம் முந்தைய சமூகங்கள் தங்களின் இதேபோன்ற செயல்களால் அனுபவித்த அதே மிருகங்களாக்கப்பட்ட அவமானத்திற்குத் தங்களையும் ஆளாக்கி விடக்கூடாதே என்று அச்சம்கொள்ள வேண்டும்.

وَاِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖٓ اِنَّ اللّٰهَ يَاْمُرُكُمْ اَنْ تَذْبَحُوْا بَقَرَةً ؕ
قَالُوْٓا اَتَتَّخِذُنَا هُزُوًا ؕ قَالَ اَعُوْذُ بِاللّٰهِ اَنْ اَكُوْنَ مِنَ
الْجٰهِلِيْنَ ﴿٦٧﴾ قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّنْ لَّنَا مَا هِيَ ؕ قَالَ اِنَّهٗ
يَقُوْلُ اِنَّهَا بَقَرَةٌ لَّا فَارِضٌ وَّلَا بِكْرٌ ؕ عَوَانٌۢ بَيْنَ ذٰلِكَ ؕ
فَافْعَلُوْا مَا تُؤْمَرُوْنَ ﴿٦٨﴾ قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّنْ لَّنَا مَا
لَوْنُهَا ؕ قَالَ اِنَّهٗ يَقُوْلُ اِنَّهَا بَقَرَةٌ صَفْرَآءُ ۙ فَاقِعٌ لَّوْنُهَا
تَسُرُّ النّٰظِرِيْنَ ﴿٦٩﴾ قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّنْ لَّنَا مَا هِيَ ۙ اِنَّ

الْبَقَرَ تَشٰبَهَ عَلَيْنَا ؕ وَ اِنَّاۤ اِنْ شَآءَ اللّٰهُ لَمُهْتَدُوْنَ ۝٧٠ قَالَ
اِنَّهٗ يَقُوْلُ اِنَّهَا بَقَرَةٌ لَّا ذَلُوْلٌ تُثِيْرُ الْاَرْضَ وَ لَا تَسْقِى
الْحَرْثَ ۚ مُسَلَّمَةٌ لَّا شِيَةَ فِيْهَا ؕ قَالُوا الْـٰٔنَ جِئْتَ بِالْحَقِّ ؕ
فَذَبَحُوْهَا وَمَا كَادُوْا يَفْعَلُوْنَ ۝٧١ ع ۝٧٢ وَ اِذْ قَتَلْتُمْ نَفْسًا فَادّٰرَءْتُمْ
فِيْهَا ؕ وَاللّٰهُ مُخْرِجٌ مَّا كُنْتُمْ تَكْتُمُوْنَ ۝٧٣ ۚ فَقُلْنَا اضْرِبُوْهُ
بِبَعْضِهَا ؕ كَذٰلِكَ يُحْىِ اللّٰهُ الْمَوْتٰى ۙ وَ يُرِيْكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ ۝٧٣

[67]மோசே தம் சமூகத்தாரிடம், ''நீங்கள் ஒரு பசுவை அறுக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான்'' என்று கூறியபோது அவர்கள், ''நீர் எங்களை ஏளனம் செய்கிறீரா?'' என்றனர். அதற்கு அவர், ''நான் அறிவிலி ஆவதிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்'' என்றார். [68](அதற்கு) அவர்கள், ''அது எத்தகையது என்பதை எங்களுக்கு விளக்குமாறு உம் இறைவனிடம் எங்களுக்காகக் கேட்பீராக'' என்றனர். அதற்கு அவர், ''அது கிழமாடாகவோ, கன்றாகவோ இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டதாக இருக்கவேண்டும் என்றுஇறைவன் கூறுகிறான். ஆகவே உங்களுக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள்'' என்றார். [69]மீண்டும் அவர்கள், ''அதனுடைய நிறம் என்ன என்பதை விளக்கும்படி உம் இறைவனிடம் கேட்பீராக'' என்றனர். (அதற்கு அவர், ''அது காண்போரை ஈர்க்கக்கூடிய தூய மஞ்சள் நிறப் பசு வாகும் என்று இறைவன் கூறுகிறான்'' என்றார். [70](அப்போது) அவர்கள், ''அது எத்தகையது என்பதை விளக்கும்படி உம் இறைவனிடம் கேட்பீராக! ஏனெனில் எங்களுக்குப் பசுக்கள் ஒரே மாதிரியாகவே தோன்றுகின்றன. அல்லாஹ் விரும்பினால் இதில் நாங்கள் நேர்வழி பெறுவோம்'' என்றனர். [71](அதற்கு) அவர், ''அது நிலத்தை உழுவதற்கோ நீர் இறைப்பதற்கோ பயன்படுத்தப்படாத, ஆரோக்கியமான, தழும்புகளற்ற பசுவாக இருக்கவேண்டும் என இறைவன் கூறுகிறான்'' என்றார். (அதற்கு) அவர்கள், இப்போதுதான் நீர் தெளிவான விவரத்தைக்கொண்டு வந்துள்ளீர்'' என்று கூறி (அத்தகைய பசு ஒன்றைக் கொணர்ந்து) அறுக்க மனமின்றியே அறுத்தனர். [72]நீங்கள் ஒருவரைக் கொன்றுவிட்டு ஒருவருக்கொருவர் குற்றம்சாற்றிக் கொண்டிருந்தீர்கள். ஆனால் நீங்கள் மறைக்கக் கருதியிருந்ததை அல்லாஹ் வெளிப்படுத்த விரும்பிவிட்டான். [73]''(அறுக்கப்பட்ட) அதன் ஒரு பகுதியைக்

கொண்டு அந்த வெற்றுடலின் மீது அடியுங்கள்'' என்று நாம் கட்டளையிட்டோம். (அவ்வாறு அடித்தபோது கொலையுண்டவர் உயிர் பெற்றெழுந்து கொலையாளியை அறிவித்தார்). இவ்வாறே அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான். நீங்கள் புரிந்து கொள்வதற்காக அவன் உங்களுக்குத் தன் சான்றுகளைக் காட்டுகிறான்.

மோசேயின் காலத்தில் இஸ்ராயீலின் மக்களிடையே ஒரு கொலை நடந்தது. கொலையாளியைக் கண்டுபிடிக்க, இறைவன் ஒரு பசுவை அறுத்து அதன் இறைச்சியைப் பாதிக்கப்பட்டவர் மீது வீசுமாறு இறைத்தூதர் மூலம் கட்டளையிட்டான். இறந்த மனிதனின் சடலத்தின் மீது அதன் ஒரு துண்டை வீசி அடிக்க வேண்டும். பின்னர், கொலை செய்யப்பட்ட மனிதன் இறைவனின் கட்டளைப்படி எழுந்து கொலையாளியின் பெயரை வெளிப்படுத்துவான். இது சில நோக்கங்களுக்காகக் கையாளப்பட்ட ஓர் அற்புதத் திட்டம்.

1. எகிப்தில் நீண்ட காலம் தங்கியிருந்ததால், இஸ்ராயீலின் மக்கள் எகிப்திய கலாச்சாரத்திற்கும் பழக்கவழக்கங்களின் தாக்கத்திற்கும் உள்ளாயினர். எகிப்திய மக்கள் பசுக்களை வணங்கினர். இவ்வாறு, எகிப்தியர்களின் செல்வாக்கின் காரணமாக, பசு புனிதமானது என்ற எண்ணம் இஸ்ராயீலின் மக்களிடையேயும் உருவானது. மேற்கண்ட நிகழ்வு நடந்தேறிய போது, இந்த நிகழ்வின் மூலம் பசுவின் புனிதத்தன்மையை அவர்களின் மனங்களிலிருந்து உடைத்தெறிய இறைவன் விரும்பினான். எனவே, கொலையாளியைக் கண்டுபிடிக்க ஒரு பசுவை அறுப்பதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

2. அதேபோல், இஸ்ராயீலின் மக்கள் சட்டம் சார்ந்த வீண்விவரக் கேள்விகள் (hair splitting) விவாதம் போன்றவற்றின் மூலம் இறைவனின் எளிய மார்க்கத்தை ஒரு சுமையான மார்க்கமாக்கும் தவற்றைச் செய்தார்கள். எனவே, மேற்கூறிய நிகழ்வு மூலமாக அவர்களுக்கு எளிய பொருளில் கட்டளையைப் பெற்று உடனடியாக இறைவனுக்குக் கீழ்ப்படியத் தொடங்குவதற்கான பாடம் கற்பிக்கப்பட்டது. 'தோண்டித் துருவிக் கொண்டிருக்கும் அணுகுமுறையை மேற்கொள்ளாதீர்கள். நீங்கள் அவ்வாறு செய்தால், கட்டளையின் விவரங்களை அறிந்து அதன் வரம்புகளைத் தீர்மானிக்கும் முயற்சியில் கடுமையான சோதனைக்குள்ளாவீர்கள். இவ்வாறு, ஓர் எளிய கட்டளை, நிபந்தனைகள் சேரச் சேர ஒரு கடுமையான கட்டளையாக மாறும். அதை நிறைவேற்றுவது உங்களுக்கு மிகவும் கடுமையானதாக இருக்கும்.'

3. இந்த நிகழ்வு மூலம் மனிதர்களுக்கு இரண்டாவது வாழ்க்கையும் முதல் வாழ்க்கையைப் போலவே சாத்தியமானது என்ற பாடம் கற்றுத் தரப்பட்டிருக்கிறது. இறைவன் ஒவ்வொரு மனிதனையும் மரணத்திற்குப் பிறகு உயிர்ப்பித்து, மீண்டும் ஒரு புதிய உலகில் எழுப்புவான்.

ثُمَّ قَسَتْ قُلُوْبُكُمْ مِّنْۢ بَعْدِ ذٰلِكَ فَهِيَ كَالْحِجَارَةِ اَوْ اَشَدُّ
قَسْوَةً ؕ وَاِنَّ مِنَ الْحِجَارَةِ لَمَا يَتَفَجَّرُ مِنْهُ الْاَنْهٰرُ ؕ وَاِنَّ
مِنْهَا لَمَا يَشَّقَّقُ فَيَخْرُجُ مِنْهُ الْمَآءُ ؕ وَاِنَّ مِنْهَا لَمَا يَهْبِطُ مِنْ
خَشْيَةِ اللّٰهِ ؕ وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ۝٧٤

[74]அதன் பின்னரும் உங்கள் இதயங்கள் இறுகி விட்டன. அவை கற்பாறைகளைப் போல அல்லது அவற்றை விடவும் கடினமாகி விட்டன. ஏனெனில் சில பாறைகளிலிருந்து ஆறுகள் பொங்கி ஓடுகின்றன. சில பாறைகள் பிளந்து அவற்றிலிருந்து நீரூற்று வெளிப்படுவதும் உண்டு. அவற்றில் சில இறையச்சத்தால் உருண்டு விழுவதுண்டு. (ஆனால் நீங்கள் எவ்வகையிலும் திருந்தவில்லை). நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் கவனிக்காமலில்லை.

இறைவனின் கட்டளைகள் தொடர்பாக வாதிடுபவர்கள் மற்றும் சொந்த விளக்கங்கள் தருபவர்களிடம் படிப்படியாக உணர்வின்மை என்னும் நோய் உருவாகிவிடுகிறது. அவர்களின் இதயங்கள் இறுகிக் கொண்டே போகின்றன. இறைவனின் பெயர் என்பது மிகப் பெரிய ஆளுமையின் பெயர். மனிதனுக்குள் நம்பிக்கை உயிருடன் இருந்தால், இறைவனின் பெயர் அவனை உலுக்கி விடுகிறது. பேசுவதைக் காட்டிலும் அவன் மௌனத்தை மொழியாக்கிக் கொள்கிறான். ஆனால் இதயங்களில் தேக்க நிலையும் உணர்வின்மையும் வரும்போது, இறைவனின் பேச்சிலும் சாதாரண மனிதர்களின் பேச்சில் செய்யப்படும் அதே வகையான விவாதங்களும் விளக்கங்களும் தொடங்கப்பட்டுவிடுகின்றன. இதுபோன்ற செயல் அவர்களின் உணர்வின்மையை இன்னும் மிகுதிப்படுத்தி விடுகிறது. எந்த அளவுக்கெனில் அவர்களுடைய இதயங்கள் கல்லைப் போல இறுகிவிடுகின்றன. இந்நிலையில் இறைவனின் சிந்தனை அவர்களின் இதயங்களை உருக்குவதில்லை; அவர்களுக்குள் ஏக்கத்தை உருவாக்குவதில்லை; அது அவர்களின் ஆன்மாக்களுக்குள் ஒரு நடுக்கத்தை ஏற்படுத்தக் காரணமாவதில்லை.

கற்பாறைகள் இங்கே ஓர் உருவகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இறைவன் தனது பிரபஞ்சத்தை மனிதனுக்கு அது ஒரு படிப்பினையாகவும் அறிவுரையாகவும் இருகும் வகையில் படைத்துள்ளான். இங்குள்ள

அனைத்தும் மௌனமான உருவக மொழியில் இறைவிருப்பத்தின் நடைமுறை வெளிப்பாடாக உள்ளன. அந்த இறைவிருப்பம் குர்ஆனில் இந்த வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒன்று.

இறைவன் தனது உலகில் கற்பாறைகளின் மூலமாக நிறுவி இருக்கும் குறியீட்டு அர்த்தத்தின் மூன்று தன்மைகள் இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன:

மலைகளில் பாறைகள் வழியாக நீரூற்றுகள் வழிந்தோடுவது நாம் கவனிக்கும் ஒன்று. அவை இறுதியில் ஒன்றிணைந்து ஒரு நதியின் உருவத்தை எடுத்துக்கொள்கின்றன என்பதையும் காண்கிறோம். இது இறையச்சம் நிறைந்திருக்கும் ஒரு மனிதனுக்குக் குறியீடாகும். இறையச்சம் அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிவில் வழிந்தோடுகிறது.

இரண்டாவது ஓர் உலர்ந்த பாறை உவமை. ஆனால் உடைப்பவர்கள் அதை உடைக்கும்போது, அதன் அடியில் ஒரு பெரிய நீர்த்தேக்கம் இருப்பது தெரியவருகிறது. அத்தகைய பாறைகளை உடைப்பதன் மூலம் கிணறுகள் உருவாக்கப்படுகின்றன. இந்த உவமை இறைவனிடமிருந்து வெகு தொலைவில் இருக்கும் ஒரு மனிதனுக்கானது. அவனுக்கு ஒரு விபத்து ஏற்பட்டு அந்த விபத்து அவனது மனதை உலுக்கி அவன் கண்ணீர் வெள்ளத்துடன் இறைவனிடம் விரைந்து ஓடுகிறான்.

பாறைகளின் உலகில் மூன்றாவது குறியீட்டுப் பொருள் நிலச்சரிவு (landslide) பற்றியது. அதாவது, மலைகளின் உச்சியிலிருந்து பாறைத் துண்டுகள் உருண்டு விழுவது. இது பிற மனிதரிடம் மோசமான அணுகுமுறை மேற்கொண்ட ஒரு மனிதனுக்கான உவமை. அதன் பிறகு, இறைவனின் கட்டளை அவனுக்கு முன் கொண்டுவரப்படுகிறது. தனக்கு முன் இறைவனின் கட்டளை வந்தவுடன் அவன் சரிந்து விழுகிறான். மனிதனுக்கு முன் பணிவதற்கு அவன் தயாராக இருந்ததில்லை. ஆனால் மனிதனின் தொடர்பு இறைவனுடனான தொடர்பாக மாறியபோது, அவன் தாழ்மையுடன் அவன் முன் வீழ்ந்து விடுகிறான்.

اَفَتَطْمَعُوْنَ اَنْ يُّؤْمِنُوْا لَكُمْ وَقَدْ كَانَ فَرِيْقٌ مِّنْهُمْ يَسْمَعُوْنَ
كَلٰمَ اللّٰهِ ثُمَّ يُحَرِّفُوْنَهٗ مِنْۢ بَعْدِ مَا عَقَلُوْهُ وَهُمْ يَعْلَمُوْنَ ﴿٧٥﴾
وَاِذَا لَقُوا الَّذِيْنَ اٰمَنُوْا قَالُوْٓا اٰمَنَّا ۚ وَاِذَا خَلَا بَعْضُهُمْ

اِلٰى بَعۡضٍ قَالُوۡۤا اَتُحَدِّثُوۡنَهُمۡ بِمَا فَتَحَ اللّٰهُ عَلَيۡكُمۡ لِيُحَآجُّوۡكُمۡ
بِهٖ عِنۡدَ رَبِّكُمۡ ؕ اَفَلَا تَعۡقِلُوۡنَ ۝ اَوَلَا يَعۡلَمُوۡنَ اَنَّ اللّٰهَ يَعۡلَمُ
مَا يُسِرُّوۡنَ وَمَا يُعۡلِنُوۡنَ ۝

[75](நம்பிக்கையாளர்களே!) நீங்கள் சொல்வதைக் கேட்டு (இஸ்ராயீலின் மக்களாகிய) இவர்கள் நம்பிக்கை கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறீர்களா? இவர்களில் ஒரு பிரிவினர் (தவ்ராத்தின்) இறைவாக்குகளைச் செவிமடுத்துப் புரிந்துகொண்ட பின்னரும் அறிந்துகொண்டே அவற்றைத் திரித்துக் கொண்டிருந்தனர். [76]அவர்கள் நம்பிக்கையாளர்களைச் சந்தித்தால் ''நாங்களும் நம்பிக்கை கொண்டுள்ளோம்'' என்று கூறுகின்றனர். ஆனால் அவர்கள் தங்களுக்குள் தனிமையில் சந்தித்துக்கொண்டால் ''அல்லாஹ் உங்களுக்கு(த் தவ்ராத்தில் இறுதித்தூதரின் வருகை பற்றி) வெளிப்படுத்தி இருப்பதை அவர்களிடம் கூறி விடுகிறீர்களே! (அதைக்கொண்டு) அவர்கள் உங்கள் இறைவன்முன் உங்களுக்கு எதிராக வாதாடுவதற்காகவா? உங்களுக்கு அறிவு இல்லையா?'' என்று கேட்கின்றனர். [77]அவர்கள் மறைப்பதையும் வெளிப்படுத்துவதையும் அல்லாஹ் நன்கறிவான் என்பதை அவர்கள் அறியமாட்டார்களா என்ன?

இறைத்தூதர் அவர்கள்மீது நம்பிக்கை கொண்ட மதீனா மக்கள் அவரை இவ்வளவு விரைவாக அடையாளம் கண்டு ஏற்றுக்கொண்டதற்கான ஒரு காரணம், இறுதித்தூதர் ஒருவர் வருவார் என்று தங்கள் அண்டை வீட்டு யூதர்களிடமிருந்து அடிக்கடி கேள்விப்பட்டதே ஆகும். எனவே, இறுதித் தூதரின் வருகை பற்றிய செய்தி அவர்களுக்குப் பரிச்சயமான செய்தியாக இருந்தது. இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளத் தொடக்க உந்துதலைத் தூண்டிய யூதர்கள் தாமாகவே முன்வந்து இறைத்தூதரை ஆதரிப்பார்கள் என்று இந்த முஸ்லிம்கள் இயல்பாகவே நம்பினர். எனவே, அவர்கள் உற்சாகமாக இந்த யூதர்களிடம் இஸ்லாத்தின் செய்தியை எடுத்துச் சென்று, இறைத்தூதர்மீது நம்பிக்கை கொண்டு அவருக்கு ஆதரவு நல்குமாறு அழைப்பு விடுத்தனர்.

ஆனால், முஸ்லிம்கள் தாங்கள் நம்பியதற்கு மாறாகப் பெரும் அதிர்ச்சி அடைந்தார்கள். காரணம் மதீனாவின் யூதர்கள் அவர்களுடைய அழைப்பை ஏற்கத் தயாராக இருக்கவில்லை. இதன் விளைவாக, மற்றொரு குழப்பம் எழத் தொடங்கியது. அந்தக் குழப்பம் இறைத்தூதர் அவர்களின் அழைப்பை

விரும்பாதவர்களுடையது. அவர்கள் முஸ்லிம்களிடம் 'நீங்கள் நினைப்பது போல் இந்தத் தூதர் பற்றிய செய்தி அவ்வளவு உறுதியானதல்ல. அது அவ்வளவு உறுதியானதாக இருந்திருந்தால், மதீனாவின் இந்த யூத அறிஞர்கள் உறுதியாக அவரை நோக்கி விரைந்தோடி இருப்பார்கள். ஏனென்றால் அவர்கள் உங்களை விட வானிலிருந்து இறங்கிய நூல்களைப் பற்றி அதிகம் அறிந்திருக்கிறார்கள்' என்று கூறினர்.

ஆனால் ஓர் உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு அதை அறிந்திருப்பது மட்டும் போதாது. மாறாக, அந்த உண்மையின்மீது தீவிரமாக இருப்பதுதான் முக்கியம். முந்தைய சமூகங்களின் நிலை என்னவென்றால், தங்களிடம் இருந்த நூல்களில் அவர்களே மாற்றங்களைச் செய்துவிட்டனர். அத்துணைக்கும் அவை வானிலிருந்து அருளப்பட்ட நூல்கள் என்று அவர்கள் நம்பினர். அவர்கள் தங்கள் புனித நூல்களில் தம் விருப்பத்திற்கு மாறாக இருக்கும் எதைப் பார்த்தாலும், சுய விளக்கம் தந்து அல்லது திரித்து அதைத் தங்கள் சொந்த விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றுவார்கள். அவர்கள் தங்கள் மதத்தைத் தங்கள் உலக நலன்களுக்குப் பணியச் செய்து கொண்டிருந்தார்கள். தங்கள் செயல்கள் மூலம் இவ்வளவு பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துபவர்கள், தங்கள் சுயத்திற்கு வெளியே ஓர் உண்மையான விஷயத்தை ஏற்றுக்கொள்ள எப்படித் தயாராக இருக்க முடியும்?

ஒரு விஷயம் எவ்வளவு உண்மையாக இருந்தாலும், ஒரு மனிதன் அதை மறுக்க விரும்பினால், அதற்கு ஏதாவது ஒரு விளக்கத்தைத் தேடிக்கொள்கிறான். இந்த விளக்கத்தின் இறுதி வடிவத்திற்குத்தான் புரட்டு என்று பெயர். இந்தச் செயல்பாட்டின் விளைவாக இறைவன் தொடர்பான தீவிரத் தன்மை மனிதனின் இதயத்தை விட்டு வெளியேறிவிடுகிறது. அவன் இறைவனின் கட்டளையைக் கேட்கிறான், ஆனால் அதைத் தன் வசதிக்கேற்ற வார்த்தை விளக்கங்கள் தருவதன் மூலம், அந்தக் கட்டளை தனக்குரியதில்லை. என்று மனநிறைவு கொள்கிறான். அவன் இறைவனை நம்புகிறான், ஆனால் அவனது உணர்வின்மை இறைவனுக்கெதிரான கலகச் செயல்களைச் செய்ய வைக்கிறது. இறைவன் தன்னை நோக்குகின்றான், தான் பேசுவதைக் கேட்கின்றான் என உண்மையாக நம்பும் எவரும் என்றும் செய்ய அஞ்சும் செயல்கள் அவை.

وَمِنْهُمْ أُمِّيُّونَ لَا يَعْلَمُونَ الْكِتَٰبَ إِلَّآ أَمَانِيَّ وَإِنْ هُمْ إِلَّا
يَظُنُّونَ ﴿٧٨﴾ فَوَيْلٌ لِّلَّذِينَ يَكْتُبُونَ الْكِتَٰبَ بِأَيْدِيهِمْ ثُمَّ

يَقُوْلُوْنَ هٰذَا مِنْ عِنْدِ اللّٰهِ لِيَشْتَرُوْا بِهٖ ثَمَنًا قَلِيْلًا ؕ
فَوَيْلٌ لَّهُمْ مِّمَّا كَتَبَتْ اَيْدِيْهِمْ وَوَيْلٌ لَّهُمْ مِّمَّا يَكْسِبُوْنَ ﴿۷۹﴾
وَقَالُوْا لَنْ تَمَسَّنَا النَّارُ اِلَّاۤ اَيَّامًا مَّعْدُوْدَةً ؕ قُلْ
اَتَّخَذْتُمْ عِنْدَ اللّٰهِ عَهْدًا فَلَنْ يُّخْلِفَ اللّٰهُ عَهْدَهٗۤ اَمْ
تَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿۸۰﴾ بَلٰى مَنْ كَسَبَ سَيِّئَةً
وَّاَحَاطَتْ بِهٖ خَطِيْٓـَٔتُهٗ فَاُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا
خٰلِدُوْنَ ﴿۸۱﴾ وَالَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ اُولٰٓئِكَ
اَصْحٰبُ الْجَنَّةِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿۸۲﴾ ع

[78]அவர்களில் படிப்பறிவற்றவர்களும் உள்ளனர். ஆசைக் கற்பனைகளைத் தவிர வேதத்தைப்பற்றி எதையும் அவர்கள் அறியமாட்டார்கள். அவர்களிடம் வெற்று ஊகங்களைத்தவிர வேறொன்றுமில்லை. [79]தங்கள் கைகளாலேயே கற்பனையாக ஒரு வேதத்தை எழுதிக்கொண்டு அற்ப ஊதியம் பெறுவதற்காக 'இது அல்லாஹ்விடமிருந்து வந்துள்ளது' என்று கூறுவோருக்குக் கேடுதான். அவர்களின் கைகள் எழுதியதற்காகவும் அவர்களுக்குக் கேடுதான். அதைக்கொண்டு ஈட்டியதும் அவர்களுக்குக் கேடுதான். [80]''(விரல்விட்டு) எண்ணப்படும் சில நாட்களைத் தவிர நரகம் எங்களைத் தீண்டாது'' என்று அவர்கள் கூறுகின்றனர். (நபியே!) நீர் ''அப்படியொரு உறுதிமொழியை அல்லாஹ்விடமிருந்து பெற்றிருக்கிறீர்களா? அவ்வாறாயின் அல்லாஹ் ஒருபோதும் தன் உறுதிமொழியை மீறவே மாட்டான். அல்லது நீங்கள் அறியாததை அல்லாஹ்வின் மீது (புனைந்து) கூறுகிறீர்களா?'' என்று அவர்களிடம் கேளும். [81]அவ்வாறல்ல. யாரெல்லாம் தீச்செயல்கள் புரிந்து, தங்களது பாவங்களால் சூழப்பட்டார்களோ அவர்கள் நரகவாசிகள்தாம். அதில் அவர்கள் என்றென்றும் கிடப்பார்கள். [82]நம்பிக்கைகொண்டு, நற்செயல்கள் புரிபவர்கள்தாம் சொர்க்கவாசிகள். அதில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

ஆசைக் கற்பனைகள் (அமானி) என்பவை இறை வேதத்தைப் பெற்ற வீழ்ச்சியுற்ற சமூகங்கள் தங்கள் மதத்தைப் பற்றி இட்டுக்கட்டிய கதைகளைக்

குறிக்கின்றன. மேலும் அவை அவர்களின் வெளிப்படையான ஏமாற்றுதலின் காரணமாக மக்களிடையே பரவலாகப் போய்ச் சேர்ந்திருந்தன. (அவர்கள் தங்கள் அறிஞர்களிடமிருந்து கேட்ட பல்வேறு பொய்களை அடியொற்றிப் பரப்பினார்கள். இப்னு அப்பாஸ் மற்றும் முஜாஹித் இதை அறிவிக்கிறார்கள். (அல்-பஹ்ர் அல்-முஹீத், தொகுதி. 1, ப. 445).

இந்தக் கதைகளின் சாரம், நரக நெருப்பு யூதர்களுக்கானது அல்ல என்பதாகும். அவற்றுள் தங்கள் பெரியவர்களோடு தொடர்புபடுத்தித் தங்கள் இறைவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள் என நிரூபிக்கும் வண்ணம் பல்வேறு செய்திகள் இட்டுக் கட்டப்பட்டன. அவர்கள் நம்பும் மதத்தில் மந்திரப்பண்புகள் மறைந்திருக்கின்றன எனக் கூறப்பட்டது. அதன் மிக மிகச் சாதாரணமான கூறுகள் கூட ஒருவரை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றி சொர்க்கத்தின் தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப் போதுமானவை என உறுதி கூறப்பட்டது.

மலிவான விடுதலைக்கான இந்தப் புனித மருத்துவப் பரிந்துரைகள் மக்களை மிகவும் கவர்ந்தன. ஏனென்றால், அவற்றில் தங்களுடைய பொறுப்பற்ற வாழ்க்கைக்குத் தடைவிதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற ஆசைக் கற்பனை உண்மைப்படுத்தப்பட்டது. அவர்கள் எந்த முயற்சியும் இல்லாமல், வெறும் மந்திர தந்திரங்களின் வளத்தால் சொர்க்கத்தை அடைய முடியும் என நம்பினர். இதனால், பண்டைய பெரியவர்களைப் பற்றிய மகிழ்விக்கும் கதைகளைச் சொன்ன மதப் பேச்சாளர்கள் மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றனர். மறுமைப் பயனை எளிதாக்குவது அவர்களுக்குப் பெருமைமிக்க உலக வர்த்தகத்திற்கான மூலாதாரமாக மாறியது. அவர்களைச் சுற்றி மக்கள் கூட்டமாகக் கூடத் தொடங்கினர். அவர்கள் மீது காணிக்கைகளின் மழை பொழியத் தொடங்கியது. அவர்கள் மக்களுக்குச் சொர்க்கத்தை இலவசமாகப் பெறுவதற்கான வழியைக் கற்றுக் கொடுத்தனர். அதற்குப் பதிலாக, மக்கள் அவர்களுக்கு உலகத்தை இலவசமாக வழங்கினர்.

இதுவே ஒவ்வொரு காலக் கட்டத்திலும் வேத நூல்களைப் பெற்ற சமூகங்களின் நோயாக இருந்திருக்கிறது. ஒரு சில சடங்குக்கான செயல்களைத் தவிர, வேறு எந்தப் பொறுப்புச் சுமையும் தங்களுக்கு இல்லை என்பதாகப் புரிந்துகொண்டு இப்படிப்பட்ட இன்பக் கனவுகளில் வாழ்பவர்கள், இறைவனிடம் தங்களின் எல்லா உரிமைகளும் நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்ற தவறான எண்ணத்தில் சிக்கியவர்கள் சத்திய மார்க்கத்திற்கான அழைப்பை ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களுக்கு இதுபோன்ற விஷயங்கள் அவர்களின் இனிமையான

தூக்கத்தைக் கெடுப்பனவாகத் தோன்றுகின்றன, அவை அவர்கள் வாழ்க்கையின் நிர்வாண யதார்த்தங்களை எதிரில் கொண்டுவந்து நிறுத்தி விடுகின்றன.

وَ اِذۡ اَخَذۡنَا مِيۡثَاقَ بَنِىۡۤ اِسۡرَآءِيۡلَ لَا تَعۡبُدُوۡنَ اِلَّا اللّٰهَ ۟ قف
وَ بِالۡوَالِدَيۡنِ اِحۡسَانًا وَّ ذِى الۡقُرۡبٰى وَ الۡيَتٰمٰى وَ الۡمَسٰكِيۡنِ
وَ قُوۡلُوۡا لِلنَّاسِ حُسۡنًا وَّ اَقِيۡمُوا الصَّلٰوةَ وَ اٰتُوا الزَّكٰوةَ ؕ ثُمَّ
تَوَلَّيۡتُمۡ اِلَّا قَلِيۡلًا مِّنۡكُمۡ وَ اَنۡتُمۡ مُّعۡرِضُوۡنَ ۝۸۳

[83](நினைத்துப் பாருங்கள்) நாம் இஸ்ராயீலின் மக்களிடம், ''நீங்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்கக்கூடாது. பெற்றோர்கள், உறவினர்கள், அநாதைகள், ஏழைகள் ஆகியோருடன் நல்லமுறையில் நடந்து கொள்ளவேண்டும். மக்களிடம் நல்லவற்றைப் பேசுங்கள்; தொழுகையைக் கடைப்பிடியுங்கள்; கடமையாக்கப்பட்ட கொடையையும் கொடுத்து வாருங்கள்'' என்று வாக்குறுதி பெற்றோம். ஆனால் உங்களில் சிலரைத் தவிர அனைவருமே பின்வாங்கிவிட்டீர்கள். நீங்கள் வாக்குறுதியளித்துவிட்டுப் புறக்கணிக்கும் மக்களாக இருக்கிறீர்கள்.

மனிதன் மீது இறைவனுக்குரிய முதல் உரிமை, அவன் ஏக இறைவனை மட்டுமே வணங்க வேண்டும்; அவனுக்கு யாரையும் இணையாக்கக் கூடாது என்பதாகும். இரண்டாவது உரிமை, மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது. இந்த நன்னடத்தை ஒருவரின் பெற்றோரிடமிருந்து தொடங்குகிறது. பின்னர் உறவினர்கள், அண்டை வீட்டார் எனத் தொடர்ந்து, நடைமுறை வாழ்க்கையில் ஒருவர் சந்திக்கும் அனைத்து மக்களையும் சென்றடைகிறது. ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையே ஒரு பிரச்சினை ஏற்படும் போதெல்லாம், ஒரே ஓர் அணுகுமுறை மட்டுமே சரியானதாக இருக்கும். அது நீதிக்கும் நலம் விரும்புதலுக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும்.

நன்னடத்தையில், ஒரு மனிதனின் உண்மையான சோதனை 'அனாதைகளுடனும் ஏழைகளுடனும்' நடக்கிறது. அதாவது பலவீனமானவர் களுடன் நடக்கிறது. ஏனென்றால் ஒருவர் பலம் வாய்ந்தவராக இருப்பது மக்கள் அவரிடம் நல்லபடியாக நடந்துகொள்வார்கள் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கிறது. ஆனால் பலவீனமானவர்களோடு அன்பாக நடந்து கொள்வதற்கு அத்தகைய கூடுதல் உந்துதல் எதுவும் இல்லை. எனவே,

அத்தகையவர்களிடம் நல்ல விதமாக நடந்துகொள்வதில் ஒருவர் சிறப்பான கவனம் செலுத்த வேண்டும். உண்மை என்னவென்றால், எல்லாப் பொருளும் மறுக்கப்படுகின்ற இடத்தில், இறைவன் இருக்கிறான். இறைவனின் பொருத்தம் பெறுவதற்காக உண்மையில் அவ்வாறு செய்பவர் மட்டுமே அத்தகைய நபரை அன்பாக நடத்துவார். ஏனென்றால் வேறு எந்த உந்துதலும் அவருக்கு இல்லவே இல்லை.

பலவீனமானவருடன் கொள்ளும் தொடர்பில், அவரிடம் அன்பு காட்டுவது பல்வேறு காரணங்களால் குறைவுபடுகிறது. பலவீனமான மனிதருக்கு உதவி அளிக்கப்படுகிறது. இதன் விளைவாக, அளிப்பவர் பெறுபவரை விடத் தம்மை உயர்ந்தவராகக் கருதத் தொடங்குகிறார். இந்த உளவியல் பலவீனமான மனிதரின் சுயமரியாதையைப் பேணுவதில் தடையாகிறது. பலவீனமான மனிதரிடமிருந்து எதிர்பார்த்த பணிவு வெளிப்படுத்தப்படவில்லை என்றால், அவர் உடனடியாகத் தகுதியற்றவராகக் கருதப்படுகிறார். மேலும் இது பல்வேறு வேதனை தரும் வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. ஓரிரு முறை உதவி செய்த பிறகு, அந்த மனிதர் நிரந்தரமாகத் தங்களுடைய தலைக்கு பாரமாகி விக்கூடாது என்ற எண்ணம் வருகிறது. எனவே அவரிடமிருந்து விடுபடுவதற்காக அளிப்பவர் நாகரிகமற்ற முறையை மேற்கொள்கிறார்.

நல்ல விஷயத்தைப் பேசுவது அனைத்துச் செயல்களின் சாரமாகும். ஒரு உண்மையான நலம்விரும்பும் வார்த்தையைச் சொல்வது ஒருவருக்கு எப்போதும் எல்லாவற்றையும் விட மிகவும் கடினமான ஒன்றாகும். மனிதன் நல்ல நல்ல உரைகளை நிகழ்த்துகிறான். ஆனால் ஒரு நல்ல விஷயம் இன்னொருவரை ஏற்பதாக இருக்கும்போது, மனிதன் அத்தகைய நல்ல விஷயத்தைச் சொல்லவும் கூடக் கஞ்சத்தனம் காட்டுவான். தனக்கு முன்னால் இருக்கும் மனிதன் வலுவற்றவனாக இருந்தால், அவனிடம் கண்ணியமான வார்த்தைகளைப் பேசுவதையும் அவன் அவசியம் என்று கருதுவதில்லை. ஒருவன் மீது மனவருத்தமோ கோபமோ எழுந்தால், நீதிக்கான ஒவ்வொரு இறைக் கட்டளையிலிருந்தும் அவனை விலக்குவதில், தான் நீதியின் பக்கம் இருப்பதாக எண்ணிக்கொள்கிறான்.

وَ اِذۡ اَخَذۡنَا مِيۡثَاقَكُمۡ لَا تَسۡفِكُوۡنَ دِمَآءَكُمۡ وَ لَا تُخۡرِجُوۡنَ
اَنۡفُسَكُمۡ مِّنۡ دِيَارِكُمۡ ثُمَّ اَقۡرَرۡتُمۡ وَ اَنۡتُمۡ تَشۡهَدُوۡنَ ﴿۸۴﴾ ثُمَّ
اَنۡتُمۡ هٰٓؤُلَآءِ تَقۡتُلُوۡنَ اَنۡفُسَكُمۡ وَ تُخۡرِجُوۡنَ فَرِيۡقًا مِّنۡكُمۡ مِّنۡ
دِيَارِهِمۡ تَظٰهَرُوۡنَ عَلَيۡهِمۡ بِالۡاِثۡمِ وَ الۡعُدۡوَانِ ؕ وَ اِنۡ

يَّاْتُوْكُمْ اُسٰرٰى تُفٰدُوْهُمْ وَهُوَ مُحَرَّمٌ عَلَيْكُمْ اِخْرَاجُهُمْ ؕ
اَفَتُؤْمِنُوْنَ بِبَعْضِ الْكِتٰبِ وَتَكْفُرُوْنَ بِبَعْضٍ ۚ فَمَا جَزَآءُ
مَنْ يَّفْعَلُ ذٰلِكَ مِنْكُمْ اِلَّا خِزْيٌ فِي الْحَيٰوةِ الدُّنْيَا ۚ وَيَوْمَ
الْقِيٰمَةِ يُرَدُّوْنَ اِلٰٓى اَشَدِّ الْعَذَابِ ؕ وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا
تَعْمَلُوْنَ ﴿٨٥﴾ اُولٰٓئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الْحَيٰوةَ الدُّنْيَا بِالْاٰخِرَةِ ز
ع فَلَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْصَرُوْنَ ﴿٨٦﴾

[84]***''நீங்கள் உங்களிடையே ரத்தம் சிந்தக்கூடாது; உங்கள் மக்களை உங்கள் ஊர்களிலிருந்து வெளியேற்றக்கூடாது'' என்று நாம் உங்க(ள் முன்னோர்க)ளிடம் வாக்குறுதி பெற்றதை (நினைவு கூருங்கள்). (அவர்களின் வழிவந்த) நீங்கள் அதனை ஏற்றுக் கொண்டீர்கள்; நீங்களே அதற்குச் சாட்சியாகவும் இருந்தீர்கள். [85](ஆயினும்) அதன் பின்னர் (இப்போது) உங்கள் சொந்த மக்களையே கொலை செய்கிறீர்கள். உங்களைச் சார்ந்த ஒரு சாராரை அவர்களுடைய உறைவிடங்களிலிருந்து வெளியேற்றுகிறீர்கள். அவர்களுக்கெதிராகப் பாவமான, அநியாயமான செயல்களில் அவர்களின் பகைவர்களுக்கு உதவி செய்கிறீர்கள். அவர்களே (எதிரிகளிடம்) சிறைப்பட்டு உங்களிடம் (உதவி தேடி) வந்தால் அவர்களை மீட்புத்தொகை கொடுத்து விடுவிக்கிறீர்கள். ஆனால் அவர்களை வெளியேற்றுவதே உங்களுக்குத் தடைசெய்யப்பட்டு இருந்ததே! அப்படியென்றால் (தவ்ராத்) வேதத்தின் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டு மறு பகுதியை மறுக்கிறீர்களா? உங்களில் இவ்வாறு செய்பவர்களுக்கு இவ்வுலக வாழ்வில் இழிவைத் தவிர வேறொன்றும் கிடைக்காது. மறுமை நாளிலோ கடும் வேதனைக்கு அவர்கள் உட்படுத்தப்படுவார்கள். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் கவனிக்காமலில்லை.***

[86]***இ(த்தகைய)வர்கள்தாம் மறுமைக்கு ஈடாக இவ்வுலக வாழ்வை விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள். எனவே இவர்களின் தண்டனை எளிதாக்கப்படாது. இவர்களுக்கு எத்தகைய உதவியும் கிடைக்காது.***

பண்டைய மதீனாவைச் சுற்றி மூன்று அரபு அல்லாத கோத்திரங்களான - பனூ நதீர், பனூ குறைஸா மற்றும் பனூ கைனுகா ஆகியோர் வசித்து

வந்தனர். அவர்கள் அனைவரும் மோசேயின் மார்க்கச் சட்டத்தைப் பின்பற்றி வந்தனர். ஆனால் அவர்களின் வீழ்ச்சியுற்ற மனநிலை அவர்களைத் தனித்தனிக் குழுக்களாகப் பிரித்து வைத்திருந்தது. தம் உலக அரசியல் தேவைக்காக, மதீனாவின் இணைவைப்பாளர் கோத்திரங்களான அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகியோருடன் அவர்கள் இணைந்திருந்தார்கள். பனூ நதீர் மற்றும் பனூ குறைஸா ஆகியோர் அவ்ஸ் கோத்திரத்தினருடன் தோழமை கொண்டிருந்தனர். பனூ கைனுகா மக்கள் கஸ்ரஜ் கோத்திரத்தின் கூட்டாளிகளாக இருந்தனர். இவ்வாறு, அவர்கள் இரண்டு குழுக்களாக உருவாகி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வார்கள். நபி (ஸல்) அவர்கள் புலம்பெயர்வதற்கு (ஹிஜ்ரத்) ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த 'புஆஸ் போர்' என்பதும் இதேபோன்ற ஒரு போர்தான். இந்தப் போர்களில், வேதம் வழங்கப்பட்ட இந்த மக்களும் இணைவைப்பாளர் கோத்திரத்தினரும் சேர்ந்து இரண்டு குழுக்களாகப் பிரிவார்கள். ஒரு குழுவில் இணைந்திருக்கும் வேதம் வழங்கப்பட்டவர்கள், இணைவைப்பாளர்களுடன் சேர்ந்து, மற்றொரு குழுவில் இணைந்திருக்கும் வேதம் வழங்கப்பட்டவர்களைக் கொன்று, அவர்களை அவர்களது வீடுகளிலிருந்து வெளியேற்றுவார்கள். பின்னர், போர் முடிந்ததும், அவர்கள் இறைவேதமான தோராவை மேற்கோள் காட்டி, பிடிபட்ட தங்கள் சகோதரர்களை மீட்கவும், இணைவைப்பாளர் கோத்திரங்களின் கைகளிலிருந்து விடுவிக்கவும் சக மதத்தினரிடம் நன்கொடைகள் கேட்டு வருவர். மனித உயிருக்கும் சொத்துக்கும் மரியாதை கொடுப்பது தொடர்பான இறைவனின் கட்டளையை அவர்கள் மீறுவார்கள். பின்னர் தங்களின் கொடிய அரசியலால் பாதிப்படைந்தவர்களுக்கு அனுதாபப்படுவதாக வெளிப்படுத்திக் கொள்வதன் மூலம் தாங்கள் மிகவும் மதப்பற்றுள்ளவர்கள் என்பதைக் காட்டுவார்கள்.

இது, ஒரு நபர் அநியாயமாகக் கொல்லப்பட்டு, பின்னர் அவரது இறுதித் தொழுகை மார்க்கச் சட்ட (ஷரீஅத்) முறைப்படி நிறைவேற்றப் படுவதைப் போன்றது. மார்க்கச் சட்டத்தின் உண்மையான அடிப்படையான கட்டளைகள் ஒரு மனிதனை அறியாமை வாழ்க்கையை விட்டுவிடச் சொல்கின்றன. அவை அவனது சுய விருப்பத்தோடு மோதுகின்றன; அவை அவனுடைய உலகம் சார்ந்த அரசியலைத் தடுக்கின்றன. எனவே மனிதன் இந்தக் கட்டளைகளைப் புறக்கணிக்கிறான். உண்மையான மதத்தின் நுகத்தடியில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள அவன் தயாராக இல்லை. இருப்பினும், சில சாதாரணமான அலங்காரங்களைக் காட்டிக் கொள்வதன் மூலம், அவன் இறைவனின் மார்க்கத்தில் முழு அர்ப்பணிப்புடன் இருப்பதாகப் பறைசாற்றுகிறான். ஆனால் இது இறை மார்க்கத்தின் சொந்தப் பதிப்பொன்றை உருவாக்குவதாகும். இது மார்க்கத்தின் மறுவுலக அம்சத்தைப் புறக்கணிப்பதாகும். உலகப் பெருமையையும்

புகழையும் கொண்ட மார்க்கத்தின் சில அம்சங்களில் மட்டும் மார்க்கப் பற்றின் உயர்வைக் காட்டுவதாகும். மதத்தில் இத்தகைய துணிச்சல் ஒருவனை இறைவனின் கோபத்திற்கு உரியவனாக ஆக்குகிறதே அன்றி, அவனுடைய வெகுமதிக்கு உரியவனாக அல்ல.

وَلَقَدْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ وَقَفَّيْنَا مِنْۢ بَعْدِهٖ بِالرُّسُلِ ۖ وَاٰتَيْنَا
عِيْسَى ابْنَ مَرْيَمَ الْبَيِّنٰتِ وَاَيَّدْنٰهُ بِرُوْحِ الْقُدُسِ ؕ اَفَكُلَّمَا
جَآءَكُمْ رَسُوْلٌۢ بِمَا لَا تَهْوٰٓى اَنْفُسُكُمُ اسْتَكْبَرْتُمْ ۚ فَفَرِيْقًا
كَذَّبْتُمْ ۗ وَفَرِيْقًا تَقْتُلُوْنَ ﴿۸۷﴾ وَقَالُوْا قُلُوْبُنَا غُلْفٌ ؕ بَلْ
لَّعَنَهُمُ اللّٰهُ بِكُفْرِهِمْ فَقَلِيْلًا مَّا يُؤْمِنُوْنَ ﴿۸۸﴾ وَلَمَّا جَآءَهُمْ
كِتٰبٌ مِّنْ عِنْدِ اللّٰهِ مُصَدِّقٌ لِّمَا مَعَهُمْ ۙ وَكَانُوْا مِنْ قَبْلُ
يَسْتَفْتِحُوْنَ عَلَى الَّذِيْنَ كَفَرُوْا ۚۖ فَلَمَّا جَآءَهُمْ مَّا عَرَفُوْا
كَفَرُوْا بِهٖ ۚ فَلَعْنَةُ اللّٰهِ عَلَى الْكٰفِرِيْنَ ﴿۸۹﴾ بِئْسَمَا اشْتَرَوْا
بِهٖٓ اَنْفُسَهُمْ اَنْ يَّكْفُرُوْا بِمَآ اَنْزَلَ اللّٰهُ بَغْيًا اَنْ يُّنَزِّلَ اللّٰهُ
مِنْ فَضْلِهٖ عَلٰى مَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖ ۚ فَبَآءُوْ بِغَضَبٍ عَلٰى
غَضَبٍ ؕ وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ مُّهِيْنٌ ﴿۹۰﴾

[87]நாம் மோசேவுக்கு வேதத்தை வழங்கினோம். அவருக்குப்பின், தொடர்ந்து தூதர்களை அனுப்பினோம். மர்யத்தின் மைந்தர் இயேசுவுக்குத் தெளிவான சான்றுகளைக் கொடுத்துப் பரிசுத்த ஆன்மாவின் மூலம் அவரை வலுப்படுத்தினோம். உங்கள் மனம் விரும்பாததைத் தூதர்கள் கொண்டுவந்த போதெல்லாம் நீங்கள் செருக்குக் கொண்டீர்கள்; அவர்களில் சிலரைப் பொய்மைப்படுத்தினீர்கள்; வேறு சிலரைக் கொலை செய்தீர்கள். [88]''எங்களுடைய உள்ளங்கள் மூடப்பட்டுள்ளன'' என்று (இஸ்ராயீலின் மக்களாகிய) அவர்கள் கூறுகின்றனர். அப்படியல்ல, அவர்களின் (ஓரிறை) மறுப்பினால் அல்லாஹ் அவர்களைச் சபித்து விட்டான். எனவே அவர்கள் நம்பிக்கைகொள்வது மிக அரிதே.

[89]அவர்களிடம் உள்ள(தவ்ராத் வேதத்)தை உண்மைப்படுத்தக் கூடிய (குர்ஆன்) வேதம் இறைவனிடமிருந்து அவர்களிடம் வந்தபோது அதனை அவர்கள் மறுத்து விட்டனர். இதற்கு முன்பு அவர்கள் மறுப்பாளர்களுக்கு எதிராகத் தமக்கு வெற்றியளிக்க (இவ்வேதத்துடன் தூதர் வர வேண்டுமென இறைவனை) இறைஞ்சிக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் அறிந்து வைத்திருந்த ஒன்று அவர்களிடம் வந்தபோது அதனை அவர்கள் மறுத்து விட்டனர். எனவே மறுப்பாளர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்! [90]அவர்கள் தங்களைத் தாங்களே விற்றுப் பெற்றுக்கொண்டது எவ்வளவு கேடானது! அதாவது அல்லாஹ் தனது அடியார்களில் தான் விரும்பியவர் மீது தன் அருட்கொடையிலிருந்து இறக்கியதற்காகப் பொறாமை கொண்டு அவன் இறக்கி வைத்ததையே மறுக்கின்றனர். எனவே அவர்கள் (அவனது) சினத்திற்கு ஆளாகி விட்டனர். மறுப்பாளர்களுக்கு இழிவுமிக்க வேதனையுண்டு.

தோரா என்பது, இஸ்ராயீலின் மக்களுக்கு இறக்கியருளப்பட்ட இறை வேதமாகும். ஆனால் படிப்படியாக தோராவின் நிலை, அவர்களுக்கிடையே ஒரு சமூகத்தின் புனிதப்பொருளாக மாறி விட்டது. சமூகப் பெருமை, விடுதலை ஆகியவற்றின் அடையாளமாக அவர்கள் அதைத் தங்கள் நெஞ்சோடு தழுவிக் கொண்டிருந்தனர். ஆனால் அதை வழிகாட்டி நூல் என்னும் இடத்திலிருந்து அவர்கள் நீக்கிவிட்டார்கள். மோசேவுக்குப் பிறகு, அவர்களிடையே இறைத்தூதர்கள் மீண்டும் மீண்டும் தோன்றினர்.உதாரணமாக யோசுவா, தாவீது, சகாரியா, யோவான் போன்றவர்கள். அவர்களின் கடைசி இறைத்தூதர் இயேசு ஆவார். இந்த இறைத்தூதர்கள் அனைவரும் இறை போதனைகளைத் தங்கள் நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்தவே வந்தனர். ஆனால் தோராவின் புனிதத்தன்மையில் நம்பிக்கை கொண்டிருந்தபோதிலும், மக்களுக்குத் தூதர்களின் குரல் எல்லாக் குரல்களிலும் மிகவும் பொறுத்துக்கொள்ள முடியாததாகி விட்டது. அவர்கள் இறைவன் அனுப்பிய தூதர்களை இறைத்தூதர்களாக ஏற்றுக்கொள்ள மறுத்து, அவர்களைக் கொல்லவும் செய்தனர். இதற்குக் காரணம், தோராவின் பெயரால் அவர்கள் ஏற்றுக்கொண்ட வாழ்க்கை, உண்மையில் மன விருப்பங்களையும் உலக வழிப்பாட்டையும் கொண்ட வாழ்க்கையாக இருந்தது. அதன்மீது அவர்கள் இறைவனின் நூலுக்கான முத்திரைச் சீட்டை ஒட்டியிருந்தார்கள். இறைவனின் தூதர்கள் கலப்படமற்ற சத்தியத்திற்கான அழைப்பை முன்வைத்தபோது, அந்த அழைப்பு அவர்களின் மதத் தகுதியை மறுப்பதாகப் பார்த்தார்கள். அவர்களுக்குள் ஆணவத்தின் உளவியல் விழித்துக் கொண்டது. இறைத்தூதர்களை அவர்கள் ஒப்புக்கொள்வதற்குப் பதிலாக, அவர்களை ஒழிக்கப் பின்தொடர்ந்தனர்.

இதைத்தான் பண்டைய அரேபியாவின் யூதர்கள் இறுதித்தூதருக்குச் செய்தார்கள். அவர்களுடைய நூல்களில் இறுதித்தூதர் பற்றிய முன்னறிவிப்பைப் பார்த்து, அந்த இறைத்தூதர் வரும்போது, அவருடன் சேர்ந்து நாங்கள் இறைமறுப்பாளர்களையும் இணைவைப்பவர்களையும் வீழ்த்துவோம் என்று கூறுவார்கள். ஆனால் அவர்களுடைய இந்தக் கூற்று, தங்களை மார்க்கத்தின் பாதுகாவலர்கள் என்று காட்டிக் கொள்வதற்காக அவர்கள் பயன்படுத்தி வந்த ஒரு பொய்யுரையாகும். எனவே 'அந்த இறைத்தூதர்' வந்தபோது, அவர்களின் உண்மை நிலை வெளிப்பட்டு விட்டது. அறியாமையால் ஏற்பட்ட தவறான எண்ணங்கள், அவர்தம் சமூகத்திற்கு வெளியேயிருந்து ஓர் இறைத்தூதரை ஒப்புக்கொள்வதற்கு ஒரு தடையாக அமைந்து விட்டன. குர்ஆனில் இறுதித்தூதரின் நம்பகத்தன்மை குறித்துக் கொடுக்கப்பட்டுள்ள தெளிவான வாதங்களுக்கு அவர்களால் பதிலளிக்க முடியவில்லை. எனவே, அவர்கள், "உங்கள் வெளிப்படையான ஏமாற்றுக் கூற்றுகளால் பாதிக்கப்பட்டு, எங்கள் மூதாதையர்களின் மதத்தை நாங்கள் கைவிட முடியாது" என்று கூறத் தொடங்கினர்.

وَ اِذَا قِيۡلَ لَهُمۡ اٰمِنُوۡا بِمَاۤ اَنۡزَلَ اللّٰهُ قَالُوۡا نُؤۡمِنُ بِمَاۤ
اُنۡزِلَ عَلَيۡنَا وَ يَكۡفُرُوۡنَ بِمَا وَرَآءَهٗ ۗ وَهُوَ الۡحَقُّ مُصَدِّقًا
لِّمَا مَعَهُمۡ ؕ قُلۡ فَلِمَ تَقۡتُلُوۡنَ اَنۡۢبِيَآءَ اللّٰهِ مِنۡ قَبۡلُ اِنۡ
كُنۡتُمۡ مُّؤۡمِنِيۡنَ ﴿۹۱﴾ وَلَقَدۡ جَآءَكُمۡ مُّوۡسٰى بِالۡبَيِّنٰتِ ثُمَّ
اتَّخَذۡتُمُ الۡعِجۡلَ مِنۡۢ بَعۡدِهٖ وَاَنۡتُمۡ ظٰلِمُوۡنَ ﴿۹۲﴾ وَ اِذۡ اَخَذۡنَا
بِقُوَّةٍ وَّاسۡمَعُوۡا ؕ قَالُوۡا سَمِعۡنَا وَعَصَيۡنَا ۗ وَ اُشۡرِبُوۡا فِىۡ
قُلُوۡبِهِمُ الۡعِجۡلَ بِكُفۡرِهِمۡ ؕ قُلۡ بِئۡسَمَا يَاۡمُرُكُمۡ بِهٖۤ اِيۡمَانُكُمۡ
اِنۡ كُنۡتُمۡ مُّؤۡمِنِيۡنَ ﴿۹۳﴾ قُلۡ اِنۡ كَانَتۡ لَـكُمُ الدَّارُ الۡاٰخِرَةُ
عِنۡدَ اللّٰهِ خَالِصَةً مِّنۡ دُوۡنِ النَّاسِ فَتَمَنَّوُا الۡمَوۡتَ اِنۡ كُنۡتُمۡ
صٰدِقِيۡنَ ﴿۹۴﴾ وَلَنۡ يَّتَمَنَّوۡهُ اَبَدًا ۢ بِمَا قَدَّمَتۡ اَيۡدِيۡهِمۡ ؕ
وَاللّٰهُ عَلِيۡمٌۢ بِالظّٰلِمِيۡنَ ﴿۹۵﴾ وَلَتَجِدَنَّهُمۡ اَحۡرَصَ النَّاسِ عَلٰى

حَيٰوةٍ ۚ وَمِنَ الَّذِيْنَ اَشْرَكُوْا ۚ يَوَدُّ اَحَدُهُمْ لَوْ يُعَمَّرُ
اَلْفَ سَنَةٍ ۚ وَمَا هُوَ بِمُزَحْزِحِهٖ مِنَ الْعَذَابِ اَنْ يُّعَمَّرَ ؕ
وَاللّٰهُ بَصِيْرٌۢ بِمَا يَعْمَلُوْنَ ﴿٩٦﴾ ع

[91]''அல்லாஹ் அருளிய இவ்வேதத்தின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்'' என்று அவர்களிடம் கூறப்பட்டால், ''எங்களுக்கு அருளப்பட்டதையே நாங்கள் நம்புவோம்'' என்கிறார்கள். அதற்குப் பின்னால் வந்த இவ்வேதத்தை ஏற்க மறுக்கிறார்கள். ஆனால் இதுவோ சத்தியமானதாகவும் அவர்களிடமுள்ள (தவ்ராத் வேதத்)தை உண்மைப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது. (நபியே!) நீர் கேளும்: ''உண்மையில் நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் இதற்கு முன் இறைத்தூதர்களை ஏன் கொலை செய்துகொண்டிருந்தீர்கள்?'' [92]மோசே உங்களிடம் தெளிவான சான்றுகளைக் கொண்டு வந்தார். ஆனால் அதற்குப் பின்னரும் நீங்கள் காளைக் கன்றைக் கடவுளாக்கிக் கொண்டீர்கள். நீங்கள் தீவினையாளர்களாக இருந்தீர்கள். [93]நினைத்துப்பாருங்கள்! மலையை நாம் உங்(கள் முன்னோர்)களுக்கு மேலே உயர்த்தி ''உங்களுக்கு (நாம்) வழங்கிய(வேதத்)தை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள்; செவிசாயுங்கள்'' என்றுவாக்குறுதி பெற்றோம். (அப்போது) அவர்கள், ''நாங்கள் செவியுற்றோம். ஆனால், ஏற்றுக் கொள்ளவில்லை'' என்றனர். அவர்களின் மறுப்பினால் காளைக் கன்றின் மீதுள்ள (மன) விருப்பம் அவர்களின் உள்ளங்களில் ஆழப்பதிந்து விட்டது. (நபியே!) நீர் (அவர்களிடம்), ''நீங்கள் (தவ்ராத்மீது) நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் உங்களதுநம்பிக்கை கற்றுக் கொடுப்பது எவ்வளவு கேடானது?'' என்று கேட்பீராக! [94](நபியே!) நீர் ''அல்லாஹ்விடமுள்ள மறுமையின் வீடு மற்ற மக்களுக்கு அன்றி உங்களுக்கு மட்டுமே உரியது என்பதில் (உங்கள் கூற்றில்) நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் (அதனை அடைவதற்காகச்) சாவை விரும்புங்கள்'' என்று (அவர்களிடம்) கூறுவீராக! [95]அவர்களின் கைகள் முன்னர்ச் செய்த(தீய)வற்றின் காரணமாக ஒருபோதும் அவர்கள் அதனை விரும்பமாட்டார்கள். அல்லாஹ் தீவினையாளர்களை முற்றும் அறிந்தவன். [96](நபியே!) எல்லா மக்களை விடவும் இணைவைப்பாளர்களை விடவும் வாழ்வின் மீது மிகுந்த பேராசை உடையவர்களாக (யூதர்களாகிய) அவர்களை நீர் காண்பீர். அவர்களில் ஒவ்வொருவரும் ஆயிரம் ஆண்டுகள் வாழ

வேண்டுமென விரும்புகின்றனர். ஆயினும் அவர்களுடைய நீண்ட ஆயுள் அவர்களை வேதனையிலிருந்து காப்பாற்றி விடாது. அவர்கள் செய்வதையெல்லாம் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அரேபியாவின் வேதம் அருளப்பட்ட மக்கள் குர்ஆனின் அழைப்பை ஏற்கத் தயாராக இல்லாததற்குக் காரணம், அவர்கள் ஏற்கனவே சரியான பாதையில் இருப்பதாகவும், உண்மையான நம்பிக்கையாளர்களின் மிகப்பெரிய கூட்டத்துடன் (இஸ்ராயீலின் மக்கள்) தொடர்பு வைத்திருப்பதாகவும் கருதியதே ஆகும். ஆனால் உண்மையில் இது இன வாதமே. அவர்கள் அதை சத்தியத்தின் பொருளில் தவறாகப் புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் குழுசார் சத்தியத்திற்கு, தூய்மையான சத்தியம் என்ற தகுதி கொடுத்து வைத்திருந்தார்கள். இதனால்தான், உண்மை அதன் கலப்படமற்ற வடிவத்தில் தோன்றியபோது, அதைப் பெற்றுக்கொள்ள அவர்களால் முன் வர முடியவில்லை. தூய்மையான சத்தியமே அவர்களின் குறிக்கோளாக இருந்திருந்தால், குர்ஆனின் வருகையே அவர்களின் புனித நூலான தோராவின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப உள்ளது என்பதையும், குர்ஆன் இறக்கியருளப்பட்ட பிறகு, இப்போது குர்ஆன்தான் சத்தியவேதம், அவர்களின் சொந்த வீழ்ச்சியுற்ற சமூகத்தின் மதம் அல்ல என்பதையும் அறிந்து கொள்வது அவர்களுக்குச் சிரமமாக இருந்திருக்காது.

அவர்களின் பிரச்சினை, உண்மையில் சத்தியத்தைப் பின்பற்றுவது பற்றியது அல்ல. அதற்கான சான்றுகள் அவர்களுடைய சொந்த வரலாற்றிலேயே உள்ளன. அதில் தங்கள் வாழ்க்கையை விமர்சனம் செய்த தங்கள் சொந்தச் சமூகத்தின் இறைத்தூதர்களை (எ.கா., சகாரியா, ஜான்) அவர்கள் கொன்றனர். "அவர்கள் அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளித்தனர், ஏனெனில் அவர்களை தேவனிடம் திருப்ப (முயன்றனர்)" (நெகேமியா 9:26).

மோசே நிகழ்த்திய அற்புதங்களுக்குப் பிறகு, அவருடைய தூதுத்துவம் குறித்து எந்த ஐயமும் இல்லை. ஆனால் நாற்பது நாள் ஸினாய் மலையில் தங்கியிருந்த போது, இறைத்தூதர் மோசேயின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் அவர்கள் இல்லாதிருந்தபோது, அவர்கள் காளைக் கன்றைத் தங்கள் கடவுளாக ஆக்கிக்கொண்டனர். அவர்களின் தலைக்கு மேல் மலையை உயர்த்திய போதும், அவர்கள் தற்காலிகமாகத் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, "ஆம், நாங்கள் செவியுற்றோம்" என்று சொன்னார்கள். ஆனால் அதன் பிறகும், அவர்களில் பெரும்பாலோர் வழக்கம்போலக் கீழ்ப்படியாத வாழ்க்கையையே தொடர்ந்தனர். அவர்கள் உண்மையிலேயே இறைப்பற்றுள்ளவர்களாக இருந்திருந்தால், அவர்களின் முழுக் கவனமும்

மரணத்திற்குப் பிறகு வரவிருக்கும் இறைவனின் அந்த உலகத்தின் மீதே இருந்திருக்கும். ஆனால் அவர்கள் எல்லாவற்றையும் விட மிக அதிகமாக இன்றைய உலகத்தின் மீதான அன்பில் மூழ்கிக் கிடந்திருந்ததே அவர்கள் நிலையாக இருந்தது.

قُلْ مَنْ كَانَ عَدُوًّا لِّجِبْرِيْلَ فَاِنَّهٗ نَزَّلَهٗ عَلٰى قَلْبِكَ بِاِذْنِ
اللّٰهِ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَهُدًى وَّبُشْرٰى لِلْمُؤْمِنِيْنَ ﴿٩٧﴾
مَنْ كَانَ عَدُوًّا لِّلّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَرُسُلِهٖ وَجِبْرِيْلَ وَ
مِيْكٰلَ فَاِنَّ اللّٰهَ عَدُوٌّ لِّلْكٰفِرِيْنَ ﴿٩٨﴾ وَلَقَدْ اَنْزَلْنَآ اِلَيْكَ
اٰيٰتٍۢ بَيِّنٰتٍ ۚ وَمَا يَكْفُرُ بِهَآ اِلَّا الْفٰسِقُوْنَ ﴿٩٩﴾ اَوَكُلَّمَا عٰهَدُوْا
عَهْدًا نَّبَذَهٗ فَرِيْقٌ مِّنْهُمْ ؕ بَلْ اَكْثَرُهُمْ لَا يُؤْمِنُوْنَ ﴿١٠٠﴾
وَلَمَّا جَآءَهُمْ رَسُوْلٌ مِّنْ عِنْدِ اللّٰهِ مُصَدِّقٌ لِّمَا
مَعَهُمْ نَبَذَ فَرِيْقٌ مِّنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ ۙ كِتٰبَ اللّٰهِ
وَرَآءَ ظُهُوْرِهِمْ كَاَنَّهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿١٠١﴾

[97](நபியே!) நீர் கூறுவீராக : ''எவர் கேப்ரியேலின் பகைவரோ (அவர் அறிந்துகொள்ளட்டும்). ஏனெனில், அவர் (கேப்ரியேல்) தாம் அல்லாஹ்வின் கட்டளைப்படி இதனை (குர்ஆன்) உமது உள்ளத்தில் இறக்கினார். இது தனக்கு முன்பு வந்ததை உண்மைப்படுத்துகிறது; நம்பிக்கையாளர்களுக்கு நேர்வழி காட்டுவதாகவும் நற்செய்தியாகவும் இருக்கிறது.'' [98]யார் அல்லாஹ்வுக்கும் அவனது வானவர்களுக்கும் அவனது தூதர்களுக்கும் கேப்ரியேலுக்கும் மைக்கேலுக்கும் பகைவர்களாக இருக்கிறார்களோ அத்தகைய மறுப்பாளர்களுக்கு அல்லாஹ்வும் பகைவனாக இருக்கிறான். [99](நபியே!) நாம் உமக்குத் தெளிவான வசனங்களை அருளியுள்ளோம். வரம்பு மீறியவர்களைத் தவிர வேறு எவரும் அவற்றை மறுக்க மாட்டார்கள். [100]அவர்கள் ஏதேனும் உடன்படிக்கை செய்தபோதெல்லாம் அவர்களில் ஒரு பிரிவினர் அதனை முறித்துவிடவில்லையா? மாறாக, அவர்களில் பெரும்பாலோர் (இவ்வேதத்தின்மீது) நம்பிக்கை

கொள்ளமாட்டார்கள். [101]அவர்களிடம் உள்ளவற்றை உண்மைப்படுத்தக்கூடிய ஒரு தூதர் அல்லாஹ்விடமிருந்து வந்தபோது வேதம் அருளப்பட்டவர்களில் ஒரு பிரிவினர் ஏதும் அறியாதவர்களைப்போல் அல்லாஹ்வின் (இவ்)வேதத்தைத் தங்கள் முதுகுகளுக்குப் பின்னால் எறிந்து விட்டனர்.

பண்டைய காலத்தில், பல சமூகங்களுக்கு இந்த வேதம் வழங்கப்பட்ட முந்தைய மக்களின் கலகத்தின் விளைவாக மீண்டும் மீண்டும் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. இறைவனின் வழக்கப்படி, ஒவ்வொரு தண்டனைக்கும் முன்னதாக இறைத்தூதர்களின் வாயிலாக முன்னெச்சரிக்கைச் செய்தி வழங்கப்படும். இந்தச் செய்தி இறைவனிடமிருந்து வானவர் கேப்ரியல் மூலம் ஏக இறைத்தூதருக்கு வரும். அவர் அதைப் பற்றித் தம் மக்களுக்குத் தெரிவிப்பார். இத்தகைய சம்பவங்கள் கற்றுக்கொடுக்கும் முக்கியமான பாடம் என்னவென்றால், மனிதன் இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்; அப்போதுதான் அவன் இறைத் தண்டனையின் பிடியில் சிக்காமல் இருக்க முடியும் என்பதாகும். ஆனால் அரபு நாட்டின் வேதம் வழங்கப்பட்ட மக்களால் இந் நிகழ்வுகளிலிருந்து அத்தகைய பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்கு பதிலாக, வானவர் கேப்ரியலைத் தமது எதிரி என்று சொன்னார்கள். அவர் எப்போதும் நமக்கு எதிரான கட்டளைகளுடன் வானிலிருந்து வருகிறார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், இறைவன் எனக்கு கேப்ரியல் மூலம் இறைச்செய்தி அருளப்பட்டதாக அறிவித்தபோது, இந்த மக்கள் கேப்ரியேல் எங்கள் பழைய எதிரி. இதனால்தான் அவர் இஸ்ராயீல் கூட்டத்தினருக்கு மட்டுமே உரிய தூதுத்துவத்தை மற்றொரு கோத்திரத்தைச் சேர்ந்தவருக்கு வழங்கிவிட்டார் என்று கூறத் தொடங்கினர்.

ஒழுக்கக்கேடான, கட்டுப்பாடற்ற வாழ்க்கை வாழ்பவர்கள் மட்டுமே இதுபோன்ற பொருளற்ற பேச்சுக்களைப் பேசுவர். வேதம் வழங்கப்பட்டோரின் நிலை என்னவாக இருந்ததென்றால், அவர்கள் சுயவழிபாடு, மூதாதையர் வழி நடத்தல், இன மற்றும் சமூக பாரபட்சங்களின் மட்டத்தில் வாழ்வதாக இருந்தது. மேலும் சிலர் பிறர்க்குக் காட்டுவதற்கென்றே மதச் செயல்பாடுகளைச் செய்து இறைவனின் உண்மையான மார்க்கத்தைப் பின்பற்றுவதாக வெளியே காட்டிக்கொண்டார்கள். இதுபோன்ற பொய்யான மத வழக்கங்களில் சிக்கிக்கொண்டவர்கள், உண்மையான – கலப்படமற்ற மதத்திற்கான அழைப்பைக் கேட்கும்போது எப்போதும் சினமுற்றுப் போவார்கள். ஏனென்றால் இத்தகைய அழைப்பு அவர்களுக்கு அவர்களின் பெருமைக்குரிய நிலையிலிருந்து கீழிறங்குவதாகத் தெரிந்தது. அவர்கள் சினத்தால் ஆட்கொள்ளப்பட்டு, இலக்கணப்படி சரியாக இருந்தாலும்,

உண்மையில் முற்றிலும் பொருளற்ற கூற்றுகளைச் சொல்லத் தொடங்கினர். வானவர்களின் வருகை, இறைத்தூதர்கள் அனுப்பப்படுவது ஆகிய அனைத்தும் முற்றிலும் இறைவனின் திட்டத்தின் கீழ் நிகழ்கின்றன என்பது வெளிப்படையானது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், ஆப்ரஹாம், மோசே மற்றும் இயேசுவுக்கு வந்த அதே இறைவெளிப்பாடுதான் அரபு இறுதித்தூதருக்கும் வந்தது என்பதையும், அது முந்தைய வேதங்களின் முன்னறிவிப்புகளுடன் மிகச் சரியாக ஒத்துப்போகிறது என்பதையும் சான்றுகள் காட்டுவதால், இது இறைவனிடமிருந்து வந்தது என்பது தெளிவாகும். ஒரு மனிதன் தான் நம்பிக்கையில் நிலைத்து நிற்கிறான் என்பதைக் காட்டிக்கொள்ளப் பலவற்றையும் பேசுகிறான். என்றாலும் அவை அம்மனிதனுக்கு நம்பிக்கை இறைப்பற்று ஆகியவற்றுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்பதற்கே சான்றாகின்றன.

وَ اتَّبَعُوْا مَا تَتْلُوا الشَّيٰطِيْنُ عَلٰى مُلْكِ سُلَيْمٰنَ ۚ وَ مَا كَفَرَ
سُلَيْمٰنُ وَلٰكِنَّ الشَّيٰطِيْنَ كَفَرُوْا يُعَلِّمُوْنَ النَّاسَ السِّحْرَ ۗ
وَمَآ اُنْزِلَ عَلَى الْمَلَكَيْنِ بِبَابِلَ هَارُوْتَ وَمَارُوْتَ ؕ وَ
مَا يُعَلِّمٰنِ مِنْ اَحَدٍ حَتّٰى يَقُوْلَآ اِنَّمَا نَحْنُ فِتْنَةٌ فَلَا تَكْفُرْ ؕ
فَيَتَعَلَّمُوْنَ مِنْهُمَا مَا يُفَرِّقُوْنَ بِهٖ بَيْنَ الْمَرْءِ وَزَوْجِهٖ ؕ وَ
مَا هُمْ بِضَآرِّيْنَ بِهٖ مِنْ اَحَدٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ ؕ وَيَتَعَلَّمُوْنَ
مَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ ؕ وَ لَقَدْ عَلِمُوْا لَمَنِ اشْتَرٰىهُ مَا لَهٗ
فِى الْاٰخِرَةِ مِنْ خَلَاقٍ ۫ وَلَبِئْسَ مَا شَرَوْا بِهٖٓ اَنْفُسَهُمْ ؕ
لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ ﴿۱۰۲﴾ وَلَوْ اَنَّهُمْ اٰمَنُوْا وَاتَّقَوْا لَمَثُوْبَةٌ مِّنْ
عِنْدِ اللّٰهِ خَيْرٌ ؕ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ ﴿۱۰۳﴾ ع ۱۲

[102] ***(யூதர்களாகிய) அவர்கள் சாலமன் ஆட்சிக்காலத்தில் (அவருக்கு எதிராக) சாத்தான்கள் ஓதிய(சூனியத்)தைப் பின்பற்றினார்கள். ஆனால் சாலமன் (சூனியத்தைப் பின்பற்றும் இறை)மறுப்பாளராக இல்லை; மாறாக, சாத்தான்கள்தாம் மறுத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் மக்களுக்குச் சூனியத்தைக் கற்றுக் கொடுத்தனர்;***

பாபிலோன் நகரத்தில் இருந்த ஹாரூத், மாரூத் என்ற வானவர்களுக்கு இறக்கப்பட்ட(தாக அவர்களே சொல்லிக் கொண்ட)தையும் (தவறாகப் பயன்படுத்திக்) கற்றுக் கொடுத்தனர். அவ்வானவர்கள் தங்களிடம் (சூனியம் கற்க) வருவோரிடம் ''மனிதர்களுக்கு (அவர்களின் இறைநம்பிக்கையை அறியும்) சோதனையாகவே நாங்கள் இருக்கிறோம். ஆகவே (இதனைக் கற்று) மறுப்பாளர்களாகி விடாதீர்கள்'' என்று (எச்சரித்துச்) சொல்லாமல் (அதனை எவருக்கும்) அவர்கள் கற்பிப்பதில்லை. ஆயினும் அவர்கள் அவ்விருவரிடமிருந்து கணவன், மனைவிக்கிடையே பிரிவு ஏற்படுத்தக்கூடிய (சூனியத்)தைக் கற்றுக்கொண்டனர். ஆயினும், அல்லாஹ்வின் அனுமதியின்றி அவர்களால் அதன் மூலம் எவருக்கும் எந்தத் தீங்கும் இழைத்துவிட முடியாது. அவர்கள் தங்களுக்கு தீங்கிழைக்கக்கூடிய, பயனளிக்காத ஒன்றையே கற்றுக் கொண்டனர். இதனை விலைக்கு வாங்கிக் கொண்டவனுக்கு மறுமையில் எத்தகைய பேறும் இல்லை என்பதை அவர்கள் உறுதியாக அறிந்தே இருந்தனர். தம்மையே விற்று அவர்கள் வாங்கிக்கொண்ட பொருள் எவ்வளவு தீயது! (இதனை) அவர்கள் அறிந்திருக்க வேண்டுமே! [103]அவர்கள் நம்பிக்கைகொண்டு, இறையச்சத்துடன் செயல்பட்டிருந்தால் அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் கூலி மேலானதாக இருந்திருக்கும். (இதனையும்) அவர்கள் அறிந்திருக்க வேண்டுமே!

இறைவேசதத்தைச் சுமக்கும் எந்தவொரு சமூகத்தின் சீரழிவும் எப்போதும் ஒன்றாகத்தான் இருக்கும் – அதாவது, மறுமையின் வெற்றி முழுக்க முழக்க நேர்மையான செயல்களைச் சார்ந்து இருக்கும் நிலையில் – அதன் ரகசியத்தைச் செயலின்மையில் தேடிக்கொள்வது. இறைவனின் வார்த்தைகள் உண்மையிலேயே செயலுக்கான அழைப்பாக இருக்கின்றன. ஆனால் ஒரு சமூகம் வீழ்ச்சியடையும் போது, அதைச் சார்ந்த தனிநபர்கள் புனித வேதத்தை எழுதுவதும் நாவால் ஓதுவதும் அனைத்து வகையான அருள்களுக்குமான மர்மம் நிறைந்த ஒரு முறையாகக் கருதிக் கொள்கின்றனர். இந்த உளவியல் பூமியின் மீதுதான் சூனியம், புரோகிதம் மற்றும் மாயவித்தைகள் உருவாக்கம் பெறுகின்றன. மந்திர தந்திரங்கள் போன்றவற்றின் மூலம் சொர்க்கத்தை அடைய முற்படுபவர்கள் மந்திர தந்திரங்கள் மூலம் உலகத்தையும் அடைய முயற்சி செய்கிறார்கள். பெரியோர்களின் மீதான நம்பிக்கையை விடுதலைக்கான வழிமுறையாகக் கருதுகிறார்கள், ஆவிகளுடன் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் தங்கள் உலகப் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுகிறார்கள். புனித வார்த்தைகளை ஓதுவதன் மாயாஜால

தாக்கங்களை நம்புபவர்கள், அரசியல் அற்புதங்கள் நிகழ்த்திச் சமூகத்தைக் கட்டியெழுப்பவும் மதத்தைப் புதுப்பிக்கவும் திட்டம் தீட்டுகிறார்கள்.

ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் செயலின்மை, மூடநம்பிக்கை (superstition) ஆகியவற்றின் பாதையில் செல்லும்போது, அவர்களிடையே மந்திரத்தையும் சூனியத்தையும் ஒரு தொழிலாக மாற்றிக்கொள்ளும் மக்கள் உருவாகிறார்கள், மேலும் அவர்கள் தங்கள் தொழிலை மேம்படுத்தப் பிரபலமான சமூகப் பெரியவர்களின் பெயர்களைப் பயன்படுத்தத் தொடங்குகிறார்கள். இது ஒவ்வொரு காலத்திலும் நடந்துள்ளது. உதாரணமாக, யூதர்கள் அவர்களின் வீழ்ச்சிக் காலத்தில், மந்திரத்தையும் புரோகிதத்தை நியாயப்படுத்துவதற்காக அதற்கு இறைத்தூதர் சாலமனைக் காரணம் காட்டினர்.

ஜின்கள் மற்றும் காற்றுகள் மீது சாலமன் கொண்டிருந்த அசாதாரண ஆற்றல் அனைத்தும் மந்திர அறிவை அடிப்படையாகக் கொண்டது என்றும், சாலமனின் இந்த அறிவு சில ஜின்களால் பெறப்பட்டது என்றும் அவர்கள் கூறத் தொடங்கினர். இவ்வாறு, இறைத்தூதர் சாலமன் பெயரோடு கூறப்பட்ட மாயவித்தை அவர்களிடையே மிகவும் பெரிய அளவில் பரவியது. அந்த நேரத்தில், இரண்டு வானவர்கள் யூத சமூத்தைச் சோதிக்க பாபிலோனுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள், துறவிகளாக வேடமிட்டு, சூனியத்திலிருந்தும் புரோகிதத்திலிருந்தும் பாதுகாப்பைக் கற்பித்தனர். இருப்பினும், இது உங்களுக்கான சோதனை, அதாவது நீங்கள் இதைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்று அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இந்த எச்சரிக்கை இருந்தபோதிலும், அவர்கள் இந்தக் கலையில் விடாப்பிடியாக ஈடுபட்டனர். இறுதியாக அவர்கள் அதைச் சட்டவிரோத நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தத் தொடங்கினர்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَقُوْلُوْا رَاعِنَا وَقُوْلُوا انْظُرْنَا
وَاسْمَعُوْا ؕ وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ اَلِيْمٌ ﴿۱۰۴﴾ مَا يَوَدُّ الَّذِيْنَ
كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ وَلَا الْمُشْرِكِيْنَ اَنْ يُّنَزَّلَ
عَلَيْكُمْ مِّنْ خَيْرٍ مِّنْ رَّبِّكُمْ ؕ وَاللّٰهُ يَخْتَصُّ
بِرَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ﴿۱۰۵﴾
مَا نَنْسَخْ مِنْ اٰيَةٍ اَوْ نُنْسِهَا نَاْتِ بِخَيْرٍ مِّنْهَآ اَوْ مِثْلِهَا ؕ اَلَمْ

تَعْلَمْ اَنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ﴿١٠٦﴾ اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ لَهٗ
مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَمَا لَكُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ مِنْ وَّلِىٍّ
وَّلَا نَصِيْرٍ ﴿١٠٧﴾ اَمْ تُرِيْدُوْنَ اَنْ تَسْـَٔلُوْا رَسُوْلَكُمْ كَمَا سُئِلَ
مُوْسٰى مِنْ قَبْلُ ؕ وَمَنْ يَّتَبَدَّلِ الْكُفْرَ بِالْاِيْمَانِ فَقَدْ ضَلَّ
سَوَآءَ السَّبِيْلِ ﴿١٠٨﴾

[104]நம்பிக்கையாளர்களே! மறுப்பாளர்கள் தூதரை விளிக்கப் பயன்படுத்தும் (இரட்டைப்பொருள் கொண்ட சொல்லாகிய) 'ராயினா' என்னும் சொல்லை நீங்கள் சொல்லாதீர்கள். மாறாக, 'உன்ளுர்னா' என்று கூறுங்கள். அவர் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள். மறுப்பாளர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு. [105]மறுப்பாளர்கள் - வேதமுடையோர் ஆயினும் சரி, இணைவைப்பாளர் ஆயினும் சரி - உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு எந்தவொரு நன்மையும் அருளப்படுவதை விரும்ப மாட்டார்கள். ஆயினும் அல்லாஹ் தான் விரும்பியோரையே தன் அருளை வழங்கத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான் அல்லாஹ் மாபெரும் அருளாளன் ஆவான். [106]''நாம் ஏதேனும் ஒரு வசனத்தை நீக்கினால் அல்லது மறக்கடிக்கச் செய்தால் அதைவிடச் சிறந்த அல்லது அதற்கு நிகரான வேறொரு வசனத்தைக் கொண்டுவருவோம். அல்லாஹ் அனைத்துப் பொருளின் மீதும் பேராற்றலுடையவன் என்பது உங்களுக்குத் தெரியாதா? [107]வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது என்பது உங்களுக்குத் தெரியாதா? அவனைத்தவிர வேறு எந்தப் பாதுகாவலனும் உதவியாளனும் உங்களுக்கு இல்லை. [108]இதற்கு முன்னர் மோசேயிடம் (அவருடைய மக்கள் வீண்) கேள்விகள் கேட்டதைப்போல நீங்கள் உங்கள் தூதரிடமும் கேட்க விரும்புகிறீர்களா? (இறை) நம்பிக்கையை (இறை)மறுப்பாக மாற்றிக்கொண்டவர் உறுதியாக நேர்வழியிலிருந்து தவறி விட்டவராவார்.

ஒருவர் இறைவனிடமிருந்து உண்மையைப் பெற்று அதன்பால் மக்களை அழைப்பவராக எழுந்து நின்றால், மக்கள் அவருடைய எதிரிகளாக மாறிவிடுகிறார்கள். ஏனென்றால் அவரது அழைப்பில், மக்கள் தங்கள் சொந்தத் தகுதிக்கான மறுப்பைக் (negation) காணத் தொடங்குகிறார்கள்.

ஆனால் வீழ்ச்சியுற்ற மக்கள் தங்கள் பாரம்பரிய மகத்துவத்தை மறுக்கத் தயாராக இருப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் தூதுத்துவத்தைத் தங்கள் சமூகத்தின் உரிமையாகக் கருதுகிறார்கள். அவர்களுடையது அல்லாத வேறு ஒரு குழுவில் இறைத்தூதர் ஒருவர் தோன்றுவது அவர்களுக்குத் தாங்க முடியாத நிகழ்வு. இறுதித்தூதரின் காலத்தில், வேதம் அருளப்பட்டவர்கள், அவர் இஸ்லாத்திற்கு அழைத்தது குறித்துக் குழப்பமான விவாதங்களை உருவாக்கினார்கள். ஏனெனில் அவர் முன்வைக்கும் கருத்துக்கள் ஒரு நபரின் சொந்த உருவாக்கம், அது இறைவனிடமிருந்து வந்த ஒன்றல்ல என்று மக்களைச் சந்தேகத்திற்குள்ளாக்குவார்கள். அவற்றில் ஒன்று, குர்ஆனில் உள்ள சில சட்டத் தீர்ப்புகள் தோராவில் உள்ள தீர்ப்புகளிலிருந்து வேறுபட்டவை என்பது. மக்களைப் பார்த்து, "இறைவன் கட்டளையிடுவதில் தவறு செய்கிறானா? அவன் ஒருமுறை இட்ட கட்டளையை மாற்றி, அதே விஷயத்தில் மற்றொரு கட்டளையை அனுப்புகிறானே" என்று கூறுவார்கள். இத்தகைய ஐயங்கள் யூதர்களால் பரவலாகப் பரப்பப்பட்டதால், முஸ்லிம்களிலேயே சில எளிய மனம் கொண்டவர்கள் இறைத்தூதர் அவர்களிடம் அவற்றைப் பற்றிக் கேள்வி கேட்கத் தொடங்கினர். அவர்களின் வீழ்ச்சியுற்ற மனநிலையின் காரணமாக, இந்த மக்கள் இறைத்தூதரின் கூட்டங்களில் அமர்ந்திருக்கும்போது, அவரை உண்மையற்றவராக தன்மையை வெளிப்படுத்தும் நோக்கத்தோடு வார்த்தைகளைப் பேசும் அளவுக்குச் சென்றனர். உதாரணமாக, 'எங்கள் மீது கவனம் செலுத்துங்கள்' என்பதற்கான அரபுச் சொல் 'உன்ளுர்னா'. ஆனால் அவர்கள் அதை விட்டுவிட்டு 'ராயினா' என்று அழைத்தனர். ஏனென்றால் அதை கொஞ்சம் நீட்டி 'ராயீனா' என்று அழைத்தால், அது 'எங்கள் இடையனே' என்று பொருள்படும். அதேபோல், சில வேளை அவ்வாறு நீட்டாமல் அதை 'ராயினா' என்று அழைத்தார்கள், அதன் பொருள் 'முட்டாள்' என்றாகும்.

எனவே பின்வரும் அறிவுரைகள் வழங்கப்பட்டன:

(1) உரையாடலின் போது தெளிவான வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள், மோசமான அம்சத்தை வெளிப்படுத்தக்கூடிய ஐயத்திற்குரிய வார்த்தைகளைப் பேசாதீர்கள்.

2) சொல்லப்படுவதைக் கவனமாகக் கேட்டு அதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். (3) மிகுதியான கேள்விகள் ஒருவரை நேரான பாதையிலிருந்து வழிதவறச் செய்கின்றன, எனவே கேள்விகள் பதில்களுக்கு மாற்றாக, படிப்பினைக்கும் அறிவுரைக்குமான மனநிலையை வளர்த்துக் கொள்ளுங்கள். (4) உங்கள் நம்பிக்கையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஏதாவது ஒரு தவறு காரணமாக நீங்கள் உங்கள் நம்பிக்கையையே இழக்கும்படி

நேரிட வேண்டாம். 5) உலகில் ஒருவரிடம் ஏதாவது நல்லதைக் கண்டால், பொறாமைப்படவோ எரிச்சலடையவோ வேண்டாம். ஏனென்றால் அது இறைவனின் நன்கொடை. அவனது முடிவின்படி அவனது அடியார்களில் ஒருவருக்குக் கிடைத்திருக்கும் ஒன்று.

"நாம் எந்த வசனத்தைப் பிற்படுத்தினாலும் மறக்கச் செய்தாலும், அதை விடச் சிறந்த அல்லது அதைப் போன்ற வேறொரு வசனத்தைக் கொண்டு வருவோம்." வார்த்தைகளின் வெளிப்படையான பொருளைப் பொறுத்தவரை, இங்கு வசனத்தை ரத்து செய்வது பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பரந்த பொருளில், இது இறைவனின் பொதுவான சட்டத்தைப் பற்றிய கூற்று. அதாவது, இந்த உலகில் ஒரு சூழ்நிலை மாற்றப்படும் போதெல்லாம், அதன் நோக்கம் அங்கே ஒரு புதிய சிறந்த சூழ்நிலையை உருவாக்குவதுதான்.

وَدَّ كَثِيْرٌ مِّنْ اَهْلِ الْكِتٰبِ لَوْ يَرُدُّوْنَكُمْ مِّنْۢ بَعْدِ اِيْمَانِكُمْ
كُفَّارًا ۚ حَسَدًا مِّنْ عِنْدِ اَنْفُسِهِمْ مِّنْۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُمُ الْحَقُّ ۚ
فَاعْفُوْا وَاصْفَحُوْا حَتّٰى يَاْتِيَ اللّٰهُ بِاَمْرِهٖ ۗ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ
شَيْءٍ قَدِيْرٌ ﴿١٠٩﴾ وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ ۗ وَمَا
تُقَدِّمُوْا لِاَنْفُسِكُمْ مِّنْ خَيْرٍ تَجِدُوْهُ عِنْدَ اللّٰهِ ۗ اِنَّ اللّٰهَ
بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿١١٠﴾ وَقَالُوْا لَنْ يَّدْخُلَ الْجَنَّةَ اِلَّا مَنْ
كَانَ هُوْدًا اَوْ نَصٰرٰى ۗ تِلْكَ اَمَانِيُّهُمْ ۗ قُلْ هَاتُوْا بُرْهَانَكُمْ
اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿١١١﴾ بَلٰى ۚ مَنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ
مُحْسِنٌ فَلَهٗۤ اَجْرُهٗ عِنْدَ رَبِّهٖ ۪ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا
هُمْ يَحْزَنُوْنَ ﴿١١٢﴾

[109] (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் நம்பிக்கைகொண்ட பின், உங்களை (இறை)மறுப்பாளர்களாக மாற்றிவிடவேண்டும் என வேதமுடையோரில் பெரும்பாலோர் விரும்புகின்றனர். அவர்களுக்கு (முஹம்மது இறைத்தூதரே எனும்) உண்மை தெளிவாகிவிட்ட பின்னரும் (உங்கள் மீதுள்ள) காழ்ப்புணர்வின்

காரணமாகவே (இவ்வாறு விரும்புகின்றனர்.) எனவே அல்லாஹ்வின் தீர்ப்பு வரும்வரை அவர்களை மன்னித்துப் புறக்கணித்திருங்கள். உறுதியாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் பேராற்றலுடையவன். [110]நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்துக் கடமையாக்கப்பட்ட கொடையையும் கொடுத்து வாருங்கள். நீங்கள் உங்களுக்காக முன்னரே சேர்த்து வைக்கும் நன்மையை (மறுமையில்) அல்லாஹ்விடம் பெற்றுக்கொள்வீர்கள். உறுதியாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். [111]''யூதர்கள் அல்லது கிறிஸ்தவர்களைத் தவிர வேறு எவரும் சொர்க்கத்தில் நுழையமாட்டார்கள்'' என்று அவர்கள் கூறுகிறார்கள். இது அவர்களின் ஆசைக் கற்பனையே ஆகும். (நபியே! அவர்களிடம்) ''நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் உங்கள் (கூற்றுக்கான) சான்றைக் கொண்டு வாருங்கள்'' என்று கேட்பீராக! [112](உண்மை) அதுவன்று; எவர் தம்மை(த் தூய எண்ணத்துடன்) அல்லாஹ்விடம் ஒப்படைத்து நற்செயல் புரிபவராகவும் இருக்கிறாரோ அவரின் கூலி இறைவனிடமுள்ளது. இத்தகையோருக்கு எத்தகைய அச்சமும் இல்லை; அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.

குர்ஆனின் குரல் பலருக்கு முன்பின் அறிமுகமில்லாத குரலாக இருந்த போதிலும், அவர்களில் சிலர், அதனைத் தங்கள் இதயங்களின் குரலாகக் கண்டு, படிப்படியாக இஸ்லாத்தின் வட்டத்தில் நுழைந்து கொண்டிருந்தனர். இந்த நிலைமை பண்டைய இறைவேதங்களைக் கொண்டிருந்த மக்களால் சகித்துக்கொள்ள முடியாததாக மாறியது. ஏனென்றால் இது அவர்கள் உண்மையற்றது என்று புறக்கணித்து வந்த ஒன்றின் வளர்ச்சிக்கான அடையாளமாக இருந்தது. அவர்கள், ஒருபுறம் இணைவைப்பாளர்களைத் தூண்டிவிட்டு, இஸ்லாத்திற்கு எதிராகப் போராட அவர்களைத் தயார் செய்தனர். மறுபுறம், அவர்கள் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் மனதில் விதவிதமான ஐயங்களையும் தவறான கருத்துக்களையும் விதைத்தார்கள். இதையெல்லாம் அவர்கள் குர்ஆனையும் குர்ஆன் அருளப்பட்டவரையும் நம்பாமல், தங்கள் மூதாதையர் மதத்திற்கு அவர்கள் திரும்பி விட வேண்டும் என்பதற்காகச் செய்தனர். இதன் விளைவாக, முஸ்லிம்களுக்குள் இத்தகையவர்களுக்கு எதிரான கொந்தளிப்பு ஏற்படுவது இயல்பானதே. ஆனால் இறைவன் அவர்களை அவ்வாறு செய்வதிலிருந்து தடைசெய்தான். தற்போதைய நிலையில் அவர்களுடன் விவாதமோ அவர்களுக்கு எதிராக எந்தவொரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையோ எடுக்கக்கூடாது என்று உத்தரவிடப்பட்டது. இந்த விஷயத்தில், ஒருவர்

எல்லா வகையிலும் இறைவனையே நம்பியிருக்க வேண்டும், மேலும் அவர்களுக்கு எதிராகத் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் நிலைமையை இறைவன் மாற்றும் நேரத்திற்காகக் காத்திருக்க வேண்டும். முஸ்லிம்கள் உரிய நேரத்தில் பொறுமையைக் கடைப்பிடித்து, தொழுகையிலும் கடமையாக்கப்பட்ட கொடையிலும் தங்களை உறுதியாக நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். பொறுமை ஒரு மனிதனை எதிர்வினை உளவியலின் கீழ், எதிர்மறையான செயல்களைச் செய்வதிலிருந்து காக்கிறது. தொழுகை மனிதனை இறைவனுடன் இணைக்கிறது. மேலும் நமது செல்வத்தில் மற்ற சகோதரர்களுக்கும் உரிமை வழங்குவது எத்தகைய செயல் எனில் அதனால் பரஸ்பர நலம்விரும்புதல், ஒற்றுமை ஆகியவற்றின் சூழலை அது உருவாக்குகிறது.

புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களிடம், உங்களுடைய முன்னோர்களின் மதத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தால், புதிய மார்க்கத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, ஏற்கனவே உள்ள இறைவேதங்களைப் பெற்ற மதங்களில் ஒன்றை ஏற்றுக்கொண்டு, யூதராகவோ கிறிஸ்தவராகவோ மாறுங்கள் என்று அவர்கள் கூறுவார்கள். ஏனென்றால் சொர்க்கம் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமானது; அவர்கள் எப்போதும் இறைத்தூதர்கள், மார்க்கப் பெரியவர்கள் ஆகியோரின் சமூகமாக இருந்து வந்திருக்கின்றனர். ஆனால் ஒரு கூட்டத்தினரோடுள்ள தொடர்பு ஒருவரை சொர்க்கத்திற்குத் தகுதியானவராக மாற்றாது என்று இறைவன் கூறினான். சொர்க்கம் என்பது ஒருவரின் சொந்தச் செயல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது; அவர் சார்ந்த கூட்டத்தின் சிறப்புகளின் அடிப்படையில் அல்ல. தூய உள்ளத்தோடு (இஹ்ஸான்) என்பதன் பொருள் ஏதாவது ஒன்றை அதற்கே உரிய வகையில் செய்வது. இஸ்லாத்தில் நல்லவராக இருப்பதென்பது, ஒரு மனிதன் இறைவனிடம் தன்னை ஒப்படைப்பது ஆகும். அது எந்த அளவுக்கு முழுமை பெற வேண்டும் என்றால் மற்ற எல்லாவற்றின் முக்கியத்துவமும் அவனது மனத்திலிருந்து நீக்கப்பட்டு விடவேண்டும். இறைவனின் அழைப்பை நோக்கி விரைந்து செல்வதற்குச் சமூக பாரபட்சங்கள், தனிப்பட்ட விசுவாசங்கள் மற்றும் உலக நலன்கள் அவனுக்குத் தடையாக இருக்கக்கூடாது.

وَقَالَتِ الْيَهُوْدُ لَيْسَتِ النَّصٰرٰى عَلٰى شَىْءٍ ۖ وَّقَالَتِ النَّصٰرٰى
لَيْسَتِ الْيَهُوْدُ عَلٰى شَىْءٍ ۙ وَّهُمْ يَتْلُوْنَ الْكِتٰبَ ؕ كَذٰلِكَ قَالَ
الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ مِثْلَ قَوْلِهِمْ ۚ فَاللّٰهُ يَحْكُمُ بَيْنَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ
فِيْمَا كَانُوْا فِيْهِ يَخْتَلِفُوْنَ ﴿١١٣﴾ وَمَنْ اَظْلَمُ مِمَّنْ مَّنَعَ مَسٰجِدَ

اللّٰهِ اَنۡ يُّذۡكَرَ فِيۡهَا اسۡمُهٗ وَسَعٰى فِىۡ خَرَابِهَا ؕ اُولٰٓئِكَ مَا كَانَ
لَهُمۡ اَنۡ يَّدۡخُلُوۡهَاۤ اِلَّا خَآئِفِيۡنَ ؕ لَهُمۡ فِى الدُّنۡيَا خِزۡىٌ
وَّلَهُمۡ فِى الۡاٰخِرَةِ عَذَابٌ عَظِيۡمٌ ﴿۱۱۴﴾ وَلِلّٰهِ الۡمَشۡرِقُ وَالۡمَغۡرِبُ ۚ
فَاَيۡنَمَا تُوَلُّوۡا فَثَمَّ وَجۡهُ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ وَاسِعٌ عَلِيۡمٌ ﴿۱۱۵﴾
وَقَالُوا اتَّخَذَ اللّٰهُ وَلَدًا سُبۡحٰنَهٗ ؕ بَلۡ لَّهٗ مَا فِى السَّمٰوٰتِ
وَالۡاَرۡضِ ؕ كُلٌّ لَّهٗ قٰنِتُوۡنَ ﴿۱۱۶﴾ بَدِيۡعُ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ ؕ وَ
اِذَا قَضٰٓى اَمۡرًا فَاِنَّمَا يَقُوۡلُ لَهٗ كُنۡ فَيَكُوۡنُ ﴿۱۱۷﴾

[113]''கிறிஸ்தவர்கள் எதன் அடிப்படையிலும் இல்லை'' என யூதர்கள் கூறுகின்றனர். ''யூதர்கள் எதன் அடிப்படையிலும் இல்லை'' என்று கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள். ஆயினும் அவர்கள் அனைவரும் வேதம் ஓதுகின்றனர். அவர்கள் கூறுவதைப் போலவே, (வேதம்) எதையும் அறியாத(இணை வைப்ப)வர்களும் கூறுகின்றனர். அவர்கள் முரண்பட்டுக் கொண்டிருப்பதில் அல்லாஹ்வே மறுமையில் தீர்ப்பளிப்பான். [114]இறையில்லங்களில் அவனது பெயர் நினைவுகூரப்படுவதைத் தடுத்து அவற்றைப் பாழாக்க முயல்பவனைவிடக் கொடியவன் யார்? இறையச்சம் உடையவர்களாக அன்றி அவற்றில் நுழைய அவர்களுக்கு உரிமை இல்லை. அவர்களுக்கு இம்மையில் இழிவும் மறுமையில் கடும் வேதனையும் உண்டு. [115]கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியன. நீங்கள் எங்குத் திரும்பினாலும் அங்கே அல்லாஹ்வின் முகம் இருக்கிறது. உறுதியாக அல்லாஹ் தாராளமானவன்; முற்றும் அறிந்தவன்.

[116]''அல்லாஹ் தனக்கு ஒரு மகனை ஏற்படுத்திக்கொண்டான்'' என்று அவர்கள் கூறுகின்றனர். மாறாக, அவன் இதிலிருந்து மிகவும் (அப்பாற்பட்டுத்) தனித்துயர்ந்தவன். வானங்களிலும் பூமியிலுமுள்ள அனைத்தும் அவனுக்கே உரியன. அனைத்தும் அவனுக்கே கீழ்ப்படிகின்றன. [117]அவன் வானங்கள், பூமி ஆகிய படைப்புகளின் மூலமானவன். ஏதேனும் ஒரு செயலைச் செய்யத் தீர்மானித்து விட்டால் 'ஆகுக' என்று கூறுவான். உடனே அது ஆகிவிடும்.

இறுதித்தூதர் அனுப்பப்பட்ட காலத்தில், அரேபியாவில் மூன்று முக்கிய மக்கள் சமூகங்கள் வசித்து வந்தன: யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இணைவைப்பாளர்கள். யூதர்கள், இறைத்தூதர்கள் – மார்க்கப் பெரியவர்கள் உடனான தங்கள் தொடர்பைச் சத்தியத்திற்கான தரமாக நிர்ணயித்தனர். இந்தக் காரணத்தினால், அவர்கள் தங்கள் சொந்தச் சமூகத்தைச் சரியானது என்றும், மற்ற சமூகங்களைத் தவறானவை என்றும் பார்த்தார்கள். கடவுள் தன்னுடைய 'ஒரே குமாரனை'த் தங்களிடம் அனுப்பினார் என்ற தனித்துவத்தைக் கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் கண்டார்கள். மக்காவின் இணைவைப்பாளர்கள் ஏக இறைவனின் புனித இல்லத்தின் பாதுகாவலர்களாக இருப்பதைத் தங்கள் சிறப்புரிமையாகக் கருதினர். இவ்வாறு, ஒவ்வொரு கூட்டமும் தங்கள் சொந்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சத்தியம் நேர்மை ஆகியவற்றின் ஒரு தரத்தைத் தாமாகவே உருவாக்கிக் கொண்டிருந்தன. மேலும் இந்தத் தரத்தின் வெளிச்சத்தில் தன்னைக் காணும்போது, அது தவிர்க்க முடியாத அளவுக்குத் தன்னைச் சரியாகவும் மற்றவர்களைத் தவறாகவும் காண்பித்தது. ஆனால் அவர்களின் நடைமுறை நிலைமை அதற்கு நேர்மாறாக இருப்பதை நிரூபித்துக் கொண்டிருந்தது. குழுக்களாகவும் கூட்டங்களாகவும் அவர்கள் மாறி இருந்தனர். அவர்களில் ஒருவனுக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், வழிபாட்டிற்காகக் கட்டப்பட்ட இறைவனின் இல்லத்தைத் தனது சொந்தக் குழுவைத் தவிர வேறு குழுக்களுக்கு மூடி விடுவான். இது இறையில்லத்தின் வெறுமைக்குக் காரணமானது. வழிபாட்டுத் தலம் எத்தகைய இடம் என்றால் அங்கே இறைவனுக்கு அஞ்சிய படியும் நடுங்கிக் கொண்டும் ஒருவன் நுழைய வேண்டும். இந்த மக்கள் உண்மையிலேயே இறைவனுக்கானவர்களாக இருந்திருந்தால், வழிபட வரும் ஓர் அடியானை அவர்களால் எப்படித் தடுக்கத்திருக்கவோ துன்புறுத்தவோ முடியும்? இறைவனின் மகத்துவத்தை உணர்பவர், பிறரிடம் தொடர்புகொள்ளும்போது அவருடைய பணிவுடைமை வெளிப்படும். எவ்வகையிலும் தன் சக மனிதர்களுக்குத் தீங்கிழைக்க மாட்டார்.

அவர்கள் இறைவனை மனிதனுக்கு ஒப்பாக்கி ஊகிக்கின்றனர். ஒரு மனிதன் கிழக்கில் இருந்தால், அவன் அதே நேரத்தில் மேற்கில் இருக்க மாட்டான். இதைப் போன்றே இறைவனும் ஒரு குறிப்பிட்ட திசையில் இருக்கிறான் என்று அவர்கள் நம்புகிறார்கள். உறுதியாக, இறைவன் தனது வழிபாட்டிற்காகத் திசையை அறுதியிட்டிருக்கிறான். ஆனால் அது வழிபாட்டின் ஒழுங்குமுறைக்கான தேவையை அடிப்படையாகக் கொண்டதே அன்றி, இறைவன் அந்தக் குறிப்பிட்ட திசையில் காணக் கிடைக்கிறான் என்பதாக அல்ல. இதேபோல், மனிதர்களோடு ஒப்பிட்டதன் மூலம், அவர்கள் இறைவனுக்கு மகனைக் கற்பித்துக் கொண்டனர். ஆனால், இறைவன் அத்தகைய விஷயங்களை விட மிகவும் தனித்துயர்ந்தவன். இவ்வாறு யார் தாமாகவே உருவாக்கிக்கொண்ட மதத்தை இறைமார்க்கம்

என்று கூறுகிறார்களோ அவர்களுக்கு இறைவனிடம் இழிவும் வேதனையும் மட்டுமே கிடைக்கும்.

وَ قَالَ الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ لَوْ لَا يُكَلِّمُنَا اللّٰهُ اَوْ تَاْتِيْنَاۤ
اٰيَةٌ ؕ كَذٰلِكَ قَالَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ مِّثْلَ قَوْلِهِمْ ؕ تَشَابَهَتْ
قُلُوْبُهُمْ ؕ قَدْ بَيَّنَّا الْاٰيٰتِ لِقَوْمٍ يُّوْقِنُوْنَ ﴿۱۱۸﴾ اِنَّاۤ اَرْسَلْنٰكَ
بِالْحَقِّ بَشِيْرًا وَّنَذِيْرًا ۙ وَّلَا تُسْـَٔلُ عَنْ اَصْحٰبِ الْجَحِيْمِ ﴿۱۱۹﴾
وَلَنْ تَرْضٰى عَنْكَ الْيَهُوْدُ وَلَا النَّصٰرٰى حَتّٰى تَتَّبِعَ مِلَّتَهُمْ ؕ قُلْ اِنَّ
هُدَى اللّٰهِ هُوَ الْهُدٰى ؕ وَلَئِنِ اتَّبَعْتَ اَهْوَآءَهُمْ بَعْدَ الَّذِيْ
جَآءَكَ مِنَ الْعِلْمِ ۙ مَا لَكَ مِنَ اللّٰهِ مِنْ وَّلِيٍّ وَّلَا نَصِيْرٍ ﴿۱۲۰﴾ اَلَّذِيْنَ
اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَتْلُوْنَهٗ حَقَّ تِلَاوَتِهٖ ؕ اُولٰٓئِكَ يُؤْمِنُوْنَ بِهٖ ؕ وَمَنْ
يَّكْفُرْ بِهٖ فَاُولٰٓئِكَ هُمُ الْخٰسِرُوْنَ ﴿۱۲۱﴾

[118] ''அல்லாஹ் ஏன் எங்களுடன் பேசக்கூடாது, அல்லது ஏதேனும் ஒரு சான்று ஏன் எங்களிடம் வரக்கூடாது?'' என்று அறியாதவர்கள் கேட்கின்றனர். இவ்வாறே இவர்களுக்கு முன்னிருந்தோரும் கேட்டனர். இவர்களின் உள்ளங்கள் (அவர்களின் உள்ளங்களை) ஒத்தவையாகவே இருக்கின்றன. உறுதியாக நம்பிக்கை கொண்டோருக்குச் சான்றுகளை மிகத் தெளிவாக நாம் விளக்கிவிட்டோம். [119](நபியே!) உம்மைச் சத்தியத்துடன் நற்செய்தியாளராகவும் எச்சரிக்கையாளராகவும் அனுப்பியுள்ளோம். நரகவாசிகளைப் பற்றி உம்மிடம் கேட்கப்படமாட்டாது. [120]யூதர்களும் கிறிஸ்தவர்களும் அவர்களின் வழிமுறையை நீர் பின்பற்றாதவரை உம்மைப் பற்றி ஒருபோதும் நிறைவடைய மாட்டார்கள். (ஆகவே) நீர் (அவர்களிடம்) ''அல்லாஹ் காட்டுவதே நேர்வழியாகும்'' என்று கூறுவீராக! உமக்கு இந்த ஞானம் வந்த பின்னரும் அவர்களின் (மன)விருப்பங்களை நீர் பின்பற்றுவீராயின் அல்லாஹ்வுக்கு எதிராக உமக்கு உதவ எந்த நண்பரோ உதவியாளரோ இருக்க மாட்டார். [121](நபியே!) நாம் வேதம் வழங்கியவர்களில் எவர் அதனை ஓதவேண்டிய முறைப்படி ஓதுகிறார்களோ அவர்கள்

(குர்ஆன் ஆகிய) இதன்மீதும் நம்பிக்கை கொள்கிறார்கள். இந்த வேதத்தை மறுப்பவர்கள்தாம் இழப்பிற்குரியவர்கள்.

இறைவனிடமிருந்து அவனது மார்க்கத்தைப் பற்றிய அறிவிப்பு செய்ய வந்த இறை அடியார்கள் ஒவ்வொரு காலத்திலும் ஒரே மாதிரியான எதிர்வினையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது: "நீங்கள் இறைவனின் பிரதிநிதிகளாக இருந்தால், உங்களிடம் ஏன் உலகின் கருவூலங்கள் இல்லை?" என்பதுதான் அது. உலகியல் இயற்கையின் காரணமாக, பொருள்சார் மேன்மையை மட்டுமே மேன்மையாகக் கருதியவர்களுக்கு இந்த ஐயம் ஏற்பட்டது. எனவே, இறைவனின் தூதர்களாக வந்தவர்களிடம் அதே பெருமிதத்தைக் காண அவர்கள் விழைந்தனர். அவர்கள் சத்திய அழைப்பாளரின் வாழ்க்கையில் அத்தகைய மகத்துவத்தைக் காணாதபோது, அவரை மறுத்தனர். வானம் பூமி ஆகியவற்றின் அதிபதி மனிதகுலத்திற்குத் தன்னுடைய செய்தியை அறிவிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர் ஒரு 'சாதாரண மனிதராக' எப்படி இருக்க முடியும் என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இறைவனின் இந்த அடியார்களின் வாழ்க்கையிலும் வார்த்தைகளிலும் இறைவன் தனது அடையாளங்களின் வடிவத்தில் இருப்பான்; வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அதற்கு அடையாளமாக ஆன்மீக மகத்துவம் அவர்களிடம் முழுமையாக இருக்கும். ஆனால் இவ்வகையான உண்மைகள் மனிதர்களுடைய கண்களுக்குப் புலப்படுவதில்லை. அதனால் அவர்கள் அவரைப் 'பெரியவராக'க் கருதவும் தயாராக இருப்பதில்லை. சான்று அதன் முழுமையான வடிவத்தில் இருந்தும், அது அவர்களின் மனதில் இடம் பிடிப்பதில்லை. ஏனென்றால் அது அவர்களின் கட்டமைக்கப்பட்ட மனதிற்கு ஏற்ப இராது.

யூதர்களும் கிறிஸ்தவர்களும் பண்டைய காலங்களில் வான்மறை பெற்ற மார்க்கத்தின் பிரதிநிதிகளாக இருந்தனர். ஆனால் வீழ்ச்சியுற்ற பிறகு, மார்க்கம் அவர்களுக்கு ஒரு கூட்டத்தின் நடைமுறையாக மாறியது. அவர்கள் தங்கள் கூட்டத்துடன் இணைந்திருப்பதை மார்க்கமாகவும், கூட்டத்திலிருந்து பிரிந்து போவதை மார்க்கமின்மையாகவும் கருதுகிறார்கள். அவர்களுக்குத் தங்கள் கூட்டத்தில் சேர்ந்திருப்பதும் சேராதிருப்பதுமே சத்தியத்திற்கும் அசத்தியத்திற்குமான தரமாக மாறிவிட்டது. மார்க்கம் அதன் கலப்படமற்ற வடிவத்தில் அவர்கள் முன்வந்தபோது, அவர்களின் கூட்டம் சார்ந்த மதச் இயல்பால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உண்மை என்னவென்றால், தங்கள் இயல்பை உயிருடன் வைத்திருப்பவர்களால் மட்டுமே கலப்படமற்ற மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள இயலும். யாருடைய இயல்பின் ஒளி அணைந்து போய்விட்டதோ அவர்களிடம் எதையும் எதிர்பார்க்க இயலாது.

இத்தகைய மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக மார்க்கத்தை மாற்ற முடியாது.

يٰبَنِيْٓ اِسْرَآءِيْلَ اذْكُرُوْا نِعْمَتِيَ الَّتِيْٓ اَنْعَمْتُ عَلَيْكُمْ وَاَنِّيْ فَضَّلْتُكُمْ
عَلَى الْعٰلَمِيْنَ ﴿١٢٢﴾ وَاتَّقُوْا يَوْمًا لَّا تَجْزِيْ نَفْسٌ عَنْ نَّفْسٍ شَيْـًٔا وَّ
لَا يُقْبَلُ مِنْهَا عَدْلٌ وَّ لَا تَنْفَعُهَا شَفَاعَةٌ وَّ لَا هُمْ يُنْصَرُوْنَ ﴿١٢٣﴾
وَاِذِ ابْتَلٰٓى اِبْرٰهٖمَ رَبُّهٗ بِكَلِمٰتٍ فَاَتَمَّهُنَّ ؕ قَالَ اِنِّيْ جَاعِلُكَ لِلنَّاسِ
اِمَامًا ؕ قَالَ وَمِنْ ذُرِّيَّتِيْ ؕ قَالَ لَا يَنَالُ عَهْدِي الظّٰلِمِيْنَ ﴿١٢٤﴾

[122]இஸ்ராயீலின் மக்களே! நான் உங்களுக்கு வழங்கிய எனது அருட்கொடையையும் உலக மக்கள் அனைவரினும் உங்களைச் சிறப்பாக்கி வைத்திருந்ததையும் நினைவுகூருங்கள். [123](வரவிருக்கும் மறுமையாகிய) ஒருநாளை(க் குறித்து) அஞ்சி நடந்துகொள்ளுங்கள். அந்நாளில் எந்த ஆன்மாவும் மற்றோர் ஆன்மாவுக்கு எத்தகைய பயனையும் அளிக்க முடியாது. எவரிடமிருந்தும் ஈடாக மீட்புத் தொகை எதுவும் ஏற்கப்படாது. எத்தகைய பரிந்துரையும் அவருக்குப் பயனளிக்காது. (குற்றவாளிகளான) அவர்களுக்கு எங்கிருந்தும் உதவி கிடைக்காது. [124]ஆப்ரஹாமை அவரது இறைவன் சில கட்டளைகள் மூலம் சோதித்ததை (நினைவுகூருங்கள்). அவர் அவற்றை முழுமையாக நிறைவேற்றினார். அப்போது அவன், ''நான் உம்மை மனித குலத்துக்குத் தலைவராக்கப் போகிறேன்'' என்றான். (அதற்கு) அவர், ''எனது வழித்தோன்றல்களிலிருந்தும் தலைவர்களை ஏற்படுத்துவாயா?'' என்று கேட்டார். அவன் ''எனது வாக்குறுதி தீவினை செய்வோரைச் சாராது'' என்று கூறினான்.

இஸ்ராயீலின் மக்கள் ஒரு சிறப்புப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தனர். அவர்களுடைய பணி மக்களை இறைவனின் பக்கம் அழைப்பதும், இறைவன் அவர்களுடைய செயல்களைப் பற்றி அவர்களிடம் விசாரிப்பான் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதுமாகும். இந்தப் பணியை வழிநடத்தத் தொடர்ந்து அவர்களிடையே இறைத்தூதர்கள் வந்தனர். இறைத்தூதர்கள் ஆப்ரஹாம், யாக்கோபு, ஜோசப், மோசே, தாவீது, சாலமன், சகாரியா, ஜான், இயேசு (அவர்கள்

அனைவர் மீதும் சாந்தி உண்டாகட்டும்) போன்றவர்கள். ஆனால் பிற்காலத்தில், இஸ்ராயீலின் மக்கள் வீழ்ச்சியுற்றபோது, அவர்கள் இந்தத் தகுதிச் சிறப்பை இன மற்றும் குழுவுக்கான சிறப்பாகக் கருதிக் கொண்டனர். இப்படியாக அது தொடர்பான தமது சிறப்புரிமையை இழந்தார்கள். இஸ்மவேல் குடும்பத்தில் இறுதித்தூதரின் வருகை உண்மையில் இஸ்ரயீல்களை அவர்களின் சிறப்புப் பதவியில் இருந்து நீக்கி, அவர்களின் இடத்தில் இஸ்மவேல்கள் நியமிக்கப்பட்டதற்கான அறிவிப்பாகும். இஸ்ராயீல்களிடையே உண்மையிலேயே இறைப்பற்றுள்ளவர்கள், அரபு இறைத்தூதர் முன்வைக்கும் வார்த்தைகள் இறைவனிடமிருந்து வந்தவை என்பதைப் புரிந்துகொள்ள அதிக காலம் எடுக்கவில்லை. ஆனால் குழுசார் பாரபட்சங்களை ஒரு மதமாக ஏற்றுக்கொண்டவர்களால் தங்களுக்கு வெளியே இருந்த எந்தச் சிறப்பையும் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

இறைத்தூதர் மூலம் அவர்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதாவது, மறுமையில் பொய்மையற்ற நம்பிக்கை மற்றும் உண்மையான செயலைத் தவிர வேறு எதுவும் மதிக்கத் தக்கதில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த உலகில், ஒருவர் இன்னொருவரின் சுமையைச் சுமக்க முடியும்; சில சந்தர்ப்பங்களில், சிலரின் பரிந்துரை பயனளிக்கும்; சில நேரங்களில் ஒரு மனிதன் இழப்பீடு செலுத்தி விடுவிக்கப்பட்டு விடுகிறான்; சில நேரங்களில் உங்களுக்கு ஆதரவளித்து உங்களைக் காப்பாற்றக்கூடிய ஒரு உதவிக்கரத்தை நீங்கள் பெறலாம். ஆனால் இதுபோன்ற எதுவும் மறுமையில் யாருக்கும் எந்தப் பயனும் அளிக்கப் போவதில்லை. மறுமை என்பது எந்தவொரு குழுவின் பரம்பரை மரபுரிமையும் அல்ல. அது இறைவனின் பாரபட்சமற்ற நீதியின் நாளாகும். இறைத்தூதர் ஆப்ரஹாம் அவர்களுக்குக் கிடைத்த சிறப்பின் படிநிலையானது கடுமையான சோதனைக்குப் பின், அவர்கள் உண்மையாக இறைவனுக்குக் கீழ்ப்படியும் அடியார் என்பது நிரூபிக்கப்பட்டபோது தீர்மானிக்கப்பட்டது. அவருடைய வழித்தோன்றல்கள் தொடர்பாக இறைவனின் வழிமுறையானது, யார் இந்த நற்செயல்களில் முழுமையாக வெற்றிபெறுகிறாரோ அவர் இறைவனின் இந்த வாக்குறுதியில் பங்கு பெறுவார் என்பதுதான். யார் நற்செயல்களின் தராசில் தன்னை உண்மையாளனாக நிரூபிக்கவில்லையோ அவனது முடிவும் இதுபோன்ற மற்ற குற்றவாளிகளுக்கு விதித்ததைப் போலவே இருக்கும். கடுமையான சோதனைகளுக்குப் பிறகு இறைத்தூதர் ஆப்ரஹாம் அவர்களுக்குத் தலைமைக்கான தகுதிநிலை வழங்கப்பட்டது. இதிலிருந்து தலைமைப் பதவிக்கான சிறப்புரிமையானது தியாகங்கள் மூலமாகக் கிடைக்கப்பெறுகிறது என்பதை அறிந்துகொள்ள முடியும். தியாகத்தை விலையாகக் கொடுத்து ஓர் இலக்கைத் ஏற்றுக்கொள்பவர் அந்த இலக்கின் பாதையில் எல்லாரையும் விட முன்னணியில் இருக்கிறார். எனவே, அவர் இயல்பாகவே அதன் தலைவராகிறார்.

وَ اِذۡ جَعَلۡنَا الۡبَيۡتَ مَثَابَةً لِّلنَّاسِ وَ اَمۡنًا ؕ وَ اتَّخِذُوۡا مِنۡ مَّقَامِ
اِبۡرٰهٖمَ مُصَلًّى ؕ وَ عَهِدۡنَاۤ اِلٰۤى اِبۡرٰهٖمَ وَ اِسۡمٰعِيۡلَ اَنۡ طَهِّرَا بَيۡتِىَ
لِلطَّآئِفِيۡنَ وَ الۡعٰكِفِيۡنَ وَ الرُّكَّعِ السُّجُوۡدِ ﴿۱۲۵﴾ وَ اِذۡ قَالَ اِبۡرٰهٖمُ
رَبِّ اجۡعَلۡ هٰذَا بَلَدًا اٰمِنًا وَّ ارۡزُقۡ اَهۡلَهٗ مِنَ الثَّمَرٰتِ مَنۡ اٰمَنَ
مِنۡهُمۡ بِاللّٰهِ وَ الۡيَوۡمِ الۡاٰخِرِ ؕ قَالَ وَ مَنۡ كَفَرَ فَاُمَتِّعُهٗ قَلِيۡلًا ثُمَّ
اَضۡطَرُّهٗۤ اِلٰى عَذَابِ النَّارِ ؕ وَ بِئۡسَ الۡمَصِيۡرُ ﴿۱۲۶﴾

[125]நாம் (கஅபா எனும் ஓரிறை வணக்க) இல்லத்தை மக்கள் ஒன்றுகூடும் இடமாகவும் பாதுகாப்பளிக்கும் இடமாகவும் ஆக்கினோம். ''(வணங்குவதற்காக) ஆப்ரஹாம் நின்ற இடத்தைத் தொழுகை புரியும் இடமாக ஆக்கிக் கொள்ளுங்கள்'' என்று கட்டளையிட்டோம். ஆப்ரஹாமிடமும் இஸ்மவேலிடமும் ''என் இல்லத்தை இடஞ்சுற்றி வருபவர்கள், அங்குத் தங்கியிருப்பவர்கள், (தொழுகைக்காகக்) குனிபவர்கள், தலைவணங்குபவர்கள் ஆகியோருக்காகத் தூய்மையாக வைத்திருங்கள்'' என்று உறுதிமொழி பெற்றோம். [126]ஆப்ரஹாம், ''நீ இந்த நகரத்தைப் பாதுகாப்பளிக்கும் நகரமாக ஆக்கி வைப்பாயாக! இங்கு வசிப்பவர்களில் யாரெல்லாம் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகிறார்களோ அவர்களுக்கு உணவாகக் கனி வகைகளை அளிப்பாயாக'' என்று இறைஞ்சினார். (அதற்கு) இறைவன், ''(நம்பிக்கையாளர்களுக்கு மட்டுமல்ல என்) மறுப்பாளர்களுக்கும் நான் வாழ்வாதாரம் வழங்குவேன். பின்னர் அவர்களை நரக வேதனையில் தள்ளிவிடுவேன். அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும்'' என்று கூறினான்.

ஒவ்வோர் ஆண்டும், உலகம் முழுவதிலுமிருந்து நம்பிக்கையாளர்கள் தங்கள் தாயகத்திலிருந்து இறை இல்லத்திற்கு வருகிறார்கள். இங்குள்ள யாருக்கும் எந்த உயிருக்கும் தவறிழைக்க அனுமதி இல்லை. புனித கஅபா நிரந்தர வழிபாட்டுத் தலமாக மாற்றப்பட்டுள்ளது. இந்த இடம் அனைத்து வகையான மாசுபாடுகளிலிருந்தும் தூய்மையாகப் பராமரிக்கப்படுகிறது. கஅபா இடஞ்சுற்றி வரப்படுகிறது. உலகத்திலிருந்து விலகி வந்து, இறை நினைவுகூரப்படுகிறது, இறைவனுக்காகக் குனிதலும், தலைவணங்குதலும் செய்யப்படுகிறது. பண்டைய காலங்களில், இது உலகின் மிகவும் வறண்ட

பகுதியாக இருந்தது, மணல் நிறைந்த நிலம், கற்பாறைகள் ஆகியவற்றின் காரணமாக இங்குப் பயிர்கள் விளைந்ததில்லை. மட்டுமன்றி, அது மிகவும் பாதுகாப்பற்ற இடமாகவும் இருந்தது. நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தமது குடும்பத்தினரை இந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்று அங்குக் குடியமர்த்தும்படி இறைத்தூதர் ஆப்ரஹாம் அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. இறைத்தூதர் ஆப்ரஹாம் அதை எந்தத் தயக்கமுமின்றிச் செயல்படுத்தினார். அவர் குடும்பத்தை எந்த நீரும் புற்பூண்டுகளும் இல்லாத இடத்திற்கு அழைத்து வந்து விட்ட பின்பு, "இறைவா, நான் உன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தேன்" என்று இறைஞ்சி வேண்டினார். "இப்போது, உனது அடியேனின் வேண்டுதலைக் கேட்டு, இந்த இடத்தை அமைதிக்கும் பாதுகாப்புக்குமான நகரமாக மாற்று. இந்த வறண்ட நிலத்தில் அவர்களுக்கு சிறப்பு உணவுக்கான ஏற்பாடு செய்வாயாக" என்று வேண்டினார். அவருடைய இறைஞ்சுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டது, இதன் விளைவாக இந்தப் பகுதி இன்றளவும் அமைதிக்கும், மிகுதியான வாழ்வாதாரத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

ஒரு நம்பிக்கையாளன், உலகில் எங்கிருந்தாலும், ஒரு நாள் இறைவனிடம் திரும்புவேன் என்பதை அடிக்கடி நினைவில் கொள்ளும் வகையில் இந்த உலகில் வாழ வேண்டும். அவன் மனிதர்களில் யாருக்கிடையில் வாழ்ந்தாலும் தீங்கற்றவனாக வாழ வேண்டும். அவன் பூமியை இறைவனுக்கான வழிபாட்டுத் தலமாகக் கருதி, அதைத் தன் மாசுபாட்டிலிருந்து பாதுகாக்க வேண்டும். அவனது முழு வாழ்க்கையும் இறைவனைச் சுற்றியே சுழல வேண்டும். அவன் உலகில் இருப்பதுபோல் தோன்றலாம். ஆனால் அவன் உள்ளம் தன் இறைவனிடம் நிலைத்திருக்க வேண்டும். அவன் முழு மனதுடன் இறைவனுக்கு முன் பணிந்துவிட வேண்டும். பின்னர், மார்க்கம் எந்தச் செயலைச் செய்யக் கோரினாலும் – அது மனைவியையும் குழந்தைகளையும் 'வறண்ட மைதானத்திற்கு' அழைத்துச் சென்று விட்டு விடுவதாயினும் – அடியான் அதற்கு முழு விசுவாசத்துடன் உடன்பட வேண்டும். அவன் கட்டளையை நிறைவேற்றி விட்ட பின், இறைவனிடம் உதவி கேட்க வேண்டும். இறைவன் தன்னுடைய அடியாருக்கு வறண்ட பாலைவனத்தில் உணவு, ஊற்றுகளை வெளிப்படுத்திவிடுவான் என்பதில் வியப்பில்லை.

உலகத்தின் செழிப்பு, ஒருவருக்கு மார்க்கத்தின் பெயரால் கிடைத்தாலும், அது இறைவன் அவரைத் தலைமைப் பதவிக்காக ஏற்றுக்கொண்டான் என்பதற்கான சான்றாகாது. உலகப் பொருட்கள் அனைத்தும் சோதனைக் கானவை மட்டுமே. அவை எல்லோருக்கும் கிடைக்கின்றன. அதே சமயம் தலைமைத் தகுதி என்பது சமூகங்களிடையே இறைவனைப் பிரதிநிதித்துவப் படுத்த ஓர் அடியாரைத் தேர்ந்தெடுப்பதாகும்.

وَ اِذۡ يَرۡفَعُ اِبۡرٰهٖمُ الۡقَوَاعِدَ مِنَ الۡبَيۡتِ وَ اِسۡمٰعِيۡلُ ؕ رَبَّنَا
تَقَبَّلۡ مِنَّا ؕ اِنَّكَ اَنۡتَ السَّمِيۡعُ الۡعَلِيۡمُ ﴿۱۲۷﴾ رَبَّنَا وَ اجۡعَلۡنَا
مُسۡلِمَيۡنِ لَكَ وَمِنۡ ذُرِّيَّتِنَاۤ اُمَّةً مُّسۡلِمَةً لَّكَ ۠ وَ اَرِنَا
مَنَاسِكَنَا وَ تُبۡ عَلَيۡنَا ۚ اِنَّكَ اَنۡتَ التَّوَّابُ الرَّحِيۡمُ ﴿۱۲۸﴾ رَبَّنَا
وَابۡعَثۡ فِيۡهِمۡ رَسُوۡلًا مِّنۡهُمۡ يَتۡلُوۡا عَلَيۡهِمۡ اٰيٰتِكَ وَ يُعَلِّمُهُمُ الۡكِتٰبَ
وَالۡحِكۡمَةَ وَ يُزَكِّيۡهِمۡ ؕ اِنَّكَ اَنۡتَ الۡعَزِيۡزُ الۡحَكِيۡمُ ﴿۱۲۹﴾ ع ۱۵

[127]ஆப்ரஹாமும் இஸ்மவேலும் இறையில்லத்தின் அடித்தளத்தை உயர்த்திக் கொண்டிருந்தபோது, ''எங்கள் இறைவா! எங்களிடமிருந்து (இப்பணியை) ஏற்றுக்கொள்வாயாக! உறுதியாக நீ செவியுறுபவன்; முற்றும் அறிந்தவன். [128]இறைவா! எங்கள் இருவரையும் உனக்குக் கீழ்ப்படிந்தவர்களாக ஆக்குவாயாக! எங்கள் வழித்தோன்றல்களிலிருந்து முற்றிலும் உனக்குக் கீழ்ப்படிந்து வாழும் ஒரு சமூகத்தை உருவாக்குவாயாக! எங்களுடைய வழிபாட்டு முறைகளை எங்களுக்குக் கற்பிப்பாயாக! எங்களை மன்னித்து விடுவாயாக! உறுதியாக நீ பெரும் மன்னிப்பாளனும் நிகரற்ற அன்பாளனும் ஆவாய். [129]''எங்கள் இறைவா! (எங்கள் வழித்தோன்றல்களாகிய) அவர்களுக்கு உன் வசனங்களை எடுத்துரைத்து, வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து அவர்களைத் தூய்மைப்படுத்தக்கூடிய ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்புவாயாக! உறுதியாக நீ யாவற்றினும் வல்லவன்; ஞானம் மிக்கவன்'' என்று இறைஞ்சி வேண்டினர்.

அரேபிய உலகை இஸ்லாமிய அழைப்பிற்கான உலகளாவிய மையமாக மாற்றுவது இறைவனின் முடிவாக இருந்தது. இந்த மையத்தை நிறுவவும் நிர்வகிக்கவும் இறைத்தூதர் ஆப்ரஹாம் மற்றும் அவரது வழித்தோன்றல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறையில்லத்தின் கட்டுமானத்தின் போது இறைத்தூதர் ஆப்ரஹாம், இஸ்மவேல் ஆகியோரின் நாவிலிருந்து வெளிவந்த வார்த்தைகள், ஒருபுறம் ஒரு வேண்டுதலாகவும், மறுபுறம், இறைவனின் திட்டத்திற்கு இரு ஆன்மாக்களின் அர்ப்பணிப்பை அறிவிப்பதாகவும் இருந்தன. இத்தகைய இறைஞ்சுதல் இறைவனே எதிர்பார்க்கும் ஒன்று. அதனால் அது முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரேபியாவின்

வறண்ட பாலைவனங்களிலிருந்து, இஸ்லாத்தின் நிரந்தரமான வசந்த ஊற்று பொங்கி எழுந்தது. ஏக இறைவன் இஸ்மவேலின் மக்களுடைய இதயங்களைக் குறிப்பாகத் தனது மார்க்கத்தின் பணிக்காக மென்மையாக்கி விட்டான். அவர்களுக்குள்ளிருந்து ஓர் ஆற்றல் வாய்ந்த இஸ்லாமிய அழைப்பு எழுந்தது. அவர்கள் மூலமாக, இறைவன் தனது அடியார்களுக்குத் தன் உவப்பைப் பெறுவதற்கான வழிகளை வெளிப்படுத்தி, தனது அருளால் அவர்களை நோக்கித் திரும்பினான். பின்னர், அவர்களுக்குள்ளிருந்தே, இறுதித்தூதர் அனுப்பப்பட்டார், அவர் வரலாற்றில் முதல்முறையாகத் தூதுப் பணியை ஒரு முழுமையான வரலாற்று மாதிரியாக நிறுவிக் காட்டினார்.

இறைத்தூதரின் முதலாவதும் முதன்மையானதுமான பணி இறைவனின் சான்றுகளை விளக்கியுரைப்பதாகும். இறைவசனம் (ஆயத்) என்பதற்குச் 'சான்று' என்பது பொருளாகும். அதாவது, ஏதாவது ஒரு விஷயத்துக்குச் சான்றாகக் கொள்ளப்படும் ஒன்று. ஏக இறைவன் மனித இயல்பிலும் வெளி உலகிலும் மனிதர்களின் படைப்பாளனைக் கண்டடைவதற்காக எண்ணற்ற அடையாளங்களை வைத்துள்ளான். அவை அடையாளக் குறிப்புகளின் வடிவில் உள்ளன. இறைத்தூதர் அந்த அடையாளக் குறிப்புகளை வெளிப்படுத்துகிறார். அவர் மனிதனுக்கு எல்லாவற்றிலும் தன் இறைவனின் மகத்துவத்தைக் காணக் கூடிய பார்வையை வழங்குகிறார். வேதம் என்பது குர்ஆனைக் குறிக்கிறது. ஓர் இறைத்தூதரின் இரண்டாவது செயல்பாடானது, அவர் இறை அறிவிப்புகளைப் பெறக்கூடியவராகி, அதை மனிதனிடம் கொண்டு சேர்ப்பதாகும். ஞானம் என்பது இங்கு அகப்பார்வை. ஒரு மனிதன் இறைவனின் அடையாளங்களைக் காணும் பார்வையை வளர்த்துக் கொள்ளும்போது, குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்பத் தனது மனதை வடிவமைத்துக் கொள்ளும்போது, அவனுக்குள் ஓர் அறிவார்ந்த ஒளி வீசுகிறது. அது அவனது உணர்வு நிலையில் உயர்ந்த படித்தரத்தை உருவாக்குகிறது. ஒவ்வொரு விஷயத்திலும் இறைவன் விரும்பும் சரியான முடிவு வரை அவன் சென்றடைந்து விடுகிறான். 'தூய்மைப்படுத்துதல்' என்பது பொருத்தமற்ற கூறுகளிலிருந்து ஒன்றைச் சுத்தம் செய்வதாகும். அதன் மூலமாக ஒரு சாதகமான சூழ்நிலையில் அதன் இயல்பான முழுமையை அடைய முடியும். இறைத்தூதரின் இறுதி முயற்சி இறைவனின் மீதான நம்பிக்கையைத் தவிர மற்ற அனைத்து நம்பிக்கைகளிலிருந்தும் விடுபட்ட நெஞ்சங்களைக் கொண்ட மனிதர்களைத் தயார் செய்வதேயாகும். உளவியல் சிக்கல்களிலிருந்து விடுபட்ட ஆன்மாக்களை உருவாக்குவதும், இறைவன் தன்னுடைய நம்பிக்கை கொண்ட அடியார்களுக்காகவே வைத்திருக்கும் ஆன்மிக உணவைப் பிரபஞ்சத்திலிருந்து பெறக்கூடிய தனிமனிதர்களை உருவாக்குவதும்தான்.

وَمَنْ يَّرْغَبُ عَنْ مِّلَّةِ اِبْرٰهٖمَ اِلَّا مَنْ سَفِهَ نَفْسَهٗ ؕ وَلَقَدِ اصْطَفَيْنٰهُ
فِى الدُّنْيَا ۚ وَاِنَّهٗ فِى الْاٰخِرَةِ لَمِنَ الصّٰلِحِيْنَ ﴿۱۳۰﴾ اِذْ قَالَ لَهٗ رَبُّهٗۤ
اَسْلِمْ ۙ قَالَ اَسْلَمْتُ لِرَبِّ الْعٰلَمِيْنَ ﴿۱۳۱﴾ وَوَصّٰى بِهَاۤ اِبْرٰهٖمُ بَنِيْهِ
وَيَعْقُوْبُ ؕ يٰبَنِىَّ اِنَّ اللّٰهَ اصْطَفٰى لَكُمُ الدِّيْنَ فَلَا تَمُوْتُنَّ اِلَّا
وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ ﴿۱۳۲﴾ ؕ اَمْ كُنْتُمْ شُهَدَآءَ اِذْ حَضَرَ يَعْقُوْبَ
الْمَوْتُ ۙ اِذْ قَالَ لِبَنِيْهِ مَا تَعْبُدُوْنَ مِنْۢ بَعْدِىْ ؕ قَالُوْا نَعْبُدُ
اِلٰهَكَ وَاِلٰهَ اٰبَآئِكَ اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ اِلٰهًا وَّاحِدًا ۚ
وَّنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ ﴿۱۳۳﴾ تِلْكَ اُمَّةٌ قَدْ خَلَتْ ۚ لَهَا مَا كَسَبَتْ
وَلَكُمْ مَّا كَسَبْتُمْ ۚ وَلَا تُسْـَٔلُوْنَ عَمَّا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۳۴﴾

[130]தன்னைத் தானே மூடனாக்கிக் கொண்டவனைத் தவிர ஆப்ரஹாமின் வழிமுறையை வேறு யார்தான் புறக்கணிப்பார்? நாம் இவ்வுலகில் அவரைத் (தூதராகத்) தேர்ந்தெடுத்தோம். மறுமையில் அவர் உறுதியாக நல்லோர்களில் ஒருவராக இருப்பார். [131]அவரது இறைவன், அவரிடம் ''முற்றிலும் கீழ்ப்படிந்து விடுவீராக!'' என்று கூறியபோது, ''அனைத்துலகங்களின் இறைவனிடம்நான் முற்றிலும் கீழ்ப்படிந்து விட்டேன்'' என்று அவர் கூறினார். [132]இதனையே ஆப்ரஹாமும் ஜேக்கபும் தம் மக்களுக்கு, ''என் மக்களே! அல்லாஹ் உங்களுக்காக இம்மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்துள்ளான். எனவே கீழ்ப்படிந்தவர்களாகவே அன்றி நீங்கள் இறந்துவிடாதீர்கள்'' என்று அறிவுறுத்தி இருந்தனர். [133]இஸ்ராயீலின் மக்களே! ஜேக்கப்புக்கு மரணம் நெருங்கிய நேரத்தில், (அவர் கூறிய சொற்களைக் கேட்க) நீங்கள் அங்கே இருந்தீர்களா என்ன? அப்போது அவர் தம் மக்களிடம், ''மக்களே! எனக்குப்பின் நீங்கள் யாரை வணங்குவீர்கள்?'' என்று கேட்டபோது அவர்கள், ''உங்கள் இறைவனும் உங்கள் முன்னோர் ஆப்ரஹாம், இஸ்மவேல், ஈசாக் ஆகியோரின் இறைவனுமான ஒரே இறைவனையே நாங்கள் வணங்குவோம். நாங்கள் அவனுக்கே கீழ்ப்படிந்தவர்களாக இருப்போம்'' என்று கூறினர். [134](முன்னர்க் கூறப்பட்ட தூதர்களும் அவர்களுடைய மக்களுமாகிய) அவர்கள் கடந்துபோன சமூகத்தார்;

அவர்கள் ஈட்டியது அவர்களுக்கு, நீங்கள் ஈட்டியது உங்களுக்கு. அவர்களின் செயல்களைக் குறித்து நீங்கள் விசாரிக்கப்பட மாட்டீர்கள்.

இறுதித்தூதர் அவர்களின் அழைப்பும், மிகச் சரியாக இறைத்தூதர் ஆப்ரஹாம் அவர்களின் அழைப்பாகவே இருந்தது. ஆனால் ஆப்ரஹாமைப் பின்பற்றுபவர்கள் எனப் பெருமைப்பட்டுக்கொண்ட யூதர்கள், அவருடைய அழைப்பிற்கு மிகப்பெரிய எதிரிகளாக மாறினர். இதற்குக் காரணம், இறுதித்தூதர் மக்களை எந்த ஆப்ரஹாமிய மார்க்கத்தின் பால் அழைத்தாரோ அது 'இஸ்லாமாக' இருந்ததுதான். இஸ்லாம் என்பதன் பொருள் இறைவனிடம் முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளல். குர்ஆனின் கூற்றுப்படி, அது இறைத்தூதர் ஆப்ரஹாமின் மார்க்கம், அவர் அதை தனது வழித்தோன்றல்களுக்கு விட்டுச் சென்றார். இதற்கு நேர்மாறாக, யூதர்கள் பின்பற்றிய மார்க்கத்தில் இறைவனிடம் முழுமையான அர்ப்பணிப்பு என்று எதுவுமில்லை. அதில், ஆசைக்கு வழிபட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டே, வெறும் மலிவான கற்பனைகள் மூலமாக சொர்க்கத்தில் நுழைந்து விடலாம் என்று நம்பினர். இறுதித்தூதர் கொண்டு வந்த மார்க்கத்தில், மறுமையின் வெற்றி முழுக்க முழுக்கச் செயல்களைச் சார்ந்ததாக இருந்தது. ஆனால் யூதர்கள் 'இறைவனின் அங்கீகரிக்கப்பட்ட அடியார்களின்' சமூகத்துடன் இணைந்திருப்பதையும், அதன் மீது நம்பிக்கை கொள்வதையும் விடுதலைக்குப் போதுமானதாகக் கருதினர். முதலாவது கூற்றுப்படி, மதம் என்பது இறை வழிகாட்டுதலின் பெயர். இரண்டாவது கூற்றுப்படி, அது இன மரபுகள் மற்றும் சமூகக் கற்பனைகளின் செல்வாக்கால் ஒரு குறிப்பிட்ட சமூகத் தொகுப்பாக வடிவம் பெற்றிருந்த ஒன்று.

மறைந்த அல்லது நிகழ்கால பெரியவர்களுடன் நம்மைத் தொடர்பு படுத்திக்கொள்வதன் மூலம், நமது முடிவும் அவர்களைப் போன்றே இருக்கும் என்று ஒரு மனநிறைவு ஏற்பட்டு விடுவதுண்டு. நமது நற்செயல்களின் குறைபாடு, அவர்களுடைய நற்செயல்களின் மிகுதியால் ஈடுசெய்யப்பட்டுவிடும். இந்த ஆசைக்கற்பனையை யூதர்கள் எந்த அளவுக்குக் கொண்டு சென்றனர் என்றால் இன இரட்சிப்பு நம்பிக்கையையே உருவாக்கிக் கொண்டனர். அவர்கள் தங்கள் நம்பிக்கைகளையெல்லாம் பெரியவர்களின் புனிதத்தன்மையின் மீது நிலை நிறுத்தினர். ஆனால் இது உளவியல் ரீதியான ஏமாற்றுதலைத் தவிர வேறொன்றுமில்லை. எல்லோரும் தாங்கள் என்ன செய்தனரோ அதையே பெறுவார்கள். ஒருவர் மற்றவரின் குற்றங்களுக்குப் பொறுப்பாக மாட்டார். அல்லது ஒருவர் மற்றவரின் நற்செயல்களில் பங்கு பெறமாட்டார். ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்த செயல்களுக்கு ஏற்ப இறைவனிடம் கூலி வழங்கப்படும்.

"நீங்கள் கீழ்ப்படிந்தவர்களாகவே அன்றி இறந்துவிடாதீர்கள்" அதாவது இறைவனிடம் உங்களை ஒப்படைப்பதில் தடைகள் இருக்கும். உங்கள் கனவுகளின் கட்டடம் இடிந்து விழும். ஆனாலும் நீங்கள் இறுதிவரை அதில் நிலைத்திருங்கள்.

وَ قَالُوْا كُوْنُوْا هُوْدًا اَوْ نَصٰرٰى تَهْتَدُوْا ؕ قُلْ بَلْ مِلَّةَ اِبْرٰهٖمَ
حَنِيْفًا ؕ وَ مَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ ﴿۱۳۵﴾ قُوْلُوْٓا اٰمَنَّا بِاللّٰهِ وَ مَآ
اُنْزِلَ اِلَيْنَا وَمَآ اُنْزِلَ اِلٰٓى اِبْرٰهٖمَ وَ اِسْمٰعِيْلَ وَ اِسْحٰقَ
وَ يَعْقُوْبَ وَالْاَسْبَاطِ وَ مَآ اُوْتِيَ مُوْسٰى وَ عِيْسٰى وَ مَآ اُوْتِيَ
النَّبِيُّوْنَ مِنْ رَّبِّهِمْ ۚ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ ۖ وَ نَحْنُ لَهٗ
مُسْلِمُوْنَ ﴿۱۳۶﴾ فَاِنْ اٰمَنُوْا بِمِثْلِ مَآ اٰمَنْتُمْ بِهٖ فَقَدِ اهْتَدَوْا ۚ وَ اِنْ
تَوَلَّوْا فَاِنَّمَا هُمْ فِيْ شِقَاقٍ ۚ فَسَيَكْفِيْكَهُمُ اللّٰهُ ۚ وَ هُوَ السَّمِيْعُ
الْعَلِيْمُ ﴿۱۳۷﴾ صِبْغَةَ اللّٰهِ ۚ وَمَنْ اَحْسَنُ مِنَ اللّٰهِ صِبْغَةً ۖ وَّ نَحْنُ
لَهٗ عٰبِدُوْنَ ﴿۱۳۸﴾ قُلْ اَتُحَآجُّوْنَنَا فِي اللّٰهِ وَهُوَ رَبُّنَا وَ رَبُّكُمْ ۚ
وَ لَنَآ اَعْمَالُنَا وَلَكُمْ اَعْمَالُكُمْ ۚ وَ نَحْنُ لَهٗ مُخْلِصُوْنَ ﴿۱۳۹﴾ اَمْ
تَقُوْلُوْنَ اِنَّ اِبْرٰهٖمَ وَ اِسْمٰعِيْلَ وَ اِسْحٰقَ وَ يَعْقُوْبَ
وَالْاَسْبَاطَ كَانُوْا هُوْدًا اَوْ نَصٰرٰى ؕ قُلْ ءَاَنْتُمْ اَعْلَمُ اَمِ
اللّٰهُ ؕ وَ مَنْ اَظْلَمُ مِمَّنْ كَتَمَ شَهَادَةً عِنْدَهٗ مِنَ اللّٰهِ ؕ وَمَا اللّٰهُ
بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ﴿۱۴۰﴾ تِلْكَ اُمَّةٌ قَدْ خَلَتْ ۚ لَهَا مَا كَسَبَتْ
وَ لَكُمْ مَّا كَسَبْتُمْ ۚ وَ لَا تُسْـَٔلُوْنَ عَمَّا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۴۱﴾ ع ۱۶ ۱۲ ۱۶

[135] *(ஓரிறை நம்பிக்கையாளர்களிடம்) அவர்கள் "யூதர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ ஆகிவிடுங்கள். நீங்கள் நேர்வழி பெறுவீர்கள்" என்று கூறுகின்றனர். (நபியே!) நீர் "அப்படியல்ல. நாங்கள் ஆப்ரஹாமின் வழிமுறையைப் பின்பற்றுகிறோம். அவர்*

(இறைவனிடமே) முழு நம்பிக்கைகொண்டவராக இருந்தார். அவர் இணைவைப்பவராக இருந்ததில்லை'' என்று கூறுவீராக. ***[136](நம்பிக்கையாளர்களே!) ''நாங்கள் அல்லாஹ்வின் மீதும், எங்களுக்கு அருளப்பட்டதன் மீதும் ஆப்ரஹாம், இஸ்மவேல், ஈசாக், ஜேக்கப் மற்றும் அவருடைய வழித்தோன்றல்களுக்கு அருளப்பட்டவற்றின் மீதும், மோசேவுக்கும் இயேசுவுக்கும் வழங்கப்பட்டவற்றின் மீதும், ஏனைய தூதர்களுக்கு அவர்களுடைய இறைவனிடமிருந்து வழங்கப்பட்டவற்றின் மீதும் நம்பிக்கைகொண்டோம். நாங்கள் அவர்களுக்கிடையே எத்தகைய வேற்றுமையும் பாராட்ட மாட்டோம். நாங்கள் அல்லாஹ்வுக்கே கீழ்ப்படிந்தவர்களாக இருக்கிறோம்'' என்று கூறுங்கள்.*** ***[137]நீங்கள் நம்பிக்கைகொண்டது போல அவர்களும் நம்பிக்கைகொண்டால், உறுதியாக அவர்கள் நேர்வழி பெற்றவர்கள் ஆவர். அவர்கள் புறக்கணித்தால் பிடிவாதத்தில் இருப்பவர்கள் ஆவர். அவர்களுடனான தொடர்பில் (உங்களைக் காக்க) அல்லாஹ்வே போதுமானவன். அவன் செவியுறுபவன்; முற்றும் அறிந்தவன்.*** ***[138]''(நம்பிக்கையாளர்களே! இறைமார்க்கமாகிய) அல்லாஹ்வுடைய வண்ணம்! அல்லாஹ்வுடைய வண்ணத்தைவிட எது சிறந்தது? நாங்கள் அவனையே வணங்குபவர்களாக இருக்கிறோம்'' (என்று கூறுவீர்களாக).*** ***[139]''அல்லாஹ்வைப்பற்றி நீங்கள் எங்களிடம் சச்சரவு செய்கிறீர்களா? அவனோ எங்களின் இறைவனும் உங்களின் இறைவனுமாக இருக்கிறான். எங்களின் செயல்கள் எங்களுக்கே. உங்களின் செயல்கள் உங்களுக்கே. நாங்கள் அவனுக்கே உரியவர்களாக இருக்கிறோம்'' என்றும் கூறுவீர்களாக!*** ***[140](நபியே!) ''ஆப்ரஹாம், இஸ்மவேல், ஈசாக், ஜேக்கப் மற்றும் அவரின் வழித்தோன்றல்கள் அனைவருமே யூதர்களாக அல்லது கிறிஸ்தவர்களாக இருந்தார்கள் என்று நீங்கள் உறுதியாக கூறுகிறீர்களா? நீங்கள் நன்கறிவீர்களா? அல்லது அல்லாஹ் நன்கறிவானா?'' என்று நீர் கேளும். ''அல்லாஹ்விடமிருந்து தன்னிடம் வந்துள்ள சாட்சியத்தை மறைப்பவனைவிடப் பெரும் தீவினையாளன் யார்? நீங்கள் செய்கின்றவற்றை அல்லாஹ் கவனிக்காமலில்லை'' (என்றும் கூறுவீராக!)*** ***[141]அவர்கள் கடந்து போன சமூகத்தார்; அவர்கள் ஈட்டியது அவர்களுக்கு, நீங்கள் ஈட்டியது உங்களுக்கு. அவர்களின் செயல்களைக் குறித்து நீங்கள் விசாரிக்கப்படமாட்டீர்கள்.***

இறுதித்தூதர் அழைத்த மார்க்கம், வேதமுடையோர் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட அதே ஆப்ரஹாமிய மார்க்கமாகும். பிறகு

ஏன் அவர்கள் எதிரிகளாக மாறினர்? காரணம், இறைத்தூதரின் அழைப்புப் பணியின்படி, ஒரு மனிதன் இறைவனின் வண்ணத்தைத் தனது வாழ்க்கையின் வண்ணமாகத் தீட்டிக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விட்டுத் தன்னை ஒருமுகப்படுத்தி இறைவனுக்குரியவனாக ஆகிவிட வேண்டும். இதற்கு நேர்மாறாக, வேதம் வழங்கப்பட்டோரிடையே, மதம் என்பது இனப்பெருமையின் அடையாளமாக மட்டுமே இருந்தது. இறைத்தூதரின் அழைப்புப் பணியால் அவர்களின் பெருமைமிக்க உளவியல் மீது அடி விழுந்தது. ஆகையால், அவர்கள் அவருடைய எதிரிகளானார்கள்.

தம் இனம்சார்ந்த மேன்மையின் உளவியலில் மூழ்கிக் கிடப்பவர்கள், தங்களுக்கு வெளியே உள்ள எந்த உண்மையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதில்லை. அவர்கள் தங்கள் சொந்தக் கூட்டத்திலிருந்து வந்த இறைத்தூதர்களை நம்புவார்கள். ஆனால் அதே இறைத்தூதர் தங்கள் குழுவிற்கு வெளியேயிருந்து வந்தால் அவரை மறுப்பார்கள். மதத்தின் பெயரால் அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் இனம்சார் பிரிவினைவாதம் மட்டுமே. எனவே தங்கள் சொந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்குப் பெரியவர்களாகத் தோன்றுவார்கள். ஆனால் எந்த நபருக்கு மார்க்கம் என்பது இறைவனை வழிபடுவதற்கான பெயராக இருக்கிறதோ அவர் இறைவனிடமிருந்து வரும் ஒவ்வொரு குரலையும் அடையாளம் கண்டு அதற்குப் பதிலளிப்பார். இறைத்தூதர் இறைவனின் இறுதித்தூதர் என்பதையும், அவரது அழைப்பு உண்மையாக இறைவனை வழிபடுவதற்கான அழைப்பு என்பதையும் யூத அறிஞர்கள் புரிந்துகொள்வது சிரமமாக இருக்கவில்லை. இருப்பினும், தங்கள் சொந்த மகத்துவத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்காக, இறைவன் அவர்கள்மீது கடமையாக்கிய ஓர் உண்மையை அவர்கள் மக்களுக்கு அறிவிக்கவில்லை.

"அவர்கள் கடந்து போன சமூகத்தார்; அவர்கள் ஈட்டியது அவர்களுக்கு, நீங்கள் ஈட்டியது உங்களுக்கு. அவர்களின் செயல்களைக் குறித்து நீங்கள் விசாரிக்கப்படமாட்டீர்கள்." - இதன் பொருள் சத்தியம் தொடர்பான விஷயங்களில் எந்த வாரிசுரிமையும் இல்லை. யூதர்கள் போன்ற முந்தைய சமூகங்கள், தங்கள் முன்னோர்களின் நற்செயல்களுக்கான நன்மை அவர்களுக்குப் பின் வருபவர்களுக்கும் சென்றடைகின்றது என்ற தவறான எண்ணத்தில் இருந்தனர். இதைப்போலவே, முந்தைய தலைமுறையிலிருந்து பிந்தைய தலைமுறைக்குப் பாவங்கள் கடத்தப்படுவதாக கிறிஸ்தவர்கள் எண்ணிக்கொண்டனர். ஆனால் அத்தகைய நம்பிக்கைகள் முற்றிலும் ஆதாரமற்றவை. ஒவ்வொரு மனிதனும் இறைவனிடம் பெறப்போவதெல்லாம் அவன் செய்த சொந்தச் செயல்களின் அடிப்படையில் இருக்குமே அன்றி, வேறு யாருடைய செயல்களின் அடிப்படையிலும் அல்ல.

"நீங்கள் நம்பிக்கை கொண்டது போல அவர்களும் நம்பிக்கை கொண்டால் உறுதியாக அவர்கள் நேர்வழி பெற்றவர்கள் ஆவர்" - இறைத்தூதரின் தோழர்கள் தங்கள் காலத்தில் எவ்வாறு நம்பிக்கை கொண்டார்களோ அவ்வாறு நம்பிக்கை கொள்வதுதான் அடிப்படையில் இறைவனின் பார்வையில், ஏற்புடையது. இறைத்தூதருடைய தோழர்களின் காலத்தின் நிலைமை என்னவென்றால், ஒரு பக்கம் வரலாற்று ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பண்டைய காலத் தூதர்கள் இருந்தனர்; மறுபுறம் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் இருந்தார்கள், அவர்கள் இன்னும் தனது வரலாற்றின் தொடக்கக் கட்டத்திலேயே இருந்தார். வரலாற்றுப் பெருமைகள் அவரைச் சுற்றி இன்னும் ஒன்று சேர்ந்திருக்கவில்லை என்றாலும் அவர்கள் இறைத்தூதரை அங்கீகரித்து அவர்மீது நம்பிக்கை கொண்டனர். ஒரு மனிதன் சத்தியத்தை அது அந்நியமாக இருக்கும் நிலையில் கண்டடைந்து அதற்கு அளிக்கும் அங்கீகாரம் தான் இறைவனிடத்தில் ஏற்புடைய அங்கீகாரமாக இருக்கிறது. ஓர் உண்மை சமூகப் பாரம்பரியமாக மாறி விட்ட பின்போ, வரலாற்றுச் செயல்பாடுகளின் விளைவாக, அதைச் சுற்றி மகத்துவத்தின் கோபுரங்கள் எழுப்பப்பட்ட பின்போ அதை ஏற்றுக்கொள்வதென்பது உண்மையை ஏற்றுக்கொள்வதாகாது; மாறாக அது, சமூகப் பெருமையாகவும் வரலாற்றுத் தேவையாகவும் மாறிய பின்பு இறுதியில் அதை ஒப்புக்கொள்வதாகும்.

سَيَقُوْلُ السُّفَهَآءُ مِنَ النَّاسِ مَا وَلّٰىهُمْ عَنْ قِبْلَتِهِمُ الَّتِيْ كَانُوْا ع ١٤
عَلَيْهَا ؕ قُلْ لِّلّٰهِ الْمَشْرِقُ وَ الْمَغْرِبُ ؕ يَهْدِيْ مَنْ يَّشَآءُ اِلٰى صِرَاطٍ
مُّسْتَقِيْمٍ ﴿١٤٢﴾ وَ كَذٰلِكَ جَعَلْنٰكُمْ اُمَّةً وَّسَطًا لِّتَكُوْنُوْا شُهَدَآءَ عَلَى
النَّاسِ وَ يَكُوْنَ الرَّسُوْلُ عَلَيْكُمْ شَهِيْدًا ؕ وَ مَا جَعَلْنَا الْقِبْلَةَ الَّتِيْ كُنْتَ
عَلَيْهَآ اِلَّا لِنَعْلَمَ مَنْ يَّتَّبِعُ الرَّسُوْلَ مِمَّنْ يَّنْقَلِبُ عَلٰى عَقِبَيْهِ ؕ وَ اِنْ
كَانَتْ لَكَبِيْرَةً اِلَّا عَلَى الَّذِيْنَ هَدَى اللّٰهُ ؕ وَ مَا كَانَ اللّٰهُ لِيُضِيْعَ
اِيْمَانَكُمْ ؕ اِنَّ اللّٰهَ بِالنَّاسِ لَرَءُوْفٌ رَّحِيْمٌ ﴿١٤٣﴾

142மக்களில் (சில) அறிவிலிகள், ''முஸ்லிம்களை(த் தொழுகைக்காக) அவர்கள் முன்னோக்கி நின்ற திசையிலிருந்து (வேறு திசைக்குத்) திருப்பியது எது?'' என்று கேட்பார்கள். (நபியே!) நீர் கூறும்: ''கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியவை. தான் விரும்பியோருக்கு அவன் நேர்வழியைக்

காட்டுகிறான்.'' [143]இவ்வாறே நாம் (நம்பிக்கையாளராகிய) உங்களை (இறைத்தூதருக்கும் பிற மக்களுக்கும் இடையில்) ஒரு நடுநிலைச் சமூகத்தாராக ஆக்கியுள்ளோம். (அவ்வாறு ஆக்கியது) நீங்கள் மக்களுக்கு எடுத்துக் கூறுபவர்களாகவும் தூதர் உங்களுக்கு எடுத்துக் கூறுபவராகவும் திகழ வேண்டும் என்பதற்காகவே ஆகும். உங்களில் தூதரைப் பின்பற்றுபவர் யார், வந்த வழியே திரும்பிச் செல்பவர் யார் என்பதை அறிந்து கொள்வதற்காகவே, நீங்கள் (இதுவரை) தொழுதுவந்த (பைத்துல் முகத்தஸின்) திசையை முன்னோக்கும் திசையாக ஆக்கியிருந்தோம். அல்லாஹ் நேர்வழிகாட்டியவர்களைத் தவிர மற்றவர்களுக்கு உறுதியாக இ(த்திசையை மாற்றுவ)து கடினமானதாக இருக்கும். அல்லாஹ் உங்கள் நம்பிக்கையை வீணாக்குபவன் அல்லன். உறுதியாக அல்லாஹ் மனிதர்களிடத்தில் மிகுந்த பரிவுடையவன்; நிகரற்ற அன்பாளன்.

முன்னோக்கு திசை (கிப்லா) என்பது வழிபாட்டின் வடிவத்துடன் தொடர்புடையது; வழிபாட்டின் யதார்த்தத்துடன் அல்ல. முன்னோக்கு திசையின் முக்கிய நோக்கம், வழிபாட்டை ஒழுங்கமைப்பதற்கு ஒரு பொதுவான திசையை நிறுவுவதாகும். ஒவ்வொரு திசையும் இறைவனின் திசையே. அவன் தன் அடியார்களுக்கு எந்தத் திசையை நிர்ணயித்தானோ, அதுவே அவனுக்குப் பிடித்தமான வழிபாட்டுத் திசையாக இருக்கும், அது கிழக்கு நோக்கியதாக இருந்தாலும் சரி, மேற்கு நோக்கியதாக இருந்தாலும் சரி. ஆனால் நீண்ட காலம் வரை ஜெருசலேமை (பைத்துல் முகத்தஸ்) நோக்கி தொழுததால், முதல் முன்னோக்கு திசைக்கு புனிதத்தன்மை கிடைக்கப் பெற்றது. எனவே, ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டில் முன்னோக்கு திசைக்கான மாற்றம் அறிவிக்கப்பட்டபோது, பலருக்குத் தம் மனதை அதற்கேற்ப மாற்றி முடிவெடுப்பது கடினமாக இருந்தது. இறைத்தூதரை எதிர்த்தவர்கள் இதை ஒரு சாக்காகப் பயன்படுத்தி அவர்களுக்கு எதிராகப் பல்வேறு எதிர்க்கருத்துக்களைப் பரப்பினர் – 'ஜெருசலேம் எப்போதும் இறைத்தூதர்களின் முன்னோக்கு திசையாக இருந்து வருகிறது. பிறகு அதை ஏன் எதிர்க்க வேண்டும்? இந்த முழு இயக்கமும் யூதர்களுக்கு எதிராக நடத்தப்படுகிறது என்பதை இது காட்டுகிறது' என்றனர். சிலர், 'தூதுத்துவத்திற்கு உரிமை கோரும் இவர்களே தங்களுடைய சொந்தப் பணித்திட்டத்தைப் பற்றிப் புரியாமல், குழப்பமடைந்துமுள்ளனர் (confused) என்றும், சில சமயங்களில் மக்களை கஅபாவை நோக்கி வணங்கச் சொல்கிறார்கள், சில சமயங்களில் ஜெருசலேமை நோக்கித் வணங்கச் சொல்கிறார்கள்' என்றும் கூறினர். ஒருவர் சொன்னார்: 'கஅபாதான்

உண்மையான முன்னோக்கு திசை என்றால், இதற்கு முன்பு ஜெருசலேமை (பைத்துல் முகத்தஸ்) நோக்கித் தொழுத முஸ்லிம்களின் தொழுகைகள் வீணாகிப்போயின என்றே பொருள்.' ஆனால் புறவெளிப்பாடுகளில் சிக்கிக் கொள்ளாத உண்மையான இறை நம்பிக்கையாளர்கள், உண்மையான விஷயம் முன்னோக்கு திசை அல்ல, மாறாக இறைவனின் கட்டளைதான் என்பதைப் புரிந்துகொள்ள அதிக காலம் எடுத்துக்கொள்ளவில்லை. இறைவனிடமிருந்து எந்த நேரத்தில் எந்தக் கட்டளை வருகிறதோ அந்த நேரத்திற்கு அதுவே முன்னோக்கு திசையாக இருக்கும். புலம்பெயர்வு (ஹிஜ்ரத்) நிகழ்வின் பதினேழு மாதங்களுக்குப் பிறகு முன்னோக்கு திசையை மாற்றுவதற்கான கட்டளை வந்தபோது, இறுதித்தூதர் அவர்கள் மதீனாவில் தமது தோழர்களுடன் கூட்டாகத் தொழுது கொண்டிருந்தார்கள். கட்டளை வந்தவுடன், அவரும் முஸ்லிம்களும் அவர்கள் தொழுது கொண்டிருந்த அதே நிலையில் ஜெருசலேமிலிருந்து கஅபாவை நோக்கி, அதாவது வடக்கிலிருந்து தெற்காகத் தங்கள் முகங்களைத் திருப்பிக் கொண்டனர்.

முன்னோக்கு திசையின் மாற்றம், ஏக இறைவன் இஸ்ராயீலின் மக்களைத் தலைமைத்தகுதியிலிருந்து நீக்கி, அதன் இடத்தில் இறுதித்தூதர் முஹம்மத் அவர்களுடைய வழிநடக்கும் சமூகத்தை நியமித்ததற்கான அடையாளமாகும். இனிமேல், நியாயத்தீர்ப்பு நாள் வரை, ஜெருசலேமுக்குப் பதிலாக 'கஅபா' இறைவனின் மார்க்கத்திற்கான அழைப்பாக, இறைவணக்கம் புரிபவர்களின் ஆகியோரின் பரஸ்பர ஒற்றுமைக்கான உலகளாவிய மையமாக இருக்கும். 'வஸத்' என்றால் 'இடைப்பட்ட' என்று பொருள். முஸ்லிம்கள் இறைவனின் செய்தியை அவனது அடியார்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்க உதவும் இடைப்பட்ட இணைப்பு என்பதாகும். இறைச்செய்தி தூதர் வழியாக அவர்களைச் சென்றடைந்தது. இப்போது அவர்கள் அந்த செய்தியை நியாயத்தீர்ப்பு நாள் வரை அனைத்துச் சமூகங்களுக்கும் தொடர்ந்து கொண்டுபோய் சேர்க்க வேண்டும். இவ்வுலகில் அதைப் பொறுத்துத்தான் அவர்களின் எதிர்காலம் உள்ளது, அவர்களின் மறுமை வெற்றியும் அதைப் பொறுத்தே அமையும்.

قَدْ نَرٰى تَقَلُّبَ وَجْهِكَ فِي السَّمَآءِ ۚ فَلَنُوَلِّيَنَّكَ قِبْلَةً تَرْضٰىهَا ۪
فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ ؕ وَحَيْثُ مَا كُنْتُمْ فَوَلُّوْا
وُجُوْهَكُمْ شَطْرَهٗ ؕ وَاِنَّ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ لَيَعْلَمُوْنَ اَنَّهُ الْحَقُّ مِنْ
رَّبِّهِمْ ؕ وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا يَعْمَلُوْنَ ﴿۱۴۴﴾ وَلَئِنْ اَتَيْتَ الَّذِيْنَ اُوْتُوا

الْكِتٰبَ بِكُلِّ اٰيَةٍ مَّا تَبِعُوْا قِبْلَتَكَ ۚ وَمَآ اَنْتَ بِتَابِعٍ قِبْلَتَهُمْ ۚ وَمَا
بَعْضُهُمْ بِتَابِعٍ قِبْلَةَ بَعْضٍ ؕ وَلَئِنِ اتَّبَعْتَ اَهْوَآءَهُمْ مِّنْۢ بَعْدِ مَا
جَآءَكَ مِنَ الْعِلْمِ ۙ اِنَّكَ اِذًا لَّمِنَ الظّٰلِمِيْنَ ﴿۱۴۵﴾ اَلَّذِيْنَ اٰتَيْنٰهُمُ
الْكِتٰبَ يَعْرِفُوْنَهٗ كَمَا يَعْرِفُوْنَ اَبْنَآءَهُمْ ؕ وَاِنَّ فَرِيْقًا مِّنْهُمْ
لَيَكْتُمُوْنَ الْحَقَّ وَهُمْ يَعْلَمُوْنَ ﴿۱۴۶﴾ اَلْحَقُّ مِنْ رَّبِّكَ فَلَا تَكُوْنَنَّ
مِنَ الْمُمْتَرِيْنَ ﴿۱۴۷﴾

[144] (நபியே!) உமது முகம் அடிக்கடி வானத்தை நோக்கித் திரும்புவதை நாம் காண்கிறோம். எனவே நீர் விரும்பும் முன்னோக்கு திசையின் பக்கமே நாம் உம்மைத் திருப்பி விடுகிறோம். ஆகவே நீர் (தொழும்போது) உம் முகத்தைப் புனித (கஅபா) இறையில்லத்தின்பக்கம் திருப்பிக்கொள்வீராக! (நம்பிக்கையாளர்களே!) நீங்களும் (இனி) எங்கிருந்தபோதிலும் (தொழுகையில்) உங்கள் முகங்களை அதன் பக்கமே திருப்பிக் கொள்வீர்களாக! வேதம் வழங்கப்பட்டவர்கள், இது தங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ள சத்தியமே என்பதை அறிவர். (எனினும் இதற்கு எதிராக அவர்கள்) செய்பவற்றை அல்லாஹ் கவனிக்காமலில்லை. [145] வேதம் வழங்கப்பட்டோரிடம் நீர் அனைத்துவிதமான சான்றுகளையும் கொண்டுவந்தாலும் அவர்கள் உம் முன்னோக்கு திசையைப் பின்பற்ற மாட்டார்கள். நீரும் அவர்களுடைய முன்னோக்கு திசையைப் பின்பற்றுபவராக இல்லை. அவர்களிலேயே ஒருவர் மற்றவருடைய முன்னோக்கு திசையைப் பின்பற்றுவதில்லை. உம்மிடம் ஞானம் வந்த பின்னரும் அவர்களின் மனவிருப்பங்களை நீர் பின்பற்றினால் உறுதியாகத் தீவினையாளர்களில் ஒருவராகி விடுவீர். [146] எவருக்கெல்லாம் நாம் வேதத்தை வழங்கியுள்ளோமோ அவர்கள் அதனைத் தம் பிள்ளைகளை அறிவதைப் போன்று நன்றாக அறிவர். ஆயினும் அவர்களில் ஒரு பிரிவினர் அறிந்து கொண்டே உண்மையை மறைக்கிறார்கள். [147] உம் இறைவன் கூறியதே சத்தியமாகும். ஆகவே நீர் ஒருபோதும் ஐயம்கொள்வோரில் ஒருவராகி விடாதீர்.

இறைச் செய்தி இன்னும் வராத விஷயங்களில், முந்தைய இறைத் தூதர்களின் நடைமுறைகளைப் பின்பற்றுவது இறைத்தூதரின் வழிமுறையாக இருந்தது. இதன் அடிப்படையில், அவர் தொடக்கத்தில் ஜெருசலேமை முன்னோக்கு திசையாக்கிக் கொண்டார். இது இறைத்தூதர் சாலமன் காலத்திலிருந்தே இஸ்ராயீலின் மக்களுடைய இறைத்தூதர்களின் முன்னோக்கு திசையாக இருந்து வந்திருக்கிறது. ஏக இறைவன் யூதர்களைத் தலைமைத்தகுதியிலிருந்து நீக்கியபோது, இறைமார்க்கம் ஒவ்வொரு கூறிலும் அதன் தூய்மையான வடிவத்தில் வெளிப்படும் வகையில், சிதைந்த மரபுகளிலிருந்து அதைப் பிரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்தக் காரணத்திற்காகவே, இறுதித்தூதர் முன்னோக்கு திசை மாற்றத்திற்கான இறைக் கட்டளைக்காகக் காத்திருந்தார்கள். எனவே இந்தக் கட்டளை புலம்பெயர்வின் (ஹிஜ்ரி) இரண்டாம் ஆண்டில் வந்தது. யூதர்களை எச்சரிக்க வந்த இஸ்ராயீலின் மக்களுடைய தூதர்கள் இறைவனின் இந்த முடிவைப் பற்றி யூதர்களுக்கு முன்னரே தெரிவித்திருந்தனர். அந்த அறிஞர்கள் இதை நன்கு அறிந்திருந்தனர். இருப்பினும், அவர்களில் ஒரு சிலர் மட்டுமே (அப்துல்லாஹ் பின் சலாம் மற்றும் முகைரீக் போன்றவர்கள்) இறைத்தூதரை உறுதிப்படுத்தினர். இறைவன் அவர் மூலம் தனது உண்மையான மார்க்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறான் என்பதை ஏற்றுக் கொண்டனர். யூதர்கள் ஏற்றுக்கொள்ளாததற்கான காரணம் அவர்கள் தம் ஆசைகளை மட்டுமே வழிபட்டதுதான். எந்தக் குழுசார்ந்த ஆசைக் கற்பனைகளில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்களோ அதிலிருந்து வெளிவர அவர்கள் விரும்பவில்லை. மேலும் ஆசைகளை வழிபடுவதன் காரணமாக எழும் மறுப்பை உடைப்பதில் எந்த வாதத்தாலும் ஒருபோதும் வெற்றிபெற முடியாது. அத்தகைய மனிதன், தனது படைப்பாளனுடைய சான்றுகளை ஏற்றுக் கொள்வதால் மட்டுமே வழங்கப்படவிருக்கும் வாழ்வாதாரத்தை அச்சான்றுகளை மறுப்பதன் மூலமாகப் பெற முயற்சி செய்கிறான்.

இறைவனிடமிருந்து ஓர் உண்மை அறிவிக்கப்படும்போது இறைவனின் எந்த அடியானாக இருந்தாலும் அதன் உண்மையை அடையாளம் காணாமல் இருக்க முடியாது. அந்த அளவுக்கு அது உறுதியான ஆதாரங்களுடன் இருக்கும். இந்நிலையில், ஐயம் கொள்பவர்கள் இறைவனை அறிந்திருக்கவில்லை என்பதை மட்டுமே நிரூபிக்கிறார்கள். அவர்களால் இறைவனின் மொழியை அடையாளம் காண முடியவில்லை. இதைப் போலவே, சத்தியத் திற்கு எதிராக ஒரு சில வார்த்தைகளைப் பேசுவதன் மூலம், உண்மையை ஏற்றுக்கொள்ளாமைக்கு வலுவான வாதங்களைக் கண்டுபிடித்துவிட்டதாக நினைப்பவர்கள் அவர்கள், அவை தங்களுடைய மனம் தங்களது சொந்தப் பொய்யான மனநிறைவுக்காக உருவாக்கிய கற்பனை முட்டுக்கள் மட்டுமே என்பதை விரைவில் உணர்வார்கள்.

وَ لِكُلٍّ وِّجْهَةٌ هُوَ مُوَلِّيْهَا فَاسْتَبِقُوا الْخَيْرٰتِ ؕ اَيْنَ مَا تَكُوْنُوْا
يَاْتِ بِكُمُ اللّٰهُ جَمِيْعًا ؕ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَیْءٍ قَدِيْرٌ ﴿۱۴۸﴾ وَ مِنْ حَيْثُ
خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ ؕ وَ اِنَّهٗ لَلْحَقُّ مِنْ
رَّبِّكَ ؕ وَ مَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ﴿۱۴۹﴾ وَ مِنْ حَيْثُ خَرَجْتَ
فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ ؕ وَ حَيْثُ مَا كُنْتُمْ فَوَلُّوْا وُجُوْهَكُمْ
شَطْرَهٗ ۙ لِئَلَّا يَكُوْنَ لِلنَّاسِ عَلَيْكُمْ حُجَّةٌ ۙ اِلَّا الَّذِيْنَ ظَلَمُوْا مِنْهُمْ
فَلَا تَخْشَوْهُمْ وَ اخْشَوْنِیْ ۙ وَ لِاُتِمَّ نِعْمَتِیْ عَلَيْكُمْ وَ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ ﴿۱۵۰﴾
كَمَاۤ اَرْسَلْنَا فِيْكُمْ رَسُوْلًا مِّنْكُمْ يَتْلُوْا عَلَيْكُمْ اٰيٰتِنَا وَ يُزَكِّيْكُمْ
وَ يُعَلِّمُكُمُ الْكِتٰبَ وَ الْحِكْمَةَ وَ يُعَلِّمُكُمْ مَّا لَمْ تَكُوْنُوْا تَعْلَمُوْنَ ﴿۱۵۱﴾
فَاذْكُرُوْنِیْۤ اَذْكُرْكُمْ وَ اشْكُرُوْا لِیْ وَ لَا تَكْفُرُوْنِ ﴿۱۵۲﴾

[148] (ஓரிறை நம்பிக்கையாளர்களே!) ஒவ்வொரு (சமூகத்த)வருக்கும் ஒரு திசையுண்டு. (தொழுகையில்) அதையே அவர்கள் முன்னோக்குவர். எனவே நீங்கள் நன்மையை நோக்கி விரையுங்கள். நீங்கள் எங்கிருந்தபோதிலும் அல்லாஹ் உங்கள் அனைவரையும் ஒரிடத்திற்குக் கொண்டுவருவான். உறுதியாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன். [149] (நபியே!) நீர் எங்கிருந்து புறப்பட்டாலும் (தொழும்போது) உமது முகத்தைப் புனித (கஅபா) இறையில்லத்தை நோக்கித் திருப்புவீராக! உறுதியாக இது உம் இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மையாகும். (இதனைப்பற்றி வீண்வாதம் செய்பவர்களே!) நீங்கள் செய்பவற்றை எல்லாம் அல்லாஹ் கவனிக்காமலில்லை. [150] (நபியே!) நீர் எங்கிருந்து புறப்பட்டாலும் (தொழும்போது) உமது முகத்தைப் புனித (கஅபா) இறையில்லத்தை நோக்கியே திருப்புவீராக! (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் எங்கிருந்தபோதிலும் உங்கள் முகங்களை அதன் பக்கமே திருப்பிக்கொள்ளுங்கள். ஏனெனில் தீவினையாளர்களைத் தவிர மற்ற மக்களிடம் உங்களுக்கு எதிராக வாதம்புரிய எந்தச் சான்றும் இருக்கக் கூடாது. எனவே

நீங்கள் அவர்களுக்கு அஞ்சாதீர்கள். எனக்கே அஞ்சுங்கள் (திசை மாற்றம் குறித்த) இது நான் உங்கள்மீது எனது அருட்கொடையை நிறைவு செய்வதற்காகவும் நீங்கள் நேர்வழி பெறவேண்டும் என்பதற்காகவும்தான். [151]இது நாம் உங்களிலிருந்தே ஒரு தூதரை உங்களிடையே அனுப்பியது போன்றதேயாகும். அவர் உங்களுக்கு எமது வசனங்களை எடுத்துரைத்து உங்களைத் தூய்மைப்படுத்துகிறார்; உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பிக்கிறார்; நீங்கள் அறியாதிருந்த (மற்ற)வற்றையும் அவர் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார். [152]எனவே நீங்கள் என்னை நினைவு கூருங்கள், நானும் உங்களை நினைவுகூர்கிறேன். நீங்கள் எனக்கு நன்றி செலுத்தி வாருங்கள்; மறுப்பாளர்களாகி விடாதீர்கள்.

கஅபா நோக்கு திசையாக நிர்ணயிக்கப்பட்டபோது, யூதர்களும் கிறிஸ்தவர்களும் இறைவனின் திசை மேற்கா கிழக்கா என்பது போன்ற வாதங்களைத் தூண்டி விட்டனர். அவர்கள் இந்தப் பிரச்சினையைத் திசை மாற்றத்திற்கான ஒரு பிரச்சினையாக மட்டுமே பார்த்தார்கள். ஆனால் இது அவர்களின் புரியாமையாக இருந்தது. கஅபாவை நோக்கு திசையாக நிர்ணயிப்பதென்பது வெறுமனே ஒரு வழிபாட்டுத் திசையை நிர்ணயிப்பதாக இருக்கவில்லை, மாறாக நீண்ட காலத்திற்கு முன்பே தீர்மானிக்கப்பட்ட, இறை அடியார்களுக்கு மிகப்பெரிய நன்மை வந்திறங்குவதற்கான நேரம் வந்துவிட்டது என்பதற்கான அறிகுறியாகும். ஆப்ரஹாம், இஸ்மவேல் ஆகியோரின் இறைஞ்சுதலின்படி, இது இறுதித்தூதர் அவர்களின் வெளிப்பாடு ஆகும். இப்போது, மனிதனுக்கு இறைவனின் நிரந்தர வழிகாட்டுதலுக்கான கதவைத் திறந்து, அவனது வழிகாட்டுதலின் அருட்கொடையை இறுதி வரம்பு வரை முழுமைப்படுத்தக் கூடியவர் வந்து விட்டார். இறைவனால் மீண்டும் மீண்டும் அனுப்பப்பட்டபோதும் மனிதர்களின் அலட்சியத்தாலும் கீழ்ப்படியாமையினாலும் வீணாக்கப்பட்ட மார்க்கம் அவர் மூலம் அதன் முழுமையான வடிவத்தில் என்றென்றைக்குமாகப் பாதுகாக்கப்படும். இதுவரை வெறும் மரபுசார்ந்த கற்பனைக் கதையாக இருந்த இறை மார்க்கம் ஓர் உண்மையான நிகழ்வாக மனித வரலாற்றில் சேர்க்கப்படும். எந்த நிரந்தர மாதிரியும் நிறுவப்பட முடியாதிருந்த அந்த மார்க்கம், ஓர் உயிருள்ள, நடைமுறை சார்ந்த மாதிரியாக மக்கள் முன் வைக்கப்படும். இது இறை வழிகாட்டுதலை முழுமைப்படுத்துவது பற்றிய நிகழ்வு. பல்வேறு திசைகளுக்கு இடையில் ஓர் அதிக 'புனித திசையை' நிர்ணயிப்பது பற்றியது அல்ல.

கஅபா கட்டப்பட்ட காலத்திலேயே, இறுதித்தூதர் மூலம் வெளிப்படும் மார்க்கத்தின் மையம் கஅபாவாக இருக்கும் என்பது விதிக்கப்பட்டிருந்தது. முந்தைய தூதர்கள் இதைப் பற்றி மக்களுக்குத் தொடர்ந்து அறிவித்து வந்தனர். இவ்வாறு, இறைவன் கஅபாவை அனைத்துச் சமூகங்களுக்குமான நோக்கு திசையாக நிர்ணயித்ததன் நோக்கம், இறுதித்தூதரின் உயர் தகுதியை நிலைநாட்டுவதாகும். இப்போது, தீவிரமாக எடுத்துக்கொள்ளும் மனிதர்களுக்கு, இறைவனின் இந்த அறிவிப்பு இறுதிச் சான்றாகும். மேலும் மறுமையைக் குறித்து அச்சமற்றிருப்பவர்களின் நாக்குகளை எதனாலும் தடுக்க முடியாது. இறைவனுக்கு அஞ்சி நடப்பவர்கள் மட்டுமே நேர்வழியைப் பெறுவார்கள். இறைவனை நினைவில் வைப்பதுதான் ஒருவரை இறைவன் நினைவில் வைப்பதற்குத் தகுதியுடையவராக்குகிறது. இறைவனுக்கு அஞ்சுவது மட்டுமே இறைவன் அவரை மற்ற எல்லாவற்றிலிருந்தும் அச்சமற்றவராக ஆக்கிவிடுவான் என்பதற்கான ஒரே உறுதிப்பாடு.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ ؕ اِنَّ اللّٰهَ مَعَ
الصّٰبِرِيْنَ ﴿۱۵۳﴾ وَلَا تَقُوْلُوْا لِمَنْ يُّقْتَلُ فِيْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتٌ ؕ بَلْ
اَحْيَآءٌ وَّ لٰكِنْ لَّا تَشْعُرُوْنَ ﴿۱۵۴﴾ وَلَنَبْلُوَنَّكُمْ بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ
وَالْجُوْعِ وَنَقْصٍ مِّنَ الْاَمْوَالِ وَالْاَنْفُسِ وَالثَّمَرٰتِ ؕ وَبَشِّرِ الصّٰبِرِيْنَ ﴿۱۵۵﴾ ۙ
الَّذِيْنَ اِذَآ اَصَابَتْهُمْ مُّصِيْبَةٌ ۙ قَالُوْٓا اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رٰجِعُوْنَ ﴿۱۵۶﴾ ؕ
اُولٰٓئِكَ عَلَيْهِمْ صَلَوٰتٌ مِّنْ رَّبِّهِمْ وَرَحْمَةٌ ۟ وَ اُولٰٓئِكَ هُمُ
الْمُهْتَدُوْنَ ﴿۱۵۷﴾

[153]நம்பிக்கையாளர்களே! பொறுமையின் மூலமும் தொழுகையின் மூலமும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். உறுதியாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான். [154]இறைவழியில் கொல்லப்படுகின்றவர்களை நீங்கள் 'இறந்தவர்கள்' என்று கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருடன் உள்ளனர். ஆனால் நீங்கள் உணர்ந்து கொள்ளமாட்டீர்கள். [155]உடைமைகள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றில் இழப்புகளைஏற்படுத்தியும் ஓரளவு அச்சத்தாலும் பசியாலும் உறுதியாக நாம் உங்களைச் சோதிப்போம். இதில் பொறுமையுடன் இருப்போருக்கு (நபியே!) நற்செய்தி கூறுவீராக! [156]அவர்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால்,

''நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், அவனிடமே மீள்வோம்'' என்று கூறுவார்கள். [157]இத்தகைய மக்கள் மீதுதான் அவர்களுடைய இறைவனிடமிருந்து வாழ்த்துக்களும் அருளும் இறங்குகின்றன. இவர்கள்தாம் நேர்வழியில் உள்ளவர்கள்.

மார்க்கம் என்பது ஒரு மனிதன் இறை நினைவிலும் நன்றி உணர்விலும் தன்னுடைய காலை மாலையை கழிக்கும் அளவிற்குத் தன் படைப்பாளனைக் கண்டடைந்து கொள்வதாகும். இந்த வகையான வாழ்க்கைதான் அனைத்து விதமான மகிழ்ச்சிகள், இன்பங்கள் ஆகியவற்றின் கருவூலம் ஆகும். ஆனால் இந்த மகிழ்ச்சிகளையும் இன்பங்களையும் அவற்றின் உண்மையான வடிவத்தில் மறுமையில் மட்டுமே மனிதனால் காண முடியும். இறைவன் இந்த உலகத்தைப் அருளுக்காகப் படைக்கவில்லை, மாறாக சோதனைக்காகவே படைத்திருக்கிறான். இறைவனை வழிபடும் பாதையில் மனிதனுக்குத் தடைகளை உருவாக்கும் பொருட்டே இத்தகைய நிலைமைகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் யார் தனது நம்பிக்கையை வெளிப்படுத்துவதில் தீவிரமாக இருக்கிறார், யார் தீவிரமாக இல்லை என்பதை அறிவதற்காக! உதாரணத்திற்கு மனவிருப்பங்களின் உந்துதல்கள், மனைவி, மக்களின் கோரிக்கைகள், உலக நலங்கள் மீதான விருப்பங்கள், சாத்தானின் தூண்டுதல்கள், சமூகச் சூழ்நிலைகளின் அழுத்தம் போன்றவை. இவை சோதனை வடிவத்தில் மனிதனைச் சூழ்ந்துள்ளன. ஒரு மனிதனுக்கு இந்தச் சோதனைகளை அடையாளம் கண்டு, அவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டு இறை நினைவு, நன்றியுணர்வு ஆகிய தேவைகளை நிறைவு செய்வது அவசியமாகிறது.

இந்தச் சோதனையின் சிரமங்களை எதிர்கொள்வதில் வெற்றி பெறுவதற்கான ஒரே வழி தொழுகையும் பொறுமையும் ஆகும். அதாவது, இறைவனைப் பற்றிக்கொண்டு, எல்லா வகையான விரும்பத்தகாத துன்பங்களையும் சகித்துக்கொண்டு சத்தியப் பாதையில் உறுதியாக நிலைத்திருப்பது. பாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டாலும், மிரண்டு ஓடாமல், வெளித் தோற்றத்தில் இறைவனைத் தவிர்த்த மற்றவற்றில் லாபத்தைக் கண்டாலும் இறைவனுடன் தம்மை இணைத்து வைத்திருப்பவர்கள்தாம் இறைவனின் வழிமுறைப்படி வெற்றி இலக்கை அடைவார்கள்.

சத்தியப் பாதையில் சிரமங்களுக்கும் இன்னல்களுக்குமான மற்றொரு காரணம், நம்பிக்கையாளனின் அழைப்பியல் பாத்திரமாகும். அழைப்புப் பணி என்பது அறிவுரைக்கும் விமர்சனத்திற்குமான பணியாகும். அறிவுரையும் விமர்சனமும் மனிதர்களுக்கு எப்போதும் மிகவும்

விரும்பத்தகாதவைகளாக இருந்திருக்கின்றன. மேலும் அவர்களில், அறிவுரைகளைக் கேட்பதில் உணர்திறன் மிக்கவர்களெல்லாம் தங்கள் உலக வியாபாரத்தை மார்க்கத்தின் பெயரால் செய்பவர்கள்தாம். அத்தகைய மக்கள் அனைவரும், அழைப்பாளரின் ஆளுமையும் அவரது செய்தியும் தங்களுடைய 'உயர்தகுதி'யை மறுப்பதைக் (negation) காணத் தொடங்குகிறார்கள். அழைப்பாளரின் இருப்பு ஒரு தராசாக மாறுகிறது, அதில் ஒவ்வொரு மனிதனும் எடை போடப்படுகிறான். இதன் விளைவாக, ஓர் இறை அழைப்பாளராக மாறுவதென்பது குளவியின் கூட்டில் கையை விடுவதற்குச் சமமாகிறது. அத்தகைய மனிதர் தன் சொந்தச் சூழலுக்குள்ளேயே இடமில்லாமல் ஆக்கப்படுகிறார். அவருடைய பொருளாதாரம் சீரழிந்து போகிறது. அவரது முன்னேற்றத்திற்கான கதவுகள் மூடப்படுகின்றன. உச்சகட்டமாக அவனது உயிருக்கும் கூட ஆபத்து நேர்கிறது. ஆனால் வழிதவறியவராகச் சொல்லப்பட்டுத் துன்புறுத்தப்படும் அந்த மனிதர் மட்டுமே சரியான பாதையில் இருக்கிறார். இறைவனின் பாதையில் இழப்பவரே அடைகிறார். இறைவனின் பாதையில் தன் உயிரைக் கொடுப்பவர் மட்டுமே உயிர் வாழ்கிறார். மறுமையின் சொர்க்கம், இறைவனுக்காக இவ்வுலகச் சொர்க்கத்தை இழந்து விட்டவருக்குத்தான் உரியது.

اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَآىِٕرِ اللّٰهِ ۚ فَمَنْ حَجَّ الْبَيْتَ اَوِ اعْتَمَرَ
فَلَا جُنَاحَ عَلَيْهِ اَنْ يَّطَّوَّفَ بِهِمَا ؕ وَمَنْ تَطَوَّعَ خَيْرًا ۙ فَاِنَّ اللّٰهَ
شَاكِرٌ عَلِيْمٌ ﴿۱۵۸﴾ اِنَّ الَّذِيْنَ يَكْتُمُوْنَ مَاۤ اَنْزَلْنَا مِنَ الْبَيِّنٰتِ
وَالْهُدٰى مِنْۢ بَعْدِ مَا بَيَّنّٰهُ لِلنَّاسِ فِى الْكِتٰبِ ۙ اُولٰٓئِكَ يَلْعَنُهُمُ
اللّٰهُ وَيَلْعَنُهُمُ اللّٰعِنُوْنَ ﴿۱۵۹﴾ ۙ اِلَّا الَّذِيْنَ تَابُوْا وَاَصْلَحُوْا وَبَيَّنُوْا
فَاُولٰٓئِكَ اَتُوْبُ عَلَيْهِمْ ۚ وَاَنَا التَّوَّابُ الرَّحِيْمُ ﴿۱۶۰﴾ اِنَّ الَّذِيْنَ
كَفَرُوْا وَمَاتُوْا وَهُمْ كُفَّارٌ اُولٰٓئِكَ عَلَيْهِمْ لَعْنَةُ اللّٰهِ وَالْمَلٰٓئِكَةِ
وَالنَّاسِ اَجْمَعِيْنَ ﴿۱۶۱﴾ ۙ خٰلِدِيْنَ فِيْهَا ۚ لَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ
وَلَا هُمْ يُنْظَرُوْنَ ﴿۱۶۲﴾

[158]உறுதியாக ஸஃபா, மர்வா (குன்றுகள்) ஆகியவை இறைச் சின்னங்கள் ஆகும். எனவே இறையில்லத்தை ஹஜ் அல்லது

உம்ரா செய்கின்றவர் அவற்றைச்சுற்றி வருவது (சிலர் கருதியது போல) அவர்மீது குற்றமாகாது. எவரேனும் ஆர்வத்துடன் (கூடுதல்) நன்மைகள் புரிந்தால் அல்லாஹ் நன்றி பாராட்டுபவனாகவும் முற்றும் அறிந்தவனாகவும் இருக்கிறான். [159]நாம் அருளிய சான்றுகளையும் நேர்வழியையும் மக்களுக்காக வேதத்தில் நாம் தெளிவுபடுத்திய பின்னரும் அவற்றை(ச் சிலர்) மறைக்கின்றனர்; அவர்களை அல்லாஹ் சபிக்கின்றான்; சபிப்ப(தற்குத் தகுதி உடைய)வர்களும் சபிக்கின்றனர். [160]ஆயினும் யாரெல்லாம் (பாவ)மன்னிப்புக் கோரி, தம்மைச் சீர்திருத்திக் கொண்டு, (தங்கள் வேதங்களில் தாம் மறைத்தவற்றை மக்களுக்குத்) தெளிவாக எடுத்துரைத்துவிடுகின்றனரோ அவர்களை நான் மன்னித்து விடுவேன். நான் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன். [161]உறுதியாக எவர் (ஓரிறையை) மறுத்து அதே நிலையிலேயே இறந்தும் விடுகிறார்களோ அவர்களின் மீதுதான் அல்லாஹ், வானவர்கள், மனிதர்கள் ஆகிய அனைவரின் சாபமும் உண்டாகும். [162]அந்த(ச் சாப) நிலையிலேயே அவர்கள் நிலையாக இருப்பர். அவர்களுடைய தண்டனை எளிதாக்கப்படாது. (பாவமன்னிப்புக் கோர) அவர்களுக்குக் காலநீட்டிப்பும் அளிக்கப்படாது.

இறைத்தூதர் ஆப்ரஹாமின் தாயகம் ஈராக் ஆகும். இறைவனின் கட்டளைப்படி, அவர் தனது மனைவி ஹாகரையும் (ஹாஜிரா), தனது இளம் குழந்தை இஸ்மவேலையும் அழைத்து வந்து, இன்று மக்காவாக இருக்கும் இடத்தில் விட்டுச் சென்றார். அந்தக் காலத்தில், அங்கே மக்கள் குடியேற்றமும் இல்லை, தண்ணீரும் இல்லை. தாகம் எடுத்தபோது, ஹாகர் தண்ணீரைத் தேடி வெளியே சென்றார். பதற்றத்தில், அவர் சஃபா, மர்வா மலைகளுக்கு இடையில் ஓடிக்கொண்டே இருந்தார். ஏழு சுற்றுகள் சுற்றியும் தோல்வியுற்றுத் திரும்பி வந்தபோது, அவர் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் ஒரு நீரூற்று பொங்கி எழுந்திருந்ததைக் கண்டார். அந்த நீரூற்று பின்னர் 'ஜம்ஜம்' என்று புகழ் பெற்றது. இது ஒரு அடையாள நிகழ்வு, இதன் மூலம் இறைவன் தன் அடியார்களை எவ்வாறு நடத்துகிறான் என்பதை அறிய முடியும். இறைவனின் அடியான் இறைவனின் பாதையில் முன்னேறிச் சென்று, அவனது கால்களுக்குக் கீழே பாலைவனமும், வனாந்தரமும் தவிர வேறெதுவும் இல்லாத நிலையே ஏற்பட்டு விட்டாலும், இறைவன் தன் ஆற்றலால், பாலைவனத்தில் அவனுக்கு உணவளிக்கும் ஊற்றுகளைப் பொங்கியோடச் செய்துவிடுவான். ஹஜ் மற்றும் உம்ராவின் போது சஃபாவிற்கும் மர்வாவிற்கும் இடையிலான ஓட்டத்தின் நோக்கம் இந்த வரலாற்றின் நினைவைப் புதுப்பிப்பதாகும்.

இறைவனின் அடையாளங்கள் இறுதித்தூதர் அவர்களின் வாழ்க்கை யிலும் போதனைகளிலும் எந்த அளவுக்குத் தெளிவாக இருந்தன வென்றால், அவர்களின் நாவிலிருந்து வெளிப்பட்டவை இறைவனின் வார்த்தைகள் என்பதைப் புரிந்துகொள்வது கடினமாய் இருக்கவில்லை. ஆனால் வேதம் வழங்கப்பட்டவர்களைச் சார்ந்த அறிஞர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதித்தூதரை ஏற்றுக்கொண்டால், அவர்களின் மதப்பெருமை முடிவுக்கு வந்துவிடும் என்றும், நன்றாக அமையப்பெற்றிருந்த அவர்களின் வணிகங்கள் சரிந்துவிடும் என்றும் அவர்கள் அஞ்சினர். உண்மையைப் பிரகடனப்படுத்துவதில்தான் அவர்களின் வெற்றிக்கான ரகசியம் அடங்கியிருந்தது எனினும், உண்மையை மறைப்பதில் தான் தம்முடைய வெற்றிக்கான ரகசியம் இருப்பதாக அவர்கள் கருதினர். சத்தியத்தை நோக்கி நகர்வதில் அவர்கள் தங்களுடைய காலடி நிலத்தை இழப்பதாகக் கண்டார்கள். ஆனால் அதுதான் இறைவனுக்கு மிகவும் விருப்பமான ஒன்று என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். சத்தியத்திற்காக நிலமற்றவனாக மாறும் ஓர் அடியான், மிகப்பெரிய நிலத்தை, அதாவது அனைத்துலகங்களின் இறைவனுடைய ஆதரவைப் பெற்றுக் கொள்கிறான்.

இருப்பினும், இறையருளின் கதவு மனிதனுக்காக எப்போதும் திறந்தே இருக்கிறது. ஒருவர் தொடக்கத்தில் தவறு செய்த பிறகு உணர்வுற்று, பின்னர் திரும்பிச் சரியான போக்கை மேற்கொண்டால் – இறைவன் அறிவிக்க வேண்டும் என்று விரும்புகிற சத்தியத்தை அவர் அறிவித்தால் – இறைவன் அவரை மன்னித்து விடுவான். ஆனால் சத்தியத்தை அங்கீகரிக்காமல் அதிலேயே நிலைத்திருந்து, அதே நிலையில் இறந்து விடுபவர்கள் இறையருளிலிருந்து விலக்கப்பட்டுவிடுவார்கள்.

وَ اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ ﴿۱۶۳﴾ اِنَّ فِىْ ۟
خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ وَالْفُلْكِ
الَّتِىْ تَجْرِىْ فِى الْبَحْرِ بِمَا يَنْفَعُ النَّاسَ وَمَاۤ اَنْزَلَ اللّٰهُ مِنَ
السَّمَآءِ مِنْ مَّآءٍ فَاَحْيَا بِهِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا وَبَثَّ فِيْهَا مِنْ
كُلِّ دَآبَّةٍ ۖ وَّتَصْرِيْفِ الرِّيٰحِ وَالسَّحَابِ الْمُسَخَّرِ بَيْنَ السَّمَآءِ
وَالْاَرْضِ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ﴿۱۶۴﴾

[163]உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான். அவனைத்தவிர வேறு இறைவன் இல்லை. அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்பாளன். [164]உறுதியாக வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும் இரவு-பகல் மாறிமாறி வருவதிலும், மக்களுக்குப் பயன்தரக்கூடிய பொருள்களைச் சுமந்துகொண்டு கடலில் செல்கின்ற கப்பல்களிலும், வானத்திலிருந்து அல்லாஹ் இறக்கி வைக்கும் நீரிலும், பின்னர் அதன் மூலம் வறண்ட பூமியைச் செழிக்க வைப்பதிலும், அவன் பூமியில் அனைத்து விதமான உயிரினங்களையும் பரவச் செய்திருப்பதிலும், காற்றுகளின் சுழற்சியிலும், வானத்திற்கும் பூமிக்குமிடையே வசப்படுத்தப்பட்டுள்ள மேகங்களிலும் சிந்திக்கும் மக்களுக்கு (இறைவனின் ஆற்றலையும் அருளையும் புலப்படுத்தும்) சான்றுகள் உள்ளன.

மனிதனுடைய இறைவன் ஒருவனே, அவன் மட்டுமே மனிதனின் முழு கவனத்திற்கான மையமாக இருக்கத் தகுதி பெற்றவன். நமது இருப்புக்கும், பூமியில் நமக்குக் கிடைத்துள்ள அனைத்துக்குமே காரணம், நம்முடைய அந்த இறைவனின் அருளும் நிகரற்ற அன்பும் ஆகும். மனிதன் உண்மையான பொருளில் அவனைத் தன் வணக்கத்திற்குரியவனாக ஆக்கிக் கொள்ளவேண்டும்; அவனுக்காகவே வாழ்ந்து அவனுக்காகவே இறக்க வேண்டும்; தன்னுடைய எதிர்பார்ப்புகள், விருப்பங்கள் ஆகிய அனைத்தையும் நிரந்தரமாக இறைவனுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சிறு குழந்தை தன் தாயைத் தனக்கு எல்லாமாகக் கருதுவது போல, இறைவன் மனிதனுக்கு எல்லாமாக மாற வேண்டும்.

நமக்கு முன்பாகப் பரந்து விரிந்திருக்கும் பிரபஞ்சம் இறைவனுக்கான ஒரு மகத்தான அறிமுகமாகும். வானம், பூமி ஆகிய வடிவத்தில் அளவிடற்கரிய பெரும்படைப்பு இருப்பது, ஒரு படைப்பாளன் இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. பல்வேறு புறவயமான வேறுபாடுகளும், முரண்பாடுகளும் இருந்தபோதிலும், அனைத்து விஷயங்களும் சரியான இணக்கத்துடன் செயல்படுகின்றன என்பது அவற்றின் படைப்பாளனும் காப்பாளனும் ஒரே ஒருவன் மட்டுமே என்பதை நிரூபிக்கிறது. பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களின் நன்மை பயக்கும் திறன், அவை சரியான அறிவாற்றலின் அடிப்படையில், ஒரு நோக்கத்துடன் திட்டமிடப்பட்டவை என்பதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பாகும். பார்ப்பதற்கு உயிரற்றதாகத் தென்படும் பொருட்களில் இயற்கையின் செயல்பாட்டால் உயிரும் புத்துணர்ச்சியும் வருவதென்பது, பிரபஞ்சத்தில் இறப்பு வெறும் தற்காலிகமான ஒன்று என்பதையும், ஒவ்வோர் இறப்பிற்குப் பிறகும் மற்றொரு வாழ்க்கை கண்டிப்பாக இருக்கிறது

என்பதையும் காட்டுகிறது. ஒரே நீரினாலும் உணவினாலும் எண்ணிலடங்காத பல்வேறு வகை உயிரினங்கள் காணப்படுவது இறைவனின் அளவிட முடியாத ஆற்றலை வெளிப்படுத்துகிறது. காற்று (மண்டலம்) மனிதனை முழுமையாகச் சூழ்ந்திருப்பது, மனிதன் முற்றிலும் படைப்பாளனின் வசம் இருப்பதைக் குறிக்கிறது. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் மனிதத் தேவைகளுக்கேற்பத் தனிப்பயனாக்கப்பட்டிருப்பது (customized) மனிதனைப் படைத்தவன் அளவற்ற அருளாளனாக இருக்கிறான், அவன் மனிதனின் இருப்புக்கு முன்பே அவனது தேவைகளுக்கான ஏற்பாடு செய்து கொண்டிருந்தவனாக இருக்கிறான் என்பதை நிரூபிக்கிறது.

பிரபஞ்சத்தில் உள்ள இத்தகைய அடையாளங்கள், ஒரு வகையில் படைப்புகளுக்குள் படைப்பாளனின் பிரதிபலிப்பாக இருக்கின்றன. அவை இறைவனின் இருப்பையும், அவனது ஒருமையையும், அவனது அனைத்து முழுமையான பண்புகளின் நிறைவான தன்மையையும் மிகப் பெரிய அளவில் வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றன. கண்களைக் கொண்ட எவனும் அவற்றைக் காண்பதிலிருந்து அலட்சியமாக இருக்கக் கூடாது; அறிவுள்ள எவரும் அவற்றை அடைய முடியாமல் போய்விடக் கூடாது. சான்றுகளைக் குறித்து ஆழ்ந்து சிந்திப்பவன் மட்டுமே சான்றுகளைக் கண்டடைகிறான். உண்மையை அறிந்துகொள்ளும் முயற்சியில் அவன் உலகியல் நலன்களிலிருந்து மேலெழுந்து கருத்துகளை நிறுவ வேண்டும். புறவயமான பார்வைகளில் சிக்கிக் கொண்டவனாக அல்லாமல் அவற்றுக்குப் பின்னால் மறைந்திருக்கும் கை யதார்த்தத்தை அறியப் பேராசை கொண்டவனாக இருக்க வேண்டும்.

وَمِنَ النَّاسِ مَنْ يَّتَّخِذُ مِنْ دُوْنِ اللّٰهِ اَنْدَادًا يُّحِبُّوْنَهُمْ كَحُبِّ
اللّٰهِ ؕ وَالَّذِيْنَ اٰمَنُوْٓا اَشَدُّ حُبًّا لِّلّٰهِ ؕ وَلَوْ يَرَى الَّذِيْنَ ظَلَمُوْٓا
اِذْ يَرَوْنَ الْعَذَابَ ۙ اَنَّ الْقُوَّةَ لِلّٰهِ جَمِيْعًا ۙ وَّاَنَّ اللّٰهَ شَدِيْدُ
الْعَذَابِ ﴿١٦٥﴾ اِذْ تَبَرَّاَ الَّذِيْنَ اتُّبِعُوْا مِنَ الَّذِيْنَ اتَّبَعُوْا وَرَاَوُا
الْعَذَابَ وَتَقَطَّعَتْ بِهِمُ الْاَسْبَابُ ﴿١٦٦﴾ وَقَالَ الَّذِيْنَ اتَّبَعُوْا لَوْ
اَنَّ لَنَا كَرَّةً فَنَتَبَرَّاَ مِنْهُمْ كَمَا تَبَرَّءُوْا مِنَّا ؕ كَذٰلِكَ يُرِيْهِمُ اللّٰهُ
اَعْمَالَهُمْ حَسَرٰتٍ عَلَيْهِمْ ؕ وَمَا هُمْ بِخٰرِجِيْنَ مِنَ النَّارِ ﴿١٦٧﴾

[165]மனிதர்களில் சிலர், அல்லாஹ்வையன்றி மற்றவைகளை அவனுக்கு இணையாக்குகின்றனர். அல்லாஹ்வை நேசிப்பதைப் போன்றே அவற்றையும் நேசிக்கின்றனர். ஆனால் நம்பிக்கையாளர்கள் (அனைத்தையும்விட) அல்லாஹ்வையே அதிகமாக நேசிக்கின்றனர். தீவினையாளர்கள் (மறுமையில்) வேதனையைக் காணும்போது, 'வல்லமை அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன. அவன் தண்டிப்பதில் கடுமையானவன்' என்பதை அறிந்துகொள்வார்கள். [166]எவருடைய வழிகாட்டுதலின்படி இவர்கள் நடந்து கொண்டார்களோ, அவர்கள் தம்மால் வழிகாட்டப்பட்டவர்களை விட்டு விலகிவிடுவார்கள். அவர்கள், வேதனையை (நேரடியாக)க் காண்பார்கள். அவர்களிடையே (உலகில்) இருந்த தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிடும். [167]பின்பற்றிச் சென்றவர்கள், ''நாங்கள் மீண்டும் உலகத்திற்குத் திரும்பிச் செல்ல முடிந்தால் அவர்கள் எங்களை விலகி விட்டதைப் போன்று நாங்களும் அவர்களை விட்டு விலகிவிடுவோம்'' என்பார்கள். இவ்வாறு அவர்களின் செயல்களை அல்லாஹ் அவர்களுக்குத் துயரம் அளிப்பவையாக எடுத்துக் காட்டுவான். அவர்கள் (நரக) நெருப்பிலிருந்து வெளியேற முடியாது.

மனிதன், தன் இயல்பாலும் சூழ்நிலைகளாலும், எப்போதும் புறவய ஆதரவைத் தேடும் ஒரு படைப்பினமாக இருக்கிறான். அந்த ஆதரவான ஒருவன் அவனது குறைபாடுகளை ஈடு செய்யக்கூடியவனாக அவனது பற்றுறுதி, திட நம்பிக்கை ஆகியவற்றிற்கு அடிப்படையாக இருக்க வேண்டும். இந்தத் தகுதியுடைய ஒருவனைத் தன்னுடைய வாழ்க்கையில் சேர்த்துக் கொள்வது அவனை வணக்கத்திற்குரிய ஒருவனாக ஆக்குவதற்குச் சமம். ஒரு மனிதன் ஒருவனை (அல்லது ஒன்றை)த் தனது இறைவனாக ஆக்கிக் கொள்ளும்போது அந்த மனிதனின் அன்பு மற்றும் வழிபாட்டு உணர்வுகள் கண்டிப்பாக அந்த ஒருவனுக்கு (அல்லது ஒன்றுக்கு) மட்டுமே உரியவையாக மாறிவிடுவது தவிர்க்க முடியாதது. மனிதன் தன் இயல்பின் அடிப்படையில் ஒருவனைத் தீவிரமாக நேசிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறான், ஒருவன் யாரை மிகவும் தீவிரமாக நேசிக்கிறானோ அவனே அவனுடைய இறைவன். தற்போதைய உலகில், இறைவன் கண்ணுக்குத் தெரிவதில்லை ஆதலால், புற நோக்குடைய மனிதன் பொதுவாகக் கண்களுக்குப் புலப்படும் ஒருவருக்கோ, ஒன்றுக்கோ உண்மையில் இறைவனுக்கு வழங்க வேண்டிய தகுதியை வழங்கிவிடுகிறான். இந்த ஆளுமைகள் பெரும்பாலும் தலைவர்களாகவோ சமூக வழிகாட்டிகளாகவோ இருக்கின்றனர். அவர்கள் சில புறவய சிறப்பம்சங்களின் காரணமாக மக்களின் கவனத்தை ஈர்க்கும்

மையப்புள்ளியாக மாறிவிடுகிறார்கள். மனிதனின் இயல்பில் உள்ள வெற்றிடம் உண்மையில் அனைத்துலகங்களின் இறைவனால் நிரப்பப்பட வேண்டிய ஒன்றாக இருந்தது. ஆனால் அவன் ஒரு தலைவனையோ ஒரு சமூக வழிகாட்டியையோ அங்கு அமர வைத்து விடுகிறான்.

இது ஏன் நிகழ்கிறதென்றால் ஒரு மனிதனைச் சுற்றிப் புறவயமான செழிப்பையும், வளமையையும் காணும்போது மக்கள் அவனைப் 'பெரியவனாக'க் கருதத் தொடங்கிவிடுகிறார்கள். ஒருவன் தன்னுடைய அசாதாரணமான தனிப்பட்ட பண்புகளால் மக்களைக் கவர்ந்துகொள்கிறான்; ஒரு பீடத்தில் அமர்ந்திருப்பதன் மூலம் நூறாண்டுகாலப் பாரம்பரியங்களின் வாரிசாக ஆகிவிடுகிறான். அவனைச் சுற்றியிருக்கும் மக்கள் கூட்டத்தைக் கண்டு அவன் சாதாரண மனிதர்களை விட உயர்ந்த ஒரு மனிதன் என்று மக்கள் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். அவனைச் சுற்றி மர்மமான கதைகளின் ஒளிவட்டம் உருவாகிவிடுகிறது, மேலும் அவன் அசாதாரண ஆற்றல்களைக் கொண்டிருப்பதாக எண்ணிக்கொள்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், இறைவனின் பிரபஞ்சத்தில், இறைவனைத் தவிர வேறு யாருக்கும் எந்த ஆற்றலோ பெருமையோ இல்லை. மனிதனுக்கு இறைவனுடைய தகுதியை வழங்கும் இந்தக் கொடுக்கல் வாங்கல், இறைவன் வெளிப்படும் வரை மட்டுமே செல்லுபடியாகும். இறைவன் வெளிப்பட்டவுடன், நிலைமை முற்றிலும் மாறிவிடும், 'பெரியவர்கள்' தங்கள் 'சிறியவர்களிடமிருந்தும்', 'சிறியவர்கள்' தங்கள் 'பெரியவர்களிடமிருந்தும்' ஓட விரும்புவார்கள். உலகில் மனிதன் எந்தத் தொடர்பைப் பெருமையாக கருதியிருந்தானோ எதன் மீது விசுவாசத்தையும் பாசத்தையும் காட்டி மிகப் பெரும் பாறையைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பதாக எண்ணினானோ அவை நியாயத்தீர்ப்பு நாளில் அர்த்தமற்றவையாகிவிடும். அவை யதார்த்தத்தில் ஒன்றுமே இல்லாமல் இருந்ததைப் போல! மனிதன் தனது கடந்த கால வாழ்க்கையை ஏக்கத்துடன் திரும்பிப் பார்ப்பான் எனினும் அவனால் ஒன்றும் செய்ய முடியாது.

يَاَيُّهَا النَّاسُ كُلُوْا مِمَّا فِى الْاَرْضِ حَلٰلًا طَيِّبًا ۖ وَّلَا تَتَّبِعُوْا
خُطُوٰتِ الشَّيْطٰنِ ۭ اِنَّهٗ لَكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ ﴿١٦٨﴾ اِنَّمَا يَاْمُرُكُمْ بِالسُّوْۗءِ
وَالْفَحْشَاۗءِ وَاَنْ تَقُوْلُوْا عَلَي اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿١٦٩﴾ وَاِذَا قِيْلَ
لَهُمُ اتَّبِعُوْا مَآ اَنْزَلَ اللّٰهُ قَالُوْا بَلْ نَتَّبِعُ مَآ اَلْفَيْنَا عَلَيْهِ اٰبَاۗءَنَا ۭ اَوَلَوْ
كَانَ اٰبَاۗؤُهُمْ لَا يَعْقِلُوْنَ شَيْـــًٔا وَّلَا يَهْتَدُوْنَ ﴿١٧٠﴾ وَمَثَلُ الَّذِيْنَ

كَفَرُوْا كَمَثَلِ الَّذِيْ يَنْعِقُ بِمَا لَا يَسْمَعُ اِلَّا دُعَآءً وَّنِدَآءً ؕ صُمٌّۢ بُكْمٌ عُمْيٌ فَهُمْ لَا يَعْقِلُوْنَ ﴿۱۷۱﴾

[168]மனிதர்களே! பூமியிலுள்ள பொருள்களில் அனுமதிக்கப்பட்ட, தூய்மையானவற்றையே உண்ணுங்கள். சாத்தானின் அடிச் சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். உறுதியாக அவன் உங்களுக்கு வெளிப்படையான பகைவன் ஆவான். [169]அவன் உங்களுக்குத் தீயவற்றைச் செய்யவும் மானக்கேடான செயல்களைச் செய்யவும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது புனைந்து கூறவும்தான் தூண்டுகிறான். [170]''அல்லாஹ் அருளிய(வேதத்)தைப் பின்பற்றுங்கள்'' என்று அவர்களிடம் கூறப்பட்டால், ''எங்கள் முன்னோர்களை எவ்வழியில் கண்டோமோ அதே வழியைத்தான் பின்பற்றுவோம்'' என்று கூறுகின்றனர். அவர்களின் முன்னோர்கள் எதையும் புரிந்து கொள்ளாதவர்களாகவும் நேர்வழியில் இல்லாதவர்களாகவும் இருந்தாலுமா? [171]மறுப்பவர்கள், (உரத்துக்) கத்துபவனின் வெறும் கூச்சலையும் ஓசையையும் தவிர வேறெதையும் புரிந்துகொள்ள முடியாத கால்நடையைப் போன்றவர்கள். அவர்கள் செவிடர்களாக, ஊமையர்களாக, குருடர்களாக இருக்கின்றனர். எனவே, அவர்கள் எதையும் புரிந்துகொள்ள மாட்டார்கள்.

இணைவைத்தல் என்றால் என்ன? கீழ்ப்படியும் அடிமைப் பண்பின் உணர்வுகளை ஆற்றுப்படுத்த இறைவனைத் தவிர வேறு ஒரு மையத்தை உருவாக்கிக் கொள்ளுதல். 'இறைவன்' மனிதனுக்கான தவிர்க்க முடியாத தேவையாக இருக்கிறான். இறைவன் இல்லாமல் எந்த மனிதனாலும் வாழ முடியாது என்னும் அளவுக்கு இறைவனுக்கான தேடல் மனித இயல்பில் மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ளது. மனிதனின் வழிபிறழ்தல் என்பது இறைவனைக் கைவிடுவதல்ல. மாறாக உண்மையான இறைவனுக்குப் பதிலாக ஒரு கற்பனையான இறைவனைத் தனது இறைவனாக ஆக்கிக்கொள்வதாகும். எனவே, ஒரு மனிதனின் இயல்பான விருப்பத்தை ஏக இறைவன் அல்லாத ஒன்றை நோக்கித் திசை திருப்புவது எதுவாக, எந்த வகையில் இருந்தாலும் மார்க்கச் சட்டத்தில் (ஷரியா) அது தடைசெய்யப்பட்டுள்ளது.

சிலை வழிபாடு செய்யும் சமூகங்கள் சிலைகளின் பெயரால் விலங்குகளை நேர்ச்சை செய்து விட்டுவிடுகின்றன, மேலும் இந்த விலங்குகளிடமிருந்து பயன் பெறுவதைத் தடைசெய்யப்பட்டதாகக் கருதுகின்றன. இதுபோலத் தனக்கென ஒன்றைத் தடை செய்துகொள்வதென்பது வெறும் சாதாரணமான

ஒரு சட்டம் சார்ந்த செயல் அல்ல; மாறாக அது இறை மார்க்கத்திற்குப் பதிலாக சுயமாக ஒரு மதத்தை உருவாக்கிக்கொள்வதாகும். ஏனெனில் இவ்வாறு ஒரு செயலைத் தடை செய்வதற்கான காரணம், சொந்தமாக உருவாக்கப்பட்ட ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் அதைப் புனிதமாகக் கருதிக் கொள்வதாகும். இது இறைவனின் உரிமைகளில் இறைவன் அல்லாதவற்றைப் பங்கு கொள்ளச் செய்வதாகும், இது மதிப்பு மற்றும் புனிதம் ஆகியவை தொடர்பான இயல்பான உணர்வுகளைப் பங்கிட்டுப் பிரிப்பதாகும். ஏனெனில் இவை இறைவனுக்கானவை; இறைவனுக்கு மட்டுமே உரித்தாக்கப்பட வேண்டியவை. மனிதனுக்குள் மறைந்திருக்கும் வியப்பு, புனிதம் ஆகிய உணர்வுகளை வெவ்வேறு திசைகளில் பிரித்து, இறைவனுடனான அவனது உறவைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக சாத்தான் இத்தகைய வழக்கங்களை ஏற்படுத்துகிறான்.

ஒருமுறை இறைவன் அல்லாத ஒன்றைப் புனிதமானதாகக் கருதத் தொடங்கி விட்டால், மனிதனின் மூடநம்பிக்கை அவனுக்குள் புதுப் புதுத் தீமைகளை உருவாக்கிக்கொண்டே சென்றுவிடுகிறது. ஒரு 'விலங்கு' இறைவனுக்கு மட்டுமே உரிய மர்மமான குணங்களைக் கொண்டிருப்பதாகக் கொள்ளப்பட்டுவிடுகிறது. அதை நாளடைவில் இறைவனிடம் நெருக்கத்தைப் பெறுவதற்கான ஒரு வழியாகக் கருதிக்கொள்கிறார்கள். அதன் மூலமாக வளமும் விருப்பங்களும் நிறைவேறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த நடத்தை அடுத்த தலைமுறையினரை அடையும் போது, அவர்கள் அதைத் தங்கள் மூதாதையரின் புனித வழிமுறையாகக் கருதிப் பற்றிக் கொள்கிறார்கள், இனி மேற்கொண்டு எவ்வித சிந்தனையோ கவனக்குவிப்போ வாய்ப்பில்லாமல் போகிறது. இறுதியில் ஒரு நேரம் வருகிறது. அதில் மக்கள் சான்றுகளின் மொழியைப் புரிந்து கொள்வதிலிருந்து எந்த அளவிற்கு இயலாத நிலைக்கு போய்விடுகிறார்கள் என்றால் அவர்களிடம் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் கண்களும் காதுகளும் இருப்பதில்லை; புரிந்து கொள்வதற்கு அவர்களிடம் மூளையும் இருப்பதில்லை.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُلُوْا مِنْ طَيِّبٰتِ مَا رَزَقْنٰكُمْ وَاشْكُرُوْا
لِلّٰهِ اِنْ كُنْتُمْ اِيَّاهُ تَعْبُدُوْنَ ﴿١٧٢﴾ اِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ وَ
الدَّمَ وَلَحْمَ الْخِنْزِيْرِ وَمَآ اُهِلَّ بِهٖ لِغَيْرِ اللّٰهِ ۚ فَمَنِ اضْطُرَّ غَيْرَ
بَاغٍ وَّلَا عَادٍ فَلَآ اِثْمَ عَلَيْهِ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١٧٣﴾ اِنَّ

الَّذِيْنَ يَكْتُمُوْنَ مَآ اَنْزَلَ اللّٰهُ مِنَ الْكِتٰبِ وَ يَشْتَرُوْنَ بِهٖ
ثَمَنًا قَلِيْلًا ۙ اُولٰٓئِكَ مَا يَاْكُلُوْنَ فِيْ بُطُوْنِهِمْ اِلَّا النَّارَ وَلَا
يُكَلِّمُهُمُ اللّٰهُ يَوْمَ الْقِيٰمَةِ وَلَا يُزَكِّيْهِمْ ۚ وَلَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿۱۷۴﴾
اُولٰٓئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الضَّلٰلَةَ بِالْهُدٰى وَالْعَذَابَ بِالْمَغْفِرَةِ ۚ
فَمَآ اَصْبَرَهُمْ عَلَى النَّارِ ﴿۱۷۵﴾ ذٰلِكَ بِاَنَّ اللّٰهَ نَزَّلَ الْكِتٰبَ بِالْحَقِّ ؕ
وَاِنَّ الَّذِيْنَ اخْتَلَفُوْا فِي الْكِتٰبِ لَفِيْ شِقَاقٍ بَعِيْدٍ ﴿۱۷۶﴾ ع ۲۱ ۱۵ ۱۴

[172]நம்பிக்கையாளர்களே! நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையானவற்றையே உண்ணுங்கள். நீங்கள் அல்லாஹ்வை மட்டுமே வணங்குபவர்களாக இருந்தால் அவனுக்கே நன்றி செலுத்துங்கள். [173]தானாகச் செத்தது, இரத்தம், பன்றி இறைச்சி, அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் கூறிப் பலியிடப்பட்டது ஆகியவற்றைத்தான் அல்லாஹ் உங்களுக்குத் தடை செய்துள்ளான். ஆயினும் யாரேனும் விரும்பாமலும் வரம்பு மீறாமலும் (இருக்கும்நிலையில் அவற்றை உண்ணுமாறு) கட்டாயப்படுத்தப்பட்டால் (அவற்றை உண்பது) அவர்மீது குற்றமாகாது. உறுதியாக அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன். [174]வேதத்தில் அல்லாஹ் அருளியுள்ளதை மறைத்து, அதற்கு ஈடாக அற்ப ஊதியத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் தம் வயிற்றில் நெருப்பைத்தான் நிரப்புகிறார்கள். மறுமை நாளன்று அல்லாஹ் அவர்களுடன் பேசவும் மாட்டான்; அவர்களைத் தூய்மைப்படுத்தவும் மாட்டான். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையும் உண்டு. [175]அவர்கள்தாம் நேர்வழிக்குப் பதிலாகக் கெடுவழியையும் மன்னிப்பிற்குப் பதிலாக வேதனையையும் விலைக்கு வாங்கியவர்கள். நரக நெருப்பைச் சகித்துக் கொள்ளலாம் எனத் தோன்றும்படி அவர்களைச் செய்தது எது? [176](இவ்வேதனை) ஏனெனில், தன் வேதத்தைச் சத்தியம் கொண்டதாக அல்லாஹ் அருளியிருக்க (அதனுடன் அவர்கள் முரண்படுகிறார்கள். அவ்வாறு) வேதத்தில் முரண்பட்டவர்கள் பிடிவாதத்தில் மிகுந்த தொலைவுக்குச் சென்று விட்டனர்.

உண்ணுவதற்கும் பருகுவதற்கும் உரிய பொருட்களைப் பயன்படுத்தும் போது ஒரு மனிதனுக்குள் எழ வேண்டிய உணர்வுகள் நன்றியுணர்வும் கீழ்ப்படிதலும் ஆகும். அதாவது, 'இறைவன் நமக்குக் கொடுத்ததை அவனது கட்டளைப்படியே நாம் உண்கிறோம்' என்ற இந்த உணர்வு மனிதனுக்குள் இறைப்பற்றின் பேரார்வத்தைத் தூண்டுகிறது. ஆனால் சுயமாக உருவாக்கப்படும் கோட்பாடுகளில் இத்தகைய உளவியல் மாறிவிடுகிறது. இப்போது, மனிதனின் கவனம் பொருட்களின் கற்பனையான பண்புகளின் பக்கம் ஈர்க்கப்படுகிறது. ஒரு கட்டத்தில் எந்தப் பொருட்களைப் பெற்று இறைவனுக்கான நன்றியுணர்வு மேலெழுந்ததோ, அதே பொருட்கள் மீது இப்போது கண்ணியமும் புனித உணர்வும் மேலெழுகின்றன. மனிதன், படைப்பிற்குப் படைப்பாளனுக்குரிய தகுதியை வழங்கி விடுகிறான். ஒரு பொருள் தடை செய்யப்படுவதற்கான அடிப்படை அதன் கற்பனையான புனிதத்தன்மையோ அதைப் பற்றிய மூடநம்பிக்கைகளோ அல்ல. இதற்கான காரணம் முற்றிலும் வேறுபட்டது. அது யாதெனில் அந்தப் பொருட்கள் அசுத்தமானவையாக இருந்து, மார்க்கச் சட்டம் (ஷரியா) அவற்றின் அசுத்தத்தை உறுதிப்படுத்தியிருப்பதுதான். இறந்துபோனவை, இரத்தம், பன்றி போன்றவை அல்லது இறைவன் அல்லாத வேறு யாருடைய பெயராலும் அறுக்கப்பட்ட விலங்கு போன்றவை. பசி, நோய் அல்லது சூழ்நிலைகளின் அழுத்தம் ஒருவரை அதைப் பயன்படுத்தக் கட்டாயப்படுத்தினால் அவசர காலத்தில், ஒருவர் தடைசெய்யப்பட்ட உணவை உண்ணலாம். இருப்பினும், அவர் தடைசெய்யப்பட்டதை விருப்பத்தோடு உண்ணக்கூடாது, அதைப்போலவே உண்மையான தேவைக்கு அதிகமாக உட்கொள்ளக்கூடாது என்பது முக்கியம்.

இத்தகைய மூடநம்பிக்கைகளைக் கொண்ட கோட்பாடுகள் பொதுமக்களின் மதமாக மாறும்போது, அறிஞர்கள் நிலை என்னவாகும் என்றால் அதைப் பற்றிய இறைவனின் கட்டளையை அறிந்திருந்தும், அதை அறிவிக்கப் பயப்படத் தொடங்கிவிடுவார்கள். ஏனென்றால் எந்த மக்களுக்கு நடுவே பிரபலமடைந்து அவர்கள் 'பெரியவர்களாக' மாறினார்களோ அந்த மக்களிடமிருந்து துண்டிக்கப்படுவார்கள் என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்படுகிறது. வழிதவறிய மக்களுடன் சமரசம் செய்து கொள்வது அவர்களுக்கு இவ்வுலகில் கண்ணியத்தையும் செல்வத்தையும் அளித்து விட்டாலும், இறைவனின் பார்வையில், அத்தகையவர்கள் மிகவும் மோசமான குற்றவாளிகள். உண்மையை உலகியல் காரணங்களுக்காக மறைப்பதென்பது மறுமையில் இறைவன் மன்னிக்கும் தவறுகளில் ஒன்றல்ல. இவை எப்படிப் பட்ட குற்றங்கள் எனில் இறைவனின் அருட்பார்வையிலிருந்து விலக்கி ஒரு மனிதனை இழப்புக்குரியவனாக ஆக்கிவிடுபவை. அவர்களில் இன்னும் மோசமானவர்கள், உண்மை முன்வைக்கப்படும் போதெல்லாம்,

அதை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அதில் பொருளற்ற விவாதங்களைத் தொடங்கி விடுவார்கள். அத்தகையவர்களுக்குள் பிடிவாத உளவியல் பிறந்து விடுகிறது. இறுதியில் அவர்கள் சத்தியத்திலிருந்து எவ்வளவு தொலைவில் போய்விடுகிறார்கள் என்றால், அவர்கள் ஒருபோதும் அதன் பக்கம் திரும்புவதில்லை என்பதுதான்.

لَيْسَ الْبِرَّ اَنْ تُوَلُّوْا وُجُوْهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ وَلٰكِنَّ
الْبِرَّ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَالْمَلٰٓئِكَةِ وَالْكِتٰبِ
وَالنَّبِيّٖنَ ۚ وَاٰتَى الْمَالَ عَلٰى حُبِّهٖ ذَوِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَ
الْمَسٰكِيْنَ وَابْنَ السَّبِيْلِ ۙ وَالسَّآئِلِيْنَ وَ فِى الرِّقَابِ ۚ وَاَقَامَ
الصَّلٰوةَ وَاٰتَى الزَّكٰوةَ ۚ وَالْمُوْفُوْنَ بِعَهْدِهِمْ اِذَا عٰهَدُوْا ۚ
وَالصّٰبِرِيْنَ فِى الْبَاْسَآءِ وَالضَّرَّآءِ وَحِيْنَ الْبَاْسِ ؕ اُولٰٓئِكَ الَّذِيْنَ
صَدَقُوْا ؕ وَاُولٰٓئِكَ هُمُ الْمُتَّقُوْنَ ﴿۱۷۷﴾

[177]நன்மை என்பது உங்கள் முகங்களைக் கிழக்கிலோ மேற்கிலோ திருப்பிக்கொள்வதில் இல்லை. மாறாக நன்மை என்பது ஒருவர் அல்லாஹ்வின் மீதும், மறுமை நாளின் மீதும், வானவர்களின் மீதும், வேதத்தின் மீதும் தூதர்களின் மீதும் நம்பிக்கை கொள்வதாகும். நல்லோர் (யாரெனில்) அல்லாஹ்வின் மீதுள்ள அன்பால் உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் இரப்போருக்கும் அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும் தம் செல்வத்தைச் செலவு செய்வோர், தொழுகையைக் கடைப்பிடித்துக் கடமையாக்கப்பட்ட கொடையை அளிப்போர், வாக்குறுதி அளித்தால் அதனை நிறைவேற்றுவோர், வறுமைத் துயரத்திலும் (நோய் நொடித்) துன்பத்திலும் போர்க் காலத்திலும் பொறுமை காப்போர் ஆகியோர்களே ஆவர். இத்தகையோர்தாம் உண்மையாளர்கள்; இவர்கள்தாம் இறையச்சமுடையவர்கள்.

யூதர்கள் மேற்கைத் தங்கள் வணக்கத்திற்கான முன்னோக்கு திசையாகவும், கிறிஸ்தவர்கள் கிழக்கைத் தங்கள் முன்னோக்கு திசையாகவும் ஆக்கிக் கொண்டிருந்தனர். இருவரும் தங்கள் முன்னோக்கு திசைகளைப் புனிதமான

திசைகளாகக் கருதினர். இறைவனின் புனிதத் திசையைத் தங்கள் முன்னோக்கு திசையாக ஆக்கிக் கொண்டதன் மூலம் இறைவனின் முன்னிலையில் தங்கள் தகுதியைப் பாதுகாத்துக் கொண்டதாக இரு பிரிவினருக்கும் நம்பிக்கை இருந்தது. ஆனால் இறைவனை வழிபடுவதென்பது மனிதன் ஒரு புனிதத் தூணைப் பற்றிக் கொள்வதைப் போன்றது அல்ல. மாறாக, இறைவனை வழிபடுவதென்பது ஒரு மனிதன் இறைத்தொடர்பைப் பற்றிக் கொள்வதாகும். மார்க்க நடைமுறைக்கு ஒரு வெளிப்புறத் தோற்றம் உண்டு எனினும், அது உண்மையில், வானம், பூமி ஆகியவற்றின் ஒளியாகவும், மனிதனுடைய, பிடரி நரம்பைவிட அருகில் இருப்பவனாகவும் உள்ள இறைவனை அடைவதாகும். இறைவனிடம் ஒருவனை ஏற்புடையவனாக்குபவை புறவயமான விஷயங்கள் அல்ல; மாறாக, அவன் தன் மொத்த இருப்புடன் முழுமையாக இறைவனுக்காகவே செய்யும் செயல்கள்தான். இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடியான் எனப்படுபவன், தனது முழு இருப்பிலும் நுழைந்து விட்டதுபோல் இறைவனைக் கண்டடைய வேண்டும். அவன் மனிதனின் உணர்வு நிலையில் கலந்து விடவேண்டும்; அவன் மனிதனின் பொருளுக்கும் செல்வத்திற்கும் உரிமையாளனாகிவிட வேண்டும். அவனது நினைவுகளில் ஊடுருவி விட வேண்டும். இறைவன் அவனது குணநலனைச் சூழந்திருக்க வேண்டும். மிகவும் கடினமான நேரங்களிலும் கூட, இறைவனின் கயிறு அவனது கையிலிருந்து நழுவி விடாத வகையில் ஒரு மனிதன் இறைவனைப் பற்றிக்கொள்ள வேண்டும். இறைவன் மீதான உரிமை உண்மையான விசுவாசத்தின் மூலம் நிறைவேற்றப்படுகிறதே அன்றி, வெறுமனே இந்தப் பக்கமோ அந்தப் பக்கமோ முகத்தைத் திருப்பிக்கொள்வதால் அல்ல.

இறைவனின் மீது நம்பிக்கை கொள்வதென்பது ஒரு மனிதன் இறைவனைத் தனது எல்லாமுமாக ஆக்கிக் கொள்வதாகும். மறுமை நாளை நம்புவதென்பது, மனிதன் இவ்வுலக வாழ்க்கையை விட மறுமை வாழ்க்கையை உண்மையான பிரச்சினையாகக் கருதத் தொடங்குவதைக் குறிக்கிறது. வானவர்களை நம்புவதென்பது இறைவனின் கட்டளைப்படி உலகை நிர்வகிக்கும் இறைவனின் முகவர்களை நம்புவதாகும். வேதத்தின் மீது நம்பிக்கை கொள்வதென்பது, இறைவன் மனிதனுக்குத் தனது வழிகாட்டுதலை அனுப்பியுள்ளான் என்றும், அதைப் பின்பற்ற வேண்டும் என்றும் ஒரு மனிதன் நம்புவதாகும். இறைத்தூதர்கள் மீது நம்பிக்கை கொள்வதென்பது இறைவனின் அடியார்களை இறைவன் தனது செய்தியை அறிவிக்கத் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வதாகும். பின்னர் இந்த நம்பிக்கைகள் ஒரு மனிதனுக்குள் ஆழமாக இறங்கி, இறைவன் மீதுள்ள அன்பு பற்று ஆகியவற்றின் காரணத்தினால், அவன் தனது செல்வத்தை ஏழைகளுக்குக் கொடுத்து, மக்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்ற வேண்டும்.

தொழுகையை நிலைநாட்டுவதென்பது இறைவனுக்கு முன் முழுமையாகச் சரணடைவதாகும். கடமையாக்கப்பட்ட கொடையை அளிப்பது ஒருவரின் செல்வத்தில் இறைவனின் நிரந்தரப் பங்கை ஒப்புக்கொள்வதாகும். இப்படிப்பட்ட ஓர் அடியான் ஒரு வாக்குறுதியை அளித்தால், அதிலிருந்து அவனுக்குப் பின்வாங்கத் தெரியாது. ஏனென்றால் அவன் ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் இறைவனுடன் செய்யப்பட்ட ஒப்பந்தமாகக் கருதுகிறான். அவனுக்கு இறைவன் மீது எந்த அளவுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விடுகிறதென்றால், சிரமங்கள், பிரச்சனைகள் போன்றவை ஏற்பட்டாலும் போர்ச் சூழல் ஏற்பட்டாலும் அவன் இறை வழிபாட்டுப் பாதையில் உறுதியுடன் நிலைத்திருக்கிறான். இந்த குணங்கள் யாரிடம் உருவாகி விடுகின்றனவோ அவனே உண்மையான நம்பிக்கையாளன். உண்மையான நம்பிக்கையாளன் இறைவனுக்கு அஞ்சுபவனாக இருப்பானே அன்றி எந்தப் பொய்யான ஆதரவையும் நம்பி, அவனுக்கு அஞ்சாதவனாக இருக்க மாட்டான்.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الْقِصَاصُ فِي الْقَتْلٰى ؕ اَلْحُرُّ
بِالْحُرِّ وَالْعَبْدُ بِالْعَبْدِ وَالْاُنْثٰى بِالْاُنْثٰى ؕ فَمَنْ عُفِيَ لَهٗ مِنْ
اَخِيْهِ شَيْءٌ فَاتِّبَاعٌ بِالْمَعْرُوْفِ وَاَدَآءٌ اِلَيْهِ بِاِحْسَانٍ ؕ ذٰلِكَ
تَخْفِيْفٌ مِّنْ رَّبِّكُمْ وَرَحْمَةٌ ؕ فَمَنِ اعْتَدٰى بَعْدَ ذٰلِكَ فَلَهٗ
عَذَابٌ اَلِيْمٌ ﴿۱۷۸﴾ وَلَكُمْ فِي الْقِصَاصِ حَيٰوةٌ يّٰۤاُولِي الْاَلْبَابِ لَعَلَّكُمْ
تَتَّقُوْنَ ﴿۱۷۹﴾ كُتِبَ عَلَيْكُمْ اِذَا حَضَرَ اَحَدَكُمُ الْمَوْتُ اِنْ تَرَكَ
خَيْرَا ۖ۟ الْوَصِيَّةُ لِلْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ بِالْمَعْرُوْفِ ۚ حَقًّا عَلَى
الْمُتَّقِيْنَ ﴿۱۸۰﴾ فَمَنْۢ بَدَّلَهٗ بَعْدَ مَا سَمِعَهٗ فَاِنَّمَاۤ اِثْمُهٗ عَلَى الَّذِيْنَ
يُبَدِّلُوْنَهٗ ؕ اِنَّ اللّٰهَ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۱۸۱﴾ فَمَنْ خَافَ مِنْ مُّوْصٍ جَنَفًا
اَوْ اِثْمًا فَاَصْلَحَ بَيْنَهُمْ فَلَاۤ اِثْمَ عَلَيْهِ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۸۲﴾

[178]நம்பிக்கையாளர்களே! கொலை செய்யப்பட்டவர்களுக்காகப் பழிவாங்கு(ம் போது நேர்மையுடன் நடந்துகொள்)வது உங்கள்மீது விதியாக்கப்பட்டுள்ளது. (கொல்லப்பட்ட) சுதந்திரமானவனுக்குப் பதிலாக(க் கொலைசெய்த) சுதந்திரமானவன்,

(கொல்லப்பட்ட) அடிமைக்குப் பதிலாக(க் கொலைசெய்த) அடிமை, (கொல்லப்பட்ட) பெண்ணுக்குப் பதிலாக(க் கொலைசெய்த) பெண் (எனக் கொலையாளிகளே பழிவாங்கப்பட வேண்டும்). எனினும் கொலை செய்யப்பட்டவருடைய சகோதர (உறவின)ரிடமிருந்து (கொலை செய்த) அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டு விட்டால் அவர் (இழப்பீடு வழங்குவதில்) வழக்கமான முறையைப் பின்பற்றி நன்றியுடன் அதனை நிறைவேற்ற வேண்டும். இது உங்கள் இறைவனிடமிருந்து கிடைத்துள்ள சலுகையும் அருளுமாகும். இதற்குப் பின்னரும் எவர் வரம்பு மீறுகிறாரோ அவருக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டு. [179]அறிவுடையோரே! (சட்டப்படி) பழிவாங்குவதில் உங்களுக்கு வாழ்வுள்ளது. இதனால் நீங்கள் (கொலைசெய்ய எண்ணுபவரும் கொலை செய்யக் கருதப்பட்டவரும்) தப்பித்துக் கொள்ளலாம். [180]உங்களில் ஒருவருக்குச் சாவு நெருங்கிவிட்டால் - அவர் தமக்குப் பின் பொருளை விட்டுச் செல்பவராக இருப்பின் - முறைப்படி தம் பெற்றோருக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் 'இறுதி விருப்பம்' தெரிவித்துவிடுவது விதியாக்கப்பட்டுள்ளது. இறையச்சமுடையோர்களுக்கு இது கடமையாகும். [181]அதனைச் செவியுற்றவர் பிறகு அதனை மாற்றி விட்டால் அப்பாவமெல்லாம் மாற்றியவர் மீதுதான் (சாரும்). உறுதியாக அல்லாஹ் செவிமடுப்பவன்; முற்றும் அறிந்தவன். [182]இறுதி விருப்பம் தெரிவிப்பவர் விருப்புவெறுப்புக் காட்டுபவர் அல்லது அநீதி இழைப்பவர் என்று யாரேனும் அஞ்சி, அவ(ருடைய உறவின)ர்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி (அதனை மாற்றி) விட்டால் அவர்மீது எந்தக் குற்றமுமில்லை. அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன்.

கொலை வழக்கில், பழிவாங்கும் கொள்கை இஸ்லாத்தில் நடைமுறை ஆக்கப்பட்டுள்ளது. அதாவது, கொல்லப்பட்டவருக்குச் செய்ததையே கொலை செய்தவனுக்கும் செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு புறம், இது கொலைச் செயலைத் தடுக்கிறது. ஏனென்றால் ஒருவனின் சொந்த உயிர் பயம் இன்னொருவரின் உயிரைப் பறிப்பதிலிருந்து தடுக்கிறது. இதன் விளைவாக, உயிர்கள் அனைத்தும் பாதுகாப்புப் பெறுகின்றன. கொலைகாரன் ஒருவன் கொல்லப்படுவது முழு சமூகத்திற்கும் வாழ்க்கைக்கான உத்தரவாதமாக ஆகிறது. மறுபுறம் இறந்தவருடைய வாரிசுகளின் பழிவாங்கும் உணர்ச்சி சமனப்படுகிறது. சமூகத்தில் அழிவுக்குரிய எந்தவொரு புதிய நடவடிக்கைக்கான சாத்தியத்தையும் முடிவுக்குக்கொண்டுவந்து விடுகிறது.

என்றாலும் இஸ்லாத்தில் பழிவாங்கும் செயல் விருப்பத் தீர்வுக்கு உரியதாக இருக்கிறது.

இறந்தவரின் வாரிசுகள் விரும்பினால் கொலையாளியைக் கொல்லலாம்; அவர்கள் விரும்பினால் இழப்புத் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்; விரும்பினால் அவரை மன்னிக்கவும் செய்யலாம். இந்த வாய்ப்புக்கான குறிப்பிட்ட நோக்கம், இஸ்லாமிய சமூகத்தில் ஒருவரையொருவர் சகோதரர்களாகக் கருதும் சூழல் நிலைத்திருக்க வேண்டும் என்பதும் எந்த நிலையிலும் ஒருவரையொருவர் பகைவர்களாகக் கருதும் சூழல் உருவாக்கக் கூடாது என்பதும்தான். மேலும், இழப்புத் தொகைக்கான கொள்கையின் ஒரு தனிப்பட்ட நன்மை என்னவென்றால் கொலை செய்யப்பட்டவரின் வாரிசுகளுக்குத் தங்களை விட்டுச் சென்று விட்ட குடும்ப உறுப்பினருக்கான நிதி சார்ந்த ஒரு மாற்று கிடைத்து விடுகிறது

ஒருவர் இறந்து விடும் போது, அவர்களின் பரம்பரைச் சொத்தை என்ன செய்வது என்ற கேள்வி எழுகிறது. இது தொடர்பாக இஸ்லாத்தின் கொள்கை என்னவென்றால், அவர் விட்டுச்சென்ற சொத்தை அவரது உறவினர்களிடையே, அறியப்பட்ட நீதியான முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும். இது செல்வம் தொடர்பான இறையச்சம் போன்றது. அல்லது இறந்து விடுபவர்கள் விட்டுச் செல்லும் சொத்தில் ஒவ்வொரு பங்கும் அவர்களுடைய உறவினர்களைச் சென்றடைந்து விடும்போது அதன் மூலமாக அந்தச் சொத்து தரப்பட வேண்டியவர்களுக்கெல்லாம் நீதியான முறைப்படி தரப்பட்டு விட்டது என்ற சூழல் உருவாகி விடுகிறது. இவ்வாறு குடும்பத்திற்குள் மரபு வழியிலான சொத்தைப் பெறுவதற்காக உட்பூசல் பிறக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. ஒரு குடும்ப உறுப்பினர் சட்டப்பூர்வமாக வாரிசாகக் கருதப்படாமல், தார்மீக ரீதியாகத் தகுதியானவராக இருந்தால், இறந்தவர் இந்த வெற்றிடத்தை ஓர் மரண சாசனம் மூலம் நிரப்பியிருக்க வேண்டும். (இங்கே வாரிசுரிமை பற்றி அறியப்பட்ட முறைப்படி இறுதி விருப்பம் தெரிவிக்கக் கட்டளையிடப்பட்டுள்ளது. வரவிருக்கும் பெண்கள் (அன்னிஸா) எனும் அத்தியாயத்தில், ஒவ்வொருவரின் பங்கும் சட்டப்பூர்வமாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.)

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى
الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿۱۸۳﴾ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ؕ فَمَنْ
كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ وَعَلَى

الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍ ؕ فَمَنْ تَطَوَّعَ خَيْرًا
فَهُوَ خَيْرٌ لَّهٗ ؕ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۱۸۴﴾
شَهْرُ رَمَضَانَ الَّذِيْۤ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَ
بَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ۚ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ
فَلْيَصُمْهُ ؕ وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ
اُخَرَ ؕ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ ۫ وَلِتُكْمِلُوا
الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿۱۸۵﴾

[183]நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்பிருந்தோர் மீது கடமையாக்கப்பட்டதைப் போன்றே உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுடையோராகலாம். [184]இது குறிப்பிட்ட சில நாட்களில் (நோன்பு) நோற்பதாகும். ஆயினும் உங்களில் யாரேனும் நோயாளியாகவோ, பயணத்திலோ இருந்தால் அவர் வேறு நாட்களில் கணக்கிட்டு நோன்பு நோற்றுக்கொள்ள வேண்டும். எவரெல்லாம் நோற்பதைக் கடினமாக உணர்கிறார்களோ அவர்கள் ஒரு நோன்புக்கு ஈடாக ஓர் ஏழைக்கு உணவளிக்க வேண்டும். எவரேனும் (அதற்கும்) மிகுதியாக நன்மைகள் புரிந்தால் அது அவருக்கே சிறந்ததாகும். நீங்கள் (நோன்பின் பயனை) அறிந்தவர்களாக இருந்தால் (ஈடுசெய்வதைவிட) நோன்பு நோற்பதே உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். [185]ரமலான் மாதத்தில்தான் குர்ஆன் அருளப்பட்டது. அது மக்களுக்கு வழிகாட்டியாகவும் நேர்வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிவிப்பதாகவும் இருக்கிறது. எனவே உங்களில் அம்மாதத்தை அடைபவர் நோன்பு நோற்கட்டும். ஒருவர் நோயாளியாக அல்லது பயணத்தில் இருப்பவராக இருந்தால் அவர் வேறு நாட்களில் கணக்கிட்டு (நோன்பு நோற்று)க்கொள்ளட்டும். அல்லாஹ் உங்களுக்கு எளிதானதையே விரும்புகிறான்; அவன் உங்களுக்குச் சிரமம் தர விரும்பவில்லை. இதற்குக் காரணம் (நோன்புநாள்) எண்ணிக்கையை நீங்கள் நிறைவு செய்யவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழிகாட்டியதற்காக அவனைப் பெருமைப்படுத்தவும் (அவனுக்கு) நீங்கள் நன்றியுள்ளவராகவுமேயாகும்.

நோன்பு என்பது ஒரே நேரத்தில் இரண்டு விஷயங்களுக்கான பயிற்சி. ஒன்று நன்றியுணர்வு, மற்றொன்று இறையச்சம். உணவும் நீரும் இறைவனுடைய மிகப்பெரிய அருட்கொடைகளாகும். ஆனால் சாதாரண சூழ்நிலைகளில், மனிதன் இதை உணர்வதில்லை. நோன்பின்போது, நாள் முழுவதும் இவற்றைத் தவிர்த்து, சூரியன் மறைந்த பிறகு கடுமையான பசி தாகம் மிகுந்த நிலையில் உணவு உண்கிறான், தண்ணீர் அருந்துகிறான். அப்போது, இந்த உணவும் தண்ணீரும் இறைவனுடைய எவ்வளவு பெரிய அருட்கொடைகள் என்பதை அவன் உணர்கிறான். இந்த அனுபவம் அவனுக்குள் இறைவனுக்கான அளவு கடந்த நன்றியுணர்வை உருவாக்குகிறது. மறுபுறம், இந்த நோன்பு மனிதனுக்கு இறையச்சத்திற்கான பயிற்சியாகவும் இருக்கிறது. இறைவன் இவ்வுலக வாழ்க்கையில் தடை செய்தவற்றை மனிதன் தவிர்ப்பதே இறையச்சம். இறைவன் தடை செய்தவற்றை அவன் தவிர்த்து, இறைவன் அனுமதித்தவற்றைச் செய்ய வேண்டும். நோன்பின் போது, இரவில் மட்டும் உண்பதும் பகலில் உண்ணுதல் பருகுதல் அகியவற்றைத் தவிர்ப்பதும் இறைவனைத் தன்னுடைய கண்காணிப்பாளனாக ஆக்கிக் கொள்வதன் பயிற்சி போன்றது. நம்பிக்கையாளரின் முழு வாழ்க்கையும் ஒரு வகையான நோன்புநிலை வாழ்க்கையாகும். ரமலான் மாதத்தில், தற்காலிகமாகச் சில நடைமுறைகளைத் தடைசெய்வதன் மூலம், மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் தன் இறைவனுக்குப் பிடிக்காதவற்றைக் கைவிடப் பயிற்றுவிக்கப்படுகிறான். குர்ஆன் ஏக இறைவன் ஓர் அடியானுக்கு அருளிய வெகுமதியாகும், மேலும் நோன்பு என்பது இந்த வெகுமதியை அந்த அடியான் நடைமுறை ரீதியாக ஏற்றுக்கொள்வதாகும். நோன்பின் மூலம், அடியான் தன்னைத் தானே இறைவனுக்கு நன்றி செலுத்தும் தகுதி யுள்ளவனாக மாற்றிக் கொள்கிறான், குர்ஆன் பரிந்துரைக்கும் முறைப்படி இவ்வுலகில் ஓர் இறையச்சமுள்ள வாழ்க்கையை வாழும் ஆற்றலை வளர்த்துக் கொள்கிறான்.

நோன்பினால் இதயங்களில் மென்மையும் பணிவும் (modesty) உருவாகிறது. இவ்வாறு, நோன்பு ஒரு மனிதனுக்குள் இறைவன் தனது அடியார்களிடம் எதிர்பார்ப்பவற்றை அவன் உணரும் திறனை உருவாக்குகிறது. நோன்பின் கடுமையான பயிற்சி, ஒரு மனிதனுக்கு எந்த அளவுக்குத் தகுதியை வழங்குகிறதென்றால், இறைவனுக்கு நன்றி செலுத்துவதில் அவன் நெஞ்சு துடிகிறது; இறைவனின் அச்சத்தால் அவனுக்குள் நடுக்கம் உருவாகிறது; மனிதன் இந்த உளவியல் நிலையை அடையும் அதே நேரத்தில், அவன் எத்தகைய ஆற்றலைப் பெறுகிறான் என்றால் இறைவனின் அருட்கொடைகளுக்கு இதயத் துடிப்பையும் உள்ளடக்கிய வகையில் நன்றி செலுத்தும் அளவிற்கு அவன் தகுதியுடையவன்

ஆகிறான். அவனது இறையச்சத்தின் அனுபவம் மெய்சிலிர்த்துப் போகும் அளவிற்கு இருக்கும். அவன் ஏக இறைவனை எந்த அளவிற்குப் பெரியவன் எனும் தகுதியில் காண்கிறான் என்றால், அதில் தன்னுடைய இருப்பு முற்றிலும் சிறியதாகிவிட்டதாக அவனுக்குத் தோன்றுகிறது.

وَ اِذَا سَاَلَكَ عِبَادِیْ عَنِّیْ فَاِنِّیْ قَرِیْبٌ ؕ اُجِیْبُ دَعْوَةَ
الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلْیَسْتَجِیْبُوْا لِیْ وَلْیُؤْمِنُوْا بِیْ لَعَلَّهُمْ
یَرْشُدُوْنَ ﴿۱۸۶﴾ اُحِلَّ لَكُمْ لَیْلَةَ الصِّیَامِ الرَّفَثُ اِلٰی نِسَآىِٕكُمْ ؕ
هُنَّ لِبَاسٌ لَّكُمْ وَاَنْتُمْ لِبَاسٌ لَّهُنَّ ؕ عَلِمَ اللّٰهُ اَنَّكُمْ كُنْتُمْ
تَخْتَانُوْنَ اَنْفُسَكُمْ فَتَابَ عَلَیْكُمْ وَعَفَا عَنْكُمْ ۚ فَالْـٰٔنَ
بَاشِرُوْهُنَّ وَابْتَغُوْا مَا كَتَبَ اللّٰهُ لَكُمْ ۪ وَكُلُوْا وَاشْرَبُوْا
حَتّٰی یَتَبَیَّنَ لَكُمُ الْخَیْطُ الْاَبْیَضُ مِنَ الْخَیْطِ الْاَسْوَدِ مِنَ
الْفَجْرِ ۪ ثُمَّ اَتِمُّوا الصِّیَامَ اِلَی الَّیْلِ ۚ وَلَا تُبَاشِرُوْهُنَّ وَ
اَنْتُمْ عٰكِفُوْنَ ۙ فِی الْمَسٰجِدِ ؕ تِلْكَ حُدُوْدُ اللّٰهِ فَلَا تَقْرَبُوْهَا ؕ
كَذٰلِكَ یُبَیِّنُ اللّٰهُ اٰیٰتِهٖ لِلنَّاسِ لَعَلَّهُمْ یَتَّقُوْنَ ﴿۱۸۷﴾ وَلَا
تَاْكُلُوْۤا اَمْوَالَكُمْ بَیْنَكُمْ بِالْبَاطِلِ وَتُدْلُوْا بِهَاۤ اِلَی الْحُكَّامِ
لِتَاْكُلُوْا فَرِیْقًا مِّنْ اَمْوَالِ النَّاسِ بِالْاِثْمِ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۱۸۸﴾ ع ۲۳

[186](நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால், ''நான் மிக அருகிலேயே இருக்கிறேன். என்னை அழைப்பவருக்கு (அப்போதே) நான் பதிலளிக்கிறேன். எனவே அவர்கள் என் கட்டளையை ஏற்றுக்கொள்ளட்டும்; என்மீதே நம்பிக்கை வைக்கட்டும். அதனால் அவர்கள் நேர்வழி பெறுவர்'' என்று கூறுவீராக! [187](நம்பிக்கையாளர்களே!) நோன்புக்கால இரவில் உங்கள் மனைவியருடன் கூடுவது உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள். நீங்கள் உங்களையே ஏமாற்றிக்

கொண்டிருந்ததை அல்லாஹ் அறிந்துகொண்டான். எனவே அவன் உங்கள்மீது அருள்புரிந்து உங்களை மன்னித்து விட்டான். இனி இரவில் நீங்கள் (விரும்பினால்) அவர்களுடன் கூடுங்கள். அல்லாஹ் உங்களுக்காக விதித்திருப்பதைத் தேடிக்கொள்ளுங்கள். (இரவு எனும்) கருப்பு நூலிலிருந்து வைகறை (எனும்) வெள்ளைநூல் பிரியும் வரை உண்ணுங்கள், பருகுங்கள். பின்னர் இரவு வரும் வரை நோன்பை நிறைவு செய்யுங்கள். நீங்கள் பள்ளிவாசல்களில் தங்கி (இஃதிகாஃப்) இருக்கும் நிலையில் மனைவியருடன் கூடாதீர்கள். இவை இறைவரம்புகளாகும். எனவே இவற்றை மீறாதீர்கள். மக்கள் தங்களைக் காத்துக்கொள்ளும் பொருட்டு இவ்வாறு தன் வசனங்களை அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான். [188]***உங்களுக்கிடையே (ஒருவர் மற்றொருவருடைய) செல்வத்தைத் தவறான முறையில் உண்ணாதீர்கள். (பிற) மனிதர்களுடைய பொருள்களில் ஒரு பகுதியைப் பாவமான முறையில் உண்பதற்காக அறிந்துகொண்டே அதிகாரிகளை அணுகாதீர்கள்.***

நோன்பு என்பது அதன் இயல்பிலேயே பொறுமையின் செயல்பாடாக இருக்கிறது. பொறுமை, இறைக் கட்டளையை நிறைவேற்றுவதில் உள்ள சிரமங்களைத் தாங்குவதுதான் அது. மனிதனை இறைவனிடம் நெருங்கச் செய்யும் மனநிலைக்குக் கொண்டுசேர்க்கிறது; மேலும் அவனது நாவிலிருந்து ஏற்றுக்கொள்ளத்தக்க வார்த்தைகளை வெளிப்படுத்துகிறது. தன்னை இறைவனிடம் ஒப்படைப்பவனால் மட்டுமே இறைவனை அடைய முடியும். இறைவனுடைய அலைவரிசையோடு ஒத்திருப்பவனுடைய சொற்கள் மட்டுமே இறைவனைச் சென்றடைகின்றன.

மார்க்கச் சட்டம் (ஷரீஆ) மனிதனுக்கு இயற்கைக்கு மாறான எந்தக் கட்டுப்பாடுகளையும் விதிப்பதில்லை. நோன்பின் போது பகலில் இல்லறத்தில் ஈடுபடத் தடை செய்யப்பட்டு இருந்தாலும் இரவில் அதை அனுமதித்திருப்பதும், நோன்பு துறக்கும்(இஃப்தார்) – நோன்பு தொடங்கும் (சஹர்) நேரங்களைத் தீர்மானிக்க மரபு வழியிலான நாட்காட்டியை நம்புவதற்குப் பதிலாக வழக்கமான அவதானிப்புகளை நம்புவதும் இது போன்ற விஷயங்கள்தாம். இறைவன் தனது அடியார்களுக்குச் சிறு சிறு விவரங்களில் சலுகைக்கான இடம் அளித்துப் பொதுவான வரம்புகளைத் தெளிவுபடுத்திவிட்டான். தீர்மானிக்கப்பட்ட வரம்புகளை மனிதன் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். சிறு சிறு விவரக் குறிப்புகளிலும் இறையச்ச உணர்வுக்கு ஏற்ற ஓர் அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும்.

நோன்புக்கான கட்டளையைத் தொடர்ந்து, "செல்வத்தைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்" என்ற கட்டளை, நோன்பின் சாரத்தை விளக்குகிறது. நோன்பின் உண்மையான நோக்கம், இறைவன் விலகியிருக்குமாறு கட்டளையிட்டவற்றிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளும் உணர்வை ஒரு மனிதன் வளர்த்துக் கொள்வதாகும். எதுவரையென்றால், அனுமதிக்கப் பட்டவற்றையே விலக்கிக் கொள்ள வேண்டுமென இறைவன் விரும்பினால், விலக்கிக் கொள்ள நோன்பாளி தயங்கக் கூடாது. இறைக் கட்டளையின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட வருமானம் ஈட்டுவதையே தவிர்க்கும் ஒருவன், இறைவனின் கட்டளையின் அடிப்படையில் அனுமதிக்கப்படாத வருமானம் ஈட்டுவதிலிருந்து விலகிக்கொள்ள மாட்டானா?

இறைநம்பிக்கையாளனின் வாழ்க்கை ஒரு வகையான நோன்புநிலை வாழ்க்கையாகும். இறைநம்பிக்கையாளன் தன் வாழ்க்கை முழுவதிலும் சிலவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டியிருக்கிறது. இதற்கான பயிற்சியே ரமலான் மாதம். நோன்பின் கட்டுப்பாடு மிகுந்த வாழ்க்கையும், அதன் மிகக் கடினமான செயல்பாடும் கற்பிக்கும் பாடம் என்னவென்றால் இறையச்சத்தின் உயர்நிலையில் இறைவனை வணங்குபவன்தான் இறை வணக்கத்தில் ஆழ்ந்திருக்கும் இறையடியான் என்பதே. ஒரு தியாக வாழ்வை வாழ்வதன் மூலம் இறைவனுடன் நெருக்கமாகிறவர்களின் அழைப்பை மட்டுமே இறைவன் ஏற்கிறான்.

يَسْـَٔلُوْنَكَ عَنِ الْاَهِلَّةِ ؕ قُلْ هِيَ مَوَاقِيْتُ لِلنَّاسِ وَالْحَجِّ ؕ
وَلَيْسَ الْبِرُّ بِاَنْ تَاْتُوا الْبُيُوْتَ مِنْ ظُهُوْرِهَا وَلٰكِنَّ
الْبِرَّ مَنِ اتَّقٰى ۚ وَاْتُوا الْبُيُوْتَ مِنْ اَبْوَابِهَا ۪ وَاتَّقُوا
اللّٰهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿۱۸۹﴾ وَقَاتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ الَّذِيْنَ
يُقَاتِلُوْنَكُمْ وَلَا تَعْتَدُوْا ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ ﴿۱۹۰﴾
وَاقْتُلُوْهُمْ حَيْثُ ثَقِفْتُمُوْهُمْ وَاَخْرِجُوْهُمْ مِّنْ حَيْثُ
اَخْرَجُوْكُمْ وَالْفِتْنَةُ اَشَدُّ مِنَ الْقَتْلِ ۚ وَلَا تُقٰتِلُوْهُمْ
عِنْدَ الْمَسْجِدِ الْحَرَامِ حَتّٰى يُقٰتِلُوْكُمْ فِيْهِ ۚ فَاِنْ قٰتَلُوْكُمْ
فَاقْتُلُوْهُمْ ؕ كَذٰلِكَ جَزَآءُ الْكٰفِرِيْنَ ﴿۱۹۱﴾ فَاِنِ انْتَهَوْا
فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۹۲﴾ وَقٰتِلُوْهُمْ حَتّٰى لَا تَكُوْنَ

فِتْنَةٌ وَّيَكُوْنَ الدِّيْنُ لِلّٰهِ ؕ فَاِنِ انْتَهَوْا فَلَا عُدْوَانَ اِلَّا عَلَى الظّٰلِمِيْنَ ﴿۱۹۳﴾

[189](நபியே!) பிறை(யின் நிலை)களைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். 'அவை உங்களுக்குக் காலங்காட்டியாகவும் ஹஜ்ஜுடைய காலத்தை அறிவிக்கக் கூடியவையாகவும் உள்ளன' என்று நீர் கூறுவீராக. (நம்பிக்கையாளர்களே! நீங்கள் ஹஜ், உம்ரா வழிபாடுகளுக்காக இஹ்ராம் அணிந்திருக்கும்போது) வீடுகளுக்குள் அவற்றின் பின்புற வழியாக வருவது (நீங்கள் கருதி வந்ததுபோல) நன்மையானதன்று. மாறாக இறைவனுக்கு அஞ்சுவதே நன்மையாகும். வீடுகளுக்குள் அவற்றின் வாசல்கள் வழியாகவே வாருங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நீங்கள் வெற்றியடைவீர்கள். [190]உங்களுடன் போர் புரிபவர்களுடன் நீங்களும் இறைவழியில் போர்புரியுங்கள். (ஆனால்) வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுவோரை அல்லாஹ் நேசிப்பதில்லை. [191](நம்பிக்கையாளர்களே! உங்களுடன் போரிடும்) அவர்களை எங்குக் கண்டாலும் கொல்லுங்கள். எங்கிருந்து அவர்கள் உங்களை வெளியேற்றினார்களோ அங்கிருந்து அவர்களை நீங்களும் வெளியேற்றுங்கள். கலகம் (விளைவிப்பது) கொலையை விடக் கொடியது. புனித (கஅபா) இறையில்லத்தில் அவர்கள் உங்களுடன் போர் தொடுக்காதவரை நீங்களும் அவர்களுடன் போரிட வேண்டாம். ஆயினும் (அங்கு) அவர்கள் உங்களுடன் போர்தொடுத்தால் அவர்களைக் கொல்லுங்கள். இதுவே மறுப்பாளர்களுக்குரிய தண்டனையாகும். [192]ஆயினும் அவர்கள் விலகிக்கொண்டால் (நீங்களும் விலகிக்கொள்ளுங்கள்.) அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனும் நிகரற்ற அன்பாளனும் ஆவான். [193](மதஒடுக்குமுறை எனும்) குழப்பம் ஒழிந்து மார்க்கம் அல்லாஹ்வுக்கே உரியதாக ஆகும்வரை அவர்களுடன் போரிடுங்கள். அவர்கள் விலகிக் கொண்டால் தீவினையாளர்களைத் தவிர வேறு எவரிடமும் அத்துமீறக் கூடாது.

சந்திரன் வளர்வதும் தேய்வதும் நாட்களைக் கணக்கிடுவதற்குத்தானே அன்றி, மூடநம்பிக்கையுடையோர் நம்புவது போல, வளர்பிறை நாட்கள் அருட்பேறானவை; தேய்பிறை நாட்கள் கெடுபேறானவை என்பதெல்லாம்

அல்ல. இது வானத்தில் தோன்றும் இயற்கையின் நாட்காட்டியாகும். இதன் மூலம் மக்கள் தங்கள் விவகாரங்களையும் வழிபாட்டு அமைப்பையும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இதைப்போலவே, பலர் தவறாகப் புறச் சடங்குகளை மதப்பற்றாக நினைத்துக் கொள்கிறார்கள். ஹஜ்ஜுக்கான இஹ்ராமைக் கட்டிக் கொண்ட பிறகு தனக்கும் வானத்திற்கும் இடையில் ஒரு பொருள் வருவது இஹ்ராமின் ஒழுங்குமுறைக்கு எதிரானது என்று பண்டைய அரபியர்கள் கருதினர். இந்த அனுமானத்தின் அடிப்படையில், அவர்கள் இஹ்ராம் அணிந்து வீட்டை விட்டு வெளியே வந்து விட்டால், அவர்கள் வாயிற்கதவு வழியாக வீட்டிற்குள் மீண்டும் நுழைய மாட்டார்கள். மாறாகச் சுவரின் மேல் ஏறி முற்றத்திற்குள் நுழைவார்கள். ஆனால் இந்த வகையான புற ஒழுக்கத்தின் பெயர் மதப்பற்று அல்ல. ஒரு மனிதன் இறைவனுக்கு அஞ்சி, வாழ்க்கையில் அவன் வரம்புகளுக்குக் கட்டுப்படுவதே மார்க்கமாகும்.

ஒரு நம்பிக்கையாளன் மார்க்கத்தைப் பின்பற்றுபவனாக மட்டுமல்லாமல் மார்க்கத்திற்காகப் போராடுபவனாகவும் இருக்க வேண்டும். இங்கே குறிப்பிட்டுள்ள 'ஜிஹாத்' என்பது இறைத்தூதரின் காலத்தில் நடந்த ஜிஹாத் ஆகும். இறைச் சான்றுகளை முழுமைப்படுத்திய பிறகும் தூதரின் அழைப்பை மறுத்ததன் மூலம் அரேபியாவின் இணை வைப்பாளர்கள் தங்கள் வாழ்வுரிமையை இழந்து விட்டிருந்தனர். மேலும் அவர்கள் வலியத் தொடங்கிய தாக்குதல் அவர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையைச் சரியென நிரூபித்துவிட்டது. இதன் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக வாளை எடுக்கக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. "மத ஒடுக்குமுறை எனும் குழப்பம் ஒழிந்து மார்க்கம் அல்லாஹ்வுக்கே உரியதாக ஆகும் வரை அவர்களுடன் போரிடுங்கள்" என்பதன் பொருள் மத ஒடுக்குமுறை முடிவுக்கு வந்து, மதம் சார்ந்த வாழ்வு நடைமுறைகளில் மனிதனுக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பதாகும். இந்தக் கட்டளையின் மூலம் ஏக இறைவன் அரேபியாவை ஏகத்துவத்தின் நிரந்தர மையமாக மாற்றி விட்டான்.

ஏற்கனவே எதிர்த் தரப்பினரால் தாக்குதல் தொடங்கப்பட்டிருந்தால் மட்டுமே நம்பிக்கையாளர்களுக்குப் போரை நடத்த அனுமதி உண்டு. இரண்டாவதாக, நம்பிக்கையாளர்களுக்கு மேலாதிக்கம் கிடைத்துவிட்டால், கடந்த காலக் குற்றங்களுக்காக யாருக்கும் எந்தத் தண்டனையும் இல்லை. சரணடைந்தவுடன் கடந்த காலக் குற்றங்கள் மன்னிக்கப்பட்டுவிடும். இதன் பிறகு, எதிர்வரும்காலத்தில் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்பவன் மட்டுமே தண்டனைக்குத் தகுதியுடையவனாக இருப்பான். சாதாரணச் சூழ்நிலைகளில் கொலை செய்யப்படுவதற்கான கட்டளை வேறு, போர்ச் சூழலில் இதற்கான கட்டளை வேறு.

اَلشَّهْرُ الْحَرَامُ بِالشَّهْرِ الْحَرَامِ وَالْحُرُمٰتُ قِصَاصٌ ؕ فَمَنِ
اعْتَدٰى عَلَيْكُمْ فَاعْتَدُوْا عَلَيْهِ بِمِثْلِ مَا اعْتَدٰى عَلَيْكُمْ ۪ وَاتَّقُوا
اللّٰهَ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ مَعَ الْمُتَّقِيْنَ ﴿۱۹۴﴾ وَاَنْفِقُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ وَ
لَا تُلْقُوْا بِاَيْدِيْكُمْ اِلَى التَّهْلُكَةِ ۛۚ وَاَحْسِنُوْا ۛۚ اِنَّ اللّٰهَ يُحِبُّ ؏
الْمُحْسِنِيْنَ ﴿۱۹۵﴾

[194](போர் செய்வது விலக்கப்பட்டுள்ள) புனிதமான மாதத்திற்குப் புனித மாதமே ஈடாகும். புனிதங்களுக்கும் ஈடு உண்டு. எனவே யாரேனும் (புனித மாதத்தில்) உங்கள் மீது வரம்புமீறினால் அவர் வரம்பு மீறிய விதத்திலேயே (அதே அளவில்) நீங்களும் (அம்மாதத்தில்) அவர்மீது வரம்புமீறுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அல்லாஹ் இறையச்சமுடையோருடன் இருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளுங்கள். [195]இறைவழியில் (அறச்) செலவு செய்யுங்கள். அவ்வாறு செய்யாமல் உங்கள் கைகளாலேயே உங்களுக்கு அழிவைத் தேடிக்கொள்ளாதீர்கள். நல்லமுறையில் செயலாற்றுங்கள். நல்லமுறையில் செயலாற்றுபவர்களையே அல்லாஹ் நேசிக்கிறான்.

புனித மாதங்களில் (முஹர்ரம், ரஜப், துல்-கஅதா, துல்-ஹிஜ்ஜா) அல்லது புனித நகரமான மக்காவின் எல்லைக்குள் சண்டையிடுவது பாவமாகும். ஆனால் இஸ்லாத்தின் பகைவர்கள் உங்களுக்கு எதிரான நடவடிக்கையின்போது அதன் கண்ணியத்தைச் சிதைத்தால், பழிவாங்கும் நடவடிக்கையாக அவர்களின் கண்ணியத்தைப் புறக்கணித்தால் உங்களுக்கும் உரிமை உண்டு. ஆனால் பகைவனுடனான பகைமையின் முன் நீங்கள் இறைவன் மீது அச்சம் கொள்ளாமல் போய்விடக்கூடாது. நீங்கள் எந்தவொரு வரம்பையும் மீறுவதில் உங்கள் சார்பாக முந்தாதீர்கள்; தேவைக்கு அதிகமாக எந்த முன்னெடுப்பையும் எடுக்காதீர்கள்; ஆத்திரமூட்டப்படும் நேரங்களிலும் கூட இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளைப் பின்பற்றும் போதுதான் ஒருவனுக்கு இறை உதவி கிடைக்கிறது.

பழிவாங்கலுக்கும் அநீதிக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், பழிவாங்கலானது எதிர்த் தரப்பினர் செய்த தவறுக்குச் சமமாகவும் அதே அளவிலும் இருக்கும், ஆனால் இந்த எல்லைகளைத் தாண்டிச் சென்றுவிடுவதற்குப் பெயர்தான் அநீதி என்பது. மனிதனுக்கு இன்னொரு

மனிதனால் துன்பம் ஏற்பட்டால், தான் அனுபவித்த அதே துன்பத்தை அந்த மனிதனுக்கு அவன் ஏற்படுத்தலாம். ஆனால் அதற்கு மேல் அனுமதி இல்லை. ஒருவருடைய அறிவுரை பிடிக்கவில்லை என்றால் தகாத வார்த்தைகளால் பேசுவதும், ஏளனம் செய்வதும், சொற்களாலும் எழுதுகோலாலும் செய்யப்பட்ட முறையீட்டிற்குப் பதிலாக வலிய அத்து மீறுவதும் இறையச்சத்திற்கு முற்றிலும் எதிரானது. இதைப்போலவே பொருள் இழப்புக்குப் பதிலாக உயிரிழப்பு, சிறு காயத்திற்குப் பதிலாக பெரிய காயம், ஒரு கொலைக்குப் பதிலாகப் பல கொலைகள், போன்ற அனைத்தும் கொடுமைக்கான வரையறையின் கீழ் வருகின்றன. ஒரு முஸ்லிமுக்குச் சரிசமமான பழிவாங்கல் (ஃகிசாஸ்) அனுமதிக்கப்பட்டது. ஆனால் கொடுமை இழைப்பதற்கு எந்தச் சூழ்நிலையிலும் அனுமதி இல்லை.

இறைவனின் பாதையில் கடும் முயற்சி புரிய மிகவும் தேவையானது செல்வம். செல்வத்தைத் தியாகம் செய்வது ஐயமின்றி ஒரு மனிதனுக்கு மிகவும் கடினமான செயலாகும். எனவே, இறைப்பணியை உங்கள் சொந்தப் பணியாகக் கருதி, அவனுடைய பாதையில் செல்வத்தைத் தாராளமாகச் செலவு செய்து, இந்தப் பணியைச் சிறந்த முறையில் நிறைவேற்றுங்கள் என்று கட்டளையிட்டப்பட்டது. "உங்கள் கைகளாலேயே உங்களுக்கு அழிவைத் தேடிக்கொள்ளாதீர்கள்" என்பது கஞ்சத்தனத்தைக் குறிக்கிறது. அதாவது, இறைவனின் பாதையில் செலவு செய்யாமல் இருந்து விடாதீர்கள். ஏனென்றால் செலவு செய்வதில் கஞ்சத்தனம் காட்டுவது இவ்வுலக, மறு உலக வாழ்வுகளை அழிவுக்குள்ளாக்குவது ஆகும். மனிதன் பொருளைச் செலவு செய்வதை அழிவுக்குரிய ஒன்றாகக் கருதுகிறான். ஆனால் உண்மையில் இறைவனின் பாதையில் செல்வத்தைச் செலவிடாமல் இருப்பதுதான் அழிவுக்குரியது. ஒருவன் தன்னிடம் உள்ள அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைக்கவில்லை என்றால் தன்னிடம் உள்ள அனைத்தையும் இறைவன் எவ்வாறு மனிதனிடம் ஒப்படைப்பான்?

மனிதன் தனது செல்வத்தைத் தனக்காகவும் தனது மனைவி மக்களுக்காகவும் மட்டுமே செலவிட நினைக்கிறான். ஆனால் குர்ஆன், இந்த மனநிலையை அழிவு என்று அழைக்கிறது. மாறாக, செல்வத்தின் சரியான பயன்பாடு என்பது முடிந்தவரை அதை மார்க்கத் தேவைகளுக்காகச் செலவு செய்வதாகும். ஒருவரின் தனிப்பட்ட விருப்பங்களை நிறைவு செய்வதற்காக மட்டுமே செல்வத்தைச் செலவிடுவது தனிமனிதனையும் சமூகத்தையும் இறைவனின் கோபத்திற்குத் தகுதியானவர்களாக ஆக்குகிறது. இதற்கு மாறாகச் செல்வத்தை இறை மார்க்கத்தின் பாதையில் செலவு செய்யும்போது, தனிமனிதனும் சமூகமும் இறையருளுக்கும் இறையுதவிக்கும் தகுதி உள்ளவர்களாக ஆகிறார்கள் அவ்வாறு செலவிடுபவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் எண்ணற்ற வகையில் பயன் கிடைக்கிறது.

وَ اَتِمُّوا الْحَجَّ وَ الْعُمْرَةَ لِلّٰهِ ؕ فَاِنْ اُحْصِرْتُمْ فَمَا اسْتَيْسَرَ مِنَ
الْهَدْيِ ۚ وَ لَا تَحْلِقُوْا رُءُوْسَكُمْ حَتّٰى يَبْلُغَ الْهَدْيُ مَحِلَّهٗ ؕ
فَمَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ بِهٖۤ اَذًى مِّنْ رَّاْسِهٖ فَفِدْيَةٌ مِّنْ
صِيَامٍ اَوْ صَدَقَةٍ اَوْ نُسُكٍ ۚ فَاِذَاۤ اَمِنْتُمْ ۪ فَمَنْ تَمَتَّعَ بِالْعُمْرَةِ
اِلَى الْحَجِّ فَمَا اسْتَيْسَرَ مِنَ الْهَدْيِ ۚ فَمَنْ لَّمْ يَجِدْ فَصِيَامُ ثَلٰثَةِ
اَيَّامٍ فِي الْحَجِّ وَ سَبْعَةٍ اِذَا رَجَعْتُمْ ؕ تِلْكَ عَشَرَةٌ كَامِلَةٌ ؕ
ذٰلِكَ لِمَنْ لَّمْ يَكُنْ اَهْلُهٗ حَاضِرِي الْمَسْجِدِ الْحَرَامِ ؕ وَ اتَّقُوا
اللّٰهَ وَاعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ ﴿۱۹۶﴾ اَلْحَجُّ اَشْهُرٌ مَّعْلُوْمٰتٌ ۚ ع ۸
فَمَنْ فَرَضَ فِيْهِنَّ الْحَجَّ فَلَا رَفَثَ وَ لَا فُسُوْقَ ۙ وَ لَا جِدَالَ
فِي الْحَجِّ ؕ وَ مَا تَفْعَلُوْا مِنْ خَيْرٍ يَّعْلَمْهُ اللّٰهُ ؕ وَ تَزَوَّدُوْا فَاِنَّ خَيْرَ
الزَّادِ التَّقْوٰى ۫ وَ اتَّقُوْنِ يٰۤاُولِي الْاَلْبَابِ ﴿۱۹۷﴾

[196]அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜையும் உம்ராவையும் நிறைவேற்றுங்கள். ஆனால் நீங்கள் தடுக்கப்பட்டால் உங்களால் இயன்ற பலிப் பிராணியை அனுப்பி வையுங்கள். பலிப் பிராணி அதற்குரிய இடத்தை அடை(ந்து பலிகொடுக்கப்படு)கிற வரை உங்கள் தலைமுடியை மழிக்காதீர்கள். ஆனால் உங்களில் எவரேனும் நோயாளியாக அல்லது தனது தலையில் ஏதேனும் பிணி உள்ளவராக இருந்தால் (முன்னரே மழிக்கலாம்). அதற்கு ஈடாக நோன்பு நோற்கவோ, ஈகை அறம் செய்யவோ, பலி கொடுக்கவோ வேண்டும். அமைதிநிலை ஏற்பட்டு ஒருவர் ஹஜ்ஜுடைய காலம் வரும்முன் (மக்காவை அடைந்து) உம்ரா செய்ய விரும்பினால் அவர் தமக்கு இயன்றதைப் பலியிட வேண்டும். பலிப்பிராணி கிடைக்கப் பெறாதவர் ஹஜ்ஜின் காலத்தில் மூன்று நாட்களும் வீடு திரும்பிய பின்னர் ஏழு நாட்களும் நோன்பு நோற்கவேண்டும். இது மொத்தம் பத்து நாட்களாகும். இது எவர் புனித இறையில்லத்திற்கு அருகில் வசிக்கவில்லையோ அவருக்குப் பொருந்துவதாகும். அல்லாஹ்வுக்கு

அஞ்சுங்கள்; அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன் என்பதை அறிந்துகொள்ளுங்கள். [197]ஹஜ்ஜுடைய மாதங்கள் வரையறுக்கப்பட்டவை. எனவே, யாரேனும் அந்த மாதங்களில் ஹஜ் செய்யத் தீர்மானித்து விட்டால் அவர் ஹஜ்ஜின்போது அருவருப்பான பேச்சு, பாவச்செயல் மற்றும் பிணக்குகளில் ஈடுபடக்கூடாது. நீங்கள் செய்யும் நற்செயல்களை அல்லாஹ் அறிவான். நீங்கள் வழித்துணைப் பொருள்களை எடுத்துச் செல்லுங்கள். மிகச் சிறந்த வழித்துணைப் பொருள் இறையச்சமே ஆகும். அறிவுடையோரே! எனக்கே அஞ்சுங்கள்.

அறியாமைக் காலத்து அரபியர்களிடையேயும் ஹஜ்ஜின் வழக்கம் இருந்தது. ஆனால் அவர்களுக்கு அது ஒரு சமூகச் சடங்காகவோ, வர்த்தகத் திருவிழாவைப் போன்றோ இருந்ததே அன்றி, ஏக இறைவனின் வழிபாடாக இருக்கவில்லை. அது ஹஜ்ஜாகவோ உம்ராவாகவோ அல்லது வேறு எந்த வணக்கமாகவோ இருந்தாலும், முற்றிலும் இறைவனுக்காக மட்டுமே நிறைவேற்றும் போதுதான் அவை உண்மையான மதிப்பைக் கொண்டிருக்கின்றன. அன்றாட வாழ்வில் இறைப்பற்று கொண்டிருக்கும் ஒருவன் இறைவனை வணங்க எழும்போது அவனது உளவியல் முழுவதும் திரண்டு இறைவனிடம் ஒட்டிக்கொள்கிறது.

அவன் அனுபவிக்கின்ற இறை வணக்கமானது, மேலோட்டமாகப் பார்த்தால் ஒழுங்குமுறைச் சடங்குகள் ஆகியவற்றின் தொகுப்பாக இருக்கிறது. ஆனால் அது உயிரோட்டத்தின் அடிப்படையில், மறுமையில் விசாரிக்கப்படுவோம் என்கின்ற அச்சத்தைத் தன்னுடைய வாழ்க்கையின் மிகப்பெரிய பிரச்சினையாக ஆக்கிக் கொண்டு ஒரு மனிதன் தன்னை இறைவனிடம் ஒப்படைத்து விடுவதைக் குறிக்கிறது.

நம்பிக்கையாளன் என்பவன் காமத்திற்காக வாழ்வதற்குப் பதிலாக நோக்கத்திற்காக வாழ்பவன். அவன் தனது விவகாரங்களில் இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதிலிருந்து தன்னைக் காப்பவன். வாழ்க்கையில் ஒருவனோடு ஒருவன் சண்டையிடுவதிலிருந்தும் தன்னை அவன் காக்க வேண்டும். இந்த ஒழுக்கப் பண்புகளை வளர்ப்பதற்கு ஹஜ்ஜுடைய பயணம் மிகவும் பொருத்தமானது. அதனால்தான் இதில் இவை குறிப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளன. இதைப்போலவே ஹஜ்ஜில் பயண அம்சம் மக்களைத் தங்கள் வழித்துணைப் பொருட்களின் ஏற்பாட்டில் ஈடுபடுத்திவிடுகிறது. ஆனால் இறைவனின் பயணியாக இருக்கும் ஒருவனுடைய மிகப்பெரிய வழித்துணைச் சாதனம் இறையச்சம்தான்.

ஒரு மனிதன் வழித்துணைப் பொருட்கள் அனைத்தையும் கொண்டு பயணம் புறப்படுகிறான், மற்றொருவன் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு புறப்படுகிறான் எனில், பயணத்தின்போது இருவரின் உளவியலும் ஒரே மாதிரியாக இருக்க வாய்ப்பில்லை.

"அறிவுடையோரே எனக்கே அஞ்சுங்கள்" என்பதைக் கொண்டு இறையச்சம் என்பது அறிவுடன் தொடர்புடைய ஒன்று என்பதை அறிந்து கொள்ளலாம். இறையச்சம் என்பது புறத் தோற்றத்தின் பெயர் அல்ல, அது ஓர் அறிவுசார்ந்த நிலை. மனிதன் தனது உணர்வு நிலையின் தளத்தில் இறைவனைக் கண்டடையும்போது, அவனது மனம் இறைவனின் மகிமை யாலும் அழகாலும் நிரம்பி விடுகிறது. இந்த நேரத்தில் ஆன்மாவின் நுட்பமான தளத்தில் உருவாகும் நிலையின் பெயர்தான் இறையச்சம் என்பது.

لَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ اَنْ تَبْتَغُوْا فَضْلًا مِّنْ رَّبِّكُمْ ؕ
فَاِذَآ اَفَضْتُمْ مِّنْ عَرَفٰتٍ فَاذْكُرُوا اللّٰهَ عِنْدَ
الْمَشْعَرِ الْحَرَامِ ۖ وَاذْكُرُوْهُ كَمَا هَدٰىكُمْ ۚ وَاِنْ
كُنْتُمْ مِّنْ قَبْلِهٖ لَمِنَ الضَّآلِّيْنَ ﴿۱۹۸﴾ ثُمَّ اَفِيْضُوْا مِنْ
حَيْثُ اَفَاضَ النَّاسُ وَاسْتَغْفِرُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ
غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۹۹﴾ فَاِذَا قَضَيْتُمْ مَّنَاسِكَكُمْ فَاذْكُرُوا
اللّٰهَ كَذِكْرِكُمْ اٰبَآءَكُمْ اَوْ اَشَدَّ ذِكْرًا ؕ فَمِنَ
النَّاسِ مَنْ يَّقُوْلُ رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنْيَا وَمَا لَهٗ فِى
الْاٰخِرَةِ مِنْ خَلَاقٍ ﴿۲۰۰﴾ وَمِنْهُمْ مَّنْ يَّقُوْلُ رَبَّنَآ اٰتِنَا
فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ
النَّارِ ﴿۲۰۱﴾ اُولٰٓئِكَ لَهُمْ نَصِيْبٌ مِّمَّا كَسَبُوْا ؕ وَاللّٰهُ سَرِيْعُ
الْحِسَابِ ﴿۲۰۲﴾ وَاذْكُرُوا اللّٰهَ فِىْٓ اَيَّامٍ مَّعْدُوْدٰتٍ ؕ فَمَنْ
تَعَجَّلَ فِىْ يَوْمَيْنِ فَلَآ اِثْمَ عَلَيْهِ ۚ وَمَنْ تَاَخَّرَ فَلَآ اِثْمَ

عَلَيْهِ ۙ لِمَنِ اتَّقٰى ۟ وَاتَّقُوا اللّٰهَ وَ اعْلَمُوْۤا اَنَّكُمْ اِلَيْهِ تُحْشَرُوْنَ ﴿۲۰۳﴾

[198]அந்தப் பயணத்தின்போது (வணிகம் செய்து) உங்கள் இறைவனின் அருளையும் தேடிக்கொள்வது குற்றமாகாது. நீங்கள் 'அரஃபா'-விலிருந்து திரும்பும்போது, மஷ்அருல் ஹராமில் தங்கி அல்லாஹ்வை நினைவுகூருங்கள். அல்லாஹ் உங்களுக்குக் கற்றுத்தந்தவாறே அவனை நினைவுகூருங்கள். இதற்கு முன்னர் நீங்கள் வழிதவறியவர்களாக இருந்தீர்கள். [199]பின்னர் எல்லோரும் திரும்புகின்ற (முஸ்தலிஃபா எனும்) இடத்திலிருந்து (மினா என்னும் இடத்திற்கு) நீங்களும் திரும்புங்கள். அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருங்கள். உறுதியாக அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனும் நிகரற்ற அன்பாளனும் ஆவான். [200]உங்கள் ஹஜ்ஜின் கடமைகளை நீங்கள் நிறைவேற்றி விட்டால் உங்கள் முன்னோர்களை நினைவுகூர்வது போல, ஏன் அதைவிடவும் அதிகமாக அல்லாஹ்வை நினைவுகூருங்கள். மனிதர்களில் சிலர், ''எங்கள் இறைவா! இவ்வுலகிலேயே (எல்லா நன்மைகளையும்) எங்களுக்குத் தந்துவிடு'' என்று இறைஞ்சுகின்றனர். அவர்களுக்கு மறுமையில் எந்தப் பேறும் இல்லை. [201]அவர்களில் சிலர், ''எங்கள் இறைவா! எங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மையை அருள்வாயாக! எங்களை (நரக)நெருப்பின் வேதனையிலிருந்து காப்பாற்றுவாயாக!'' என்று இறைஞ்கின்றனர். [202]இத்தகையோருக்குத்தான் அவர்கள் ஈட்டியதற்குரிய (மறுமைப்) பங்கு உண்டு. அல்லாஹ் கணக்குத் தீர்ப்பதில் விரைவானவன். [203]நம்பிக்கையாளர்களே! (ஹஜ்ஜின்) குறிப்பிட்ட சில நாட்கள் (மினாவில்) தங்கி அல்லாஹ்வை நினைவுகூருங்கள். எவரேனும் அவசரப்பட்டு இரண்டு நாட்களில் மக்காவுக்குத் திரும்பிவிட்டால் அவர் மீது குற்றமாகாது. எவராவது தங்கித் தாமதமாகப் புறப்பட்டால் அவர் மீதும் குற்றமாகாது. இவை இறையச்சமுடையோருக்கு உரியவை ஆகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவனிடமே நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

அடிப்படைத் தேவையான உணர்வு இறைவன் மீதான அச்சம்தான். எதிர்பார்க்கப்படும் இந்த நிலை ஒருவனுக்குள் இருந்தால் ஹஜ்ஜின்போது

பொருளாதாரத் தேவை காரணமாகச் சிறிது வணிகத்தில் ஈடுபடுவதனாலோ ஹஜ்ஜுக்குரிய சடங்குகளை நிறைவேற்றுவதில் முன் பின்னாகச் சிலவற்றை மாற்றிச் செய்து கொண்டாலோ எந்தத் தீங்கும் இல்லை. ஹஜ்ஜின் போது நிலைத்திருக்க வேண்டியதெல்லாம் இறையச்சம், இறை நினைவு, இறைவனின் அருட்கொடைக்கான நன்றியுணர்வு மற்றும் இறைவனுக்காகத் தன்னை ஒப்படைத்து விடும் உணர்வு ஆகியவற்றுக்கான சுற்றுச்சூழல்தான். ஹஜ்ஜின் போது இத்தகைய உணர்வு நிலைக்கு எதிரான எந்தச் செயலும் செய்யக் கூடாது. உதாரணமாக, ஒரு வணக்கச் செயல் நிறைவேறும்போது ஒரு தனி மனிதனுக்கோ குழுவிற்கோ தன்னுடைய மேன்மையை வெளிப்படுத்துவது அல்லது தன் மூதாதையர்களின் சாதனைகளை விவரித்துச் சொல்வது போன்றவை, மறைமுகமாகத் தன்னை முன்னிலைப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாகும். எல்லா மனிதர்களும் சமம் என்று கூறுகின்ற, பெருமைகளனைத்தும் ஏக இறைவனுக்கு மட்டுமே சொந்தமானது என்று பிரகடனப்படுத்துகின்ற இறை வணக்கத்துடன் இவை சற்றும் பொருந்தாதவை. ஹஜ்ஜுடைய காலத்திலும் கூட ஒருவன் இவற்றுக்கான பயிற்சியை பெறவில்லை என்றால் தன் வாழ்க்கையில் எஞ்சியிருக்கும் தருணங்களில் இவற்றின் மீது அவனால் எவ்வாறு நிலைத்திருக்க முடியும்?

பிரார்த்தனைகள், குறிப்பாக ஹஜ்ஜுடைய பிரார்த்தனைகள், மனிதரின் உள்ளார்ந்த நிலையின் வெளிப்பாடாகும். ஒருவன் மறுமையின் மகத்துவங்களை மனதில் கொண்டு வாழ்ந்துகொண்டிருப்பவன், ஹஜ் செய்யும் இடங்களில் மறுமை சார்ந்த பிரார்த்தனைகள் அவனது உள்ளத்தில் பொங்கி வழியும். இதற்கு மாறாக உலக விஷயங்களில் தனது மனதை பதித்திருப்பவன் ஹஜ்ஜின் போது எந்த ஏக்கத்தை அவன் கொண்டு சென்றிருந்தானோ அதையே அதிகமாகத் தன் இறைவனிடம் கேட்பான். மேலும் ஒரு மனிதன் தன் இறைவனிடம் 'இறைவா! இவ்வுலகத்தில் உன் பார்வையில் எது சிறந்ததோ அதை எனக்குக் கொடுப்பாயாக! மறுமையில் எது உன் பார்வையில் சிறந்ததாக இருக்குமோ அதை எனக்கு கொடுப்பாயாக! உன் கோபத்திலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக!' என்று இறைஞ்சி வேண்டுவது சிறந்த பிரார்த்தனையாகும்.

"அவனிடமே நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள்" என்பதே அரஃபாத்தின் சமவெளியில் ஒரே நேரத்தில் உலகம் முழுவதிலுமிருந்து வந்திருக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்கு வழங்கப்படும் ஹஜ்ஜின் மிகப்பெரிய பாடமாகும். அரஃபாத்தில் ஒன்றுகூடுவது என்பது மறுமை நாளில் ஒன்றுகூடுவதற்கான ஓர் உருவகமாகும்.

وَ مِنَ النَّاسِ مَنۡ يُّعۡجِبُكَ قَوۡلُهٗ فِى الۡحَيٰوةِ الدُّنۡيَا وَ
يُشۡهِدُ اللّٰهَ عَلٰى مَا فِىۡ قَلۡبِهٖ ۙ وَ هُوَ اَلَدُّ الۡخِصَامِ ﴿۲۰۴﴾ وَ
اِذَا تَوَلّٰى سَعٰى فِى الۡاَرۡضِ لِيُفۡسِدَ فِيۡهَا وَ يُهۡلِكَ
الۡحَرۡثَ وَ النَّسۡلَ ؕ وَ اللّٰهُ لَا يُحِبُّ الۡفَسَادَ ﴿۲۰۵﴾ وَ اِذَا
قِيۡلَ لَهُ اتَّقِ اللّٰهَ اَخَذَتۡهُ الۡعِزَّةُ بِالۡاِثۡمِ فَحَسۡبُهٗ
جَهَنَّمُ ؕ وَ لَبِئۡسَ الۡمِهَادُ ﴿۲۰۶﴾ وَ مِنَ النَّاسِ مَنۡ يَّشۡرِىۡ
نَفۡسَهُ ابۡتِغَآءَ مَرۡضَاتِ اللّٰهِ ؕ وَ اللّٰهُ رَءُوۡفٌۢ بِالۡعِبَادِ ﴿۲۰۷﴾

[204](நபியே!) இவ்வுலக வாழ்க்கை பற்றித் தன் (நயப்பு) வார்த்தையால் உம்மை வியப்புக்குள்ளாக்கும் மனிதனும் இருக்கிறான். அவன் தன் உள்ளத்தில் உள்ளதற்கு அல்லாஹ்வைச் சாட்சியாளனாக்குவான். ஆனால் (உண்மையில்) அ(த்தகைய)வன் தான் (உமக்குக்) கொடிய பகைவனாவான். [205]அவன் உம்மிடமிருந்து புறப்பட்டதும் பூமியில் குழப்பத்தை உண்டாக்குவதிலும் விளைநிலங்களையும் கால்நடைகளையும் அழிக்கும் முயற்சியிலும்தான் ஈடுபடுவான். அல்லாஹ் குழப்பத்தை விரும்புவதில்லை. [206]'அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்துகொள்' என்று அவனிடம் கூறப்பட்டால் செருக்கு அவனைப் பாவத்தின்மீது நிலைநிறுத்தி விடுகிறது. எனவே அத்தகையோருக்கு நரகமே ஏற்றது. அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும். [207]அல்லாஹ்வின் உவப்பை விரும்பித் தம் உயிரையே அர்ப்பணிப்போரும் மனிதர்களில் உள்ளனர். (இத்தகைய) தன் அடியார்களின் மீது அல்லாஹ் மிகுந்த பரிவுடையவனாக இருக்கின்றான்.

உலகியல் பயன்களைத் தனது மார்க்கமாக்கிக் கொண்ட ஒருவனுடைய வார்த்தைகள் எப்போதும் மக்களுக்கு மிகவும் பிடித்தமானவையாகத் தோன்றுகின்றன. ஏனென்றால் அவன் மக்களின் விருப்பத்தைப் பொறுத்து அதற்கு ஏற்பப் பேசுகிறானே அன்றி, எது உண்மை, எது தவறு என்பதைப் பொறுத்துப் பேசுவதில்லை. அவனுக்கு முன்னால் நிலையான தர அளவுகோலும் இருப்பதில்லை. எனவே, செவியேற்போரின் தன்மைக்கேற்ப, அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் பாணியை அவன் கையாள்கிறான்.

சத்தியத்துக்கு விசுவாசமாக இல்லாததால், இதயத்தில் உண்மையான உணர்வு இல்லாத போதும், நாவால் அழகாகப் பேசுவது அவனுக்குக் கடினமாக இருப்பதில்லை.

பேச்சு மேடையில் அவன் ஒரு சீர்திருத்தவாதியாகத் தோன்றுவதும், செயல்தளத்தில் அவனது செயல்பாடுகள் குழப்பம் ஏற்படக் காரணமாக மாறிவிடுவதும் ஏன்? இதற்குக் காரணம் அவனது முரண்பாடுதான். நடைமுறை முடிவுகள் எப்போதும் செயல்களிலிருந்து தோன்றுகின்றன. வார்த்தைகளிலிருந்து அல்ல. அத்துணைக்கும் அவன் தனது நாவால் சத்தியத்தின் வார்த்தைகளைப் பேசுகின்றான். ஆனால் செயலைப் பொறுத்தவரை, அது சுயநலத்தை மட்டுமே கொண்டிருக்கிறது. இது அவனது சொல்லுக்கும் செயல்களுக்கும் இடையில் வோறுபாட்டை உருவாக்குகிறது. அவன் சொல்லென்னும் தளத்திலிருந்து செயலென்னும் தளத்திற்கு நகரும்போது, அவனது தன்னலத் தேவைகள் அவனை அழிவுக்கு மட்டுமே வழிவகுக்கும் செயல்பாடுகளை நோக்கி இழுத்துச் செல்வதாய் இருக்கின்றன. இங்கே அவன் தனது சொந்த லாபத்திற்காக மற்றவர்களைச் சுரண்டுகிறான். அவன் பொதுமக்களிடம் புகழைப் பெறுவதற்காக மக்களுக்கு உணர்ச்சியூட்டும் செய்திகளின் மதுவை அருந்தச்செய்கிறான். அவன் தனது தலைமையை நிலைநாட்ட முழுச் சமூகத்தையும் பணயம் வைத்துவிடுகிறான். அவன் கட்டமைப்பதற்குப் பதிலாக அழிவுக்கான அரசியலைச் செயல்படுத்துகிறான். ஏனென்றால் இவ்வாறு, தன்னைச் சுற்றி மிக எளிதாக மக்கள் கூட்டத்தை ஒன்று சேர்க்க அவனுக்கு இயலும். அவர்கள் உலக நலன்களுக்காகவும் வசதிகளுக்காகவும் தங்கள் வாழ்க்கையைப் பணயம் வைத்தவர்கள். உண்மை தெளிவாகத் தெரிந்த பிறகும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஏனென்றால் இதில், அவர்கள் தங்களுடைய கௌரவ பிம்பம் உடைக்கப்படுவதைக் காண்கிறார்கள். மென்மையான வார்த்தைகளுக்குப் பின்னால், அவர்களின் செருக்குக் கொண்ட உளவியல், சத்தியத்தின் அழைப்பாளருக்கு முன்னால் அவர்களைத் தலைபணிய விடாமல் தடுத்துவிடுகிறது. காரணம், அவர்கள் தங்களை விட அவரைத் தாழ்ந்தவராகக் கருதுகிறார்கள்.

இன்னும் சிலர் இறை உவப்புக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்பவர்கள். இத்தகைய ஒரு நபர் தமது பழக்கங்களையும் எண்ணங்களையும் கைவிட்டு இறைவனின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்கிறார். அவர் தமது செல்வத்தை இறைவனிடம் ஒப்படைத்து, அதற்கு ஈடாக ஏழையாக மாறவும் ஒப்புக்கொள்கிறார். அவர் வழக்கமான மதத்தை மறுத்து, இறைவனின் தூய மார்க்கத்தைத் தழுவுகிறார். அதன் காரணமாக மக்களிடையே செல்வாக்கற்ற நிலையை அடைய நேர்ந்தாலும் சரி. சுயநலனுக்கேற்பச் செயல்படுவதைவிட

சத்தியத்தை அறிவிப்பதையே தமது வழிமுறையாக்கிக் கொள்கிறார். அதன் விளைவாக அவர் மக்களின் கோபத்துக்கு ஆளாகிக் கொண்டே இருந்தாலும் சரியே.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا ادْخُلُوْا فِي السِّلْمِ كَآفَّةً ۪ وَ لَا
تَتَّبِعُوْا خُطُوٰتِ الشَّيْطٰنِ ؕ اِنَّهٗ لَكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ ﴿۲۰۸﴾ فَاِنْ
زَلَلْتُمْ مِّنْۢ بَعْدِ مَا جَآءَتْكُمُ الْبَيِّنٰتُ فَاعْلَمُوْۤا اَنَّ
اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۲۰۹﴾ هَلْ يَنْظُرُوْنَ اِلَّاۤ اَنْ يَّاْتِيَهُمُ
اللّٰهُ فِيْ ظُلَلٍ مِّنَ الْغَمَامِ وَ الْمَلٰٓئِكَةُ وَ قُضِيَ الْاَمْرُ ؕ
وَ اِلَى اللّٰهِ تُرْجَعُ الْاُمُوْرُ ﴿۲۱۰﴾ سَلْ بَنِيْۤ اِسْرَآءِيْلَ كَمْ ع ۲۵
اٰتَيْنٰهُمْ مِّنْ اٰيَةٍۭ بَيِّنَةٍ ؕ وَ مَنْ يُّبَدِّلْ نِعْمَةَ اللّٰهِ مِنْۢ
بَعْدِ مَا جَآءَتْهُ فَاِنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ ﴿۲۱۱﴾
زُيِّنَ لِلَّذِيْنَ كَفَرُوا الْحَيٰوةُ الدُّنْيَا وَ يَسْخَرُوْنَ مِنَ الَّذِيْنَ
اٰمَنُوْا ۘ وَ الَّذِيْنَ اتَّقَوْا فَوْقَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ ؕ وَ اللّٰهُ يَرْزُقُ
مَنْ يَّشَآءُ بِغَيْرِ حِسَابٍ ﴿۲۱۲﴾

[208]நம்பிக்கையாளர்களே! நீங்கள் முழுக்க முழுக்க (இறைவனுக்குக்) கீழ்ப்படிந்தவர்களாகி விடுங்கள். சாத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். அவன் உங்களுக்கு வெளிப்படையான பகைவன் ஆவான். [209]உங்களிடம் தெளிவான சான்றுகள் வந்தபின்னரும் நீங்கள் தவறிவிடுவீர்களாயின் அறிந்து கொள்ளுங்கள், அல்லாஹ் யாவற்றினும் வல்லவன்; ஞானம் மிக்கவன். [210](நபியே!) மேகத்தின் நிழல்களில் அல்லாஹ்வும் வானவர்களும் (அவர்களிடம்) வரவேண்டும்; (அவர்களின்) விவகாரம் முடிக்கப்படவேண்டும் என்பதைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்களா? அனைத்து விவகாரங்களும் அல்லாஹ்விடமே கொண்டுவரப்படும். [211]இஸ்ராயீலின் மக்களுக்கு நாம் எவ்வளவு தெளிவான சான்றுகளை வழங்கியிருந்தோம் என்று (நபியே!)

நீர் கேட்பீராக! எவர் அல்லாஹ்வின் அருட்கொடை தன்னிடம் வந்த பின்னரும் அதனை (இறை மறுப்பாக) மாற்றி விடுகிறாரோ உறுதியாக அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன்(என்பதை அவர் அறிந்துகொள்ளட்டும்). [212]மறுப்பாளர்களுக்கு இவ்வுலக வாழ்வு அழகானதாகக் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் நம்பிக்கையாளர்களை ஏளனம் செய்கின்றனர். ஆனால் இறையச்சமுடையோர் மறுமை நாளில் அவர்களைவிட உயர்ந்த நிலையில் இருப்பார்கள். தான் விரும்பியோருக்கு அல்லாஹ் கணக்கின்றி வழங்குகிறான்.

இஸ்லாத்தைத் ஏற்றுக்கொள்வதற்கான ஒரு வழிமுறை, உலகியல் நலன்கள் சுயஈடுபாடுகள் குறித்துக் கருதிப் பார்க்காமல் அதைத் தழுவுவதாகும். இஸ்லாம் எதைச் செய்யச் சொல்கிறதோ அதைச் செய்ய வேண்டும்; எதை விட்டுவிடச் சொல்கிறதோ, அதை விட்டுவிட வேண்டும். இது ஒருவர் இஸ்லாத்திற்குள் முழு மனதுடன் நுழைவதாகும். இரண்டாவது வழிமுறை, ஒரு மனிதன் இஸ்லாத்தைத் தனது அன்றாட வாழ்க்கையுடன் மோதாத அளவிற்கு மட்டுமே ஏற்றுக்கொள்வது; தனக்கு நன்மை பயப்பதாகவோ குறைந்தபட்சம் தீங்கற்றதாகவோ இருக்கும் அளவுக்கு இஸ்லாத்தை அவன் ஏற்றுக் கொள்வதாகும். மேலும் அவனது விருப்பத்திற்குரிய நம்பிக்கைகள், அவனுக்குப் பிடித்த பழக்க வழக்கங்கள், உலக நன்மைகள், அவரது தனிப்பட்ட கண்ணியம், அவனது தலைமை குறித்த நலன்கள் ஆகியவற்றுக்கு ஊறு விளைவிக்கும் இஸ்லாத்தை அவன் விட்டுவிடுகிறான். மனிதன் ஆரம்பத்தில் முழு நோக்கத்துடன் இஸ்லாத்தை ஏற்கிறான். ஆனால் தனது சிந்தனைக் கட்டமைப்பை உடைக்க வேண்டிய நேரமும் தனது சொந்த நலன்களைப் புறக்கணித்து இஸ்லாத்தை ஆதரிக்க வேண்டிய நேரமும் வரும்போது அவன் நழுவி விடுகிறான். அவன் தனது நலன்களுக்குத் தீங்கு விளைவிக்காதபடி பெயரளவில் மட்டும் இஸ்லாத்தில்இருக்கிறான்.

இஸ்லாம் வழங்கும் செய்தியின் உண்மைத்தன்மையை நம்புவதற்கு அவர்கள் சான்றுகளை விரும்பினால், அவர்களுக்குப் போதுமான சான்றுகள் கொடுக்கப்பட்டு விட்டன. அவர்களுக்கு அற்புதங்கள் காட்டப்பட வேண்டும் என்று விரும்பினால், வெளிப்படையான சான்றுகளை ஏற்றுக்கொள்ளாத எவரையும் அமைதிப்படுத்த அற்புதங்கள் கூடப் போதுமானவையாக இராது. இதற்குப் பிறகு எஞ்சியிருப்பது இறைவன் தனது வானவர்களுடன் எதிரே வந்துவிடுவதுதான். ஆனால் அப்படி ஒன்று நடக்கும்போது, அது யாருக்கும் எந்தப் பயனும் அளிக்காது. ஏனென்றால் அது முடிவிற்கான நேரமாக இருக்கும்; செயலுக்கான நேரமாக இருக்காது. மனிதனுக்கான சோதனை என்னவென்றால், அவன் கண்களால் பார்க்காமல், சான்றுகளை மட்டுமே

அடிப்படையாகக் கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே. அவன் கண்களால் பார்த்த பிறகு ஏற்றுக்கொண்டால், அப்படி ஏற்றுக்கொள்வதற்கு எந்த மதிப்பும் இல்லை.

வசதிகளைப் புறக்கணித்து இஸ்லாத்தைத் தழுவுபவர்களின் சூழ்நிலையும், வசதிகளைக் கருத்தில் கொண்டு முஸ்லிம்களாக மாறுபவர்களின் சூழ்நிலையும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. முதல் கூட்டத்தினர் பெரும்பாலும் உலக முக்கியத்துவம் வாய்ந்த நலன்களை இழந்துவிடுகின்றனர். அதே நேரத்தில் இரண்டாவது கூட்டத்தினரிடம் அனைத்து வகையான உலகச் செழிப்புகளும் குவிந்துவிடுகின்றன. இது இரண்டாவது கூட்டத்தினரைத் தவறான புரிதலுக்கு ஆளாக்குகிறது. அவர்கள் தம்மை உயர்ந்தவர்களாகக் கருதி, முதல் கூட்டத்தினரை இழிவாகப் பார்க்கத் தொடங்குகிறார்கள். ஆனால் இந்த நிலைமை மிகவும் தற்காலிகமானது. தற்போதைய உலகம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஒரு புதிய, சிறந்த அமைப்பு உருவாக்கப்படும்போது, இன்றைய 'பெரிய மனிதர்கள்' கீழ் நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இன்று 'சிறியவர்கள்' என்று கருதப்பட்டவர்கள் உச்ச நிலையில் காணப்படுவார்கள்.

كَانَ النَّاسُ أُمَّةً وَّاحِدَةً ۟ فَبَعَثَ اللّٰهُ النَّبِيّٖنَ مُبَشِّرِيْنَ
وَمُنْذِرِيْنَ ۪ وَاَنْزَلَ مَعَهُمُ الْكِتٰبَ بِالْحَقِّ لِيَحْكُمَ بَيْنَ
النَّاسِ فِيْمَا اخْتَلَفُوْا فِيْهِ ؕ وَمَا اخْتَلَفَ فِيْهِ اِلَّا الَّذِيْنَ اُوْتُوْهُ
مِنْۢ بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ بَغْيًۢا بَيْنَهُمْ ۚ فَهَدَى اللّٰهُ الَّذِيْنَ
اٰمَنُوْا لِمَا اخْتَلَفُوْا فِيْهِ مِنَ الْحَقِّ بِاِذْنِهٖ ؕ وَاللّٰهُ يَهْدِيْ مَنْ
يَّشَآءُ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿۲۱۳﴾ اَمْ حَسِبْتُمْ اَنْ تَدْخُلُوا الْجَنَّةَ
وَلَمَّا يَاْتِكُمْ مَّثَلُ الَّذِيْنَ خَلَوْا مِنْ قَبْلِكُمْ ؕ مَسَّتْهُمُ الْبَاْسَآءُ
وَالضَّرَّآءُ وَزُلْزِلُوْا حَتّٰى يَقُوْلَ الرَّسُوْلُ وَالَّذِيْنَ
اٰمَنُوْا مَعَهٗ مَتٰى نَصْرُ اللّٰهِ ؕ اَلَآ اِنَّ نَصْرَ اللّٰهِ قَرِيْبٌ ﴿۲۱۴﴾

[213] ***(தொடக்கத்தில்) மனிதர்கள் (அனைவரும்) ஒரே சமூகத்தினராக இருந்தனர். (அவர்கள் தமக்குள் கருத்துவேறுபாடு கொண்டதனால்) தூதர்களை நற்செய்தியாளர்களாகவும் எச்சரிக்கையாளர்களாகவும் அல்லாஹ் அனுப்பிவைத்தான். அவர்கள் முரண்பட்டவற்றில்***

அவர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக அ(த்தூது)வர்களுடன் சத்திய வேதத்தையும் அருளினான். சத்தியம் வழங்கப்பட்டவர்கள் தங்களிடம் தெளிவான வழிகாட்டுதல் வந்த பின்னரும் தங்களுக்கு இடையே இருந்த காழ்ப்புணர்வினால்தான் முரண்பட்டுக் கொண்டனர். ஆயினும் சத்தியத்தைக் குறித்து அவர்கள் பிணங்கிக் கொண்டவற்றில் அல்லாஹ் தன் அருளால் நம்பிக்கையாளர்களுக்கு நேர்வழியைக் காட்டினான். தான் விரும்பியோருக்கு அல்லாஹ் நேர்வழியைக் காட்டுகிறான். [214](நம்பிக்கையாளர்களே!) உங்களுக்கு முன்சென்றவர்களுக்கு ஏற்பட்ட நிலைமை உங்களுக்கும் ஏற்படாமலேயே நீங்கள் சொர்க்கம் சென்று விடலாம் என்று எண்ணிக்கொண்டீர்களா? அவர்களுக்கு வறுமையும் துன்பங்களும் ஏற்பட்டன. தூதரும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களும் ''இறையுதவி எப்போது வரும்'' என்று கேட்கும்வரை அலைக்கழிக்கப்பட்டனர். நினைவில் வையுங்கள், இறையுதவி மிக அருகில் இருக்கிறது.

மார்க்கத்தில் கருத்து வேறுபாடு என்பது மனிதர்கள் தெரிவித்த முரண்பட்ட விளக்கங்களிலிருந்து தோன்றுகிறது. ஒவ்வொருவரும் தங்கள் சொந்த மனக்கட்டமைப்பின்படி இறைவனின் மார்க்கம் பற்றிய ஒரு கருத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். மக்கள் ஒரே வழிகாட்டி நூலைப் பின்பற்றினாலும், அவர்களின் கருத்துக்கள் வேறுபட்டு விடுகின்றன. இந்த நேரத்தில், இறைவன் தேர்ந்தெடுக்கப்பட்ட தனது அடியார் மூலம் உண்மையை அறிவிக்கிறான். அந்தக் குரல், மனித மொழியில்தான் இருக்கிறது. சாதாரண மனிதர்களைப் போன்ற ஒரு மனிதரின் மூலமாக அந்தக் குரல் உயர்த்தப்படுகிறது. இருப்பினும், சத்தியத் தேடலைக் கொண்ட உண்மையாளர்கள் அதற்குள் இருக்கும் இறை ஒலி அதிர்வை அறிந்து தங்கள் வேறுபாடுகளை மறந்து உடனடியாக அந்தக் குரலுக்குப் பதில் அளிக்கிறார்கள். மறுபுறம் சமூகத்தின் ஒரு பிரிவு தானாகவே உருவாக்கிய மதத்தின் மீது எந்த அளவுக்குப் பற்றுதல் கொண்டு விடுகிறது என்றால், பிறருடைய பேச்சை ஏன் கேட்க வேண்டும் என்னும் உணர்வு அதனுள் மேலோங்குகிறது; அதனுள் ஒரு பிடிவாத உளவியல் பிறந்து விடுகிறது; அது எந்த விஷயத்திற்காகக் கொடியைத் தாங்கி நின்றிருந்ததோ அதையே மறந்து விடுகிறது.

உண்மை தெளிவான சான்றுகளுடன் வந்தும் மனிதன் அதை ஆதரிக்க வில்லை என்றால், அதற்குக் காரணம் இதுதான், அதை ஆதரிப்பதால் அவனது ஆசைக் கற்பனைகளின் அரண்மனை நொறுங்கிப் போய்விடும் என்று அவனுக்குத் தோன்றுகிறது. அவனது நலன்களின் அமைப்பு

சீர்குலைந்துவிடும். அவனுடைய வசதியான வாழ்க்கை ஆபத்தில் சிக்கிவிடும். அவனுடைய கௌரவம் நிலைக்காது. ஆனால் இறைவன் தனது உண்மையுள்ள அடியார்களிடம் இதைத்தான் எதிர்பார்க்கிறான். ஒரு மனிதன் எந்தப் பாதைகளின் சிரமங்களுக்குப் பயந்து நடை பயில விரும்பவில்லையோ அந்தப் பாதைதான் சொர்க்கத்திற்கு இட்டுச் செல்லும் பாதையாகும். சொர்க்கத்தின் ஒரே விலை மனிதனின் சொந்த இருப்புதான். ஒரு மனிதர் தன் இருப்பை எந்தச் சிந்தனைக்கும் செயல் வடிவமைப்புகளுக்கும் உட்படுத்தியுள்ளாரோ அதிலிருந்து வேரோடு பிடுங்கப்பட்டு, அதை இறைவனின் வடிவமைப்பிற்குள் கொண்டு வர முயலும்போது, அவரது முழு ஆளுமையும் ஆட்டம் காண்கிறது. இதனுடன் இறை மார்க்கத்தின் அழைப்பாளராக அவர் எழுந்து நிற்கும்போது அது இன்னும் அதிகரித்து விடுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஓர் அழைப்பாளராக இருப்பதென்பது மற்றவர்களுக்கான அறிவுரை யாளராகவும் விமர்சகராகவும் மாறுவதாகும். மேலும் தனக்கு எதிரான அறிவுரைகளையும் விமர்சனங்களையும் கேட்பது ஒவ்வொரு காலத்திலும் மனிதனால் மிகவும் வெறுக்கப்படுவதாக இருந்து வந்திருக்கிறது. இதன் விளைவாக இறைவனின்பால் அழைக்கப்பட்டவர்களிடமிருந்து ஏற்பட்ட மிகவும் கடுமையான எதிர்வினை ஓர் இறை அழைப்பாளரைப் பொறுத்தவரை அது நிலநடுக்கத்திற்குக் குறைந்த ஒன்றாக இருப்பதில்லை.

يَسْـَٔلُوْنَكَ مَاذَا يُنْفِقُوْنَ ۗ قُلْ مَآ اَنْفَقْتُمْ مِّنْ خَيْرٍ
فَلِلْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ وَالْيَتٰمٰى وَ الْمَسٰكِيْنِ وَابْنِ
السَّبِيْلِ ۗ وَمَا تَفْعَلُوْا مِنْ خَيْرٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ ﴿٢١٥﴾ كُتِبَ
عَلَيْكُمُ الْقِتَالُ وَ هُوَ كُرْهٌ لَّكُمْ ۚ وَعَسٰٓى اَنْ تَكْرَهُوْا شَيْـًٔا
وَّهُوَ خَيْرٌ لَّكُمْ ۚ وَعَسٰٓى اَنْ تُحِبُّوْا شَيْـًٔا وَّهُوَ شَرٌّ لَّكُمْ ۗ وَ اللّٰهُ
يَعْلَمُ وَ اَنْتُمْ لَا تَعْلَمُوْنَ ﴿٢١٦﴾ ع ٢٦

[215](நபியே!) ''தாம் என்ன செலவு செய்யவேண்டும்'' என்று மக்கள் உம்மிடம் கேட்கிறார்கள். நீர் (அவர்களிடம்) ''நல்லவையான எப்பொருளை நீங்கள் செலவு செய்தாலும் அதில் உங்கள் பெற்றோருக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் உரிமை உண்டு.

நீங்கள் எந்த நன்மை செய்தாலும் அதனை அல்லாஹ் முற்றும் அறிவான்'' என்று கூறுவீராக! [216](தற்காப்பிற்காகப்) போர்புரிவது - உங்களுக்கு வெறுப்பாக இருப்பினும் அது உங்கள்மீது கடமையாக்கப்பட்டுள்ளது. ஒரு பொருளை நீங்கள் வெறுக்கலாம்; (ஆனால்) அது உங்களுக்கு நன்மையாக இருக்கும். ஒரு பொருளை நீங்கள் விரும்பலாம்; (ஆனால்) அது உங்களுக்குத் தீமையாக இருக்கும். (அவற்றின் உண்மையை) அல்லாஹ்வே நன்கறிவான்; நீங்கள் அறியமாட்டீர்கள்.

மனிதன் தனது வாழ்க்கையும் செல்வமும் சிறப்பாகப் பயன்படுத்தப்படத் தகுதியானவர்களாகத் தனது மனைவி மக்களை நினைக்கிறான். அவன் தனது செல்வத்தைத் தனது தனிப்பட்ட லட்சியங்கள் ஆசைகள் ஆகியவற்றில் செலவு செய்து மகிழ்ச்சியடைகிறான். மாறாக, மார்க்கச் சட்டம் உங்கள் வாழ்க்கையையும் செல்வத்தையும் இறைவனின் பாதையில் செலவிடச் சொல்கிறது. இந்த இரண்டு வழிகளும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டவை. ஒன்று தனக்காகவும், மற்றொன்று பிறருக்காகவும் செலவிடுவது. ஒன்று, இவ்வுலகின் புறவயமான நலன்களைப் பெறுவதற்காகத் தன்னுடைய ஆற்றலைச் செலுத்துவது; மற்றொன்று கண்ணுக்குத் தெரியாத மறுமையின் பயன்களில் கவனம் செலுத்துவது. ஆனால் மனிதனுக்குப் பிடிக்காதது இறைவனின் பார்வையில் நன்மையானதாக இருக்கிறது. ஏனென்றால் அது அவனுடைய அடுத்த, மிகப் பரந்த வாழ்க்கையில் பயனளிக்கப் போகிறது. மேலும் மனிதன் விரும்பும் ஒன்று இறைவனின் பார்வையில் தீயதாக இருக்கிறது. ஏனென்றால், அதனால் கிடைக்கும் பயன் இந்தத் தற்காலிக உலகிற்கானது, மறுமையில் அதிலிருந்து யாருக்கும் எதுவும் கிடைக்காது.

இந்தக் கொள்கையே வாழ்க்கையின் அனைத்து விஷயங்களுக்கும் பொருந்துவதாக இருக்கிறது. மனிதன் சுதந்திரமான கட்டுப்பாடற்ற வாழ்க்கையை விரும்புகிறான். என்றாலும் அவனுக்கான நன்மை இறைவனின் கயிற்றில் தன்னைக் கட்டி வைத்திருப்பதில்தான் இருக்கிறது. மனிதன் தன்னைப் புகழ்பவர்களை நண்பராக்கிக் கொள்கிறான். ஆனால் தன் தவறுகளைச் சுட்டிக்காட்டுபவர்களுடன் நட்புக் கொள்வது அவனுக்குச் சிறந்தது. மனிதன் ஓர் உண்மையை ஏற்க மறுக்கிறான். இவ்வாறு மக்களின் பார்வையில் தனது கௌரவத்தை நிலை நாட்டியதாக மகிழ்ச்சியடைகிறான். ஆயினும், அவன் தனது கண்ணியத்தைப் பணயம் வைத்து சத்தியத்தைத் திறந்த மனத்துடன் ஏற்றுக்கொள்வது சிறந்தது. மனிதன் உழைப்புக்கும் தியாகத்திற்குரிய மார்க்கத்தின் மீது ஆர்வமில்லாமல் இருக்கிறான். மேலும் சாதாரணமான செயல்களுக்காகச் சொர்க்கத்தின் நற்செய்தியைக் கொடுக்கும் மதத்தை ஏற்கிறான். ஆனால், கடின உழைப்புக்கும் தியாகத்திற்குரிய மார்க்கத்தை

ஏற்றுக்கொள்வதே அவனுக்கு மிகச் சிறந்த ஒன்றாக இருந்தது. மனிதன் 'வாழ்வு' குறித்த பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். ஆனால் அறிவுடைமை எதுவெனில் மனிதன் 'மரணம்' குறித்த பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதே.

"இறைவன் நன்கறிவான், நீங்கள் அறியமாட்டீர்கள்" என்பதன் பொருள், இறைவன் கீழான உணர்ச்சிகள் உந்துதல்கள் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டவனாக இருக்கிறான். மனிதனின் கருத்து இவ்வாறு இல்லாத காரணத்தினால், அது பிற பாதிப்புகளுக்கு உட்பட்ட கருத்தாக மாறிவிடுகிறது. அவன் சரியான திசையை விட்டுவிட்டுத் தவறான திசைக்குத் திரும்பி விடுகிறான். இறைவனின் தீர்ப்பு தொடர்பற்ற எவற்றின் கலப்பிலிருந்தும் தூய்மையானது. அவனது தீர்ப்பு கலப்படமற்ற தீர்ப்பாக இருக்கிறது . எனவே, அது உண்மையாய் இருப்பதில் எந்த ஐயமும் இல்லை. மனித முடிவுகள் பல்வேறு உளவியல் சிக்கல்களால் சூழப்பட்டுள்ளன. தாழ்ந்த உந்துதல்களின் தாக்கத்தின் கீழ் அவன் கருத்துக்களை நிறுவுகிறான். அதனால்தான் மனிதனின் கருத்துக்கள் பெரும்பாலும் உண்மையின் அடிப்படையிலோ நடப்பியலுக்கு இணக்கமாகவோ இருப்பதில்லை. இறைவன் சொல்வதை, உண்மை என்று கருத வேண்டும். இதற்கு எதிராகத் தன்னுடைய சொந்தக் கருத்துக்களை மனிதன் விட்டுவிட வேண்டும்.

يَسْـَٔلُوْنَكَ عَنِ الشَّهْرِ الْحَرَامِ قِتَالٍ فِيْهِ ؕ قُلْ قِتَالٌ فِيْهِ
كَبِيْرٌ ؕ وَ صَدٌّ عَنْ سَبِيْلِ اللّٰهِ وَ كُفْرٌۢ بِهٖ وَ الْمَسْجِدِ الْحَرَامِ ۫
وَ اِخْرَاجُ اَهْلِهٖ مِنْهُ اَكْبَرُ عِنْدَ اللّٰهِ ۚ وَ الْفِتْنَةُ اَكْبَرُ مِنَ
الْقَتْلِ ؕ وَ لَا يَزَالُوْنَ يُقَاتِلُوْنَكُمْ حَتّٰى يَرُدُّوْكُمْ عَنْ دِيْنِكُمْ
اِنِ اسْتَطَاعُوْا ؕ وَ مَنْ يَّرْتَدِدْ مِنْكُمْ عَنْ دِيْنِهٖ فَيَمُتْ وَ هُوَ
كَافِرٌ فَاُولٰٓئِكَ حَبِطَتْ اَعْمَالُهُمْ فِي الدُّنْيَا وَ الْاٰخِرَةِ ۚ
وَ اُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿٢١٧﴾ اِنَّ الَّذِيْنَ
اٰمَنُوْا وَ الَّذِيْنَ هَاجَرُوْا وَ جٰهَدُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ ۙ اُولٰٓئِكَ
يَرْجُوْنَ رَحْمَتَ اللّٰهِ ؕ وَ اللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿٢١٨﴾

[217](நபியே!) ''புனித மாதத்தில் போர்புரியலாமா?'' என (ஓரிறை மறுப்பாளர்களாகிய) அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். நீர் அவர்களிடம், ''அம்மாதத்தில் போர்புரிவது பெரும் குற்றம்தான். ஆயினும் இறைவழியிலிருந்து அடியார்களைத் தடுப்பதும் இறைவனை மறுப்பதும் புனித (கஅபா) இறையில்லத்தில் (நுழைய விடாமல்) மக்களைத் தடுப்பதும் இன்னும் அங்கு வாழ்பவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதும் அல்லாஹ்விடத்தில் (அதை விடப்) பெரும் குற்றமாகும். குழப்பம் விளைவிப்பது கொலையை விடக் கொடியதாகும்'' என்று கூறுவீராக! (நம்பிக்கையாளர்களே!) அவர்களால் இயன்றால் உங்களை மார்க்கத்திலிருந்து திருப்பும்வரை ஓயாமல் உங்களுடன் போரிட்டுக்கொண்டே இருப்பார்கள். உங்களில் எவரேனும் தம் மார்க்கத்தை விட்டுவிலகி மறுத்த நிலையிலேயே இறந்தும் விட்டால் இம்மையிலும் மறுமையிலும் அவரின் நற்செயல்கள் யாவும் பாழாகிவிடும். அத்தகையவர்கள்தாம் நரகவாசிகள். அங்கு அவர்கள் நிலையாகக் கிடப்பார்கள். [218]நம்பிக்கைகொண்டு புலம்பெயர்ந்து இறைவழியில் பாடுபடுபவர்கள் அல்லாஹ்வின் அருளைத்தான் எதிர்பார்க்கின்றனர். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன்.

ரஜப் 2 ஹிஜ்ரியில், முஸ்லிம்களின் ஒரு குழுவிற்கும், குறைஷி இணை வைப்போரின் குழுவிற்குமிடையே மோதல் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் மக்காவிற்கும் தாயிஃபுக்கும் இடையில் உள்ள நக்லாவில் நடந்தது. குரைஷி இனத்தைச் சேர்ந்த ஒருவர் முஸ்லிம்களால் கொல்லப்பட்டார். இது ஜமாதி அல்-தானியின் 30ஆவது நாள் என்று முஸ்லிம்கள் நம்பினர். அந்த மாதம் 29 நாட்களை மட்டுமே கொண்டிருந்தது, அது ரஜப் மாதத்தின் முதல் நாளாக இருந்தது. ரஜப் மாதம் ஒரு புனித மாதமாகக் கருதப்படுகிறது. மேலும் பல நூற்றாண்டுகளாக இருந்த வழக்கத்தின் காரணமாக, இந்த விஷயத்தில் அரபுகளின் உணர்வுகள் மிகவும் தீவிரமாக இருந்தன. இதனால், முஸ்லிம்கள் புனித மாதங்களின் புனிதத்தன்மையைக் கூடக் கருத்தில் கொள்ளாத அளவுக்கு நியாயத்தைக் கடைப்பிடிப்பதிலிருந்து வெகு தொலைவில் உள்ளனர் என்று கூறி, முஸ்லிம்களுக்கும் இறுதித்தூதர் அவர்களுக்கும் அவப்பெயர் ஏற்படுத்தும் வாய்ப்பு எதிரிகளுக்குக் கிடைத்து விட்டது. புனித மாதத்தில் போர் செய்வது உறுதியாகப் பாவம் என்பதே பதிலாகச் சொல்லப்பட்டது. ஆனால் இந்தச் செயல் முஸ்லிம்களால் தவறுதலாக, தற்செயலாக நடந்தது. உங்கள் நிலைமையோ, நீங்கள் வேண்டுமென்றே தொடர்ந்து இதைவிடப் பெரிய குற்றங்களைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களிடையே இறைவனின் அழைப்புக்குரல் எழுப்பப்பட்டது. ஆனால்

நீங்கள் அதை ஏற்க மறுத்து, மற்றவர்களையும் அதை ஏற்றுக்கொள்ள விடாமல் தடுக்கிறீர்கள். இறையடியார்களுக்கு எதிராக இறைவனின் வீட்டுக் கதவை அடைத்து, அவர்களைத் தம் வீடுகளை விட்டு வெளியேறும்படி கட்டாயப்படுத்தும் அளவுக்கு, உங்களுடைய பிடிவாதமும் வெறுப்பும் உள்ளது. இறை மார்க்கத்தை நோக்கி நகர்பவர்கள், கைவிட வேண்டும் என்பதற்காக நீங்கள் பல்வேறு வழிகளில் அவர்களைத் துன்புறுத்துகிறீர்கள். இறைவனின் பாதையிலிருந்து ஒருவரை விலகச் செய்வது அவர்களைக் கொல்வதை விடக் கொடியது, ஒருவன் தானே பெரும் தீமைகளில் மூழ்கிக் கிடந்து, மற்றொருவரிடம் ஒரு சிறிய தவறைக் கண்டதும், அதனை விளம்பரப்படுத்தி, அவப்பெயரையும் ஏற்படுத்துவது இறைவனின் பார்வையில் பெரும் குற்றமாகும்.

எதிர்ப்பின் விளைவாக நம்பிக்கையாளர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டியதாகிறது. அவர்கள் தங்கள் மார்க்கத்தில் நிலைத்திருக்கத் தற்காப்புப் போர் செய்ய வேண்டிய அளவிற்குத் தள்ளப்படுகிறார்கள். இது ஏக இறைவனை வழிபடுபவர்களையும் ஏக இறைவனின் பகைவர்களையும் தனித்தனியாகப் பிரிக்கும் இருபக்கச் செயல்முறை ஆகும். இவ்வாறு ஒரு புறம் இறைவனை வழிபடாமல் தங்களைத் தாங்களே வழிபடுபவர்கள் யார் என்பது நிரூபணம் ஆகிறது. இவர்கள் இறைவனுக்கு அஞ்சாமல் தங்கள் சொந்த லாபத்திற்காக இறையடியார்களைத் துன்புறுத்துபவர்கள். மறுபுறம் இந்த நிகழ்வின் நடுவே நம்பிக்கை, புலப்பெயர்வு மற்றும் அறப்போர் ஆகிய நன்மைகள் வெளிப்படுகின்றன. சூழ்நிலைகளின் கடுமை இருந்தபோதிலும் இறைவன் மீது நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் யார், அதை இழந்தவர்கள் யார் என்பதை இது காட்டுகிறது.

يَسْـَٔلُوْنَكَ عَنِ الْخَمْرِ وَالْمَيْسِرِ ؕ قُلْ فِيْهِمَآ اِثْمٌ كَبِيْرٌ وَّ مَنَافِعُ
لِلنَّاسِ ز وَ اِثْمُهُمَآ اَكْبَرُ مِنْ نَّفْعِهِمَا ؕ وَيَسْـَٔلُوْنَكَ مَاذَا يُنْفِقُوْنَ ۬ؕ
قُلِ الْعَفْوَ ؕ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمُ الْاٰيٰتِ لَعَلَّكُمْ تَتَفَكَّرُوْنَ ۙ﴿۲۱۹﴾
فِي الدُّنْيَا وَالْاٰخِرَةِ ؕ وَيَسْـَٔلُوْنَكَ عَنِ الْيَتٰمٰى ؕ قُلْ اِصْلَاحٌ لَّهُمْ
خَيْرٌ ؕ وَ اِنْ تُخَالِطُوْهُمْ فَاِخْوَانُكُمْ ؕ وَاللّٰهُ يَعْلَمُ الْمُفْسِدَ مِنَ
الْمُصْلِحِ ؕ وَلَوْ شَآءَ اللّٰهُ لَاَعْنَتَكُمْ ؕ اِنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۲۲۰﴾

[219](நபியே!) மது பற்றியும் சூதாட்டம் பற்றியும் மக்கள் உம்மிடம் கேட்கின்றனர். ''அவ்விரண்டிலும் பெரும் பாவமுள்ளது; மக்களுக்குச் சில பயன்களும் இருக்கின்றன. அவற்றால் ஏற்படும் பயனைவிட அவற்றின் பாவம்தான் மிக அதிகம்'' என்று கூறுவீராக! ''அவர்கள் (இறைவழியில்) என்ன செலவு செய்யவேண்டும்?'' என்றும் உம்மிடம் கேட்கின்றனர். ''(உங்கள் தேவை போக) எஞ்சியிருப்பதைச் செலவு செய்யுங்கள்'' என்று கூறுவீராக! நீங்கள் சிந்திக்கும் பொருட்டு இவ்வாறு அல்லாஹ் கட்டளைகளை உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறான். [220]இம்மை மறுமை பற்றி நீங்கள் சிந்திப்பதற்காக (இவ்வாறு தெளிவுபடுத்துகிறான்). (நபியே!) அநாதைகளைப்பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். நீர் அவர்களிடம், ''அவர்களைச் சீர்படுத்துவது நன்மையானதாகும். நீங்கள் அவர்களுடன் கலந்(து வாழ்ந்)தால் அவர்கள் உங்கள் சகோதரர்களே. சீர்திருத்தம் செய்பவர் யார், தீங்கு செய்பவர் யார் என்பதை அல்லாஹ் நன்கறிவான். அல்லாஹ் விரும்பியிருந்தால் அவன் இதனை உங்களுக்குக் கடினமாக்கி இருப்பான். அல்லாஹ் யாவற்றினும் வல்லவன்; ஞானம்மிக்கவன்.

சில கேள்விகளுக்குப் பதிலளிப்பதோடு சில அடிப்படை விதிகள் இங்கே விளக்கப்பட்டுள்ளன: (1) ஒரு விஷயத்தின் தீங்கு அதன் நன்மையை விட அதிகமாக இருந்தால் அது கைவிடத்தக்கது. (2) தன்னுடைய உண்மையான தேவைகளை விட அதிகமாக இருக்கும் செல்வம் இறைவனின் பாதையில் கொடுக்கப்பட்டு விட வேண்டும். (3) பரஸ்பர நடவடிக்கைகளில் கெடுதலுக்குக் காரணமாக அமையும் வழிமுறைகளைத் தவிர்ப்பதும் சீர்திருத்தத்திற்கு வழி வழிவகுக்கும் முறைகளைப் பின்பற்றுவதும்.

மது அருந்துவதால் மனிதன் களிப்புறுகிறான். ஒரு சூதாட்டக்காரனுக்கு சில நேரங்களில் உழைப்பின்றி கணிசமாக செல்வம் கிடைத்து விடுகிறது. அந்த வகையில் இவற்றில் லாபத்தில் ஓர் அம்சம் உள்ளது. ஆனால் வேறு வகையில் இவை மார்க்க – தார்மீக தீமைகளைக் கொண்டிருக்கின்றன. இந்தத் தீமைகள் இவற்றின் நன்மைகளை விட மிக அதிகமானவை. அதனால்தான் இவை தடை செய்யப்பட்டன. ஒன்றை எடுத்துக்கொள்வதற்கும் விட்டு விடுவதற்கும் உள்ள இதே தரஅளவுகோல்கள் வாழ்க்கையின் மற்ற விவகாரங்களுக்கும் பொருந்தும். உதாரணத்திற்கு, மார்க்கமும் பொருளாதாரப் பகுப்பாய்வுகளும் கூறுகின்ற குறைந்த பலன்களையும் அதிகமான இழப்புகளையும் கொண்ட அனைத்து விதமான அரசியல் மற்றும் அரசியல் சாராத செயல்பாடுகள், அனைத்து விதமான நிகழ்வுகள் கூட்டங்கள், ஆகியவை கைவிடப்பட வேண்டியவையே.

ஒரு முஸ்லிம் மறுமையைத் தனது இலக்காகக் கொண்டவன்; தனது இறைவன் உவப்பு கொள்ள வேண்டும் என்ற ஏக்கத்துடன் தனது காலையையும் மாலையையும் கழிப்பவன். அத்தகைய ஒருவனுக்கு, உலகியல் சாதனங்கள் எல்லாம் வாழ்க்கையின் தேவையே அன்றி நோக்கம் அல்ல. அவன் செல்வத்தை ஈட்டுகிறான்; உலக விவகாரங்களில் திளைக்கிறான். ஆனால் இவை அனைத்தும் தேவை எனும் மட்டத்தில் நடக்கின்றனவே அன்றி இலக்கு எனும் மட்டத்தில் அல்ல. அவனுடைய சொத்தில் உண்மையான தேவைகளுக்கு அதிகமாக எது இருந்தாலும், அதைத் தன் இறைவனின் பாதையில் செலவிடுவதே அவனுடைய பார்வையில் சிறந்த பயன்பாடாக இருக்கிறது. அதன்மூலமாக இறைவன் அவன் மீது உவப்பு கொண்டு, தன்னுடைய கருணையின் நிழலில் அவனுக்கு இடம் அளிக்க வேண்டும் என்பதற்காக அவனிடம் உள்ள அனைத்தும் தேவை என்ற அளவில் அவனுக்கானது, தேவைக்கு அதிகமானது எதுவோ அது மார்க்கத்துக்கானது.

பெரும்பாலான பரஸ்பர கொடுக்கல் வாங்கல்கள், வணிகப் பிரச்சினைகள் போன்றவை மிகவும் சிக்கலானவையாக இருக்கின்றன. அவை தொடர்பாக அடிப்படை வழிகாட்டுதல்களை மட்டுமே வழங்க முடியும். அவற்றின் நடைமுறை விவரங்கள் அனைத்தையும் சட்டத்தின் மொழியில் வரையறைக்க முடியாது. இந்த விஷயத்தில், ஒரு விதி முடிவுசெய்யப்பட்டுவிட்டது. அதாவது ஒருவர் தனது எண்ணங்களைச் சரியானதாக வைத்திருக்க வேண்டும்; எதைச் செய்தாலும் அது எந்தத் தீங்கிற்கும் காரணமாகி விடக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு அதைச் செய்ய வேண்டும் என்பதே. மாறாக, அது அவருக்கு நன்மை பயக்கக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். நீங்கள் இன்னொருவரை உங்கள் சகோதரராகக் கருதி, அவரது நலன்களை முழுமையாகக் கருத்தில் கொண்டு, சீர்திருத்தம் செய்வதே உங்கள் ஒரே குறிக்கோளாக இருந்தால், இறைவனிடம் நீங்கள் பிடிபட மாட்டீர்கள்.

وَلَا تَنْكِحُوا الْمُشْرِكٰتِ حَتّٰى يُؤْمِنَّ ؕ وَلَاَمَةٌ مُّؤْمِنَةٌ خَيْرٌ مِّنْ
مُّشْرِكَةٍ وَّلَوْ اَعْجَبَتْكُمْ ۚ وَلَا تُنْكِحُوا الْمُشْرِكِيْنَ حَتّٰى يُؤْمِنُوْا ؕ
وَلَعَبْدٌ مُّؤْمِنٌ خَيْرٌ مِّنْ مُّشْرِكٍ وَّلَوْ اَعْجَبَكُمْ ؕ اُولٰٓئِكَ يَدْعُوْنَ
اِلَى النَّارِ ۖۚ وَاللّٰهُ يَدْعُوْٓا اِلَى الْجَنَّةِ وَالْمَغْفِرَةِ بِاِذْنِهٖ ۚ وَيُبَيِّنُ
اٰيٰتِهٖ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَذَكَّرُوْنَ ﴿۲۲۱﴾ وَيَسْـَٔلُوْنَكَ عَنِ الْمَحِيْضِ ؕ
قُلْ هُوَ اَذًى ۙ فَاعْتَزِلُوا النِّسَآءَ فِى الْمَحِيْضِ ۙ وَلَا تَقْرَبُوْهُنَّ

حَتّٰى يَطۡهُرۡنَ ۚ فَاِذَا تَطَهَّرۡنَ فَاۡتُوۡهُنَّ مِنۡ حَيۡثُ اَمَرَكُمُ اللّٰهُ ؕ
اِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيۡنَ وَ يُحِبُّ الۡمُتَطَهِّرِيۡنَ ﴿۲۲۲﴾ نِسَآؤُكُمۡ
حَرۡثٌ لَّكُمۡ ۪ فَاۡتُوۡا حَرۡثَكُمۡ اَنّٰى شِئۡتُمۡ ۫ وَ قَدِّمُوۡا لِاَنۡفُسِكُمۡ ؕ
وَ اتَّقُوا اللّٰهَ وَ اعۡلَمُوۡۤا اَنَّكُمۡ مُّلٰقُوۡهُ ؕ وَ بَشِّرِ الۡمُؤۡمِنِيۡنَ ﴿۲۲۳﴾

[221] *(நம்பிக்கையாளர்களே!) இணைவைக்கும் பெண்களை அவர்கள் நம்பிக்கைகொள்ளும் வரை நீங்கள் திருமணம் செய்து கொள்ளாதீர்கள். இணைவைக்கும் பெண் உங்கள் மனம் கவர்ந்தவளாக இருந்தபோதிலும் அவளைவிட நம்பிக்கைகொண்ட அடிமைப் பெண் சிறந்தவள் ஆவாள். இணைவைக்கும் ஆண்களுக்கு அவர்கள் நம்பிக்கை கொள்ளும்வரை (உங்கள் பெண்களைத்) திருமணம் செய்து வைக்கவேண்டாம். இணைவைப்பவன் உங்களுக்குப் பிடித்தமானவனாக இருந்தாலும், நம்பிக்கைகொண்ட அடிமை ஆண் அவனைவிடச் சிறந்தவன் ஆவான். இவர்கள் நரகத்தின்பால் (உங்களை) அழைக்கின்றனர். அல்லாஹ்வோ தன் கட்டளையால் (உங்களைச்) சொர்க்கத்தின்பாலும் மன்னிப்பின்பாலும் அழைக்கின்றான். மக்கள் அறிவுரை பெறும் பொருட்டுத் தன் கட்டளைகளை அவன் தெளிவுபடுத்துகிறான்.*

[222] *(நபியே!) அவர்கள் உம்மிடம் மாதவிலக்கு குறித்துக் கேட்கின்றனர். நீர் கூறும்: ''அது ஓர் உபாதையாகும். அந்தக் காலங்களில் பெண்களைவிட்டு விலகியிருங்கள். அவர்கள் தூய்மையடையும்வரை அவர்களை நெருங்க வேண்டாம். அவர்கள் தூய்மையடைந்தபின் அல்லாஹ் கட்டளையிட்ட முறைப்படி அவர்களை நெருங்குங்கள். பாவத்திலிருந்து மீள்வோரையும் தூய்மையானவர்களையும் அல்லாஹ் நேசிக்கிறான்'' என்று நீர் கூறுவீராக!*

[223] *''உங்கள் மனைவியர் உங்கள் விளைநிலங்கள் ஆவர். எனவே உங்கள் விளைநிலங்களுக்கு நீங்கள் விரும்பியவாறு செல்லுங்கள். உங்களுக்காக (நல்லறங்களை) முன்னரே செய்து வைத்துக்கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அறிந்துகொள்ளுங்கள், உறுதியாக நீங்கள் அவனைச் சந்தித்தே தீரவேண்டும்'' என நம்பிக்கையாளர்களுக்கு (நபியே!) நற்செய்தி கூறி விடுவீராக!*

ஓர் ஆணும் பெண்ணும் திருமணத்தின் மூலம் ஒருவருக்கொருவர் துணையாக மாறுவதன், உண்மையான நோக்கம் உடல் சார்ந்த இன்பம் அல்ல, மாறாக ஒரு விவசாயிக்கும், வயலுக்கும் இடையிலான உறவைப் போன்ற ஒரு உரிய கோரிக்கை கொண்ட உறவாகும். விவசாயத்தைத் திட்டமிடுபவர் எவ்வளவு தீவிரமாக இருக்கிறாரோ, அதே அளவுக்கு ஒரு மனிதன் இதிலும் தீவிரமாக இருக்க வேண்டும். இது தொடர்பாக சில விஷயங்களைக் கருத்தில் கொள்வது அவசியமாகிறது.

ஒன்று, ஒரு துணையைத் தேர்ந்தெடுக்கும்போது கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விஷயம் இறைநம்பிக்கை. கணவன் மனைவி இடையேயான உறவு மிகவும் மென்மையானது. இது பல உளவியல் சார்ந்த, குடும்ப சமூக அம்சங்களைக் கொண்டுள்ளது. இரண்டு பேருக்கு இடையேயான இவ்வகையான உறவு நம்பிக்கை சார்ந்த ஒற்றுமை இல்லாமல் இருந்தால், அது இறுதியில் இருவரில் ஒருவரின் அழிவுக்கு வழிவகுக்கும். ஓர் இறைநம்பிக்கையாளர் தனது நம்பிக்கைக்கு எதிரான துணையுடன் மத அடிப்படையில் சமரசம் செய்து கொண்டால், அவர் தனது மார்க்கத்தை அழிவுக்குள்ளாக்கிவிட்டார் என்று பொருள். அவர் சமரசம் செய்துகொள்ளவில்லை என்றால், இருவருக்கும் இடையே ஏற்படும் சச்சரவு அவர்களது வீட்டை அழிவுக்குள்ளாக்கிவிடும். இரண்டாவது விஷயம், இரு பாலினருக்கும் இடையிலான இந்த உறவு, இறைவனின் வடிவமைப்பின்படி, அதன் இயல்பான வழியில் நிறுவப்பட வேண்டும். இயற்கையும் இறைவனின் கட்டளைதான். குர்ஆனின் சொற்களாலான கட்டளைகளைப் பின்பற்றுவது அவசியம் என்பது போலவே, இறைவன் நமக்காகப் படைத்த இயற்கை அமைப்பையும் பின்பற்றுவது அவசியம். மூன்றாவது விஷயம், ஒவ்வொரு கட்டத்திலும் இறையச்சம் மனிதனைக் கட்டுப்படுத்த வேண்டும். அவன் எந்த அணுகுமுறையைக் கடைப்பிடித்தாலும், இறுதியில் வெளிப்படையான – மறைந்த அனைத்தையும் அறிந்த அனைத்துலகங்களின் இறைவனிடம் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் அதைச் செய்ய வேண்டும். "உங்களுக்காக (நல்லறங்களை) முன்னரே செய்து கொள்ளுங்கள்" என்பதற்கு உங்களுடைய மறுமைக்காக நற் செயல்களைச் செய்து அனுப்புங்கள் என்று பொருள். அதாவது, நீங்கள் எதைச் செய்தாலும், உங்களுடைய எந்தவொரு வேலையும் வெறும் உலகம் சார்ந்த வேலை அல்ல, மாறாக ஒவ்வொரு வேலையுடனும் மறுமை சார்ந்த ஓர் அம்சம் உள்ளது என்பதைப் புரிந்துகொண்டு செய்யுங்கள். மரணத்திற்குப் பிறகு, நீங்கள் மறுமையின் இந்த அம்சத்தை எதிர்கொள்ளப் போகிறீர்கள். இந்த விஷயத்தில் நீங்கள் மிகவும் விழிப்போடு இருக்க வேண்டும், அப்போதுதான் உங்கள் செயல்கள் மறுமையின் அளவுகோலில் நேர்மையான செயல்பாடாகக் கருதப்படும். நேர்மையற்ற செயல்பாடாகக் கருதப்பட மாட்டாது.

وَلَا تَجْعَلُوا اللّٰهَ عُرْضَةً لِّاَيْمَانِكُمْ اَنْ تَبَرُّوْا وَ تَتَّقُوْا وَ
تُصْلِحُوْا بَيْنَ النَّاسِ ؕ وَ اللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۲۲۴﴾ لَا يُؤَاخِذُكُمُ اللّٰهُ
بِاللَّغْوِ فِيْۤ اَيْمَانِكُمْ وَ لٰكِنْ يُّؤَاخِذُكُمْ بِمَا كَسَبَتْ قُلُوْبُكُمْ ؕ
وَ اللّٰهُ غَفُوْرٌ حَلِيْمٌ ﴿۲۲۵﴾ لِلَّذِيْنَ يُؤْلُوْنَ مِنْ نِّسَآئِهِمْ تَرَبُّصُ
اَرْبَعَةِ اَشْهُرٍ ۚ فَاِنْ فَآءُوْ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۲۲۶﴾ وَ اِنْ
عَزَمُوا الطَّلَاقَ فَاِنَّ اللّٰهَ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۲۲۷﴾ وَ الْمُطَلَّقٰتُ
يَتَرَبَّصْنَ بِاَنْفُسِهِنَّ ثَلٰثَةَ قُرُوْٓءٍ ؕ وَ لَا يَحِلُّ لَهُنَّ اَنْ
يَّكْتُمْنَ مَا خَلَقَ اللّٰهُ فِيْۤ اَرْحَامِهِنَّ اِنْ كُنَّ يُؤْمِنَّ بِاللّٰهِ
وَ الْيَوْمِ الْاٰخِرِ ؕ وَ بُعُوْلَتُهُنَّ اَحَقُّ بِرَدِّهِنَّ فِيْ ذٰلِكَ اِنْ
اَرَادُوْٓا اِصْلَاحًا ؕ وَ لَهُنَّ مِثْلُ الَّذِيْ عَلَيْهِنَّ بِالْمَعْرُوْفِ ۪
وَ لِلرِّجَالِ عَلَيْهِنَّ دَرَجَةٌ ؕ وَ اللّٰهُ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۲۲۸﴾ ع ۲۸ ۱۲

224 ***"மனிதர்களே! நீங்கள் நன்மை செய்வதற்கும் இறையச்சத்தைக் கடைப்பிடிப்பதற்கும் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தடையாகச் செய்யும் சத்தியங்களுக்கு அல்லாஹ்வின் பெயரைப் பயன்படுத்தி விடாதீர்கள். அல்லாஹ் செவியேற்பவன்; முற்றும் அறிபவன். ***225*** நீங்கள் செய்யும் பொருளற்ற சத்தியங்களுக்காக அல்லாஹ் உங்களைக் குற்றவாளியாக்கமாட்டான். ஆனால் உளப்பூர்வமாக நீங்கள் செய்யும் சத்தியங்களுக்காக உங்களைக் குற்றவாளியாக்குவான். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; சகிப்புத்தன்மையுடையவன். ***226*** தங்கள் மனைவியருடன் கூடுவதில்லை என்று சத்தியம் செய்து விலகியிருப்பவர்களுக்கு நான்கு மாதங்கள் வரை காலக்கெடு உண்டு. அதற்குள் அவர்கள் (தங்கள் சத்தியத்தைக் கைவிட்டு மனைவியரிடம்) திரும்பிவிட்டால் (மண உறவு தொடரும்.) - அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் நிகரற்ற அன்பாளனாகவும் இருக்கிறான். ***227*** ஆனால் அவர்கள் மணவிலக்குச் செய்யத் தீர்மானித்துவிட்டால் (காலக்கெடு முடிவில் மண உறவு முறிந்துவிடும்). உறுதியாக அல்லாஹ் செவியுறுபவன்; முற்றும் அறிந்தவன். ***228*** மணவிலக்குச் சொல்லப்பட்ட பெண்கள்***

மூன்று மாதவிலக்கு (முடியும்) வரை பொறுத்திருக்க வேண்டும். அவர்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் அவர்களின் கருவறையில் அல்லாஹ் படைத்திருப்பதை மறைக்கக் கூடாது. அத்தவணைக்குள் அவர்(களுடைய கணவர்)கள் இணக்கத்தை விரும்பினால் (அக்)கணவர்களுக்கு அவர்களை மீண்டும் அழைத்துக்கொள்ள உரிமை உண்டு. அப்பெண்களுக்குப் பொதுவான வழக்கப்படி உரிமைகள் இருப்பது போலவே கடமைகளும் உள்ளன. ஆண்களுக்கு அவர்களைவிடச் சற்று அதிகமாகவே உள்ளன. அல்லாஹ் யாவற்றினும் வல்லவன்; ஞானம் மிக்கவன்.

ஒரு மனிதன் சில சமயங்களில், பிடிவாதத்தாலும் கோபத்தாலும், ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு ஒருபோதும் நல்லது செய்யமாட்டேன் என்று சத்தியம் செய்து விடுகிறான். பண்டைய காலங்களில், இத்தகைய சத்தியங்கள் மிக அதிகமாக அரேபியர்களிடையே பழக்கத்தில் இருந்தன. அவர்கள் ஒரு நல்ல செயலையோ, சீர்திருத்தப் பணியையோ செய்ய மாட்டோம் என்று சத்தியம் செய்துவிடுவார்கள், மேலும் அத்தகைய செயலுக்காக அழைக்கப்பட்டால், "நாங்கள் அதைச் செய்ய மாட்டோம் என்று சத்தியம் செய்துவிட்டோமே" என்று கூறுவார்கள். நான் ஒரு நல்ல செயலைச் செய்ய மாட்டேன் என்று சொல்வதே தவறானது, அதுவும் இறைவனின் பெயரால் அதைச் செய்வதாக சத்தியம் செய்வது இன்னும் தவறான ஒன்று. ஏனென்றால் இறைவன் முற்றிலும் அருளானவனாகவும் நன்மையானவனாகவும் இருக்கிறான். அப்படியானால், அத்தகைய இறைவனின் பெயரைச் சொல்லிக் கொண்டு அருளும் நன்மையும் கொண்ட செயல்களிலிருந்து தன்னை விலக்கிக் கொள்வது எப்படி சரியானதாக இருக்க முடியும்? சீர்குலைத்தல் எல்லா நிலைகளிலும் மோசமானதுதான். ஆனால் அந்தச் சீர்குலைவு இறைவனின் பெயராலும் அவனது மார்க்கத்தின் பெயராலும் செய்யப்பட்டால், அதன் தீமை இன்னும் அதிகம் பெருகி விடுகிறது.

சிலர் அடிக்கடி சத்தியம் செய்வதைத் தம் பேச்சின் பகுதியாக்கிக் கொள்கிறார்கள், மேலும் தற்செயலாக சத்தியம் செய்யும் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இது அபத்தமானது. ஒவ்வொரு மனிதனும் இதிலிருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டும். இருப்பினும், கணவன்-மனைவி இடையேயான உறவின் மென்மைத் தன்மை காரணமாக, இத்தகைய சந்தர்ப்பங்களில் அத்தகைய சத்தியங்கள் சட்டப்பூர்வமாக பாதிப்பில்லாததாகக் கொள்ளப்பட்டது. ஆனால், ஒருவர் நன்றாகச் சிந்தித்து மனப்பூர்வமாக உச்சரிக்கும் வார்த்தைகள் முற்றிலும் மாறுபட்ட நோக்கிலானவை. எனவே, ஒருவர் தனது மனைவியிடம் செல்லமாட்டேன்

என்று முடிவெடுத்து மனப்பூர்வமாக சத்தியம் செய்து கொள்ளும்போது, அது ஒரு கவனிக்கத்தக்க செயலாகக் கருதி, சட்டப் பிரச்சினையாகக் கொள்ளப்பட்டு அதற்கான சட்டதிட்டங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன.

குடும்ப அமைப்பில் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அனைவருக்கும் உரிமைகளும் உள்ளன. பொறுப்புகளும் உள்ளன. ஒவ்வொரு மனிதனும், மற்றவர்களிடமிருந்து தங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் அதே நேரத்தில், மற்றவர்களுக்கான தங்கள் கடமைகளையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். ஒரு மனிதன் தற்செயலான சூழ்நிலைகளையோ தனது இயல்பான செல்வாக்கையோ பயன்படுத்தி மற்றவர்களுக்கு அநீதி இழைத்தால், அவன் இறைவனின் பிடியிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது.

اَلطَّلَاقُ مَرَّتٰنِ ۪ فَاِمۡسَاكٌۢ بِمَعۡرُوۡفٍ اَوۡ تَسۡرِيۡحٌۢ بِاِحۡسَانٍ ؕ
وَلَا يَحِلُّ لَـكُمۡ اَنۡ تَاۡخُذُوۡا مِمَّاۤ اٰتَيۡتُمُوۡهُنَّ شَيۡـًٔا اِلَّاۤ اَنۡ
يَّخَافَاۤ اَلَّا يُقِيۡمَا حُدُوۡدَ اللّٰهِ ؕ فَاِنۡ خِفۡتُمۡ اَلَّا يُقِيۡمَا
حُدُوۡدَ اللّٰهِ ۙ فَلَا جُنَاحَ عَلَيۡهِمَا فِيۡمَا افۡتَدَتۡ بِهٖ ؕ تِلۡكَ
حُدُوۡدُ اللّٰهِ فَلَا تَعۡتَدُوۡهَا ۚ وَمَنۡ يَّتَعَدَّ حُدُوۡدَ اللّٰهِ
فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوۡنَ ﴿۲۲۹﴾ فَاِنۡ طَلَّقَهَا فَلَا تَحِلُّ لَهٗ مِنۡۢ
بَعۡدُ حَتّٰى تَنۡكِحَ زَوۡجًا غَيۡرَهٗ ؕ فَاِنۡ طَلَّقَهَا فَلَا جُنَاحَ
عَلَيۡهِمَاۤ اَنۡ يَّتَرَاجَعَاۤ اِنۡ ظَنَّاۤ اَنۡ يُّقِيۡمَا حُدُوۡدَ
اللّٰهِ ؕ وَتِلۡكَ حُدُوۡدُ اللّٰهِ يُبَيِّنُهَا لِقَوۡمٍ يَّعۡلَمُوۡنَ ﴿۲۳۰﴾
وَاِذَا طَلَّقۡتُمُ النِّسَآءَ فَبَلَغۡنَ اَجَلَهُنَّ فَاَمۡسِكُوۡهُنَّ
بِمَعۡرُوۡفٍ اَوۡ سَرِّحُوۡهُنَّ بِمَعۡرُوۡفٍ ۪ وَّلَا تُمۡسِكُوۡهُنَّ
ضِرَارًا لِّتَعۡتَدُوۡا ۚ وَمَنۡ يَّفۡعَلۡ ذٰلِكَ فَقَدۡ ظَلَمَ نَفۡسَهٗ ؕ
وَلَا تَتَّخِذُوۡۤا اٰيٰتِ اللّٰهِ هُزُوًا ۟ وَّاذۡكُرُوۡا نِعۡمَتَ اللّٰهِ

عَلَيْكُمْ وَمَآ اَنْزَلَ عَلَيْكُمْ مِّنَ الْكِتٰبِ وَالْحِكْمَةِ يَعِظُكُمْ
بِهٖ ؕ وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ بِكُلِّ شَىْءٍ عَلِيْمٌ ﴿٢٣١﴾ ع

[229](இவ்வாறு மீட்டுக் கொள்ளக்கூடிய) மணவிலக்கு இரு முறைதான் கூற முடியும். (காலக்கெடு முடியுமுன்) முறைப்படி அவர்களை (மனைவியராக) இருத்திக் கொள்ளலாம் அல்லது நல்லமுறையில் அவர்களை விடுவித்துவிடலாம். நீங்கள் உங்கள் மனைவியருக்குக் கொடுத்தவற்றிலிருந்து எதையும் எடுத்துக் கொள்வது அனுமதிக்கப்படவில்லை. அன்றி, (மனைவி கணவனைவிட்டு விலக விரும்பும் சூழ்நிலையில்) அல்லாஹ்வின் (ஒழுக்க)வரம்புகளுக்குள் நிலைத்திருக்க முடியாது என (அக்கணவன் மனைவியாகிய இருவரும்) அஞ்சினால், மேலும் அவ்விருவரும் இறை வரம்புகளுக்குள் நிலைத்திருக்க மாட்டார்கள் என்று (நடுவர்களாக அமைந்த) நீங்களும் அஞ்சினால், மனைவி (கணவனிடமிருந்து பெற்றவற்றுள் மணவிலக்கு நிகழ்வதற்காக) எதையேனும் ஈடாகக் கொடுத்துப் பிரிந்து விடுவதில் அவர்கள் மீது தவறில்லை. இவை இறைவரம்புகளாகும் இவற்றை மீறிவிடாதீர்கள். இறைவரம்புகளை மீறுபவர்கள்தாம் தீவினையாளர்கள். [230]அவன் அவளுக்கு (மூன்றாம் முறையாக) மணவிலக்குக் கூறிவிட்டால் அதன்பிறகு அப்பெண் வேறொரு(வனைத்) திருமணம் செய்து, அவன் மணவிலக்கு அளித்தால் அன்றி முதல் கணவனுக்கு அவள் அனுமதிக்கப்பட்டவள் அல்ல. இரண்டாவது கணவன் மணவிலக்கு அளித்துவிடும் நிலையில் முதல் கணவனும் அவளும் இறைவரம்புகளைப் பேணமுடியும் என்று எண்ணினால் மீண்டும் இணைந்துகொள்வதில் எந்தக் குற்றமுமில்லை. இவை இறைவரம்புகளாகும். அறிவுள்ள மக்களுக்கு இவற்றை அவன் தெளிவுபடுத்துகிறான். [231]நீங்கள் பெண்களை மணவிலக்குச் சொல்லித் தமக்குரிய காலக்கெடுவின் இறுதிப்பகுதியை (அவர்கள்) அடைந்துவிட்டால் (அது முடிவதற்குள்) முறைப்படி அவர்களை (மனைவியராக) இருத்திக் கொள்ளுங்கள்; அல்லது (காலக்கெடு முடிவில்) அவர்களை நல்ல விதமாக அனுப்பிவிடுங்கள். துன்புறுத்துவதற்காகவும் வரம்பு மீறுவதற்காகவும் அவர்களை நீங்கள் தடுத்து நிறுத்தி வைக்காதீர்கள். அவ்வாறு செய்பவர் தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்டவர் ஆவார். இறை வசனங்களை ஏளனமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். அல்லாஹ் உங்கள் மீது பொழிந்துள்ள அருட்கொடைகளையும் அவன் உங்களுக்கு அறிவுரையாக அருளிய அவனது வேதத்தையும் ஞானத்தையும்

நினைவுகூருங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவன் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

மணவிலக்கு என்பது வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளில் நிகழும் ஒரு வழக்கத்திற்கு மாறான நிகழ்வாகும். ஆனால் மிகவும் உணர்வுபூர்வமான இந்த நிகழ்வில் கூட, இறையச்சத்தின் மீதும் கருணையின் மீதும் உறுதியாக நிலைத்திருக்கும்படி கட்டளை இடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து, இவ்வுலக வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையாளரிடம் இறைவன் எவ்விதமான நடத்தையை எதிர்பார்க்கிறான் என்பதை அறிந்துகொள்ளலாம்.

திருமண உறவை ஒரேயடியாக முறிப்பதற்குப் பதிலாக, மூன்று கட்டங்களில் அதனை நிறைவேற்றக் கட்டளை இடப்பட்டது, இது சில மாதங்களில் முடிவுக்கு வரும். மிகவும் உணர்ச்சிக் கொந்தளிப்பான ஒரு நிகழ்வில், இதுபோன்ற கருத்து வேறுபாடு ஏற்படும் நேரங்களில் சீரிய வழிமுறை வகுக்கப்பட்டு ஒரு நம்பிக்கையாளரின் அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று விளக்கப்பட்டது. எதிர்த் தரப்பிடம் அவர் நடந்து கொள்ளும் விதமானது, உணர்ச்சிவசப்படாத முறையில் சிந்தித்துப் பொறுமையாக எடுக்கப்படும் முடிவாக இருக்க வேண்டும், கோபத்தின்கீழ் வெளிப்படுகின்ற திடீர் முடிவாக இருக்கக்கூடாது. இதைப்போலவே, மணவிலக்குக்காகத் தீர்மானிக்கப்பட்ட நெறிமுறைகள் அனைத்திலும் வாழ்க்கைக்கான ஓர் ஆழமான பாடம் இருக்கிறது. அதாவது பிரிந்து செல்ல முடிவு செய்த பிறகும்கூட, மனிதன் மீண்டும் ஒன்றிணைவதற்கான சாத்தியக்கூறுகளைப் பற்றிச் சிறிது காலத்திற்குத் தொடர்ந்து சிந்திக்க வேண்டும். உறவுகளை முடிவுக்குக் கொண்டுவரும் நிலை வந்துவிட்டாலும் கூட, அவர்கள் அதை மனித உரிமைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஒப்பாக்கி விடக்கூடாது. பரஸ்பர நடத்தை முறையில் இறைவனின் சட்டத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். மார்க்கச் சட்டத்தின் (ஷரியா) எந்தக் கட்டளையையும் சட்ட தந்திரங்கள் மூலம் செல்லுபடியற்றவையாக்கி விடக்கூடாது. சட்டத்தை ஏற்று நடப்பதில், ஒருவர் சட்டத்தின் வார்த்தைகளை மட்டும் பார்க்காமல், அதிலுள்ள ஞானத்தையும் சட்டத்தின் ஆன்மாவையும் கருத்தில்கொள்ள வேண்டும். பிரிவதற்கு முன்பு தன் முன்னாள் துணைக்குக் கொடுத்தவற்றைத் திரும்பப் பெற முயற்சி செய்யக் கூடாது. உறவு காலத்தில் நல்ல முறையில் கழித்தது போலவே, பிரிவு காலத்தையும் நல்ல முறையில் கழிக்க வேண்டும்.

وَ اِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَبَلَغْنَ اَجَلَهُنَّ فَلَا تَعْضُلُوْهُنَّ
اَنْ يَّنْكِحْنَ اَزْوَاجَهُنَّ اِذَا تَرَاضَوْا بَيْنَهُمْ بِالْمَعْرُوْفِ ؕ

ذٰلِكَ يُوْعَظُ بِهٖ مَنْ كَانَ مِنْكُمْ يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ
الْاٰخِرِ ؕ ذٰلِكُمْ اَزْكٰى لَكُمْ وَاَطْهَرُ ؕ وَاللّٰهُ يَعْلَمُ وَاَنْتُمْ
لَا تَعْلَمُوْنَ ﴿۲۳۲﴾ وَالْوَالِدٰتُ يُرْضِعْنَ اَوْلَادَهُنَّ حَوْلَيْنِ كَامِلَيْنِ
لِمَنْ اَرَادَ اَنْ يُّتِمَّ الرَّضَاعَةَ ؕ وَعَلَى الْمَوْلُوْدِ لَهٗ رِزْقُهُنَّ
وَكِسْوَتُهُنَّ بِالْمَعْرُوْفِ ؕ لَا تُكَلَّفُ نَفْسٌ اِلَّا وُسْعَهَا ۚ لَا تُضَآرَّ
وَالِدَةٌۢ بِوَلَدِهَا وَلَا مَوْلُوْدٌ لَّهٗ بِوَلَدِهٖ ۚ وَعَلَى الْوَارِثِ مِثْلُ ذٰلِكَ ۚ
فَاِنْ اَرَادَا فِصَالًا عَنْ تَرَاضٍ مِّنْهُمَا وَتَشَاوُرٍ فَلَا جُنَاحَ عَلَيْهِمَا ؕ
وَاِنْ اَرَدْتُّمْ اَنْ تَسْتَرْضِعُوْٓا اَوْلَادَكُمْ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ
اِذَا سَلَّمْتُمْ مَّآ اٰتَيْتُمْ بِالْمَعْرُوْفِ ؕ وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ
بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿۲۳۳﴾

[232]நீங்கள் உங்கள் மனைவியரை மணவிலக்குச் செய்து அவர்கள் தங்கள் காலக்கெடுவை நிறைவு செய்தபிறகு மனம் விரும்பி வேறு துணைவர்களை ஒழுங்கான முறைப்படி மணந்து கொள்வதைத் தடுக்காதீர்கள். உங்களில் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கைகொண்டவர்களுக்கு இவ்வாறு அறிவுரை கூறப்படுகிறது. இதுவே உங்களுக்கு மிக நேர்மையானதும் தூய்மையானதும் ஆகும். அல்லாஹ் நன்கறிவான், நீங்கள் அறியமாட்டீர்கள். [233]பாலூட்டுவதை முழுமைப்படுத்த விரும்புகிற (கண)வர்களுக்காக (மணவிலக்குச் செய்யப்பட்ட பிறகும்) தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுகள் பாலூட்ட வேண்டும். இந்நிலையில் தாய்மார்களுக்குரிய உணவையும் உடையையும் முறைப்படி தரவேண்டியது குழந்தையின் தந்தை மீதுள்ள பொறுப்பாகும். எவர்மீதும் அவரின் சக்திக்கு உட்பட்டே தவிரப் பொறுப்பு சுமத்தப்படாது. தாயும் தனது குழந்தையினால் சிரமத்திற்குள்ளாக்கப்படமாட்டாள். தந்தையும் தனது குழந்தையினால் சிரமத்திற்குள்ளாக்கப்படமாட்டான். (தந்தை இறந்துவிட்டால்) அவனது வாரிசுக்கு இப்பொறுப்பு உண்டு. (மணவிலக்கான) அவர்கள் இருவரும் தங்களுக்குள் ஆலோசித்துப் பாலூட்டுவதை மனநிறைவோடு நிறுத்த விரும்பினால் இருவர்

மீதும் எந்தக் குற்றமுமில்லை. உங்கள் குழந்தைகளுக்குச் செவிலித் தாய்மார்கள் மூலம் பாலூட்ட விரும்பினால் அப்போதும் உங்கள்மீது எந்தக் குற்றமும் இல்லை. ஆனால் அவர்களுக்கு நீங்கள் வரையறுத்ததை முறைப்படி கொடுத்துவிடவேண்டும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

ஒரு பெண்ணை அவளது கணவர் மனவிலக்கு செய்கிறார். காத்திருப்புக் காலத்தில் அவர் அவளைத் திரும்ப ஏற்றுக் கொள்ளவில்லை. காத்திருப்புக் காலம் முடிந்த பிறகு அந்தப் பெண்ணின் முந்தைய கணவரும் மற்றவர்களோடு திருமணத் தூது அனுப்புகிறார். அந்தப் பெண் தனது முந்தைய கணவரை மறுமணம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டார். ஆனால், அந்தப் பெண்ணின் சகோதரர் கோபமடைந்து அந்தத் திருமணத்தை நிறுத்திவிட்டார். இருவரும் திருமண உறவை மீண்டும் நிலை நாட்ட ஒப்புக்கொண்டால் நீங்கள் அவர்களைத் தடுக்க வேண்டாம் என்ற கட்டளை அப்போது அருளப்பட்டது.

மனவிலக்கிற்குப் பிறகும் கூடப் பல பிரச்சனைகள் தொடர்ந்து இருக்கவே செய்கின்றன. சில சமயங்களில் முந்தைய கணவருடன் மறுமணம் செய்து கொள்ளும் சூழ்நிலையும் ஏற்படுவதுண்டு. சில நேரங்களில் விவாகரத்து பெற்ற பெண் மற்றோர் ஆணை மணம் புரிய விரும்புவாள். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளை உருவாக்குவது சரியல்ல. சில நேரங்களில் விவாகரத்து பெற்ற பெண்ணுக்குக் குழந்தைகள் இருக்கலாம், மேலும் அவளுடைய முன்னாள் கணவரின் குழந்தைக்குப் பாலூட்டுவதில் அவளுக்குச் சிக்கல் ஏற்படலாம். அத்தகைய சூழ்நிலையில், ஒருவர் மற்றவரை இன்னலுக்குள்ளாக்குவது தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் அந்த விஷயத்தை உணர்ச்சிக்குரிய பிரச்சினையாக மாற்றாமல், பரஸ்பர ஆலோசனை, சம்மதம் ஆகியவற்றின் மூலம் அதைத் தீர்த்துக் கொள்ளுமாறு கட்டளையிடப்பட்டது. இதிலிருந்து கருத்து வேறுபாடு, மணவிலக்கு ஆகியவற்றின் போது ஒரு நம்பிக்கையாளனுக்குரிய பிரச்சினைகளைக் கையாளும் வழிமுறை எத்தகையது என்ற புரிதல் நமக்குக் கிடைக்கிறது. அதாவது, இரு தரப்பினரின் மீதமுள்ள பிரச்சினைகளை ஒருவருக்கொருவர் தொல்லை கொடுப்பதற்கான வாய்ப்பாக மாற்றக்கூடாது, மாறாக அவற்றை இரு தரப்பினருக்கும் சிறந்ததாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் ஆக்கிக்கொள்ள வேண்டும். நம்பிக்கை என்பது ஆன்மாவின் தூய்மை. அப்படியானால், ஆன்மா தூய்மையடைந்த ஒருவர் தங்கள் விவகாரங்களில் எவ்வாறு தூய்மையற்ற அணுகுமுறையை ஏற்க முடியும்?

சரியாக இருக்கிறது என்கின்ற காரணத்தினால் மட்டுமே அறிவுரை ஒருவருக்கு ஏற்றக்கொள்ளத் தக்கதாக ஆகி விடுவதில்லை அறிவுரையைக் கேட்பவன் இறைவனை நம்புவதும் அவனிடம் பிடிபடுவோம் என்று அஞ்சுவதும் அவசியம். அறிவுரை வழங்குபவரின் அறிவுரையை மறுக்க இன்று நான் சில வார்த்தைகளைக் கொண்டிருந்தாலும் அதன் மூலமாக உண்மையான பிரச்சனை தீர்ந்துவிடப் போவதில்லை என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், இந்தப் பிரச்சனை இறுதியில் இறைவனுடைய நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும். அங்கே எந்தவிதமான வலிமையும் வாய்மொழி வாதமும் பயன் தரப் போவதில்லை.

وَالَّذِيْنَ يُتَوَفَّوْنَ مِنْكُمْ وَيَذَرُوْنَ اَزْوَاجًا يَّتَرَبَّصْنَ بِاَنْفُسِهِنَّ
اَرْبَعَةَ اَشْهُرٍ وَّعَشْرًا ۚ فَاِذَا بَلَغْنَ اَجَلَهُنَّ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ
فِيْمَا فَعَلْنَ فِيْٓ اَنْفُسِهِنَّ بِالْمَعْرُوْفِ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ﴿۲۳۴﴾
وَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيْمَا عَرَّضْتُمْ بِهٖ مِنْ خِطْبَةِ النِّسَآءِ اَوْ اَكْنَنْتُمْ
فِيْٓ اَنْفُسِكُمْ ؕ عَلِمَ اللّٰهُ اَنَّكُمْ سَتَذْكُرُوْنَهُنَّ وَلٰكِنْ لَّا
تُوَاعِدُوْهُنَّ سِرًّا اِلَّآ اَنْ تَقُوْلُوْا قَوْلًا مَّعْرُوْفًا ۬ؕ وَلَا تَعْزِمُوْا عُقْدَةَ
النِّكَاحِ حَتّٰى يَبْلُغَ الْكِتٰبُ اَجَلَهٗ ؕ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ يَعْلَمُ مَا فِيْٓ
اَنْفُسِكُمْ فَاحْذَرُوْهُ ۚ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ غَفُوْرٌ حَلِيْمٌ ﴿۲۳۵﴾ ع لَا جُنَاحَ ۲۴
عَلَيْكُمْ اِنْ طَلَّقْتُمُ النِّسَآءَ مَا لَمْ تَمَسُّوْهُنَّ اَوْ تَفْرِضُوْا لَهُنَّ
فَرِيْضَةً ۖۚ وَّمَتِّعُوْهُنَّ ۚ عَلَى الْمُوْسِعِ قَدَرُهٗ وَعَلَى الْمُقْتِرِ قَدَرُهٗ ۚ
مَتَاعًا بِالْمَعْرُوْفِ ۚ حَقًّا عَلَى الْمُحْسِنِيْنَ ﴿۲۳۶﴾ وَاِنْ طَلَّقْتُمُوْهُنَّ
مِنْ قَبْلِ اَنْ تَمَسُّوْهُنَّ وَقَدْ فَرَضْتُمْ لَهُنَّ فَرِيْضَةً فَنِصْفُ مَا
فَرَضْتُمْ اِلَّآ اَنْ يَّعْفُوْنَ اَوْ يَعْفُوَا الَّذِيْ بِيَدِهٖ عُقْدَةُ
النِّكَاحِ ؕ وَاَنْ تَعْفُوْٓا اَقْرَبُ لِلتَّقْوٰى ؕ وَلَا تَنْسَوُا الْفَضْلَ
بَيْنَكُمْ ؕ اِنَّ اللّٰهَ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿۲۳۷﴾

[234]உங்களில் எவரேனும் மனைவியரைவிட்டு இறந்துவிட்டால் அப்பெண்கள் (மறுமணம் செய்துகொள்ளாமல்) நான்கு மாதங்கள் பத்துநாட்கள் வரை காத்திருக்க வேண்டும். தம் காலக்கெடுவை நிறைவுசெய்த பின்னர் அவர்கள் நியாயமான முறைப்படி (தங்களை அழகு) செய்துகொள்வது (அவர்களின் பொறுப்பாளர்களான) உங்கள் மீது குற்றமாகாது. அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கறிந்தவன். [235](நம்பிக்கையாளர்களே!) அப்பெண்களைத் திருமணம் செய்யும் விருப்பத்தை மறைமுகமாகச் சொல்வதிலோ உங்கள் உள்ளங்களில் மறைத்து வைப்பதிலோ உங்கள்மீது எந்தக் குற்றமுமில்லை. உறுதியாக நீங்கள் அவர்களை நினைப்பீர்கள் என்பதை அல்லாஹ் அறிவான். ஆனால் நீங்கள் (திருமணம் தொடர்பான) முறையான வார்த்தை கூறுவதைத் தவிர அவர்களிடம் மறைமுகமாகக்கூட வாக்களிக்காதீர்கள். வரையறுக்கப்பட்ட காலக்கெடு நிறைவடையும்வரை நீங்கள் திருமணம் செய்ய விரும்பாதீர்கள். அறிந்துகொள்ளுங்கள்! உங்கள் உள்ளங்களில் உள்ளவற்றையெல்லாம் அல்லாஹ் அறிகிறான். எனவே அவனுக்கே அஞ்சுங்கள். அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; சகிப்புத்தன்மையுடையவன். [236]பெண்களைத் தீண்டாமலும் மணக்கொடையை அறுதியிடாமலும் இருக்கிற நிலையில் நீங்கள் அவர்களை மணவிலக்குச் செய்துவிட்டால் உங்கள்மீது எந்தக் குற்றமுமில்லை. ஆயினும் வசதியுள்ளவர் தமது வசதிக்கேற்பவும் வசதியற்றவர் தமது சக்திக்கேற்பவும் முறைப்படி அவர்களுக்கு ஏதேனும் கொடுத்து விடவேண்டும். இது நற்செயல்புரிவோர் மீதுள்ள கடமையாகும். [237]நீங்கள் அவர்களுக்குரிய மணக்கொடையை அறுதியிட்ட பிறகு அவர்களைத் தீண்டுவதற்கு முன்னர் மணவிலக்கு அளித்துவிட்டால் அறுதியிட்ட மணக்கொடையில் பாதியை அவர்களுக்குக் கொடுத்து விடவேண்டும். ஆனால் அப்பெண்கள் (அப்பாதி) மணக்கொடையையும் விட்டுக்கொடுத்துவிடலாம். அல்லது திருமண முடிச்சைக் கையில் வைத்திருப்பவர்கள் (கணவர்கள் - முழு மணக்கொடையையும்) கொடுத்துவிடலாம். (கணவர்களாகிய) நீங்கள் விட்டுக் கொடுத்துவிடுவதே இறையச்சத்திற்கு மிக நெருக்கமானது. நீங்கள் ஒருவருக்கொருவர் தாராளமாக நடந்துகொள்ளும் வாய்ப்பைப் புறக்கணித்துவிடாதீர்கள். நீங்கள் செய்பவற்றையெல்லாம் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

திருமணம் மற்றும் மணவிலக்குச் சட்டங்களை விளக்கும் அதே வேளையில், இறையச்சம், கருணை ஆகியவை மீண்டும் மீண்டும் அறிவுறுத்தப்படுகின்றன. ஒரு கட்டளையை அதன் உண்மையான உயிரோட்டத்தோடு செயல்படுத்துவதற்குச் சமுதாயத்தைச் சேர்ந்த தனிநபர்கள், பிரச்சினை குறித்து முற்றிலும் சட்டபூர்வமாகச் செயல்படுபவர்களாக அல்லாமல் ஒருவருக்கொருவர் நன்னடத்தைக்கான உணர்வு கொண்டிருக்க வேண்டும் என்பது இதனால் தெரிய வருகிறது. இத்தோடு மற்றவர்களை நன்றாக நடத்தாமல் போவதால் தாங்களும் நன்றாக நடத்தப்படாமல் போகும் அபாயத்தை விலை கொடுத்து வாங்கவேண்டி வரும். இறுதியில் பிரச்சினை முழுவதும் இறைவனிடம் முன்வைக்கப்பட்டே தீரும், அங்கு வாய்மொழி விளக்கங்கள் யாருக்கும் எந்தப் பயனும் அளிக்காது, மேலும் அந்தப் பிரச்சினையுடன் தொடர்புடைய எதையும் மறைப்பது யாருக்கும் சாத்தியமாக இருக்காது.

ஒரு பெண்ணின் திருமணத்தின் போது அவளுடைய மணக்கொடை நிர்ணயிக்கப்பட்டு, அந்த உறவு நிலைநாட்டப்படுவதற்கு முன்பே அவள் மணவிலக்கு செய்யப்பட்டிருந்தால், மணக்கொடையில் பாதியை செலுத்துவது சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இரு தரப்பினரும் இந்த விஷயத்தில் சட்ட அணுகுமுறையை விட தாராளமான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் நலம்விரும்புதலின் கோரிக்கையாக இருக்கிறது. உறவு நிலைநாட்டப்படாததால், மணக்கொடையில் அந்தப் பாதியைக் கூட விட்டுவிடுகிறேன் என்ற மனப்பான்மை ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டும்; சட்டப்படி பாதித் தொகைக்கு மட்டுமே தான் பொறுப்பு என்றாலும், தாராள மனப்பான்மையின் படி முழுத் தொகையையும் கொடுத்துவிடுகிறேன் என்ற உணர்வு அந்த ஆணுக்கு வர வேண்டும். எல்லா விஷயங்களிலும் இதே தாராள மனப்பான்மையும் விசாலத்தன்மையும்தான் தேவைப்படுகிறது. ஒவ்வொரு தனி மனிதனும் பிறரிடம் இருந்து பெறுவதற்குப் பேராசை கொண்டவனாக அல்லாமல் பிறருக்குக் கொடுக்கின்ற மனநிலையைக் கொண்டிருந்தால் அந்தச் சமூகமே முஸ்லிம் சமூகம் எனப்படுகிறது. மேலும் இந்தத் தாராள மனப்பான்மை நட்புக் காலங்களில் மட்டும் அல்லாமல் பகைமையின் காலங்களிலும் இடம்பெற வேண்டும்.

حٰفِظُوْا عَلَى الصَّلَوٰتِ وَ الصَّلٰوةِ الْوُسْطٰى ۗ وَ قُوْمُوْا لِلّٰهِ
قٰنِتِيْنَ ﴿٢٣٨﴾ فَاِنْ خِفْتُمْ فَرِجَالًا اَوْ رُكْبَانًا ۚ فَاِذَاۤ اَمِنْتُمْ
فَاذْكُرُوا اللّٰهَ كَمَا عَلَّمَكُمْ مَّا لَمْ تَكُوْنُوْا تَعْلَمُوْنَ ﴿٢٣٩﴾ وَالَّذِيْنَ

يُتَوَفَّوْنَ مِنْكُمْ وَيَذَرُوْنَ اَزْوَاجًا ۖ وَّصِيَّةً لِّاَزْوَاجِهِمْ
مَّتَاعًا اِلَى الْحَوْلِ غَيْرَ اِخْرَاجٍ ۚ فَاِنْ خَرَجْنَ فَلَا جُنَاحَ
عَلَيْكُمْ فِيْ مَا فَعَلْنَ فِيْٓ اَنْفُسِهِنَّ مِنْ مَّعْرُوْفٍ ۗ وَاللّٰهُ عَزِيْزٌ
حَكِيْمٌ ﴿٢٤٠﴾ وَلِلْمُطَلَّقٰتِ مَتَاعٌۢ بِالْمَعْرُوْفِ ۗ حَقًّا عَلَى الْمُتَّقِيْنَ ﴿٢٤١﴾
كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ ﴿٢٤٢﴾ ع ١٥

238(நம்பிக்கையாளர்களே!) தொழுகைகளைப் பேணிவாருங்கள். குறிப்பாக நடுத்தொழுகையைப் பேணுங்கள். அல்லாஹ்விற்கு முன்னால் பணிந்தவர்களாக நில்லுங்கள். 239உங்களுக்கு(ப் பகைவர்கள் காரணமாக) அச்சம் (தரும் சூழல்) ஏற்பட்டால் நடந்துகொண்டோ வாகனத்தின் மீது அமர்ந்த நிலையிலோ தொழுதுகொள்ளுங்கள். பின்னர் அமைதிநிலை ஏற்பட்டதும் நீங்கள் அறியாதவற்றையெல்லாம் உங்களுக்குக் கற்றுத்தந்த அல்லாஹ்வை அவன் உங்களுக்குக் கற்றுத்தந்தவாறே நினைவுகூருங்கள். 240உங்களில் மனைவியரை விட்டு இற(க்கும் தறுவாயில் இரு)ப்போர் தங்கள் மனைவியரை (வீட்டிலிருந்து) வெளியேற்றிவிடாமல் ஓராண்டுக் காலம்வரை அவர்களுக்குரிய வாழ்வாதாரம் அளிக்கப்பட வேண்டும் என்று (தம் வாரிசுகளிடம்) இறுதிவிருப்பம் தெரிவிக்கவேண்டும். ஆனால் அவர்கள் தாமாகவே வீட்டைவிட்டு வெளியேறித் தங்கள் வாழ்க்கைக்கு முறைப்படி ஏதேனும் செய்துகொண்டால் (வாரிசுகளாகிய) உங்கள் மீது குற்றமாகாது. அல்லாஹ் யாவற்றினும் வல்லவன்; ஞானம் மிக்கவன். 241மணவிலக்குச் செய்யப்பட்ட பெண்களுக்கும் முறைப்படி ஏதேனும் வழங்கிவிட வேண்டும். இது இறையச்சமுடையோர் மீது கடமையாகும். 242இவ்வாறு நீங்கள் புரிந்துகொள்ளும் பொருட்டுத் தன் கட்டளைகளை அல்லாஹ் உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறான்.

தொழுகை மார்க்கத்தின் சாராம்சம். தொழுகை என்பது நம்பிக்கையாளருடைய வாழ்க்கையின் ஒரு சுருக்கமான சித்திரமாகும். அது விரிவடையும் போது முழுமையான இஸ்லாமிய வாழ்க்கையாக ஆகிவிடுகிறது. இங்கே, ஒரு சிறிய வாசகத்தில், தொழுகையின் மூன்று மிக முக்கியமான கூறுகள் குறிக்கப்பட்டுள்ளன: (1) ஒரு நாளைக்கு ஐந்து வேளைத் தொழுகை கடமையாய் இருப்பது. (2) தொழுகை என்பது நிலை நாட்டப்பட

வேண்டிய ஒன்று என்பது (3) தொழுகையின் அடிப்படை உண்மை, பணிவு என்பது.

"தொழுகைகளைப் பேணிவாருங்கள், குறிப்பாக நடுத் தொழுகையைப் பேணுங்கள்." இது தொழுகைகளில் நடுத் தொழுகை ஒன்று இருப்பதையும், அதன் இருபக்கமும் தொழுகைகள் இருப்பதையும் காட்டுகிறது. இந்த வாக்கியத்தில், இதன் முன்பின் உள்ள 'தொழுகைகளின்' எண்ணிக்கையைக் குறைந்தது நான்கு என்று புரிந்துகொள்வது முக்கியம். ஏனெனில் அரபு மொழியில், 'ஸலவாத்' (தொழுகைகள்) என்ற சொல் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையைக் குறிக்கிறது. 'தொழுகைக்கு' இடையில் ஒரு 'இடைநிலைத் தொழுகை' உருவாக்கக்கூடிய முதல் சாத்தியமான எண் நான்கு ஆகும். இப்படியாக, ஒரு தொழுகை நடுத் தொழுகையாக மாறி, அதன் இருபக்கமும் இரண்டு தொழுகைகள் அமைகின்றன. 'நடுத்தொழுகை' என்பது பிற்பகல் தொழுகையைக் குறிக்கிறது, இது பல கூற்றுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. தொழுகையின் இரண்டாவது அம்சத்தை விவரிக்க 'பேணுங்கள்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. செல்வம் எப்படி ஒருவருக்குப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு பொருளாக இருக்கிறதோ அதைப்போலவே தொழுகையும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு கடமையாக இருக்கிறது. தொழுகையின் நேரங்கள் குறித்து முழுமையான கவனம், கற்றுத்தரப்பட்ட முறைப்படி அதை நிறைவேற்ற ஏற்பாடு, ஒருவரின் தொழுகைக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய விஷயங்களைத் திட்டமிட்டுத் தவிர்ப்பது போன்ற அனைத்தும் தொழுகையைப் பேணுவதில் அடங்கும். தொழுகையின் மூன்றாவது அம்சம் பணிவு. இதுவே தொழுகையின் உண்மையான ஆன்மாவாகும், தொழுகை என்பது இறைவனுக்கு முன் அடியான் நிற்பதாகும். எனவே, தொழுகையின் போது, எல்லோரையும் விடப் பெரியவனின் முன் நிற்பதால் எல்லா விதத்திலும் சிறியவனாக இருக்கும் ஒருவன் மீது ஏற்பட வேண்டிய அந்த உணர்ச்சி நிலை அவசியமானது.

சமூக வாழ்க்கைக்கான விதிகளைக் கூறும் அதே வேளையில், "இது இறையச்சமுடையோர் மீது கடமையாகும்" என்று கூறுவது மார்க்கச் சட்டத்தின் ஒரு முக்கிய அம்சத்தை வெளிப்படுத்துகிறது. பரஸ்பர உறவுகளில் சில உரிமைகள் சட்டத்தால் வரையறுக்கப்பட்டவை. ஆனால் ஒரு மனிதன் மீது இன்னொரு மனிதனின் மீதான உரிமைகளின் வரம்புகள் அங்கேயே முடிவடைந்து விடுவதில்லை. வரையறுக்கப்பட்ட உரிமைகளைத் தவிரவும் சில உரிமைகள் உள்ளன. இந்த உரிமைகள் ஒரு மனிதனின் இறையச்சத்தால் அவனுக்கு உணர்த்தப்படுபவை. மேலும் ஒரு மனிதனின் இறையச்ச உணர்வு எவ்வளவு தீவிரமாக இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாக அவன் அதைக் கடமையாகக் கருதுகிறான். உள்ளீடான இந்த அழுத்தம் இல்லையென்றால், மனிதனால் ஒருபோதும் மற்றவர்களின் உரிமைகளை முறையாக நிறைவேற்ற முடியாது.

اَلَمۡ تَرَ اِلَى الَّذِيۡنَ خَرَجُوۡا مِنۡ دِيَارِهِمۡ وَ هُمۡ اُلُوۡفٌ حَذَرَ
الۡمَوۡتِ ۪ فَقَالَ لَهُمُ اللّٰهُ مُوۡتُوۡا ۟ ثُمَّ اَحۡيَاهُمۡ ؕ اِنَّ اللّٰهَ لَذُوۡ فَضۡلٍ
عَلَى النَّاسِ وَلٰكِنَّ اَكۡثَرَ النَّاسِ لَا يَشۡكُرُوۡنَ ﴿۲۴۳﴾ وَقَاتِلُوۡا فِىۡ سَبِيۡلِ
اللّٰهِ وَاعۡلَمُوۡۤا اَنَّ اللّٰهَ سَمِيۡعٌ عَلِيۡمٌ ﴿۲۴۴﴾ مَنۡ ذَا الَّذِىۡ يُقۡرِضُ اللّٰهَ
قَرۡضًا حَسَنًا فَيُضٰعِفَهٗ لَهٗۤ اَضۡعَافًا كَثِيۡرَةً ؕ وَ اللّٰهُ يَقۡبِضُ
وَيَبۡصُۜطُ ۪ وَ اِلَيۡهِ تُرۡجَعُوۡنَ ﴿۲۴۵﴾

[243](நபியே!) சாவு அச்சத்தால் தங்கள் வீடுகளை விட்டு ஓட முற்பட்டவர்களைப்பற்றி நீர் அறியவில்லையா? அவர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தனர். 'நீங்கள் இறந்துவிடுங்கள்' என்று அல்லாஹ் அவர்களிடம் கூறினான். பின்னர் (ஓர் இறைத்தூதரின் இறைஞ்சுதலை ஏற்று) மீண்டும் அவன் அவர்களை உயிர்ப்பித்தான். உறுதியாக அல்லாஹ் மனிதர்களின் மீது பேரருள் புரிபவன். ஆயினும் மனிதர்களில் பெரும்பாலோர் நன்றி செலுத்துவதில்லை. [244](நம்பிக்கையாளர்களே! தற்காப்பிற்காக) இறைவழியில் போர்புரியுங்கள். அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் செவியுறுபவன்; முற்றும் அறிபவன். [245]அல்லாஹ்வுக்கு அழகிய கடன் தருபவர் யார்? அல்லாஹ் அதனை அவருக்குப் பன்மடங்காக்கித் தருவான். அல்லாஹ்வே (சிலருக்குக்) குறைவாகவும் (சிலருக்குத்) தாராளமாகவும் (செல்வத்தை) வழங்குகிறான். நீங்கள் அனைவரும் அவனிடமே திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள்.

மக்காவில் சலிப்புற்று முஸ்லிம்கள் மதீனாவுக்கு வந்துசேர்ந்தனர். மதீனாவில் அவர்களின் மார்க்கத்தின்படி வாழ்வதற்கு ஒப்பீட்டளவில் சுதந்திரமான சூழல் இருந்தது. ஆனால் இஸ்லாமிய எதிர்ப்பாளர்கள் இன்னும் அவர்களை விடவில்லை. மதீனாவிலிருந்து முஸ்லிம்களை ஒழிக்க அவர்கள் ஆயுதப்படைத் தாக்குதல்களைத் தொடங்கினர். அந்நேரத்தில், அவர்களுடன் சண்டையிடுங்கள் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அந்த நேரத்தில், முஸ்லிம்களின் பலம் ஒப்பீட்டளவில் எதிர்ப்பாளர்களைவிடக் குறைவாகவே இருந்தது. இதனால் சிலருக்குள் துணிவின்மை ஏற்பட்டது. வாழ்க்கைப் போரில் தோல்வியைக் கண்டு அஞ்சுவதற்குப் பெயர்தான் தோல்வி என்பதை

விளக்குவதற்காக இஸ்ராயீலின் மக்களுடைய ஒரு வரலாற்று நிகழ்வு இங்கே நினைவுகூரப்பட்டது.

இஸ்ராயீலின் மக்களுடைய அண்டை சமூகத்தினரான பெலிஸ்தியர் அவர்களைத் தாக்கினர். இஸ்ராயீலின் மக்கள் தோற்கடிக்கப்பட்டனர். பெலிஸ்தியர்கள் இரண்டு தாக்குதல்களில் 34,000 பேரைக் கொன்றனர். இஸ்ரவேலர் மிகவும் பயந்து தங்கள் வீடுகளை விட்டு ஓடிப்போனார்கள். பைபிளின் வார்த்தைகளில், "மகிமை இஸ்ரவேலை விட்டுப் போய்விட்டது" (1 சாமுவேல் 4:22). இஸ்ராயீலின் மக்களுடைய குடும்பம் முழுவதும் அச்சத்தில் ஆழ்ந்து, புலம்பி அழ ஆரம்பித்தனர். இந்தச் சூழ்நிலையில், 20 ஆண்டுகள் கடந்துவிட்டன. பின்னர் அவர்கள் ஏன் பெலிஸ்தியர்களால் நாம் தோற்கடிக்கப்பட்டோம் என்று யோசித்தார்கள். தோல்விக்குக் காரணம் இறைவன் மீதான உங்களுடைய நம்பிக்கை பலவீனமடைந்ததுதான் என்று அவர்களின் தூதர் சாமுவேல் கூறினார். அவர் இஸ்ராயீலின் மக்கள் அனைவரையும் நோக்கி, "நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்பினால், அந்நிய தெய்வங்களை உங்கள் நடுவிலிருந்து விலக்கி, உங்கள் இருதயங்களைக் கர்த்தருக்குத் தயார் செய்து, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள், பெலிஸ்தியரின் கையிலிருந்து கடவுள் உங்களை விடுவிப்பார்" என்றார். பின்னர் இஸ்ராயீலின் மக்களும் அந்நிய தெய்வங்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கி, கர்த்தரை மட்டுமே வணங்கத் தொடங்கினர். இப்போது, பெலிஸ்தியர்களுக்கும் இஸ்ராயீலின் மக்களுக்கும் இடையே மீண்டும் போர் வெடித்தபோது, பைபிளின் வார்த்தைகளில், "அந்நாளில் கர்த்தர் பெலிஸ்தியர்களின்மேல் ஒரு பெரிய இடிமுழக்கத்தை முழங்கச் செய்து, அவர்களைக் கலங்கடித்தார்." அவர்கள் இஸ்ரவேலர்களால் தோற்கடிக்கப்பட்டனர். (1 சாமுவேல் 7:70).

ஏக இறைவனின் மீது நம்பிக்கை வைக்கும் பாதையைக் கைவிட்டதனால், அவர்களைச் சமூக மரணம் வந்தடைந்தது. ஏக இறைவனின் மீது நம்பிக்கை வைக்கும் பாதையைத் தழுவிக்கொண்ட பிறகு, அவர்களுக்குச் சமூக வாழ்க்கை கிடைத்துவிட்டது.

அழகிய கடன் என்றால் நல்ல கடன் என்று பொருள். இங்கே, இது இறை மார்க்கத்தின் பாதையில் செய்யப்படும் செலவினங்களைக் குறிக்கிறது. இந்தச் செலவு முற்றிலும் இறைவனுக்கானது. வேறு எந்த இலாபமும் இருப்பதில்லை. ஆகையால், இறைவன் அதை தன் தன் பொறுப்பிலுள்ள கடன் என்று கூறுகிறான். அவன் அதை இன்னும் அதிகமாகப் பெருக்கித் திருப்பிச் செலுத்துவான் என்பதால் 'அழகிய கடன்' என்று கூறுகிறான்.

ஒரு நம்பிக்கையாளரின் பாதையில் சிரமங்கள் ஏற்படுவதென்பது இழப்புக்குரிய நிலை அன்று. இது இறைவனின் அருளுக்கான ஒரு புதிய

கதவு திறப்பதாகும். அதன் பிறகு, இறைவனுக்காகத் தனது உயிரையும் செல்வத்தையும் செலவிடுவதன் மூலம், சாதாரணச் சூழ்நிலைகளில் யாருக்கும் கிடைக்காத இறைவனின் அருட்கொடைகளுக்கு அவர் தகுதியானவராகிறார்.

اَلَمْ تَرَ اِلَى الْمَلَاِ مِنْۢ بَنِىْۤ اِسْرَآءِيْلَ مِنْۢ بَعْدِ مُوْسٰى ۘ اِذْ قَالُوْا
لِنَبِىٍّ لَّهُمُ ابْعَثْ لَنَا مَلِكًا نُّقَاتِلْ فِىْ سَبِيْلِ اللّٰهِ ؕ قَالَ هَلْ عَسَيْتُمْ
اِنْ كُتِبَ عَلَيْكُمُ الْقِتَالُ اَلَّا تُقَاتِلُوْا ؕ قَالُوْا وَ مَا لَنَاۤ اَلَّا
نُقَاتِلَ فِىْ سَبِيْلِ اللّٰهِ وَقَدْ اُخْرِجْنَا مِنْ دِيَارِنَا وَ اَبْنَآئِنَا ؕ
فَلَمَّا كُتِبَ عَلَيْهِمُ الْقِتَالُ تَوَلَّوْا اِلَّا قَلِيْلًا مِّنْهُمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌۢ
بِالظّٰلِمِيْنَ ﴿۲۴۶﴾ وَقَالَ لَهُمْ نَبِيُّهُمْ اِنَّ اللّٰهَ قَدْ بَعَثَ لَكُمْ طَالُوْتَ
مَلِكًا ؕ قَالُوْۤا اَنّٰى يَكُوْنُ لَهُ الْمُلْكُ عَلَيْنَا وَ نَحْنُ اَحَقُّ بِالْمُلْكِ
مِنْهُ وَ لَمْ يُؤْتَ سَعَةً مِّنَ الْمَالِ ؕ قَالَ اِنَّ اللّٰهَ اصْطَفٰىهُ عَلَيْكُمْ
وَ زَادَهٗ بَسْطَةً فِى الْعِلْمِ وَالْجِسْمِ ؕ وَاللّٰهُ يُؤْتِىْ مُلْكَهٗ مَنْ
يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ ﴿۲۴۷﴾ وَقَالَ لَهُمْ نَبِيُّهُمْ اِنَّ اٰيَةَ مُلْكِهٖۤ
اَنْ يَّاْتِيَكُمُ التَّابُوْتُ فِيْهِ سَكِيْنَةٌ مِّنْ رَّبِّكُمْ وَ بَقِيَّةٌ مِّمَّا تَرَكَ
اٰلُ مُوْسٰى وَاٰلُ هٰرُوْنَ تَحْمِلُهُ الْمَلٰٓئِكَةُ ؕ اِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيَةً
لَّكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿۲۴۸﴾

246(நபியே!) மோசேவுக்குப் பிறகு (வந்த) இஸ்ராயீல் மக்களுடைய தலைவர்களைப்பற்றி நீர் அறியவில்லையா? அவர்கள் தம்முடைய (ஒரு) தூதரிடம் ''நாங்கள் இறைவழியில் போர்புரிவதற்காக எங்களுக்கு ஓர் அரசரை நியமியுங்கள்'' என்று கேட்டபோது அவர், ''உங்களுக்குப் போர் புரிவதற்கான கட்டளை இடப்பட்டும் நீங்கள் போரிடாமல் இருந்துவிட்டால்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள், ''நாங்கள் இறைவழியில் போரிடாமல் எப்படி இருக்க முடியும்? நாங்கள் எங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு,

எங்கள் பிள்ளைகளிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளோம்'' என்று கூறினர். ஆனாலும், அவர்களுக்குப் போர் புரியுமாறு கட்டளை இடப்பட்டபோது அவர்களில் ஒரு சிலரைத்தவிர மற்ற அனைவரும் பின்வாங்கி விட்டனர். இத்தகைய முறைகேடர்களை அல்லாஹ் நன்கறிவான். [247]அவர்களுடைய தூதர் அவர்களிடம், ''தாலூத் என்பவரை அல்லாஹ் உங்களுக்கு அரசராக நியமித்துள்ளான்'' என்று கூறியபோது அவர்கள், ''எங்கள் மீது ஆட்சிபுரிய அவருக்கு என்ன தகுதியிருக்கிறது? நாங்கள்தாம் ஆட்சிபுரிய அவரைவிட மிகுந்த தகுதியுடையோராக இருக்கிறோம். அவருக்குச் செல்வமும் வழங்கப்படவில்லையே!'' என்று கூறினர். அதற்கு அவர், ''அல்லாஹ் உங்களைவிட மேலானவராக அவரைத் தேர்ந்தெடுத்துள்ளான். அவருக்கு அறிவாற்றலையும் உடல் வலிமையையும் மிகுதியாக வழங்கியுள்ளான். தான் விரும்பியவர்களுக்கே அல்லாஹ் தன் ஆட்சியதிகாரத்தை வழங்குகிறான். அல்லாஹ் தாராளமானவன்; முற்றும் அறிந்தவன்'' என்று கூறினார். [248]பின்னும் தூதர் அவர்களிடம், ''அவருடைய அரசுரிமைக்குச் சான்றாக உங்களிடம் ஒரு பேழை வரும், அதில் உங்கள் இறைவனிடமிருந்து (உங்களுக்குச்) சாந்தியும் மோசேயின் குடும்பத்தினரும் ஆரோனின் குடும்பத்தினரும் விட்டுச் சென்ற(வற்றில் எஞ்சிய)வையும் இருக்கும். அந்தப்பேழையை வானவர்கள் கொண்டுவருவார்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருப்பின் அதில் உங்களுக்குப் பெரும் சான்றுள்ளது'' என்றும் கூறினார்.

மோசேயின் காலத்திற்கு சுமார் முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, இஸ்ராயீலின் மக்கள் இணைவைக்கும் தங்கள் அண்டை நாட்டு சமூகத்தினரின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டனர். இதே நிலையில் சற்றேறத்தாழ கால் நூற்றாண்டைக் கழித்த பிறகு, அவர்கள் தங்கள் முந்தைய காலத்தை மீண்டும் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். இப்போது அவர்களுக்கு எதிரிகளை எதிர்த்துப் போராட ஒரு இராணுவத் தலைமையின் தேவை ஏற்பட்டது. அவர்களுடைய இறைத்தூதர் சாமுவேல் (கி.மு. 1020–1100) அவர்களுக்காக ஒரு மனிதரை நியமித்தார், அவருடைய பெயர் குர்ஆனில் 'தாலூத்' என்றும் பைபிளில் 'சவுல்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தனிப்பட்ட குணங்களைப் பொறுத்தவரை, அவர் ஒரு பொருத்தமான நபராக இருந்தார். ஆனால் அவரது தலைமையை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, இஸ்ராயீலின் மக்கள் அவர் ஒரு சிறிய குடும்பத்தைச் சேர்ந்த மனிதர்; அவரிடம் செல்வம் இல்லை என்பது போன்ற மறுப்புகளை எழுப்பத் தொடங்கினர். இதுபோன்ற எதிர்ப்பு விவாதங்கள் ஒரு வீழ்ச்சியுற்ற

சமூகத்தின் அறிகுறிகளாகும். இறைவனின் தீர்ப்புகள் தாராளத் தன்மையையும் அறிவையும் அடிப்படையாகக் கொண்டவை. எனவே, பரந்த மனப்பான்மை கொண்ட அணுகுமுறையைக் கடைப்பிடித்து, தவறான எண்ணங்கள் - உலகப் பயன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அல்லாமல், உண்மைகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கும் ஓர் அடியான் மட்டுமே இறைவனுக்குப் பிரியமானவனாக இருக்கிறான். இருப்பினும், பேழையைத் திரும்பக் கொண்டு வந்ததன் மூலம், தாலூத்தின் நியமனத்தை இறைவன் அசாதாரணமாக உறுதிப்படுத்தினான்.

எகிப்திலிருந்து வெளியேறிய காலத்திலிருந்தே இஸ்ராயீலின் மக்களிடம் ஒரு புனிதப் பேழை இருந்தது. அதில் தோராவின் பலகைகளும், பிற புனிதப் பொருட்களும் இருந்தன. இஸ்ராயீலின் மக்கள் இதைத் தங்களுக்கு வெற்றியாகவும், ஈடேற்றத்தின் அடையாளமாகவும் கருதினர். பெலிஸ்தியர் அவர்களிடமிருந்து பேழையை பறித்து எடுத்துச் சென்றனர். ஆனால் அவர்கள் அதைக் கொண்டு சென்ற ஒவ்வொரு ஊரிலும், தொற்றுநோய்கள் வெடித்தன. இதனை ஒரு கெட்ட சகுனமாகக் கருதி அந்தப் பேழையை எடுத்துக் கொண்டு, ஒரு மாட்டு வண்டியில் வைத்து ஓட்டிச் விட்டனர். அவர்கள் அதனுடன் நடந்து சென்றுகொண்டே இருந்தனர். இறுதியில் யூத மக்கள் குடியிருப்பைச் சென்றடைந்தார்கள். இறைவன் சில சமயங்களில் தனது அடியானின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்த அவனைச் சுற்றி அசாதாரணமான விஷயங்களைச் சேர்த்து விடுகிறான். அத்தகைய விஷயங்கள் சாதாரண மக்களிடம் ஒன்று சேர வாய்ப்பில்லை.

فَلَمَّا فَصَلَ طَالُوْتُ بِالْجُنُوْدِ ۙ قَالَ اِنَّ اللّٰهَ مُبْتَلِيْكُمْ بِنَهَرٍ ۚ
فَمَنْ شَرِبَ مِنْهُ فَلَيْسَ مِنِّيْ ۚ وَ مَنْ لَّمْ يَطْعَمْهُ فَاِنَّهٗ مِنِّيْٓ اِلَّا
مَنِ اغْتَرَفَ غُرْفَةً ۢ بِيَدِهٖ ۚ فَشَرِبُوْا مِنْهُ اِلَّا قَلِيْلًا مِّنْهُمْ ؕ فَلَمَّا
جَاوَزَهٗ هُوَ وَ الَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ ۙ قَالُوْا لَا طَاقَةَ لَنَا الْيَوْمَ
بِجَالُوْتَ وَ جُنُوْدِهٖ ؕ قَالَ الَّذِيْنَ يَظُنُّوْنَ اَنَّهُمْ مُّلٰقُوا اللّٰهِ ۙ كَمْ
مِّنْ فِئَةٍ قَلِيْلَةٍ غَلَبَتْ فِئَةً كَثِيْرَةًۢ بِاِذْنِ اللّٰهِ ؕ وَ اللّٰهُ مَعَ
الصّٰبِرِيْنَ ﴿۲۴۹﴾ وَلَمَّا بَرَزُوْا لِجَالُوْتَ وَجُنُوْدِهٖ قَالُوْا رَبَّنَآ اَفْرِغْ
عَلَيْنَا صَبْرًا وَّ ثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ ﴿۲۵۰﴾

فَهَزَمُوْهُمْ بِاِذْنِ اللّٰهِ ۙ وَقَتَلَ دَاوٗدُ جَالُوْتَ وَاٰتٰىهُ اللّٰهُ الْمُلْكَ
وَالْحِكْمَةَ وَعَلَّمَهٗ مِمَّا يَشَآءُ ؕ وَلَوْلَا دَفْعُ اللّٰهِ النَّاسَ بَعْضَهُمْ
بِبَعْضٍ ۙ لَّفَسَدَتِ الْاَرْضُ وَلٰكِنَّ اللّٰهَ ذُوْ فَضْلٍ عَلَى الْعٰلَمِيْنَ ﴿۲۵۱﴾

[249]தாலூத் படைகளுடன் புறப்பட்டபோது, (அத்தூதர்) ''அல்லாஹ் உங்களை ஒரு நதியின் மூலம் சோதிப்பான். எவர் அதன் நீரை (மிகுதியாக) அருந்துகிறாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்லர். எவர் அதன் நீரை ஒரு கையளவுக்குமேல் அருந்தவில்லையோ அவரே என்னைச் சார்ந்தவராவார்'' என்று கூறினார். ஆயினும் அவர்களில் ஒரு சிலரைத் தவிர அனைவரும் அதிலிருந்து மிகுதியாக அருந்திவிட்டனர். தாலூத்தும் அவருடன் (சென்ற) நம்பிக்கை கொண்டோரும் ஆற்றைக் கடந்தபோது, ''இன்று கோலியத்துடனும் அவனது படைகளுடனும் போரிடும் சக்தி எங்களிடம் இல்லை'' என்றனர். (ஆனால் அவர்களில்) நாம் அல்லாஹ்வை உறுதியாகச் சந்திப்போம் என்பதில் உறுதி கொண்டிருந்தவர்கள், ''எத்தனையோ சிறுபடைகள் இறைக்கட்டளையால் பெரும்படைகளை வென்றிருக்கின்றன. அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்'' என்று கூறினர். [250]கோலியத்தையும் அவனது படைகளையும் அவர்கள் எதிர்கொண்டபோது, ''எங்கள் இறைவா! எங்கள் மீது பொறுமையைப் பொழிவாயாக! எங்களை உறுதிப்படுத்துவாயாக! (இந்த)மறுப்பாளர்களை வென்றிட எங்களுக்கு உதவிபுரிவாயாக!'' என்று இறைஞ்சி வேண்டினர். [251]இறுதியில் அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி கோலியத்தின் படைகளைத் தோல்வியுறச் செய்தனர். தாவீத், கோலியத்தைக் கொன்றார். அல்லாஹ் தாவீதுக்கு ஆட்சியதிகாரத்தையும் ஞானத்தையும் வழங்கினான். தான் விரும்பியவற்றை அவருக்குக் கற்றுக்கொடுத்தான். இவ்வாறு அல்லாஹ் மக்களில் சிலரைக் கொண்டு சிலரைத் தடுக்காவிட்டால் பூமி குழப்பத்தால் சீர்குலைந்து போயிருக்கும். ஆயினும் அல்லாஹ் அனைத்துலகத்தாரின் மீதும் பேரருள் புரிபவனாக இருக்கிறான்.

மோசேயின் காலத்திற்கு சுமார் 300 ஆண்டுகளுக்குப் பிறகும் கிறிஸ்துவின் காலத்திற்கு சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன்பும், பெலிஸ்தியர்கள் இஸ்ராயீலின் மக்களைத் தாக்கி, பாலஸ்தீனத்தின் பெரும்பகுதியை அவர்களிடமிருந்து கைப்பற்றினர். சிறிது காலத்திற்குப் பிறகு, இஸ்ராயீலின் மக்கள்

பெலிஸ்தியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து, அவர்களிடமிருந்து தங்கள் பகுதிகளைத் திரும்பப் பெற விரும்பினர். அந்த நேரத்தில், அவர்களிடையே சாமுவேல் என்ற ஓர் இறைத்தூதர் இருந்தார். அவர் சிரியாவின் ஒரு பண்டைய நகரமான ராமாவில் வசித்து வந்தார், மேலும் இஸ்ராயீலின் மக்களின் சமூக விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்தார். இஸ்ராயீலின் மக்களின் ஒரு குழு அவரைச் சந்தித்தது. அவரிடம், "உங்களுக்கு இப்போது வயதாகிவிட்டது, எனவே எங்களில் ஒருவரை மன்னராக நியமித்து விடுங்கள், அவருடைய வழிகாட்டுதலில் நாங்கள் போரிட முடியும்" என்றார்கள். தோராவின்படி, "எங்கள் ராஜா எங்களை நியாயந்தீர்ப்பார், எங்களுக்கு முன்பாகப் புறப்பட்டு, எங்கள் போர்களில் ஈடுபடுவார்."

சாமுவேலுக்குத் தன் மக்களின் குணாதிசயங்கள் குறித்து நல்ல கருத்து இல்லாவிட்டாலும், "சரி, நான் உங்களுக்கு ஒரு மன்னரை நியமிக்கிறேன்" என்றார். அவர்கள் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த துணிச்சல்மிக்க இளைஞராக இருந்த சவுலை (தாலுத்) தங்கள் மன்னராக நியமித்தார்.

சவுல் (தாலூத்) இஸ்ராயீலின் மக்களுடைய படையை எதிரியை நோக்கி வழிநடத்தினார். வழியில் யோர்தான் நதி ஓடிக் கொண்டிருந்தது. அவர்கள் அதைக் கடந்து எதிரிகளின் நிலப்பகுதியை அடைய வேண்டியிருந்தது. இஸ்ராயீலின் மக்களுடைய பலவீனங்களை சவுல் அறிந்திருந்ததால், அவர்களைச் சோதிக்க ஓர் எளிய முறையைப் பயன்படுத்தினார். ஆற்றைக் கடக்கும்போது, யாரும் தண்ணீரை அருந்தக் கூடாது. இருப்பினும், கைப்பிடியளவு தண்ணீர் எடுப்பதில் எந்தத் தீங்கும் இல்லை என்று அறிவித்தார். இஸ்ராயீலின் மக்களில் பெரும்பாலோர் இந்தத் சோதனையில் தோல்வியடைந்தனர். இருப்பினும், ஏக இறைவன் அவர்களுக்கு இந்தப் போரில் வெற்றியைக் கொடுத்தான். அப்போது இளைஞராக இருந்த தாவீத் இந்தப் போரில் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை நிறைவேற்றினார். பெலிஸ்தியப் படையின் வலிமைமிக்க வீரனான (மல்யுத்த வீரன்) கோலியத் அவர்களின் கைகளால் கொல்லப்பட்டான். இதற்குப் பிறகு, பெலிஸ்தியர்கள் இஸ்ராயீலின் மக்களிடம் சரணடைந்தனர்.

போட்டியில் வெற்றிபெற, தனிநபர்களுக்குத் துன்பங்களை எதிர்கொண்டு நிலைத்து நிற்கும் குணமும், தங்கள் தலைவனுக்குக் கீழ்ப்படியும் பண்பும் இருப்பது அவசியம். தாலுத் தனது தோழர்களைத் தண்ணீர் அருந்தத் தடைவிதித்தது அவர்களின் திறனைச் சோதிப்பதற்கான ஓர் எளிய உத்தியாகும். பைபிளின் படி, அவர்களில் 600 பேர் மட்டுமே வழியில் வந்த ஆற்றின் நீரை அருந்தவில்லை. நீரை அருந்தியவர்கள் தங்கள் ஒழுக்கக் குறைபாடுகளில் மேலும் உறுதியுள்ளவர்களாக ஆயினர். எனவே, இப்போது அவர்கள் பகைவர்கள் வெளிப்புறத்தில் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பதை இன்னும் அதிகமாக உணர்ந்தனர். மறுபுறம், தண்ணீர் அருந்தாதவர்களின்

அந்தச் செயலால் அவர்களின் பொறுமை, கீழ்ப்படிதல் மனநிலை இன்னும் அதிகமாக வலுப்பெற்றது. பைபிளின்படி, சவுலின் தோழர்களில் ஒருவர் பின்வரும் வார்த்தைகளில் வெளிப்படுத்திய உண்மையை அவர்கள் இன்னும் தெளிவாகக் காணத் தொடங்கினர்: "கர்த்தர் பட்டயத்தாலும் ஈட்டியாலும் இரட்சிப்பவர் அல்லர் என்பதை இந்தச் சபையார் அனைவரும் அறியட்டும். யுத்தம் கர்த்தருடையது, அவர் உங்களை எங்கள் கைகளில் ஒப்புக்கொடுப்பார்" (1 சாமுவேல் 17:48).

அதிகாரத்தில் இருப்பவன், சில நாட்களுக்குப் பிறகு, ஆணவமடைந்து அநீதி செய்யத் தொடங்குகிறான். எனவே, அதிகாரம் நிரந்தரமாக ஒருவனின் கைகளில் குவியும்போது, பூமி அவர்களின் அடக்குமுறையாலும் தீமைகளாலும் நிறைந்துவிடும். இறைவன் இதை ஈடு செய்யும் ஏற்பாடாக, ஆட்சியாளர்களை மாற்றிக்கொண்டே இருக்கிறான். அவன் அதிகாரமற்ற மக்களிலிருந்து ஒரு குழுவை எழுப்புகிறான், அவர்கள் மூலமாக அதிகாரத்தில் இருப்பவனை அகற்றிவிட்டு, இன்னொருவனை அந்தப் பதவியில் அமர்த்துகிறான். இதன் பொருள், ஆளும் கூட்டத்தின் அடக்குமுறை அதிகரிக்கும் போது, அதற்கு எதிராக எழும் குழுவிற்கு அது இறையுதவிக்கான நேரமாகும். பொறுமை, கீழ்ப்படிதல் ஆகிய நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் மூலம் அவர்கள் தம்மை இறைவனின் திட்டத்தில் இணைத்துக்கொண்டால், அவர்கள் வெளிப்படையாக எண்ணிக்கையில் குறைந்து இருந்தாலும், இறையுதவியுடன் அதிகமான எண்ணிக்கை கொண்டவர்கள் மீது ஆதிக்கம் பெறுவார்கள். இறையச்சம் என்பது ஓர் எதிர்மறையான இயல்பு அல்ல, அது மனிதனின் மனத்தை ஒளிரச் செய்யும் ஓர் அறிவு. அதைக் கொண்டு அவனால் ஒவ்வொரு பொருளையும் அதன் இயல்பான - அதன் உண்மையான வடிவத்தில் பார்க்க முடியும்.

تِلْكَ اٰيٰتُ اللّٰهِ نَتْلُوْهَا عَلَيْكَ بِالْحَقِّ ؕ وَاِنَّكَ لَمِنَ الْمُرْسَلِيْنَ ﴿۲۵۲﴾
تِلْكَ الرُّسُلُ فَضَّلْنَا بَعْضَهُمْ عَلٰى بَعْضٍ ۘ مِنْهُمْ مَّنْ كَلَّمَ اللّٰهُ
وَرَفَعَ بَعْضَهُمْ دَرَجٰتٍ ؕ وَاٰتَيْنَا عِيْسَى ابْنَ مَرْيَمَ الْبَيِّنٰتِ وَاَيَّدْنٰهُ
بِرُوْحِ الْقُدُسِ ؕ وَلَوْ شَآءَ اللّٰهُ مَا اقْتَتَلَ الَّذِيْنَ مِنْۢ بَعْدِهِمْ مِّنْۢ
بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ وَلٰكِنِ اخْتَلَفُوْا فَمِنْهُمْ مَّنْ اٰمَنَ وَمِنْهُمْ
مَّنْ كَفَرَ ؕ وَلَوْ شَآءَ اللّٰهُ مَا اقْتَتَلُوْا ۫ وَلٰكِنَّ اللّٰهَ يَفْعَلُ مَا يُرِيْدُ ﴿۲۵۳﴾

[252](நபியே!) இவை இறைவசனங்களாகும். இவற்றை நாம் உமக்கு உண்மையைக் கொண்டே ஓதி உணர்த்துகிறோம். (முஹம்மதே!) உறுதியாக நீர் (இறைத்)தூதர்களில் உள்ளவராவீர். [253]அத்தூதர்களில் சிலரைவிடச் சிலரை நாம் சிறப்பாக்கி வைத்துள்ளோம்; அவர்களில் சிலருடன் அல்லாஹ் பேசியிருக்கிறான்; சிலருடைய படிநிலையை உயர்த்தியும் இருக்கிறான். நாம் மர்யத்தின் மைந்தர் இயேசுவுக்குத் தெளிவான சான்றுகளை வழங்கினோம். அவரைத் தூய ஆன்மாவின் மூலம் வலுப்படுத்தினோம். அல்லாஹ் விரும்பியிருந்தால் அவர்களுக்குப் பின்வந்தவர்கள் தெளிவான கட்டளை வந்த பின்னரும் (தங்களுக்குள்) சண்டையிட்டிருக்க மாட்டார்கள். ஆயினும் அவர்கள் முரண்பட்டனர். அவர்களில் சிலர் நம்பிக்கை கொண்டனர்; சிலர் மறுத்தனர். அல்லாஹ் விரும்பியிருந்தால் அவர்கள் சண்டையிட்டிருக்க மாட்டார்கள். ஆயினும், தான் விரும்பியதையே அல்லாஹ் செய்கிறான்.

இறைவனின் சார்பாக ஓர் அழைப்பாளர் மக்களை அழைக்கும்போது, இது இறைவனிடமிருந்து வந்திருக்கிறது என்பதை மக்கள் புரிந்துகொள்ள அதிக காலம் எடுக்காத வண்ணமாக அவரது அழைப்பில் பல அடையாளங்கள் இடம் பெற்றிருக்கும். எனினும், மக்கள் அதை மறுத்துவிடுகிறார்கள். மேலும் முதலில் அதை மறுப்பவர்கள் தூதுத்துவத்தின் மீது தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருந்தவர்கள்தாம். இதற்குக் காரணம், அவர்கள் நம்பும் தூதரின் சில சிறப்பியல்புகளின் அடிப்படையில் அவரது மேன்மை குறித்த ஒரு கருத்தை நிறுவிக்கொள்கிறார்கள். நமது தூதர் இத்துணைச் சிறப்புகளுக்குரியவராக இருக்கிறார்; நாம் அவரை ஏற்றுக்கொண்டிருக்கிறோம், இவ்வாறிருக்க இனி வேறு யாரையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் என்னவென்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

ஒவ்வோர் இறைத்தூதரும் வெவ்வேறு சூழ்நிலைகளில் வருகிறார். ஒவ்வொருவருக்கும் தனது பணித்திட்டத்தை நிறைவேற்றத் தனித் தனி இயல்புகள் தேவைப்படுகின்றன. இந்த வகையில், ஓர் இறைத்தூதருக்கு ஒரு மேன்மை (சிறப்புக்குரிய விஷயம்) வழங்கப்படுகிறது எனில் மற்றோர் இறைத்தூதருக்கு வேறு வகையான மேன்மை வழங்கப்படுகிறது. பிற்காலத்தில், இறைத்தூதரின் இந்த மேன்மையே அவரைப் பின்பற்றுபவர்களுக்கு ஒரு சோதனையாக மாறிவிடுகிறது. அவர்கள் தங்கள் இறைத்தூதருக்கு வழங்கப்பட்ட மேன்மையை (தூதுத்துவத்தை) உறுதிப்படுத்தும் மேன்மையாகக் கொள்வதற்குப் பதிலாக அதுவே முழுமை – மேன்மை என்னும் பொருளில் எடுத்துக்கொள்கிறார்கள். நாங்கள் அனைவரையும் விடச் மிகச்சிறந்த

இறைத்தூதரைப் பின்பற்றுகிறோம். எனவே, நாம் இனி யாரையும் நம்ப வேண்டியதில்லை என்று அவர்கள் நினைத்துக்கொள்கிறார்கள். மோசேயின் சீடர்கள் இயேசு கிறிஸ்துவை மறுத்தனர். ஏனென்றால், இறைவன் அவரிடம் நேரடியாகப் பேசும் அளவிற்கு அவர்களுடைய இறைத்தூதர் உயர்ந்தவர் என்று அவர்கள் நம்பினர். இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் இறுதிக்கால இறைத்தூதரை மறுத்தனர். ஏனென்றால், இறைவன் தந்தை இல்லாமல் படைத்த அளவுக்கு உயர்ந்த சிறப்புடைய ஓர் ஆளுமையை ஏற்றுள்ளதாக அவர்கள் புரிந்து வைத்திருந்தனர். இதைப் போலவே, முஹம்மதிய சமூகத்தைச் சீர்திருத்தவும் புதுப்பிக்கவும் எழுந்த இறைவனின் அடியார் களையும் மக்கள் மறுத்தனர். ஏனென்றால் அவர்களால் அழைக்கப்பட்ட வர்களின் மனநிலை என்னவென்றால், நாங்கள் பெரியவர்களின் வாரிசுகள்; நாங்கள் பெரியவர்களைப் பற்றிப் பிடித்திருக்கிறோம்; இந்நிலையில் எங்களுக்கு வேறொருவரின் தேவை எதற்கு? சமூகங்களின் வீழ்ச்சிக் காலங்களில், என்ன நடக்குமென்றால் மக்கள் உலகப் பாதையில் செல்லத் தொடங்கி விடுகிறார்கள். அதே நேரத்தில், அவர்கள் தங்கள் சொர்க்கமும் பாதுகாக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அந்த நேரத்தில், இந்த நம்பிக்கை அவர்களுக்கு ஓர் உளவியல் ஆதரவாக மாறிவிடுகிறது. அவர்கள் தங்களுடைய புனித ஆளுமைகளின் மேன்மையைக் கருத்தில் கொண்டு, இந்த உலகில் என்ன செய்தாலும், அவர்களின் மறுமை ஒருபோதும் சந்தேகத்திற்குரியதாகாது என்று ஆறுதல் பெற்றுக் கொள்கிறார்கள்.

இது தவறான நம்பிக்கையாகும், இதுதான் மக்களை இறைவனின்பால் அழைப்பவர்களை எதிர்க்கத் துணிச்சல் தருகிறது. மக்களை வழிநடத்த, கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லாத மற்றோர் அமைப்பை இறைவனால் நிறுவி இருக்க முடியும். ஆனால் இந்த உலகம் ஒரு சோதனைக்கான இடம். இங்கு விதிக்கப்படும் சோதனைகளின் பயன்கள் மனிதன் கண்ணால் பார்க்காத நிலையில் இறைவனை அடைய வேண்டும் என்பதும், மனித நாவிலிருந்து எழும் இறைவனின் குரலை அடையாளம் காண வேண்டும் என்பதும், புறவயமான திரைகளைக் கடந்து சென்று உண்மையை அதன் அகவயமான வடிவத்தில் கண்ணுற வேண்டும் என்பதும்தான்.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اَنْفِقُوْا مِمَّا رَزَقْنٰكُمْ مِّنْ قَبْلِ اَنْ يَّاْتِيَ
يَوْمٌ لَّا بَيْعٌ فِيْهِ وَلَا خُلَّةٌ وَّ لَا شَفَاعَةٌ ؕ وَالْكٰفِرُوْنَ هُمُ
الظّٰلِمُوْنَ ۝ اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَيُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ سِنَةٌ

وَّلَا نَوْمٌ ؕ لَهٗ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ؕ مَنْ ذَا الَّذِیْ
یَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ ؕ یَعْلَمُ مَا بَیْنَ اَیْدِیْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ
وَلَا یُحِیْطُوْنَ بِشَیْءٍ مِّنْ عِلْمِهٖۤ اِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ كُرْسِیُّهُ
السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ وَلَا یَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِیُّ الْعَظِیْمُ ﴿۲۵۵﴾
لَاۤ اِكْرَاهَ فِی الدِّیْنِ ۙ قَدْ تَّبَیَّنَ الرُّشْدُ مِنَ الْغَیِّ ۚ فَمَنْ
یَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَیُؤْمِنْۢ بِاللّٰهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰی ۗ
لَا انْفِصَامَ لَهَا ؕ وَاللّٰهُ سَمِیْعٌ عَلِیْمٌ ﴿۲۵۶﴾ اَللّٰهُ وَلِیُّ الَّذِیْنَ اٰمَنُوْا ۙ
یُخْرِجُهُمْ مِّنَ الظُّلُمٰتِ اِلَی النُّوْرِ ؕ وَالَّذِیْنَ كَفَرُوْۤا اَوْلِیٰٓـُٔهُمُ
الطَّاغُوْتُ ۙ یُخْرِجُوْنَهُمْ مِّنَ النُّوْرِ اِلَی الظُّلُمٰتِ ؕ اُولٰٓئِكَ
اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِیْهَا خٰلِدُوْنَ ﴿۲۵۷﴾ ع ۳۲

[254]நம்பிக்கையாளர்களே! எந்தவிதமான பேரமும் நட்பும் பரிந்துரையும் இல்லாத அந்த நாள் வருவதற்குமுன் நாம் உங்களுக்கு வழங்கியவற்றிலிருந்து (அறச்)செலவு செய்யுங்கள். மறுப்பாளர்தாம் முறைகேடர்கள். [255]அல்லாஹ்! அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் என்றென்றும் உயிர்த்திருப்பவன்; என்றென்றும் நிலைத்திருப்பவன்; உறக்கக் கலக்கமோ, உறக்கமோ அவனைப் பீடிக்கமாட்டா. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனுக்கே உரியன. அவனது அனுமதியின்றி அவனிடம் பரிந்து பேசுபவர் யார்? அவர்களுக்கு முன்னால் இருப்பவற்றையும் பின்னால் இருப்பவற்றையும் அவன் அறிவான். அவனது அறிவிலிருந்து அவன் விரும்பியதை அன்றி வேறு எதையும் (எவரும்) அறிந்து கொள்ளமுடியாது. அவனது இருக்கை (ஆட்சி) வானங்கள், பூமி எங்கிலும் சூழ்ந்திருக்கிறது. அவற்றைப் பாதுகாப்பது அவனைச் சோர்வடையச் செய்வதில்லை. அவன்தான் மிக உயர்ந்தவன்; மகத்துவமிக்கவன். [256]மார்க்கத்(தை ஏற்றுக் கொள்வ)தில் எந்த வற்புறுத்தலும் இல்லை. தவறான வழியிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது. எனவே, எவர் சாத்தானை மறுத்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் என்றும் அறுபடாத பலமான

கயிற்றைப் பற்றிக் கொண்டவர் ஆவார். அல்லாஹ் செவியுறுபவன்; முற்றும் அறிந்தவன். [257]அல்லாஹ்வே நம்பிக்கையாளர்களுக்குப் பாதுகாவலன். அவன் அவர்களை இருளிலிருந்து வெளியேற்றி வெளிச்சத்தின்பால் கொண்டுவருகிறான்.(ஓரிறை) மறுப்பாளர்களுக்குச் சாத்தான்களே ஆதரவாளர்கள். (அவர்கள்) இவர்களை வெளிச்சத்திலிருந்து வெளியேற்றி இருளின்பால் கொண்டு செல்கின்றனர். இவர்கள்தாம் நரகவாசிகள்; அதில் என்றென்றும் கிடப்பார்கள்.

அறச்செலவு என்னும் விலையைக் கொடுத்து இறைவனை ஏற்பவன் மட்டுமே இறைவனை அடைகிறான். மேலும் ஒருவன் இறைவனை அடைந்து விட்டால், ஓர் ஒளியைப் பெறுகிறான், அதைக்கொண்டு அவன் வழிதவறாமல் நடக்கிறான். இறுதியில் அவன் சொர்க்கத்தையே அடைந்து விடுகிறான். இதற்கு மாறாக, அறச்செலவு என்னும் விலையைக் கொடுக்காமல் இறைவனை ஏற்பவன் எப்போதும் இருளில்தான் இருப்பான். சாத்தான் அவனை வழிகெடுத்து, அழைத்துச் செல்லும் பாதைகளின் கடைசி உறைவிடம் நரகத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

அறச்செலவு செய்வதென்பது தன்னையும் தன் செல்வத்தையும் மார்க்கத்திற்காகச் செலவிடுவதாகும். தனது சொந்த நலன்களைத் தியாகம் செய்து மார்க்கத்தை நோக்கி முன்னேறுவதாகும். ஒரு மனிதன் தனது அறச்செலவினை விலையாகக் கொடுத்து ஒரு நம்பிக்கையை ஏற்றுக் கொள்கிறான் என்றால், அவன் அதை ஏற்றுக்கொள்வதில் உண்மையாக இருக்கிறான் என்று பொருள். உண்மையாக இருக்கும் இந்தப் பண்பு மிகவும் முக்கியம். உண்மையாக இருப்பதுதான் ஒருவருக்கு அந்த நம்பிக்கையின் ஆழங்களை அறியக் காரணமாகிறது. உண்மையாக ஈடுபட்ட பிறகுதான், ஒரு மனிதனுக்கும் அவனது நோக்கத்திற்கும் இடையே ஒரு யதார்த்தமான தொடர்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உருவாகிறது; மேலும் அந்த நோக்கத்தின் அனைத்து அம்சங்களும் அவனுக்குத் தெளிவாகத் தெரிகின்றன. தன் சுயத்தை ஒப்படைப்பதையே விலையாகக் கொடுத்து மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளாத ஒருவனின் நிலை இதற்கு நேர்மாறானது. அத்தகைய மனிதன் ஒருபோதும் மார்க்கம் குறித்து உண்மையாக இருக்க மாட்டான். எனவே அவன் மறுமையை ஓர் எளிதான பொருளாகக் கருதுவான். மறுமையின் ஈடேற்றத்திற்கு, பெரியவர்களின் பரிந்துரையோ, மதத்தின் பெயரால் சில சடங்குகளோ புறவயமான செயல்பாடுகளோ போதுமானவை என்று அவன் எண்ணுவான். மறுமை குறித்த எண்ணத்தில் உண்மையானவனாக இல்லாததால், மறுமை என்பது பிரபஞ்சத்தின் அதிபதியாகிய இறைவனின் மகத்துவமும் மேன்மையும்

வெளிப்படும் நாள் என்ற ரகசியத்தை அவன் புரிந்து கொள்ள மாட்டான். வெறும் மேலோட்டமான கருத்துக்களைக் கொண்டு அத்தகைய ஒரு நாளுக்கான வெற்றியை எதிர்பார்ப்பதென்பது இறைவனின் இறைமையைக் குறைத்து மதிப்பிடுவதாகும், இது இறைவனிடம் மனிதனின் குற்றத்தை அதிகரிக்குமே அன்றி, அவனை ஏற்றுக்கொள்ளக் காரணமாக அமையாது. இறைவனுடைய செய்தி மனிதனுக்குச் சான்றுகளின் மொழியில் வருகிறது, அவன் ஒரு சில சொற்களைச் சொல்லி அதை மறுத்துவிடுகிறான். இதுவே சாத்தானிய சலனம். சாத்தானின் தீய தூண்டுதல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டு, இறைச் சான்றுகளை உணர்ந்து, அதற்கு முன் பணிவோருக்கே வழிகாட்டுதல் கிடைக்கிறது.

اَلَمۡ تَرَ اِلَى الَّذِىۡ حَآجَّ اِبۡرٰهٖمَ فِىۡ رَبِّهٖۤ اَنۡ اٰتٰٮهُ اللّٰهُ الۡمُلۡكَ‌ۘ اِذۡ قَالَ اِبۡرٰهٖمُ رَبِّىَ الَّذِىۡ يُحۡىٖ وَيُمِيۡتُ ۙ قَالَ اَنَا اُحۡىٖ وَاُمِيۡتُ‌ؕ قَالَ اِبۡرٰهٖمُ فَاِنَّ اللّٰهَ يَاۡتِىۡ بِالشَّمۡسِ مِنَ الۡمَشۡرِقِ فَاۡتِ بِهَا مِنَ الۡمَغۡرِبِ فَبُهِتَ الَّذِىۡ كَفَرَ‌ؕ وَاللّٰهُ لَا يَهۡدِى الۡقَوۡمَ الظّٰلِمِيۡنَ ۙ﴿۲۵۸﴾

[258](நபியே!) அல்லாஹ் தனக்கு ஆட்சியை வழங்கியிருந்த காரணத்தால் ஆப்ரஹாமிடம் அவருடைய இறைவனைக் குறித்து வாதம்புரிந்தவனைப் பற்றி நீர் அறிந்திருக்கவில்லையா? ''வாழ்வையும் சாவையும் அளிப்பவன் என் இறைவனே'' என்று ஆப்ரஹாம் கூறியபோது அவன், ''நானும்தான் வாழ்வையும் சாவையும் அளிக்கிறேன்'' என்றான். அதற்கு ஆப்ரஹாம், ''அல்லாஹ் சூரியனைக் கிழக்கிலிருந்து உதிக்கச் செய்கிறான். நீ அதனை மேற்கிலிருந்து உதிக்கச்செய்'' என்றார். இறைவனை மறுத்த அவன் திகைத்துப் போனான். அல்லாஹ் தீவினையாளர்களுக்கு நேர்வழி காட்டுவதில்லை.

இன்றைய காலத்தில், அரசமைக்கும் உரிமை பொதுமக்களின் ஆதரவு கொண்டு பெறப்படுகிறது. ஆனால் மக்களாட்சிக் காலத்திற்கு முன்பு, மன்னர்கள் பெரும்பாலும் தம்மை இறைவனின் மனித வடிவம் என்று மக்களை நம்ப வைத்து ஆட்சி செய்தனர். பண்டைய ஈராக்கில், இறைத்தூதர் ஆப்ரஹாமின் சமகாலத்து அரசனான நிம்ரோதின் (நம்ரூத்) நிலையும் இதுவாகவே இருந்தது. அவனுடைய மக்கள் சூரியனைத்

தெய்வங்களின் தலைவனாகக் கருதினர். அதனை வணங்கி வந்தனர். நிம்ரோத் தன்னைச் சூரியக் கடவுளின் வெளிப்பாடு என்றும், அதனால் மக்களை ஆள தெய்வீக உரிமை தனக்கு இருப்பதாகவும் கூறினான். அந்த நேரத்தில் இறைத்தூதர் ஆப்ரஹாம் ஈராக்கில் ஏகத்துவக் குரலை உயர்த்தியபோது, அவருக்கு அரசியலுடனும் அரசாங்கத்துடனும் நேரடித் தொடர்பு எதுவும் இருக்கவில்லை. அவர் மக்களிடம் உங்கள் படைப்பாளனும் அதிபதியும் ஏக இறைவன் ஒருவன் மட்டுமே; அவன் இறைமையில் பங்கு கொள்ள இங்கு யாரும் இல்லை; எனவே, நீங்கள் அவனையே வணங்க வேண்டும்; அவனுக்கு அஞ்சுங்கள்; அவன் மீதே நம்பிக்கை வையுங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தார். இருப்பினும், அரசியல் சாராத இந்த அழைப்பில், நிம்ரோதுக்குத் தனது சொந்த அரசியல் பாதிக்கப்படுவதாய்த் தோன்றியது. சூரியனைச் சக்தியற்ற ஒரு படைப்பு என்று கூறும் ஒரு நம்பிக்கை, நிம்ரோத் தனது அரசியல் சிம்மாசனத்தை கட்டியெழுப்பியிருந்த நம்பிக்கையின் அடித்தளத்தையே அசைத்துக் கொண்டிருந்தது. எனவே அவன், அவரது எதிரியாகிவிட்டான்.

இறைத்தூதர் ஆப்ரஹாம் நிம்ரோதுடன் நடத்திய உரையாடல் இறைத்தூதர்களின் அழைப்பியல் வழிமுறையை வெளிப்படுத்துகிறது. நிம்ரோதின் கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக, ‘‘வாழ்வும் சாவும் யார் வசத்தில் இருக்கிறதோ அவனே என் இறைவனே’’ என்று ஆப்ரஹாம் கூறினார்கள். நிம்ரோத், ஒரு வாக்குவாத பாணியைக் கையாண்டு, ‘‘நானும்தான் வாழ்வும் சாவும் அளிக்கிறேன்’’ நான் விரும்பியவர்களை இறக்கச்செய்து விடுவேன், விரும்பியவர்களை வாழ விட்டு விடுவேன் என்றான். ஆப்ரஹாம் நிம்ரோதுக்குப் பதிலளித்திருக்க முடியும். ஆனால் அவர் உரையாடலை ஒரு வாக்குவாதமாக மாற்ற விரும்பவில்லை. எனவே, அவர் உடனடியாக இரண்டாவது உதாரணத்தை முன்வைத்துவிட்டார். அதற்கு பதிலளிக்கும் விதமாக நிம்ரோத் முதல் உதாரணத்திற்கு அளித்த அதே பதிலைப் போன்ற ஒன்றைச் சொல்லியிருக்க முடியாது. இறைத்தூதர் ஆப்ரஹாம் அவர்களுக்கு நிம்ரோத் போட்டியாளராக இருக்கவில்லை. மாறாக, அவன் சத்திய அழைப்பு விடுக்கப்பட்ட ஒருவனின் நிலையில் இருந்தான். எனவே வாதத்திற்கு எந்த அறிவார்ந்த அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள அவருக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

தற்போதைய உலகம் சோதனைக்கான உலகம். எனவே, ஒரே விஷயத்தை ஒரு மனிதன் இரண்டு வெவ்வேறு பொருள்களில் எடுத்துக் கொள்ளும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, ஒருவரிடம் செல்வமும் அதிகாரமும் வந்து விட்டால், அவர் தமது வெற்றியைச் சொந்தத் திறமைகளின் விளைவாகக் காணலாம். இது ஒரு கோணம். இதைப்போலவே, அதை முற்றிலும் இறைவனிடமிருந்து கிடைத்த அருட்கொடை

என்ற கோணத்திலும் அவரால் காண முடியும். முதல் கோணம் தீவினையின் ஒரு வடிவம், இரண்டாவது நன்றியுணர்வின் வடிவம். தீவினைச் சுபாவம் கொண்ட ஒருவனுக்குத் தற்போதைய உலகம் வழிகேட்டிற்கான உணவாக மட்டுமே இருக்கும். ஒவ்வொரு நிகழ்விலும் அவனுக்குச் செருக்கு, தற்பெருமை ஆகியவற்றுக்கான தீனி கிடைக்கும். இதற்கு மாறாக, நன்றி மனப்பான்மை கொண்ட ஒருவனுக்கு, ஒவ்வொரு நிகழ்விலும் நல்வழிக்கான காரணிகள் இருக்கும். இறைவனின் உலகம், தன் பெரும்பரப்புடன் இறை நம்பிக்கையின் உணவுக்கான விரிப்பாக மாறிவிடும்.

اَوْ كَالَّذِىْ مَرَّ عَلٰى قَرْيَةٍ وَّ هِىَ خَاوِيَةٌ عَلٰى عُرُوْشِهَا ۚ قَالَ اَنّٰى
يُحْىٖ هٰذِهِ اللّٰهُ بَعْدَ مَوْتِهَا ۚ فَاَمَاتَهُ اللّٰهُ مِائَةَ عَامٍ ثُمَّ
بَعَثَهٗ ؕ قَالَ كَمْ لَبِثْتَ ؕ قَالَ لَبِثْتُ يَوْمًا اَوْ بَعْضَ يَوْمٍ ؕ
قَالَ بَلْ لَّبِثْتَ مِائَةَ عَامٍ فَانْظُرْ اِلٰى طَعَامِكَ وَ شَرَابِكَ لَمْ
يَتَسَنَّهْ ۚ وَانْظُرْ اِلٰى حِمَارِكَ ۫ وَ لِنَجْعَلَكَ اٰيَةً لِّلنَّاسِ
وَانْظُرْ اِلَى الْعِظَامِ كَيْفَ نُنْشِزُهَا ثُمَّ نَكْسُوْهَا لَحْمًا ؕ فَلَمَّا
تَبَيَّنَ لَهٗ ۙ قَالَ اَعْلَمُ اَنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ﴿۲۵۹﴾ وَ اِذْ قَالَ
اِبْرٰهٖمُ رَبِّ اَرِنِىْ كَيْفَ تُحْىِ الْمَوْتٰى ؕ قَالَ اَوَلَمْ تُؤْمِنْ ؕ قَالَ
بَلٰى وَلٰكِنْ لِّيَطْمَئِنَّ قَلْبِىْ ؕ قَالَ فَخُذْ اَرْبَعَةً مِّنَ الطَّيْرِ فَصُرْهُنَّ
اِلَيْكَ ثُمَّ اجْعَلْ عَلٰى كُلِّ جَبَلٍ مِّنْهُنَّ جُزْءًا ثُمَّ ادْعُهُنَّ يَاْتِيْنَكَ
سَعْيًا ؕ وَاعْلَمْ اَنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۲۶۰﴾ ع ۳۴

[259]அல்லது, வீடுகளின் கூரைகள் எல்லாம் தகர்ந்து அடியோடு அழிந்துவிட்ட ஓர் ஊரைக் கடந்து சென்றபோது ''இந்த அழிவுக்குப் பின் இந்த ஊரை அல்லாஹ் எவ்வாறு உயிர்ப்பிப்பான்'' என்று (வியந்து) கேட்ட ஒருவரை (நீர்) அறிவீரா? எனவே அல்லாஹ் நூறு ஆண்டுகள் அவரை இறந்திருக்கச் செய்தான். பின்னர் அவன் அவரை மீண்டும் எழுப்பி ''நீர் எவ்வளவு காலம் இந்நிலையில் இருந்தீர்?'' என்று வினவினான். அதற்கு அவர், ''ஒருநாள் அல்லது ஒருநாளுக்கும் சற்றுக் குறைவாக'' என்றார்.

''இல்லை, நீர் நூறு ஆண்டுகள் இந்நிலையில் இருந்தீர். இப்போது நீர் உமது உணவையும் பானத்தையும் பாரும். அவை (இதுவரை) கெட்டுப்போகவில்லை. (மடிந்துபோன) உமது கழுதையையும் பாரும். உம்மை மனிதர்களுக்கு ஒரு சான்றாக ஆக்குவதற்காகவே இவ்வாறு செய்தோம். அதன் எலும்புகளை நாம் எவ்வாறு ஒன்றுசேர்த்துப் பின்னர் அதன்மீது தசையைப் போர்த்து (உயிர்ப்பிக்)கிறோம் என்பதைப் பாரும்' என்று அல்லாஹ் கூறினான். எனவே அவருக்கு எல்லாம் தெளிவாகிவிட்ட பிறகு, ''உறுதியாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன் என்பதை நான் அறிகிறேன்'' என்றார். [260]***ஆப்ரஹாம் இறைவனை நோக்கி ''என் இறைவா! இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கிறாய் என்பதை எனக்குக் காட்டுவாயாக!'' என்று கேட்டபோது அவன், ''நீர் நம்பவில்லையா?'' என்று கேட்டான். (அதற்கு) அவர் ''ஆம் (உறுதியாக நம்புகிறேன்). ஆயினும் என் உள்ளம் நிறைவடைவதற்காகவே (இவ்வாறு கேட்கிறேன்).'' என்றார். இறைவன், ''நீர் நான்கு பறவைகளைப் பிடித்து (அவற்றைப் பழக்கிப் பின்னர்) அவற்றை அறுத்து(த் துண்டு துண்டாக்கி) அவற்றின் ஒவ்வொரு பகுதியையும் தனித்தனி மலைகளில் வைத்துவிட்டுப் பின் அவற்றை அழைப்பீராக! அவை உம்மிடம் பறந்தோடி வரும். அறிந்துகொள்ளும்! அல்லாஹ் யாவற்றினும் வல்லவன்; ஞானம் மிக்கவன்'' என்று கூறினான்.***

மரணத்திற்குப் பிறகு உயிர்த்தெழுப்புவது பற்றி இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனுபவங்கள் இரண்டும் இறைத்தூதர்களுடன் தொடர்புடையவை. முதல் அனுபவம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இறைத்தூதர் உசைருடன் (எஸ்ரா) நிகழ்ந்திருக்கலாம். இரண்டாவது அனுபவம் இறைத்தூதர் ஆப்ரஹாமுடன் தொடர்புடையது. அவருடைய காலம் கிமு 1985–2160 க்கு இடைப்பட்ட காலம். இறைத்தூதர்கள் இறைவனால் நிர்ணயிக்கப்படுவதெல்லாம் மக்களை மறைவான உண்மைகள் குறித்து அறியச் செய்வதற்குத்தான். எனவே, அவர்களுக்கு மறைவான விஷயங்கள் திரை விலக்கிக் காண்பிக்கப்பட்டு விடுகின்றன. மற்றவர்களுக்கோ அவற்றின் மீது காரண காரியங்களின் திரையிடப்பட்டு விட்டது. இந்த உண்மைகளை நேரில் பார்த்து, அவை குறித்து மக்களை அறியச் செய்யும் பொருட்டு, இறைத்தூதர்களோடு இந்தத் தனிப்பட்ட வரலாறு கையாளப்படுகிறது. ''கேட்டறிந்த ஒன்றை அல்ல, நாங்கள் பார்த்த ஒன்றைப் பற்றி உங்களை எச்சரிக்கிறோம்'' என்று மக்களுக்கு மறைவான உண்மைகள் குறித்துச் சொல்லத் தகுந்தவர்களாக இறைத்தூதர்கள் இருக்க வேண்டும்.

இறைத்தூதர்களுக்கு நாற்பது வயதில் நபித்துவம் வழங்கப்படுகிறது. நபித்துவத்திற்கு முன்பு, அவர்கள் பொய் கூறியதாக எந்த அனுபவமும் யாருக்கும் ஏற்பட்டிருக்காத வகையில் அவர்களது முழு வாழ்க்கையும் மக்களுக்கு முன்னே கழிகிறது. கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக் காலம், தம் சூழலுக்குள் அவர்கள் தம்மை உண்மையாளர்கள் என்பதை நிரூபித்த பிறகு, ஏக இறைவன் அவர்களைச் சோதனைக் காரணிகளுக்காக, மக்களிடமிருந்து மறைக்கப்பட்ட உண்மைகளை அறிவிப்பதற்காக எழச் செய்கிறான். இந்தச் சுற்றுச்சூழலில் எல்லாரை விடவும் மிகவும் உண்மையாளர்களான இறைத்தூதர்கள் ஒருபுறம், தாங்கள் கண்ணுற்றவைகளை மக்களுக்குத் தெரிவிக்கின்றனர். மறுபுறம், அவர்கள் அதை அறிவைக் கொண்டும் இயற்கை ஆதாரங்களுடனும் சான்றளிக்கின்றனர். இன்னும், இறைத்தூதர்களுக்கு எப்போதும் மிகவும் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. என்றாலும், அவர்கள் தங்கள் சொல்லிலிருந்து விலகுவதில்லை. அவர்கள் தங்கள் கூற்றுகளில் இறுதிவரை மாறாமல் உறுதியாக இருக்கிறார்கள். இதிலிருந்து அவர்கள் எதைச் சொல்கிறார்களோ அதில் முற்றிலும் தீவிரமாக இருப்பது நிரூபிக்கப்பட்டுவிடுகிறது. அவர்கள் எதையும் கற்பனையாகப் புனையவில்லை. ஏனென்றால், இட்டுக்கட்டப்பட்ட செய்தியை முன்வைப்பவர் இவ்வளவு கடினமான சூழ்நிலைகளில் ஒருபோதும் தம்முடைய சொல்லில் நிலைத்து நிற்க முடியாது. இதைப் போலவே அவனுடைய பேச்சு உண்மைப்படுத்தப்படும் அளவிற்கு வெளி உலகத்துடன் மிகச் சரியாக ஒத்துப் போகாது.

مَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ كَمَثَلِ حَبَّةٍ اَنْۢبَتَتْ
سَبْعَ سَنَابِلَ فِيْ كُلِّ سُنْۢبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ ؕ وَاللّٰهُ يُضٰعِفُ لِمَنْ
يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ ﴿٢٦١﴾ اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ
سَبِيْلِ اللّٰهِ ثُمَّ لَا يُتْبِعُوْنَ مَآ اَنْفَقُوْا مَنًّا وَّلَآ اَذًى ۙ لَّهُمْ
اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ﴿٢٦٢﴾
قَوْلٌ مَّعْرُوْفٌ وَّمَغْفِرَةٌ خَيْرٌ مِّنْ صَدَقَةٍ يَّتْبَعُهَآ اَذًى ؕ وَاللّٰهُ
غَنِيٌّ حَلِيْمٌ ﴿٢٦٣﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تُبْطِلُوْا صَدَقٰتِكُمْ
بِالْمَنِّ وَالْاَذٰى ۙ كَالَّذِيْ يُنْفِقُ مَالَهٗ رِئَآءَ النَّاسِ وَلَا

يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ؕ فَمَثَلُهٗ كَمَثَلِ صَفْوَانٍ عَلَيْهِ
تُرَابٌ فَاَصَابَهٗ وَابِلٌ فَتَرَكَهٗ صَلْدًا ؕ لَا يَقْدِرُوْنَ عَلٰى
شَىْءٍ مِّمَّا كَسَبُوْا ؕ وَاللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ الْكٰفِرِيْنَ ﴿۲۶۴﴾

[261]இறைவழியில் தம் உடைமைகளை (அறச்)செலவு செய்வோருக்கு உவமை ஒரு தானியம். அதிலிருந்து ஏழு கதிர்கள் முளைக்கின்றன. ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் உள்ளன. (இவ்வாறு) தான் விரும்பியோருக்கு அல்லாஹ் (நன்மைகளைப்) பன்மடங்காக்குகிறான். அல்லாஹ் தாராளமானவன்; முற்றும் அறிந்தவன். [262]தம் செல்வங்களை இறைவழியில் செலவு செய்த பின்னர் அதனைச் சொல்லிக் காட்டாமலும் (பொருளைப் பெற்றவரைப்) புண்படுத்தாமலும் இருப்போருக்கு உரிய நற்கூலி அவர்களின் இறைவனிடம் இருக்கிறது. அவர்களுக்கு எந்த அச்சமுமில்லை; அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். [263]ஈகை அளித்துவிட்டு (அதை வாங்கியவனைப்) புண்படுத்துவதை விடக் கனிவான சொல்லும் மன்னித்தலும் சிறந்தவையாகும். அல்லாஹ் தேவை எதுவுமற்றவன்; சகிப்புத்தன்மையுடையவன். [264]நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வின் மீதும், மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல் தன் செல்வத்தை வெளிப்பகட்டிற்காகச் செலவு செய்பவனைப் போல (நீங்களும்) கொடுத்ததைச் சொல்லிக்காட்டியும் புண்படப்பேசியும் உங்கள் ஈகைகளைப் பாழாக்கி விடாதீர்கள். அத்தகையவன் மண்மூடிய ஒரு வழுக்குப் பாறையைப் போன்றவன். அதன்மீது பெருமழை பெய்து அதனை முற்றிலும் வெறுமையாக்கிவிடும். அதுபோல அத்தகையோர் தாங்கள் செய்யும் ஈகையின் மூலம் எப்பயனும் பெறமாட்டார்கள். மறுப்பாளர்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவதில்லை.

மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலும், ஒரு விதையைப் போன்றது. மனிதன் அதை ‘மண்ணில்’ விதைக்கிறான். அவனது செயல் மக்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக இருந்ததென்றால், அவன் தனது விதையை ‘உலக’ மண்ணில் விதைத்தவனாவான். அதனால் இந்த வாழ்க்கையில் தனது உழைப்பின் பலனை அறுவடை செய்வதற்காக. இறைவன் அவனது செயலைப் ‘பார்க்க’ வேண்டும் என்பதற்காக இருந்திருந்தால், அவன் ‘மறுமைப் பூமி’யில் தன் விதையை விதைத்தவனாவான். அது மறுமையில்

பூக்களையும் பழங்களையும் நல்கும் வசந்தத்தைக் கொண்டு வரும். உலகில், ஒரு விதையிலிருந்து ஆயிரம் விதைகள் உற்பத்தியாகின்றன. மறுமையின் வயலில் விதைகளை விதைப்பதன் நிலையும் இதேதான்.

உலக ஆதாயத்திற்காகவோ உலகப் புகழ், கண்ணியம் ஆகிய வற்றிற்காகவோ செலவு செய்பவன் இந்த உலகில் தனது வெகுமதியைப் பெற விரும்புகிறான். இத்தகைய மனிதனுக்கு மறுமையில் எந்தப் பங்கும் இல்லை. ஆனால் இறைவனுக்காகச் செலவு செய்பவனின் நிலையானது செய்த நன்மையைச் சொல்லிக் காட்டுவதாக இருப்பதில்லை. இறைவனுக்காக வென்று செலவு செய்த பிறகு, மனிதனுக்கு அவன் காட்டும் இரக்கம் என்ன? அவனது பணம் சென்றடையும் மனிதர்களிடமிருந்து நல்ல பதில் கிடைக்கவில்லை என்றால் அவன் மனக்குறையை வெளிப்படுத்துவதில்லை. அவன் நல்ல பதிலை இறைவனிடமிருந்து பெற விரும்புபவன். இவ்வாறு இருக்க அது மனிதர்களிடமிருந்து கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவனுக்கு எந்தக் கவலையும் இல்லை. ஒருவேளை யாசிக்கும் ஒருவனுக்கு அவனால் கொடுக்க முடியாது போனாலும் அவன் தவறான சொற்களைப் பேசுவதில்லை. மாறாக அவன் மென்மையான முறையில் வருத்தத்தைத் தெரிவித்து விடுகிறான். ஏனென்றால் அவன் தான் சொல்லும் அனைத்தையும் இறைவனுக்கு முன்பாகச் சொல்லிக் கொண்டிருப்பதை அறிவான். இறைவனின் அச்சம் அந்த மனிதனுக்கு முன்பாகத் தன் நாவைக் கட்டுப்படுத்த அவனைக் கட்டாயப்படுத்துகிறது.

வழுக்குப் பாறையின் மீது சிறிதளவு மண் உறைந்து போனால் அது பார்ப்பதற்கு மண்ணாகவே தோன்றும். ஆனால், மழை காற்று வீசியவுடன் மேல்மண் அடித்துச் செல்லப்பட்டு உள்ளிருந்து கல் மட்டும் வெளிப்பட்டு விடும். மேலோட்டமாக மட்டும் மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவனின் நிலையும் இதுதான். மார்க்கம் அவனுக்குள் ஆழமாக நுழைந்திருக்காது. இப்படிப்பட்ட ஒருவனிடம் யாசகம் கேட்பவன் தவறான முறையில் கேட்டாலோ யாராவது அவனது தன்முனைப்பைப் புண்படுத்தும் வகையில் ஏதாவது சொன்னாலோ, அவன் கோபமடைந்து நியாயத்தின் எல்லைகளை மீறிவிடுகிறான். இத்தகைய நிகழ்வு, அவன் மேலிருக்கம் 'மண்ணை' அடித்துச் செல்லும் ஒரு புயலாக மாறிவிடுகிறது. பின்னர் அவன் மார்க்கத்தின் வெளிப் போர்வைக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த அந்த மனிதன் வெளியே வந்துவிடுகிறான். இறைவனுக்காகச் செயல்படுவதென்பது காணக்கூடியதை விட மறைவான ஒன்றுக்கு முன்னுரிமை அளிப்பதைப் போன்றது. இந்த உயர்ந்த பார்வைக்கு யார் சான்றளிக்கிறார்களோ, அவர்களுக்கே இறைவனின் மறைவான ஞானத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன.

وَمَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ
وَتَثْبِيْتًا مِّنْ اَنْفُسِهِمْ كَمَثَلِ جَنَّةٍۢ بِرَبْوَةٍ اَصَابَهَا وَابِلٌ
فَاٰتَتْ اُكُلَهَا ضِعْفَيْنِ ۚ فَاِنْ لَّمْ يُصِبْهَا وَابِلٌ فَطَلٌّ ؕ وَاللّٰهُ
بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿٢٦٥﴾ اَيَوَدُّ اَحَدُكُمْ اَنْ تَكُوْنَ لَهٗ جَنَّةٌ مِّنْ
نَّخِيْلٍ وَّاَعْنَابٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۙ لَهٗ فِيْهَا مِنْ كُلِّ
الثَّمَرٰتِ ۙ وَاَصَابَهُ الْكِبَرُ وَلَهٗ ذُرِّيَّةٌ ضُعَفَآءُ ۖ فَاَصَابَهَآ
اِعْصَارٌ فِيْهِ نَارٌ فَاحْتَرَقَتْ ؕ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمُ
الْاٰيٰتِ لَعَلَّكُمْ تَتَفَكَّرُوْنَ ﴿٢٦٦﴾

[265]இறைவனின் உவப்பை விரும்பியும் தங்கள் உள்ளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும் (அறச்)செலவு செய்வோர் உயரமான இடத்திலுள்ள ஒரு தோட்டத்தைப் போன்றவர்கள். அதன்மீது பெருமழை பொழிந்தால் அது தனது விளைச்சலை இருமடங்காக்கித் தருகிறது. பெருமழை பொழியாவிட்டாலும் அதற்குச் சிறு தூறல்கூடப் போதுமானதாகும். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கிறான். [266]ஒருவரிடம் பேரீச்சைளும் திராட்சைகளும் கொண்ட ஒரு தோட்டமுள்ளது. அதில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதில் அவருக்கு எல்லாவகையான கனிகளும் கிடைக்கின்றன. அவரை முதுமை வந்தடைந்து விடுகிறது. அவருடைய குழந்தைகளோ இன்னும் (பொருளீட்ட) இயலாத(சிறு)வர்களாகவே இருக்கின்றனர். இந்நிலையில் தீயுடன் கூடிய புயல்காற்று அ(த்தோட்டத்)தை தாக்கிக் கரித்து விடுவதை உங்களில் எவரேனும் விரும்புவாரா? இவ்வாறு நீங்கள் சிந்தித்துணரும் பொருட்டுத் தன் சான்றுகளை அல்லாஹ் உங்களுக்கு உதாரணங்கள் கொண்டு தெளிவுபடுத்துகிறான்.

மனிதன் ஏதாவது ஒரு நோக்கத்திற்காகச் செயலாற்றும்போது, அத்துடன் அதற்கு ஆதரவாகத் தனது மன உறுதியை வலுப்படுத்துகிறான். அவன் தன் விருப்பத்தின்படி செயல்பட்டால், தனது மனத்தைத் தன் விருப்பத்தின் மீது நிலைநிறுத்துகிறான். இதற்கு மாறாக, இறைவன் செயல்படவேண்டும் என்று

விரும்பும் இடத்தில் செயல்பட்டால், அவன் தனது மனத்தை இறைவன் மீது நிலைநிறுத்துகிறான். இரண்டு பாதைகளிலும், சில நேரங்களில் எளிதான சூழ்நிலைகளிலும், சில நேரங்களில் கடினமான சூழ்நிலைகளிலும் செயலாற்ற வேண்டியிருக்கும். இருப்பினும், சூழ்நிலைகள் எவ்வளவு கடுமையாக இருக்குமோ, எவ்வளவு அதிகமாக ஒரு மனிதன் சிரமங்களை எதிர்கொண்டு செயல்பட வேண்டியிருக்குமோ, அவ்வளவு அதிகமாக அவன் தனது இலக்கை நோக்கித் தனது எண்ணத்தை உறுதிப்படுத்துவான். சாதாரணச் சூழ்நிலைகளில், இறைவனின் பாதையில் தனது செல்வத்தைச் செலவிடுவதும் நற்கூலிக்கான காரணமாக அமையும். ஆனால், எதிர்மாறான சூழ்நிலைகளிலும், சிறப்பான மன உறுதியைப் பயன்படுத்தித் தனது செல்வத்தை இறைவனின் பாதையில் கொடுக்கும்போது, இறைவனிடம் அவனுக்குக் கிடைக்கும் நற்கூலி மிகப் பெரியது. உலகப் பயன் எதுவும் இல்லாத சூழ்நிலையில் இறைவனுக்காகச் செலவு செய்வது; யாருக்குத் தன் மனம் கொடுக்க விரும்பவில்லையோ, இறைவனுக்காக அவருக்குக் கொடுப்பது; எந்த ஒருவருடன் மனம் அன்பாக நடக்க ஒப்பவில்லையோ அந்த ஒருவரை இறைவனுக்காக அன்பாக நடத்துவது ஆகியவையே ஒரு மனிதனை இறைவனின் வழிபாட்டில் மிகவும் உறுதியாக நிலைநிறுத்தி, இறைவனின் சிறப்பான கருணைக்கும் உதவிக்கும் தகுதியானவனாக ஆக்குகின்றன.

தன் முதுமையில் பழங்கள் உண்ணப் பயன்படும் என்று மனிதன் இளமைப் பருவத்தில் தோட்டத்தை வளர்க்கிறான். பிறகு வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில், அதாவது தனக்கு மிகவும் தேவைப்படும் நேரத்தில், அவனது பசுமையான தோட்டம் அழிக்கப்பட்டால் அந்த மனிதன் எவ்வளவு கெடுபேறு கொண்டவனாக இருப்பான்! மேலும் அவன் ஒரு புதிய தோட்டத்தை நட்டு அதை மீண்டும் வளர்த்து உருவாக்கும் நேரமும் அப்போது அவனுக்குக் கடந்துபோயிருக்கும். உலகியல் கண்ணியத்திற்காகவும் ஆதாயத்திற்காகவும் மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களின் நிலையும் இப்படிப்பட்டதுதான். அவர்கள் வெளிப்படையாக நன்மையான செயல்களைத் தொடர்ந்து செய்தனர். ஆனால் அவர்களின் வேலைகள் பார்ப்பதற்கு மட்டுமே பொதுவான உலகப்பற்றைக் கொண்டவர்களின் வேலைகளிலிருந்து வேறுபட்டிருந்தது உண்மையில் இரண்டிற்குமிடையே எந்த வேறுபாடும் இல்லை. உலகப் பற்றுக் கொண்ட ஒருவன், எந்த உலகியல் முன்னேற்றத்திற்கும் புகழுக்கும் உலகியல் வடிவமைப்பில் ஓடிக் கொண்டிருந்தானோ அதே உலக முன்னேற்றத்திற்கும் புகழுக்கும் அவர்கள் மார்க்கம் சார்ந்த வடிவமைப்பில் தம்முடைய உழைப்பைத் தொடங்கி விட்டனர். உலகக் கட்டடத்தில் தங்கள் செல்வத்தைச் செலவழித்து மற்றவர்கள் அடைந்த புகழையும் கண்ணியத்தையும், அவர்கள் தம் செல்வத்தை மார்க்கக் கட்டடத்தில்

செலவழித்து அதே புகழையும் கண்ணியத்தையும் அடைய விரும்பினர். அத்தகையவர்கள் மரணத்திற்குப் பிறகு மறுமையை அடைந்தால், அவர்களுக்கு அங்கே எதுவும் இருக்காது. அவர்கள் செய்ததெல்லாம், இந்த உலகத்திற்காகவே செய்தார்கள். இவ்வாறு இருக்க அவர்களால் மறுமையில் தங்களுக்கான உழைப்பின் கூலியை எவ்வாறு பெற முடியும்? இறைவனின் சான்றுகள் எப்போதுமே தோன்றுகின்றன. ஆனால் அவை மௌன மொழியில் இருக்கின்றன. சிந்திக்கும் திறனை வளர்த்துக் கொண்டவர்களால் மட்டுமே அவற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள முடியும்.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اَنْفِقُوْا مِنْ طَيِّبٰتِ مَا كَسَبْتُمْ وَمِمَّآ
اَخْرَجْنَا لَكُمْ مِّنَ الْاَرْضِ ۖ وَلَا تَيَمَّمُوا الْخَبِيْثَ مِنْهُ
تُنْفِقُوْنَ وَلَسْتُمْ بِاٰخِذِيْهِ اِلَّآ اَنْ تُغْمِضُوْا فِيْهِ ۭ وَاعْلَمُوْٓا
اَنَّ اللّٰهَ غَنِيٌّ حَمِيْدٌ ﴿٢٦٧﴾ اَلشَّيْطٰنُ يَعِدُكُمُ الْفَقْرَ وَيَاْمُرُكُمْ
بِالْفَحْشَاۗءِ ۚ وَاللّٰهُ يَعِدُكُمْ مَّغْفِرَةً مِّنْهُ وَفَضْلًا ۭ وَاللّٰهُ وَاسِعٌ
عَلِيْمٌ ﴿٢٦٨﴾ يُّؤْتِي الْحِكْمَةَ مَنْ يَّشَاۗءُ ۚ وَمَنْ يُّؤْتَ الْحِكْمَةَ
فَقَدْ اُوْتِيَ خَيْرًا كَثِيْرًا ۭ وَمَا يَذَّكَّرُ اِلَّآ اُولُوا الْاَلْبَابِ ﴿٢٦٩﴾

[267]நம்பிக்கையாளர்களே! நீங்கள் ஈட்டிய(நல்ல)வற்றிலிருந்தும் பூமியிலிருந்து நாம் உங்களுக்கு வெளிப்படுத்தித் தந்ததிலிருந்தும் (அறச்)செலவு செய்யுங்கள். தரக்குறைவான பொருள்களைச் செலவு செய்ய எண்ணாதீர்கள். நீங்கள் அத்தகைய பொருள்களைக் கண்களை மூடிக் கொண்டிருந்தால் அன்றி வாங்கமாட்டீர்களே! அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் தேவை எதுவுமற்றவன்; புகழுக்குரியவன். [268]சாத்தான் உங்களை வறுமையின் மூலம் அச்சமூட்டுகிறான். மானக்கேடானவற்றைச் செய்யுமாறு தூண்டுகிறான். ஆனால் அல்லாஹ் தன்னிடமிருந்து மன்னிப்பையும் அருளையுமே வாக்களிக்கிறான். அல்லாஹ் தாராளமானவன்; முற்றும் அறிந்தவன். [269]தான் விரும்பியோருக்கு அவன் ஞானத்தை வழங்குகிறான், எவருக்கு ஞானம் கிடைத்துவிட்டதோ அவருக்குப் பெரும் செல்வம் கிடைத்து விட்டது. அறிவுடையோரே இதனை உணர்வர்.

உலகில் மனிதன் சம்பாதிப்பதைச் செலவு செய்ய இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று சாத்தான் காட்டிய வழியில் செலவு செய்வது. இரண்டாவது இறைவன் காட்டிய வழியில் செலவு செய்வது. சாத்தான் செய்வதெல்லாம் மனிதனின் மனத்தில் அவனது சொந்தத் தேவைகளின் முக்கியத்துவத்தை விதைப்பதுதான். 'நீ சம்பாதித்ததை உன்னுடைய தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்யப் பயன்படுத்துவதே சிறந்த பயன்பாடு' என்று அவன் அவனுக்குக் கற்பிக்கிறான். ஒரு மனிதனிடம் அடிப்படையான தேவைக்கு மேல் செல்வம் இருப்பதைச் சாத்தான் காணும் போது அவன் அவனுக்குள் இன்னொரு ஆர்வத்தைத் தூண்டுகிறான். இதுதான் விளம்பரத்திற்கும் பகட்டுக்குமான ஆர்வம். இப்போது அவன் தனது செல்வத்தைத் தயக்கமின்றி விளம்பரப்படுத்தும் வேலைகளில் விரயம் செய்யத் தொடங்குகின்றான். மேலும் தனது செல்வத்தை நல்ல வழியில் பயன்படுத்தியதாக மகிழ்ச்சியடைகிறான்.

ஒரு மனிதன் தனது செல்வத்தைத் தனது தனிப்பட்ட சொத்தாகக் கருதாமல், இறைவனின் சொத்தாகக் கருத வேண்டும். அவன் தனது வருமானத்திலிருந்து நியாயமான தேவைக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு, மீதமுள்ளதை உயர்ந்த நோக்கங்களுக்காகச் செலவு செய்ய வேண்டும். அவன் இறைவனின் நலிவடைந்த அடியார்களுக்குக் கொடுத்து, அதை இறைமார்க்கத்தின் தேவைகளுக்குச் செலவிட வேண்டும். மனிதன் தனது செல்வத்தை இறைவனின் நலிவடைந்த அடியார்களுக்காகச் செலவிடுகிறான் என்றால் ஒரு வகையில் அவன் மறுமையில் வெறும் கையுடன் இறைவனுக்கு முன் நிற்கும்போது இறைவன் தனது அருட்கொடைகளிலிருந்து அவனை அலட்சியப்படுத்தி விடக்கூடாது என்று எதிர்பார்ப்பதாகிறது. இதைப் போலவே அவன் தனது செல்வத்தை மார்க்கத் தேவைகளுக்காகக் கொடுக்கும் போது இறைப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். இறைவனின் மகத்தான கருவூலத்தில் தனது சொற்பமான மூலதனம் சேர்ந்து பெருகும் பொருட்டு, அவன் தனது செல்வத்தை இறைவனின் செல்வத்துடன் சேர்த்து விடுகிறான்.

இறைவன் விதித்த வழிமுறைப்படி தனது செல்வத்தைச் செலவிடுபவன், ஞானத்திலும் புரிதலிலும் அவனுக்கு ஒரு பங்கு கிடைத்துள்ளது என்பதை நிரூபிக்கிறான். மனிதன் செல்வத்தின் மீது மோகம் கொண்டு அதை இறைவனின் பாதையில் செலவிடுவதை நிறுத்துவது மிகப்பெரிய அறிவின்மையாகும்.மேலும் மிகப்பெரிய ஞானம் என்பது, இறைவனின் பாதையில் முன்னேறுவதற்குப் பொருளாதார நலன்கள் ஒரு தடையாக மாறக்கூடாது என்பதை உணர்ந்திருப்பதுதான். இறைவனைத் தனக்குரியவனாகவும், தன்னை இறைவனுக்குரியவனாகவும் கருதத்

தொடங்கும் அளவுக்கு அவன் இறைவனுடன் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டும். தனி நலன்களின் ஓட்டுக்குள் வாழும் ஒருவனுக்குள் உயர்ந்த உண்மைகளைக் காணும் உயர்ந்த நிலைகளை அனுபவிக்கும் பார்வை உருவாக வாய்ப்பில்லை. இதற்கு மாறாக, தனிப்பட்ட நலன்களைப் புறக்கணித்து இறைவனை நோக்கிச் செல்பவன், வரம்புகளுக்கு மேல் தன்னை உயர்த்திக் கொள்கிறான். தேவையற்றவனும், புகழுக்குரியவனும், தாராளமானவனும், முற்றும் அறிந்தவனுமான இறைவனின் தளத்திற்கு அவன் தன்னுடைய உணர்வு நிலையைக் கொண்டு வந்துவிடுகிறான். அவன் உண்மைகளை அவற்றின் சரியான வடிவத்தில் பார்க்கத் தொடங்கிவிடுகிறான். ஏனென்றால் ஒரு பொருளை அதன் உண்மையான வடிவத்தில் பார்க்கத் தடையாக இருக்கும் வரம்புகளை அவன் கடந்து சென்று விடுகிறான். எவ்வளவு பெரிய உண்மையாக இருந்தாலும் திறந்த மனதுடன் அதைப் பார்க்க முடிந்தால் மட்டுமே அதன் தன்மை மனிதனுக்குப் புலப்படுகிறது.

وَمَآ اَنْفَقْتُمْ مِّنْ نَّفَقَةٍ اَوْ نَذَرْتُمْ مِّنْ نَّذْرٍ فَاِنَّ
اللّٰهَ يَعْلَمُهٗ ؕ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ ﴿۲۷۰﴾ اِنْ تُبْدُوا
الصَّدَقٰتِ فَنِعِمَّا هِيَ ۚ وَاِنْ تُخْفُوْهَا وَتُؤْتُوْهَا
الْفُقَرَآءَ فَهُوَ خَيْرٌ لَّكُمْ ؕ وَيُكَفِّرُ عَنْكُمْ مِّنْ سَيِّاٰتِكُمْ ؕ
وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ﴿۲۷۱﴾ لَيْسَ عَلَيْكَ هُدٰىهُمْ
وَلٰكِنَّ اللّٰهَ يَهْدِيْ مَنْ يَّشَآءُ ؕ وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ
فَلِاَنْفُسِكُمْ ؕ وَمَا تُنْفِقُوْنَ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ اللّٰهِ ؕ وَمَا
تُنْفِقُوْا مِنْ خَيْرٍ يُّوَفَّ اِلَيْكُمْ وَاَنْتُمْ لَا تُظْلَمُوْنَ ﴿۲۷۲﴾
لِلْفُقَرَآءِ الَّذِيْنَ اُحْصِرُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ لَا يَسْتَطِيْعُوْنَ
ضَرْبًا فِي الْاَرْضِ ۫ يَحْسَبُهُمُ الْجَاهِلُ اَغْنِيَآءَ مِنَ
التَّعَفُّفِ ۚ تَعْرِفُهُمْ بِسِيْمٰهُمْ ۚ لَا يَسْـَٔلُوْنَ النَّاسَ اِلْحَافًا ؕ
وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ ﴿۲۷۳﴾ اَلَّذِيْنَ ۚ
يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً

فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ
يَحْزَنُوْنَ ۝٢٧٤

[270]நீங்கள் (அறச்)செலவாக எதனைச் செலவிட்டாலும் நேர்ச்சை செய்தாலும் அதனை அல்லாஹ் நன்கறிவான். முறைகேடர்களுக்கு (மறுமையில்) உதவுவோர் எவரும் இல்லை. [271]நீங்கள் ஈகை அறங்களை வெளிப்படையாகச் செய்தால் அது நல்லதுதான். ஆயினும் மறைமுகமாக ஏழைகளுக்குக் கொடுப்பீர்களாயின் அது மேலும் சிறந்ததாகும். அது உங்களின் சில பாவங்களைப் போக்கிவிடும். அல்லாஹ் உங்களின் செயல்களை அறிந்தேயிருக்கிறான். [272](நபியே!) அவர்களை நேர்வழியில் கொண்டுவருவது உமது பொறுப்பன்று. மாறாகத் தான் விரும்பியோரை அல்லாஹ்வே நேர்வழியில் செலுத்துகிறான். (நம்பிக்கையாளர்களே!) எந்த (நல்ல) பொருளை நீங்கள் (அறச்) செலவு செய்தாலும் அது உங்களுக்கே நன்மையாக அமையும். நீங்கள் இறை உவப்புக்காகவே அன்றி (வேறெந்த நோக்கிலும்) செலவு செய்யாதீர்கள். நல்லவற்றிலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்தாலும் அதற்குரிய கூலி நிறைவாக உங்களுக்கு வழங்கப்படும். அதில் உங்களுக்கு எந்தக் குறைவும் செய்யப்படமாட்டாது. [273](பொருளீட்டுவதற்காகப்) பூமியில் ஓடியாடி உழைக்க முடியா வண்ணம் தங்களை இறைவழியில் அர்ப்பணித்துக்கொண்ட ஏழைகளுக்கு ஈகை(ப்பொருள்)கள் உரியனவாகும். அவர்கள் இரந்து கேட்காததால் அறியாதோர் அவர்களைச் செல்வர்கள் என எண்ணிவிடுகின்றனர். அவர்களின் தோற்றத்தைக் கொண்டு அவர்களை (நபியே!) நீர் அறிந்துகொள்ளலாம். ஆனால் அவர்கள் மக்களிடம் கெஞ்சிக் கேட்பதில்லை. (நம்பிக்கையாளர்களே! அவர்களுக்காக) நீங்கள் எந்த (நற்)பொருளைச் செலவு செய்தாலும் அதை அல்லாஹ் முற்றும் அறிந்தவனாக இருக்கிறான். [274]தம் செல்வங்களை இரவிலும் பகலிலும் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் (அறச்)செலவு செய்பவர்களுக்கு அவர்களின் இறைவனிடம் நற்கூலி இருக்கிறது. அவர்களுக்கு எந்த அச்சமுமில்லை; அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.

இறைவனின் பாதையில் செலவிடுவதற்கான சிறந்த வழி, மார்க்கத்திற்கான உழைப்பில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதனால் வாழ்வாதார மற்றவர்களாக உள்ள மார்க்க ஊழியர்களுக்கு நிதியுதவி செய்வதாகும்.

ஒரு வெற்றிகரமான தொழிலதிபருக்கு வேறு எந்த வேலைக்கும் நேரம் இருப்பதில்லை. மார்க்கப் பணியின் நிலையும் இதுவே. மார்க்கப் பணிக்காகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும் ஒருவருக்குப் பொருளாதாரத் தேடலுக்கு நேரமிருக்காது. அத்துடன், ஒவ்வொரு பணிக்கும் அதற்கான சொந்த இயல்பு உண்டு. மேலும் அது தன் இயல்பால் ஒரு மனிதனின் மனத்தை ஒரு குறிப்பிட்ட வகையில் வடிவமைக்கிறது. வணிகத்தில் ஈடுபடும் ஒருவர் படிப்படியாக வணிக மனநிலையை வளர்த்துக்கொள்கிறார். வர்த்தகப் பாதையின் நுணுக்கங்கள் அவருக்கு உடனடியாகப் புரிகின்றன. அதே நபரால் மார்க்க நுணுக்கங்களை ஆழமாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை. இதேதான் நேர்மாறான வகையில் மார்க்கச் சேவை செய்பவர்களுக்கும் நடக்கிறது. இப்போது இதற்கான தீர்வு என்ன? ஏனெனில் ஒரு சமூகத்தில் இரண்டு வகையான வேலைகளும் நடைபெறுவது முக்கியமானது. இந்தப் பிரச்சினைக்கான தீர்வென்பது வாழ்வாதாரத்தைக் குவித்து வைத்திருப்பவர்கள், மார்க்கப் பணிகளில் ஈடுபாடு காரணமாகத் தங்களுக்கான பொருளாதாரத்தை ஈட்ட முடியாத வர்களின் தேவைக்குப் பங்களிப்பதாகும். இது இறை உவப்புக்காக மட்டுமே இரு தரப்பினருக்குமிடையே ஏற்படும் ஒருவகை அமைதியான பொறுப்புப் பகிர்வு. மார்க்க ஊழியன் இறைவனுக்காகத் தன்னை ஒருமுகப்படுத்திக் கொண்டவன். எனவே அவன் மனிதர்களிடம் எதையும் கேட்பதில்லை. அவர்களிடமிருந்து பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அவனுக்கு இருப்பதில்லை. மறுபுறம் செல்வன் 'மார்க்கத்திற்காக நான் செய்ய வேண்டிய அளவு பணிகளைச் செய்ய இயலாததன் காரணமாகவே இந்தச் செல்வ வளங்கள் என்னிடம் வந்து சேர்ந்துள்ளன. எனவே இதை ஈடு செய்யும் வகையானது, ஒரு வகையில் இறைவனிடம் என்னுடைய குறைபாட்டை ஈடு செய்து கொண்டிருக்கும் என் சகோதரர்களின் பங்கில் என் செல்வத்தைச் செலவு செய்வதாகும்' என நினைக்கிறான்.

மார்க்கத்தின் பெயரால் பொருளாதாரம் சார்ந்த பொறுப்புகள் எதுவும் கிடைக்க வாய்ப்புகளற்ற ஒரு கட்டத்தில் மார்க்கத்திற்கான உழைப்பு இருக்கும்போது, மார்க்கத்தின் பாதையில் ஈடுபடும் மனிதன் வாழ்வாதாரமற்றுப் போகிறான். அந்த நேரத்தில் மார்க்க ஊழியர்களுக்குத் தனது செல்வத்தைக் கொடுப்பதென்பது சமூகச் சூழலின் முக்கியத்துவமற்ற ஒரு பிரிவினருடன் உறவை வலுப்படுத்துவதாகும். இத்தகையோருக்காகச் செலவு செய்வது எந்தச் சபையிலும் பேசுபொருள் ஆவதில்லை. இது ஒரு மனிதனின் அந்தஸ்தையும் புகழையும் மிகுதிப்படுத்துவதில்லை. ஆனால் இந்தச் செலவுதான் ஒரு மனிதனை இறைவனின் அருளுக்கு மிகவும் தகுதியானவனாக ஆக்குகிறது.

اَلَّذِيْنَ يَاْكُلُوْنَ الرِّبٰوا لَا يَقُوْمُوْنَ اِلَّا كَمَا يَقُوْمُ الَّذِىْ
يَتَخَبَّطُهُ الشَّيْطٰنُ مِنَ الْمَسِّ ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ قَالُوْٓا اِنَّمَا الْبَيْعُ
مِثْلُ الرِّبٰوا ۘ وَاَحَلَّ اللّٰهُ الْبَيْعَ وَحَرَّمَ الرِّبٰوا ؕ فَمَنْ جَآءَهٗ
مَوْعِظَةٌ مِّنْ رَّبِّهٖ فَانْتَهٰى فَلَهٗ مَا سَلَفَ ؕ وَاَمْرُهٗٓ اِلَى اللّٰهِ ؕ
وَمَنْ عَادَ فَاُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿۲۷۵﴾ يَمْحَقُ
اللّٰهُ الرِّبٰوا وَيُرْبِى الصَّدَقٰتِ ؕ وَاللّٰهُ لَا يُحِبُّ كُلَّ كَفَّارٍ
اَثِيْمٍ ﴿۲۷۶﴾ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَاَقَامُوا الصَّلٰوةَ
وَاٰتَوُا الزَّكٰوةَ لَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ
وَلَا هُمْ يَحْزَنُوْنَ ﴿۲۷۷﴾

[275]வட்டியை உண்பவர்கள் சாத்தானால் தீண்டப்பட்டதால் (மறுமைநாளில்) பைத்தியமாகி விட்டவர்களைப் போலத்தான் எழுவார்கள். இதற்குக் காரணம் ''வணிகமும் வட்டியைப் போன்றதுதான்'' என்று அவர்கள் கூறியதே ஆகும். உண்மையில் அல்லாஹ் வணிகத்தை அனுமதிக்கப்பட்டதாகவும் வட்டியைத் தடுக்கப்பட்டதாகவும் ஆக்கியுள்ளான். ஆகவே எவர் தமது இறைவனிடமிருந்து அறிவுரை வந்த பின்னர் (வட்டியினின்றும்) விலகிக் கொண்டாரோ அவர் முன்னர் வாங்கியது அவருக்குரியதாகும். அவரது விவகாரம் அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது. யாரேனும் அதனை மீண்டும் செய்தால் அவர்கள் நரகவாசிகளாவர். அதில் அவர்கள் என்றென்றும் கிடப்பார்கள்.
[276]அல்லாஹ் வட்டியை அழிக்கிறான்; (ஈகை) அறங்களை வளர்க்கிறான். நன்றி கொன்று தீச்செயல் புரிவோரையும் அல்லாஹ் விரும்புவதில்லை. [277](ஓரிறை)நம்பிக்கைகொண்டு நற்செயல்கள் புரிந்து தொழுகையைக் கடைப்பிடித்துக் கடமையாக்கப்பட்ட கொடையைக் கொடுத்து வருபவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடம் நற்கூலி இருக்கிறது. அவர்களுக்கு எந்த அச்சமுமில்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.

கடமையாக்கப்பட்ட கொடை (ஜகாத்) என்பது இறையடியார்களுக்கிடையே எதிர்பார்க்கப்படும் பொருளாதாரத் தொடர்புகளுக்கான குறியீடாகும். கடமையாக்கப்பட்ட கொடையில் ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் உரிமைகளை அங்கீகரிக்கிறான். எந்த அளவுக்கு என்றால் அவன் தனது வருமானத்தில் ஒரு பகுதியை எடுத்துத் தனது சகோதரனுக்குக் கொடுத்து விடுகிறான். கடமைகளை அறிந்திருக்கும் இத்தகைய சூழலை உருவாக்க விரும்பும் ஒரு மார்க்கம் வட்டியின் அடிப்படையிலான, செல்வத்தை நேசிக்கின்ற ஒரு சமூகத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. அத்தகைய சிறந்த சமூகத்தில் பரஸ்பர கொடுக்கல் வாங்கல்கள் வர்த்தகக் கொள்கையின் அடிப்படையில் நடக்கிறதே அன்றி வட்டிக் கொள்கையின் அடிப்படையில் அல்ல. வியாபாரத்திலும் மனிதன் லாபம் ஈட்டுகிறான். ஆனால், வியாபாரத்தில் கிடைக்கும் லாபமானது, ஒரு மனிதனின் கடின உழைப்புக்கும், அவன் எதிர்கொள்ளும் ஆபத்திற்கும் கிடைக்கின்ற விலையாகும். அதே சமயம், வட்டியிலிருந்து கிடைக்கும் லாபமானது சுயநலம், சொத்து சேர்க்கும் பேராசை ஆகியவற்றின் விளைவாக மட்டுமே இருக்கிறது.

வட்டித் தொழிலில் ஈடுபடும் ஒருவன் அதன் மூலம் தன் சொந்தச் செல்வத்தை மேலும் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காகத் தனது செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கிறான். தனது மூலதனம் உறுதியான விகிதத்தை விட அதிகமாக வளர்த்து வருவதைக் கண்டு அவன் மகிழ்ச்சி அடைகிறான். ஆனால் இந்தச் செயல்பாட்டின் போது, அவன் தனக்குள் சுயநலமும், உலகப் பேராசையும் கொண்ட ஒரு மனிதனை உருவாக்குகிறான். இதற்கு நேர்மாறாகத் தனது வருமானத்திலிருந்து அறச்செலவு செய்பவன் மற்றவர்களின் தேவையைத் தனக்காக வணிகப் பரிமாற்றமாகக் கொள்ளாமல் அவர்களுடன் தன்னை இணைத்துக் கொள்பவனாக இருக்கிறான். இப்படிப்பட்ட மனிதன் தன் நற்செயல்களின்போது முன்பிருந்ததை விட முற்றிலும் மாறுபட்ட ஒரு மனிதனைத் தனக்குள் உருவாக்குகிறான். அந்த மனிதன் மற்றவர்களின் நலனை மனதில் கொண்டவன்; சொந்த வட்டத்திலிருந்து மேலெழுந்து சிந்திப்பவன்.

மனிதன் உலகத்திற்கு வருமானத்தைக் குவிப்பதற்காக அனுப்பப் படவில்லை. ஒரு மனிதன் குவித்து வைக்க வேண்டிய இடம், மறுமைதான். மனிதன் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டிருப்பது, இவர்களில் யார், தம் சிறப்பியல்புகளின் அடிப்படையில், மறுமையின் சொர்க்கத்தில் குடியமர்த்தப்படுவதற்குத் தகுதியானவர் என்பதைப் பார்ப்பதற்காகத்தான். இந்தத் திறனுக்குச் சான்றாக இருப்பவர்களை இறைவன் சொர்க்கவாசிகளாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வான். மற்ற அனைவரும் குப்பைகளைப் போல நரகத்தில் வீசப்பட்டுவிடுவார்கள் ஈகையின் உயிர்ப்பு இறைவனுக்காகத்

தேவையுள்ளவர்களுக்குத் தனது செல்வத்தைக் கொடுப்பதும், வட்டியின் உயிர்ப்பு சுரண்டுவதற்காகக் கொடுப்பதும் ஆகும். ஒரு மனிதன் மறுமையில் தனக்கென அருட்கொடைகளின் குவியலைக் காண விரும்புகிறான் என்பதன் அடையாளம்தான் ஈகை. இதற்கு நேர்மாறாக, வட்டி என்பது அவன் இந்த உலகில் தனக்காகச் செல்வத்தைக் குவிக்க விரும்புகிறான் என்பதன் அடையாளமாகும். இவர்கள் இரண்டு தனித்தனி மனிதர்கள், இறைவனின் பார்வையில் இருவருக்கும் ஒரே மாதிரியான இறுதி முடிவு ஏற்படுவது சாத்தியமில்லை. உலகத்திற்காகக் கடுமையாக உழைத்தவர் களுக்குத்தான் உலகம் கிடைக்கப்பெறுகிறது, இதைப்போலவே மறுமை வாழ்வுக்காகத் தங்கள் சொத்தை அர்ப்பணித்தவர்களுக்கே மறுமை கிடைக்கிறது.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَذَرُوْا مَا بَقِيَ مِنَ الرِّبٰٓوا اِنْ
كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿٢٧٨﴾ فَاِنْ لَّمْ تَفْعَلُوْا فَاْذَنُوْا بِحَرْبٍ مِّنَ اللّٰهِ
وَرَسُوْلِهٖ ۚ وَاِنْ تُبْتُمْ فَلَكُمْ رُءُوْسُ اَمْوَالِكُمْ ۚ لَا تَظْلِمُوْنَ
وَلَا تُظْلَمُوْنَ ﴿٢٧٩﴾ وَاِنْ كَانَ ذُوْ عُسْرَةٍ فَنَظِرَةٌ اِلٰى مَيْسَرَةٍ ؕ
وَاَنْ تَصَدَّقُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿٢٨٠﴾ وَاتَّقُوْا يَوْمًا
تُرْجَعُوْنَ فِيْهِ اِلَى اللّٰهِ ۫ ثُمَّ تُوَفّٰى كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ
وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿٢٨١﴾ ع ٣٨

[278]நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாயின் எஞ்சியுள்ள வட்டியை (வாங்காமல்) விட்டுவிடுங்கள். [279]நீங்கள் அவ்வாறு செய்யவில்லையெனில் அல்லாஹ்விடமிருந்தும் அவனது தூதர்களிடமிருந்தும் போருக்கான அறிவிப்பை எதிர்பாருங்கள். நீங்கள் (பாவ)மன்னிப்புக் கோரினால் உங்கள் அசல் தொகைகளுக்கு நீங்கள் உரிமையாளர் ஆவீர்கள். நீங்கள் யார் மீதும் அநீதி இழைக்கக் கூடாது. உங்கள் மீதும் அநீதி இழைக்கப்படமாட்டாது. [280](உங்களிடம் கடன்வாங்கிய) ஒருவர் நிதிநெருக்கடியில் இருந்தால் அவருக்கு வசதி ஏற்படும் வரை காலநீட்டிப்பு அளியுங்கள். நீங்கள் அறிந்தவர்களாக இருப்பின் (அக்கடனை) ஈகையாக விட்டுவிடுவதே உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். [281]அல்லாஹ்விடம் திரும்பக் கொண்டு வரப்படும்

அந்த நாளை(க் குறித்து) அஞ்சுங்கள். பின்னர் ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்தவற்றிற்கான கூலி முழுமையாக வழங்கப்பட்டுவிடும். அவர்கள்மீது அநீதி இழைக்கப்படமாட்டாது.

சமூகச் சீர்திருத்தத்தின் அடிப்படைக் கொள்கையானது, சமூகத்தில் எந்தவொரு தனிமனிதனும் இன்னொருவன் மீதோ, அவன் மீது இன்னொருவனோ ஒடுக்கு முறையில் ஈடுபடக் கூடாது என்பதும், யாரும் யாருக்கும் கொடுமை இழைக்கக் கூடியவர்களாக இருக்கக் கூடாது; யாரையும் கொடுமைக்கு இலக்காக்கவும் கூடாது என்பதும்தான். வட்டி என்பது ஒரு வெளிப்படையான பொருளாதார அநீதியாகும். அதனால் இஸ்லாம் அதைத் தடை செய்துள்ளது. இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வட்டித் தொழில் குற்றச் செயலாக அறிவிக்கப்பட்டது எனினும், வட்டித் தொழில் புரியும் ஒருவர் முறைகேடான வணிகப் பரிமாற்றங்களில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படாதது போலவே வட்டித் தொழில் புரிபவரைத் தனது அடக்குமுறைக்கு உட்படுத்தும் உரிமையும் வேறு யாருக்கும் இல்லை. ஒருவன் குற்றவாளியாக இருப்பது அவனது பிற உரிமைகளைப் பாதிக்கக் கூடியதாக இருப்பதில்லை. வட்டித் தொழில் புரிபவன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்போது, வட்டித்தொகை மட்டுமே தள்ளுபடி செய்யப்படும்; தனது அசலான தொகையைத் திரும்பிப் பெற அவன் எப்பொழுதும் உரிமையுடையவனாகவே இருப்பான். இருப்பினும், பொது சட்டத்துடன் மனித பலவீனங்களையும் இறுதி வரம்பு வரை இஸ்லாம் கருத்தில் கொள்கிறது. எனவே, கடன்பட்ட ஒருவர் பண நெருக்கடியில் இருந்தால், அவர் தனது கடனை அடைக்கும் வரை அவருக்கு ஒரு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது. இதனுடன், ஒரு நபர் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாமல் இருந்தால், அவர் கொடுக்க வேண்டிய தொகையை முழுமையாக மன்னிக்கும் விசாலத்தன்மையை உருவாக்கிக் கொள்ளுங்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மன்னிப்பவர் இறைவனின் பார்வையில் நற்கூலியைப் பெறத் தகுதியானவராகிறார். மேலும் இந்த உலகில் இதன் நன்மை என்னவென்றால், இது சமூகத்திற்குள் பரஸ்பர விட்டுக் கொட்டுத்தல், பரிவுக்கான சூழ்நிலை ஆகியவற்றை உருவாக்குகிறது, இது இறுதியில் அனைவருக்கும் நன்மை பயக்கும் ஒன்று.

இருப்பினும், சட்டத்தை நடைமுறைப்படுத்துவது மட்டுமே சமூகத்தின் நலனுக்கு உத்தரவாதம் அளிக்காது. உண்மையான சீர்திருத்தத்திற்கு, சமூகத்தில் இறையச்சம் நிறைந்த சூழல் நிலவுவது அவசியம். எனவே, சட்ட விதிகளை விளக்கும் போதெல்லாம், நம்பிக்கை, இறையச்சம், மறுமை ஆகியவற்றைப் பற்றி மிகவும் கவனத்துடன் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரு மதச்சார்பற்ற அமைப்பு அந்த அமைப்புக்கு ஏற்றவாறு அதன் குடிமக்களுக்குள் ஒரு தேசியப் பண்பைக் கொண்டிருந்தால் மட்டுமே வெற்றிகரமாக இயங்க முடியும். இதைப் போலவே, இஸ்லாமிய அமைப்பானது, தனிநபர்களின் குறிப்பிடத்தகுந்த பிரிவினருக்குள் இறையச்சத்தின் ஆன்மா காணப்படும் போதுதான் இஸ்லாமிய அமைப்பு சரியான முறையில் நடைமுறைக்கு வருகிறது. தேசியப் பண்பு அல்லது இறையச்சம் என்பது தேவைப்படும் அமைப்புக்கு ஆதரவாகத் தனி நபர்கள் தயாராக இருப்பதாகும். தனிநபர்களுக்குள் ஒரே மட்டத்திலான தயார் நிலை இல்லாதவரை அதைச் சட்டத்தின் பலத்தால் மட்டுமே நடைமுறைப்படுத்த இயலாது.

இதற்கும் மேலாக, இஸ்லாத்தின் நோக்கம், சமூகச் சீர்திருத்தம் அல்ல. இஸ்லாத்தின் உண்மையான நோக்கம் தனிநபரின் சீர்திருத்தமாகும். சமூகச் சீர்திருத்தம் என்பது இதன் இரண்டாம் பட்சமான விளைவு மட்டுமே. குர்ஆன் அழைப்பு விடுக்கும் நம்பிக்கை, இறையச்சம் மறுமை குறித்த சிந்தனை ஆகியவை தனிநபருக்குள் கண்டறியப்படுகின்றனவே அன்றி ஓர் அமைப்புக்குள் அல்ல. எனவே குர்ஆனிய அமைப்பின் உண்மையான விளிப்பிற்குரியவன் (Addressee) தனிமனிதன்தான். மேலும் சமூகச் சீர்திருத்தம் என்பது தனி மனித சீர்திருத்தத்தின் கூட்டு வெளிப்பாடாகும்.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا تَدَايَنْتُمْ بِدَيْنٍ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى
فَاكْتُبُوْهُ ؕ وَلْيَكْتُبْ بَّيْنَكُمْ كَاتِبٌۢ بِالْعَدْلِ ۪ وَلَا يَاْبَ كَاتِبٌ
اَنْ يَّكْتُبَ كَمَا عَلَّمَهُ اللّٰهُ فَلْيَكْتُبْ ۚ وَلْيُمْلِلِ الَّذِىْ عَلَيْهِ الْحَقُّ
وَلْيَتَّقِ اللّٰهَ رَبَّهٗ وَلَا يَبْخَسْ مِنْهُ شَيْـًٔا ؕ فَاِنْ كَانَ الَّذِىْ
عَلَيْهِ الْحَقُّ سَفِيْهًا اَوْ ضَعِيْفًا اَوْ لَا يَسْتَطِيْعُ اَنْ يُّمِلَّ هُوَ
فَلْيُمْلِلْ وَلِيُّهٗ بِالْعَدْلِ ؕ وَاسْتَشْهِدُوْا شَهِيْدَيْنِ مِنْ رِّجَالِكُمْ ۚ
فَاِنْ لَّمْ يَكُوْنَا رَجُلَيْنِ فَرَجُلٌ وَّامْرَاَتٰنِ مِمَّنْ تَرْضَوْنَ مِنَ
الشُّهَدَآءِ اَنْ تَضِلَّ اِحْدٰىهُمَا فَتُذَكِّرَ اِحْدٰىهُمَا الْاُخْرٰى ؕ
وَلَا يَاْبَ الشُّهَدَآءُ اِذَا مَا دُعُوْا ؕ وَلَا تَسْـَٔمُوْٓا اَنْ تَكْتُبُوْهُ
صَغِيْرًا اَوْ كَبِيْرًا اِلٰٓى اَجَلِهٖ ؕ ذٰلِكُمْ اَقْسَطُ عِنْدَ اللّٰهِ وَاَقْوَمُ

لِلشَّهَادَةِ وَاَدۡنٰۤى اَلَّا تَرۡتَابُوۡۤا اِلَّاۤ اَنۡ تَكُوۡنَ تِجَارَةً حَاضِرَةً
تُدِيۡرُوۡنَهَا بَيۡنَكُمۡ فَلَيۡسَ عَلَيۡكُمۡ جُنَاحٌ اَلَّا تَكۡتُبُوۡهَا ؕ وَ
اَشۡهِدُوۡۤا اِذَا تَبَايَعۡتُمۡ ۪ وَلَا يُضَآرَّ كَاتِبٌ وَّلَا شَهِيۡدٌ ؕ وَاِنۡ
تَفۡعَلُوۡا فَاِنَّهٗ فُسُوۡقٌۢ بِكُمۡ ؕ وَاتَّقُوا اللّٰهَ ؕ وَيُعَلِّمُكُمُ اللّٰهُ ؕ وَاللّٰهُ
بِكُلِّ شَىۡءٍ عَلِيۡمٌ ﴿۲۸۲﴾ وَاِنۡ كُنۡتُمۡ عَلٰى سَفَرٍ وَّلَمۡ تَجِدُوۡا كَاتِبًا فَرِهٰنٌ
مَّقۡبُوۡضَةٌ ؕ فَاِنۡ اَمِنَ بَعۡضُكُمۡ بَعۡضًا فَلۡيُؤَدِّ الَّذِى اؤۡتُمِنَ
اَمَانَتَهٗ وَلۡيَتَّقِ اللّٰهَ رَبَّهٗ ؕ وَلَا تَكۡتُمُوا الشَّهَادَةَ ؕ وَمَنۡ
يَّكۡتُمۡهَا فَاِنَّهٗۤ اٰثِمٌ قَلۡبُهٗ ؕ وَاللّٰهُ بِمَا تَعۡمَلُوۡنَ عَلِيۡمٌ ﴿۲۸۳﴾ ع ۳۹

[282]நம்பிக்கையாளர்களே! நீங்கள் ஒரு குறிப்பிட்ட தவணைக்குக் கடன் கொடுக்கல் வாங்கலை வைத்துக்கொண்டால் அதனை எழுதிக் கொள்ளுங்கள். உங்களுக்கிடையே யாராவது ஒருவர் அதனை நேர்மையுடன் எழுதிக்கொள்ள வேண்டும். எழுதுபவர் எழுதுவதற்கு மறுப்புத் தெரிவிக்கக் கூடாது. அல்லாஹ் அவருக்குக் கற்றுத் தந்தவாறே அவர் அதனை எழுதிவிடவேண்டும். கடன் வாங்கியவரே (கடன் ஆவணத்துக்கு) வாசகம் சொல்ல வேண்டும். தம் இறைவனான அல்லாஹ்வுக்கு அவர் அஞ்சி நடந்துகொள்ளட்டும். அதில் (கடன்தொகையில்) எதுவும் குறைத்துவிடக் கூடாது. கடன் வாங்கியவர் அறியாதவராக அல்லது பலவீனராக அல்லது தானே வாசகம் சொல்ல இயலாதவராக இருந்தால் அவரது பொறுப்பாளர் நேர்மையான முறையில் (கடன் பத்திரத்தின்) வாசகம் சொல்லவேண்டும். உங்கள் ஆண்களிலிருந்து இருவரைச் சாட்சியாக்கிக் கொள்ளுங்கள். இரண்டு ஆண்கள் இல்லையென்றால் நீங்கள் விரும்பியோரில் ஓர் ஆணையும் இரண்டு பெண்களையும் சாட்சியாக்கிக் கொள்ளுங்கள். (ஏனெனில்) அவ்விரு பெண்களில் ஒருவர் மறந்துவிட்டால் மற்றொருவர் நினைவூட்டுவார் என்பதற்காக. சாட்சியாளர்கள் (சாட்சியம் கூற) அழைக்கப்படும்போது அவர்கள் மறுக்கக்கூடாது. கடன்தொகை சிறியதோ பெரியதோ அதனுடைய தவணையைக் குறிப்பிட்டு எழுதுவதில் நீங்கள் சோம்பி இருந்துவிடாதீர்கள். இதுவே அல்லாஹ்விடம் மிக நீதியானதாகும்; சாட்சியத்துக்கு

வலுவூட்டக்கூடியதும் ஆகும். உங்களுக்கிடையே ஐயம் ஏற்படாதிருக்க உதவுவதும் ஆகும்; ஆனால் உங்களுக்கிடையே அப்போதே நடக்கும் உடனடி ரொக்க வணிகமாக இருந்தால் அதனை நீங்கள் எழுதிக்கொள்ளாமல் இருப்பது உங்கள் மீது குற்றமாகாது. ஆயினும் நீங்கள் இந்த (ரொக்க) வணிகத்தைச் செய்தால் (அதற்குச்) சாட்சியங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். (தவணை கொடுக்கல் வாங்கலில்) எழுதுபவரோ சாட்சியாளரோ (தவறாக நடந்துகொள்ளுமாறு) துன்புறுத்தப்படக்கூடாது. அவ்வாறு செய்வீர்களானால் அது உங்களுக்குப் பெரும் பாவமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அல்லாஹ்தான் உங்களுக்கு (இவ்விதிகளைக்) கற்றுக்கொடுக்கிறான். அல்லாஹ் எல்லாவற்றையும் முற்றும் அறிந்தவன். [283]நீங்கள் பயணத்தில் இருக்கும்போது எழுதக்கூடிய எவரும் கிடைக்காவிட்டால் (கடன் வாங்குபவரிடமிருந்து) ஈடாக அடைமானப் பொருளைப் பெற்றுக்கொள்ளலாம். உங்களில் ஒருவர் மற்றவரை நம்பி ஒப்படைக்கிறார் எனில் நம்பப்பட்டவர் அந்த நம்பிக்கையைக் காப்பாற்றட்டும். தன் இறைவனாகிய அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்துகொள்ளட்டும். சாட்சியத்தை மறைத்து விடாதீர்கள். எவர் அதனை மறைக்கிறாரோ அவரது உள்ளம் பாவத்திற்கு உள்ளாகிவிடும். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் முற்றும் அறிந்தவன்.

இரண்டு நபர்களிடையே ரொக்கப் பரிமாற்றம் நடந்தால் அந்தக் கொடுக்கல் வாங்கல் அப்பொழுதே முடிந்து விடுகிறது. ஆனால் கடன் தொடர்பான பரிவர்த்தனையின் தன்மை வேறுபட்டது. கடன் தொடர்பானதில் எல்லா நடவடிக்கைகளும் வாய்மொழியாக இருந்தால், காகித ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் பின்னர்க் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இத்தகைய நிலையில் இரு தரப்பினரும் தங்கள் சொந்த வாதத்தை முன்வைத்தாலும், சரியான முடிவை எடுப்பதற்கு எந்த உறுதியான அடிப்படையும் இருப்பதில்லை. இதன் விளைவாகப் பணம் திருப்பிச் செலுத்தும் நேரத்தில் இரு தரப்பினருக்குமிடையே முறையீடுகள் உருவாகின்றன. இதற்குத் தீர்வு அந்தப் பரிவர்த்தனைகளைக் குறித்து எழுதிக் கொள்வதுதான். ரொக்கப் பரிமாற்றத்தை எழுதிக் கொள்வதும் நல்லதுதான். ஆனால் கடனுடைய நடவடிக்கைகளுக்கோ எழுத்துப்பூர்வமாக எழுதி அதற்குச் சாட்சிகளையும் ஏற்படுத்திக் கொள்வது அவசியமாக இருக்கிறது. கருத்து வேறுபாட்டின்போது முடிவெடுப்பதற்கு இந்த எழுத்து அடிப்படையாக இருக்கும். இது ஒரு முஸ்லிமுக்கு இறையச்சம், நீதி ஆகியவற்றுக்கான ஒரு பாதுகாப்பு வழிமுறையாகும். எழுதப்பட்ட விதிமுறைகளின்படி தனது உரிமைகளை

நிறைவேற்றுவதன் மூலம், அவன் இறைவனுக்கு முன்பும் மனிதர்களுக்கு முன்பும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறான்.

முஸ்லிம்கள் இறைவனின் மார்க்கத்திற்குச் சாட்சியாக இருப்பவர்கள். இறைவனுடைய வார்த்தையை அறிந்தே மறைப்பதற்கு எப்படி அனுமதி இல்லையோ, அப்படியே மனித விவகாரங்களில் ஒருவரிடம் ஏதேனும் சாட்சியம் இருந்தால், அவர் அதை வெளிப்படுத்திவிட வேண்டும். சாட்சியத்தை மறைப்பதென்பது தனக்குள் ஒரு குற்றவியல் மனநிலையை வளர்ப்பதாகும், வழக்கின் நியாயமான தீர்ப்பில் தனக்கான பங்கை, நிறைவேற்ற வாய்ப்பு இருந்தும் நிறைவேற்றாமல் இருப்பதாகும். மனித மனசாட்சி, ஒரு விஷயம் உண்மையாகத் தோன்றும் போது அதை உண்மையானது என்று ஒப்புக்கொள்ள விரும்புகிறது. ஒரு விஷயம் உண்மைக்குப் புறம்பாக தோன்றும்போது அது உண்மைக்குப் புறம்பாக இருப்பதை வெளிப்படுத்திவிட விரும்புகிறது. இத்தகைய நிலையில் தனது சொந்த கண்ணியம், சுயநலன் ஆகியவற்றைக் கருதி வாயை மூடிக் கொண்டு இருக்கும் ஒருவன் தன் சொந்த குற்றத்திற்குத் தானே சாட்சியாக மாறிவிட்ட ஒருவனைப் போன்றவனாவான்.

لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ؕ وَ اِنْ تُبْدُوْا مَا فِيْۤ
اَنْفُسِكُمْ اَوْ تُخْفُوْهُ يُحَاسِبْكُمْ بِهِ اللّٰهُ ؕ فَيَغْفِرُ لِمَنْ يَّشَآءُ
وَ يُعَذِّبُ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿۲۸۴﴾ اٰمَنَ
الرَّسُوْلُ بِمَاۤ اُنْزِلَ اِلَيْهِ مِنْ رَّبِّهٖ وَالْمُؤْمِنُوْنَ ؕ كُلٌّ اٰمَنَ
بِاللّٰهِ وَ مَلٰٓئِكَتِهٖ وَكُتُبِهٖ وَ رُسُلِهٖ ۫ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْ
رُّسُلِهٖ ۫ وَ قَالُوْا سَمِعْنَا وَ اَطَعْنَا ۫ غُفْرَانَكَ رَبَّنَا وَ اِلَيْكَ
الْمَصِيْرُ ﴿۲۸۵﴾ لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا وُسْعَهَا ؕ لَهَا مَا كَسَبَتْ
وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ ؕ رَبَّنَا لَا تُؤَاخِذْنَاۤ اِنْ نَّسِيْنَاۤ اَوْ اَخْطَاْنَا ۚ
رَبَّنَا وَلَا تَحْمِلْ عَلَيْنَاۤ اِصْرًا كَمَا حَمَلْتَهٗ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِنَا ۚ
رَبَّنَا وَ لَا تُحَمِّلْنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ ۚ وَاعْفُ عَنَّا ۟ وَقْفَةٌ

وَاغْفِرْ لَنَا ۖ وَارْحَمْنَا ۖ أَنْتَ مَوْلَانَا فَانْصُرْنَا عَلَى
الْقَوْمِ الْكَافِرِينَ ﴿٢٨٦﴾

[284]வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. நீங்கள் உங்கள் உள்ளங்களில் உள்ளவற்றை வெளிப்படுத்தினாலும் மறைத்தாலும் அல்லாஹ் அது குறித்து உங்களிடம் விசாரணை செய்வான்; தான் விரும்பியவரை அவன் மன்னிப்பான். தான் விரும்பியவரைத் தண்டிப்பான். அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன். [285]இத்தூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்டதன் மீது நம்பிக்கை கொண்டுள்ளார். அவரை ஏற்றுக் கொண்டவர்களும் அதன்மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் அல்லாஹ்வின் மீதும் அவனது வானவர்களின் மீதும் அவனது வேதங்களின் மீதும் அவனது தூதர்களின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். ''நாங்கள் அவனது தூதர்களில் எவருக்கிடையிலும் வேறுபாடு காட்டமாட்டோம்'' என்றும் ''(உன் வசனங்களைச்) செவிமடுத்தோம், கீழ்ப்படிந்தோம், எங்கள் இறைவா! உன்னுடைய மன்னிப்பை வேண்டுகிறோம்; நாங்கள் மீளவிருப்பதும் உன்னிடமேதான்'' என்றும் கூறுகின்றனர். [286]அல்லாஹ் எவர் மீதும் அவரது சக்திக்கு மேல் பொறுப்பை ஏற்றுவதில்லை. அவர் ஈட்டிய (நன்மைகளின்) பயன் அவருக்கே. அவரது (தீய)செயலின் விளைவும் அவருக்கே. நம்பிக்கையாளர்கள், ''இறைவா! நாங்கள் மறந்துவிட்டாலோ தவறிழைத்து விட்டாலோ எங்களைத் தண்டித்து விடாதே! இறைவா! எங்களுக்கு முன்னிருந்தோர் மீது சுமத்தியதைப் போல எங்கள் மீதும் சுமையைச் சுமத்தி விடாதே! எங்கள் இறைவா! (எங்களால்) சுமக்க முடியாத சுமையை எங்கள்மீது சுமத்தி விடாதே! எங்களைப் பொறுத்தருள்வாயாக! எங்களை மன்னிப்பாயாக! எங்கள்மீது அருள்புரிவாயாக! நீயே எங்கள் பாதுகாவலன். எனவே மறுப்பாளர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவிபுரிவாயாக!'' என்று இறைஞ்சுகின்றனர்.

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் ஏக இறைவனின் கட்டளைக்கு உட்பட்டவை. சிறு துகள் முதல் விண்மீன்கள் வரை, அனைத்தும் இறைவனின் தீர்மானிக்கப்பட்ட வரைபடத்தின் கீழ்ப் பிணைக்கப்பட்டு இறைவன் வகுத்த பாதையில் கட்டுப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மனிதனோ தன்னை ஒரு சுதந்திரமான நிலையில் உள்ள படைப்பாகக் காண்கிறான்.

வெளித்தோற்றத்தில் அவன் தான் விரும்பும் எந்தப் பாதையையும் தேர்ந் தெடுக்கச் சுதந்திரம் கொண்டவனாக இருக்கிறான். ஆனால் மனிதனுக்கான சுதந்திரம் முழுமையான பொருளைக் கொண்டது அல்ல. மாறாக, சோதனைக்கானது. பிரபஞ்சத்தில் உள்ள பிற அனைத்தையும் போலவே மனிதனும் இறைவனுக்குக் கட்டுப்பட வேண்டும். பிரபஞ்சத்தின் ஏனைய படைப்புகள் வலுக்கட்டாயத்தின் பேரில் ஏற்றுக்கொண்ட கட்டுப்பட்ட வாழ்க்கையை மனிதன் தனது சொந்த விருப்பத்தின் பேரில் ஏற்றுக்கொள்ள வேண்டும். மனிதன் புறவயமான சூழ்நிலையால் ஏமாற்றப்பட்டு, தனக்கு முன்னும் பின்னும் யாரும் இல்லை என்று நினைத்துவிடக்கூடாது உண்மை என்னவென்றால், மனிதன் எப்போதும் எந்நேரமும் பிரபஞ்சத்தின் அதிபதியான இறைவனின் பார்வையில் இருக்கிறான். இறைவன் மனிதனுடைய சிறிய பெரிய விஷயங்கள் அனைத்தையும் கண்காணித்துக் கொண்டிருக்கிறான். அது அவனுக்குள்ளேயே இருந்தாலும் சரி, வெளியே இருந்தாலும் சரி.

எந்த மனிதன் இறைவனின் எதிர்பார்ப்புக்கு உரியவன்? அவன் நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் கொண்ட மனிதன். நம்பிக்கை என்பது ஒரு மனிதனின் அறிவுபூர்வமான ஒப்படைப்பைக் குறிக்கும். கீழ்ப்படிதல் என்பது அவனது நடைமுறை சார்ந்த ஒப்படைப்பைக் குறிக்கும். அறிவுபூர்வமாக, மனிதனிடம் கோரப்படுவதெல்லாம் அவன் ஏக இறைவனைத் தனது படைப்பாளனாகவும் அதிபதியாகவும் தனக்குள் ஆழமாக இறக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான். பிரபஞ்சத்தின் அமைப்பு உயிரற்ற இயந்திர அமைப்பு அல்ல. மாறாக இறைவன் தனது கீழ்ப்படிதலுள்ள பணியாளர்கள் மூலம் இயக்கும் ஓர் உயிருள்ள அமைப்பு என்ற பேருண்மையை அவன் உணர்ந்திருக்க வேண்டும். இறைவனுடைய அடியார்களிடம் தன்னுடைய செய்தியைக் கொண்டு சேர்க்க இறைவன் தேர்ந்தெடுத்த அடியார்களை அவன் கண்டறிந்திருக்க வேண்டும். மனிதகுலத்தின் வழிகாட்டுதலுக்காக இறைவன் இறக்கி அருளிய வேதத்தை உண்மையிலேயே தனது சிந்தனைகள், எண்ணங்கள் ஆகியவற்றின் ஒரு பகுதியாக அவன் ஆக்கிக் கொண்டிருக்க வேண்டும். அவனுக்குத் தூதுத்துவம் முழு மனிதகுல வரலாற்றின் தொடர்ச்சி யான நிகழ்வாகத் தோன்ற வேண்டும். இவ்வாறு நம்பிக்கையை அவன் தன் இதயத்திலும் சிந்தனையிலும் பதியச் செய்த பிறகு, அவன் தனது முழு வாழ்க்கையையும் அந்த வரைபடத்தின்படி வார்த்துக்கொள்ள வேண்டும்.

பின்னர் இந்த நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் அவனுக்கு ஒரு சடங்காகவும், புறவயமான இயக்கமாகவும் அல்லாமல் ஏக இறைவனை அழைக்கத் தொடங்கும் விதத்தில் அவன் தன் ஆன்மாவை உருகச் செய்ய வேண்டும். அவனது இருப்பு இறை நினைவில்லையே மூழ்கியிருக்க வேண்டும். அவனது வாழ்க்கை முற்றிலும் இறைவனைச் சார்ந்ததாகவே ஆகிவிட வேண்டும்.

❀

3. இம்ரானின் குடும்பத்தினர் (ஆலு இம்ரான்)



بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الٓمّٓ ﴿١﴾ اللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۙ الْحَيُّ الْقَيُّوْمُ ﴿٢﴾ نَزَّلَ عَلَيْكَ
الْكِتٰبَ بِالْحَقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَاَنْزَلَ التَّوْرٰىةَ
وَالْاِنْجِيْلَ ﴿٣﴾ مِنْ قَبْلُ هُدًى لِّلنَّاسِ وَاَنْزَلَ الْفُرْقَانَ ؕ اِنَّ
الَّذِيْنَ كَفَرُوْا بِاٰيٰتِ اللّٰهِ لَهُمْ عَذَابٌ شَدِيْدٌ ؕ وَاللّٰهُ عَزِيْزٌ
ذُوانْتِقَامٍ ﴿٤﴾ اِنَّ اللّٰهَ لَا يَخْفٰى عَلَيْهِ شَيْءٌ فِي الْاَرْضِ وَلَا فِي
السَّمَآءِ ﴿٥﴾ هُوَ الَّذِيْ يُصَوِّرُكُمْ فِي الْاَرْحَامِ كَيْفَ يَشَآءُ ؕ
لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٦﴾

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்...

[1]அலிஃப் - லாம் - மீம்.

[2]அல்லாஹ்வாகிய அவனைத்தவிர வேறு இறைவன் இல்லை. அவன் என்றென்றும் உயிர்த்திருப்பவன்; (என்றென்றும்) நிலைத்திருப்பவன்; [3](நபியே!) சத்தியத்தைக் கொண்டுள்ள இவ்வேதத்தை அவன்தான் உமக்கு அருளியுள்ளான். இது தனக்கு முன்னருள்ள வேதங்களை உண்மைப்படுத்துகிறது. இதற்கு முன்னர் மக்களுக்கு வழிகாட்டியாக தவ்ராத்தையும் இன்ஜீலையும் (அவன்)அருளினான். [4](சத்தியத்தையும் அசத்தியத்தையும்) பிரித்தறிவிப்பதையும் (பிற சான்றுகளையும்) அருளினான். அல்லாஹ்வின் சான்றுகளை மறுப்போருக்கு கடும்வேதனை உண்டு. அல்லாஹ் யாவற்றினும் வல்லவன்; தக்க தண்டனை அளிப்பவன். [5]வானத்திலும் பூமியிலுமுள்ள எதுவும் அல்லாஹ்வுக்கு மறைவானதன்று. [6]அவன்தான் தாயின்

கருவறையில் தான் விரும்பியவாறு உங்களை வடிவமைக்கிறான். அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவன் யாவற்றினும் வல்லவன்; ஞானம் மிக்கவன்.

பிரபஞ்சத்தின் படைப்பாளனும் உரிமையாளனுமானவன் ஓர் இயந்திர இறைவன் இல்லை, உயிரும் உணர்வுமுள்ள இறைவன். அவன் ஒவ்வொரு காலத்திலும் மனிதனுக்கு வழிகாட்டுதலை அனுப்பினான். அவற்றில் தோரா, பைபிள் ஆகிய வடிவில் முந்தைய இறைத்தூதர்களுக்கு இறக்கியருளப்பட்ட நூல்களும் அடங்கும். ஆனால் மனிதன் எப்போதும் இறைவனின் போதனைகளுக்குத் தனது சொந்த விளக்கம், விவரிப்பு ஆகியவற்றின் மூலம் பல்வேறு அர்த்தங்களைக் கற்பித்து, இறைவனின் ஒரே மார்க்கத்தைப் பல மார்க்கங்களாக மாற்றிக்கொண்டான். இறுதியாக, இறைவன் தனது தீர்மானிக்கப்பட்ட திட்டத்தின்படி, மனிதர்களுக்கு ஓர் உண்மையான வழிகாட்டி நூலாகவும், உண்மையையும் பொய்மையையும் உரசிப் பார்த்துத் தீர்மானிக்கக்கூடிய உரைகல்லாகவும் இறுதி நூலை (குர்ஆனை) வெளிப்படுத்தினான். இறைவனின் உண்மையான மார்க்கம் என்ன என்பதையும், மக்கள் தங்கள் சொந்த விளக்கங்கள் மூலம் தோற்றவித்த மதம் எது என்பதையும் குர்ஆன் பிரித்துக் காட்டுகிறது. இப்போது, இறைவனின் வேதத்தை நம்பவில்லை என்றாலோ, தங்கள் சொந்தக் கருத்துக்கள், விளக்கங்கள் போன்றவற்றின் அடிப்படையில் இட்டுக்கட்டப்பட்ட மார்க்கத்தைக் கைவிடவில்லை என்றாலோ இத்தகையவர்கள் கடுமையான தண்டனைக்கு உரியவர்களாவர். இவர்களுக்கு இறைவன் கண்களைக் கொடுத்தான்; ஆனால் வெளிச்சம் வந்துவிட்ட போதிலும், அவர்கள் பார்க்க வில்லை. இறைவன் அறிவாற்றலைக் கொடுத்தான்; ஆனால் சான்று கிடைத்த பிறகும் கூட அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்களின் பொய்யான பெருமை காரணமாக, அவர்கள் சத்தியத்திற்கு முன் தலைவணங்கத் தயாராகவில்லை.

தனது இருப்பு, பண்பு ஆகியவற்றின் அடிப்படையில் இறைவன் எப்படி இருக்கிறான் என்பதற்கான உண்மை அறிமுகத்தை இறைவனால் மட்டுமே தர முடியும். தன்னுடைய இருப்பு ஏனைய படைப்புகளுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதையும் அவனால் மட்டுமே சரியாக விளக்க முடியும். இதை அறிய விரும்புபவன் உறுதியாக அறிந்துகொள்ளும் வகையில் இறைவன் தனது வேதத்தில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளான். மனிதர்களுக்கான வழிகாட்டி நூலை நிர்ணயிப்பதிலும் இதுதான் நிலை. மனிதனின் நடப்பியல் நிலை என்ன, மனித வெற்றிக்கு எந்த அணுகுமுறை உறுதியளிப்பதாக இருக்கிறது என்பதை நமக்கு உணர்த்த முழுப் பிரபஞ்சத்தின் அறிவும் தேவை. பிரபஞ்சத்தோடு இணக்கமும், உலகின் பரந்த அமைப்புடன் முழுமையாக ஒத்துப்போவதும்தான் மனிதனின் சரியான அணுகுமுறையாக

இருக்க முடியும். மனிதனைப் பிறப்பிலிருந்து இறப்பு வரை அறிந்தவன் என்பது மட்டுமல்லாமல், பிறப்புக்கு முன் என்ன இருந்தது, இறப்புக்குப் பின் என்ன இருக்கும் என்பதையும் அறிந்தவனால் மட்டுமே சரியான செயல் பாதையைத் தீர்மானிக்க முடியும். அப்படிப்பட்ட ஒருவன் இறைவனைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது. இந்த நிலையில் மனிதனைப் பொறுத்தவரை அவனுக்குரிய நடப்பியல் வாழ்வு என்னவென்றால், இறைவனை நம்புவதும், அவனிடமிருந்து வரும் வழிகாட்டுதலை முழுமையான உறுதியுடன் பற்றிப் பிடித்துக்கொள்வதும்தான்.

هُوَ الَّذِيْٓ اَنْزَلَ عَلَيْكَ الْكِتٰبَ مِنْهُ اٰيٰتٌ مُّحْكَمٰتٌ هُنَّ
اُمُّ الْكِتٰبِ وَاُخَرُ مُتَشٰبِهٰتٌ ؕ فَاَمَّا الَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ زَيْغٌ
فَيَتَّبِعُوْنَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَآءَ الْفِتْنَةِ وَابْتِغَآءَ تَاْوِيْلِهٖ ۚ وَمَا
يَعْلَمُ تَاْوِيْلَهٗٓ اِلَّا اللّٰهُ ۘ وَالرّٰسِخُوْنَ فِي الْعِلْمِ يَقُوْلُوْنَ اٰمَنَّا بِهٖ ۙ
كُلٌّ مِّنْ عِنْدِ رَبِّنَا ۚ وَمَا يَذَّكَّرُ اِلَّآ اُولُوا الْاَلْبَابِ ۝٧ رَبَّنَا لَا
تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ اِنَّكَ
اَنْتَ الْوَهَّابُ ۝٨ رَبَّنَآ اِنَّكَ جَامِعُ النَّاسِ لِيَوْمٍ لَّا رَيْبَ
فِيْهِ ؕ اِنَّ اللّٰهَ لَا يُخْلِفُ الْمِيْعَادَ ۝٩

[7](நபியே!) அவன்தான் உமக்கு வேதத்தை அருளினான். அதில் சில வசனங்கள் தெளிவாகப் பொருள் தரக்கூடியவையாக உள்ளன; அவைதாம் வேதத்தின் அடிப்படையாகும். வேறு சில வசனங்கள் (சிந்தையும் மொழியும் எட்டாத) மறைபொருள் அடங்கியவை. மனப்பிறழ்வு கொண்டவர்கள் குழப்பம் செய்ய விரும்பி அவற்றின் விளக்கத்தைத் தேடி (பூடகமானவற்றுக்குப்) பின்னால் அலைகின்றனர். ஆயினும் அவற்றின் மெய்ப்பொருளை அல்லாஹ்வைத்தவிர வேறு எவரும் அறியமாட்டார். அறிவு முதிர்ச்சி பெற்றவர்களே ''நாங்கள் இதன்மீது நம்பிக்கை கொண்டோம். இவையனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதாம்'' என்று கூறுவார்கள். அறிவுடையோர்கள்தாம் அறிவுரையை ஏற்றுக்கொள்வர். [8](மேலும் அவர்கள்) ''எங்கள் இறைவா! நீ எங்களை நேர்வழியில் செலுத்திய பின்பு எங்கள் உள்ளங்களைத் தடுமாறச் செய்துவிடாதே. எங்களுக்கு உன் அருளை

வழங்குவாயாக! உறுதியாக நீயே பெரும் கொடையாளியாவாய்'' என்றும் [9]''இறைவா! நீ மக்கள் அனைவரையும் (மறுமையாகிய) ஒருநாளில் ஒன்று திரட்டுபவன். அந்நாள் வருவதில் எத்தகைய ஐயமும் இல்லை; உறுதியாக அல்லாஹ் வாக்குறுதிக்கு எதிராகச் செயல்படமாட்டான்'' (என்றும் இறைஞ்சிக் கூறுவர்).

குர்ஆனில் இரண்டு வகையான பொருளமைப்புகள் உள்ளன. ஒன்று மனிதனின் அறியப்பட்ட உலகத்தோடு தொடர்புடையது. உதாரணமாக, வரலாற்று நிகழ்வுகள், பிரபஞ்ச அடையாளங்கள், உலக வாழ்க்கைக்கான கட்டளைகள் போன்றவை. மற்றொன்று இன்றைய மனிதனுக்குப் புரியாத, கண்ணுக்குத் தெரியாதவற்றுடன் தொடர்புடையவை. எடுத்துக்காட்டாக, இறைவனின் பண்புகள், சொர்க்கம் மற்றும் நரகத்தின் நிலைமைகள் போன்றவை. முதல் வகைப் பொருள்கள் குர்ஆனில் திட்டவட்டமான முறையில் சொல்லப்பட்டிருக்கின்றன, வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நேரடியான பாணியில் விவரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் வகையைச் சேர்ந்தவை மனிதனின் அறியப்படாத உலகத்துடன் தொடர்புடையவை. அவை மனித மொழியின் பிடியில் வருவதில்லை. எனவே, அவை ஒப்புமை முறையில் (முதஷாபிஹ்), அதாவது உருவகம், உவமை ஆகியவற்றின் பாணியில் விவரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, 'மனிதனின் கை' என்று சொன்னால், அது நேரடி மொழிக்கான ஓர் எடுத்துக்காட்டு, 'இறைவனின் கை' என்பது உருவக மொழிக்கான எடுத்துக்காட்டு. இந்த வேறுபாட்டைப் புரிந்துகொள்ளாத மக்கள், திட்டவட்டமான வசனங்களின் பொருள் தீர்மானிக்கப்படுவது போலவே, ஒப்புமை வசனங்களின் பொருளையும் தீர்மானிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். இது தன் இயற்கை வட்டத்தை விட்டு வெளியேறும் முயற்சியாகும். விளைவாக, மனிதன் வழிதடுமாறி ஒருபோதும் தனது இலக்கை அடைய முடியாமல் போய்விடுகிறான். ஏனென்றால் 'மனித கைகள்' என்பதற்கு ஒரு வரையறை உண்டு, அதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் நமக்கு இன்றுள்ள அறிவைக் கொண்டு 'இறைவனின் கை' என்பதை திட்டவட்டமாகப் புரிந்துகொள்ள முடியாது.

ஒப்புமைகள் தொடர்பானதில் சரியான கல்வியறிவு சார்ந்த நிலைப்பாடு என்னவென்றால், மனிதன் தனது வரம்புகளை ஒப்புக்கொள்ள வேண்டும். அவன் தன் புலன்களால் குறிப்பிட்ட வடிவத்தில் புரிந்துகொள்ள முடியாதவற்றை, ஒரு பொதுக் கருத்தைக் கொண்டு மனநிறைவு அடைய வேண்டும். புலன்கள் வரம்புகளுக்குட்பட்டவை, அதனால், மனிதனால் இந்த உண்மைகளை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. இந்த விஷயங்களில் வரையறைகளைப் பற்றி விவாதிப்பதைத் தவிர்ப்பதே முறையானது. இதற்கு

பதிலாக, இதுபோன்ற பயனற்ற விவாதங்களில் ஈடுபடுவதிலிருந்து பாதுகாக்க இறைவனிடம் வேண்டிக்கொள்ள வேண்டும். மனிதன் தன்னுடைய தகுதியை அடையாளம் கண்டு, இந்த உண்மைகளின் வரையறைக்குட்பட்ட நம்பிக்கையின் மீது உவப்புக்கொள்ள ஞானத்தை வழங்க இறைவனிடம் இறைஞ்ச வேண்டும். இந்த உண்மைகள் முழுமையாக வெளிப்படும் ஒரு நாள் வரப்போகிறது, அன்று இந்த யதார்த்தங்கள் அவற்றின் விரிவான வடிவத்தில் வெளிப்பட்டு முன்னால் வந்துவிடும். ஆனால், மனிதன் இச்சோதனைக்கான இந்த உலகில் இருக்கும் வரை இது சாத்தியமில்லை.

பாதை வழுக்கும் தன்மையைக் கொண்டிருப்பதை போலவே, அறிவுப் பயணமும் வழுக்கும் தன்மையைக் கொண்டிருக்கிறது. மனிதன் ஒரு விஷயத்தை அதன் உண்மையான கண்ணோட்டத்தில் பார்க்காதிருப்பதுதான் அறிவின் சறுக்கல். மனிதன் ஒரு விஷயத்தை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமோ அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போதுதான் யதார்த்தத்தைப் புரிந்துகொள்கிறான். அவன் விஷயங்களை வேறு கோணத்தில் பார்க்கத் தொடங்கினால், அவனால் சரியான கருத்தை உருவாக்க முடியாமல் போகவும், தவறான புரிதல்களில் சிக்கிக்கொள்ளவும் வாய்ப்புள்ளது. ஒரு பொருளைப் பார்ப்பதற்கு மிகச் சரியான கோணம் எது என்னும் ரகசியத்தை மனிதன் அறிந்து கொள்வதே மிகப்பெரிய ஞானம்.

اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا لَنْ تُغْنِيَ عَنْهُمْ اَمْوَالُهُمْ وَلَآ اَوْلَادُهُمْ مِّنَ
اللّٰهِ شَيْـًٔا ؕ وَاُولٰٓئِكَ هُمْ وَقُوْدُ النَّارِ ۙ﴿۱۰﴾ كَدَاْبِ اٰلِ فِرْعَوْنَ ۙ
وَالَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ؕ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ۚ فَاَخَذَهُمُ اللّٰهُ بِذُنُوْبِهِمْ ؕ
وَاللّٰهُ شَدِيْدُ الْعِقَابِ﴿۱۱﴾ قُلْ لِّلَّذِيْنَ كَفَرُوْا سَتُغْلَبُوْنَ وَ
تُحْشَرُوْنَ اِلٰى جَهَنَّمَ ؕ وَبِئْسَ الْمِهَادُ﴿۱۲﴾ قَدْ كَانَ لَكُمْ اٰيَةٌ فِيْ
فِئَتَيْنِ الْتَقَتَا ؕ فِئَةٌ تُقَاتِلُ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَاُخْرٰى كَافِرَةٌ
يَّرَوْنَهُمْ مِّثْلَيْهِمْ رَاْىَ الْعَيْنِ ؕ وَاللّٰهُ يُؤَيِّدُ بِنَصْرِهٖ مَنْ يَّشَآءُ ؕ
اِنَّ فِيْ ذٰلِكَ لَعِبْرَةً لِّاُولِي الْاَبْصَارِ﴿۱۳﴾

[10]உறுதியாக மறுப்பாளர்களுக்கு அவர்களுடைய செல்வங்களோ மக்க(ட்செல்வங்க)ளோ அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து தடுத்துக் காக்கமாட்டா. அவர்கள்தாம் நரகத்தின் எரி

பொருள்களாவர். [11]ஃபாரோவைச் சார்ந்தவர்களுக்கும் அவர்களுக்கு முன்பு இருந்தவர்களுக்கும் நேர்ந்ததைப் போலவே இவர்களுக்கும் நேரும். அவர்கள் எம் சான்றுகளைப் பொய்யென்று கூறினர். எனவே அவர்களின் பாவங்களின் காரணமாக அவர்களை அல்லாஹ் தண்டித்தான். அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன். [12](நபியே!) மறுப்பாளர்களிடம் நீர் கூறும்: ''நீங்கள் ஒடுக்கப்பட்டு நரகத்தை நோக்கி விரட்டிச் செல்லப்படுவீர்கள். அது மிகவும் கெட்ட உறைவிடமாகும்.'' [13](பத்ருப்போரில்) மோதிக்கொண்ட இரு பிரிவினரிடம் உறுதியாக உங்களுக்கு ஒரு சான்று இருக்கிறது. அதில் ஒரு பிரிவினர் இறைவழியில் போரிட்டுக் கொண்டிருந்தனர். எதிர்ப்பிரிவினர் (ஓரிறை)மறுப்பாளர்கள். அவர்களின் கண்களில் (இறைவழிப் போராளிகளான) அவர்கள் (எண்ணிக்கையில்) இரு மடங்காகத் தெரிந்தனர். தான் விரும்பியோரை அல்லாஹ் தன் உதவியால் வலுப்படுத்துகிறான். இதில் பார்வையுடையோருக்குப் பெரும் படிப்பினை இருக்கிறது.

சத்தியத்தின் அழைப்பு எழும்பொழுதெல்லாம், மக்களுக்கு அது ஒரு முக்கியமில்லாத குரலாகத் தோன்றுகிறது. அனைத்து வகையான உலகப் பொருள் நலங்களையும் கொண்ட காலச்சூழல் ஒருபுறம் இருக்க, மறுபுறம், சமகாலச் சூழ்நிலையில் தனக்கென்று இன்னும் ஓர் இடத்தையும் உருவாக்காத நிலையில் இறைவனின் பயணக் கூட்டம் இருக்கிறது. அதனுடன் எந்தப் பொருள் சார்ந்த நலன்களும் இருப்பதில்லை. இந்தச் சூழ்நிலைகளில், உண்மையை நோக்கி நகர்வது தன்னைச் சுற்றுச்சூழலிலிருந்து துண்டித்துக் கொள்வதற்கும் தம் நலன்களை இழப்பதற்கும் சமம். விளைவாக, மனிதன் தனது சொந்த நலன்களைப் பாதுகாப்பதற்காக உண்மையை ஏற்றுக்கொள்வதில்லை. தனது தோழர்களையும் உறவினர்களையும் விட்டுவிட்டுத் தனியாக நிற்கும் ஓர் அழைப்பாளரின் வரிசையில் இணையத் தயாராவதில்லை. ஆனால் இன்று மனிதனுக்கு முக்கியமானதாகத் தோன்றும் இந்த நலங்கள் நியாயத்தீர்ப்பு நாளில் யாருக்கும் பயனளிக்க மாட்டா. இந்த நலங்களுக்கு இருக்கும் முக்கியத்துவமெல்லாம், மனிதனுக்கும் மனிதனுக்குமிடையிலானதாக இருக்கும் வரை மட்டும்தான். நியாயத்தீர்ப்பு நாளின் திரை கிழிந்து, தொடர்பு மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலானது மட்டுமே என்று வரும்போது, இந்த நலங்கள் எந்த அளவுக்கு விலை மதிப்பற்றுப் போய்விடும் என்றால், இவை ஒருபோதும் இருந்ததே இல்லை என்பதுபோல் ஆகிவிடும். இந்த உலகில் அழைப்பாளர் வலிமையற்றவராகத் தோன்றுகிறார், ஆனால் உண்மையில் அவர்தான் வலிமையானவர்.

ஏனென்றால் இறைவன் அவருக்குப் பின்னால் இருக்கிறான். மறுப்பவன் இந்த உலகில் மிகவும் வலிமைவாய்ந்தவனாகத் தோன்றுகிறான். ஆனால் அவன் முற்றிலும் வலிமையற்றவன். ஏனெனில் அவன் வலிமை ஒரு தற்காலிக மாயையைத் தவிர வேறில்லை.

தூதுத்துவத்தின் பதினான்காம் ஆண்டில் நடந்த பத்ர் போர், மறுமையில் நிகழவிருக்கும் நிகழ்வை எடுத்துக்காட்டும் உலகச் சான்று. சத்தியத்தை மறுத்தவர்கள் மிக அதிகமாகவும் வலிமை மிக்கவர்களாகவும் இருந்தனர், சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்கள் எண்ணிக்கையிலும் வலிமையிலும் மிகக் குறைவாகவே இருந்தனர். ஆயினும், (ஓரிறை)மறுப்பாளர்கள் கடுமையான தோல்வியைச் சந்தித்தனர், மேலும் சத்தியத்தைப் பின்பற்றியவர்கள் ஒரு தீர்க்கமான வெற்றியைப் பெற்றனர். இது இறைவன் எப்போதும் உண்மையைப் பின்பற்றுபவர்களின் பக்கம் இருக்கிறான் என்பதற்கான தெளிவான சான்றாகும். இவ்வளவு அசாதாரண வேறுபாடுகள் இருந்தபோதிலும், இறைவனின் உதவியில்லாமல் இத்தகைய அசாதாரண வெற்றி கிடைக்க வாய்ப்பில்லை. இந்த உலகில் சத்தியம் தனியாக இல்லை என்பதற்கு இது இறைவனிடமிருந்து வந்த ஒரு பெருநிகழ்வாகும். அதே நேரத்தில், (ஓரிறை)மறுப்பாளர்களுக்கு இது ஒரு வெளிப்படையான சான்றாகும், இறைவனின் இந்த உலகில் அவர்கள் எந்த அளவுக்கு இடமில்லாமல் இருக்கிறார்கள் என்பதை இதில் அவர்கள் காண முடியும். சத்திய அழைப்பாளரின் வார்த்தைகளிலும் வாழ்க்கையிலும் அது இறைவனிடமிருந்து வந்தது என்பதற்கான தெளிவான அறிகுறிகள் உள்ளன. ஆனால் கலகக்காரர்கள் அதை மறுக்க வார்த்தைகளைப் புகலிடமாக ஆக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் பொய்யான காரணங்களில் (நியாயம் கற்பித்து) வாழ்கிறார்கள். இப்படியே அவர்கள் மறுமை உலகை அடைகிறார்கள். அங்கே அவர்கள் நம்பியிருந்த வார்த்தைகள் உண்மையில் எவ்வளவு பொருளற்றவை என்பதை அவர்கள் உணர்வார்கள்.

زُيِّنَ لِلنَّاسِ حُبُّ الشَّهَوٰتِ مِنَ النِّسَآءِ وَالْبَنِيْنَ وَالْقَنَاطِيْرِ
الْمُقَنْطَرَةِ مِنَ الذَّهَبِ وَالْفِضَّةِ وَالْخَيْلِ الْمُسَوَّمَةِ وَالْاَنْعَامِ
وَالْحَرْثِ ؕ ذٰلِكَ مَتَاعُ الْحَيٰوةِ الدُّنْيَا ۚ وَاللّٰهُ عِنْدَهٗ حُسْنُ الْمَاٰبِ ﴿۱۴﴾
قُلْ اَؤُنَبِّئُكُمْ بِخَيْرٍ مِّنْ ذٰلِكُمْ ؕ لِلَّذِيْنَ اتَّقَوْا عِنْدَ رَبِّهِمْ جَنّٰتٌ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا وَاَزْوَاجٌ مُّطَهَّرَةٌ وَّ

رِضْوَانٌ مِّنَ اللّٰهِ ؕ وَاللّٰهُ بَصِيْرٌۢ بِالْعِبَادِ ﴿١٥﴾ اَلَّذِيْنَ يَقُوْلُوْنَ
رَبَّنَاۤ اِنَّنَاۤ اٰمَنَّا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ ﴿١٦﴾
اَلصّٰبِرِيْنَ وَالصّٰدِقِيْنَ وَالْقٰنِتِيْنَ وَالْمُنْفِقِيْنَ وَالْمُسْتَغْفِرِيْنَ
بِالْاَسْحَارِ ﴿١٧﴾

[14]பெண்கள், ஆண் பிள்ளைகள், தங்கம், வெள்ளியின் குவியல்கள், உயர் ரகக் குதிரைகள், கால்நடைகள், விளைநிலங்கள் ஆகியவற்றை விரும்புவது மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. ஆயினும் இவையனைத்தும் இவ்வுலக வாழ்வின் இன்பங்களே ஆகும். அல்லாஹ்விடம்தான் அழகிய உறைவிடம் இருக்கிறது. [15](நபியே!) நீர் கூறும்: ''இதைவிடச் சிறந்ததை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? இறையச்சமுடையோருக்கு அவர்களின் இறைவனிடம் சொர்க்கச் சோலைகள் உண்டு. அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அங்கு அவர்கள் நிலையாகத் தங்கியிருப்பார்கள். அங்குத் தூய துணைகளும் இறை உவப்பும் உண்டு. தன் அடியார்களை அல்லாஹ் கண்காணித்துக் கொண்டிருக்கிறான்.'' [16](உலக வாழ்வில்) அவர்கள், ''எங்கள் இறைவா! நாங்கள் நம்பிக்கைகொண்டோம். எனவே நீ எங்கள் பாவங்களை மன்னித்து நரக வேதனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக!'' என்று இறைஞ்சி வேண்டிக் கொண்டிருப்பர். [17]அவர்கள் பொறுமையாளர்களாகவும் உண்மையாளர்களாகவும் கீழ்ப்படிந்தவர்களாகவும் (அறச்)செலவு செய்பவர்களாகவும் பின்னிரவு நேரங்களில் பாவமன்னிப்புக் கோருபவர்களாகவும் இருப்பர்.

உலகம் ஒரு சோதனைக்கூடம். எனவே, இங்குள்ள பொருள்கள் மீது மனிதனுக்குப் புறவயமான ஈர்ப்பு வைக்கப்பட்டுள்ளது. இறைவன், இந்த புறவயமான ஈர்ப்பால் பாதிக்கப்பட்டு, உலக இன்பங்களில் யார் தொலைந்து போகிறவர்கள் யார் என்பதையும், அதற்கு மேல் எழுந்து கண்ணுக்குத் தெரியாத மறுமையின் பேறுகளைத் தமது கவனத்தின் மையமாக மாற்றிக் கொள்பவர் யார்? என்பதையும் பார்க்க விரும்புகிறான். மனிதனுக்கு உலகப் பொருட்களில் மனநிம்மதி கிடைக்கிறது. அவற்றின் மூலம் சுற்றுச்சூழலுக்குள் கௌரவம் நிலைநாட்டப்படுவதை அவன் காண்கிறான். இவை இருந்தால், அவனுடைய எல்லா வேலைகளும் தொடர்ந்து வெற்றி பெறுகின்றன. இவைதாம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் என்பதாக அவன் புரிந்துகொள்ளத் தொடங்குகிறான். அவனது ஆர்வங்களும் செயல்பாடுகளும்

அவனது மனைவி, குழந்தைகள், செல்வம், உடைமைகள் ஆகியவற்றைச் சுற்றியே கூடிவிடுகின்றன. இதுவே மறுமைக்குத் தேவையானவற்றை நோக்கி முன்னேறுவதற்கு மிகப்பெரிய தடையாகும். உலகப் பொருள்களின் முக்கியத்தும் குறித்த உணர்வு, மனிதனை மறுமை சார்ந்த எண்ணங்களை அலட்சியப்படுத்தச் செய்து விடுகிறது. உலகில் தனது குழந்தைகளின் எதிர்காலத்தை உருவாக்குவதில் மிகப் பேரளவுக்கு ஈடுபாடு காட்டுகிறான். இந்த உலகத்திற்கு அப்பாலும் ஓர் 'எதிர்காலம்' இருக்கிறது; அதை அடையும் முயற்சியில் அக்கறைகொள்ள வேண்டும் என்பதை அவன் நினைவில் கொள்ளத் தவறிவிடுகிறான். உலகில் தனது வீட்டை உருவாக்குவது அவனுக்குப் பேரளவு பிரியமானதாக ஆகிவிடுகிறதென்றால், இதைத் தவிர வேறு ஒரு 'வீடு' இருக்கிறது, அதற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனை அவனுக்கு ஒருபோதும் தோன்றுவதில்லை. உலகில் செல்வத்தைக் குவிப்பதும் சொத்துக்களைச் சேர்ப்பதும் அவனுக்கு மதிப்புமிக்கதாகத் தோன்றுவதால், அதைத் தாண்டியும் ஒரு 'செல்வம்' இருப்பதையும் அதனைப் பெறுவதற்குத் தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்பதையும் அவனால் கற்பனைகூடச் செய்ய முடிவதில்லை. ஆனால் இதுபோன்ற பொருள்கள் அனைத்தும் இப்போதுள்ள தற்காலிக வாழ்க்கையின் அலங்காரங்கள் மட்டுமே. அடுத்த நீண்ட வாழ்க்கையில் அதனால் யாருக்கும் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை.

மறுமையின் நிரந்தர வாழ்க்கையைத் தனது கவனக் குவிமையமாக்கிக் கொண்ட ஒருவனுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கும்? உலக அலங்காரங்கள் அவனுடைய பார்வையில் அற்பமாகிவிடுகின்றன. மறுமையின் விவகாரங்கள் முழுவதும் இறைவனின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன என்ற உறுதியான நம்பிக்கையால் அவன் நிரம்பிவிடுவான். விளைவாக, அவன் இறைவனுக்கு அதிகமாக அஞ்சி மறுமையின் மீது பெருவிருப்பம் கொண்டவனாக மாறுவான். எந்தவொரு செயலிலும், அவன் தனது சொந்த விருப்பங்களைப் பின்பற்ற மாட்டான், மாறாக, இறைவனின் நீதி மன்றத்தை மனதில் கொண்டு தனது அணுகுமுறையைத் தீர்மானிப்பான். அவனுடைய சொல்லுக்கும் செயலுக்கும் எந்த வேறுபாடும் இருக்காது. அவனுடைய செல்வம் இனி அவனுடையதாக இருக்காது, மாறாக இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டுவிடும். இறைவனின் பாதையில் நடப்பதில் எவ்வளவு சிரமங்களைச் சந்தித்தாலும், அவன் அதில் உறுதியாக இருப்பான். ஏனென்றால் ஏக இறைவனை விட்டுவிட்ட பிறகு தனக்கு ஆதரவளிக்க யாரும் இல்லை என்கிற உறுதியான நம்பிக்கை அவனுக்கு இருக்கும். அவன் உள்ளம் இறை நினைவில் உருகி, நிம்மதியிழந்து அவனை அழைக்கத் தொடங்குவான். அவனது தனிமை இறைவனின் சகவாசத்தில்

கழியத் தொடங்கும். அல்லாஹ்வின் மகத்துவத்திற்கும் உயர்வுக்கும் முன்னால், தனது சொந்த இருப்பு முழுக்க முழுக்கத் தவறானதாகத் தோன்றும். அவனிடம் சொல்வதற்கு இதைத் தவிர வேறு எதுவும் இருக்காது: ''என் இறைவா! என்னை மன்னித்து விடு!''

شَهِدَ اللّٰهُ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۙ وَالْمَلٰٓئِكَةُ وَاُولُوا الْعِلْمِ
قَآئِمًۢا بِالْقِسْطِ ؕ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۱۸﴾ اِنَّ
الدِّيْنَ عِنْدَ اللّٰهِ الْاِسْلَامُ ۗ وَمَا اخْتَلَفَ الَّذِيْنَ اُوْتُوا الصف
الْكِتٰبَ اِلَّا مِنْۢ بَعْدِ مَا جَآءَهُمُ الْعِلْمُ بَغْيًۢا بَيْنَهُمْ ؕ وَمَنْ
يَّكْفُرْ بِاٰيٰتِ اللّٰهِ فَاِنَّ اللّٰهَ سَرِيْعُ الْحِسَابِ ﴿۱۹﴾ فَاِنْ حَآجُّوْكَ
فَقُلْ اَسْلَمْتُ وَجْهِىَ لِلّٰهِ وَمَنِ اتَّبَعَنِ ؕ وَقُلْ لِّلَّذِيْنَ
اُوْتُوا الْكِتٰبَ وَالْاُمِّيّٖنَ ءَاَسْلَمْتُمْ ؕ فَاِنْ اَسْلَمُوْا فَقَدِ
اهْتَدَوْا ۚ وَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا عَلَيْكَ الْبَلٰغُ ؕ وَاللّٰهُ بَصِيْرٌۢ
ع ۲۰ بِالْعِبَادِ ﴿۲۰﴾ ع اِنَّ الَّذِيْنَ يَكْفُرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ وَيَقْتُلُوْنَ
النَّبِيّٖنَ بِغَيْرِ حَقٍّ ۙ وَّيَقْتُلُوْنَ الَّذِيْنَ يَاْمُرُوْنَ بِالْقِسْطِ
مِنَ النَّاسِ ۙ فَبَشِّرْهُمْ بِعَذَابٍ اَلِيْمٍ ﴿۲۱﴾ اُولٰٓئِكَ الَّذِيْنَ
حَبِطَتْ اَعْمَالُهُمْ فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ ۫ وَمَا لَهُمْ مِّنْ نّٰصِرِيْنَ ﴿۲۲﴾

[18]தன்னைத்தவிர வேறு இறைவன் இல்லை என்று அல்லாஹ்வே சாட்சி கூறுகிறான். அவ்வாறே வானவர்களும் அறிஞர்களும் சாட்சி கூறுகின்றனர். அவன் நீதியை நிலைநாட்டக்கூடியவன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் யாவற்றினும் வல்லவன்; ஞானம் மிக்கவன். [19]அல்லாஹ்விடத்தில், முழுமையாக இறைவனுக்குக் கீழ்ப்படிதல் (இஸ்லாம்) மட்டுமே மார்க்கமாகும். வேதம் வழங்கப்பட்டவர்கள் தெளிவான அறிவு வந்தடைந்த பின்னரும் தங்களுடைய பிடிவாதத்தினால்தான் முரண்பட்டனர். இறைவசனங்களை மறுப்பவர்கள் அறிந்து கொள்ளட்டும். உறுதியாக அல்லாஹ் விசாரணை செய்வதில் விரைவானவன்.

[20](நபியே!) அவர்கள் உம்மிடம் தர்க்கம் செய்தால் நீர் ''நானும் என்னைப் பின்பற்றியவர்களும் அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்துவிட்டோம்'' என்று கூறிவிடும். (மேலும்) வேதம் வழங்கப்பட்டவர்களிடமும் பாமர மக்களிடமும் ''நீங்களும் இவ்வாறு கீழ்ப்படிகிறீர்களா?'' என்று கேளும். அவர்கள் கீழ்ப்பணிந்து விட்டால் நேர்வழியை அடைந்துவிடுவர். அவர்கள் புறக்கணித்தால் - (இறைத்தூதை) எடுத்துரைப்பது மட்டுமே உமது பொறுப்பாகும். தன் அடியார்களை அல்லாஹ் கண்காணித்துக் கொண்டிருக்கிறான். [21]யாரெல்லாம் அல்லாஹ்வின் வசனங்களை (ஏற்க)மறுத்துத் தூதர்களை அநியாயமாகக் கொலை செய்கிறார்களோ, மேலும் நீதியை நோக்கி அழைக்கின்ற மக்களையும் கொலை செய்கிறார்களோ அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு எனும் 'நற்செய்தி'யைக் கூறிவிடுவீராக! [22]அவர்களின் செயல்கள் இம்மையிலும் மறுமையிலும் வீணாகி விட்டன. அவர்களுக்கு உதவிபுரிவோர் எவருமில்லை.

பிரபஞ்சத்தின் இறைவன் ஒரே இறைவன்தான். அவன் நீதியையும் சமத்துவத்தையும் விரும்புகிறான். வானிலிருந்து அருளப்பட்ட வேதங்கள் அனைத்தும் தம் உண்மையான வடிவில் இதையே அறிவிக்கின்றன. இந்தப் பரந்த பிரபஞ்சத்தை அதன் உரிமையாளன் கண்ணுக்குத் தெரியாத தனது பணியாளர்கள் (வானவர்கள்) மூலம் இயக்கிக் கொண்டிருக்கிறான். அது முழுமையான பொருளில் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே இருக்கிறது. நிரூபிக்கப்பட்ட மனித அறிவின் படி, பிரபஞ்சம் என்பது உச்சபட்ச ஒற்றை அமைப்பாக இருக்கிறது. இதிலிருந்து பிரபஞ்சத்தை நிர்வகிப்பவன் தனித்த ஒருவன் மட்டுமே என்பது தெளிவாகிறது இதைப்போலவே, பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் அதற்குரிய சரியான இடத்தில் இருப்பது அதன் இறைவன் நீதியை விரும்புபவனே அன்றி அநீதியை விரும்பபவன் அல்லன் என்பதற்குச் சான்றாகும். அப்படியானால், பரந்த பிரபஞ்சத்தில் தொடர்ந்து நீதியை நிலைநாட்டியிருக்கும் இறைவன், மனிதனின் வாழ்வில் நீதிக்கு எதிரானவற்றில் எவ்வாறு உவப்புக் கொள்வான்?

பிரபஞ்சத்தின் கூறுகள் ஒவ்வொன்றும் முற்றிலும் 'சரணடைந்த நிலையில்' இருக்கின்றன. அதாவது, ஏக இறைவனின் நிர்ணயிக்கப்பட்ட வரைபடத்தின்படி அவை தமது செயல்பாடுகளை மேற்கொள்கின்றன. இதே அணுகுமுறை (மனப்பான்மை) மனிதர்களிடமும் எதிர்பார்க்கப்படுகிறது. மனிதன் தனது இறைவனைக் கண்டறிந்து அவன் விரும்புகின்ற வரைபடத்தின்படி தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

இறைவனைத் தவிர வேறு யாரையும் கவன மையமாகக் கொண்டிருப்பதோ இறைவனின் நீதித் தீர்ப்பைத் தவிர வேறு எதையாவது ஆதாரமாகக் கொள்ள முடியும் என்று எண்ணுவதோ ஓர் அடிப்படையற்ற செயலாகும். இப்போதுள்ள பிரபஞ்சத்தில் இதற்கு எந்த இடமுமில்லை.

குர்ஆனின் அழைப்பு இந்த உண்மையான இஸ்லாத்தின் அழைப்புதான். மக்கள் அதனுடன் முரண்படுவதற்குக் காரணம், அது உண்மையானது என்பது அவர்களுக்குப் புரியவில்லை என்பதால் அல்ல. அதற்குக் காரணம் பிடிவாதமே. அவர்களைப் பொறுத்தவரை, அதை ஏற்றுக் கொள்வது குர்ஆனின்பால் அழைப்பவரின் அறிவுசார் மேன்மையை ஒப்புக்கொள்வதாகும். அவர்களின் பொறாமை, ஆணவ உளவியல் ஆகியவை அத்தகைய ஒப்புதலை ஏற்கத் தயாராக இல்லை. சத்தியத்தை நேர்மையுடன் ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, சத்திய அழைப்பாளரின் அழைப்புக் குரலை அவர்கள் நசுக்க விரும்புகிறார்கள். இருப்பினும், இறைவனின் உலகில் இது சாத்தியமில்லை. சத்தியப் படைப்பாளரின் குரலை நசக்குவதற்கான அவர்களுடைய ஒவ்வொரு திட்டமும் தோல்வியடையும். இறைவனின் நீதித் தராசு நிறுவப்படும்போது, தங்களுடைய ஈடேற்றத்திற்கும் வெற்றிக்கும் காரணமாக அமையும் என்று நம்பியிருந்த செயல்கள் எவ்வளவு மதிப்பற்றவை என்பதை அவர்கள் கண்டுகொள்வார்கள். உண்மையான ஆதாரம் இறைவனின் சான்றாகும். இந்த ஆதாரத்திற்கு முன் தலை பணியாதவன் இறைவனுக்கு முன் தலை பணியாதவனே. இத்தகையவர்கள் மறுமை நாளில் மிகவும் ஆதரவற்றவர்களாக எழுப்பப் படுவார்கள்.

اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ اُوْتُوْا نَصِيْبًا مِّنَ الْكِتٰبِ يُدْعَوْنَ اِلٰى كِتٰبِ
اللّٰهِ لِيَحْكُمَ بَيْنَهُمْ ثُمَّ يَتَوَلّٰى فَرِيْقٌ مِّنْهُمْ وَهُمْ مُّعْرِضُوْنَ ﴿٢٣﴾
ذٰلِكَ بِاَنَّهُمْ قَالُوْا لَنْ تَمَسَّنَا النَّارُ اِلَّاۤ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ۖ
وَغَرَّهُمْ فِيْ دِيْنِهِمْ مَّا كَانُوْا يَفْتَرُوْنَ ﴿٢٤﴾ فَكَيْفَ اِذَا جَمَعْنٰهُمْ
لِيَوْمٍ لَّا رَيْبَ فِيْهِ ۗ وَوُفِّيَتْ كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ وَهُمْ لَا
يُظْلَمُوْنَ ﴿٢٥﴾ قُلِ اللّٰهُمَّ مٰلِكَ الْمُلْكِ تُؤْتِي الْمُلْكَ مَنْ تَشَآءُ
وَتَنْزِعُ الْمُلْكَ مِمَّنْ تَشَآءُ ۚ وَتُعِزُّ مَنْ تَشَآءُ وَتُذِلُّ مَنْ تَشَآءُ ؕ

بِيَدِكَ الْخَيْرُ ؕ اِنَّكَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ﴿٢٦﴾ تُوْلِجُ الَّيْلَ فِى
النَّهَارِ وَتُوْلِجُ النَّهَارَ فِى الَّيْلِ ۫ وَتُخْرِجُ الْحَىَّ مِنَ الْمَيِّتِ
وَتُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَىِّ ۫ وَتَرْزُقُ مَنْ تَشَآءُ بِغَيْرِ حِسَابٍ ﴿٢٧﴾

[23](நபியே!) வேதத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்ட(யூதர்களாகிய இ)வர்களை நீர் கவனிக்கவில்லையா? அவர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக இறைவேதத்தின்பால் அவர்கள் அழைக்கப்படுகின்றனர். ஆயினும், அவர்களில் ஒரு பிரிவினர் புறக்கணித்து விலகிச் சென்று விடுகின்றனர். [24]இதற்குக் காரணம் ''(விரல்விட்டு) எண்ணத்தக்க நாட்களைத் தவிர (வேறெப்போதும்) நரகநெருப்பு எங்களைத் தீண்டாது'' என்று (அவர்கள்) கூறி வந்ததேயாகும். அவர்கள் புனைந்து கொண்டவை அவர்களின் மத விவகாரத்தில் அவர்களை ஏமாற்றத்தில் ஆழ்த்திவிட்டன. [25]ஐயமின்றி வரக்கூடிய (மறுமையாகிய) ஒருநாளில் நாம் அவர்களை ஒன்றுசேர்க்கும் போது அவர்களின் நிலை என்னவாகும்? அந்நாளில் ஒவ்வொருவருக்கும் அவரவர் செயலுக்கான கூலி முழுமையாக வழங்கப்படும். அவர்கள் அநீதி இழைக்கப்பட மாட்டார்கள். [26](நபியே!) நீர் (இறைஞ்சிக்) கூறுவீராக! ''அல்லாஹ்வே! ஆட்சியின் முழு உரிமையாளனே! நீ விரும்பியோருக்கு ஆட்சியை வழங்குகிறாய்; நீ விரும்பியவரிடமிருந்து ஆட்சியைப் பறித்து விடுகிறாய். நீ விரும்பியோரைக் கண்ணியப்படுத்துகிறாய்; நீ விரும்பியோரை இழிவுபடுத்துகிறாய். நன்மைகள் அனைத்தும் உன் வசமே உள்ளன. உறுதியாக நீ எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன். [27]நீ இரவைப் பகலில் புகுத்துகிறாய்; பகலை இரவில் புகுத்துகிறாய். நீ உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகின்றாய்; உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகின்றாய். நீ விரும்பியோருக்குக் கணக்கின்றி வழங்குகிறாய்.''

இறைவனின் வழிகாட்டுதல் என்பது ஒன்றுதான், அந்த ஒரே வழிகாட்டுதல்தான் பல்வேறு சமூகங்களின் மொழிகளில் அவர்களுக்கான இறைத்தூதர்களுக்கு இறக்கியருளப்பட்டுக் கொண்டிருந்தது. இது குர்ஆனின் வடிவில் இறுதி இறைத்தூதருக்கு அருளப்பட்டது. இந்த ஒற்றுமையின் காரணமாக, வானிலிருந்து அருளப்பட்ட நூல்களை அறிந்திருந்தவர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் குர்ஆனின் அழைப்பை ஏற்பது

கடினமானது அல்ல. குர்ஆனின் அழைப்புக்கும் முந்தைய வானவேதங்களின் போதனைகளுக்கும் ஏதேனும் வேறுபாடு இருக்கிறதென்றால், அது குர்ஆனின் அழைப்பு, அவர்களின் கலப்படங்களிலிருந்து இறைவனின் மார்க்கத்தைத் தூய்மைப்படுத்துகிறது என்பது மட்டுமே. இவ்வாறிருந்தும் பெரும்பாலான மக்கள் குர்ஆனின் அழைப்பை மறுக்கிறார்கள். இதற்குக் காரணம், அவர்கள் குர்ஆனின் அழைப்பைத் தங்களுக்கான ஒரு தீவிரமான விஷயமாகக் கருதுவதில்லை. அவர்கள் தாமாகவே உருவாக்கிக் கொண்ட கோட்பாடுகளின் அடிப்படையில், நரக நெருப்பிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொண்டதாக அவர்கள் கருதிக்கொள்கிறார்கள். இந்த உளவியலின் கீழ், இந்த சத்தியத்தை அவர்கள் ஏற்காதிருந்தால் அவர்களின் ஈடேற்றம் ஆபத்துக்குள்ளாகாது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் இறைவனுடைய நீதித் தராசு நிறுவப்படும்போது, அவர்கள் வெறும் ஆசைக்கற்பனைகளின் இருளில் மூழ்கிக் கிடந்ததை உணர்வார்கள்.

அனைத்து விதமான கண்ணியமும் அதிகாரமும் இறைவனின் கட்டுப்பாட்டில் உள்ளன. காலத்தின் 'பெரியவர்கள்' ஒரு பொருட்டாகக் கருதாத ஒருவருக்கு இறைவன் விரும்பினால் கண்ணியமும் உயர்வும் தந்து அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பளிப்பான். இறைவன் விரும்பினால் அறிவுப் பீடங்களில் அமர்ந்திருப்பவர்கள் யாருடைய அறியாமைக்குச் சான்றறிக்கையை வழங்குகிறார்களோ, அவர் வழியாகவே அறிவின் ஊற்றைப் பாய்ந்தோடச் செய்து விடுவான். கண்ணியமும் ஆற்றலும் இறைவனுக்குரியவை என்று கருதும் ஒருவன்தான் இறைவனின் பார்வையில், கண்ணியத்திற்கும் ஆற்றலுக்கும் தகுதியானவன். அவற்றைத் தனது தனிப்பட்ட சொத்தாகக் கருதுபவன்தான் இறைவனின் பார்வையில் அதற்கு மிகவும் தகுதியற்றவன். இறைவன் பரந்த பிரபஞ்சத்தில், ஒளியின் மீது இருளைப் போர்த்தி, இருளின் மேல் ஒளியைப் பாய்ச்சும் இந்த அற்புதத்தை தினமும் நிகழ்த்தி வருகிறான். அவன் உயிரற்ற முலக்கூறுகளிலிருந்து வாழ்வைக் கொண்டு வருகிறான்; உயிருள்ளவற்றை உயிரற்ற முலக்கூறுகளாக மாற்றுகிறான். இறைவனின் இதே ஆற்றல் மனித வரலாற்றிலும் வெளிப்படுகிறதென்றால், அதில் வியப்பென்ன?

சத்தியத்தின் பெயரால் அசத்தியச் செயல்பாடுகளில் ஈடுபடுபவர்கள் எப்போதும் உண்மையான சத்திய அழைப்பை எதிர்க்கத் தொடங்கி விடுகிறார்கள். இத்தகைய இறை அழைப்பாளர் வீடற்றவராக ஆக்கப்படுகிறார். அவரது பொருளாதாரங்கள் அழிக்கப்படுகின்றன. ஆனால் இத்தகைய மனிதர் இறைவனின் நேரடிப் பாதுகாப்பில் இருக்கிறார். அவன் அவருக்காகச் சிறப்பான வாழ்வாதாரத்தை ஏற்பாடு செய்கிறான். மற்றவர்களுக்கு அவர்களின் உழைப்புக்கேற்ப வாழ்வாதாரம் வழங்கப்படுகிறது, இத்தகைய நபருக்கே கணக்கின்றி வழங்கப்படுகிறது.

لَا يَتَّخِذِ الْمُؤْمِنُوْنَ الْكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ ۚ
وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ فَلَيْسَ مِنَ اللّٰهِ فِيْ شَيْءٍ اِلَّآ اَنْ تَتَّقُوْا مِنْهُمْ
تُقٰىةً ؕ وَيُحَذِّرُكُمُ اللّٰهُ نَفْسَهٗ ؕ وَاِلَى اللّٰهِ الْمَصِيْرُ ﴿٢٨﴾ قُلْ اِنْ
تُخْفُوْا مَا فِيْ صُدُوْرِكُمْ اَوْ تُبْدُوْهُ يَعْلَمْهُ اللّٰهُ ؕ وَيَعْلَمُ مَا فِي
السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿٢٩﴾ يَوْمَ
تَجِدُ كُلُّ نَفْسٍ مَّا عَمِلَتْ مِنْ خَيْرٍ مُّحْضَرًا ۚ وَّمَا عَمِلَتْ مِنْ سُوْٓءٍ ۚ
تَوَدُّ لَوْ اَنَّ بَيْنَهَا وَبَيْنَهٗٓ اَمَدًا بَعِيْدًا ؕ وَيُحَذِّرُكُمُ اللّٰهُ نَفْسَهٗ ؕ
وَاللّٰهُ رَءُوْفٌ بِالْعِبَادِ ﴿٣٠﴾ قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ
يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿٣١﴾ قُلْ
اَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ ۚ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْكٰفِرِيْنَ ﴿٣٢﴾

[28]நம்பிக்கையாளர்கள் நம்பிக்கையாளர்களை விடுத்து மறுப்பாளர்களை உற்ற நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டாம். அவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலையில் அன்றி, அவ்வாறு நட்புக் கொள்பவருக்கு அல்லாஹ்வுடன் எந்தத் தொடர்பும் இல்லை. அல்லாஹ் தன்னைப்பற்றி உங்களை எச்சரிக்கிறான். அனைவரும் அல்லாஹ்விடமே திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது. [29](நபியே!) நீர் கூறும்: ''உங்கள் நெஞ்சங்களில் உள்ளவற்றை நீங்கள் மறைத்தாலும் அல்லது வெளிப்படுத்தினாலும் அவற்றை அல்லாஹ் நன்கறிவான். வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை அவன் அறிகிறான். அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன்.'' [30]ஒவ்வொரு மனிதனும் தான் செய்த நன்மைகளையும் தீமைகளையும் தன் கண்ணெதிரில் காணும் நாளில் தனக்கும் அந்நாளுக்கும் இடையில் மிகத் தொலைவான இடைவெளி இருக்கக்கூடாதா என்று துடிப்பான். அல்லாஹ் தன்னைப்பற்றி உங்களை எச்சரிக்கிறான். தன் அடியார்களின் மீது அல்லாஹ் மிகுந்த பரிவுடையவன். [31](நபியே!) நீர் கூறும்: ''நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக

இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான். உங்கள் பாவங்களையும் மன்னிப்பான்.'' அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன். [32]''அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்'' என்று (நபியே!) நீர் கூறும். அவர்கள் புறக்கணித்தால் (அறிந்து கொள்ளுங்கள்!) அல்லாஹ் மறுப்பாளர்களை நேசிப்பதில்லை.

நம்பிக்கையாளர் தமது நடத்தையில் மனிதர்கள் அனைவரிடமும் நன்மையும் நீதியும் கொண்டவராக இருப்பார். இதில் நம்பிக்கையாளர் – நம்பிக்கையற்றவர் என்ற பாகுபாடு இல்லை. ஆனால் நம்பிக்கையற்றோர் உடனான நட்பு நம்பிக்கையாளர்களின் நலன்களைப் பாதிக்கும் பட்சத்தில், நம்பிக்கையாளருக்கு இத்தகைய நட்புக்கான அனுமதி இல்லை.

இருப்பினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, ஒரு கட்டத்தில் ஒரு நம்பிக்கையாளரோ நம்பிக்கையாளர்களின் குழுவோ நம்பிக்கையாளர் அல்லாதவர்களுடன் தற்காலிக உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தால், அதில் எந்தத் தவறும் இல்லை. இறைவன் எண்ணத்தைப் பார்க்கிறான். எண்ணம் சரியாக இருந்தால், யாரையும் அவர்களின் செயல்களுக்காக விசாரிப்பதில்லை. எல்லாச் செயல்களிலும் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விஷயம் இறையச்சம்தான். மனிதன் எந்தச் செயலிலும் தான் மேற்கொள்ளும் அணுகுமுறையைப் பற்றி நன்கு சிந்தித்துக்கொள்ள வேண்டும், ஏனென்றால் இறைவன் அதைக் கணக்கில் கொள்வான். அவனுடைய நீதித் தராசில் யார் தவறு செய்தவர்களாய் நிறுத்தப்படுவார்களோ அவர்கள் அவனுடைய தண்டனையைக் கண்டிப்பாகப் பெற்றே தீர்வார்கள். மனிதனின் எந்தச் செயலும் இறைவனுக்குத் தெரியாமல் இல்லை. இரகசியமாகச் செய்திருந்தாலும் சரி, வெளிப்படையாகச் செய்திருந்தாலும் சரி. சோதனையின் திரை விலகி மறுமையின் உலகம் எதிரே வரும்போது மனிதச் செயல்களின் முழு விளைச்சல் நிலமும் எதிரே இருக்கும். இந்தக் காட்சி எந்த அளவுக்கு பயங்கரமானதாக இருக்கும் என்றால், உலகில் தனக்கு இன்பம் தரக்கூடியனவாக இருந்தவை அனைத்தும் தன்னை விட்டு வெகுதூரம் போய்விட வேண்டும் என்று அவன் விரும்புவான்.

இறைவன் ஒருவருடைய கீழ்ப்படிதலைப் பார்க்கும் இடம் இதயம்தான். இறைவனுடனான தொடர்பு யாருடைய இதயப்பூர்வ அன்பின் அளவிற்கு நிலைநிறுத்தப்பட்டு விட்டதோ அவர்தான் ஓர் இறைநம்பிக்கையாளர். இத்தகைய மக்கள்தாம் இறைவனின் அன்புக்கும் கவனத்திற்கும் தகுதியானவர்களாகிறார்கள். இறைவனுடன் இவ்வாறான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் ஒருவரிடம் சில குறைபாடுகள் ஏற்பட்டு விட்டாலும்,

இறைவன் அவரை மன்னிப்பான். இறைவன் வரம்பு மீறுபவர்களிடம் மிகவும் கடுமையானவன். ஆனால், பணிவான மனப்போக்கைக் கடைப்பிடிப்பவர்களுக்கு அவன் மென்மையானவனாக மாறிவிடுகிறான்.

ஒருவருடைய அன்பு குடிகொண்டிருக்கும் அதே உள்ளத்தில் அந்த அன்புக்குரியவருடைய பகைவனின் அன்பும் ஒன்று சேர முடியாது. இது ஓர் உளவியல் உண்மை. இதைப்போன்றே, ஒருவரின் அன்புக்குரியவர் அவர் தலைவர், உரிமையாளர் என்னும் தகுதிகளைப் பெற்றிருந்தால், அவர் மீதான அந்த அன்பு வெறும் அன்பாக மட்டுமில்லாமல், அவருக்குக் கீழ்ப்படியும் உணர்வுகளையும் உருவாக்கியே தீரும் என்பதும் ஓர் உண்மையே. இறைவன் மீதான இந்த அன்புக்குப் பின்பும் இறைவனின் பகைவர்களுடனான இதயப்பூர்வமான உறவு முடிவுக்கு வரவில்லை என்றாலோ, இறைவனுக்குக் கீழ்ப்படியும் ஆர்வம் இல்லாவிட்டாலோ, அது பொய்யான அன்பே. அத்தகைய நபர் இறைவனை மறுப்பவர்களில் ஒருவராகக் கருதப்படுவாரே அன்றி, நம்பிக்கை கொண்டவர்களில் ஒருவராகக் கருதப்படமாட்டார்.

ஓர் இறைத்தூதர் என்பவர், இறைவனால் சான்றளிக்கப்பட்ட முழுமையான இறைவழிபாட்டாளர் ஆவார். எனவே, இறைப்பற்றுடன் கூடிய வாழ்க்கைக்கு உறுதிப்படுத்தப்பட்ட ஒரே எடுத்துக்காட்டு தற்போதைய உலகில் இறைத்தூதரின் எடுத்துக்காட்டுதான்.

اِنَّ اللّٰهَ اصْطَفٰٓى اٰدَمَ وَنُوْحًا وَّاٰلَ اِبْرٰهِيْمَ وَاٰلَ عِمْرٰنَ عَلَى
الْعٰلَمِيْنَ ﴿٣٣﴾ ذُرِّيَّةًۢ بَعْضُهَا مِنْۢ بَعْضٍ ؕ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿٣٤﴾
اِذْ قَالَتِ امْرَاَتُ عِمْرٰنَ رَبِّ اِنِّيْ نَذَرْتُ لَكَ مَا فِيْ بَطْنِيْ
مُحَرَّرًا فَتَقَبَّلْ مِنِّيْ ۚ اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿٣٥﴾ فَلَمَّا وَضَعَتْهَا
قَالَتْ رَبِّ اِنِّيْ وَضَعْتُهَآ اُنْثٰى ؕ وَاللّٰهُ اَعْلَمُ بِمَا وَضَعَتْ ؕ وَلَيْسَ
الذَّكَرُ كَالْاُنْثٰى ۚ وَاِنِّيْ سَمَّيْتُهَا مَرْيَمَ وَاِنِّيْٓ اُعِيْذُهَا بِكَ وَذُرِّيَّتَهَا
مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ﴿٣٦﴾ فَتَقَبَّلَهَا رَبُّهَا بِقَبُوْلٍ حَسَنٍ وَّاَنْۢبَتَهَا
نَبَاتًا حَسَنًا ۙ وَّكَفَّلَهَا زَكَرِيَّا ؕ كُلَّمَا دَخَلَ عَلَيْهَا زَكَرِيَّا

الْمِحْرَابَ ۙ وَجَدَ عِنْدَهَا رِزْقًا ۚ قَالَ يٰمَرْيَمُ اَنّٰى لَكِ هٰذَا ؕ قَالَتْ هُوَ
مِنْ عِنْدِ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ يَرْزُقُ مَنْ يَّشَآءُ بِغَيْرِ حِسَابٍ ﴿۳۷﴾ هُنَالِكَ
دَعَا زَكَرِيَّا رَبَّهٗ ۚ قَالَ رَبِّ هَبْ لِيْ مِنْ لَّدُنْكَ ذُرِّيَّةً
طَيِّبَةً ۚ اِنَّكَ سَمِيْعُ الدُّعَآءِ ﴿۳۸﴾ فَنَادَتْهُ الْمَلٰٓئِكَةُ وَهُوَ قَآئِمٌ يُّصَلِّيْ
فِي الْمِحْرَابِ ۙ اَنَّ اللّٰهَ يُبَشِّرُكَ بِيَحْيٰى مُصَدِّقًا بِكَلِمَةٍ مِّنَ اللّٰهِ
وَسَيِّدًا وَّحَصُوْرًا وَّنَبِيًّا مِّنَ الصّٰلِحِيْنَ ﴿۳۹﴾ قَالَ رَبِّ اَنّٰى
يَكُوْنُ لِيْ غُلٰمٌ وَّقَدْ بَلَغَنِيَ الْكِبَرُ وَامْرَاَتِيْ عَاقِرٌ ؕ قَالَ كَذٰلِكَ
اللّٰهُ يَفْعَلُ مَا يَشَآءُ ﴿۴۰﴾ قَالَ رَبِّ اجْعَلْ لِّيْٓ اٰيَةً ؕ قَالَ اٰيَتُكَ
اَلَّا تُكَلِّمَ النَّاسَ ثَلٰثَةَ اَيَّامٍ اِلَّا رَمْزًا ؕ وَاذْكُرْ رَّبَّكَ كَثِيْرًا وَّ
سَبِّحْ بِالْعَشِيِّ وَالْاِبْكَارِ ﴿۴۱﴾ ع ۱۲ وَاِذْ قَالَتِ الْمَلٰٓئِكَةُ يٰمَرْيَمُ اِنَّ اللّٰهَ
اصْطَفٰكِ وَطَهَّرَكِ وَاصْطَفٰكِ عَلٰى نِسَآءِ الْعٰلَمِيْنَ ﴿۴۲﴾ يٰمَرْيَمُ اقْنُتِيْ
لِرَبِّكِ وَاسْجُدِيْ وَارْكَعِيْ مَعَ الرّٰكِعِيْنَ ﴿۴۳﴾ ذٰلِكَ مِنْ اَنْۢبَآءِ
الْغَيْبِ نُوْحِيْهِ اِلَيْكَ ؕ وَمَا كُنْتَ لَدَيْهِمْ اِذْ يُلْقُوْنَ اَقْلَامَهُمْ
اَيُّهُمْ يَكْفُلُ مَرْيَمَ ۪ وَمَا كُنْتَ لَدَيْهِمْ اِذْ يَخْتَصِمُوْنَ ﴿۴۴﴾

[33]உறுதியாக அல்லாஹ் ஆதமையும் நோவாவையும் ஆப்ரஹாமின் வழித்தோன்றல்களையும் இம்ரானின் வழித்தோன்றல்களையும் உலகத்தார் அனைவரையும்விட மேலாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். [34]இவர்களுள் ஒருவர் மற்றவரின் வழித்தோன்றலே ஆவர். அல்லாஹ் செவியுறுபவன்; முற்றும் அறிந்தவன். [35]இம்ரானின் மனைவி, ''என் இறைவா! என் வயிற்றில் உள்ளதை உனக்காக அர்ப்பணிக்க நான் நேர்ச்சை செய்துகொண்டேன். எனவே நீ என்னிடமிருந்து (அதை) ஏற்றுக்கொள்வாயாக! உறுதியாக நீ செவியுறுபவன்;

முற்றும் அறிந்தவன்'' என்று கூறியதை (நபியே! நீர்) எண்ணிப் பார்ப்பீராக! [36]அவர் (இம்ரானின் மனைவி குழந்தையைப்) பெற்றெடுத்தபோது ''என் இறைவா! நான் பெண் குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டேனே'' என்று கூறினார். அவர் எ(த்தகைய மேன்மையான)தைப் பெற்றெடுத்தார் என்பதை அல்லாஹ்தான் நன்கறிவான். ''ஆண் குழந்தை பெண் குழந்தையைப் போன்றதன்று. நான் அதற்கு மர்யம் எனப் பெயரிட்டுள்ளேன். நான் உன்னிடம் அக்குழந்தைக்கும் அதன் வழித்தோன்றல்களுக்கும் விரட்டப்பட்ட சாத்தானிடமிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்'' (என இறைஞ்சினார்). [37]ஆகவே இறைவன் அவரை (குழந்தை மர்யத்தை) நல்ல முறையில் ஏற்றுக்கொண்டான். அவரைச் சிறந்த முறையில் வளரச் செய்தான். அவருக்கு ஸகரிய்யாவை பொறுப்பாளராக்கினான். மர்யத்தின் அறைக்கு ஸகரிய்யா செல்லும் போதெல்லாம் அங்கே ஏதேனும் உணவை அவரிடம் காண்பார். ''மர்யமே, இது உனக்கு எங்கிருந்து கிடைக்கிறது?'' என்று கேட்பார். அதற்கு மர்யம், ''இது அல்லாஹ்விடமிருந்து வந்ததாகும். தான் விரும்பியவருக்கு அல்லாஹ் கணக்கின்றி வழங்குகின்றான்'' என்று கூறுவார். [38]அப்போது ஸகரிய்யா தம் இறைவனிடம், ''இறைவா! எனக்கு உன்னிடமிருந்து ஒரு தூய வழித்தோன்றலை அளிப்பாயாக! உறுதியாக நீ இறைஞ்சுதலைச் செவியுறுபவன்'' என்று வேண்டினார். [39]அவர் தம் தொழுகை மாடத்தில் நின்று தொழுது கொண்டிருந்தபோது வானவர்கள் அவரை அழைத்து, ''அல்லாஹ் உமக்கு(ப் பிறக்கவிருக்கும் யஹ்யா) ஜான் (எனும் குழந்தை) குறித்து நற்செய்தி கூறுகிறான். அவர் அல்லாஹ்வின் வார்த்தை (ஆகிய இயேசு நபி)யை உண்மைப்படுத்தக் கூடியவராகவும் தலைவராகவும் விளங்குவார். மனக்கட்டுப்பாடு கொண்ட(தூய)வராகவும் நல்லோர்களிலுள்ள தூதராகவும் இருப்பார்'' என்று கூறினர். [40](ஸகரிய்யா இறைவனிடம்) ''என் இறைவா! எனக்கு எவ்வாறு மகன் பிறப்பான்? நானோ முதியவனாகி விட்டேன்; எனது மனைவியோ மலடியாக இருக்கிறாள்'' என்று வினவினார். அதற்கு அவன், ''தான் விரும்பியதை இவ்வாறே அல்லாஹ் செய்துவிடுகிறான்'' என்று கூறினான். [41]அதற்கு அவர், ''என் இறைவா! எனக்கு ஏதேனும் ஓர் அடையாளத்தை வழங்குவாயாக!'' என்று வேண்டினார். (அதற்கு) அவன், ''நீர் மூன்று நாட்கள்வரை மக்களுடன் சைகை மூலமாகவே அன்றி (வாயால்) பேசமாட்டீர் என்பதே அதன் அடையாளமாகும். உம் இறைவனை மிகமிக அதிகமாக நினைவு

கூர்வீராக! காலையிலும் மாலையிலும் அவனது புகழைப் பாடுவீராக!'' என்று கூறினான். [42]வானவர்கள் (மர்யத்திடம் வந்து), ''மர்யமே! உம்மை அல்லாஹ் தேர்ந்தெடுத்துத் தூய்மையாக்கியுள்ளான். உலகிலுள்ள பெண்கள் அனைவரையும்விட உம்மைத் தேர்ந்தெடுத்துச் சிறப்பித்துள்ளான். [43]மர்யமே! உமது இறைவனுக்குக் கீழ்ப்படிந்து தலைவணங்குவீராக! குனிந்து தொழுவோருடன் சேர்ந்து நீரும் குனிந்து தொழுவீராக!'' என்று கூறினர். [44](நபியே!) இவை மறைவான செய்திகள் ஆகும். இவற்றை நாம்தாம் உமக்கு அறிவிக்கிறோம். மர்யத்துக்குப் பொறுப்பேற்பவர் யார் என்பதை முடிவு செய்ய (அதற்காகப் போட்டியிட்ட) அவர்கள் தங்களது எழுதுகோல்களை ஆற்றில் எறிந்தபோது நீர் அவர்களுடன் இருக்கவில்லை. அவர்கள் தங்களுக்கிடையே பிணங்கிக் கொண்டிருந்தபோதும் நீர் அவர்களுடன் இருக்கவில்லை.

ஏக இறைவன் ஸகரிய்யாவுக்கு அவரது முதுமைக் காலத்தில் ஒரு பிள்ளைப் பேறு கொடுத்தான். மர்யமுக்கு அவர்களுடைய அறையிலே உணவு வழங்கினான். இயேசுவைத் தந்தை இல்லாமல் படைத்தான். ஆப்ரஹாமின் வம்சத்தில் தூதுத்துவத்திற்குரிய நேர்மையாளர்களைப் படைத்தான். இறைவன் இந்த வெகுமதிகளைத் தன் அடியார்களுக்கு வெறுமனே வழங்கி விடவில்லை, மாறாக அவற்றுக்குத் தகுதியானவர்களாக அவர்களைக் கண்டறிந்து அவ்வாறு செய்தான். இவர்கள் தங்கள் குழந்தைகளிடம் பொருளாதார எதிர்பார்ப்புகளைக் கொண்டிராதவர்கள்; தங்களுடைய பிள்ளைகள் இறைவனின் பாதையில் திளைத்திருப்பதில்தான் அவர்களுடைய மகிழ்ச்சி இருந்தது. அவர்கள் தங்கள் குழந்தைகள் சாத்தானிடமிருந்து பாதுகாக்கப்பட்டு, நல்லடியார்களின் கூட்டத்தில் சேர வேண்டும் என்ற விருப்பத்தைத் தமக்குள் வளர்த்துக் கொண்டவர்கள். ஒருவரிடம் உள்ள நன்மையைக் கண்டு அவர்கள் பொறாமைப்படுவதோ எரிச்சலடைவதோ இல்லை. அவர்களின் நல்லெண்ணங்களின் விளைவாக, அவர்களின் பிள்ளைகளும் இந்த உலக வாழ்க்கையில் தங்கள் மன விருப்பங்களைக் கட்டுப்படுத்தி இறைவனை நினைவுகூர்பவர்களாக – தீமைக்கும் நன்மைக்குமிடையில், நன்மையின் பாதையைத் தேர்ந்தெடுப்பவர்களாக மாறினர். இந்த மக்களுக்குத்தான் இறைவன் அவனது தனிப்பட்ட வாழ்வாதாரங்களிலிருந்து உண்ணவும் பருகவும் அளிக்கிறான்; தனது சிறப்பு அருளுக்காகவும் அவர்களை ஏற்றுக் கொள்கிறான்.

اِذْ قَالَتِ الْمَلٰٓئِكَةُ يٰمَرْيَمُ اِنَّ اللّٰهَ يُبَشِّرُكِ بِكَلِمَةٍ مِّنْهُ ۖ اسْمُهُ
الْمَسِيْحُ عِيْسَى ابْنُ مَرْيَمَ وَجِيْهًا فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ وَمِنَ
الْمُقَرَّبِيْنَ ۙ﴿٤٥﴾ وَيُكَلِّمُ النَّاسَ فِى الْمَهْدِ وَكَهْلًا وَّمِنَ الصّٰلِحِيْنَ ﴿٤٦﴾
قَالَتْ رَبِّ اَنّٰى يَكُوْنُ لِىْ وَلَدٌ وَّلَمْ يَمْسَسْنِىْ بَشَرٌ ؕ قَالَ كَذٰلِكِ
اللّٰهُ يَخْلُقُ مَا يَشَآءُ ؕ اِذَا قَضٰٓى اَمْرًا فَاِنَّمَا يَقُوْلُ لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴿٤٧﴾
وَيُعَلِّمُهُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَالتَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ ۚ﴿٤٨﴾ وَرَسُوْلًا
اِلٰى بَنِىٓ اِسْرَآءِيْلَ ۙ اَنِّىْ قَدْ جِئْتُكُمْ بِاٰيَةٍ مِّنْ رَّبِّكُمْ ۙ اَنِّىْٓ
اَخْلُقُ لَكُمْ مِّنَ الطِّيْنِ كَهَيْـَٔةِ الطَّيْرِ فَاَنْفُخُ فِيْهِ فَيَكُوْنُ طَيْرًا
بِاِذْنِ اللّٰهِ ۚ وَاُبْرِئُ الْاَكْمَهَ وَالْاَبْرَصَ وَاُحْىِ الْمَوْتٰى بِاِذْنِ
اللّٰهِ ۚ وَاُنَبِّئُكُمْ بِمَا تَاْكُلُوْنَ وَمَا تَدَّخِرُوْنَ ۙ فِىْ بُيُوْتِكُمْ ؕ اِنَّ
فِىْ ذٰلِكَ لَاٰيَةً لَّكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ۚ﴿٤٩﴾ وَمُصَدِّقًا لِّمَا بَيْنَ
يَدَىَّ مِنَ التَّوْرٰىةِ وَلِاُحِلَّ لَكُمْ بَعْضَ الَّذِىْ حُرِّمَ عَلَيْكُمْ
وَجِئْتُكُمْ بِاٰيَةٍ مِّنْ رَّبِّكُمْ ۖ فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ﴿٥٠﴾ اِنَّ اللّٰهَ رَبِّىْ
وَرَبُّكُمْ فَاعْبُدُوْهُ ؕ هٰذَا صِرَاطٌ مُّسْتَقِيْمٌ ﴿٥١﴾

45வானவர்கள், ''மர்யமே! தன்னிடமிருந்து அல்லாஹ் தனது வார்த்தையின் மூலம் உமக்கு(க் குழந்தை பிறக்கும் என) நற்செய்தி கூறுகிறான். அவரின் பெயர் மஸீஹ் - மர்யத்தின் மைந்தர் இயேசு என்பதாகும். அவர் இம்மையிலும் மறுமையிலும் உயர் மதிப்பிற்குரியவராகவும் அல்லாஹ்வுக்கு நெருக்கமான அடியாராகவும் இருப்பார். ***46***அவர் தொட்டில் பருவத்தில் இருக்கும்போதும் பக்குவமான வயதை அடைந்த பின்பும் மக்களிடம் பேசுவார்; நல்லோர்களில் ஒருவராகவும் இருப்பார்'' என்று கூறினர். ***47***அவர், ''என் இறைவா! என்னை எந்த ஆணும் தீண்டாதிருக்க எனக்கு எவ்வாறு குழந்தை பிறக்கும்?'' என்று வினவினார். அவன்,

''அப்படித்தான். தான் விரும்பியதை அல்லாஹ் படைக்கிறான். அவன் ஒன்றைத் தீர்மானித்து விட்டால் 'ஆகு' என்றுதான் கூறுவான். அது ஆகிவிடும்'' என்றான். [48]அல்லாஹ் அவருக்கு வேதத்தையும் ஞானத்தையும் தவ்ராத்தையும் இன்ஜீலையும் கற்றுக் கொடுப்பான். [49]இஸ்ராயீலின் மக்களுக்கு(க் கீழ்க்காணும் செய்தியுடன் அவரை)த் தூதராகவும் ஆக்குவான் (என்றும் அல்லாஹ் கூறினான். இயேசு பிறந்து வளர்ந்தபின்) அவர் (அம்மக்களை நோக்கி) ''நான் இறைவனின் சான்றை உங்களிடம் கொண்டு வந்துள்ளேன்; நான் உங்களுக்காகக் களிமண்ணால் பறவையின் உருவம் செய்து அதில் ஊதுவேன்; அது இறைக்கட்டளையால் உண்மையான பறவையாகிவிடும்; நான் இறைக்கட்டளையால் பிறவியிலேயே பார்வையற்றவரையும் தொழுநோயாளியையும் குணப்படுத்துவேன்; இறந்துபோனவர்களையும் உயிர்ப்பிப்பேன். நீங்கள் உண்பவற்றையும் உங்கள் வீடுகளில் சேமித்து வைப்பவற்றையும் நான் உங்களுக்குத் தெரிவிப்பேன். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் உறுதியாக இவற்றில் உங்களுக்குச் சான்று உள்ளது.'' [50]நான் எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை உண்மைப்படுத்த(க்கூடியவனாக)வும் உங்கள்மீது தடை செய்யப்பட்டுள்ள சில பொருள்களை உங்களுக்கு அனுமதிக்கப்பட்டதாக ஆக்குவதற்கும் வந்துள்ளேன். உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்குச் சான்றினைக் கொண்டு வந்துள்ளேன். எனவே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; எனக்குக் கீழ்ப்படியுங்கள். [51]உறுதியாக அல்லாஹ்தான் என் இறைவனும் உங்கள் இறைவனுமாவான். எனவே அவனையே வணங்குங்கள். இதுவே நேர்வழியாகும்'' என்று கூறினார்.

இறைவன் யூத வழித்தோன்றல்களைச் சிறப்புப் பொறுப்புக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்; அவர்களும் இறைவழியைப் பின்பற்றி, அதைக் குறித்துப் பிறரும் அறியச் செய்ய வேண்டும் என்பதற்காக. ஆனால் பிற்காலத்தில் யூதர்களுக்குள் ஒழுக்கக் கேடு வந்துவிட்டது, எந்த அளவுக்கெனில் இறைவனுடைய பார்வையில் அவர்கள் புனித வழிகாட்டுதலைப் பாதுகாக்கத் தகுந்தவர்கள் எனும் தகுதியை இழந்து விட்டனர். இப்போது இறைவன் இந்த நம்பிக்கைக்குரிய பொறுப்பை அவர்களிடமிருந்து பறித்து, ஆப்ரஹாமின் குடும்பத்தின் மற்றொரு கிளையிடம் (இஸ்மவேல் வழித்தோன்றல்கள்) கொடுக்க முடிவு செய்தான். இந்த முடிவைச் செயல்படுத்துவதற்கு முன், யூதர்கள்மீது தனது சான்றை முழுமைப்படுத்த வேண்டியது அவசியமாக இருந்தது. இந்த இறுதிச்

சான்றுக்காகவே இயேசு அனுப்பப்பட்டார். இயேசுவின் அசாதாரண பிறப்பும் அவருக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் கொடுக்கப்பட்டதும் அவர் இறைவனால் அனுப்பப்பட்டவர் என்பதையும், இறைவனின் சார்பாகப் பேசுகிறார் என்பதையும் யூதர்களுக்குச் சந்தேகமின்றிப் புரியவைக்க வேண்டும் என்பதற்காகவே. இயேசு இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களைச் செய்தது மட்டுமல்லாமல், சான்றுகளுடன் தாக்கம் ஏற்படுத்தும் வகையில் பேசினார். அவருடைய காலத்தில் யாரும் அவரைப் போலப் பேச ஆற்றல் பெற்றிருக்கவில்லை. அவர் முதன்முதலில் எருசலேம் ஆலயத்தில் பேசியபோது, யூத அறிஞர்கள் அவரது வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள் (லூக்கா 2:48). அவரது அற்புதமான ஆளுமையும் அவரது வியக்கத்தக்க வார்த்தைகளின் விளைவும் காரணமாகத்தான் அவர் தந்தை இல்லாமல் பிறந்த போதிலும், அவரது முன்னிலையில் இந்த விஷயத்தில் யாரும் அவரைக் கேள்வி கேட்கத் துணியவில்லை. யூதர்கள் எந்த அளவுக்கு உணர்ச்சியற்றவர்களாகவும், கலகக்காரர்களாகவும் மாறிவிட்டிருந்தனர் என்றால், அவர்களிடம் மிகவும் வெளிப்படையான சான்றுகள் முன்வைக்கப்பட்ட போதிலும், அவர்கள் அவற்றினை ஏற்க மறுத்துவிட்டனர். "நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் உறுதியாக இவற்றில் உங்களுக்குச் சான்று உள்ளது." அதாவது முன்வைக்கப்படும் சான்று, அதுவே முழுமையானதாக இருந்தாலும், நம்பும் மனப்பான்மை கொண்ட ஒருவருக்கு மட்டுமே அது சான்றாக மாறும். தங்கள் சொந்த எண்ணங்களின் மூடுபனிக்கு வெளியே வந்து சான்றினைப் பரிசீலிக்கும் திறன் கொண்ட ஒருவரால்தான் அது முடியும். சுயகௌரவம், உண்மையை ஏற்றுக்கொள்ளத் தடையாக மாறாத அளவுக்கு அவருடைய இயல்பு உயிருடன் இருக்கும்.

فَلَمَّآ اَحَسَّ عِيْسٰى مِنْهُمُ الْكُفْرَ قَالَ مَنْ اَنْصَارِيْٓ اِلَى اللّٰهِ ۭ قَالَ
الْحَوَارِيُّوْنَ نَحْنُ اَنْصَارُ اللّٰهِ ۚ اٰمَنَّا بِاللّٰهِ ۚ وَاشْهَدْ بِاَنَّا مُسْلِمُوْنَ ۝۵۲
رَبَّنَآ اٰمَنَّا بِمَآ اَنْزَلْتَ وَاتَّبَعْنَا الرَّسُوْلَ فَاكْتُبْنَا مَعَ الشّٰهِدِيْنَ ۝۵۳
وَمَكَرُوْا وَمَكَرَ اللّٰهُ ۭ وَاللّٰهُ خَيْرُ الْمٰكِرِيْنَ ۝۵۴ۧ اِذْ قَالَ اللّٰهُ ۝۵۵
يٰعِيْسٰٓى اِنِّىْ مُتَوَفِّيْكَ وَرَافِعُكَ اِلَىَّ وَمُطَهِّرُكَ مِنَ الَّذِيْنَ
كَفَرُوْا وَجَاعِلُ الَّذِيْنَ اتَّبَعُوْكَ فَوْقَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِلٰى
يَوْمِ الْقِيٰمَةِ ۚ ثُمَّ اِلَىَّ مَرْجِعُكُمْ فَاَحْكُمُ بَيْنَكُمْ فِيْمَا كُنْتُمْ فِيْهِ

تَخْتَلِفُوْنَ ﴿٥٥﴾ فَاَمَّا الَّذِيْنَ كَفَرُوْا فَاُعَذِّبُهُمْ عَذَابًا شَدِيْدًا
فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ ۫ وَمَا لَهُمْ مِّنْ نّٰصِرِيْنَ ﴿٥٦﴾ وَاَمَّا الَّذِيْنَ
اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ فَيُوَفِّيْهِمْ اُجُوْرَهُمْ ؕ وَاللّٰهُ لَا يُحِبُّ
الظّٰلِمِيْنَ ﴿٥٧﴾ ذٰلِكَ نَتْلُوْهُ عَلَيْكَ مِنَ الْاٰيٰتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ ﴿٥٨﴾

[52](எனினும்) இயேசு அவர்களின் மறுப்பைக் கண்டபோது, ''இறைவழியில் எனக்கு உதவிசெய்வோர் யார்?'' என்று வினவினார். அவரின் சீடர்கள், ''நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்களாக இருக்கிறோம். நாங்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். நாங்கள் கீழ்ப்படிந்தவர்களாக இருக்கிறோம் என்பதற்கு நீங்களே சாட்சியாக இருங்கள்'' என்றனர். [53]''எங்கள் இறைவா! நீ அருளியதன் மீது நம்பிக்கைகொண்டு தூதரையும் பின்பற்றினோம். எனவே சாட்சியளிப்போருடன் எங்களையும் நீ சேர்த்துப் பதிவு செய்வாயாக!'' என்றும் கூறினர். [54](இயேசுவை மறுத்த) அவர்கள் (அவரைக் கொல்லச்) சூழ்ச்சி செய்தனர். அல்லாஹ்வும் (அவர்களுக்கு எதிராகச்) சூழ்ச்சி செய்தான். சூழ்ச்சி செய்வோரில் அல்லாஹ்வே மிகச் சிறந்தவன். [55]''இயேசுவே! நான் உம்மைக் கைப்பற்றி என் பக்கம் உயர்த்திக் கொள்வேன். மறுப்பாளர்களிடமிருந்து உம்மைத் தூய்மைப்படுத்துவேன். மறுமை நாள்வரை உம்மைப் பின்பற்றுவோரை மறுப்பாளர்களைவிட மேலோங்கச் செய்வேன். இறுதியில் நீங்கள் அனைவரும் என்னிடமே திரும்ப வேண்டியுள்ளது. அப்போது நீங்கள் முரண்பட்டுக் கொண்டிருந்தவற்றில் நான் உங்களிடையே தீர்ப்பளிப்பேன்'' என்று அல்லாஹ் கூறியதை (நபியே! நீர்) நினைவுகூர்வீராக. [56]''மறுப்பாளர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் கடும் தண்டனை அளிப்பேன். அவர்களுக்கு உதவிசெய்வோர் யாரும் இருக்கமாட்டார்கள்'' என்றும் அல்லாஹ் கூறினான். [57]நம்பிக்கைகொண்டு நற்செயல்கள் புரிந்தோருக்கு அவர்களின் கூலியை அல்லாஹ் முழுமையாக வழங்கிவிடுவான். தீவினைபுரிவோரை அல்லாஹ் நேசிக்கமாட்டான். [58](நபியே!) நாம் எடுத்துரைக்கும் இவை (இறை)வசனங்களும் ஞானம் நிறைந்த அறிவுரைகளுமாகும்.

இஸ்ராயீலின் மக்களைச் சார்ந்த பெரிய மனிதர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். பெரிய மனிதர்களின் கைகளில் எல்லா வகையான வளங்களும் இருக்கும். மேலும், அவர்கள் மதத்தின் இருக்கைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதால், பொதுமக்களின் பார்வையில் அவர்கள் மதத்தின் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். எனவே, அவர்கள் யாரை மறுக்கிறார்களோ அவன் வாழ்க்கை வளங்கள் பறிபோவது மட்டுமல்லாமல், சத்தியத்திற்காக எல்லாவற்றையும் இழந்த பிறகும், மக்களின் பார்வையில் ஒரு மதப்பகைவனாகவும் மாறி நிற்கிறான். இதுபோன்ற சமயங்களில், ஒருவன் சத்தியத்தின் அழைப்பாளருக்குத் துணை நிற்பது மிகவும் கடுமையான செயல். இது சந்தேகங்களும் எதிர்ப்புகளும் நிறைந்த பொதுச் சூழலில் அழைப்பாளருடைய நம்பகத்தன்மைக்குச் சாட்சியமளிப்பதாகும். இது சத்தியம் தனியாக விடப்பட்டுவிடும்போது சத்தியத்திற்குத் துணை நிற்பதாகும்.

சத்தியம் அதன் கலப்படமற்ற வடிவில் எழும்போது அதற்கு முரணாக வாழ்வோர் மக்களிடையே மரியாதைக்குரிய நிலையில் இருப்போர் சத்தியத்தின் அடி தங்கள் மீது விழுவதை உணர்கிறார்கள். அவர்கள் அழைப்பாளரை அடக்க எழுந்து நிற்கிறார்கள். பல்வேறு விதமான சச்சரவுகளை எழுப்பிப் பொதுமக்களை அவருக்கு எதிராகத் தூண்டிவிடுகிறார்கள். இறுதியில் அவர்களின் வலிமையைப் பயன்படுத்தி அவரை அழிக்கத் திட்டமிடுகின்றனர். ஆனால் இறைவனுடைய ஆதரவு எப்போதும் அழைப்பாளருடன் இருக்கும், எனவே எந்த எதிர்ப்பும் அவரது குரலை அடக்குவதில் வெற்றி பெறுவதில்லை. எதிர்ப்பையும் மீறி அவர் தமது பணியை முடிக்கிறார். சத்தியத்திற்கான அழைப்பை எதிர்ப்பவர்கள் இறைவனின் பார்வையில் கலகக்காரர்கள். ஏனென்றால் அவர்கள் மக்கள் சொர்க்கத்திற்குச் செல்வதைத் தடுக்கிறார்கள். இறையடியார்கள் இறைவனின் சொர்க்கத்திற்குச் செல்லத் தடுப்பதை விடப் பெரிய தீங்கு எதுவும் இருக்க முடியாது.

இயேசு யூத சமூகத்தில் பிறந்தார், ஆனால் யூதர்கள் அவருடைய தூதுத்துவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் அன்னாரைக் கொன்றுவிட வேண்டும் என்று அவர் மீது பொய் வழக்குத் தொடுத்து, பாலஸ்தீனத்தில் உள்ள ரோமானிய நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றனர். நீதிமன்றத்தில் அவரைச் சிலுவையில் அறைய முடிவு செய்யப்பட்டது. ஆனால் ஏக இறைவன் அவரை வானத்திற்கு உயர்த்தினான். ரோமானிய வீரர்கள் அவருடைய சாயலில் இருந்த இன்னொரு மனிதனைச் சிலுவையில் அறைந்தார்கள். யூதர்களின் இந்தக் குற்றத்தின் காரணமாக, இயேசுவை நம்பும் சமூகம் நியாயத்தீர்ப்பு நாள் வரை யூத சமூகத்தை விட மேலோங்கி நிற்கும் என்று இறைவன் முடிவு செய்துவிட்டான். இது யூதர்கள்,

கிறிஸ்தவர்கள் ஆகிய இரு பிரிவினருடனும் இறைவனின் உலகிற்குள்ள விவகாரம் ஆகும். மறுமையின் விவகாரம் இதிலிருந்து வேறுபட்டது, அது இறைவனின் பொதுவான வழிமுறையின் அடிப்படையில் இருக்கும்.

اِنَّ مَثَلَ عِيْسٰى عِنْدَ اللّٰهِ كَمَثَلِ اٰدَمَ ؕ خَلَقَهٗ مِنْ تُرَابٍ ثُمَّ قَالَ
لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴿٥٩﴾ اَلْحَقُّ مِنْ رَّبِّكَ فَلَا تَكُنْ مِّنَ الْمُمْتَرِيْنَ ﴿٦٠﴾
فَمَنْ حَآجَّكَ فِيْهِ مِنْۢ بَعْدِ مَا جَآءَكَ مِنَ الْعِلْمِ فَقُلْ تَعَالَوْا
نَدْعُ اَبْنَآءَنَا وَاَبْنَآءَكُمْ وَنِسَآءَنَا وَنِسَآءَكُمْ وَاَنْفُسَنَا
وَاَنْفُسَكُمْ ۟ ثُمَّ نَبْتَهِلْ فَنَجْعَلْ لَّعْنَتَ اللّٰهِ عَلَى الْكٰذِبِيْنَ ﴿٦١﴾ اِنَّ
هٰذَا لَهُوَ الْقَصَصُ الْحَقُّ ۚ وَمَا مِنْ اِلٰهٍ اِلَّا اللّٰهُ ؕ وَاِنَّ اللّٰهَ لَهُوَ
الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٦٢﴾ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ عَلِيْمٌۢ بِالْمُفْسِدِيْنَ ﴿٦٣﴾ ع ١٤

[59]உறுதியாக அல்லாஹ்வின் பார்வையில் (தந்தையின்றிப் படைக்கப்பட்ட) இயேசு ஆதமைப் போன்றவராவார். அல்லாஹ் (ஆதமாகிய) அவரை மண்ணால் படைத்தான். பின்னர் 'ஆகுக' என்று கூறினான். அவர் ஆகிவிட்டார். [60](நபியே!) இது உம் இறைவனிடமிருந்து வந்துள்ள சத்தியமாகும். எனவே நீர் ஐயம் கொள்வோரில் ஒருவராகி விடாதீர். [61](நபியே!) இது குறித்துத் தெளிவான அறிவு உம்மிடம் வந்த பின்னரும் யாரேனும் இது தொடர்பாக உம்மிடம் தர்க்கம் செய்தால் அவரிடம் நீர் கூறிவிடும்: ''வாருங்கள், எங்கள் மக்களையும் உங்கள் மக்களையும் எங்கள் பெண்களையும் உங்கள் பெண்களையும் அழைத்து இன்னும் எங்களையும் உங்களையும் சேர்த்து 'பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்' என்று நாம் ஒன்றுசேர்ந்து இறைஞ்சி வேண்டுவோம்.'' [62]உறுதியாக இதுதான் உண்மையான வரலாறாகும். அல்லாஹ்வைத்தவிர வேறு இறைவன் இல்லை. அல்லாஹ் யாவற்றினும் வல்லவன்; ஞானம் மிக்கவன். [63]அவர்கள் புறக்கணித்தால் - அல்லாஹ் குழப்பவாதிகளை நன்கறிந்தவன்.

இயேசு கடவுளின் மகன் என்பது கிறிஸ்தவர்கள் நம்பிக்கை. இயேசு சாதாரண மனிதர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவர் என்பது

அவர்களுடைய கூற்று. அவருடைய பிறப்பு பொதுவான இனப்பெருக்க விதிக்கு உட்படாமல், அதற்கு எதிராகத் தந்தையின் தொடர்பில்லாமல் நிகழ்ந்தது. பிறகு எப்படி சாதாரண மனிதர்களைப் போல அவரை ஒரு மனிதர் என்று அழைக்க முடியும்? அவர் பிறந்த விதமே அவர் மனித நிலைக்கு அப்பாற்பட்டவர் என்பதைக் குறிப்பிடுகிறது. அவர் மனுஷகுமாரர் அல்ல, தேவனுடைய குமாரர் (என்பது கிறிஸ்தவர்கள் வாதம்). அவர்களுடைய கேள்விக்கான பதில் முதல் மனிதரின் (ஆதாமின்) படைப்பில் இருப்பதாகக் கூறப்பட்டது. ஆதாம்தான் முதல் மனிதர் என்று நீங்களே நம்புகிறீர்கள். அவர் வழக்கமான முறையில் ஆண் பெண் உறவின் மூலம் உருவாகவில்லை. மாறாக, அவர் இறைக் கட்டளையின் கீழ் நேரடியாகப் பிறந்தார். தந்தை இல்லாமல் பிறந்ததால் ஆதாமைக் கடவுளின் மகன் என்று சொல்வதில்லை எனில், தந்தை இல்லாமல் பிறந்த இயேசு எப்படி கடவுளின் மகனாக இருக்க முடியும்?

குர்ஆன் இறக்கியருளப்பட்ட காலத்தில் நஜ்ரான்(ஏமன்) கிறிஸ்தவ மதத்தின் முக்கிய மையமாக இருந்தது. அவர்களின் அறிஞர்கள், தலைவர்கள் ஆகியோரின் ஒரு குழு ஹிஜ்ரி 9 இல் மதீனாவிற்கு வந்து, கிறிஸ்தவ நம்பிக்கைகள் குறித்து இறுதித்தூதருடன் விவாதித்தது. இறைத்தூதர் அவர்களுக்கு முன் பல்வேறு சான்றுகளை முன்வைத்தார். உதாரணமாக, இறைவன் என்றென்றும் உயிர்த்திருக்கும் ஒருவன். அவனுக்கு ஒருபோதும் இறப்பு வரப்போவதில்லை. அப்படி இருக்கும்போது, கிறிஸ்து எப்படி இறைவனின் மகனாக இருக்க முடியும். ஆனால் இயேசுவின் மீது மரணம் நிகழப்போகிறது. **وان عيسىٰ يأتى عليه الفناء** (பஹ்ஜத் அல்-மஹாஃபில் வ பக்யத் அல்-அமாதில், யஹ்யா பின் அபூபக்கர் அல் ஆமிரி, தொகுதி. 2, ப. 15.)

இறுதித்தூதர் அவர்களின் வாதங்களுக்கு அவர்களிடம் பதில் இல்லை. ஆனால் அவர்கள் தொடர்ந்து முரணாகவே வாதிட்டுவந்தனர். அவர்கள் ஆதாரங்களை ஏற்கப்போவதில்லை என்பதைக் கண்டபோது, நபி (ஸல்) அவர்களை நோக்கி ஓர் இறுதிச் சவாலை முன்வைத்தார். "நீங்கள் சரியான பாதையில் இருப்பதாக நம்பினால், 'முபாஹலா'வுக்கு (ஒருவரையொருவர் சபிப்பதற்கு)த் தயாராகுங்கள்" என்று அவர் கூறினார்.

மறுநாள் காலை இறைத்தூதர் வெளியே சென்றார்கள். அவருடன் அவரது இரண்டு பேரர்களான ஹசன் மற்றும் ஹுசைன் ஆகியோர் இருந்தனர். அவர்களுக்குப் பின்னால் ஃபாத்திமா (ரலி) அவர்களும், அவர்களுக்குப் பின்னால் நபித்தோழர் அலி (ரலி) அவர்களும் இருந்தனர். இதைக் கண்டு நஜ்ரானின் கிறிஸ்தவர்கள் திகிலடைந்து, தங்களுக்குள் கலந்தாலோசிக்க நேரம் கேட்டார்கள். ஒரு தனி ஆலோசனையில், அவர்களின் அறிஞர்களில் ஒருவர், "இஸ்மாயீலின் வழித்தோன்றல்களில் ஓர் இறைத்தூதரை அனுப்புவதாக ஏக இறைவன் வாக்குறுதி அளித்திருப்பதை நீங்கள் அறிவீர்கள்" என்று

கூறினார். "இவர் அதே இறைத்தூதராக இருக்க வாய்ப்புண்டு. பின்னர், ஓர் இறைத்தூதரோடு 'முபாஹலா' செய்ததன் விளைவாக, உங்கள் குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் அனைவரும் அழிந்து போகலாம், அதன் தாக்கம் தலைமுறை தலைமுறையாக இருக்கும். இறைவன் மீது ஆணையாக, நான் எத்தகைய முகங்களைக் காண்கிறேன் என்றால், அவர்கள் இறைஞ்சி வேண்டினால், மலைகள் கூட, தங்கள் இடங்களிலிருந்து நகர்ந்துவிடும். எனவே, அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டு நமது குடியிருப்புகளை நோக்கிச் செல்வது நமக்கு நல்லது."

قُلْ يٰٓاَهْلَ الْكِتٰبِ تَعَالَوْا اِلٰى كَلِمَةٍ سَوَآءٍۢ بَيْنَنَا وَبَيْنَكُمْ
اَلَّا نَعْبُدَ اِلَّا اللّٰهَ وَلَا نُشْرِكَ بِهٖ شَيْـًٔا وَّلَا يَتَّخِذَ بَعْضُنَا
بَعْضًا اَرْبَابًا مِّنْ دُوْنِ اللّٰهِ ؕ فَاِنْ تَوَلَّوْا فَقُوْلُوا اشْهَدُوْا
بِاَنَّا مُسْلِمُوْنَ ﴿٦٤﴾ يٰٓاَهْلَ الْكِتٰبِ لِمَ تُحَآجُّوْنَ فِيْٓ اِبْرٰهِيْمَ
وَمَآ اُنْزِلَتِ التَّوْرٰىةُ وَالْاِنْجِيْلُ اِلَّا مِنْۢ بَعْدِهٖ ؕ اَفَلَا
تَعْقِلُوْنَ ﴿٦٥﴾ هٰٓاَنْتُمْ هٰٓؤُلَآءِ حَاجَجْتُمْ فِيْمَا لَكُمْ بِهٖ عِلْمٌ فَلِمَ
تُحَآجُّوْنَ فِيْمَا لَيْسَ لَكُمْ بِهٖ عِلْمٌ ؕ وَاللّٰهُ يَعْلَمُ وَاَنْتُمْ لَا
تَعْلَمُوْنَ ﴿٦٦﴾ مَا كَانَ اِبْرٰهِيْمُ يَهُوْدِيًّا وَّلَا نَصْرَانِيًّا وَّلٰكِنْ
كَانَ حَنِيْفًا مُّسْلِمًا ؕ وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ ﴿٦٧﴾ اِنَّ
اَوْلَى النَّاسِ بِاِبْرٰهِيْمَ لَلَّذِيْنَ اتَّبَعُوْهُ وَهٰذَا النَّبِيُّ
وَالَّذِيْنَ اٰمَنُوْا ؕ وَاللّٰهُ وَلِيُّ الْمُؤْمِنِيْنَ ﴿٦٨﴾ وَدَّتْ
طَّآئِفَةٌ مِّنْ اَهْلِ الْكِتٰبِ لَوْ يُضِلُّوْنَكُمْ ؕ وَمَا يُضِلُّوْنَ
اِلَّآ اَنْفُسَهُمْ وَمَا يَشْعُرُوْنَ ﴿٦٩﴾ يٰٓاَهْلَ الْكِتٰبِ لِمَ
تَكْفُرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ وَاَنْتُمْ تَشْهَدُوْنَ ﴿٧٠﴾ يٰٓاَهْلَ الْكِتٰبِ
لِمَ تَلْبِسُوْنَ الْحَقَّ بِالْبَاطِلِ وَتَكْتُمُوْنَ الْحَقَّ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿٧١﴾ ع ١٥

[64](நபியே! மேலும்) நீர் கூறும்: ''வேதமுடையோரே! அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் நாம் வணங்கக் கூடாது; அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது; நம்முள் எவரும் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் இறைவனாகக் கொள்ளக்கூடாது என்ற எங்களுக்கும் உங்களுக்கும் பொதுவான கோட்பாட்டுக்கு வாருங்கள்'' அவர்கள் புறக்கணித்தால், ''நாங்கள் இறைவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருக்கிறோம் என்பதற்கு நீங்களே சாட்சியாக இருங்கள்'' என்று (அவர்களிடம்) கூறிவிடுங்கள். [65]வேதமுடையோரே! நீங்கள் ஆப்ரஹாமைப் பற்றி ஏன் தர்க்கம் புரிகிறீர்கள்? அவருக்குப் பின்னர்த்தான் தவ்ராத்தும் இன்ஜீலும் அருளப்பட்டன. நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்களா? [66]நீங்கள் அறிந்த விஷயத்தில்(கூட, வீணாகத்) தர்க்கம் புரிந்து கொண்டிருந்தீர்கள். இப்போது நீங்கள் அறியாத (விஷயத்)தைப் பற்றி ஏன் தர்க்கம் புரிகிறீர்கள்? அல்லாஹ்வே அறிவான். நீங்கள் அறியமாட்டீர்கள். [67]ஆப்ரஹாம் யூதராகவோ கிறிஸ்தவராகவோ இருந்ததில்லை. மாறாக அவர் நேர்மையாளராகவும் இறைவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்தவராகவும் இருந்தார். இணைவைப்பாளர்களில் ஒருவராக அவர் இருந்ததில்லை. [68]மனிதர்களில் ஆப்ரஹாமுக்கு மிகவும் நெருங்கியவர்கள் அவரைப் பின்பற்றுபவர்களும் இந்தத் தூதரும் இவர்மீது நம்பிக்கை கொண்டவர்களுமே ஆவர். அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் பாதுகாவலனாக இருக்கிறான். [69](ஓரிறை நம்பிக்கையாளர்களே!) வேதமுடையோரில் ஒரு சாரார் எப்படியாவது உங்களை வழிகெடுத்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், அவர்கள் தம்மைத்தாமே வழிகெடுத்துக் கொள்கிறார்கள். ஆயினும் (இதை) அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. [70]வேதமுடையோரே! நீங்கள் சாட்சியாக இருந்துகொண்டே அல்லாஹ்வின் வசனங்களை ஏன் மறுக்கிறீர்கள்? [71]வேதமுடையோரே! நீங்கள் ஏன் உண்மையைப் பொய்யுடன் கலக்கிறீர்கள்? அறிந்துகொண்டே ஏன் உண்மையை மறைக்கிறீர்கள்?

ஏகத்துவம் (தவ்ஹீத்) என்பது இறைத்தூதர்களின் அடிப்படையான போதனை மட்டுமல்ல. மாறாக அது தோரா, பைபிள் ஆகியவற்றின் நம்பகத்தன்மையற்ற தற்போதைய பதிப்புகளில்கூட ஒரு நிறுவப்பட்ட உண்மையாக உள்ள ஒன்று. இந்த நிறுவப்பட்ட தரத்தின்படி மதிப்பீடு செய்யப்பட்டால், இஸ்லாம்தான் சரியான மார்க்கம் என்பது

நிரூபணமாகிறது. யூத மதமோ கிறிஸ்தவ மதமோ அல்ல. ஏகத்துவம் (தவ்ஹீத்) என்பதன் பொருள் இறைவன் ஒருவனே; அவனை மட்டுமே வணங்க வேண்டும்; அவனுடன் யாரையும் இணையாக்கக்கூடாது; பிரபஞ்சத்தின் உரிமையாளனுக்கு மட்டுமே உரிய இடத்தை எந்த மனிதனுக்கும் வழங்கக் கூடாது என்பதாகும். இந்த ஏகத்துவக் கொள்கை அதன் தூய வடிவத்தில் குர்ஆனிலும் இஸ்லாத்திலும் மட்டுமே பாதுகாக்கப்பட்டிருக்கிறது. மற்ற மதங்கள், கோட்பாட்டளவில் ஏகத்துவத்தை ஒப்புக்கொண்டாலும், ஏகத்துவத்திற்கு முற்றிலும் முரணான அனைத்தையும் நடைமுறையில் மேற்கொண்டன. இறைவனைப் 'பரிபாலிப்பவன்' என்று வாயளவில் அழைத்துக்கொண்டே, நடைமுறையில் அவர்கள் தங்கள் இறைத்தூதர் களுக்கும் பெரியவர்களுக்கும் 'பரிபாலிப்பவர்' என்ற தகுதியை வழங்கினர்.

மக்காவின் இணைவைப்பாளர்கள் தங்கள் மதத்தை ஆப்ரஹாமிய மதம் என்று அழைத்தனர். யூத கிறிஸ்தவர்களும் தங்கள் மத வரலாற்றை இறைத்தூதர் ஆப்ரஹாமுடன் இணைத்துவந்தனர். இதைப்போலவே எல்லாக் காலத்தவரும் தங்கள் இறைத்தூதர்கள் பெரியவர்கள் ஆகியோரின் பெயர்களைத் தங்கள் சொந்த மதப் பிற்சேர்க்கைகளுக்கும் புரட்டுகளுக்கும் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இப்படியாகக் காலப்போக்கில், அவர்கள் உருவாக்கிய மதம் மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகிறது, அவர்கள் அதையே உண்மையான மதமாகக் கருதத் தொடங்குகிறார்கள். இந்தச் சூழ்நிலையில், உண்மையான – கலப்படமற்ற மார்க்கத்திற்கான அழைப்பு எழும்போது, அதன் எதிர்ப்பாளர்கள் அதை நம்பத் தகுதியற்றது என நிரூபிக்க எளிய வழியாக, அதனை முன்னோர்களின் மதத்திற்கு எதிரானது என்று பொதுமக்களுக்குள் அவதூறு பரப்பிவிடுகின்றனர். 'முன்னோர்களின்' மதத்தின் உண்மையான பிரதிநிதியாக இருப்பவர், முன்னோர்களின் பெயராலேயே மறுக்கப்படுகிறார். இது உண்மையைப் பொய்யின் போர்வையால் மூடி மறைப்பது ஆகும். அதாவது, தன்னளவில் உண்மையற்ற கருத்துக்களைச் சொல்வதாகும். பொதுமக்களும் அவற்றைப் பகுத்தறிந்து கொள்ள இயலாத காரணத்தால் அவற்றை உண்மை என்று கருதுகிறார்கள். உண்மையான 'முன்னோர்' மதத்தினின்றும் விலகிச் செல்கிறார்கள். ஒரு 'முழுமையாகக் கீழ்ப்படிந்தவர்' (முஸ்லிம் ஹனீஃப்) எனப்படுபவர் மனதை ஒருமுகப்படுத்தி ஏகத்துவப் பாதையைப் பின்பற்றுபவர் ஆவார். ஹனீஃப் அல்லாதவர் வலது, இடது புறத்தில் இருக்கின்ற பாதையில் விலகிச் செல்பவர். அவர் மார்க்கத்தின் துணை அம்சம் ஒன்றை எடுத்துக்கொண்டு அதுவே எல்லாமாக மாறும் அளவுக்கு அதை விரிவுபடுத்துகிறார். இன்னொரு துணை அம்சத்தை எடுத்துக்கொண்டு பல விளக்க விவரங்களைச் சேர்த்து, அதுவே முழு உண்மையும் என்பது போலத் தோன்றச் செய்கிறார். மக்கள் மார்க்கத்தின்

துணை அம்சங்களை முழு மார்க்கமாகக் கருதத் தொடங்கி விடுகின்றனர், மேலும் ஏகத்துவத்தின் நேரான பாதையைக் கைவிட்டு, வெவ்வேறு திசைகளில் ஓடத் தொடங்கிவிடுகின்றனர்.

وَقَالَتْ طَّآىِٕفَةٌ مِّنْ اَهْلِ الْكِتٰبِ اٰمِنُوْا بِالَّذِيْٓ اُنْزِلَ عَلَى
الَّذِيْنَ اٰمَنُوْا وَجْهَ النَّهَارِ وَاكْفُرُوْٓا اٰخِرَهٗ لَعَلَّهُمْ يَرْجِعُوْنَ ﴿٧٢﴾
وَلَا تُؤْمِنُوْٓا اِلَّا لِمَنْ تَبِعَ دِيْنَكُمْ ؕ قُلْ اِنَّ الْهُدٰى هُدَى اللّٰهِ ۙ
اَنْ يُّؤْتٰٓى اَحَدٌ مِّثْلَ مَآ اُوْتِيْتُمْ اَوْ يُحَآجُّوْكُمْ عِنْدَ رَبِّكُمْ ؕ
قُلْ اِنَّ الْفَضْلَ بِيَدِ اللّٰهِ ۚ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ
عَلِيْمٌ ﴿٧٣﴾ ۙ يَّخْتَصُّ بِرَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ﴿٧٤﴾
وَمِنْ اَهْلِ الْكِتٰبِ مَنْ اِنْ تَاْمَنْهُ بِقِنْطَارٍ يُّؤَدِّهٖٓ اِلَيْكَ ۚ
وَمِنْهُمْ مَّنْ اِنْ تَاْمَنْهُ بِدِيْنَارٍ لَّا يُؤَدِّهٖٓ اِلَيْكَ اِلَّا مَا دُمْتَ
عَلَيْهِ قَآئِمًا ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ قَالُوْا لَيْسَ عَلَيْنَا فِى الْاُمِّيّٖنَ سَبِيْلٌ ۚ
وَيَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ وَهُمْ يَعْلَمُوْنَ ﴿٧٥﴾ بَلٰى مَنْ اَوْفٰى
بِعَهْدِهٖ وَاتَّقٰى فَاِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَّقِيْنَ ﴿٧٦﴾

[72]வேதமுடையோரில் ஒரு சாரார், (தங்களுக்குள்) ''நம்பிக்கையாளர்களுக்கு அருளப்பட்டதன் மீது காலையில் நம்பிக்கைகொண்டு மாலையில் மறுத்துவிடுங்கள். இதனால் அவர்கள் (குழப்பத்தில்) தம் நம்பிக்கையைவிட்டுத் திரும்பிவிடக் கூடும். [73]உங்கள் மார்க்கத்தைப் பின்பற்றுவோரைத்தவிர வேறு யாரையும் நம்பாதீர்கள்'' என்று கூறிக்கொள்கிறார்கள். (நபியே!) ''அல்லாஹ் காட்டியதே நேர்வழியாகும்'' என்று நீர் கூறும். அவர்கள் இவ்வாறு கூறுவதற்கெல்லாம் காரணம், அவர்கள் (தங்களுக்குள்) ''உங்களுக்குக் கொடுக்கப்பட்டதைப் போல மற்றவர்களுக்கும் ஏன் கொடுக்கப்பட்டது? அல்லது உங்கள் இறைவனிடம் அவர்கள் உங்களைவிட மேலோங்கி விட்டார்களா?'' என்று பேசிக் கொள்வதேயாகும். (நபியே!)

நீர் கூறும்: ''சிறப்பு அனைத்தும் அல்லாஹ்வின் கையிலேயே உள்ளன. தான் விரும்பியவருக்கு அதனை அவன் வழங்குகிறான். அல்லாஹ் தாராளமானவன்; முற்றும் அறிந்தவன். [74]அவன் தான் விரும்பியோரைத் தன் அருள் வழங்கத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். அல்லாஹ் மாபெரும் அருளாளன் ஆவான். [75]வேதமுடையோர்களில் சிலர் இருக்கின்றனர். அவர்களிடம் (நபியே! நீர்) ஒரு பொற்குவியலையே ஒப்படைத்தாலும் (கேட்கும்போது) அதனை அவர்கள் (குறைவின்றித்) திரும்பச் செலுத்தி விடுவார்கள். அவர்களில் (வேறு) சிலர் இருக்கின்றனர். அவர்களிடம் நீர் ஒரேயொரு (வெள்ளி) நாணயத்தை நம்பி ஒப்படைத்தால்கூட, அதற்காக நீர் விடாப்பிடியாக நின்றாலொழிய அதனை அவர்கள் திருப்பித் தரமாட்டார்கள். இதற்குக் காரணம் ''(வேதமுடையோர் அல்லாத) எழுதப்படிக்கத் தெரியாதோர் விஷயத்தில் நாங்கள் குற்றஞ்சாட்டப்பட மாட்டோம்'' என்று அவர்கள் கூறிவந்ததே ஆகும். அவர்கள் அறிந்துகொண்டே (தங்களைக் குறை காணமாட்டான் என) அல்லாஹ்வின் மீது பொய்யுரைக்கின்றனர். [76]மாறாக எவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றி இறைவனுக்கு அஞ்சி நடக்கிறாரோ அத்தகைய இறையச்சமுடையோரை உறுதியாக அல்லாஹ் நேசிக்கிறான்.

ஒரு சமூகத்தில் இறைத்தூதர்களும் நல்லோர்களும் பிறந்து அந்தச் சமூகத்திற்கிடையே ஒரு காலம் வரை இறைமார்க்கம் பேசுபொருளாக இருந்திருந்தால் பெரும்பாலும் அந்த சமூகம் தன்னையும் சத்தியத்தையும் ஒன்றாகக் கருதுகின்ற தவறான புரிதலுக்கு ஆளாகி விடுகிறது. அது இறைவழிகாட்டுதலை ஒரு சமூகம் சார்ந்த விஷயமாகக் கருதிக் கொள்கிறதே அன்றி, கொள்கை சார்ந்த விஷயமாக அல்ல. யூதர்களின் நிலையும் இப்படித்தான் இருந்தது. வரலாற்றுப் பாரம்பரியங்களின் தாக்கத்தால் அவர்களின் மனம், எங்கள் குழுவில் இருப்பவன் நேர்வழியில் இருக்கிறான், எங்கள் குழுவிற்கு வெளியே இருப்பவன் நேர்வழியில் இல்லை என்ற நிலைப்பாட்டிற்கு வந்துவிட்டது. இப்படி சத்தியத்தை ஒரு சமூகம் சார்ந்த விஷயமாகக் கருதும் மக்கள் தங்கள் சமூகத்திற்கு வெளியே உதித்த சத்தியத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராவதில்லை. அவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள், சத்தியம் என்பது இறைவனிடமிருந்து வரும் ஒன்று, எந்தவொரு நபரிடமிருந்தோ, குழுவிடமிருந்தோ கிடைக்கப்பெறுவது அல்ல. அவர்கள் தங்களை இறைவனின் மார்க்கம் என்று அழைத்துக் கொண்டாலும், அவர்களின் மதம் உண்மையில்

இனக்குழுவாதமே அன்றி இறைவழிபாடு அல்ல. அவர்களுடைய இந்தக் குணம் அவர்களுடைய கண்களில் ஒரு திரையைப் போட்டுவிடுகிறது, அதன் காரணமாக அவர்களால் தங்கள் சொந்தச் சமூகத்திற்கு வெளியே யாருடைய சிறப்பையும் முதிர்ச்சியையும் காண முடிவதில்லை. மிக மிகத் தெளிவான வாதங்கள் முன்வைக்கப்பட்ட பிறகும், அவர்கள் அதை சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறார்கள். தங்கள் வட்டத்திற்கு வெளியே எழும் சத்திய அழைப்புக்கு அவர்கள் கடுமையான பகைவர்களாக மாறுகிறார்கள்; இரட்டை நிலைப்பாட்டு அணுகுமுறையை மேற்கொள்வதன் மூலம் அதை ஒழித்துக்கட்ட முயற்சிசெய்கிறார்கள். அவர்கள் ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்பி, அதன் நம்பகத்தன்மையை மக்கள் சந்தேகிக்கும் படி செய்கிறார்கள். இறைவனின் சட்டத்திற்கு முற்றிலும் எதிராக, அவர்கள் நற்பண்புகளை இரண்டு தரங்களாகப் பிரிப்பதை நியாயப்படுத்திக் கொள்கின்றனர். ஒன்று தங்கள் சொந்தக் குழுவிற்கானது; மற்றொன்று அந்நியர்களுக்கானது.

மார்க்கத்தின் பிரதிநிதித்துவத்திற்காக ஒருவரை ஏற்றுக்கொள்வது இறைவனின் தனிப்பட்ட அருட்கொடையாகும். அவனுடைய முடிவு சமூகச் சார்பை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுவதில்லை. இறைவன் தனது ஞானத்தின்படி யாருக்கு விரும்புகிறானோ அவர்களுக்கு இந்த நற்பாக்கியம் வழங்கப்படுகிறது. மேலும் இறைவனுடன் தன்னை இணைத்துக்கொண்டவரை இறைவன் நேசிக்கிறான். அந்த வகையில் அவனை அஞ்சுபவனுக்கு அவன் பாதுகாவலனாகவும் மாறுகிறான். அவனுடன் செய்துகொண்ட கீழ்ப்படிதலுக்கான உடன்படிக்கையை ஒருபோதும் புறக்கணிக்காத அந்த அடியானுடைய எஜமானனாகவும் மாறுகிறான். இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடியார்கள் யாரெனில் பொறுப்பை நிறைவேற்றுபவர்களும் தங்கள் வாக்குறுதிகளை மீறாதவர்களும்தாம்.

அத்தகையவர்கள் மீதுதான் இறைவனின் அருள் பொழிகிறது. மாறாக, பொறுப்பை நிறைவேற்றுவதில் கவனக்குறைவாக இருப்பவர்களுக்கும், தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பொறுப்புணர்வு இல்லாதவர்களுக்கும் இறைவனின் பார்வையில் எந்த மதிப்பும் இல்லை. அத்தகைய மக்கள் இறைவனின் அருளிலிருந்தும் உதவிகளிலிருந்தும் வெகுதூரம் விலக்கப்பட்டு விடுகிறார்கள்.

إِنَّ الَّذِيْنَ يَشْتَرُوْنَ بِعَهْدِ اللّٰهِ وَاَيْمَانِهِمْ ثَمَنًا قَلِيْلًا اُولٰٓئِكَ
لَا خَلَاقَ لَهُمْ فِي الْاٰخِرَةِ وَلَا يُكَلِّمُهُمُ اللّٰهُ وَلَا يَنْظُرُ اِلَيْهِمْ
يَوْمَ الْقِيٰمَةِ وَلَا يُزَكِّيْهِمْ ۠ وَلَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ۝ وَاِنَّ مِنْهُمْ

لَفَرِيْقًا يَّلْوٗنَ اَلْسِنَتَهُمْ بِالْكِتٰبِ لِتَحْسَبُوْهُ مِنَ الْكِتٰبِ وَمَا
هُوَ مِنَ الْكِتٰبِ ۚ وَيَقُوْلُوْنَ هُوَ مِنْ عِنْدِ اللّٰهِ وَمَا هُوَ مِنْ عِنْدِ
اللّٰهِ ۚ وَيَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ وَهُمْ يَعْلَمُوْنَ ﴿٧٨﴾ مَا كَانَ
لِبَشَرٍ اَنْ يُّؤْتِيَهُ اللّٰهُ الْكِتٰبَ وَالْحُكْمَ وَالنُّبُوَّةَ ثُمَّ يَقُوْلَ
لِلنَّاسِ كُوْنُوْا عِبَادًا لِّيْ مِنْ دُوْنِ اللّٰهِ وَلٰكِنْ كُوْنُوْا رَبّٰنِيّٖنَ
بِمَا كُنْتُمْ تُعَلِّمُوْنَ الْكِتٰبَ وَبِمَا كُنْتُمْ تَدْرُسُوْنَ ﴿٧٩﴾ وَلَا
يَاْمُرَكُمْ اَنْ تَتَّخِذُوا الْمَلٰٓئِكَةَ وَالنَّبِيّٖنَ اَرْبَابًا ؕ اَيَاْمُرُكُمْ
بِالْكُفْرِ بَعْدَ اِذْ اَنْتُمْ مُّسْلِمُوْنَ ﴿٨٠﴾ ع ۸۰

[77]அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கையையும் தங்கள் சத்தியங்களையும் அற்ப ஊதியத்திற்கு விற்றுவிடுபவர்களுக்கு மறுமையின் நன்மையில் எந்தப் பங்கும் இல்லை. மறுமை நாளில் அல்லாஹ் அவர்களுடன் பேசவும் மாட்டான்; அவர்களைப் பார்க்கவும் மாட்டான்; அவர்களைத் தூய்மைப்படுத்தவும் மாட்டான். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு. [78]அவர்களில் இப்படியும் சிலர் இருக்கின்றனர். அவர்கள் கூறுவது வேதத்தில் உள்ளதென நீங்கள் எண்ணவேண்டும் என்பதற்காக(ச் சிலவற்றைச் சேர்த்துத்) திரித்துக் கூறுகின்றனர். உண்மையில் அவர்கள் கூறுபவை வேதத்திலுள்ளவை அல்ல. இவை அல்லாஹ்விடமிருந்து வந்தவை என்று கூறுகின்றனர். உண்மையில் அவை அல்லாஹ்விடமிருந்து வந்தவை அல்ல. அவர்கள் அறிந்துகொண்டே அல்லாஹ்வின் மீது பொய்யுரைக்கின்றனர். [79]ஒரு மனிதருக்கு அல்லாஹ் வேதத்தையும் ஞானத்தையும் தூதுத்துவத்தையும் வழங்கியிருக்க, அவர் மக்களிடம் ''நீங்கள் அல்லாஹ்வை விடுத்து என் அடியார்களாகி விடுங்கள்'' என்று கூறுவது அனுமதிக்கப்பட்டதன்று. மாறாக, ''நீங்கள் வேதத்தை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதனாலும் நீங்கள் அதனைக் கற்பதனாலும் இறைவனைச் சார்ந்தவர்களாகி விடுங்கள்'' என்றே அவர் கூறுவார். [80]''நீங்கள் வானவர்களையும் தூதர்களையும் இறைவனாக்கிக் கொள்ளுங்கள்'' என்றும் அவர் உங்களுக்குக் கட்டளையிடமாட்டார். நீங்கள் இறைவன் ஒருவனுக்கே முற்றிலும்

கீழ்ப்படிந்த பிறகு அவனை மறுக்கும்படி உங்களுக்கு அவர் கட்டளையிடுவாரா என்ன?

ஒரு மனிதன் நம்பிக்கை கொள்ளும்போது, இறைவனுக்குக் கீழ்ப்படிவதாகவும், இறையடியார்கள் மத்தியில் வாழும்போது இறைவனின் சட்டம் அவனுக்கு விதித்திருக்கும் அனைத்துப் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதாகவும் இறைவனிடம் வாக்குறுதி அளிக்கிறான். இது ஓர் கட்டுப்பாடான வாழ்க்கை. இதை வாக்குறுதிக்குட்பட்ட வாழ்க்கை என்று விளக்கம் கூறலாம். இந்த வாழ்க்கையில் நிலைத்திருக்கத் தன் சுயத்தின் சுதந்திரங்களை ஒழிக்க வேண்டியிருக்கிறது; தனது சொந்த நலன்களையும், வசதிகளையும் மீண்டும் மீண்டும் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, இந்த வாக்குறுதிக்குட்பட்ட வாழ்க்கையை லாபத்தையும், இழப்பையும் கருத்தில் கொள்ளாமல் ஏற்றுக்கொள்பவரால் மட்டுமே அனுசரித்து வாழ முடியும். ஒருவன், தன் சுயம் காயமுறும் போதும், தன் உலக நலன்கள் ஆபத்தில் இருந்தாலும், இறைவனின் உடன்படிக்கையைப் புறக்கணித்து விடுகிறான்; தனது சொந்த நலன்கள், வசதிகள் ஆகியவற்றின் பக்கம் சாய்ந்து விடுகிறான்; அவன் தன் மறுமையை விலையாகக் கொடுத்து இந்த உலகத்தை வாங்கியவனைப் போலாவான். மறுமையின் அம்சத்திற்கும், உலகத்தின் அம்சத்திற்கும் இடையில் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற கேள்வி எழுந்தபோது, அவன் உலகத்தின் அம்சத்தை முன்னிலைப்படுத்தியவன். மறுமையை இவ்வளவு மதிப்பற்றதாகக் கருதும் ஒருவனால் மறுமையில் எப்படி இறைவனின் அருட்கொடைகளுக்கு உரிமை கொண்டாட முடியும்?

மறுமையை உலகியல் நோக்கத்திற்காகப் பேரம் பேசுபவர்கள் மார்க்கத்தையோ மறுமையையோ மறுப்பவர்கள் அல்லர். மாறாக, அவர்கள் மார்க்கத்தையும் மறுமையையும் முழுவதுமாக ஏற்றுக் கொண்டும் அவ்வாறு செய்கிறார்கள். பிறகு எப்படி இவ்விரண்டு முரண்பாடான மனப்பான்மைகளையும் அவர்கள் சமரசம் செய்கிறார்கள்? அதற்கான ஆதாரம் புரட்டு ஆகும். அதாவது, இறை போதனைகளுக்குச் சொந்தமாக அர்த்தங்களை அணிவித்தல். இத்தகைய மனிதர்கள் தங்கள் உலகு சார்ந்த அணுகுமுறையை மறுமை சார்ந்த - இறைவனை மையமாகக் கொண்ட அணுகுமுறையின் ஒரு வடிவமாக நியாயப்படுத்துகிறார்கள். அதற்காக மார்க்க போதனைகளை தங்கள் சொந்த உலக அணுகுமுறைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்கிறார்கள். சில நேரங்களில் இறைவனின் வார்த்தைகளை மாற்றுவதன் மூலமும், சில சமயங்களில் இறைவனின் வார்த்தைகளுக்குத் தம் சொந்தக் கருத்தைக் கற்பிப்பதன் மூலமும் இதைச் செய்கிறார்கள். அவர்கள் தங்களை மாற்றிக்

கொள்வதற்குப் பதிலாக, இறைவனின் வேதத்தை மாற்றி விடுகிறார்கள், காரணம் இறைவேதத்தில் இல்லாத ஒன்றை, அதிலுள்ள ஒன்றாக மாற்ற வேண்டும் என்பதற்காகவும், தங்கள் இறைவனைக் கொண்டிராத வாழ்க்கையை இறைவனைக் கொண்டிருக்கும் வாழ்க்கையாக நிரூபிக்கவும், அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். இறைவனின் பார்வையில் மிகவும் மோசமான குற்றம், இறைவன் சொல்லாத ஒன்றை அவன் மீது இட்டுக் கட்டிச் சொல்வதாகும்.

ஒரு போதனையின் உண்மைத்தன்மைக்கான எளிய உறுதியான அடையாளம், அது அடியார்களை இறைவனுடன் இணைக்க வேண்டும்; மக்களின் அச்சம், அன்பு ஆகிய உணர்வுகளை எழுப்பி, அவர்களை இறைவனின் பக்கம் திருப்ப வேண்டும் என்பதுதான். இதற்கு மாறாக, ஆளுமைகளை வழிபடுவதையோ வேறு ஏதேனும் ஒன்றை வழிபடுவதையோ வளர்க்கும் போதனை- இறைவனல்லாத வேறு ஒன்றினை மனிதனின் நுட்பமான உணர்ச்சிகளின் கவன ஈர்ப்பு மையமாக ஆக்குகின்ற போதனை - முழுக்க முழுக்கப் பொய்யான வழிபாட்டு முறையாகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அது தன்மீது சத்தியம் என்று முத்திரை குத்திக் கொண்டிருந்தாலும் சரியே.

மனிதனுக்குள் இறைவன் சார்ந்த மனத்தெளிவை உயிர்ப்பிப்பதே குர்ஆனின் நோக்கமாகும். குர்ஆனைப் படிப்பதன் மூலம் யாருடைய இறைவனைச் சார்ந்த மனத்தெளிவு மீண்டும் புத்துயிர் பெறுகிறதோ அவரே உண்மையில் குர்ஆனின் வாசகர்.

وَاِذْ اَخَذَ اللّٰهُ مِيْثَاقَ النَّبِيّٖنَ لَمَآ اٰتَيْتُكُمْ مِّنْ كِتٰبٍ وَّحِكْمَةٍ
ثُمَّ جَآءَكُمْ رَسُوْلٌ مُّصَدِّقٌ لِّمَا مَعَكُمْ لَتُؤْمِنُنَّ بِهٖ
وَلَتَنْصُرُنَّهٗ ؕ قَالَ ءَاَقْرَرْتُمْ وَاَخَذْتُمْ عَلٰى ذٰلِكُمْ
اِصْرِىْ ؕ قَالُوْٓا اَقْرَرْنَا ؕ قَالَ فَاشْهَدُوْا وَاَنَا مَعَكُمْ مِّنَ
الشّٰهِدِيْنَ ﴿٨١﴾ فَمَنْ تَوَلّٰى بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ﴿٨٢﴾
اَفَغَيْرَ دِيْنِ اللّٰهِ يَبْغُوْنَ وَلَهٗٓ اَسْلَمَ مَنْ فِى السَّمٰوٰتِ
وَالْاَرْضِ طَوْعًا وَّكَرْهًا وَّاِلَيْهِ يُرْجَعُوْنَ ﴿٨٣﴾ قُلْ اٰمَنَّا
بِاللّٰهِ وَمَآ اُنْزِلَ عَلَيْنَا وَمَآ اُنْزِلَ عَلٰٓى اِبْرٰهِيْمَ وَاِسْمٰعِيْلَ

وَ اِسۡحٰقَ وَ يَعۡقُوۡبَ وَالۡاَسۡبَاطِ وَمَاۤ اُوۡتِىَ مُوۡسٰى وَعِيۡسٰى
وَالنَّبِيُّوۡنَ مِنۡ رَّبِّهِمۡ ۖ لَا نُفَرِّقُ بَيۡنَ اَحَدٍ مِّنۡهُمۡ ۫ وَنَحۡنُ
لَهٗ مُسۡلِمُوۡنَ ﴿۸۴﴾ وَمَنۡ يَّبۡتَغِ غَيۡرَ الۡاِسۡلَامِ دِيۡنًا فَلَنۡ يُّقۡبَلَ
مِنۡهُ ۚ وَهُوَ فِى الۡاٰخِرَةِ مِنَ الۡخٰسِرِيۡنَ ﴿۸۵﴾ كَيۡفَ يَهۡدِى اللّٰهُ
قَوۡمًا كَفَرُوۡا بَعۡدَ اِيۡمَانِهِمۡ وَشَهِدُوۡۤا اَنَّ الرَّسُوۡلَ حَقٌّ وَّ
جَآءَهُمُ الۡبَيِّنٰتُ ؕ وَاللّٰهُ لَا يَهۡدِى الۡقَوۡمَ الظّٰلِمِيۡنَ ﴿۸۶﴾
اُولٰٓئِكَ جَزَآؤُهُمۡ اَنَّ عَلَيۡهِمۡ لَعۡنَةَ اللّٰهِ وَالۡمَلٰٓئِكَةِ وَالنَّاسِ
اَجۡمَعِيۡنَ ﴿۸۷﴾ۙ خٰلِدِيۡنَ فِيۡهَا ۚ لَا يُخَفَّفُ عَنۡهُمُ الۡعَذَابُ وَلَا هُمۡ
يُنۡظَرُوۡنَ ﴿۸۸﴾ۙ اِلَّا الَّذِيۡنَ تَابُوۡا مِنۡۢ بَعۡدِ ذٰلِكَ وَاَصۡلَحُوۡا ۟
فَاِنَّ اللّٰهَ غَفُوۡرٌ رَّحِيۡمٌ ﴿۸۹﴾ اِنَّ الَّذِيۡنَ كَفَرُوۡا بَعۡدَ اِيۡمَانِهِمۡ
ثُمَّ ازۡدَادُوۡا كُفۡرًا لَّنۡ تُقۡبَلَ تَوۡبَتُهُمۡ ۚ وَاُولٰٓئِكَ هُمُ
الضَّآلُّوۡنَ ﴿۹۰﴾ اِنَّ الَّذِيۡنَ كَفَرُوۡا وَمَاتُوۡا وَهُمۡ كُفَّارٌ فَلَنۡ
يُّقۡبَلَ مِنۡ اَحَدِهِمۡ مِّلۡءُ الۡاَرۡضِ ذَهَبًا وَّلَوِ افۡتَدٰى بِهٖ ؕ
اُولٰٓئِكَ لَهُمۡ عَذَابٌ اَلِيۡمٌ وَّمَا لَهُمۡ مِّنۡ نّٰصِرِيۡنَ ﴿۹۱﴾ ع

[81] *(வேதமுடையோரே!) எண்ணிப் பாருங்கள்! அல்லாஹ் தன் தூதர்களிடம் இவ்வாறு உடன்படிக்கை செய்து கொண்டான்: ''நான் உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் வழங்குகிறேன். உங்களிடமுள்ளவற்றை (முன்னறிவிப்புகளை) உண்மைப்படுத்தக்கூடிய ஒரு தூதர் (புதிதாக) வரும்போது அவர்மீது நீங்கள் நம்பிக்கைகொண்டு அவருக்கு உதவிபுரிய வேண்டும். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? இந்த அடிப்படையில் நான் உங்களுக்கு வழங்கிய பொறுப்பை ஏற்றுக் கொள்கிறீர்களா?'' என்று இறைவன் கேட்டான். ''நாங்கள் ஏற்றுக் கொண்டோம்'' என்று அவர்கள் கூறினர். ''நீங்கள்*

சாட்சியாக இருங்கள். நானும் உங்களுடன் சாட்சியாக இருக்கிறேன்'' என்று அவன் கூறினான். [82]எனவே இதன் பின்னரும் அதனைவிட்டுப் பின்வாங்கி விடுபவர்களே கீழ்ப்படியாதவர்கள். [83]இவர்கள் இறைமார்க்கம் அல்லாத வேறொன்றையா விரும்புகிறார்கள்? உண்மையில் வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவனது கட்டளைப்படியே செயல்படுகின்றன. அனைத்தும் அவனிடமே திரும்பக்கொண்டு வரப்படும். [84](நபியே!) ''நாங்கள் அல்லாஹ்வின் மீதும் எங்களுக்கு அருளப்பட்டதன் மீதும் ஆப்ரஹாம், இஸ்மவேல், ஈசாக், ஜேக்கப் மற்றும் ஜேக்கபின் வழித்தோன்றல்கள் ஆகியோருக்கு அருளப்பட்டதன் மீதும் மோசே, இயேசு மற்றும் ஏனைய தூதர்களுக்கு இறைவனிடமிருந்து அருளப்பட்டவற்றின் மீதும் நம்பிக்கை கொண்டோம். அவர்களுக்கிடையே நாங்கள் வேறுபாடும் காட்டமாட்டோம். நாங்கள் இறைவனுக்கே கீழ்ப்படிந்து நடப்பவர்களாக இருக்கிறோம்'' என்று கூறும். [85]எவர் இஸ்லாத்தைத்தவிர (இறைவனுக்குக் கீழ்ப்படிதல்) வேறொரு மார்க்கத்தை விரும்புகிறாரோ அவரிடமிருந்து ஒருபோதும் அது ஏற்கப்படாது. மறுமையில் அவர் இழப்படைந்தவர்களுடன் இருப்பார். [86]நம்பிக்கை கொண்ட பிறகு மறுத்துவிட்ட மக்களுக்கு அல்லாஹ் எப்படி நேர்வழி காட்டுவான்? (இந்தத்) தூதர் உண்மையானவர்தான் என்று அவர்கள் சாட்சியம் அளித்திருந்தனர். மேலும், அவர்களிடம் (அதற்கான) தெளிவான சான்றுகள் வந்திருந்தன. அல்லாஹ் இத்தகைய தீவினையாளர்களுக்கு நேர்வழி காட்டுவதில்லை. [87]இத்தகையவர்களுக்கு அல்லாஹ்வும் வானவர்கள், மனிதர்கள் ஆகியோர்களும் இடுகின்ற சாபம்தான் தக்க தண்டனையாகும். [88]அ(ச் சாபத்)திலேயே அவர்கள் என்றென்றும் இருப்பார்கள். அவர்களின் வேதனை குறைக்கப்படாது. அவர்களுக்குக் கால நீட்டிப்பு அளிக்கப்படவும் மாட்டாது. [89]ஆனால் இதன் பின்னர் பாவமன்னிப்புக் கோரித் தங்களைச் சீர்திருத்திக் கொண்டவர்கள் யாரோ அவர்களைத் தவிர. அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன். [90]உறுதியாக நம்பிக்கைகொண்டபின் மறுத்து அம்மறுப்பை மிகுதிப்படுத்திக்கொண்டோரின் பாவமன்னிப்புக் கோரிக்கை ஒருபோதும் ஏற்கப்படாது. அவர்கள்தாம் வழிகேடர்கள். [91]உறுதியாக (ஓரிறையை) மறுத்து அந்நிலையிலேயே இறந்தும் போனவர்கள் பூமி நிறையத் தங்கத்தை ஈடாகக் கொடுத்தாலும்

அது ஏற்கப்படாது. அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு. அவர்களுக்கு உதவி புரிபவர் எவரும் இருக்கமாட்டார்.

ஏக இறைவனை அடைவது ஒரு நிரந்தர யதார்த்தத்தைக் கண்டடை வதாகும். இது முழு பிரபஞ்சத்துடன் இணைந்து பயணிப்பதாகும். இப்படியாக இறைவனை அடைந்தவர்கள் எல்லா வகையான பாரபட்சங்களுக்கும் அப்பாற்பட்டவர்களாகிறார்கள். அவர்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் சத்தியத்தை அடையாளம் காண்கிறார்கள், அந்தச் செய்தி 'இஸ்ராயீலிய இறைத்தூதர்', 'இஸ்மவேலிய இறைத்தூதர்' என யார் வாய்வழியில் வழங்கப்பட்டாலும் சரி.

ஆனால், இனக்குழுவாத மட்டத்தில் வாழ்பவர்களுக்கு, அவர்களின் சொந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு நபரிடமிருந்து வரும் போது மட்டுமே சத்தியம் சத்தியமாகத் தென்படுகிறது. இறைவன் தனது செய்தியை அறிவிக்க அவர்களின் கூட்டத்திற்கு வெளியே ஒருவரை எழச்செய்தால், அத்தகைய செய்தி அவர்களின் மனதில் இடம் பிடிப்பதில்லை. எதுவரை என்றால், அவர்களுடைய இதயமே அது சத்தியம் என்பதற்கும், அதன் உண்மைத்தன்மைக்கும் சாட்சியமளித்தாலும் சரி. இப்படிப்பட்டவர்கள் தங்களை நம்பிக்கையாளர்கள் எனக் கருதினாலும், இறைவனிடம் அவர்களின் பெயர்கள் மறுப்பாளர்களின் பட்டியலில் எழுதப்படுகின்றன. ஏனென்றால் அவர்கள் உண்மையைத் தம்முடைய கூட்டத்தோடு தொடர்பு படுத்தித்தான் பார்த்தார்கள், இறைவனோடு தொடர்புபடுத்தி அல்ல. ஒரு மனிதனின் மனமே சாட்சியமளிக்கும் ஓர் உண்மையை ஒப்புக்கொள்ளாமல் இருப்பது இறைவனின் பார்வையில் மிகக் கொடிய குற்றமாகும். அத்தகைய மக்கள் மறுமையில் மிகவும் அவமானத்துக்குள்ளாவார்கள், இறைவனும் அவனுடைய அனைத்து படைப்புகளும் அவர்களைச் சபிப்பர்.

தனக்கு வெளியே தோன்றும் உண்மையை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது, வெளித் தோற்றத்தில் தனது நம்பிக்கையைப் பாதுகாப்பதாக இருக்கிறது. ஆனால் உண்மையில் இது ஒருவனது நம்பிக்கையை அழிப்பதாகும். இறைவனின் மீது நம்பிக்கை கொண்ட நல்லடியான் இறைவனின் தொடர்ச்சியான அருளால் வாழ்கிறான். அப்படியானால் ஒரு மனிதன் சுயவழிபாடு, இனவழிபாடு எனும் உறைக்குள் தன்னை முழுமையாக அடைத்துக்கொண்டால் இறையருள் எவ்வாறு நுழைய முடியும்? இறைவனின் அருட்பேற்றை இழந்த பிறகு, அவனுடைய நம்பிக்கையை வளர்க்கும் ஒன்றாக வேறெது இருக்க முடியும்?

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ۬ؕ وَمَا تُنْفِقُوْا الجزء الرابع
مِنْ شَيْءٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ ﴿۹۲﴾ كُلُّ الطَّعَامِ كَانَ حِلًّا لِّبَنِيْٓ
اِسْرَآءِيْلَ اِلَّا مَا حَرَّمَ اِسْرَآءِيْلُ عَلٰى نَفْسِهٖ مِنْ قَبْلِ اَنْ
تُنَزَّلَ التَّوْرٰىةُ ؕ قُلْ فَاْتُوْا بِالتَّوْرٰىةِ فَاتْلُوْهَآ اِنْ كُنْتُمْ
صٰدِقِيْنَ ﴿۹۳﴾ فَمَنِ افْتَرٰى عَلَى اللّٰهِ الْكَذِبَ مِنْۢ بَعْدِ ذٰلِكَ فَاُولٰٓئِكَ
هُمُ الظّٰلِمُوْنَ ﴿۹۴﴾ قُلْ صَدَقَ اللّٰهُ ۫ فَاتَّبِعُوْا مِلَّةَ اِبْرٰهِيْمَ حَنِيْفًا ؕ وتقبل جل جلاله
وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ ﴿۹۵﴾ اِنَّ اَوَّلَ بَيْتٍ وُّضِعَ لِلنَّاسِ لَلَّذِيْ
بِبَكَّةَ مُبٰرَكًا وَّ هُدًى لِّلْعٰلَمِيْنَ ﴿۹۶﴾ۚ فِيْهِ اٰيٰتٌۢ بَيِّنٰتٌ مَّقَامُ
اِبْرٰهِيْمَ ۚ۬ وَمَنْ دَخَلَهٗ كَانَ اٰمِنًا ؕ وَ لِلّٰهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ
مَنِ اسْتَطَاعَ اِلَيْهِ سَبِيْلًا ؕ وَمَنْ كَفَرَ فَاِنَّ اللّٰهَ غَنِيٌّ عَنِ
الْعٰلَمِيْنَ ﴿۹۷﴾ قُلْ يٰٓاَهْلَ الْكِتٰبِ لِمَ تَكْفُرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ ۖۗ وَاللّٰهُ
شَهِيْدٌ عَلٰى مَا تَعْمَلُوْنَ ﴿۹۸﴾ قُلْ يٰٓاَهْلَ الْكِتٰبِ لِمَ تَصُدُّوْنَ عَنْ
سَبِيْلِ اللّٰهِ مَنْ اٰمَنَ تَبْغُوْنَهَا عِوَجًا وَّ اَنْتُمْ شُهَدَآءُ ؕ وَمَا اللّٰهُ
بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ﴿۹۹﴾

[92]உங்களுக்குப் பிடித்தவற்றிலிருந்து (அறச்)செலவு செய்யாத வரை நீங்கள் நன்மையின் உயர்நிலையை அடைய முடியாது. நீங்கள் எப்பொருளைச் செலவு செய்தாலும் இறைவன் அதனை நன்கறிவான். [93]தவ்ராத் அருளப்படுவதற்கு முன்னால், இஸ்ராயீல் (ஜேக்கப்) தமக்குத்தாமே தடை செய்துகொண்டதைத் தவிர மற்ற அனைத்து உணவுப் பொருள்களும் இஸ்ராயீலின் மக்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தன. (இதற்கு எதிராகப் பேசுவோரிடம்) ''நீங்கள் உண்மையாளர்களாயின் தவ்ராத்தைக் கொண்டு வந்து வாசித்துக் காட்டுங்கள்'' என்று நபியே நீர் கூறுவீராக! [94]இதன் பின்னரும் இறைவனின் மீது பொய்யைப் புனைபவர்கள்தாம்

தீவினையாளர்கள். [95](நபியே!) நீர் கூறும்: ''அல்லாஹ் உண்மையே கூறினான். எனவே முழுமையான நம்பிக்கை கொண்ட ஆப்ரஹாமின் வழிமுறையைப் பின்பற்றுங்கள். அவர் இணைவைப்பவராக இருக்கவில்லை.'' [96]உறுதியாக மக்களுக்காக அமைக்கப்பட்ட முதல் இறையில்லம் மக்காவிலுள்ளதுதான். அது பேரருள் கொண்டதாகவும் உலகம் அனைத்திற்கும் வழிகாட்டும் மையமாகவும் உள்ளது. [97]அங்குத் தெளிவான சான்றுகளும் ஆப்ரஹாம் நின்று வழிபட்ட இடமும் உள்ளன. அங்கு நுழைந்து விட்டவர் பாதுகாப்புப் பெற்றவராகிறார். மக்களில் இறையில்லத்திற்கு (கஅபா) சென்றுவரச் சக்தி பெற்றவர் அல்லாஹ்வுக்காக அந்த இல்லத்திற்கு ஹஜ் பயணம் செல்வது கடமையாகும். யாரேனும் இதனை மறுத்தால் (அவர் அறிந்து கொள்ளட்டும்) அல்லாஹ் உலகத்தார் அனைவரிடமிருந்தும் எந்தத் தேவையுமற்றவன். [98](நபியே!) நீர் கூறும்: ''வேதமுடையோரே! நீங்கள் அல்லாஹ்வின் வசனங்களை ஏன் மறுக்கிறீர்கள்? நீங்கள் செய்வதையெல்லாம் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான்.'' [99]நீர் கூறும்: ''வேதமுடையோரே! நம்பிக்கையாளர்களை ஏன் இறைவழியில் இருந்து தடுக்கிறீர்கள்? (அது நேரானது என்பதற்கு) நீங்கள் சாட்சியாளர்களாக இருந்துகொண்டே அதைக் கோணலாகக் காட்ட ஏன் முனைகிறீர்கள்? அல்லாஹ் உங்கள் செயல்களைக் கவனிக்காமலில்லை.''

யூத அறிஞர்கள் தாங்களாகவே உருவாக்கிக் கொண்ட மார்க்கச் சட்டத்தின்படி, ஒட்டகம் முயல் ஆகியவற்றின் இறைச்சியை உண்பதைத் தடைசெய்து வைத்திருந்தார்கள், இஸ்லாத்திலோ அது அனுமதிக்கப்பட்ட ஒன்று. இந்நிலையில் இஸ்லாம் இறைவனால் இறக்கியருளப்பட்ட மார்க்கம் என்றால், அனுமதிக்கப்பட்டவை – தடை செய்யப்பட்டவை பற்றிய சட்டங்கள் கடந்த காலத்தில் இறைவனால் இறக்கியருளப்பட்ட மார்க்கத்தில் இருந்ததைப் போலவே ஏன் இல்லை என்று யூதர்கள் கேட்பார்கள். அதேபோல், ஜெருசலேம் இதுவரை அனைத்து இறைத்தூதர்களுக்கும் வணக்கத்திற்கான முன்னோக்கு திசையாக இருந்து வருகிறது, அப்படியானால், இறைவன் அதற்குப் பதிலாக கஅபாவை முன்னோக்கு திசையாக அறிவிக்கும் ஒரு மார்க்கத்தை எவ்வாறு இறக்கியருள முடியும்? என்று அவர்கள் கேட்பார்கள்.

சத்தியத்திற்கான அழைப்பு அதன் கலப்படமற்ற தூய்மையான வடிவத்தில் எழும்போது, இறைவனின் மதம் என்னும் பெயரால் மக்களிடையே தங்கள்

சொந்த மதத்தை அறிமுகப்படுத்தியவர்களைப் பாதிக்கத் தொடங்குகிறது; அத்தகைய மக்கள் அதை எதிர்க்கத் தொடங்குகிறார்கள்; மக்களைச் சத்தியத்திற்கான அழைப்பிலிருந்து விலக்க பல்வேறு எதிர்ப்புகளை எழுப்புகிறார்கள். அவர்களாகவே உருவாக்கிக்கொண்ட மதத்தில் மத அடிப்படைகள் வலியுறுத்தப்படுவதில்லை. இதற்குப் பதிலாக மார்க்கத்தின் சின்னச் சின்னக் கூறுகளில் உள்ள நுணுக்கங்களைப் பெரிதாக்குவதன் மூலம் மார்க்கத்தில் மேலோட்டமான அமைப்பு உருவாக்கப்படுகிறது. ஒருவருடைய உண்மையான வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தாலும், நற்செயல்கள், இறையச்சம் ஆகியவற்றின் முழுமைக்கு வெளிப்புற அமைப்பை நன்றாக ஒழுங்கமைத்தால் போதும் என்று புரிந்துகொள்ளப் படுகிறது. 'முயல்' இறைச்சி சாப்பிடக் கூடாது; நம் முன்னோர்கள் அதைத் தவிர்த்தார்கள் என்று கூறிக்கொள்வார்கள். மறுபுறம் அவர்கள் தடை செய்யப்பட்ட எவ்வளவோ விஷயங்களைத் தமக்காக அனுமதித்துக் கொண்டாலும் பரவாயில்லை என்பது அவர்களின் நிலைப்பாடு. ஜெருசலேம் (''பைத் அல்-மக்திஸ்'') நோக்கித் திரும்புவதற்கு ஒரு திசைகாட்டி முள்ளைப் போல நேராகி விடுவது அவசியம் என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், தமது காலை, மாலை நேர நடவடிக்கைகளை இறைவனை நோக்கியவையாக மாற்றுவதில் அவர்களுக்கு ஆர்வமில்லை. ஆனால், ஒருவர் நன்மையின் உயர்நிலையை தியாகத்தின் மூலம் அடைகிறாரே அன்றி, மலிவான வெளிப்பாடுகள் மூலம் அல்ல. இறைவனின் நேர்மையான அடியான் என்பவன், தனது அன்பை இறைவனுக்கு அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும்; அவனுக்கு உலகில் இறைவனை விடப் பிரியமானது எதுவும் இருக்கக் கூடாது. உண்மையை ஏற்றுக்கொள்ள ஒருவர் கண்ணியத்தை விலையாகக் கொடுக்க நேரும் போதும், இறைவனின் பாதையில் வளர்வதற்குச் செல்வத்தைச் செலவிட வேண்டியிருக்கும் போதும், தனது குழந்தைகளின் எதிர்காலத்தை ஆபத்தில் சிக்கவிட நேரும் போதும், இறைவனுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். இத்தகைய நெருக்கடியான சூழ்நிலைகளில், தனக்குப் பிடித்தமான பொருட்களைக் கைவிட்டு இறைவனைப் பெற்றுக்கொள்பவனே நேர்மையாளனாகவும், இறையச்சம் உடையவனாகவும் மாறுகிறான்.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ تُطِيْعُوْا فَرِيْقًا مِّنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ
يَرُدُّوْكُمْ بَعْدَ اِيْمَانِكُمْ كٰفِرِيْنَ ﴿١٠٠﴾ وَكَيْفَ تَكْفُرُوْنَ وَاَنْتُمْ تُتْلٰى
عَلَيْكُمْ اٰيٰتُ اللّٰهِ وَفِيْكُمْ رَسُوْلُهٗ ؕ وَمَنْ يَّعْتَصِمْ بِاللّٰهِ فَقَدْ هُدِيَ

ۚ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿١٠١﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ حَقَّ
تُقٰتِهٖ وَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ ﴿١٠٢﴾ وَاعْتَصِمُوْا بِحَبْلِ
اللّٰهِ جَمِيْعًا وَّلَا تَفَرَّقُوْا ۠ وَاذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ اِذْ كُنْتُمْ
اَعْدَآءً فَاَلَّفَ بَيْنَ قُلُوْبِكُمْ فَاَصْبَحْتُمْ بِنِعْمَتِهٖۤ اِخْوَانًا ۚ وَكُنْتُمْ
عَلٰى شَفَا حُفْرَةٍ مِّنَ النَّارِ فَاَنْقَذَكُمْ مِّنْهَا ؕ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ
لَكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ ﴿١٠٣﴾

[100]நம்பிக்கையாளர்களே! வேதம் வழங்கப்பட்டோரில் ஒரு பிரிவினரின் கருத்துக்களை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களானால் நீங்கள் நம்பிக்கைகொண்ட பின்னரும் உங்களை அவர்கள் மறுப்பாளர்களாக்கி விடுவார்கள். [101]அல்லாஹ்வின் தூதர் உங்களுக்கிடையில் இருக்க, இறை வசனங்கள் உங்களுக்கு எடுத்துரைக்கப்படும் நிலையில் நீங்கள் எவ்வாறு அல்லாஹ்வை மறுக்கமுடியும்? எவர் அல்லாஹ்வை உறுதியாகப் பற்றிக் கொள்கிறாரோ அவர் நேர்வழியை அடைந்துவிட்டார். [102]நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சவேண்டிய முறைப்படி அஞ்சுங்கள். நீங்கள் கீழ்ப்படிந்தவர்களாக (இருக்கும் நிலையில்) அன்றி இறந்துவிடாதீர்கள். [103]நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வின் கயிற்றை (குர்ஆனை)ப் பற்றிக்கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள். அல்லாஹ் உங்கள் மீது பொழிந்த அருட்கொடையை நினைவுகூருங்கள். (முன்னர்) நீங்கள் ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருந்தீர்கள். அவன்தான் உங்கள் உள்ளங்களுக்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்தினான். அவனது அருளால் நீங்கள் சகோதரர்கள் ஆகி விட்டீர்கள். நீங்கள் நரகப் படுகுழியின் விளிம்பில் நின்று கொண்டிருந்தீர்கள். அவன்தான் உங்களை அதிலிருந்து காப்பாற்றினான். இவ்வாறு நீங்கள் நேர்வழி பெறும்பொருட்டுத் தன் சான்றுகளை அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.

உலகம் சோதனைக்கான இடம். இங்கே மனிதனின் இறைநம்பிக்கையைச் சாத்தான் பறித்துவிடுவான் என்ற ஆபத்து எப்போதும் உள்ளது. ஒரு மனிதன் நம்பிக்கையற்றவனாக இருக்கும் நிலையில் வானவர்கள் அவனது

ஆன்மாவைக் கைப்பற்றிவிடலாம். எனவே, ஒரு மனிதன் எல்லா நேரங்களிலும் விழிப்புடன் இருப்பது, தன்னைத் தானே காத்துக் கொள்வது முக்கியம். நம்பிக்கையிலிருந்து விலகிச் செல்வதற்கான ஒரு நிலை, மார்க்கத்தின் கூறுகளை மாற்றி, முக்கியமானவற்றை முக்கியம் இல்லாதவையாகவும், முக்கியம் இல்லாதவற்றை முக்கியமானவையாகவும் மாற்றுவதே. மார்க்கத்தின் உண்மையான கயிறு இறையச்சமாகும். அதாவது, இறைவனுக்கு அஞ்சுதல், இறக்கும் நாள்வரை, தன் ஒவ்வொரு விஷயத்திலும் இறைவனுக்கு முன் பதில்கூறியாக வேண்டுமென்ற சிந்தனையால் உருவாக்கம் பெற்ற அணுகுமுறையைப் பின்பற்றுவது. இதுவே நேரான வழி. இதிலிருந்து விலகுவதென்பது, 'இறையச்சத்திற்கு' பதிலாக வேறு ஒன்றை மார்க்கத்தின் சார்புநிலையாகக் கருதி இறையச்சம், மறுமை மீதான அக்கறை ஆகியவற்றைப் போலவே அதை வலியுறுத்துவதாகும். மார்க்கத்தில் இதுபோன்ற மாற்றம் செய்யப்படும் போதெல்லாம், மக்களிடையே கருத்து வேறுபாடுகள் எழுவது தவிர்க்க முடியாத விளைவாகும். ஒருவன் தொடர்புடைய ஒரு கருத்தை வலியுறுத்த, மற்றவர்கள் வேறொரு கருத்தை வலியுறுத்துவார்கள், இதனால் சமூகம் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து விடுகிறது. முதலில் குறிப்பிட்டதன்படி, இறைவன் ஒருவனுடைய கவனத்தின் மையமாக மாறுகிறான். இரண்டாவதாகக் குறிப்பிட்டபடி, பல்வேறு பிரச்சினைகள் கவனத்தின் மையமாகின்றன. மார்க்கத்தில் அனைத்து வலியுறுத்தலும் முக்கியத்துவமும் இறையச்சத் திற்குக் கொடுக்கப்படும்போது, அதனால் ஒருவருக்கொருவர் ஒற்றுமை மேலோங்குகிறது. அதைத் தவிர வெவ்வேறு கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்போது, அதனால் ஒருவருக்கொருவர் கருத்து வேற்றுமை என்ற தீமை உருவாக்கம் பெறுகிறது. இது மக்களை நரகத்தின் விளிம்பிற்குக் கொண்டு சேர்த்துவிடுகிறது. ஒரு குழுவிற்குள் கருத்து வேறுபாடு என்பது இம்மையிலும் மறுமையிலும் தண்டனையாகும்.

இஸ்லாத்திற்கு முன்பு மதீனாவில் அவ்ஸ், கஸ்ரஜ் என்ற இரண்டு கோத்திரங்கள் இருந்தன. இவ்விரு கோத்திரங்களும் அரபு நாட்டைச் சார்ந்தவைதாம். ஆனால் அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டே இருந்தனர். அவர்களுக்குள்ளான இந்தப் போர்கள் அவர்களைப் பலவீனப்படுத்தியிருந்தன. அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தபோது, அவர்களின் சண்டை முடிவுக்கு வந்தது, அவர்கள் சகோதரர்களைப் போல ஒன்றாக வாழத் தொடங்கினர்.

இதற்குக் காரணம், இஸ்லாம் இல்லாத போது, ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே விசுவாசமாக இருக்கிறான், இஸ்லாத்தில், இறைவன் ஒருவனுக்கு மட்டுமே விசுவாசம் கொண்டவனாக இருக்கிறான். மக்கள்

தங்களுக்கோ தங்கள் கூட்டத்திற்கோ விசுவாசமாக இருக்கும் ஒரு சமூகத்தில், பல நம்பிக்கைகள் இயல்பாகவே எழுகின்றன. மேலும் பல நம்பிக்கைகளின் நடைமுறை விளைவு, கருத்து வேறுபாடு மற்றும் மோதல் ஆகும். இதற்கு நேர்மாறாக எல்லா மக்களும் ஒரே இறைவனுக்கு விசுவாசமாக மாறும் ஒரு சமூகத்தில், அனைவருடைய திசையும் ஒரே மையத்தை நோக்கித் திரும்பிவிடுகிறது, அனைவரும் ஒரே கயிற்றில் பிணைக்கப்படுகிறார்கள். இவ்வாறாக, ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு மற்றும் மோதலுக்கான காரணங்கள் தாமாகவே மறைந்துவிடுகின்றன.

وَلْتَكُنْ مِّنْكُمْ اُمَّةٌ يَّدْعُوْنَ اِلَى الْخَيْرِ وَيَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ
وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ ؕ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿۱۰۴﴾ وَلَا تَكُوْنُوْا
كَالَّذِيْنَ تَفَرَّقُوْا وَاخْتَلَفُوْا مِنْۢ بَعْدِ مَا جَآءَهُمُ الْبَيِّنٰتُ ؕ
وَاُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ عَظِيْمٌ ﴿۱۰۵﴾ۙ يَّوْمَ تَبْيَضُّ وُجُوْهٌ وَّتَسْوَدُّ وُجُوْهٌ ۚ
فَاَمَّا الَّذِيْنَ اسْوَدَّتْ وُجُوْهُهُمْ ۫ اَكَفَرْتُمْ بَعْدَ اِيْمَانِكُمْ فَذُوْقُوا
الْعَذَابَ بِمَا كُنْتُمْ تَكْفُرُوْنَ ﴿۱۰۶﴾ وَاَمَّا الَّذِيْنَ ابْيَضَّتْ وُجُوْهُهُمْ
فَفِيْ رَحْمَةِ اللّٰهِ ؕ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿۱۰۷﴾ تِلْكَ اٰيٰتُ اللّٰهِ نَتْلُوْهَا
عَلَيْكَ بِالْحَقِّ ؕ وَمَا اللّٰهُ يُرِيْدُ ظُلْمًا لِّلْعٰلَمِيْنَ ﴿۱۰۸﴾ وَلِلّٰهِ مَا فِي
السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ؕ وَاِلَى اللّٰهِ تُرْجَعُ الْاُمُوْرُ ﴿۱۰۹﴾ ع

[104](மக்களை) நன்மையின்பால் அழைக்கக்கூடிய ஒரு கூட்டம் உங்களிடையே கண்டிப்பாக இருக்கவேண்டும். அவர்கள் நன்மை புரியும்படித் தூண்டவேண்டும்; தீமையிலிருந்து தடுக்கவேண்டும். இத்தகைய கூட்டத்தினர்தாம் வெற்றியாளர்கள். [105](நம்பிக்கையாளர்களே!) தங்களிடம் தெளிவான கட்டளைகள் வந்தபின்னரும் முரண்பட்டுப் பல பிரிவினர்களாகப் பிரிந்து விட்டவர்களைப் போல நீங்களும் ஆகிவிடாதீர்கள். அவர்களுக்குக் கடும் வேதனை உண்டு. [106](மறுமையாகிய) அந்நாளில் சில முகங்கள் ஒளிரும்; சில முகங்கள் கருத்திருக்கும். எவருடைய முகங்கள் கருத்திருக்குமோ அவர்களிடம், ''நீங்கள் நம்பிக்கைகொண்ட பின்னர் மறுப்பாளராகிவிட்டீர்கள் அல்லவா?

எனவே உங்கள் மறுப்பினால் வேதனையை அனுபவியுங்கள்'' என்று கூறப்படும். [107]எவருடைய முகங்கள் ஒளிர்ந்து கொண்டிருக்குமோ அவர்கள் இறையருளில் இருப்பார்கள். அதில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். [108](நபியே!) இவை இறைவசனங்களாகும். சத்தியம் அடங்கியுள்ள இவற்றை நாம் உமக்கு எடுத்துரைக்கிறோம். உலகத்தாருக்கு அல்லாஹ் அநீதி இழைக்க விரும்புவதில்லை. [109]வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. அனைத்து விவகாரங்களும் அல்லாஹ்விடமே திரும்பக்கொண்டு வரப்படும்.

''(மக்களை) நன்மையின்பால் அழைக்கக்கூடிய ஒரு கூட்டம் உங்களிடையே கண்டிப்பாக இருக்கவேண்டும். அவர்கள் நன்மை புரியும்படித் தூண்டவேண்டும்; தீமையிலிருந்து தடுக்கவேண்டும்.'' இந்தக் கூற்று ஒரே நேரத்தில் இரண்டு விஷயங்களைச் குறிப்பிடுகிறது. ஒன்று உயர்நிலையிலிருப்போரோடு தொடர்புடையது. மற்றொன்று பொதுமக்களோடு தொடர்புடையது. சமூகத்தின் உயரடுக்கு, சமூகத்திற்குள் தீமையைப் பொறுத்துக்கொள்ளக் கூடாது. நன்மை மற்றும் நல்வாழ்வுக்காகப் பாடுபட வேண்டும் என்ற மனப்பான்மை இருக்க வேண்டும். இந்தச் சீர்திருத்த உணர்வு, மக்களின் நிலைமையைப் பற்றி அலட்சியமாக இல்லாமல் இருக்கவும், தங்கள் சகோதரர்களை நன்மையின் பாதையைப் பின்பற்ற ஊக்குவிக்கவும், தீமையிலிருந்து விலகி இருக்க அறிவுறுத்தவும் அவர்களைத் தூண்டும்.

இருப்பினும், இந்தச் செயல்முறை வெற்றிகரமாக அமைய, சமூகத்தின் மக்கள் கீழ்ப்படியும் மனப்பான்மையைக் கொண்டிருப்பதும் அவசியம். பொதுமக்கள் தங்கள் மார்க்கத்தின் உயரடுக்கு மனிதர்களை மதிக்க வேண்டும். அவர்களின் கட்டளைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். அவர்கள் தடுத்தவைகளை விட்டுத் தடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் மார்க்கப் பொறுப்பாளர்களிடம் தங்களை ஒப்படைத்துவிட வேண்டும். எந்த முஸ்லிம் சமூகத்தில் மார்க்கத்தின் உயரடுக்கு மனிதர்களும், பொது மக்களும் இந்த நிலையைக் கொண்டுள்ளார்களோ, அந்தச் சமூகமே ஈடேற்றம் பெற முடியும். செவிசாய்த்துச் செயலாற்றும் – கீழ்ப்படிந்து நடக்கும் இத்தகைய சூழலில்தான், ஒரு சமூகத்திற்குள் சில பண்புக்கூறுகள் வளர்கின்றன. அவை இந்த உலகில் அதை ஆற்றல் வாய்ந்ததாகவும் மறுமையில் ஈடேற்றம் பெற்றதாகவும் ஆக்குகின்றன.

இந்த உணர்வு உயரடுக்கினரிடையே உயிர் பெற்றிருப்பதன் பயன் என்னவெனில், அவர்களின் முழுக் கவனமும் நன்மையின் மீது இருக்கிறது, வேறுவார்த்தைகளில் கூறுவதானால், அது மார்க்கத்தின் அடிப்படைகளின் மீது கவனம் செலுத்துகிறது. சின்னச் சின்ன

விஷயங்களுக்குப் பேசிக் கொண்டிருக்க அவர்களுக்கு நேரமே இருப்பதில்லை இறைவனின் பெருமைகளைப் பறைசாற்றுபவர்களாகவும், மறுமையின் நற்செய்தியாளராகவும், எச்சரிக்கை செய்பவராகவும் மாறப் போகிறவர்களுக்கு, வெளிப்புறப் பிரச்சினைகளின் விவரங்களில் தங்கள் நிபுணத்துவத்தைக் காட்டப் போதுமான நேரம் இருப்பதில்லை. இதனுடன் நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் பணி, உண்மையான பிரச்சினைகளைச் சரிசெய்வதில் அவர்களை ஈடுபடுத்துகிறது. கற்பனையான, ஊகமான சட்டச் சிக்கல்களில் மனப் பயிற்சியில் ஈடுபடுவது ஒரு விவசாயிக்கு சதுரங்க விளையாட்டு தோன்றுவது போல, அர்த்தமற்றதாகவும் பயனற்றதாகவும் அவர்களுக்குத் தோன்றுகிறது.

கீழ்ப்படிதலின் இந்த அமைப்புமுறையை ஒப்புக்கொள்வதன் மூலம் பொதுமக்களுக்கு என்ன பயன் கிடைக்கிறது என்றால், அவர்கள் துண்டு துண்டாகப் பிரிந்து போகாமல் காப்பாற்றப்படுகிறார்கள். ஒரே கட்டளையைப் பின்பற்றுவதன் விளைவாக, அனைவரும் இணைந்து ஒன்றாகிறார்கள். ஒற்றுமையும் ஒருமித்த கருத்தும் அவர்களின் பொதுவான பண்பாக மாறி விடுகின்றன, சந்தேகத்திற்கு இடமின்றி, இந்த உலகில் ஒற்றுமையையும் கருத்தொருமித்தலையும் விடப் பெரிய ஆற்றல் எதுவும் இல்லை.

كُنْتُمْ خَيْرَ اُمَّةٍ اُخْرِجَتْ لِلنَّاسِ تَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَتَنْهَوْنَ
عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُوْنَ بِاللّٰهِ ؕ وَلَوْ اٰمَنَ اَهْلُ الْكِتٰبِ لَكَانَ خَيْرًا
لَّهُمْ ؕ مِنْهُمُ الْمُؤْمِنُوْنَ وَاَكْثَرُهُمُ الْفٰسِقُوْنَ ﴿۱۱۰﴾ لَنْ يَّضُرُّوْكُمْ اِلَّاۤ
اَذًى ؕ وَاِنْ يُّقَاتِلُوْكُمْ يُوَلُّوْكُمُ الْاَدْبَارَ ۫ ثُمَّ لَا يُنْصَرُوْنَ ﴿۱۱۱﴾
ضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ اَيْنَ مَا ثُقِفُوْۤا اِلَّا بِحَبْلٍ مِّنَ اللّٰهِ وَ
حَبْلٍ مِّنَ النَّاسِ وَبَآءُوْ بِغَضَبٍ مِّنَ اللّٰهِ وَضُرِبَتْ عَلَيْهِمُ
الْمَسْكَنَةُ ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ كَانُوْا يَكْفُرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ وَيَقْتُلُوْنَ
الْاَنْۢبِيَآءَ بِغَيْرِ حَقٍّ ؕ ذٰلِكَ بِمَا عَصَوْا وَّكَانُوْا يَعْتَدُوْنَ ﴿۱۱۲﴾

[110](நம்பிக்கையாளர்களே!) மனித குல(ச் சீர்திருத்த)த்திற்காகத் தோற்றுவிக்கப்பெற்ற சிறந்த சமூகத்தினர் (நீங்களே) ஆவீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகிறீர்கள்; தீமையிலிருந்து தடுக்கிறீர்கள்; அல்லாஹ்வின் மீது நம்பிக்கைகொண்டுள்ளீர்கள். வேதம்

வழங்கப்பட்டோரும் (இவ்வாறே) நம்பிக்கை கொண்டிருந்தால் அது அவர்களுக்குச் சிறந்ததாக அமைந்திருக்கும். அவர்களில் சிலர் உண்மையான நம்பிக்கையாளர்கள்; எனினும் அவர்களில் பெரும்பாலோர் கீழ்ப்படியாதவர்களாகவே இருக்கின்றனர். [111]அவர்களால் உங்களுக்குச் சிறுசிறு தொல்லைகள் தருவது தவிர வேறு எந்தத் தீங்கும் இழைத்துவிட முடியாது. அவர்கள் உங்களோடு போரிட்டால் புறங்காட்டி ஓடிவிடுவர். அவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்காது. [112]அல்லாஹ்விடமிருந்து அல்லது மக்களிடமிருந்து ஏதேனும் பாதுகாப்பைப் பெற்றாலே அன்றி அவர்கள் எங்கு இருந்தாலும் அவர்களை இழிவு வந்தடைந்தே தீரும். அவர்கள் இறைச்சினத்திற்கு ஆளாகி விட்டதோடு வீழ்ச்சியும் அவர்கள் மீது விதிக்கப்பட்டு விட்டது. இவற்றிற்கெல்லாம் காரணம் அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை மறுத்துக்கொண்டும் தூதர்களை அநியாயமாகக் கொலை செய்துகொண்டும் இருந்ததேயாகும். (மேலும்) இவை அவர்களின் கீழ்ப்படியாமையாலும் வரம்புமீறலாலும் ஏற்பட்ட விளைவுகளேயாகும்.

யூதர்கள் இறைவனின் மார்க்கத்திற்குப் பொறுப்பாளர்கள் ஆக்கப் பட்டிருந்தனர். ஆனால் அவர்களால் அந்தப் பொறுப்பைத் தாங்கி நிற்க முடியவில்லை. அதைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் தவறிவிட்டார்கள். அதன் பிறகு, இறைவன் தனது மார்க்கத்தை அதன் சரியான வடிவத்தில் இறுதித்தூதர் மூலம் அனுப்பினான். இப்போது நம்பிக்கையாளர் சமூகம் இறைவனின் வழிகாட்டுதலுக்காக மக்களிடையே எழுந்து நிற்கிறது. இந்தப் படிநிலை எந்த எதிர்பார்ப்புடன் வழங்கப்பட்டதெனில் இந்தச் சமூகம் ஓர் உண்மையான நம்பிக்கையாளர் சமூகமாக உருவாக வேண்டும் என்பதற்காகத்தான். அது உலகிற்கு நன்மை செய்யுமாறு அறிவுறுத்த வேண்டும்; இறைவனின் பார்வையில் தீயதாகக் கருதப்படும் விஷயங்களைக் குறித்து எச்சரிக்க வேண்டும். இது இறைப்பணி என்பதால், இறைவன் தனது சொந்தப் பாதுகாப்பு அமைப்பையும் இதனுடன் இணைத்துள்ளான். இறைவனின் இந்தப் பணிக்காக எழுந்து நிற்போருக்கு, அவர்களின் எதிரிகள் சாதாரணத் தொல்லைகளைத் தவிர வேறு எந்தத் தீங்கும் செய்ய முடியாது என்பதற்கு இறைவன் உத்தரவாதம் அளிக்கிறான். இருப்பினும், சத்தியத்தின் இந்த மேன்மை நிலைக்கு உயர்த்தப்பட்ட பிறகு நம்பிக்கைக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு இந்த உலகிலேயே தண்டனை தொடங்கி விடுகின்றது. அவர்களின் தனிப்பட்ட மரியாதை, கண்ணியம் ஆகியவை பறித்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு தண்டிக்கப்பட்டதற்கு ஒரு

நிரந்தர உதாரணம், யூதர்களின் முடிவின் வடிவத்தில் அமைத்துக் காட்டப்பட்டது. இறைவனின் அருட்கொடைகள் பறிபோவதால் அவர்களின் உணர்வின்மை எந்த அளவுக்கு மிகுந்து விடுகிறது என்றால், அவர்கள் குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட முன்வந்து நிற்பவர்களின் உயிரையே பறிக்கும் அளவுக்குச் சென்று விடுகிறார்கள்.

யூதர்கள் மீது இழிவு விதிக்கப்பட்டது, "அல்லாஹ்விடமிருந்து அல்லது மக்களிடமிருந்து ஏதேனும் பாதுகாப்பைப் பெற்றாலே அன்றி." இது இறைவனின் சிறப்பு வழிமுறையாகும். இது இறைவன் தனது மார்க்கத்தின் பிரதிநிதியாக நியமித்த சமூகத்தைப் பற்றியது. மார்க்கத்தின் உண்மையான பிரதிநிதித்துவம் அத்தகைய சமூகத்தின் ஆதிக்கத்திற்கு உத்தரவாதமாகும். மார்க்கத்தின் உண்மையான பிரதிநிதித்துவத்திலிருந்து விலகுவது தற்போதைய உலகில் அதன் தோல்விக்குக் காரணமாகிறது. அத்தகைய ஒரு சமூகம் இறை மார்க்கத்தின் பிரதிநிதித்துவத்திலிருந்து விலகிச் சென்றால், தற்போதைய உலகில் அது ஒருபோதும் தனிப்பட்ட ஆதிக்கம் பெற முடியாது. ஏதாவது ஒரு கட்டத்தில், அதற்கு அதிகாரம் கிடைத்தாலும், அது வேறொருவரின் ஆதரவில் கிடைத்தாகவே இருக்கும். அது ஓர் இறையாட்சியால் பாதுகாக்கப்பட்டதாக இருக்கலாம் அல்லது ஒரு வெளிநாட்டு அரசாங்கம் ஆதரவு, பாதுகாப்பு மேற்பார்வை ஆகியவற்றின் கீழ் அதை எடுத்துக்கொண்டிருக்கலாம்.

ஒரு சமூகம் இறைவனின் அடையாளங்களை மறுக்கும் நிலைக்கு வரும்போது, இந்த இழிவான தண்டனைக்குத் தகுதியானதாகிறது. அடையாளங்களை மறுப்பது உண்மையான சான்றுகளை மறுப்பதாகும். உண்மை எப்போதும் சான்றுகளின் வடிவத்திலேயே தோன்றும். எனவே, உண்மையான ஆதாரங்களை மறுப்பவர் இறைவனையே மறுக்கிறார்.

لَيْسُوْا سَوَآءً ؕ مِنْ اَهْلِ الْكِتٰبِ اُمَّةٌ قَآئِمَةٌ يَّتْلُوْنَ اٰيٰتِ اللّٰهِ
اٰنَآءَ الَّيْلِ وَهُمْ يَسْجُدُوْنَ ﴿۱۱۳﴾ يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ
وَيَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَيُسَارِعُوْنَ فِي
الْخَيْرٰتِ ؕ وَاُولٰٓئِكَ مِنَ الصّٰلِحِيْنَ ﴿۱۱۴﴾ وَمَا يَفْعَلُوْا مِنْ
خَيْرٍ فَلَنْ يُّكْفَرُوْهُ ؕ وَاللّٰهُ عَلِيْمٌۢ بِالْمُتَّقِيْنَ ﴿۱۱۵﴾ اِنَّ الَّذِيْنَ
كَفَرُوْا لَنْ تُغْنِيَ عَنْهُمْ اَمْوَالُهُمْ وَلَآ اَوْلَادُهُمْ مِّنَ اللّٰهِ شَيْـًٔا ؕ

وَاُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿١١٦﴾ مَثَلُ مَا يُنْفِقُوْنَ
فِيْ هٰذِهِ الْحَيٰوةِ الدُّنْيَا كَمَثَلِ رِيْحٍ فِيْهَا صِرٌّ اَصَابَتْ حَرْثَ
قَوْمٍ ظَلَمُوْٓا اَنْفُسَهُمْ فَاَهْلَكَتْهُ ۭ وَمَا ظَلَمَهُمُ اللّٰهُ وَلٰكِنْ اَنْفُسَهُمْ
يَظْلِمُوْنَ ﴿١١٧﴾

[113]வேதமுடையோர் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்லர். அவர்களில் வாக்குறுதியில் நிலைத்து நிற்கும் ஒரு பிரிவினரும் இருக்கின்றனர். அவர்கள் இரவு நேரங்களில் இறைவசனங்களை ஓதித் தலைபணிபவர்களாக இருக்கின்றனர். [114]அவர்கள் அல்லாஹ்வின்மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்கின்றனர்; நன்மை செய்யும்படித் தூண்டித் தீமையிலிருந்து தடுக்கின்றனர்; நற்செயல்களில்விரைகின்றனர்; அவர்கள்தாம் நேர்மையானவர்கள். [115]அவர்கள் செய்த நற்செயல்களுக்கான நற்கூலி மறுக்கப்படாது. அல்லாஹ் இறையச்சமுடையோரை நன்கறிந்தவன். [116]உறுதியாக மறுப்பாளர்களின் செல்வங்களோ பிள்ளைகளோ அல்லாஹ்விடமிருந்து அவர்களைச் சற்றும் காக்க முடியாது. அவர்கள் நரகவாசிகள். அதில் அவர்கள் என்றென்றும் இருப்பார்கள். [117]அவர்கள் இவ்வுலக வாழ்க்கைக்காகச் செலவுசெய்வது, தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட கூட்டத்தாரின் வயல்களில் கடுங்குளிர்காற்று வீசி நாசமாக்கி விடுவதைப் போல (வீணானது) ஆகும். அவர்கள் மீது அல்லாஹ் அநீதி இழைக்கவில்லை. மாறாக அவர்கள் தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொண்டனர்.

இந்த வசனத்தில் ‘நற்செயல்களில் விரைகின்றனர்’ என்பதன் பொருள் வேதம் வழங்கப்பட்ட நம்பிக்கையாளர்களின் செயல், இறுதித்தூதரால் இறைவனைக் குறித்த உண்மை அறிவிக்கப்பட்டபோது, அவர்கள் உடனடியாக அடையாளம் கண்டுகொண்டு பணிவுடன் அதை நோக்கி ஓடினார்கள். அந்த நேரத்தில், ஒருபுறம் மோசேயின் மார்க்கம் இருந்தது, அது வரலாற்று மகத்துவம், பாரம்பரியப் புனிதம் ஆகியவற்றின் ஆற்றலின் மீது நிறுவப்பட்டிருந்தது. மறுபுறம் இறைத்தூதர் முஹம்மது அவர்களுடைய மார்க்கம் இருந்தது. அதன் பின் சான்றுகளின் ஆற்றல் மட்டுமே இருந்தது. வரலாற்று மகத்துவம், மரபுசார்ந்த புனிதத்தின்

பலம் என்று எதுவும் இன்னும் அதில் வந்து சேரவில்லை. ஒருவரின் சொந்த மார்க்கத்திற்கும் அக்கால இறைத்தூதரின் மார்க்கத்திற்கும் இடையிலான இந்த வேறுபாடு, அக்கால இறைத்தூதரின் மார்க்கத்தைப் பின்பற்றுவதற்குப் பெரும் தடையாக இருந்தது. ஆனால் அவர்கள் இந்தத் தடையைத் தாண்டி வெற்றி பெற்று, அக்கால இறைத்தூதரின் மார்க்கத்தை முன்வந்து ஏற்றுக்கொண்டனர்.

செல்வம், பிள்ளைகளின் மீதான காதல், ஆகியவை தியாகத்தை எதிர்பார்க்கும் மார்க்கத்தைத் தழுவ மனிதனை அனுமதிப்பதில்லை. இருப்பினும், பகட்டான செயல்களைச் செய்வதன் மூலம், அவன் இறை மார்க்கத்தைப் பின்பற்றுவதாக நம்புகிறான். ஆனால் திடீரென வீசும் குளிர் காற்று முழு விளைச்சலையே அழிப்பது போல, மறுமை நாளின் புயல் அவர்களின் புறவயமான செயல்களைப் பயனற்றதாக்கும் இறுதித்தூதர் மீது நம்பிக்கை கொண்ட யூதர்கள் ஒரு சிலரே இருந்தனர். 'நிறுவப்பட்ட சமூகம்' என்று அவர்கள் தொடர்ந்து குறிப்பிடப்படுவது, ஒரு சில மக்களேயானாலும், இறைவனுக்கு அஞ்சுபவர்கள், இறைவனின் பார்வையில் கூட்டத்தை விட மதிப்புமிக்கவர்கள் என்பதைக் காட்டுகிறது.

மறுமையின் ஈடேற்றத்திற்கு, இறைத்தூதர் ஒருவர் பெயரில் இனக் குழுவாக மாறிப்போன ஒரு சமூகத்தில் இருப்பது மட்டும் போதாது. மாறாக, அவர்கள் வாக்குறுதிக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் அடிப்படைத் தேவை. வாக்குறுதி என்பது நம்பிக்கையைக் குறிக்கும். நம்பிக்கை என்பது அடியாருக்கும் இறைவனுக்கும் இடையிலான உடன்படிக்கை. நம்பிக்கை கொள்வதன் மூலம், ஓர் அடியான் இறைவனுக்கு முற்றிலும் உண்மையுள்ளவனாகவும் கீழ்ப்படிபவனாகவும் ஆக்குகின்ற கட்டுப்பாட்டிற்குத் தன்னை உட்படுத்துக் கொள்கிறான். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இனக்குழுவுடனான தொடர்பால் அல்ல, மாறாகத் தனிப்பட்ட செயல்கள்தாம் ஒரு மனிதனை இறைவனின் அருளுக்கும் மன்னிப்புக்கும் தகுதியுடையவனாக ஆக்குகின்றன.

இந்த உடன்படிக்கையில் அனைத்து மார்க்கக் கடமைகளும் உள்ளடங்கியுள்ளன. அவை, தனிமையில் இறைவனை நினைவுகூர்தல், அவனை வணங்குதல், மறுமையை மனதில் கொண்டு வாழ்தல், தங்களைச் சுற்றியுள்ளவர்களை நன்மையின் பக்கம் கொண்டுவர முயற்சி செய்தல், தீமை செய்பவர்களைத் தீமையிலிருந்து விலக்குவதில் தன் முழு முயற்சியையும் செலுத்துதல், இறைவனுக்கு விருப்பமான செயல்களில் விரைந்தோடிப் பங்கேற்றல் ஆகியவை. இதைச் செய்பவர்கள் தங்கள் இறைவனுடனான உடன்படிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றியவர்கள்.

அவர்கள் இறைவனின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடியார்கள். அவர்களுடைய செயல்களை இறைவன் அறிந்தவன், அவர்களுடைய செயல்களுக்கு அவன் நற்கூலி அளிப்பான், நியாயத்தீர்ப்பு நாளில் அவர்களை முழுமையாகக் கண்ணியப்படுத்துவான்.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوْا بِطَانَةً مِّنْ دُوْنِكُمْ لَا يَاْلُوْنَكُمْ
خَبَالًا ؕ وَدُّوْا مَا عَنِتُّمْ ۚ قَدْ بَدَتِ الْبَغْضَآءُ مِنْ اَفْوَاهِهِمْ ۖۚ وَمَا
تُخْفِيْ صُدُوْرُهُمْ اَكْبَرُ ؕ قَدْ بَيَّنَّا لَكُمُ الْاٰيٰتِ اِنْ كُنْتُمْ تَعْقِلُوْنَ ﴿۱۱۸﴾
هٰۤاَنْتُمْ اُولَآءِ تُحِبُّوْنَهُمْ وَلَا يُحِبُّوْنَكُمْ وَتُؤْمِنُوْنَ بِالْكِتٰبِ كُلِّهٖ ۚ
وَاِذَا لَقُوْكُمْ قَالُوْۤا اٰمَنَّا ۖۚ وَاِذَا خَلَوْا عَضُّوْا عَلَيْكُمُ الْاَنَامِلَ
مِنَ الْغَيْظِ ؕ قُلْ مُوْتُوْا بِغَيْظِكُمْ ؕ اِنَّ اللّٰهَ عَلِيْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿۱۱۹﴾
اِنْ تَمْسَسْكُمْ حَسَنَةٌ تَسُؤْهُمْ ۫ وَاِنْ تُصِبْكُمْ سَيِّئَةٌ يَّفْرَحُوْا بِهَا ؕ
وَاِنْ تَصْبِرُوْا وَتَتَّقُوْا لَا يَضُرُّكُمْ كَيْدُهُمْ شَيْـًٔا ؕ اِنَّ اللّٰهَ بِمَا
يَعْمَلُوْنَ مُحِيْطٌ ﴿۱۲۰﴾ ع ۱۲

[118]நம்பிக்கையாளர்களே! உங்களைச் சார்ந்தவர்களையன்றி மற்றவர்களை மனங்கலந்த நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். அவர்கள் உங்களுக்குக் கேடு விளைவிப்பதில் குறை வைக்க மாட்டார்கள். நீங்கள் துன்புறுவதையே அவர்கள் விரும்புவார்கள். பகையுணர்ச்சி அவர்களின் வாய்களிலிருந்தே வெளிப்பட்டுவிட்டது. அவர்களின் உள்ளங்களினுள் (மறைத்து வைத்து) இருப்பது அதைவிடக் கொடியது. நாம் உங்களுக்கு (அவர்களின்) அடையாளங்களைத் தெளிவுபடுத்திவிட்டோம்; நீங்கள் அறிவுடையோர்களாயின் (அறிந்துகொள்ளலாம்).

[119]நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்கள்; ஆனால் அவர்களோ உங்களை நேசிப்பதில்லை. நீங்களோ எல்லா வேதங்களையும் ஏற்றுக்கொள்கிறீர்கள். அவர்கள் உங்களைச் சந்தித்தால், ''நாங்கள் நம்பிக்கைகொண்டோம்'' என்று (வாயளவில்) கூறுகின்றனர். ஆனால் தனித்திருக்கும்போது உங்கள் மீதுள்ள சினத்தால் விரல்(நுனி)களைக் கடித்துக் கொள்கின்றனர். (நபியே!)

நீர் கூறும்: ''உங்கள் சினத்திலேயே செத்து மடியுங்கள்.'' உறுதியாக அல்லாஹ் (மனித) மனங்களிலுள்ளவற்றை முற்றும் அறிந்தவன். [120](நம்பிக்கையாளர்களே!) உங்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் அது அவர்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்துகிறது. உங்களுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால் அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். நீங்கள் பொறுமையை மேற்கொண்டு இறையச்சத்துடன் நடந்தால் அவர்களின் சூழ்ச்சி உங்களுக்குச் சிறிதும் தீங்கு விளைவிக்காது. அவர்கள் செய்து கொண்டிருக்கும் அனைத்தையும் அல்லாஹ் சூழ்ந்து அறிகிறான்.

வேதத்தைக் கொண்டிருந்த முந்தைய மக்கள் (யூதர்கள்) தங்கள் இறைத்தூதர்கள் மூலம் பெற்ற அதே இறைமார்க்கத்தின் மீதுதான் நம்பிக்கையாளர்களும் நம்பிக்கை கொண்டிருந்தனர். இருவரின் மார்க்கமும் அதன் சாராம்சத்தின் அடிப்படையில் ஒன்றாக இருந்தன. ஆனால் யூதர்கள் நம்பிக்கையாளர்களுக்கு மிகப்பெரிய பகைவர்களாக மாறினர். நம்பிக்கையாளர்கள் அனைத்து விதமான சிறப்பம்சங்களைக் கொண்டிருந்தும் கூட, அவர்களின் பார்வையில் ஓர் அன்பான வார்த்தைக்குத் தகுதியற்றவர்களாக இருந்தனர். முஸ்லிம்கள் ஏதேனும் துன்பத்தை சந்தித்தாலும் தங்கள் மனங்களுக்குள் மகிழ்ச்சி கொண்டனர். அவர்களை மனித அனுதாபத்திற்குத் தகுதியானவர்கள் என்று கூட அவர்கள் கருதவில்லை. இதற்குக் காரணம், யூதர்கள் இஸ்ராயீலிய இறைத்தூதர்களுடன் தொடர்புபடுத்தித் தாமாகவே ஒரு மதத்தை உருவாக்கி, அதன் மூலமாக மக்களிடையே ஒரு தலைமைத்துவ நிலையை உருவாக்கிக் கொண்டிருந்தனர். இறைவன் அருளிய மார்க்கத்தில், எல்லா கவனமும் இறைவன் மீது குவிந்திருக்கும். மனிதர்கள் தாமாக உருவாக்கிக் கொண்டிருக்கும் மதத்தில், மக்களின் கவனம் தாமாகவே உருவாக்கிக் கொண்ட மதத்தின் படைப்பாளர்கள், விளக்கவுரையாளர்களாகிய தனிநபர்கள் மீது இருக்கும். அத்தகையவர்கள் உண்மையான மார்க்க அழைப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால், அது அவர்களின் மகத்துவ நிலையிலிருந்து அவர்களை நீக்குவதைக் காண்கிறார்கள். இத்தகைய சூழ்நிலை ஏற்படும் போது, இறைவனின் உண்மையான அடியார்களின் பணி, எதிர்மறையான எதிர்வினைகளைத் தவிர்த்து, முற்றிலும் பொறுமையாகவும் இறையச்சத்துடனும் இருப்பதுதான். பொறுமை என்பதன் பொருள் எல்லாச் சூழ்நிலைகளிலும் தன்னை சத்தியத்திற்கு அர்ப்பணித்துக்கொள்வதாகும், மேலும் இறையச்சம் என்பது தீர்க்கமான ஆற்றல் உடையவன் இறைவன் மட்டுமே, வேறு யாரும் இல்லை என்று கருதுவதாகும். நம்பிக்கையாளர்கள் இந்த வகையான

உடன்பாடான அணுகுமுறையைக் காட்டினால், எதிரிகள் எண்ணிக்கையில் எவ்வளவு அதிகமாக இருந்தாலும், யாருடைய பகைமையும் அவர்களுக்குச் சிறிதளவு தீங்கும் விளைவிக்காது. இது மட்டுமன்றி நம்பிக்கையாளர்கள் யதார்த்தவாதிகளாகவும் இருக்க வேண்டும். அவர்களின் வெளிப்படையான தன்மையை யாரும் நியாயமற்ற முறையில் பயன்படுத்திக் கொள்ளாதபடி, அவர்கள் தங்கள் நண்பர்களையும் எதிரிகளையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

நம்பிக்கையாளர்களின் இதயங்களில் யூதர்கள் மீதுள்ள அன்பும், யூதர்களின் இதயங்களில் நம்பிக்கையாளர்கள் மீது அன்பின்மையும், இவர்களில் யார் சத்தியப் பாதையில் செல்கிறார்கள், யார் சத்தியம் தவறிய பாதையில் செல்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. இறைவன் அன்பிலும் நீதியிலும் முழுமையானவன். அவன் அனைத்து மனிதர்களையும் படைத்தவனும் அவர்களின் உரிமையாளனுமாவான். எனவே இறைவனை உண்மையாக அடைந்துவிட்டவனுடைய இதயம் அவனுடைய அனைத்து அடியார்களுக்காகவும் திறந்துவிடுகிறது. இந்தக் காரணத்தினால் எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியாக இறைவனின் குடும்பமாக மாறி விடுகிறார்கள். அவன் தனக்காக விரும்புவதையே எல்லோருக்கும் விரும்பத் தொடங்குகிறான். ஆனால் இறைவனை உண்மையிலேயே அடையாதவர்கள், தங்கள் விருப்பத்தை இறைவனின் விருப்பத்துடன் இணைக்காதவர்கள், தங்கள் சுயத்தின் தளத்தில் மட்டுமே வாழ்கிறார்கள். அவர்களின் வாழ்க்கை மூலதனம் அவர்களின் சொந்த நலன்களும், தம் இனம்சார்ந்த பாரபட்சங்களும்தாம். அவர்களுடைய இந்தக் குணம், தங்கள் சொந்தச் சமூகத்தைச் சேராத, தங்கள் நலன்களுக்கு எதிரானவர்கள் என்று அவர்கள் கருதும் மக்களின் எதிரிகளாக அவர்களை ஆக்குகிறது. இறைவன் மீது நம்பிக்கை கொள்ளும் அதே வேளையில், இந்த உலகம் இறைவனின் உலகம் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். இறை விருப்பம் இல்லாமல் இங்கு யாருடைய திட்டமும் பலனளிக்காது.

وَ اِذۡ غَدَوۡتَ مِنۡ اَهۡلِكَ تُبَوِّئُ الۡمُؤۡمِنِيۡنَ مَقَاعِدَ لِلۡقِتَالِ ؕ
وَاللّٰهُ سَمِيۡعٌ عَلِيۡمٌ ﴿۱۲۱﴾ اِذۡ هَمَّتۡ طَّآئِفَتٰنِ مِنۡكُمۡ اَنۡ تَفۡشَلَا ۙ
وَاللّٰهُ وَلِيُّهُمَا ؕ وَعَلَى اللّٰهِ فَلۡيَتَوَكَّلِ الۡمُؤۡمِنُوۡنَ ﴿۱۲۲﴾ وَلَقَدۡ نَصَرَكُمُ
اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ ۚ فَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمۡ تَشۡكُرُوۡنَ ﴿۱۲۳﴾
اِذۡ تَقُوۡلُ لِلۡمُؤۡمِنِيۡنَ اَلَنۡ يَّكۡفِيَكُمۡ اَنۡ يُّمِدَّكُمۡ رَبُّكُمۡ بِثَلٰثَةِ

اٰلٰفٍ مِّنَ الْمَلٰٓئِكَةِ مُنْزَلِيْنَ ﴿١٢٤﴾ بَلٰٓى ۙ اِنْ تَصْبِرُوْا وَ تَتَّقُوْا
وَ يَاْتُوْكُمْ مِّنْ فَوْرِهِمْ هٰذَا يُمْدِدْكُمْ رَبُّكُمْ بِخَمْسَةِ اٰلٰفٍ
مِّنَ الْمَلٰٓئِكَةِ مُسَوِّمِيْنَ ﴿١٢٥﴾ وَمَا جَعَلَهُ اللّٰهُ اِلَّا بُشْرٰى لَكُمْ وَ ۙ
لِتَطْمَئِنَّ قُلُوْبُكُمْ بِهٖ ؕ وَمَا النَّصْرُ اِلَّا مِنْ عِنْدِ اللّٰهِ الْعَزِيْزِ الْحَكِيْمِ ﴿١٢٦﴾ ۙ
لِيَقْطَعَ طَرَفًا مِّنَ الَّذِيْنَ كَفَرُوْٓا اَوْ يَكْبِتَهُمْ فَيَنْقَلِبُوْا
خَآئِبِيْنَ ﴿١٢٧﴾ لَيْسَ لَكَ مِنَ الْاَمْرِ شَيْءٌ اَوْ يَتُوْبَ عَلَيْهِمْ اَوْ يُعَذِّبَهُمْ فَاِنَّهُمْ ظٰلِمُوْنَ ﴿١٢٨﴾ وَ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَ مَا فِي الْاَرْضِ ؕ
يَغْفِرُ لِمَنْ يَّشَآءُ وَ يُعَذِّبُ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١٢٩﴾ ع

[121](நபியே!) விடிகாலையில் உமது குடும்பத்தினரிடமிருந்து புறப்பட்டு நம்பிக்கையாளர்களை (உஹுது)ப் போர்க்களத்தில் அவர்களுக்குரிய இடங்களில் நிறுத்தியதை (நீர் நினைவுகூர்வீராக!) அல்லாஹ் செவிமடுப்பவன்; முற்றும் அறிந்தவன். [122]உங்களில் இரு பிரிவினர் துணிவிழக்க இருந்த சமயத்தில் அல்லாஹ் அவ்விரு பிரிவினருக்கும் பாதுகாப்பாளனாக இருந்தான். (எனவே) நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வையே முற்றிலும் சார்ந்திருக்க வேண்டும். [123]அல்லாஹ் உங்களுக்கு பத்(ருப் போ)ரில் உதவி புரிந்துள்ளான். அப்போது நீங்கள் வலுவற்றவர்களாக இருந்தீர்கள். எனவே நீங்கள் நன்றிசெலுத்தும் பொருட்டு அல்லாஹ்வுக்கே அஞ்சுங்கள். [124]''உங்கள் இறைவன் மூவாயிரம் வானவர்களை இறக்கி உதவிபுரிவது உங்களுக்குப் போதாதா?'' என்று நம்பிக்கையாளர்களிடம் (அப்போது) நீர் கூறியதை (நபியே!) நினைவுகூரும். [125]நீங்கள் பொறுமையை மேற்கொண்டு இறையச்சத்துடன் நடந்துகொண்டால் எதிரிகள் உங்களைத் திடீரென்று தாக்கும்போது (போர்) அடையாளமுடைய ஐயாயிரம் வானவர்களின் மூலம் இறைவன் உங்களுக்கு உதவிபுரிவான். [126]உங்களுக்கு நற்செய்தியாகவும் உங்கள் உள்ளங்கள் அமைதி பெறுவதற்காகவுமே அல்லாஹ் இவ்வாறு செய்தான். யாவற்றினும் வல்லவனும் ஞானம் மிக்கவனுமாகிய அல்லாஹ்விடமிருந்து மட்டுமே உதவி கிடைக்கிறது. [127]இது மறுப்பாளர்களில் ஒரு பிரிவினரை அழிப்பதற்காகவோ அல்லது அவர்கள்

(தோல்வியினால் சிறுமைப்பட்டு ஏமாற்றத்துடன்) திரும்பிச் சென்று விடுவதற்காகவோ ஆகும். [128](நபியே! மறுப்பாளர்கள் தொடர்பாக) உமக்கு எந்த அதிகாரமுமில்லை. அல்லாஹ் அவர்களின் பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாம்; அல்லது அவர்களுக்குத் தண்டனை அளிக்கலாம். ஏனெனில் அவர்கள் தீவினையாளர்களாக இருக்கிறார்கள். [129]வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்விற்கே உரியனவாகும். தான் விரும்பியோரை மன்னிக்கிறான்; தான் விரும்பியோரைத் தண்டிக்கிறான். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன்.

இந்த வசனங்கள் உஹுதுப் போருக்குப் பிறகு (ஹிஜ்ரி 3) இறக்கியருளப்பட்டன. உஹுதுப் போரில் எதிரிகளின் எண்ணிக்கை மூவாயிரமாக இருந்தது. நம்பிக்கையாளர் தரப்பிலிருந்து ஆயிரம் பேர் போரிடப் புறப்பட்டு வந்திருந்தனர். ஆனால் வழியில், அப்துல்லாஹ் பின் உபை தனது முந்நூறு தோழர்களுடன் பிரிந்து சென்றான். இந்தச் சம்பவம் சில அன்சாரி நம்பிக்கையாளர்களுக்கும் மனவலிமை குன்றிச் சோர்வடையச் செய்தது. ஆனால் இறைத்தூதர் அவர்கள் நாம் நம்மை நம்பிப் புறப்படவில்லை, மாறாக இறைவனை நம்பிப் புறப்பட்டிருக்கிறோம் என்பதை அவர்களுக்கு நினைவூட்டினார்கள். எனவே இந்த உண்மையைப் புரிந்துகொள்ள இறைவன் நம்பிக்கையாளர்களின் இதயங்களைத் திறந்தான். சூழ்நிலைகளின் கடுமை காரணமாக ஒரு நம்பிக்கையாளனுள் தற்காலிக பலவீனம் உருவாயினும், இப்படிப்பட்ட நேரத்தில் இறைவன் அவனைத் தனியாக விட்டுவிடுவதில்லை. மாறாக அவனுக்கு உதவியாளனாக மாறி, அவனை நம்பிக்கையின் நிலையில் நிலைத்திருக்கச் செய்கிறான். இறைவனின் இந்த உதவியே கூட்டு மட்டத்தில் நிகழ்ந்தது. உஹுதுப் போரில், பகைவர்கள் நம்பிக்கையாளர்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை வென்றார்கள். இந்நிலையில், பகைவர்கள் தோல்விக்குப் பிறகு நம்பிக்கையாளர்களின் பலத்தை முற்றிலுமாக நசுக்கச் சரியான வாய்ப்பைப் பெற்றிருந்தனர், ஆனால், வெற்றி பெற்ற போதிலும், பகைவர்களின் இராணுவம் போர்க்களத்தைக் கைவிட்டுப் பின்வாங்கியது. இது இராணுவ வரலாற்றில் ஒரு வியக்கத்தக்க நிகழ்வு. இது இறைவனின் தனிப்பட்ட உதவியாக இருந்தது. அவன் பகைவர்களின் முகத்தை 'மதீனாவின்' திசைக்குத் திருப்புவதற்குப் பதிலாக "மக்காவின்" திசைக்குத் திருப்பிவிட்டான். இறுதியாகத் தோல்வியைத் தழுவியிருந்தவர்களே வெற்றியாளர்களைப் பின்தொடர்ந்தனர்.

நம்பிக்கையாளனுடைய சுபாவம் எப்படி இருக்க வேண்டுமெனில் எண்ணிக்கை அல்லது வளங்களின் பற்றாக்குறை குறித்துப் பயப்படக் கூடாது. எண்ணிக்கை குறைவாக இருந்தால், இறைவன் தன் வானவர்களை அனுப்பி எண்ணிக்கையின் பற்றாக்குறையை ஈடுசெய்வான் என்று அவன் நம்ப வேண்டும். அவனுக்குப் பொருள் பற்றாக்குறை இருந்தால், இறைவன் தனது சார்பாக சூழ்நிலைகளை உருவாக்குவான் என்று அவன் நம்ப வேண்டும். அது அவனுக்குப் பொருள் பற்றாக்குறையை ஈடுசெய்யும். வெற்றி என்பது பொருள் வளங்களைச் சார்ந்தது அல்ல, மாறாக பொறுமையையும் இறையச்சத்தையும் சார்ந்தது. இறைவனுக்கு அஞ்சி அவன் மீது நம்பிக்கை வைப்பவர்களுக்கு இறைவனிடமிருந்து இரண்டு வகையான உதவிகள் கிடைக்கின்றன. ஒன்று, அவர்களின் பகைவர்களில் ஒரு பகுதியைத் தனியாகப் பிரித்தெடுப்பது. இரண்டாவது, பகைவர்களைத் தோற்கடித்து அவர்களை அடக்கி விடுவது. முதல் வெற்றி அழைப்பின் மூலம் வருகிறது. எதிர்த்தரப்பில் இருப்பவர்களிடம் இறைவன் சிறிதேனும் வாழ்க்கையின் அறிகுறிகளைக் காணும்போது, அவர்கள் பார்வைக்கு மார்க்கத்தின் உண்மைத்தன்மையை ஒளிரச் செய்து விடுகிறான். அவர்கள் பொய்யின் அணியை விட்டு வெளியேறி சத்தியத்தின் அணியில் இணைகிறார்கள். இதனால் அவர்கள் எதிர்த் தரப்பின் பலவீனத்திற்கும் நம்பிக்கையாளர்களின் பலத்திற்கும் காரணமாகிறார்கள். இரண்டாவது சூழலில், இறைவன் நம்பிக்கையாளர்களுக்குப் பலத்தையும் தைரியத்தையும் அளித்து, அவர்களுக்குத் தனிப்பட்ட உதவியை வழங்கி, எதிர் தரப்பின் மீது மேலாதிக்கத்தை நிலைநாட்டச் செய்கிறான்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَاْكُلُوا الرِّبٰوٓا اَضْعَافًا مُّضٰعَفَةً ۠
وَّاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ۚ﴿١٣٠﴾ وَاتَّقُوا النَّارَ الَّتِيْٓ اُعِدَّتْ
لِلْكٰفِرِيْنَ ۚ﴿١٣١﴾ وَاَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ۚ﴿١٣٢﴾
وَسَارِعُوْٓا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّمٰوٰتُ
وَالْاَرْضُ ۙ اُعِدَّتْ لِلْمُتَّقِيْنَ ۙ﴿١٣٣﴾ الَّذِيْنَ يُنْفِقُوْنَ فِي السَّرَّآءِ
وَالضَّرَّآءِ وَالْكٰظِمِيْنَ الْغَيْظَ وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ ؕ وَاللّٰهُ
يُحِبُّ الْمُحْسِنِيْنَ ۚ﴿١٣٤﴾ وَالَّذِيْنَ اِذَا فَعَلُوْا فَاحِشَةً اَوْ ظَلَمُوْٓا
اَنْفُسَهُمْ ذَكَرُوا اللّٰهَ فَاسْتَغْفَرُوْا لِذُنُوْبِهِمْ ۫ وَمَنْ يَّغْفِرُ

الذُّنُوْبَ اِلَّا اللّٰهُ ۖ وَلَمْ يُصِرُّوْا عَلٰى مَا فَعَلُوْا وَهُمْ يَعْلَمُوْنَ ﴿١٣٥﴾
اُولٰٓئِكَ جَزَآؤُهُمْ مَّغْفِرَةٌ مِّنْ رَّبِّهِمْ وَجَنّٰتٌ تَجْرِىْ مِنْ تَحْتِهَا
الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا ؕ وَنِعْمَ اَجْرُ الْعٰمِلِيْنَ ﴿١٣٦﴾ قَدْ خَلَتْ مِنْ
قَبْلِكُمْ سُنَنٌ ۙ فَسِيْرُوْا فِى الْاَرْضِ فَانْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ
الْمُكَذِّبِيْنَ ﴿١٣٧﴾ هٰذَا بَيَانٌ لِّلنَّاسِ وَهُدًى وَّمَوْعِظَةٌ لِّلْمُتَّقِيْنَ ﴿١٣٨﴾

[130](ஓரிறை) நம்பிக்கையாளர்களே! வட்டியைப் பன்மடங்காகப் பெருக்கி உண்ணாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். [131](ஓரிறை) மறுப்பாளர்களுக்காகத் தயார் செய்யப்பட்டுள்ள (நரக) நெருப்பிற்கு அஞ்சி நடந்துகொள்ளுங்கள். [132]அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கட்டுப்படுங்கள். அதனால் நீங்கள் அருள் செய்யப்படலாம். [133]உங்கள் இறைவனின் மன்னிப்பையும் சொர்க்கத்தையும் நோக்கி விரையுங்கள். அது வானங்கள், பூமி ஆகியவற்றின் அளவு விரிவானது. அது இறையச்சமுடையோருக்காகத் தயார் செய்யப்பட்டுள்ளது. [134]அவர்கள் வளமான நிலையிலும் வறிய நிலையிலும் இறைவழியில் செலவுசெய்வர். சினத்தை அடக்கி மக்களை மன்னித்துவிடுவர். அல்லாஹ் நற்செயல்கள் புரிவோரை நேசிக்கிறான். [135]அவர்கள் மானக்கேடான செயலைச் செய்துவிட்டாலோ தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொண்டாலோ அல்லாஹ்வை நினைவுகூர்ந்து தம் பாவங்களுக்காக மன்னிப்புக் கோருவர். அல்லாஹ்வைத் தவிர வேறு யார் அவர்களின் பாவங்களை மன்னிக்க முடியும்? தெரிந்துகொண்டே தாம் செய்தவற்றில் அவர்கள் பிடிவாதமாக நிலைத்திருக்கவும் மாட்டார்கள். [136]இத்தகையோரின் கூலி அவர்களின் இறைவனிடமிருந்து கிடைக்கின்ற (பாவ)மன்னிப்பும் (சொர்க்கச்) சோலைகளுமாகும். அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அங்கு அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பர். நன்மை செய்வோரின் கூலி எவ்வளவு சிறந்தது! [137]உங்களுக்கு முன்னர் பல (சமூகங்களின்) முன்னுதாரண நிகழ்வுகள் கடந்துவிட்டன. எனவே உண்மையைப் பொய்யென்று கூறியோரின் முடிவு என்னவாயிற்று என்பதைப் பூமியில் பயணம் செய்து பாருங்கள். [138](குர்ஆன் ஆகிய) இது மக்களுக்குத் தெளிவான விளக்கமாகவும் இறையச்சமுடையோருக்கு வழிகாட்டியாகவும் அறிவுரையாகவும் இருக்கிறது.

வட்டி வணிகம் பொருள் வழிபாட்டின் மோசமான இறுதி வடிவமாகும். இந்த வழிபாட்டில் மூழ்கிக் கிடக்கும் ஒருவன் தனது செல்வத்தை எப்படி இரண்டு மடங்காகவும், நான்கு மடங்காகவும் பெருக்குவது என்று அல்லும் பகலும் கவலைப்படுகிறான். அவன் உலகச் செல்வத்தை அடைவதை நோக்கி ஓடத்தொடங்குகின்றான். உண்மையில், ஒரு மனிதன் மறுமையின் சொர்க்கத்தை நோக்கி ஓடுவதும், இறைவனின் அருளுக்காகவும், உதவிக்காகவும் மிகமிகப் பேராசை கொண்டிருப்பதும்தான் சரியானது. ஒரு மனிதன் உலகில் தனது செல்வத்தைப் பெருக்க விரும்புவதெல்லாம் மரியாதை பெறுவதற்காகவும் உலகில் பெருமையான வாழ்க்கையை உறுதி செய்வதற்காகவும்தான். ஆனால் இந்த உலகத்தின் கண்ணியத்திற்கும் வெற்றிக்கும் எந்த உண்மையான மதிப்பும் இல்லை. உண்மையான முக்கியத்துவத்துக்குரிய செல்வம் சொர்க்கமாகும், அதன் மகிழ்ச்சிகளும் இன்பங்களும் கணக்கிட முடியாதவை. இந்தச் சொர்க்கத்தை நோக்கி ஓடுபவன்தான் அறிவாளி. சொர்க்கத்தை நோக்கி விரைவது என்பதன் பொருள் ஒருவர் தனது செல்வத்திலிருந்து மிகமிக அதிகமாக இறைவனின் பாதையில் கொடுக்க வேண்டும் என்பதாகும். உலக வெற்றிக்கான வழிமுறை செல்வத்தை 'அதிகரிப்பதாகும்.' மறுமையில் வெற்றியை அடைவதற்கான வழிமுறை, செல்வத்தைக் 'குறைப்பதாகும்.' முதல் வகை மனிதர்களின் மூலதனம் செல்வத்தின் மீதான அன்பு என்றால், இரண்டாவது வகை மக்களின் மூலதனம் இறைவனின் மீதும் தூதரின் மீதும் உள்ள அன்பாகும். முதல் வகை மனிதர்களுக்கு உலக ஆதாயத்தில் ஆர்வம் இருந்தால், இரண்டாவது வகை மனிதர்களுக்கு மறுமையின் ஆதாயத்தில் ஆர்வம் அதிகம். முதல் வகை மனிதர்கள் இந்த உலக இழப்பைப் பற்றி அச்சம் கொள்கிறார்கள், இரண்டாவது வகை மனிதர்கள் மறுமையின் இழப்பைப் பற்றி அஞ்சுகிறார்கள்.

இறைவனுக்கு அஞ்சுவோருக்குள் 'இஹ்சான்' (இறைவனுக்கு முன்னிற்கும் உணர்வு) என்ற இயல்பு உருவாகிறது. அதாவது, எதைச் செய்தாலும், அது இறைவனின் பார்வையில் மிகவும் விரும்பத்தக்க ஒன்றாகக் கருதப்படும் வகையில் செய்வது. அவர்கள் சுதந்திரமான வாழ்க்கைக்குப் பதிலாகக் கட்டுப்பாடான வாழ்க்கையை வாழ்கிறார்கள். அவர்கள் இறை மார்க்கத்தின் தேவையைத் தங்கள் சொந்தத் தேவையாகக் கருதத் தொடங்குகிறார்கள். அவர்களிடம் குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரி, எல்லாச் சூழ்நிலையிலும் அதற்காகச் செலவிடுகிறார்கள். அவர்கள் யார் மீதாவது கோபப்படும் போது, அதை உள்ளுக்குளேயே அடக்கிக் கொள்கிறார்கள். யாரிடமாவது மனக்குறை இருந்தால், பழிவாங்குவதற்குப் பதிலாக அவர்களை

மன்னித்துவிடுகிறார்கள். தவறுகள் அவர்களாலும் நேர்வதுண்டு; ஆனால் அவை தற்காலிகமானவை. தவறு செய்த பிறகு, அவர்கள் உடனடியாக விழிப்படைந்து இறைவனிடம் திரும்புகிறார்கள். அமைதியற்ற நிலையில் அவர்கள் இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு, அவன் கருணையால் தங்கள் தவறுகளைத் திரையிட்டு மறைக்கும்படி வேண்டத் தொடங்குகிறார்கள். குர்ஆனில் வார்த்தைகளில் சொல்லப்பட்டிருப்பது வரலாற்றில் செயல் முறையில் உள்ளது. ஆனால் அறிவுரையை விரும்புபவர்கள் மட்டுமே அதை ஏற்றுக்கொள்கிறார்கள்.

وَلَا تَهِنُوْا وَلَا تَحْزَنُوْا وَاَنْتُمُ الْاَعْلَوْنَ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿١٣٩﴾
اِنْ يَّمْسَسْكُمْ قَرْحٌ فَقَدْ مَسَّ الْقَوْمَ قَرْحٌ مِّثْلُهٗ ؕ وَتِلْكَ
الْاَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ ۚ وَلِيَعْلَمَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا
وَيَتَّخِذَ مِنْكُمْ شُهَدَآءَ ؕ وَاللّٰهُ لَا يُحِبُّ الظّٰلِمِيْنَ ﴿١٤٠﴾
وَلِيُمَحِّصَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا وَيَمْحَقَ الْكٰفِرِيْنَ ﴿١٤١﴾ اَمْ
حَسِبْتُمْ اَنْ تَدْخُلُوا الْجَنَّةَ وَلَمَّا يَعْلَمِ اللّٰهُ الَّذِيْنَ جٰهَدُوْا
مِنْكُمْ وَيَعْلَمَ الصّٰبِرِيْنَ ﴿١٤٢﴾ وَلَقَدْ كُنْتُمْ تَمَنَّوْنَ الْمَوْتَ مِنْ
قَبْلِ اَنْ تَلْقَوْهُ ۖ فَقَدْ رَاَيْتُمُوْهُ وَاَنْتُمْ تَنْظُرُوْنَ ﴿١٤٣﴾ ع ١٤

[139](நம்பிக்கையாளர்களே!) மனம் தளர்ந்து விடாதீர்கள்; கவலைப்படாதீர்கள். நம்பிக்கையாளர்களாயின் நீங்கள் தான் மேலோங்கி நிற்பீர்கள். [140]உங்களுக்குக் காயம் ஏற்பட்டுள்ளதென்றால் எதிரிகளுக்கும் இதுபோன்று காயம் ஏற்படத்தான் செய்தது. இத்தகைய நாட்களை நாம் மனிதர்களிடையே மாறிமாறி வரச்செய்கிறோம். இது ஏனெனில் (அல்லாஹ்) நம்பிக்கையாளர்களை(ப் பிறர்) அறி(யச்செய்)வதற்காகவும் உங்களில் சிலரை (உயிர்த்தியாக)ச் சாட்சிகளாக்குவதற்காகவும்தான். அநீதி இழைப்போரை அல்லாஹ் நேசிப்பதில்லை. [141]நம்பிக்கையாளர்களை (அவர்களின் பாவங்களிலிருந்து பிரித்து)த் தூய்மைப்படுத்தவும் மறுப்பாளர்களை அழித்துவிடுவதற்காகவும்தான் அல்லாஹ் இவ்வாறு செய்கிறான். [142]உங்களில் இறைவழியில் பாடுபடுபவர்கள் யார் என்பதையும் மன உறுதியோடு நிற்பவர்கள் யார் என்பதையும் அல்லாஹ் அறியாமலேயே நீங்கள் சொர்க்கம் சென்றுவிடலாம் என்று எண்ணுகிறீர்களா?

[143]நீங்கள் இறப்பைச் சந்திக்கும் முன்னரே (இறைவழியில்) அதனை (அடைய) விரும்பிக் கொண்டிருந்தீர்கள். இப்போது அதனைக் கண்கூடாகப் பார்த்து விட்டீர்கள்.

நம்பிக்கை கொள்வது என்பது இறைவனுக்காக வாழ்வதையும் இறை வனுக்காக இறப்பதையும் ஏற்றுக்கொள்வதாகும் இவ்வாறு நம்பிக்கை கொண்டவர்களுக்கு இறைவன் இவ்வுலகில் ஆதிக்கத்தையும் மறுமையில் சொர்க்கத்தையும் வழங்குவதாக வாக்குறுதி அளித்திருக்கிறான். இவ்வுலகில் அவர்களை மறுத்தவர்களுக்கு எதிராக இறைவன் தனது நீதி மன்றத்தில் சாட்சிகளாக நியமிக்கப்படும் மிக முக்கியமான கௌரவத்தையும் அவர்களுக்கு வழங்குவான். அவர்களின் சாட்சியத்தின் அடிப்படையில் மறுத்தவர்களின் நிரந்தர விதியை அவன் தீர்மானிப்பான். ஆனால் இந்த நிலையை வெறும் வாய்மொழியினாலான ஒப்புதலால் மட்டுமே அடைய முடியாது; இதற்காக, ஒருவர் பொறுமை, கடும் முயற்சி ஆகியவற்றின் மூலம் தமது உண்மைத் தன்மையை நிரூபிக்க வேண்டியது அவசியம். ஒரு நம்பிக்கையாளன் தனது தனிப்பட்ட வாழ்க்கையை நம்பிக்கை, இஸ்லாம் ஆகியவற்றின் மீது அமைத்தாலும், மற்றவர்கள் முன் இறைவனின் மார்க்கத்திற்குச் சாட்சியாக நின்றாலும், மற்றவர்களிடமிருந்து எந்த நிலையிலும் சிரமங்களையும் தடைகளையும் அவன் எதிர்கொள்வான். இந்தச் சிரமங்களையும் தடைகளையும் எதிர்கொள்வது ஜிஹாத் (கடும் முயற்சி) ஆகும், எல்லாச் சூழ்நிலைகளிலும் ஒருவர் தான் ஏற்றுக்கொண்டதில் உறுதியாக இருப்பது பொறுமை எனப்படும். இந்தக் கடும் முயற்சிக்கும் பொறுமைக்கும் நிரூபணமாய் விளங்குபவர்கள்தாம் சொர்க்கத்தில் வசிக்கத் தகுதியானவர்கள். இதிலிருந்தே உலகின் உயர்நிலைக்கான வழிபிறக்கிறது. 'கடும் முயற்சி' அவர்களின் தொடர்ச்சியான முழுமையான செயலுக்குரிய உத்தரவாதமாகும். 'பொறுமை' என்பது அவர்கள் ஒருபோதும் உணர்ச்சிவசப்பட்டு எந்தச் செயல் திட்டத்தையும் மேற்கொள்ள மாட்டார்கள் என்பதற்கான உத்தரவாதம் ஆகும். இந்த இரண்டு செயல்பாடுகளும் எந்தச் சமூகத்தில் உருவாக்கம் பெறுகின்றனவோ அச்சமூகத்தவர்களின் வெற்றி இறைவன் படைத்த இந்த உலகில் வளமான மண்ணில் ஒரு விதை முளைப்பதைப் போல உறுதியாகி விடுகிறது.

ஒருவர் இறைவனின் பாதையில் நடக்க நினைக்கும்போது, மற்றவர்களிட மிருந்து பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. இந்தப் பிரச்சினைகள் சில சமயங்களில் அவரை நம்பிக்கையற்ற நிலையில் விட்டுவிடுகின்றன. சில நேரங்களில் அவை உலகியல் நன்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று பாடம் கற்பிக்கின்றன. சில நேரங்களில் அவை அவருக்குள் எதிர்மறை உளவியலைக் கிளறுகின்றன. சில சமயங்களில்,

இறைவனின் தூய மார்க்கத்திற்கு மாறாக, மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பிரபலமான மதத்தின் பதிப்பை முன்வைக்கின்றன. இதுதான் தற்போதைய உலகில் மனிதனுக்கு ஏற்படும் சோதனை. இந்தச் சந்தர்ப்பங்களில் ஒருவன் நடந்துகொள்ளும் விதம், அவன் தான் ஏற்றுக்கொண்ட நம்பிக்கையில் உண்மையானவனா, பொய்யானவனா என்பதைக் காட்டுகிறது. அவனுடைய செயல்கள் அவனுடைய நம்பிக்கைக்கு ஏற்ப இருந்தால், அவன் உண்மையுள்ளவன். அவை அதற்கு முரணாக இருந்தால், அவன் ஒரு பொய்யன். சாட்சியாக (இறைவனின் சாட்சியாக) மாறுவது இந்தப் பயணத்தின் இறுதிக்கட்டமாகும். இறைவனின் அடியார் ஒருவர் மக்களிடையே சத்திய அழைப்பாளராக எழுந்தார்; அவர் எதை நோக்கி அழைத்தாரோ அதில் முழு உறுதியாக இருந்தார்; மக்கள் அவரை இழிவாகக் கருதினர். ஆனால் அவர் யாரையும் பொருட்படுத்த வில்லை; அவருக்குச் சிரமங்கள் வந்தன, ஆனால் அவர்களால் அவரை அவரது நிலையிலிருந்து அகற்ற முடியவில்லை; அவர் பலம் குன்றவில்லை, எதிர்மறை உளவியலுக்குப் பலியாகவில்லை. அவரது உயிருக்கும் உடைமைகளுக்கும் ஆபத்து நேர்ந்தபோதிலும் அவர் அழைப்பியல் நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கவில்லை. இந்தச் சோதனை புயலின் தீவிரம்கொண்ட சோதனை. ஆனால் இதைக் கடந்த பின்னரே ஒருவர் ஏக இறைவன் தனது அடியார்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் ஒரு மனிதராக மாறுகிறார். ஒருவர் எல்லாச் சூழ்நிலைகளிலும் தனது அழைப்புப் பணியில் நிலைத்திருப்பதன் மூலம் தான் கூறும் செய்தியில் தனக்கிருக்கும் நம்பிக்கையை நிரூபிக்கிறார். அவர் தெரிவிப்பது மிகவும் தீவிரமான செய்தி. மேலோட்டமான செய்தி அல்ல.

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ اَفَا۟ٮِٕنْ
مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰۤى اَعْقَابِكُمْ ؕ وَمَنْ يَّنْقَلِبْ عَلٰى
عَقِبَيْهِ فَلَنْ يَّضُرَّ اللّٰهَ شَيْـًٔا ؕ وَسَيَجْزِى اللّٰهُ الشّٰكِرِيْنَ ﴿۱۴۴﴾
وَمَا كَانَ لِنَفْسٍ اَنْ تَمُوْتَ اِلَّا بِاِذْنِ اللّٰهِ كِتٰبًا مُّؤَجَّلًا ؕ وَ
مَنْ يُّرِدْ ثَوَابَ الدُّنْيَا نُؤْتِهٖ مِنْهَا ۚ وَمَنْ يُّرِدْ ثَوَابَ
الْاٰخِرَةِ نُؤْتِهٖ مِنْهَا ؕ وَسَنَجْزِى الشّٰكِرِيْنَ ﴿۱۴۵﴾ وَكَاَيِّنْ
مِّنْ نَّبِيٍّ قٰتَلَ ۙ مَعَهٗ رِبِّيُّوْنَ كَثِيْرٌ ۚ فَمَا وَهَنُوْا لِمَاۤ

اَصَابَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَمَا ضَعُفُوْا وَمَا اسْتَكَانُوْا ؕ وَ
اللّٰهُ يُحِبُّ الصّٰبِرِيْنَ ﴿۱۴۶﴾ وَمَا كَانَ قَوْلَهُمْ اِلَّاۤ اَنْ قَالُوْا
رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِيْۤ اَمْرِنَا وَثَبِّتْ اَقْدَامَنَا
وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ ﴿۱۴۷﴾ فَاٰتٰىهُمُ اللّٰهُ ثَوَابَ الدُّنْيَا
وَحُسْنَ ثَوَابِ الْاٰخِرَةِ ؕ وَاللّٰهُ يُحِبُّ الْمُحْسِنِيْنَ ﴿۱۴۸﴾ ع ۱۹

[144]முஹம்மத் ஒரு தூதரேயாவார். அவருக்கு முன்னரும் தூதர்கள் வந்து சென்றுள்ளனர். அவர் இறந்துவிட்டாலோ கொலை செய்யப்பட்டாலோ வந்த வழியே நீங்கள் திரும்பிச் சென்று விடுவீர்களா என்ன? அவ்வாறு திரும்பிச் செல்பவர் அல்லாஹ்வுக்கு எந்தத் தீங்கும் இழைத்துவிட முடியாது. நன்றி செலுத்துவோருக்கு அல்லாஹ் (அதற்குரிய) கூலியை வழங்கிவிடுவான். [145]எந்த உயிரும் அல்லாஹ்வின் அனுமதியின்றி (அவன் விதித்த நேரத்திலன்றி) இறவாது. எவர் உலகியல் பயனை விரும்புகிறாரோ அவருக்கு நாம் இவ்வுலகிலேயே அதனை அளித்துவிடுகிறோம். எவர் மறுமையின் பயனை விரும்புகிறாரோ அவருக்கு நாம் அதனையும் வழங்குவோம். நன்றி செலுத்துவோருக்குரிய கூலியை (உறுதியாக) வழங்கிவிடுவோம். [146]எத்தனையோ தூதர்களும் அவர்களுடன் (இணைந்து) இறையடியார்கள் பலரும் போர் புரிந்துள்ளனர். இறைவழியில் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களால் அவர்கள் மனம் தளர்ந்து விடவுமில்லை; பலவீனப்பட்டுப் (பகைவர்களுக்குப்) பணிந்துவிடவுமில்லை. இத்தகைய பொறுமையாளர்களை அல்லாஹ் நேசிக்கிறான். [147](இத்தகைய நேரங்களில்) அவர்களுடைய இறைஞ்சுதல் ''இறைவா! எங்கள் பாவங்களையும் எங்கள் செயல்களில் நாங்கள் வரம்புமீறிச் செய்தவற்றையும் மன்னித்து விடுவாயாக! எங்களின் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! மறுப்பாளருக்கு எதிராக எங்களுக்கு உதவிபுரிவாயாக!'' என்பதாகத்தான் இருந்தது. [148]எனவே அவர்களுக்கு அல்லாஹ் இவ்வுலக நன்மையையும் மறுமையின் அழகிய நன்மையையும் வழங்கினான். அல்லாஹ் நற்செயல்புரிவோரை நேசிக்கிறான்.

உஹுதுப் போரில், இறைத்தூதர் அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்ற செய்தி பரவி விட்டது. அந்த நேரத்தில் சில நம்பிக்கையாளர்கள் மனவலிமை குன்றிச் சோர்வுற்றனர். ஆனால் இறைவனின் உண்மையான அடியார்களின் மார்க்கப்பற்று எந்தத் தனி மனித ஆளுமையைச் சார்ந்துமில்லை. இறைவன் எத்தகைய மார்க்கப் பற்றை விரும்புகிறான் என்றால், அடியான் தனது முழு ஆன்மாவுடனும், இருப்புடனும் இறைவன் ஒருவனுடன் மட்டுமே ஐக்கியமாகி விடவேண்டும் என்பதைத்தான். ஒரு நம்பிக்கையாளன் இஸ்லாத்தை அதன் கொள்கை வழியிலான நம்பகத்தன்மையின் அடிப்படையில் தழுவ வேண்டும். எந்தவொரு தனி மனித ஆளுமையின் அடிப்படையிலும் அல்ல. இந்த வழியில் இஸ்லாத்தை அடைபவருக்கு, இஸ்லாம் ஓர் அருட்கொடையாக ஆகி விடுகிறது, அவனது ஆன்மாவிற்குள் நன்றியுணர்வின் ஆறு பெருக்கெடுத்து ஓடத் தொடங்கிவிடுகிறது. அவன் இவ்வுலகிற்குப் பதிலாக மறுமையை எல்லாமாகக் கருதத் தொடங்குகிறான். வாழ்க்கை அவனுக்கு ஒரு நிலையற்றதாக – எந்த நேரத்திலும் மரணத்தை எதிர்கொள்ளக்கூடிய ஒன்றாக மாறிவிடுகிறது. அவன் ஒவ்வொரு நிகழ்வும் இறை அனுமதியின் கீழ் நிகழ்கின்ற இறைவனின் ஒரு தொழிற்கூடமாகப் பிரபஞ்சத்தைப் பார்க்கிறான். அங்கே கொடுப்பவனும் அவனே, எடுத்துக்கொள்பவனும் அவனே. இத்தகையவர்கள்தாம் இறைவனின் பாதையில் உண்மையான பயணிகள் ஆவர். இறைவன் விரும்பினால், அவர்களுக்கு இவ்வுலகில் கண்ணியத்தையும் அதிகாரத்தையும் வழங்கிவிடுகிறான், மறுமையிலோ மகத்தான, நிரந்தரமான வெகுமதிகள் அவர்களுக்கு மட்டுமே உரியவை. ஆயினும், இத் தரவரிசையில் எல்லாச் சோதனைகளிலும் தேர்ச்சி பெற்ற ஒருவனுக்கு மட்டுமே இடம் கிடைக்கும். அவனது புறவயமான ஆதரவுகள் எல்லாம் தொலைந்து போனாலும், அவனது கண்கள் இறைவன் மீதே நிலைத்திருக்க வேண்டும். அவனது உயிருக்கு அச்சுறுத்தல் வந்தாலும் கூட அது அவனது மன வலிமையைக் குறைய விடக்கூடாது. உலகம் அழிவுற்றாலும், அவன் பின்வாங்கக் கூடாது. அவனுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால், அதை அவன் தனது சொந்த அலட்சியத்தின் விளைவாகக் கருதி இறைவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். ஏதேனும் நன்மையைப் பெற்றால், அதை இறைவனிடமிருந்து கிடைத்த அருட்கொடையாகக் கருதி நன்றி செலுத்த வேண்டும். நம்பிக்கையாளனுக்கு அன்றாடம் நடக்கும் இந்தச் சோதனை, சில சமயங்களில் உயிரையே பணயம் வைக்க வேண்டிய, உலுக்கி விடும் நிலையைச் சென்றடைந்து விடுகிறது. இச்சந்தர்ப்பங்களில் கூட, மனிதன் கோழைத்தனத்தைக் காட்டாமல், நம்பிக்கையின்மையால் பீடிக்கப்படாமல், எந்தச் சூழ்நிலையிலும் மார்க்கத்தின் பகைவர்கள் முன் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல்,

இருந்தால் அவன் சோதனையின் இறுதிக் கட்டத்தில் தேர்ச்சி பெற்றவன் ஆவான். இப்படிப்பட்டவர்களுக்கே எல்லாவிதமான உயர்வுகளும் உரியவை. வரலாற்றில் மிகவும் மதிப்புமிக்க மனிதர்கள், இறைவனை இவ்வாறு கண்டடைந்து, இறைவனின் திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள்தாம். நெருக்கடியான தருணங்களில் நம்பிக்கையாளர்கள் ஒன்றுபடுவதும், பொறுமையுடன் சத்தியத்தில் நிலைத்திருப்பதும்தான் நம்பிக்கையாளர்களை இறைவனின் உதவிக்குத் தகுதியானவர்களாக ஆக்குகின்றன.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ تُطِيْعُوا الَّذِيْنَ كَفَرُوْا يَرُدُّوْكُمْ
عَلٰٓى اَعْقَابِكُمْ فَتَنْقَلِبُوْا خٰسِرِيْنَ ﴿١٤٩﴾ بَلِ اللّٰهُ مَوْلٰىكُمْ ۚ
وَهُوَ خَيْرُ النّٰصِرِيْنَ ﴿١٥٠﴾ سَنُلْقِيْ فِيْ قُلُوْبِ الَّذِيْنَ كَفَرُوا
الرُّعْبَ بِمَآ اَشْرَكُوْا بِاللّٰهِ مَا لَمْ يُنَزِّلْ بِهٖ سُلْطٰنًا ۚ وَمَاْوٰىهُمُ
النَّارُ ۭ وَبِئْسَ مَثْوَى الظّٰلِمِيْنَ ﴿١٥١﴾ وَلَقَدْ صَدَقَكُمُ اللّٰهُ
وَعْدَهٗٓ اِذْ تَحُسُّوْنَهُمْ بِاِذْنِهٖ ۚ حَتّٰٓى اِذَا فَشِلْتُمْ وَتَنَازَعْتُمْ
فِي الْاَمْرِ وَعَصَيْتُمْ مِّنْۢ بَعْدِ مَآ اَرٰىكُمْ مَّا تُحِبُّوْنَ ۭ مِنْكُمْ
مَّنْ يُّرِيْدُ الدُّنْيَا وَمِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الْاٰخِرَةَ ۚ ثُمَّ
صَرَفَكُمْ عَنْهُمْ لِيَبْتَلِيَكُمْ ۚ وَلَقَدْ عَفَا عَنْكُمْ ۭ وَاللّٰهُ
ذُوْ فَضْلٍ عَلَى الْمُؤْمِنِيْنَ ﴿١٥٢﴾ اِذْ تُصْعِدُوْنَ وَلَا
تَلْوٗنَ عَلٰٓى اَحَدٍ وَّالرَّسُوْلُ يَدْعُوْكُمْ فِيْٓ اُخْرٰىكُمْ
فَاَثَابَكُمْ غَمًّۢا بِغَمٍّ لِّكَيْلَا تَحْزَنُوْا عَلٰي مَا فَاتَكُمْ
وَلَا مَآ اَصَابَكُمْ ۭ وَاللّٰهُ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ ﴿١٥٣﴾

[149] நம்பிக்கையாளர்களே! நீங்கள் மறுப்பாளர்களுக்குக் கீழ்ப்படிந்தால் அவர்கள் உங்களை வந்தவழியே திருப்பி விடுவார்கள். நீங்கள் இழப்பிற்குரியவர்களாகி விடுவீர்கள்.

[150]மாறாக, அல்லாஹ்வே உங்களுக்கு உதவுபவனாக இருக்கிறான். அவன்தான் உதவிசெய்வோரில் சிறந்தவன். [151]மறுப்பாளரின் உள்ளங்களில் நாம் அச்சத்தை ஏற்படுத்தி விடுவோம். ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வுக்கு இணை வைத்துவிட்டார்கள். இணைவைப்பதற்கு அவன் எந்தச் சான்றையும் இறக்கி வைக்கவில்லை. அவர்களின் தங்குமிடம் நரகமேயாகும். தீவினையாளர்களின் உறைவிடம் எவ்வளவு கேடானது! [152]தன் வாக்குறுதியை அல்லாஹ் உங்களுக்கு உண்மைப்படுத்திக் காட்டினான். நீங்கள் அவனது கட்டளைப்படி (உஹுதுப் போரில்) எதிரிகளைக் கொன்றுவிடும் நிலையில் இருந்தபோது ஊக்கம் குன்றி (இறைத்தூதருடைய கட்டளை தொடர்பாக) உங்களுக்குள் முரண்பட்டீர்கள். நீங்கள் விரும்பிய (வெற்றியை) அல்லாஹ் உங்களுக்கு நெருக்கத்தில் காட்டிய பின்னரும் எதிராகச் செயல்பட்டீர்கள். உங்களில் சிலர் இம்மையை விரும்புவோராக இருந்தனர். சிலர் மறுமையை விரும்புவோராக இருந்தனர். பின்னர் அவன் உங்களைச் சோதிப்பதற்காக அவர்களை வெல்வதிலிருந்து உங்களைத் தடுத்துவிட்டான். (பின்னர்) அல்லாஹ் உங்களை மன்னித்து விட்டான். அல்லாஹ் நம்பிக்கையாளர்கள் மீது பேரருள் புரிபவன். [153]நினைத்துப் பாருங்கள்! (போர்க்களத்தில்) தூதர் உங்களுக்குப் பின்னாலிருந்து உங்களை அழைத்துக் கொண்டிருக்க நீங்கள் யாரையும் திரும்பிப் பார்க்காமல் ஓடிக் கொண்டிருந்தீர்கள். எனவே (நீங்கள் தூதருக்கு ஏற்படுத்திய) துயரத்திற்குப் பதிலாக(த் தோல்வி எனும்) துயரத்தை அல்லாஹ் உங்களுக்குத் ஏற்படுத்தினான். (இனி, நீங்கள் எவற்றையேனும் இழந்தால் அந்த) இழப்பைப்பற்றியும் (இனி, எவையேனும் துன்பம் உங்களுக்கு நேர்ந்தால் அந்தத்) துன்பத்தைப்பற்றியும் நீங்கள் கவலைப்படாமல் (பொறுமையுடன்) இருக்க வேண்டும் என்பதற்காகவே (இத்தகைய துன்பத்தை அவன் உங்களுக்குக் கொடுத்தான்). அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவன்.

உஹுதுப் போரில் ஏற்பட்ட தற்காலிகத் தோல்வியினால் எதிரிகளுக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியது. இறைத்தூதர் அவரது தோழர்கள் ஆகியோரின் செயல்பாடுகள் இறைவன் தொடர்பான செயல்பாடுகள் அல்ல என்று அவர்கள் கூறத் தொடங்கினர். சிலர் வெறும் சிறுபிள்ளைத்தனமான ஆர்வம் கொண்டெழுந்து, தங்கள் ஆர்வத்துடிப்பிற்கான தண்டனையை அனுபவிக்கின்றனர். இது இறைவன் தொடர்பான செயல்பாடாக இருந்தால்,

அவர்கள் ஏன் தங்கள் பகைவர்களுக்கு எதிராகத் தோல்வி அடைய வேண்டும்? என்று அவர்கள் கூறினர். ஆனால், புறத்தோற்றத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் முஸ்லிம்களின் தவறினால் விளைந்தவையாகத் தோன்றினாலும், எந்நிலையிலும் அவை இறைவனிடமிருந்து வரும் சோதனைகள்தாம். யார் இறைவனை நம்பப் போகிறார்கள், யார் நழுவப் போகிறார்கள் என்பது தெளிவாகத் தெரியும் வகையில், 'உஹுத்' போன்ற நிகழ்வு இந்த உலக வாழ்க்கையில் நிகழ்வது அவசியம். இத்தகைய நிகழ்வுகள் நம்பிக்கையாளருக்கு இரு பக்கச் சோதனையாகும். ஒன்று, மக்களின் எதிர்மறையான கருத்துக்களால் அவர் பாதிக்கப்படக்கூடாது. இரண்டாவது, தற்காலிகத் துன்பங்களுக்கு அஞ்சாமல், எல்லாச் சூழ்நிலைகளிலும் உறுதியாக இருக்க வேண்டும்.

கடுமையான காலங்களில் நம்பிக்கையாளர்கள் உறுதியுடன் இருந்தால், எதிரியை அச்சத்தில் ஆழ்த்தும் வகையில் இறைவனுடைய உதவி விரைவில் இறங்கும். இறைவனின் உண்மையான மார்க்கத்தைத் தவிர வேறொன்றை நம்பி நிற்கும் நபரோ, குழுவோ உண்மையில் அடிப்படையற்ற தளத்தில் நிற்கிறார்கள். ஏனென்றால் இறைவனால் இறக்கியருளப்பட்ட சத்தியத்தைத் தவிர வேறு எந்த உண்மையான அடித்தளமும் இந்த உலகில் இல்லை.

எனவே ஒருவன் இறைவனின் மார்க்கத்தைப் பற்றிக் கொண்டு அதில் நிலைத்து நிற்பதை நிரூபித்தால் வெகு விரைவில் அசத்தியத்தைக் கொண்டிருக்கும் மக்களின் வரிசைகள் சிதற ஆரம்பித்துவிடுகின்றன. சான்றுகளின்படி பார்த்தால் அவை அடிப்படை அற்றவை என்பது அவர்களின் மக்களிடையே நம்பிக்கையற்ற நிலையை உருவாக்கிவிடுகிறது. அவர்கள் தங்களைக் குறைத்தும், இறைநம்பிக்கையாளர்களை மிகைத்தும் மதிப்பிடத் தொடங்குகிறார்கள். அவர்களின் மனத் தோல்வி இறுதியில் நடைமுறைத் தோல்விக்கு வழிவகுக்கிறது. உண்மையாளர்களோடு ஒப்பிடும்போது அவர்கள் தோல்வியுற்றவர்களாகவும் இழப்புக்குள்ளானவர்களாகவும் இருக்கிறார்கள்.

நம்பிக்கையாளர்களைப் பொறுத்தவரை, தோல்விக்கும் பலவீனத்திற்கும் எப்போதும் காரணம் ஒன்றாகவே இருக்கிறது, அது குறிப்பிட்ட விஷயங்களில் ஏற்படும் மோதல். அதாவது, கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பிரிந்து செல்வது. மனிதர்களிடையே ஒற்றுமை என்பதற்குப் பொருள் எல்லோருடைய கருத்துக்களும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஒரு குழுவில் ஒற்றுமைக்கான ஒரே வழி, கருத்துக்களில் வேறுபாடுகள் இருந்தாலும், செயலில் வேறுபாடுகள் இல்லாமலிருப்பதுதான். இந்த உயர்ந்த பார்வை ஒரு குழுவில் காணப்படும் வரை அது ஒற்றுமையாகவும் அதன்

விளைவாக வலிமைவாய்ந்ததாகவும் இருக்கும். கருத்து வேறுபாடுகளைக் கொண்டு, மக்கள் பிரிந்து செல்லத் தொடங்கும்போது பலவீனமும் அதன் விளைவாகத் தோல்வியும் தவிர்க்க முடியாததாகி விடுகின்றன.

ثُمَّ اَنْزَلَ عَلَيْكُمْ مِّنْۢ بَعْدِ الْغَمِّ اَمَنَةً نُّعَاسًا يَّغْشٰى طَآئِفَةً
مِّنْكُمْ ۙ وَطَآئِفَةٌ قَدْ اَهَمَّتْهُمْ اَنْفُسُهُمْ يَظُنُّوْنَ بِاللّٰهِ غَيْرَ الْحَقِّ
ظَنَّ الْجَاهِلِيَّةِ ؕ يَقُوْلُوْنَ هَلْ لَّنَا مِنَ الْاَمْرِ مِنْ شَيْءٍ ؕ قُلْ
اِنَّ الْاَمْرَ كُلَّهٗ لِلّٰهِ ؕ يُخْفُوْنَ فِيْۤ اَنْفُسِهِمْ مَّا لَا يُبْدُوْنَ لَكَ ؕ
يَقُوْلُوْنَ لَوْ كَانَ لَنَا مِنَ الْاَمْرِ شَيْءٌ مَّا قُتِلْنَا هٰهُنَا ؕ قُلْ لَّوْ كُنْتُمْ
فِيْ بُيُوْتِكُمْ لَبَرَزَ الَّذِيْنَ كُتِبَ عَلَيْهِمُ الْقَتْلُ اِلٰى مَضَاجِعِهِمْ ۚ
وَلِيَبْتَلِيَ اللّٰهُ مَا فِيْ صُدُوْرِكُمْ وَلِيُمَحِّصَ مَا فِيْ قُلُوْبِكُمْ ؕ وَاللّٰهُ
عَلِيْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿۱۵۴﴾ اِنَّ الَّذِيْنَ تَوَلَّوْا مِنْكُمْ يَوْمَ الْتَقَى
الْجَمْعٰنِ ۙ اِنَّمَا اسْتَزَلَّهُمُ الشَّيْطٰنُ بِبَعْضِ مَا كَسَبُوْا ۚ وَلَقَدْ عَفَا
اللّٰهُ عَنْهُمْ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ حَلِيْمٌ ﴿۱۵۵﴾ ع

[154]இத்துயரத்திற்குப் பிறகு அமைதியளிக்கக்கூடிய சிறு தூக்கத்தை அல்லாஹ் உங்களுக்கு அருளினான். அது உங்களில் ஒரு பிரிவினரைத் தழுவிக்கொண்டது. மற்றொரு பிரிவினரோ தம் உயிரின் மீது கவலைகொண்டு அல்லாஹ்வைக் குறித்து ஐயுற்று உண்மைக்குப் புறம்பான அறியாமைக்கால எண்ணங்களைக் கொண்டிருந்தனர். ''இ(ப் போர்)ச் செயலில் நமக்கு ஏதேனும் அதிகாரம் உண்டா?'' என்று அவர்கள் கேட்கிறார்கள். (நபியே!) அவர்களிடம் நீர் ''அனைத்து அதிகாரங்களும் அல்லாஹ்விடமே உள்ளன'' என்று கூறுவீராக. அவர்கள் உம்மிடம் வெளிப்படுத்தாத விஷயங்களையும் தம் உள்ளங்களில் மறைத்து வைத்துள்ளனர். ''இச்செயலில் நமக்கு ஏதேனும் அதிகாரம் இருந்திருந்தால் நம்மில் ஒருவரும் இங்கே கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள்'' என்றும் கூறுகின்றனர். ''நீங்கள் உங்கள் வீடுகளில் இருந்திருந்தாலும் எவருக்குச் சாவு விதிக்கப்பட்டுள்ளதோ அவர்கள் தாங்கள்

கொல்லப்பட இருக்கும் இடங்களை நோக்கி வந்தேயிருப்பார்கள்'' என்று (நபியே!) நீர் கூறுவீராக! உங்கள் நெஞ்சங்களில் உள்ளவற்றைச் சோதிக்கவும் உங்கள் உள்ளங்களில் உள்ளவற்றைத் தூய்மைப்படுத்தவுமே (அல்லாஹ் இவ்வாறெல்லாம் நிகழ்த்துகிறான்.) உள்ளங்களில் உள்ளவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன்.

[155](நம்பிக்கையாளர்களும் மறுப்பாளர்களுமாகிய) இரு பிரிவினரும் மோதிக்கொண்ட நாளில் உங்களில் புறங்காட்டி ஓடியவர்களை அவர்களின் சில செயல்களினால் சாத்தான் வழிதவறச் செய்தான். ஆயினும் அவர்களை அல்லாஹ் மன்னித்துவிட்டான். உறுதியாக அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; சகிப்புத்தன்மையுடையவன்.

வாழ்க்கைப் போராட்டத்தில், மிக முக்கியமான ஒன்று, மனிதனின் மன அமைதி அவனை விட்டுப் போய்விடக்கூடாது என்பதுதான். அவன் முழுமையாக மன ஓர்மையோடு தன் திட்டத்தை உருவாக்கும் நிலை வேண்டும் என்பதும்தான். இறைவனின் மீது நம்பிக்கை வைத்திருப்பதால், இந்தத் திட்டம் நம்பிக்கையாளர்களுக்கு உச்சபட்ச நிலையில் கிடைக்கிறது. மக்களின் தூக்கம் பறிபோகும் கொந்தளிப்பான நிலையிலும் கூட, அவர்களால் சிறிது நேரம் உறங்கி மீண்டும் புத்துணர்ச்சியுடன் எழ முடிகிறது. உஹுதுப் போரின் போது அதன் வெளிப்பாடு ஒன்று நிகழ்ந்தது. தோல்விக்குப் பிறகு மிகவும் கடுமையான சூழ்நிலைகள் இருந்தபோதிலும், அவர்களால் தூங்க முடிந்தது. மறுநாள் மதீனாவிலிருந்து 8 மைல் தொலைவில் உள்ள ஹம்ரா அல்-அசத் வரை அவர்கள் பகைவர்களைப் பின்தொடர்ந்தனர். இதன் விளைவாக, வெற்றி பெற்ற பகைவன் பயந்து மக்காவுக்குத் திரும்பினான். இதுதான் உண்மையான நம்பிக்கையாளர்களின் நிலை. ஆனால் இறைவனைத் தங்கள் பாதுகாவலனாக முழுமையான பொருளில் ஏற்றுக்கொள்ளாதவர்கள், எல்லா இடங்களிலும் தங்கள் உயிருக்கு ஆபத்தை மட்டுமே பார்க்கிறார்கள். மார்க்கச் சிந்தனை இல்லாத மக்கள் தங்கள் சுயத்தைப் பற்றிய கவலையில் மூழ்கிக் கிடக்கிறார்கள்; அவர்கள் மன அமைதி அளிக்கும் இறைவனின் உதவியில் தங்கள் பங்கைப் பெறுவதில்லை.

உஹுதுப் போரின்போது, நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபை மதீனாவில் தங்கியிருந்து போர் செய்ய வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தான். ஆனால், இறைத்தூதர் அவர்கள் உண்மையான நம்பிக்கையாளர்களின் ஆலோசனையின் பேரில் உஹுது மலை அடிவாரத்தில் போரை எதிர்கொண்டார்கள். மலைப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த படைப்பிரிவின் தவறு காரணமாகத் தோல்வி ஏற்பட்டபோது, அந்த மக்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்து விட்டது.

எங்கள் சொல்லைக் கேட்டு, மதீனாவில் தங்கிப் போர் புரிந்திருந்தால், இந்த அழிவு நடந்திருக்காது என்று அவர்கள் கூறத் தொடங்கினர். ஆனால் மரணமோ இறைவனிடமிருந்து வருகிறது. அது ஒருவருக்கு எந்த இடத்தில் எழுதப்பட்டதோ அங்கு வந்தே தீரும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாரையும் மரணத்திலிருந்து காப்பாற்றாது. இதுபோன்ற நிகழ்வுகள், அவற்றின் வெளிப்படையான காரணம் எதுவாக இருந்தாலும், இறைவனால் ஏற்படுத்தப்படுகின்றன. இதன் நோக்கம் இறைவனின் உண்மையான அடியார்கள் இறைவனின் பக்கம் திரும்பி, அதிக அருட்கொடைகளுக்குத் தகுதியானவர்களாக மாறவேண்டும்; உண்மையற்றவர்களின் அசல் நிலை பகிரங்கமாக வெளிப்பட்டுவிட வேண்டும் என்பதுதான்.

உஹுது மலையின் மீது நிறுத்தப்பட்டிருந்த ஐம்பது அம்பெறி வீரர்கள் நம்பிக்கையாளர்களுக்கு வெற்றி கிடைத்திருப்பதைக் கண்டபோது, அவர்களில் சிலர் பகைவர்கள் போர்க்களத்தில் விட்டோடிய பொருட்களைக் கைப்பற்றலாம் என வலியுறுத்தினர். ஆனால் நபித்தோழர் அப்துல்லாஹ் பின் ஜுபைரும் அவரது சில தோழர்களும் வேண்டாம், இறைத்தூதர் இட்ட கட்டளையின்படி நாம் எத்தகைய நிலைகளிலும் இங்கேயே இருக்க வேண்டும் என்று கூறினர். இறுதியாகப் பதினொருவர் தவிர, மீதமுள்ளவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர். பரஸ்பர கருத்து வேறுபாடு என்ற இந்த பலவீனத்தின் மூலம், சாத்தான் உள்ளே நுழைய ஒரு வழி கிடைக்கப் பெற்றான். இருப்பினும், அவர்கள் தங்கள் தவற்றை ஒப்புக்கொண்டார்கள், அப்போது, இறைவன் அவர்களை மன்னித்தான், முதலில் ஏற்பட்ட இழப்புக்குப் பிறகு, அவர்கள் பகைவர்களின் இதயங்களில் அச்சத்தைத் தூண்டி, அவர்களைத் திருப்பி அனுப்பும் வகையில் அவர்களுக்கு உதவினான். அந்த நேரத்தில் அவர்களோ மதீனாவிலிருந்து சில மைல்கள் தொலைவில் மட்டுமே இருந்தனர்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَكُوْنُوْا كَالَّذِيْنَ كَفَرُوْا وَ قَالُوْا
لِاِخْوَانِهِمْ اِذَا ضَرَبُوْا فِي الْاَرْضِ اَوْ كَانُوْا غُزًّى لَّوْ كَانُوْا
عِنْدَنَا مَا مَاتُوْا وَمَا قُتِلُوْا ۚ لِيَجْعَلَ اللّٰهُ ذٰلِكَ حَسْرَةً فِيْ
قُلُوْبِهِمْ ؕ وَاللّٰهُ يُحْيٖ وَ يُمِيْتُ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿۱۵۶﴾
وَ لَئِنْ قُتِلْتُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ اَوْ مُتُّمْ لَمَغْفِرَةٌ مِّنَ اللّٰهِ وَرَحْمَةٌ
خَيْرٌ مِّمَّا يَجْمَعُوْنَ ﴿۱۵۷﴾ وَلَئِنْ مُّتُّمْ اَوْ قُتِلْتُمْ لَاِاِلَى اللّٰهِ تُحْشَرُوْنَ ﴿۱۵۸﴾

فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللّٰهِ لِنْتَ لَهُمْ ۚ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيْظَ الْقَلْبِ
لَانْفَضُّوْا مِنْ حَوْلِكَ ۖ فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ وَشَاوِرْهُمْ
فِي الْاَمْرِ ۚ فَاِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ۗ اِنَّ اللّٰهَ يُحِبُّ
الْمُتَوَكِّلِيْنَ ﴿١٥٩﴾ اِنْ يَّنْصُرْكُمُ اللّٰهُ فَلَا غَالِبَ لَكُمْ ۚ وَاِنْ يَّخْذُلْكُمْ
فَمَنْ ذَا الَّذِيْ يَنْصُرُكُمْ مِّنْۢ بَعْدِهٖ ۗ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُوْنَ ﴿١٦٠﴾

[156]*(இறை)நம்பிக்கையாளர்களே! நீங்கள் மறுப்பாளர்களைப் போல் ஆகிவிடாதீர்கள். அவர்கள் பயணத்திலோ போரிலோ இறந்துவிட்ட தங்கள் சகோதரர்களைப்பற்றி ''அவர்கள் நம்முடன் இருந்திருந்தால் இறந்திருக்கவும் மாட்டார்கள்; கொல்லப்பட்டிருக்கவும் மாட்டார்கள்'' என்று கூறுகிறார்கள். அவர்களின் உள்ளங்களில் வருத்தத்தை ஏற்படுத்தவே அல்லாஹ் இவ்வாறு (அவர்கள் நினைக்குமாறு) செய்கிறான். அல்லாஹ்தான் உயிர்ப்பிக்கிறான்; அவன்தான் இறப்பையும் அளிக்கிறான்; நீங்கள் செய்பவற்றையெல்லாம் அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கிறான்.* [157]*நீங்கள் இறைவழியில் கொல்லப்பட்டாலோ இறந்து விட்டாலோ அல்லாஹ்விடமிருந்து (உங்களுக்குக்) கிடைக்கும் (பாவ)மன்னிப்பும் அருளும் (மறுப்பாளர்களாகிய) அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் அனைத்தையும்விடச் சிறந்தனவாகும்.* [158]*நீங்கள் இறந்துவிட்டாலோ கொல்லப்பட்டாலோ அல்லாஹ்விடமே ஒன்றுதிரட்டப்படுவீர்கள்.* [159]*(நபியே!) இறைவனின் அருளால்தான் நீர் இவர்களுடன் மென்மையாக நடந்துகொள்கிறீர். நீர் கண்டிப்பானவராகவும் கடினமனம் கொண்டவராகவும் இருந்திருந்தால் இவர்கள் உம்மைவிட்டு ஓடியிருப்பார்கள். எனவே இவர்களை மன்னித்து இவர்களுக்காக (இறைவனிடம்) பாவமன்னிப்புக் கோருவீராக! அனைத்துச் செயல்பாடுகளிலும் இவர்களுடன் கலந்தாலோசிப்பீராக! (பின்னர் ஒன்றை) நீர் முடிவு செய்துவிட்டால் அல்லாஹ்வையே முழுமையாக நம்பியிருப்பீராக! உறுதியாக அல்லாஹ் முழுமையாகத் தன்னை நம்பியிருப்போரை நேசிக்கிறான்.* [160]*அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்தால் உங்களை எவராலும் வெல்ல முடியாது. அவன் உங்களைக் கைவிட்டு விட்டால் அதன் பின்னர் உங்களுக்கு உதவுகின்றவர் யார்? நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வையே சார்ந்திருக்க வேண்டும்.*

இந்த உலகில் நடக்கும் அனைத்தும் இறைவனின் கட்டளைப்படிதான் நடக்கின்றன. இருப்பினும், இங்கே, அனைத்தும் காரண காரியங்களின் திரையிட்டு மறைக்கப்பட்டுள்ளன. நிகழ்வுகள் காரண காரியங்களின் கீழ் நடப்பது போல் தோன்றினாலும், உண்மையில் அவை ஏக இறைவனின் கட்டளையின் கீழ் நடக்கின்றன. மனிதனுக்கான சோதனை என்னவென்றால் அவன் புறவயமான காரண காரியங்களில் சிக்கிக் கொள்ளாமல், அவற்றின் பின்னால் செயல்படும் இறைவனின் ஆற்றலைக் காண்பதாகும். இறைநம்பிக்கையற்றவன் காரண காரியங்களில் தொலைந்து போய் விடுபவன், நம்பிக்கையாளன் என்பவன் காரண காரியங்களைத் தாண்டி உண்மையான யதார்த்தத்தை அடைபவன். ஒருவன் தன்னை ஒரு நம்பிக்கையாளன் என்று கூறிக் கொண்டு, வாழ்க்கை – இறப்பு – வெற்றி, தோல்வி ஆகியவற்றைத் திட்டமிடுதலின் விளைவு என்று கருதினால், நம்பிக்கையாளன் என்ற அவனது கூற்று ஏற்புடையதாகாது. நம்பிக்கையாளன் அல்லாத ஒருவனுக்கு விபத்து ஏற்படும்போது, "நான் இன்ன இன்ன உத்தியைக் கையாண்டிருந்தால், விபத்தைத் தவிர்த்திருப்பேன்" என்று நினைத்து அவன் துக்கத்தால் பீடிக்கப்படுகிறான். ஆனால் நம்பிக்கையாளனுக்கு ஒரு விபத்து ஏற்படும்போது, அது இறைவனின் விருப்பம் என்று நினைத்து அவன் அமைதி அடைகிறான். உலகச் சாதனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மக்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் உலக நலங்களைப் பெறுவதிலேயே செலவிடுகிறார்கள். 'இறப்பதை' விட 'வாழ்வது' அவர்களுக்கு மிகவும் பிரியமானதாகிறது. ஆனால், பெறத்தக்க அடிப்படையான நலம் மறுமையில் இருப்பதுதான். அதாவது, இறைவனின் சொர்க்கமும் மன்னிப்பும். சொர்க்கம் என்பது உயிரை விலையாகக் கொடுத்துப் பெற வேண்டிய ஒன்று. மனிதனின் இருப்புதான் சொர்க்கத்தின் ஒரே விலை. மனிதன் தன் இருப்பைக் கொடுக்கவில்லை என்றால் வேறு எதன் மூலமும் அவனால் சொர்க்கத்தைப் பெற முடியாது.

இறைத்தூதருக்கு நம்பிக்கையாளர்களைக் கூட்டாக அரவணைத்து நடத்தும்படி இடப்பட்ட கட்டளை, சாதாரண நம்பிக்கையாளர்களின் தலைவருக்குமானதுதான். ஒரு நம்பிக்கையாளர்களின் தலைவர் மென்மையான உள்ளம் கொண்டவராகவும், மென்மையாகப் பேசக் கூடியவராகவும் இருப்பது அவசியம். இந்தக் கருணை அணுகுமுறை பொது வாழ்வில் மட்டுமல்ல பிற மாறுபட்ட சந்தர்ப்பங்களில் கூடத் தேவையாயிருக்கிறது. இஸ்லாத்திற்கும் இஸ்லாத்தை எதிர்ப்போருக்கும் இடையிலான மோதலின் போது, மக்கள் ஒரு கட்டளையை மீறினார்கள், அதன் விளைவாக, வென்ற போர் தோல்வியாக மாறியது. இந்த விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் கூட இத்தகு மென்மையான அணுகுமுறை

தேவைப்படுகிறது. வழிநடத்தும் தலைவருக்குள் இந்தப் பரந்த மனமும் உயர்ந்த பார்வையும் இல்லாவிட்டால், ஓர் ஆற்றல் வாய்ந்த கூட்டமைப்பை நிறுவ முடியாது. எவ்வளவு பெரிய தவறாக இருந்தாலும், அது தீங்கிழைக்கும் செயலாக இல்லாமல், வெறும் தவறுதலாக நேர்ந்திருந்தால், அது மன்னிக்கத்தக்கது. தலைவர் இதுபோன்ற ஒவ்வொரு தவற்றையும் மறந்து விட்டு மக்களை அணுக வேண்டும். அவர் எந்த அளவுக்கு மக்களின் நலம் விரும்பியாக இருக்க வேண்டுமென்றால், அவர்களுக்காக அவரது இதயத்திலிருந்து பிரார்த்தனைகள் பெருக்கெடுக்க வேண்டும். எல்லாவற்றிலும் மக்களின் ஆலோசனையைப் பெறுமளவுக்கு அவர்களை மதிப்போடு பார்க்க வேண்டும். நடக்கும் அனைத்தும் இறைவனால்தான் நடக்கிறது என்று மனிதன் உறுதியாக நம்பும்போது, மனித காரண காரியங்கள் அவனது பார்வையில் பொருத்தமற்றதாகிவிடும்.

وَمَا كَانَ لِنَبِيٍّ اَنْ يَّغُلَّ ؕ وَمَنْ يَّغْلُلْ يَاْتِ بِمَا غَلَّ يَوْمَ الْقِيٰمَةِ ۚ
ثُمَّ تُوَفّٰى كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿۱۶۱﴾ اَفَمَنِ اتَّبَعَ
رِضْوَانَ اللّٰهِ كَمَنْۢ بَآءَ بِسَخَطٍ مِّنَ اللّٰهِ وَمَاْوٰىهُ جَهَنَّمُ ؕ وَ
بِئْسَ الْمَصِيْرُ ﴿۱۶۲﴾ هُمْ دَرَجٰتٌ عِنْدَ اللّٰهِ ؕ وَاللّٰهُ بَصِيْرٌۢ بِمَا
يَعْمَلُوْنَ ﴿۱۶۳﴾ لَقَدْ مَنَّ اللّٰهُ عَلَى الْمُؤْمِنِيْنَ اِذْ بَعَثَ فِيْهِمْ
رَسُوْلًا مِّنْ اَنْفُسِهِمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ
الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۚ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۱۶۴﴾

[161]மோசடி செய்வது எந்தத் தூதரின் செயலுமன்று. எவர் அதனைச் செய்கிறாரோ அவர் மறுமை நாளில் தான் செய்தவற்றுடன் வருவார். பின்னர் ஒவ்வொருவருக்கும் அவரது செயலுக்குரிய முழுமையான கூலி வழங்கப்படும். அவர்மீது எந்த அநீதியும் இழைக்கப்படமாட்டாது. [162]இறைவனின் உவப்பை வேண்டி நடப்பவர் இறைச் சினத்திற்கு ஆளானவனைப்போல் ஆவாரா? அவனது தங்குமிடம் நரகமாகும். அது மிகவும் கெட்ட இருப்பிடம். [163]அவர்கள் அல்லாஹ்விடத்தில் பல (உயர்) தகுதிகளைப் பெறுவார்கள். அவர்கள் அனைவரின் செயல்களையும் அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கிறான். [164](இறை)நம்பிக்கையாளர்கள்மீது அல்லாஹ் பேரருள்

புரிந்துள்ளான். அதாவது அவர்களிலிருந்தே ஒரு தூதரை அவர்களிடம் அனுப்பியுள்ளான். அவர் அவனது வசனங்களை எடுத்துரைத்துக்கிறார்; அவர்களைத் தூய்மைப்படுத்துகிறார்; அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பிக்கிறார். உறுதியாக அவர்கள் இதற்கு முன்னர் வெளிப்படையான கெடுவழியிலேயே இருந்தனர்.

உஹுது கணவாய்ப் பாதையில் நிறுத்தப்பட்டிருந்து கட்டளைக்கு எதிராகச் செயல்பட்ட நாற்பது பேரையும் இறைத்தூதர் மன்னித்துவிட்டார்கள். இருப்பினும், அவர்கள் மேலோட்டமாக மட்டுமே நம்மை மன்னித்திருக்கலாம் என்று இந்த மக்களுக்குச் சந்தேகம் இருந்தது. இறைத்தூதரின் இதயத்தில் இன்னும் கோபம் இருக்கிறது, ஒரு கட்டத்தில் அதை நம் மீது அவர் வெளிப்படுத்தலாம் என அவர்கள் நினைத்தனர். அதற்கு இறைவன் இது தூதரின் வழிமுறை அல்ல என்று கூறுகிறான். இறைத்தூதரின் உள்ளும் புறமும் ஒன்றானதாகும். இதிலிருந்து ஒரு நம்பிக்கையாளர்களின் தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஊகிக்கமுடியும். தோழர்கள் ஒரு பயங்கரமான தவறு செய்திருந்தாலும் கூட, நம்பிக்கையாளர்களின் தலைவரின் இதயம், வன்மம், காழ்ப்பு, வெறுப்பு, பொறாமை ஆகியவற்றிற்கு இடமளிக்காத வகையில் இருக்க வேண்டும். ஒரு நம்பிக்கையாளர்களின் தலைவர், மிகப்பெரிய தவறுகளைச் செய்பவர்கள் மீது கூட தமது மனத்தில் எந்தத் தவறான உணர்ச்சியையும் வைத்திருக்கக் கூடாது. முந்தைய நாள் அவர்களால் ஒரு தவறும் நடக்காதது போல் இன்றும் அவர்களுடன் இருக்க வேண்டும். அதேபோல், நம்பிக்கையாளர்களில் ஒரு குழு ஒரு தலைவரை நம்பித் தங்கள் விவகாரங்களை அவரிடம் ஒப்படைக்கும்போது, அந்தத் தலைவர் தமது தனிப்பட்ட லட்சியங்களையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்காக ஒருபோதும் அவர்கள் உயிரையும் உடைமைகளையும் அர்ப்பணம் செய்யக்கூடாது என்பதும் முக்கியம். இது இறைவனின் கோபத்திற்கு அஞ்சாமல் இருப்பதாகும். இறைவனின் விருப்பத்தைப் பின்பற்றுங்கள் என்று மக்களிடம் சொல்ல எழுந்த ஒருவர், தான் மட்டும் இறைவனின் விருப்பத்திற்கு எதிராகச் சென்ற நிலையில் எப்படி இறைவனைச் சந்திக்க விரும்புவார்?

இறைத்தூதர் தமது வாழ்க்கையால் அமைத்துக் கொடுத்த சிறந்த முன்மாதிரி, அனைத்துச் சீர்திருத்தவாதிகளும் இறுதித் தீர்ப்பு நாள் வரை பின்பற்ற வேண்டிய ஒன்றாகும். சீர்திருத்தப் பணிகளுக்கு, ஒரு மனிதன் யாரிடையே பணிபுரிகிறானோ, அவர்கள் எல்லா வகையிலும் அவனைத் 'தங்களில் ஒருவராக'ப் பார்க்க வேண்டும் என்பது அவசியம்; அவரது மொழி, பேச்சு நடை, வாழ்க்கை முறை என அனைத்தும் அந்நியத்தன்மையிலிருந்து

விடுபட வேண்டும். அவர் தமக்கும் தம்மைக் கேட்பவர்களுக்கும் இடையில் எந்தக் கோணத்திலிருந்தும் அவர்களை அந்நியப்படுத்தும் – ஒருவரையொருவர் எதிர்த்து நிற்கும் ஒரு சூழலை உருவாக்கக்கூடாது. மக்களிடையே முதலில் செய்ய வேண்டியது, அவர்களுக்குள்ளும் வெளி உலகிலும் பரவியுள்ள அடையாளங்களைப் படிக்கும் திறனை அவர்களுக்குள் வளர்ப்பதாகும். அவர்கள் இறைவனின் சான்றுகளை அறிந்துகொண்டு அவற்றைத் தங்கள் உள்ளத்தின் ஒரு பகுதியாக மாற்ற வேண்டும். இரண்டாவது பணி தூய்மைப்படுத்துதல். இந்த இலக்கு உரையாடுவதன் மூலமும், தோழராய்ப் பழக்குவதன் மூலமும் அடையப்படுகிறது. பொதுவான எழுத்து மற்றும் பேச்சில், விவாதங்கள் பெரும்பாலும் கொள்கை ரீதியான முறையில் இருக்கும். அதே சமயம் தனிப்பட்ட உரையாடல்களில், விவாதம் மிகவும் குறிப்பிட்டதாகவும் விரிவாகவும் இருக்கும். மேலும், அழைப்பாளரின் சொந்த இருப்பு அதை வலுப்படுத்துவதற்காகவே உள்ளது. பொதுவான பேச்சு ஓர் அழைப்பாக இருந்தால், அழைக்கப்பட்டவருக்குத் தனிப்பட்ட சந்திப்புகள் தூய்மைப்படுத்துதலுக்கு ஒத்ததாக மாறும். மூன்றாவது பணி வேதநூல் .அதாவது, வாழ்வதற்கான இறைவன் காட்டும் வழிமுறைகளைத் தெரிவிப்பது, அதன் இரண்டாவது பெயர் மார்க்கச் சட்டம் (ஷரியா). நான்காவது விஷயம் விவேகம்; அதாவது, மதத்தின் ஆழமான ரகசியங்களை வெளிக்கொணர்வது, வரிகளுக்கு இடையில் மறைந்திருக்கும் உண்மைகளை எடுத்துக்காட்டுவது.

اَوَلَمَّاۤ اَصَابَتْكُمْ مُّصِيْبَةٌ قَدْ اَصَبْتُمْ مِّثْلَيْهَا ۙ قُلْتُمْ اَنّٰى هٰذَا ؕ
قُلْ هُوَ مِنْ عِنْدِ اَنْفُسِكُمْ ؕ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ﴿۱۶۵﴾
وَمَاۤ اَصَابَكُمْ يَوْمَ الْتَقَى الْجَمْعٰنِ فَبِاِذْنِ اللّٰهِ وَلِيَعْلَمَ الْمُؤْمِنِيْنَ ﴿۱۶۶﴾ ۙ
وَلِيَعْلَمَ الَّذِيْنَ نَافَقُوْا ۚۖ وَقِيْلَ لَهُمْ تَعَالَوْا قَاتِلُوْا فِىْ سَبِيْلِ
اللّٰهِ اَوِ ادْفَعُوْا ؕ قَالُوْا لَوْ نَعْلَمُ قِتَالًا لَّا اتَّبَعْنٰكُمْ ؕ هُمْ لِلْكُفْرِ
يَوْمَئِذٍ اَقْرَبُ مِنْهُمْ لِلْاِيْمَانِ ۚ يَقُوْلُوْنَ بِاَفْوَاهِهِمْ مَّا لَيْسَ
فِىْ قُلُوْبِهِمْ ؕ وَاللّٰهُ اَعْلَمُ بِمَا يَكْتُمُوْنَ ﴿۱۶۷﴾ ۚ اَلَّذِيْنَ قَالُوْا
لِاِخْوَانِهِمْ وَقَعَدُوْا لَوْ اَطَاعُوْنَا مَا قُتِلُوْا ؕ قُلْ فَادْرَءُوْا عَنْ
اَنْفُسِكُمُ الْمَوْتَ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۱۶۸﴾

[165](நம்பிக்கையாளர்களே! பத்ருப் போரில்) இதுபோன்ற இரு மடங்கு துன்பத்தை (எதிரிகளுக்கு) நீங்கள் ஏற்படுத்தியிருக்க (உஹுதுப் போரில்) உங்களுக்கு ஒரு (மடங்கு) துன்பம் நேர்ந்தபோது ''இது எப்படி (ஏற்பட்டது?)'' என்று கேட்கிறீர்கள். ''(நபியே!) இது உங்களால்தான் ஏற்பட்டது'' என்று நீர் கூறும். உறுதியாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றல் உடையவன். [166]இரு கூட்டத்தாரும் மோதிக்கொண்ட நாளில் உங்களுக்கு ஏற்பட்ட துன்பமானது அல்லாஹ்வின் கட்டளையால் ஏற்பட்டதேயாகும். அது நம்பிக்கையாளர்கள் யார்? என்பதை அறி(வித்து விடு)வதற்காகவே ஆகும். [167](மேலும்) நயவஞ்சகர்கள் யார்? என்பதை அறி(வித்து விடு)வதற்காகவும் ஆகும். ''வாருங்கள். இறைவழியில் போர் புரியுங்கள் அல்லது எதிரிகளிடமிருந்து தற்காத்துக் கொள்ளுங்கள்'' என்று அவர்களிடம் கூறப்பட்டால் ''போர் நடக்கும் என்று நாங்கள் அறிந்திருந்தால் கண்டிப்பாக உங்களுடன் வந்திருப்போம்'' என்கிறார்கள். அவர்கள் அன்று நம்பிக்கையைவிட மறுப்பிற்கே நெருக்கமானவர்களாக இருந்தனர்; தம் உள்ளங்களில் இல்லாதவற்றைத் தம் வாய்களால் வெளிப்படுத்தினர். அவர்கள் மறைப்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன். [168]அவர்கள் போருக்குச் செல்லாமல் தம் வீட்டில் அமர்ந்துகொண்டு தம் சகோதரர்களைப் பற்றி ''அவர்கள் நம் பேச்சைக் கேட்டிருந்தால் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்'' என்று கூறுகின்றனர்.(அவர்களிடம்) ''நீங்கள் உண்மையாளர்களாயின் சாவிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள் பார்க்கலாம்'' என்று (நபியே!) நீர் கூறும்.

சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான போராட்டத்தில், இறுதியில் சத்தியமே வெற்றி பெறுகிறது. ஏனென்றால் இறைவன் எப்போதும் சத்தியத்தின் பக்கம் இருக்கிறான். இருப்பினும், இந்த உலகம் சோதனைக்கான உலகம்.தீவினையாளர்களுக்கும் கூட இங்கே முழுச் செயல் சுதந்திரம்உண்டு. எனவே, சில சமயங்களில் தீவினையாளர்கள், உண்மையாளர்களிடையேயுள்ள பரஸ்பர கருத்து வேறுபாடு போன்ற பலவீனத்தைப் பயன்படுத்தி, அவர்களுக்குத் தற்காலிகத் தீங்கு விளைவிப்பதில் வெற்றி பெறுகிறார்கள். இருப்பினும், இதுபோன்ற நிகழ்வுகளில் ஒரு பயனுள்ள அம்சமும் உள்ளது. இதன் மூலம், முஸ்லிம் சமூகம் சோதனை செய்யப் படுகிறது. சாதகமற்ற சூழ்நிலைகளைக் கண்டு, நேர்மையற்ற மக்கள் சோதனைக் களத்தைக் கைவிடுகிறார்கள். அதே நேரத்தில் உண்மையான நம்பிக்கையாளர்கள் இறைவனை நம்பி உறுதியாக இருக்கிறார்கள். இதன் மூலம் யார் நம்பத் தகுந்தவர், யார் நம்பத்தகாதவர் என்பது தெரிந்து

விடுகிறது.மேலும், ஒரு தற்செயலான தவற்றினால் ஏற்பட்ட இழப்பிற்குப் பிறகு, நம்பிக்கையாளர்கள் மீண்டும் பொறுமை, பணிவு ஆகியவற்றை இறைவனின்மீது நம்பிக்கை வைக்கும்போது, இறைவனின் கருணை முன்பை விட அதிகமாக அவர்களை நாடுகிறது.

சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான போரில் பங்கேற்று அதன் பாதையில் தங்களை மாய்த்துக்கொள்பவர்கள் தொடர்பாக அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டதாக பெரும்பாலும் உலக மக்கள் வருத்தத்துடன் கூறுகிறார்கள். இது வெறும் அறியாமை. இறைவனின் பாதையில் இழப்பதுதான் மிகப் பெரியதைப் பெறுவதாகும். ஏனெனில் இறைவனின் பாதையில் அனைத்தையும் தியாகம் செய்பவர்கள் தான் இறைவனின் வெகுமதிகளுக்கு மிகவும் தகுதியானவர்களாகக் கருதப்படுவார்கள்.

இறைவனின் பாதையில் தங்கள் உயிரை அர்ப்பணம் செய்பவர்களைப் பற்றி அறியாமையிலுள்ள மக்கள், வேறு வழிகளில் தங்கள் உயிரைப் பணயம் வைப்பவர்களுக்கு மரணம் ஏற்படாது என்பது போலவும் இறைவனின் பாதையில் அறப்போர் புரிபவர்கள் மட்டுமே இறப்பார்கள், மற்றவர்கள் இறப்பதில்லை என்பது போலவும் பேசுகிறார்கள். இது முற்றிலும் அர்த்தமற்றது என்பது வெளிப்படை. மரணம் என்பது இறைவனின் பொதுவான விதி. அது எப்படியும் தனக்கான நேரத்தில் எல்லோருக்கும் வரத்தான் போகிறது. மனிதன் ஒரு பாதையில் நடந்தாலும் சரி, வேறு பாதையில் நடந்தாலும் சரி, எந்தச் சூழ்நிலையிலும் அவன் மரணத்தின் முடிவிலிருந்து தப்ப முடியாது.

இவ்விதமாகப் பேசுபவர்கள் தாங்கள் சொல்வதைப் பற்றி ஒருபோதும் தீவிரமாக இருப்பதில்லை. சத்தியத்திற்காகத் தியாகம் செய்யாமல் போனதன் மூலம் அவர்கள் ஒரு பெரிய பாவத்தைச் செய்துவிட்டதாக அவர்களின் இதயங்கள் ஒப்புக்கொள்கின்றன. ஆனால் தியாகம் செய்பவர்களைத் தன் வாய் வார்த்தைகளைக் கொண்டு அவமதிப்பதன் மூலம் அவர்கள் தங்கள் வெளிப்புறப் பொய்த்தோற்றத்தைத் தக்க வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் நாவுகளால் பேசும் வார்த்தைகள் பொய்யானவை என்று அவர்களுடைய சொந்த இதயங்கள் சாட்சியம் அளிக்கின்றன. உண்மையாகவே அவற்றுக்கு எந்த மதிப்பும் இல்லை.

وَ لَا تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتًا ؕ بَلْ اَحْيَآءٌ
عِنْدَ رَبِّهِمْ يُرْزَقُوْنَ ۙ﴿۱۶۹﴾ فَرِحِيْنَ بِمَآ اٰتٰىهُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ ۙ

وَ يَسْتَبْشِرُوْنَ بِالَّذِيْنَ لَمْ يَلْحَقُوْا بِهِمْ مِّنْ خَلْفِهِمْ ۙ اَلَّا خَوْفٌ
عَلَيْهِمْ وَ لَا هُمْ يَحْزَنُوْنَ ﴿۱۷۰﴾ يَسْتَبْشِرُوْنَ بِنِعْمَةٍ مِّنَ اللّٰهِ وَ فَضْلٍ ۙ
وَّ اَنَّ اللّٰهَ لَا يُضِيْعُ اَجْرَ الْمُؤْمِنِيْنَ ﴿۱۷۱﴾ اَلَّذِيْنَ اسْتَجَابُوْا لِلّٰهِ
وَ الرَّسُوْلِ مِنْۢ بَعْدِ مَاۤ اَصَابَهُمُ الْقَرْحُ ۛؕ لِلَّذِيْنَ اَحْسَنُوْا مِنْهُمْ
وَ اتَّقَوْا اَجْرٌ عَظِيْمٌ ﴿۱۷۲﴾ اَلَّذِيْنَ قَالَ لَهُمُ النَّاسُ اِنَّ النَّاسَ قَدْ
جَمَعُوْا لَكُمْ فَاخْشَوْهُمْ فَزَادَهُمْ اِيْمَانًا ۖ وَّ قَالُوْا حَسْبُنَا اللّٰهُ
وَ نِعْمَ الْوَكِيْلُ ﴿۱۷۳﴾ فَانْقَلَبُوْا بِنِعْمَةٍ مِّنَ اللّٰهِ وَ فَضْلٍ لَّمْ يَمْسَسْهُمْ
سُوْٓءٌ ۙ وَّ اتَّبَعُوْا رِضْوَانَ اللّٰهِ ؕ وَ اللّٰهُ ذُوْ فَضْلٍ عَظِيْمٍ ﴿۱۷۴﴾ اِنَّمَا
ذٰلِكُمُ الشَّيْطٰنُ يُخَوِّفُ اَوْلِيَآءَهٗ ۪ فَلَا تَخَافُوْهُمْ وَ خَافُوْنِ اِنْ
كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿۱۷۵﴾

[169](நம்பிக்கையாளர்களே!) இறைவழியில் கொல்லப்பட்டவர்களை இறந்தவர்களாகக் கருதாதீர்கள். மாறாக, அவர்கள் தம் இறைவனிடம் (நெருக்கமாக) உயிரோடு உள்ளனர். அவர்கள் உணவளிக்கப் பெறுகின்றனர். [170]அல்லாஹ் தன் அருளால் அவர்களுக்கு வழங்கியவற்றின் மூலம் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். இன்னும் தங்களுடன் வந்து சேராமல் பின்னால் (வர) இருக்கும் மக்களைக் குறித்து ''அவர்களுக்கு எந்த அச்சமுமில்லை; (அவர்கள்) துயரப்படவும் மாட்டார்கள்'' என (நற்செய்தி பெற்று) மகிழ்பவர்களாகவும் உள்ளனர். [171]அல்லாஹ்விடமிருந்து கிடைத்த அருட்கொடையாலும் மேன்மையாலும் நம்பிக்கையாளர்களின் கூலியை அல்லாஹ் வீணாக்கமாட்டான் என்பதாலும் அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். [172](போரில் காயமுற்றவர்கள்) தங்களுக்குக் காயம் ஏற்பட்ட பின்னரும் அல்லாஹ்வும் தூதரும் இட்ட கட்டளையை ஏற்றுக் கொண்டனர். அவர்களில் நற்செயல்புரிபவர்களாகவும் இறையச்சமுடையவர்களாகவும் இருப்பவர்களுக்கு அரும்பெரும் கூலி உண்டு. [173]சிலர் அவர்களிடம் (வந்து) ''உங்களுக்கெதிராக (மறுப்பாளர்களாகிய) மக்கள் (பெரும் படையாகத்) திரண்டுள்ளனர். எனவே அவர்களுக்கு அஞ்சி இருங்கள்'' என்று கூறியபோது அது

அவர்களின் நம்பிக்கையை மேலும் மிகுதியாக்கியது. அப்போது அவர்கள், ''அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன். அவன்தான் சிறந்த பொறுப்பாளன்'' என்று கூறினர். [174](எதிரிகள் போரிடாமல் திரும்பிச் சென்று விட்டமையால்) அவர்கள் இறைவனின் அருளுடனும் (அங்கு வணிகம் செய்து ஈட்டிய) வளத்துடனும் திரும்பினர். அவர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை. அவர்கள் இறை விருப்பத்தின்படி நடந்தனர். அல்லாஹ் பேரருள் புரிபவன். [175](நம்பிக்கையாளர்களே!) சாத்தான் தன் நண்பர்களின் மூலம் உங்களை அச்சுறுத்துகிறான். எனவே, நீங்கள் அவர்களைக் கண்டு அஞ்சாதீர்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் எனக்கே அஞ்சுங்கள்.

இஸ்லாத்தின் பகைவர்களுக்கு எதிராகப் போராடி உயிர் நீத்தவர்களின் தியாகத்தை நயவஞ்சகர்கள் 'வீண் மரணம்' என்று குறிப்பிட்டனர். இந்த முஸ்லிம்கள் ஒரு நபரால் ஏமாற்றப்பட்டுத் தங்கள் வாழ்க்கையை வீணாக்குகிறார்கள் என்று அவர்கள் கருதினர். அதற்கு, 'நீங்கள் மரணம் என்று கருதுவதுதான் உண்மையில் வாழ்க்கை' என்று கூறப்பட்டது. நீங்கள் இந்த உலகத்தின் நன்மை தீமைகளை மட்டுமே அறிவீர்கள். அதனால்தான் மறுமைப் பாதையில் உங்கள் உயிரைக் கொடுப்பது உங்களை நீங்களே அழித்துக் கொள்வது போல் தோன்றுகிறது, ஆனால் இறைவனின் பாதையில் இறந்தவர்கள் உங்களை விடச் சிறந்த வாழ்க்கையைப் பெற்றிருக்கிறார்கள். மறுமையில் அவர்கள் உங்களை விட அதிக ஆடம்பரமான நிலையில் இருப்பார்கள்.

சாத்தானின் வழிமுறை என்னவென்றால், தன்னை நெருங்கியவர்களைத் தூண்டி எழுச்செய்து, மக்கள் மார்க்கத்தை நோக்கிச் செல்வதால் ஏற்படும் கடுமையான விளைவுகளை அவர்களுக்குக் காண்பித்து மார்க்கப் பாதையிலிருந்து விலக்கி விடுகிறான். அதன்படி, நம்பிக்கையாளர்கள் அச்சுறுத்தப்படவேண்டுமென்று இந்த மக்கள் எதிரிகளின் பலத்தை மிகைப்படுத்திக் கூறுகிறார்கள். ஆனால் இதுபோன்ற அச்சுறுத்தல்கள் நம்பிக்கையாளர்களுக்கு நன்மை பயப்பதாய் அமைகின்றன. ஏனென்றால், கடுமையான சூழ்நிலைகளில் தங்கள் இறைவன் தங்களைத் தனியாக விடமாட்டான் என்ற நம்பிக்கை அவர்களிடம் மீண்டும் உயிர்பெற்றுவிடுகிறது.

உஹுதுப் போர் மதீனாவிலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில் நடந்தது. போருக்குப் பிறகு, அபூ சுஃப்யானின் தலைமையில் மறுப்பாளர்களின் படை திரும்பிச் சென்றது. அவர்கள் மதீனாவிலிருந்து எட்டு மைல்

தொலைவில் உள்ள ஹம்ரா அல்-அசத்தை அடைந்து, முகாமிட்டனர். உஹுதிலிருந்து திரும்பியதன் மூலம் அவர்கள் தவறு செய்துவிட்டதை இங்கே உணர்ந்தார்கள். நம்பிக்கையாளர்களை மதீனா வரை துரத்திச் சென்று அவர்களின் அதிகாரத்தை இறுதியாக முடிவுக்குக் கொண்டுவர இதுவே சரியான வாய்ப்பாக இருந்தது. இதற்கிடையில், மதீனா நோக்கிச் சென்று கொண்டிருந்த அப்துல் கைஸ் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு வணிகக் கூட்டத்தை அவர்கள் சந்தித்தனர். நம்பிக்கையாளர்கள் மதீனாவை அடைந்ததும் அவர்களை அச்சுறுத்தும் செய்திகளைப் பரப்புவதற்காக மறுப்பாளர்கள் இந்த வணிகக் கூட்டத்திற்குக் கொஞ்சம் பணம் கொடுத்தார்கள். எனவே, அந்த வணிகக் கூட்டம் மதீனாவை அடைந்து, மக்காவாசிகள் ஒரு பெரிய படையைத் திரட்டுவதைக் கண்டதாகவும், அவர்கள் மீண்டும் மதீனாவைத் தாக்கப் போவதாகவும் கூறினர். ஆனால் நம்பிக்கையாளர்கள் இறைவனின் மீது வைத்திருந்த உறுதி, மறுப்பாளர்களின் திட்டம் முறியடிக்கப்படும் என்பதற்கான நம்பிக்கை உறுதியாக ஆகியது. இதன் நன்மை என்னவென்றால், நம்பிக்கையாளர்கள் தங்கள் எதிரிகளின் நோக்கங்களை அறிந்துகொண்டனர். மக்காவின் படை மதீனாவை நோக்கி அணிவகுத்துச் செல்வதற்கு முன், அவர்கள் இறைத்தூதரின் வழிகாட்டுதலின் கீழ் தங்கள் சொந்தக் குழுவை உருவாக்கி, ஹம்ரா அல்-அசாத்தை நோக்கி விரைவாகப் புறப்பட்டனர். நம்பிக்கையாளர்களின் படைகள் தங்களை நோக்கி முன்னேறி வருவதாக மக்கா மக்களுக்குச் செய்தி கிடைத்தபோது, நம்பிக்கையாளர்களுக்கு உதவியாகப் புதிய படைகள் கிடைத்துவிட்டதாக அவர்கள் நம்பினர். அவர்கள் பீதியடைந்து மக்காவுக்குத் திரும்பினர்.

وَلَا يَحْزُنْكَ الَّذِيْنَ يُسَارِعُوْنَ فِي الْكُفْرِ ۚ اِنَّهُمْ لَنْ يَّضُرُّوا اللّٰهَ
شَيْـًٔا ۗ يُرِيْدُ اللّٰهُ اَلَّا يَجْعَلَ لَهُمْ حَظًّا فِي الْاٰخِرَةِ ۚ وَلَهُمْ عَذَابٌ
عَظِيْمٌ ﴿١٧٦﴾ اِنَّ الَّذِيْنَ اشْتَرَوُا الْكُفْرَ بِالْاِيْمَانِ لَنْ يَّضُرُّوا اللّٰهَ
شَيْـًٔا ۚ وَلَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿١٧٧﴾ وَلَا يَحْسَبَنَّ الَّذِيْنَ كَفَرُوْٓا اَنَّمَا
نُمْلِيْ لَهُمْ خَيْرٌ لِّاَنْفُسِهِمْ ۗ اِنَّمَا نُمْلِيْ لَهُمْ لِيَزْدَادُوْٓا اِثْمًا ۚ وَلَهُمْ
عَذَابٌ مُّهِيْنٌ ﴿١٧٨﴾ مَا كَانَ اللّٰهُ لِيَذَرَ الْمُؤْمِنِيْنَ عَلٰى مَآ اَنْتُمْ
عَلَيْهِ حَتّٰى يَمِيْزَ الْخَبِيْثَ مِنَ الطَّيِّبِ ۗ وَمَا كَانَ اللّٰهُ لِيُطْلِعَكُمْ

عَلَى الْغَيْبِ وَلٰكِنَّ اللّٰهَ يَجْتَبِىْ مِنْ رُّسُلِهٖ مَنْ يَّشَآءُ ۖ فَاٰمِنُوْا
بِاللّٰهِ وَرُسُلِهٖ ۚ وَاِنْ تُؤْمِنُوْا وَتَتَّقُوْا فَلَكُمْ اَجْرٌ عَظِيْمٌ ﴿١٧٩﴾

[176](நபியே! இறை) மறுப்பில் விரைவாகச் செல்பவர்கள் உம்மைக் கவலைக்கு உள்ளாக்கிட வேண்டாம். அவர்கள் அல்லாஹ்வுக்கு எந்தத் தீங்கையும் செய்துவிட முடியாது. அவர்களுக்கு மறுமையில் எந்த நற்பேறும் கிடைக்கக் கூடாது என்று அல்லாஹ் விரும்புகிறான். அவர்களுக்குப் பெரும் வேதனை உண்டு. [177]நம்பிக்கையை விலையாகக் கொடுத்து மறுப்பை வாங்கிக் கொண்டவர்கள் அல்லாஹ்வுக்கு எந்தத் தீங்கையும் இழைக்க முடியாது. அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு. [178]மறுப்பாளர்களுக்கு நாம் கால நீட்டிப்பு அளித்துக் கொண்டிருப்பதைத் தங்களுக்கு நல்லதென அவர்கள் எண்ணிவிட வேண்டாம். நாம் அவர்களுக்குக் கால நீட்டிப்பு அளிப்பதெல்லாம் அவர்கள் தங்கள் பாவங்களை இன்னும் மிகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். அவர்களுக்கு இழிவுமிக்க வேதனையுண்டு. [179](இறை)நம்பிக்கையாளர்(களான உங்)களை, நீங்கள் (இப்போது நயவஞ்சகர்களுடன் கலந்து) இருக்கும் இதே நிலையில் அல்லாஹ் விட்டுவைத்திருக்க மாட்டான். தூய்மையானவர்களைத் தூய்மையற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தியே தீருவான். அல்லாஹ் மறைவானவற்றை உங்களுக்கு அறிவித்துத் தருபவன் அல்லன். ஆயினும், தன் தூதர்களிலிருந்து தான் விரும்பியோரை (அதற்காக) அல்லாஹ் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர்களின் மீதும் நம்பிக்கைகொள்ளுங்கள். நீங்கள் நம்பிக்கைகொண்டு இறையச்சத்துடன் நடந்துகொண்டால் உங்களுக்கு அரும்பெரும் கூலி உண்டு.

வாழ்க்கையின் உண்மையான பிரச்சினை கண்ணுக்குத் தெரிவதில்லை. உண்மையான பிரச்சினை, கண்ணிலிருந்து மறைந்திருப்பதுதான். மக்கள் இந்த உலகத்தின் நரகத்திலிருந்து தப்பிப்பது பற்றிக் கவலைப்படுகிறார்கள், மேலும் இந்த உலகத்தின் சொர்க்கத்தை அடைவதில் தங்கள் முழுமையான கவனத்தையும் செலுத்துகிறார்கள். ஆனால், மறுமை நரகத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டு, அங்குள்ள சொர்க்கத்தை நோக்கி

ஓடுவதுதான் ஒருவருக்கான மிகவும் அறிவார்ந்த செயல். இந்த உலகில், பணம் இருப்பதும் பணம் இல்லாததும், சொத்து இருப்பதும் சொத்து இல்லாதிருப்பதும், மரியாதைக்குரியவராக இருப்பதும் மரியாதை இல்லாதிருப்பதும், இவை அனைத்தும் ஒவ்வொரு மனிதனின் கண்களுக்கும் தென்படும் விஷயங்கள். அதனால்தான் அவன் அவற்றை நோக்கி ஓடுகிறான். தான் இங்கு அவற்றை இழந்தவனாக இருந்துவிடக் கூடாது என்பதற்காகவே தொடர்ந்து அவன் தன் முழு முயற்சியையும் மேற்கொள்கிறான். ஆனால், மனிதனின் உண்மையான பிரச்சினை மறுமையின் பிரச்சனையாகும். அதை இறைவன் சோதனைக்காக மறைத்து வைத்திருக்கிறான். அதை மக்களுக்குத் தெரிவிப்பதற்காக, அவன் ஒரு வழிமுறையை ஏற்படுத்தி இருக்கிறான். மறைவான செய்தியை வழங்குவதற்காக அவன் தன் அடியார்களில் சிலரைத் தேர்ந்தெடுக்கிறான். அவர்கள் மரணத்திற்குப் பின்புள்ள யதார்த்தங்களைப் பற்றி அவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறார்கள், பின்னர் அதைப் பற்றி மற்றவர்களுக்கும் தெரிவிக்க அவர்களை நியமிக்கிறார்கள். மனிதனின் உண்மையான சோதனை இறை அழைப்பாளரின் குரலில் சத்தியத்தின் பிரதிபலிப்புகளைக் காண்பதும், வார்த்தைகளாலான அழைப்பில் யதார்த்தத்தின் செயல்வடிவத்தைக் கண்டுணர்வதுமாகும். தன்னைப் போன்ற ஒரு மனிதனின் பேச்சில் இறைவனுடைய பேச்சின் எதிரொலியை அவன் கேட்க வேண்டும்.

மனிதன் தற்சாய்வு கொண்டிருக்கக்கூடாது என்பதே நம்பிக்கை. ஏனென்றால், தற்சாய்வு என்பது இறைவனுக்குப் பதிலாகத் தனக்கே மகத்துவத்தும் கொடுப்பதாகும். அவன் உலகத்தில் மூழ்கி இருக்கக்கூடாது. ஏனென்றால், உலக வாழ்க்கையில் மூழ்கி இருப்பது, மனிதன் மறுமைக்கு உண்மையான முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. அவன் ஆணவம், கஞ்சத்தனம், அநீதி, இறைவனைத் தவிர மற்றவர்களிடம் பற்றும் அன்பும் கொள்வது ஆகிய இவற்றிலிருந்தெல்லாம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக இறைவழிபாடு, பணிவு, தாராள மனப்பான்மை, நேர்மை ஆகியவற்றைத் தனது வாழ்க்கை முறையாக ஆக்கிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வது, அவன் தன்னுடைய நம்பிக்கையில் தீவிரமானவன் என்பதை நிரூபிக்கிறது. உண்மையில், அவன் இறைவனுக்கும் மறுமைக்கும் தன்னை ஒப்படைத்துக் கொண்டுள்ளான். அப்படிச் செய்யாமல் இருப்பது அவன் தன் நம்பிக்கை தொடர்பாகத் தீவிரமாக இல்லை என்பதைக் காட்டுகிறது. நம்பிக்கையை ஒப்புக்கொண்ட போதிலும், அவன் நடைமுறையில் மற்றவர்கள் வாழும் அதே உலகில் வாழ்கிறான். மறுமையில் தீய ஆன்மாக்களும் நல்ல ஆன்மாக்களும் பிரிக்கப்படுவது உண்மையின்

அடிப்படையில் நடக்குமே அன்றி, புறத்தோற்றங்களின் அடிப்படையில் அல்ல, இந்த உலகில் தீயவர்களுக்கு வழங்கப்படும் தளர்வு, அவர்கள் தங்களுக்குள் இருக்கும் தீமையை முழுமையாக வெளிப்படுத்துவதற்காக மட்டுமே. ஆனால் அவர்கள் எவ்வளவு கடினமாக முயற்சி செய்தாலும், நேர்மையாளர்களை அடக்குவதில் அவர்கள் வெற்றிபெற முடியாது. அவர்கள் தங்கள் சுதந்திரத்தைத் தங்களுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்த முடியும். மற்றவர்களுக்கு எதிராக அல்ல.

وَلَا يَحْسَبَنَّ الَّذِيْنَ يَبْخَلُوْنَ بِمَآ اٰتٰىهُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ هُوَ خَيْرًا
لَّهُمْ ؕ بَلْ هُوَ شَرٌّ لَّهُمْ ؕ سَيُطَوَّقُوْنَ مَا بَخِلُوْا بِهٖ يَوْمَ الْقِيٰمَةِ ؕ
وَلِلّٰهِ مِيْرَاثُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ﴿۱۸۰﴾ ع
لَقَدْ سَمِعَ اللّٰهُ قَوْلَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّ اللّٰهَ فَقِيْرٌ وَّنَحْنُ
اَغْنِيَآءُ ۘ سَنَكْتُبُ مَا قَالُوْا وَقَتْلَهُمُ الْاَنْۢبِيَآءَ بِغَيْرِ
حَقٍّ ۙ وَّنَقُوْلُ ذُوْقُوْا عَذَابَ الْحَرِيْقِ ﴿۱۸۱﴾ ذٰلِكَ بِمَا قَدَّمَتْ
اَيْدِيْكُمْ وَاَنَّ اللّٰهَ لَيْسَ بِظَلَّامٍ لِّلْعَبِيْدِ ﴿۱۸۲﴾ ۚ اَلَّذِيْنَ
قَالُوْٓا اِنَّ اللّٰهَ عَهِدَ اِلَيْنَآ اَلَّا نُؤْمِنَ لِرَسُوْلٍ حَتّٰى
يَاْتِيَنَا بِقُرْبَانٍ تَاْكُلُهُ النَّارُ ؕ قُلْ قَدْ جَآءَكُمْ رُسُلٌ مِّنْ
قَبْلِيْ بِالْبَيِّنٰتِ وَبِالَّذِيْ قُلْتُمْ فَلِمَ قَتَلْتُمُوْهُمْ اِنْ كُنْتُمْ
صٰدِقِيْنَ ﴿۱۸۳﴾ فَاِنْ كَذَّبُوْكَ فَقَدْ كُذِّبَ رُسُلٌ مِّنْ قَبْلِكَ
جَآءُوْ بِالْبَيِّنٰتِ وَالزُّبُرِ وَالْكِتٰبِ الْمُنِيْرِ ﴿۱۸۴﴾ كُلُّ نَفْسٍ
ذَآئِقَةُ الْمَوْتِ ؕ وَاِنَّمَا تُوَفَّوْنَ اُجُوْرَكُمْ يَوْمَ الْقِيٰمَةِ ؕ
فَمَنْ زُحْزِحَ عَنِ النَّارِ وَاُدْخِلَ الْجَنَّةَ فَقَدْ فَازَ ؕ وَمَا
الْحَيٰوةُ الدُّنْيَآ اِلَّا مَتَاعُ الْغُرُوْرِ ﴿۱۸۵﴾

[180]தன் அருளால் அல்லாஹ் தங்களுக்கு வழங்கியவற்றில் கஞ்சத்தனம் செய்பவர்கள் அதனைத் தங்களுக்கு நல்லது என்று எண்ணிவிட வேண்டாம். மாறாக, அது அவர்களுக்குத் தீயதே ஆகும். அவர்கள் கஞ்சத்தனம் புரிந்து சேர்த்த பொருள்கள் மறுமை நாளில் அவர்களின் கழுத்தில் விலங்காக மாட்டப்படும். அல்லாஹ்வே வானங்கள், பூமி ஆகியவற்றின் நிலையான உரிமையாளன். நீங்கள் செய்கின்றவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன். [181]''அல்லாஹ் ஏழை, நாங்கள்தாம் செல்வர்கள்'' என்று கூறியவர்களின் கூற்றை அல்லாஹ் கேட்டுக்கொண்டான். அவர்கள் கூறியதையும் தூதர்களை நியாயமின்றிக் கொன்றதையும் நாம் எழுதிக்கொள்வோம் (மறுமையில்) ''இதோ சுட்டெரிக்கும் வேதனையைச் சுவையுங்கள்'' என்று (அவர்களிடம்) நாம் கூறுவோம். [182]இது உங்கள் கைகள் முன்னர்ச் செய்தனுப்பிய (தீய)வற்றின் விளைவாகும். தன் அடியார்களுக்கு அல்லாஹ் ஒரு சிறிதும் அநீதியிழைக்க மாட்டான். [183]''நெருப்பு ஒரு பலியை உண்பதை எங்கள் கண்முன்னால் காட்டாதவரை நாங்கள் எந்தத் தூதரையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று எங்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்'' என்று அவர்கள் கூறுகின்றனர். (நபியே!) நீர் அவர்களிடம் ''எனக்கு முன்னால் உங்களுக்குத் தெளிவான சான்றுகளையும் நீங்கள் கேட்ட(பலி பற்றிய)தையும் தூதர்கள் கொண்டுவந்தார்களே! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அவர்களை ஏன் கொலை செய்தீர்கள்?'' என்று கேட்பீராக! [184]அவர்கள் உம்மைப் பொய்மைப்படுத்துகின்றனர் என்றால் (கவலைப்படாதீர்!) உமக்கு முன்னர்த் தெளிவான சான்றுகளையும் ஆகமங்களையும் ஒளிரும் வேதத்தையும் கொண்டுவந்த பல தூதர்களும் பொய்மைப்படுத்தப்பட்டனர். [185]ஒவ்வோர் உயிரும் சாவைச் சுவைத்தே தீரவேண்டும். உங்களுக்கு முழுமையான கூலி மறுமையில்தான் கிடைக்கும். எனவே, எவர் நரகத்தினின்றும் தொலைவாக்கப்பட்டுச் சொர்க்கத்தில் அனுமதிக்கப்படுகிறாரோ அவரே வெற்றி பெற்றவராவார். உலக வாழ்க்கை மயக்கக்கூடிய அற்ப இன்பமேயன்றி வேறில்லை.

புறத்தோற்றத்தில், மனிதன் வாக்குறுதி அளிப்பதன் மூலம் ஒரு நம்பிக்கையாளனாகிறான், ஆனால், தனது உயிரையும் உடைமையையும் இறைவனின் பாதையில் கொடுக்கும்போதுதான் அவன் இறைவனின் பார்வையில் ஓர் உண்மையான நம்பிக்கையாளனாக மாறுகிறான். உயிர்களையும் உடைமைகளையும் அர்ப்பணிக்காமல் யாருடைய

நம்பிக்கையும் இறைவனுக்கு முன் நம்பகமானதாகாது. மனிதன் தனது செல்வத்தைச் சேமிக்கிறான். ஏனெனில் அவன் இவ்விதமாகத் தனது உலக எதிர்காலத்தைப் பாதுகாப்பதாக நம்புகிறான். ஆனால் மனிதனின் உண்மையான எதிர்காலம், மறுமையில் என்ன வெளிப்படும் என்பதைப் பொறுத்தது. அப்படிச் சேமிக்கப்பட்ட செல்வம் மறுமையில் அந்த நபருக்கு ஒரு பேரழிவாகவே இருக்கும். இவ்வுலகில் அலங்காரமாகவும் பெருமையாகவும் தோன்றும் செல்வம், இறைவனின் கட்டளைப்படி, மறுமையில் ஒரு பாம்பின் வடிவத்தை எடுக்கும். அது என்றென்றும் தீண்டிக் கொண்டிருக்கும்.

தியாக மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தங்கள் நியாயத்தை நிரூபிக்கப் பல்வேறு கருத்துக்களைச் சொல்கிறார்கள். எடுத்துக்காட்டாக, இறைவன் இந்தச் செல்வத்தை நமது தேவைகளுக்காகப் படைத்தான். அதை நம் தேவைகளுக்கு ஏன் செலவழிக்கக் கூடாது? நமது உலக சுகங்களைப் பெற ஏன் பயன்படுத்தக்கூடாது? என்று கேட்கிறார்கள்.

சில சமயங்களில் அவர்களின் அலட்சியப் போக்கு, சத்திய அழைப்பாளர் மீது சந்தேகத்தை ஏற்படுத்தப் பல்வேறு விசித்திரமான விஷயங்களைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு அவர்களை இட்டுச் செல்கிறது. அதன்மூலம் அந்த நபர் உண்மையான அழைப்பாளர் அல்லர் என்பதை நிரூபிக்க அவர்கள் முயல்கிறார்கள். அத்துணைக்கும் அவரது வருகை ஒருவர் தனது உயிரையும் உடைமையையும் அர்ப்பணித்து அவருக்குத் துணை நிற்க வேண்டும் என்று கோருகிறது. அப்படிப்பட்டவர்கள் சொல்லும் கருத்துக்கள் வாதங்களின் வடிவத்தில் இருப்பதாகத் தோன்றினாலும், உண்மையில் அவை இறைநம்பிக்கையின் எதிர்பார்ப்புகளிலிருந்து தப்பிக்கும் நோக்கம் கொண்டவை. எனவே, எந்த வாதம் முன்வைக்கப்பட்டாலும், அதை மறுக்க சில வார்த்தைகளைக் கண்டுபிடிப்பார்கள். இவர்கள் தங்கள் இறுதி முடிவு மரணம் என்பதை மறந்துவிட்டவர்கள். மரண இலக்கு வந்தவுடன் நிலைமை முற்றிலும் மாறிவிடும். மரணம் அனைத்துத் தவறான ஆதாரங்களையும் பொய்யாக்கும். அப்போது மனிதன், தான் உண்மையில் எங்கு இருந்தானோ அதே இடத்தில் நிற்பதைக் காண்பான். தான் இருப்பது போல் பாசாங்கு செய்த இடத்திலல்ல. தற்போதைய உலகில் ஒருவரது முன்னேற்றமோ, தோல்வியோ இரண்டும் உண்மையில் ஒரே மட்டத்தில் உள்ளவை. இங்குக் கிடைக்கும் பாக்கியங்கள் ஒருவர் சரியான பாதையில் செல்கிறார் என்பதற்கான சான்றல்ல.இங்குள்ள சிரமங்களும் துன்பங்களும் அவர் தவறான பாதையில் செல்கிறார் என்பதற்கான சான்றுமல்ல. ஏனென்றால் இரண்டும் சோதனையின் வடிவங்கள், முடிவின் அடையாளங்கள் அல்ல.

لَتُبْلَوُنَّ فِيْٓ اَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ ۫ وَلَتَسْمَعُنَّ مِنَ الَّذِيْنَ
اُوْتُوا الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ وَمِنَ الَّذِيْنَ اَشْرَكُوْٓا اَذًى
كَثِيْرًا ۭ وَاِنْ تَصْبِرُوْا وَتَتَّقُوْا فَاِنَّ ذٰلِكَ مِنْ عَزْمِ
الْاُمُوْرِ ۝۱۸۶ وَاِذْ اَخَذَ اللّٰهُ مِيْثَاقَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ
لَتُبَيِّنُنَّهٗ لِلنَّاسِ وَلَا تَكْتُمُوْنَهٗ ۡ فَنَبَذُوْهُ وَرَاۗءَ ظُهُوْرِهِمْ
وَاشْتَرَوْا بِهٖ ثَمَنًا قَلِيْلًا ۭ فَبِئْسَ مَا يَشْتَرُوْنَ ۝۱۸۷ لَا
تَحْسَبَنَّ الَّذِيْنَ يَفْرَحُوْنَ بِمَآ اَتَوْا وَّيُحِبُّوْنَ اَنْ يُّحْمَدُوْا
بِمَا لَمْ يَفْعَلُوْا فَلَا تَحْسَبَنَّهُمْ بِمَفَازَةٍ مِّنَ الْعَذَابِ ۚ وَلَهُمْ
عَذَابٌ اَلِيْمٌ ۝۱۸۸ وَلِلّٰهِ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۭ وَاللّٰهُ
عَلٰي كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۝۱۸۹ ع

[186] *(நம்பிக்கையாளர்களே!) உங்கள் செல்வங்கள், (உங்கள்) உயிர்கள் ஆகியவற்றால் உறுதியாக நீங்கள் சோதிக்கப்படுவீர்கள். உங்களுக்கு முன் வேதம் வழங்கப்பட்டோரிடமிருந்தும் இணைவைப்போரிடமிருந்தும் உறுதியாக வேதனைப்படுத்தும் (வசை) மொழிகளைச் செவியுறுவீர்கள். நீங்கள் பொறுமையை மேற்கொண்டு இறையச்சத்தோடு இருந்தால் உறுதியாக அது மனவுறுதிமிக்க செயலாகும்.* [187] *வேதம் வழங்கப்பட்டோரிடம் ''வேதத்தை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். அதனை நீங்கள் மறைத்து விடக்கூடாது'' என்று அல்லாஹ் உறுதிமொழி பெற்றதை (நபியே! நீர்) நினைவூட்டுவீராக. ஆனால், அவர்கள் அதனைத் தம் முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டனர். குறைந்த ஊதியத்திற்காக அதனை விற்றுவிட்டனர். அவர்கள் வாங்கிக் கொண்டது எவ்வளவு கேடானது!* [188] *தாம் செய்த (தவறான) செயல்களுக்காக மகிழ்வடைந்து தாம் செய்யாத (நல்ல) செயல்களுக்காகப் பாராட்டப்பட வேண்டும் என்று விரும்புபவர்கள் (இறை)வேதனையிலிருந்து தப்பித்துவிடுவர் என்று (நபியே! நீர்) எண்ணிவிட வேண்டாம். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு.* [189] *வானங்கள், பூமி ஆகியவற்றின்*

ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன்.

மனிதன் மார்க்க நம்பிக்கையின் பயணத்தை எத்தகு உலகத்தில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறதென்றால், அங்கே அவனுக்குத் தன்னைச் சேர்ந்தவர்களாலும் மற்றவர்களாலும் பல்வேறு விதமான காயங்கள் ஏற்படுகின்றன. ஆனால், ஒரு நம்பிக்கையாளன் எதிர்வினையாற்றும் மனநிலைக்கு ஆளாகாமல், ஒவ்வொரு சூழ்நிலைக்கும் உடன்பாடாகப் பதிலளித்து முன்னேறிச் செல்வது முக்கியம். மக்கள் அவனைத் தூண்டிவிடும் சந்தர்ப்பங்கள் வருவதுண்டு. ஆனால், அவன் எல்லா வகையான அதிர்ச்சிகளையும் தாங்கிக் கொள்ளக் கட்டுப்பட்டிருக்கிறான்.பழிவாங்கும் மனத்துடன் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. அடிக்கடி சில வகையான விஷயங்களை எதிர்கொள்ள நேரும்போதும், இறைவனின் வரம்புகளை உடைத்துத் தனக்குத் தேவையான நோக்கத்தை அடைந்துவிடலாம் என்று இதயம் சொல்லும்போதும், இறைவனின் அச்சம் அவன் கால்களைத் தடுத்து நிறுத்துகிறது. இதே போலவே, பல்வேறு மார்க்கத் தேவைகள் எழுகின்றன. அவை உயிரையும் உடைமையையும் தியாகம் செய்யக் கோருகின்றன. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், எளிதான மார்க்கத்தைக் கைவிட்டுக் கடுமையான மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டி வருகிறது. இந்த நிகழ்வு மார்க்க நம்பிக்கையின் பயணத்தை மன வலிமைக்கும் மன உறுதிக்குமான பெரிய சோதனையாக்கி விடுகிறது. உண்மை என்ன வெனில், ஒரு நம்பிக்கையாளனாக ஆவதென்பது பொறுமையிலும் இறையச்சத்திலும் தன்னைத் தானே நிலைநிறுத்துவதாகும். இந்தச் சோதனையில் வெற்றி பெறுபவர் மறுமையில் சொர்க்கத்தின் வாயில்கள் யாருக்காகத் திறக்கப்படுமோ அத்தகு நம்பிக்கையாளனாக மாறுகிறார்.

இறை வேதம் அருளப்பட்ட ஒரு சமூகம் வீழ்ச்சியடையும் போது, அது இறைவனின் பெயரையும் தூதரின் பெயரையும் குறிப்பிடுவதை நிறுத்தி விடுவதில்லை, இறை வேதத்துடன் தங்களுக்குத் தொடர்பில்லை என்று அறிவிப்புச் செய்வதில்லை. நடப்பது என்னவென்றால் மதம் மதமாக இல்லாமல் அத்தகைய சமூகத்தின் இன மரபுகளின் ஒரு பகுதியாக மாறிவிடுகிறது. அது அதன் பெருமைமிக்க தேசிய சொத்தாக மாறுகிறது. அத்தகைய இன, தேசிய தொடர்பு நிலைநாட்டப்பட்ட ஒன்றிலிருந்து எந்தவொரு சமூகக்குழுவும் பிரிந்து செல்வது சாத்தியமற்றது. இருப்பினும், இந்தத் தொடர்பு வெறும் சடங்குக்கானது, உண்மையான தொடர்பு அல்ல. அவர்கள் தங்கள் உலக நடவடிக்கைகளையும் மதத்தின் பெயரால் மேற்கொள்கிறார்கள். அவர்கள் மதப் புறக்கணிப்பாளர்களாக இருந்தாலும்

தாங்கள் மதவாதிகள் என்று அழைக்கப்பட விரும்புகிறார்கள். அவர்கள் செய்யாத வேலைக்கும் தமக்குப் பாராட்டுக் கிடைக்கவேண்டுமென விரும்புகிறார்கள். மறுமை ஈடேற்றத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்கள் தங்கள் வாழ்க்கையை வாழ்கிறார்கள். அதே நேரத்தில், அவர்களின் ஈடேற்றம் முற்றிலும் பாதுகாப்பாக இருப்பதாக நம்ப வைக்கும் நம்பிக்கைகளையும் உருவாக்குகிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த இட்டுக்கட்டப்பட்ட மதத்தைப் பின்பற்றுகிறார்கள். ஆனால், தங்களை இறைமார்க்கத்தின் முன்னோடிகள் என்று கூறிக்கொள்கிறார்கள். அவர்கள் உலக இலக்குகளுக்காக மும்முரமாக இருந்து கொண்டு தங்கள் செயல்பாடுகளை 'மறுமைக்கானவை' என்று தலைப்பிடுகிறார்கள். அவர்கள் தாமாக வடிவமைத்த அரசியலை நடத்தி, அதை இறைவன் வகுத்த அரசியல் என்று நிரூபிக்க முயல்கிறார்கள். அவர்கள் தம் சமூகம் சார்ந்த நலன்களுக்காக எழுந்து நிற்கிறார்கள். மனித இனத்துக்கே நன்மைக்கான பங்கை வகிக்க எழுந்து நின்றதாக அறிவிக்கிறார்கள்.

ஒருவரின் மதப் புறக்கணிப்புக்கு மதத்தின் பெயரைக் கொடுப்பதன் மூலம் ஒரு மனிதன் இறைவனின் பிடியிலிருந்து தப்ப முடியாது. மனிதன் உலகத்தை நோக்கி ஓடி மறுமையைக் குறித்து அக்கறையற்றவனாக மாறினால், அது கெடுவழி மட்டுமே. அவன் தனது உலக வியாபாரத்தை இறைவனின் பெயராலும் அவனுடைய தூதரின் பெயராலும் நடத்தத் தொடங்கினால், அது கெடுவழியைத் தாண்டி ஆணவத்தின் சேர்க்கையாகும். ஏனென்றால் அது, ஒருவன் செய்யாத பணிக்கு வெகுமதியை விரும்புவது போன்றது.

اِنَّ فِیْ خَلْقِ السَّمٰوٰتِ وَ الْاَرْضِ وَاخْتِلَافِ الَّیْلِ وَ النَّهَارِ
لَاٰیٰتٍ لِّاُولِی الْاَلْبَابِ ﴿۱۹۰﴾ الَّذِیْنَ یَذْكُرُوْنَ اللّٰهَ قِیٰمًا
وَّقُعُوْدًا وَّعَلٰی جُنُوْبِهِمْ وَ یَتَفَكَّرُوْنَ فِیْ خَلْقِ السَّمٰوٰتِ
وَ الْاَرْضِ ۚ رَبَّنَا مَا خَلَقْتَ هٰذَا بَاطِلًا ۚ سُبْحٰنَكَ
فَقِنَا عَذَابَ النَّارِ ﴿۱۹۱﴾ رَبَّنَاۤ اِنَّكَ مَنْ تُدْخِلِ النَّارَ فَقَدْ
اَخْزَیْتَهٗ ؕ وَ مَا لِلظّٰلِمِیْنَ مِنْ اَنْصَارٍ ﴿۱۹۲﴾ رَبَّنَاۤ اِنَّنَا سَمِعْنَا
مُنَادِیًا یُّنَادِیْ لِلْاِیْمَانِ اَنْ اٰمِنُوْا بِرَبِّكُمْ فَاٰمَنَّا ۟ رَبَّنَا
فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَ كَفِّرْ عَنَّا سَیِّاٰتِنَا وَ تَوَفَّنَا مَعَ

الْاَبْرَارِ ﴿١٩٣﴾ رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ وَلَا تُخْزِنَا
يَوْمَ الْقِيٰمَةِ ؕ اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ ﴿١٩٤﴾

[190]வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும் இரவுபகல் மாறிமாறி வருவதிலும் அறிவுடையோருக்குப் பல சான்றுகள் உள்ளன. [191]அவர்கள் நின்ற நிலையிலும் அமர்ந்த நிலையிலும் சாய்ந்து படுத்த நிலையிலும் அல்லாஹ்வை நினைவுகூர்வார்கள்; (அவன்) வானங்களையும் பூமியையும் படைத்திருப்பது பற்றியும் சிந்திப்பார்கள். (பிறகு அவர்கள்) ''எங்கள் இறைவா! நீ இவற்றை(யெல்லாம்) வீணாகப் படைக்கவில்லை; நீ தனித்துயர்ந்தவன்; எனவே எங்களை நரக நெருப்பின் வேதனையிலிருந்து காப்பாற்றுவாயாக!'' (என்றும்) [192]''எங்கள் இறைவா! எவரை நீ நரகத்தில் புகுத்தினாயோ அவர்களை உண்மையில் இழிவுபடுத்தி விட்டாய். தீவினையாளர்களுக்கு உதவி செய்வோர் எவரும் இல்லை'' (என்றும்) [193]''எங்கள் இறைவா! நம்பிக்கையின்பால் அழைக்கும் ஓர் அழைப்பாளர், 'உங்கள் இறைவனின் மீது நம்பிக்கைகொள்ளுங்கள்' என்று அழைப்பு விடுத்ததை நாங்கள் செவியுற்றோம்; உடனே நம்பிக்கை கொண்டோம். எங்கள் இறைவா! எங்கள் பாவங்களை மன்னித்தருள்வாயாக! எங்களிடம் உள்ள தீமைகளை அகற்றுவாயாக! எங்களை நல்லோர்களுடன் இறக்கச் செய்வாயாக!'' (என்றும்) [194]''எங்கள் இறைவா! உன் தூதர்களின் வாயிலாக நீ எங்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவாயாக! மறுமை நாளில் எங்களை இழிவுக்குள்ளாக்கி விடாதே. உறுதியாக நீ வாக்குறுதி மீறமாட்டாய்'' (என்றும்) அவர்கள் இறைஞ்சி வேண்டுவர்.

பிரபஞ்சம், தன் முழு இருப்புடன், ஒரு மௌனப் பிரகடனமாக இருக்கிறது. மனிதன் தனது காதுகளிலிருந்தும் கண்களிலிருந்தும் செயற்கைத் திரைகளை அகற்றும்போது, இந்த அமைதியான அறிவிப்பை எல்லா இடங்களிலும் கேட்கவும் பார்க்கவும் தொடங்குகிறான். கோடிக்கணக்கான ஆண்டுகள் வரையும்கூட விண்மீன்களும் கோள்களும் மறைந்து போகாத ஒரு பிரபஞ்சத்தில், மனிதர்கள், அவர்களின் அனைத்து ஆசைகளுடனும், எதிர்பார்ப்புகளுடனும், வெறும் ஐம்பது அல்லது நூறு ஆண்டுகளில் மறைந்து போவது அவனுடைய இயற்கையாகத் தெரிகிறது. மரங்களுக்கு அழகும், பூக்களுக்கு மென்மையும் இருக்கும் உலகத்தில், காற்று, நீர்,

சூரியன் போன்ற எண்ணற்ற பொருள்கள் வழங்கப்பட்ட இடத்தில் மனிதனுக்குத் துன்பத்தையும் துயரத்தையும் தவிர வேறு முடிவே இல்லை என்பதும் அவனுடைய இயற்கையாகத் தெரிகிறது. ஒரு சிறிய விதையை நிலத்தில் விதைத்தால், அதற்குள்ளிருந்து பசுமையான ஒரு மரம் பிரபஞ்சமாய் வெளிவரும். முடிவற்ற சாத்தியக்கூறு உள்ள உலகில், ஒரு மனிதன் நீதியான வாழ்க்கையை வாழ்ந்து, அதிலிருந்து எந்தப் பலனையும் அறுவடை செய்யாமல் போவதென்பதும் அவனுடைய இயற்கையாகத் தெரிகிறது. ஒவ்வொரு இருண்ட இரவையும் தொடர்ந்து ஓர் ஒளிமயமான பகல் வருகின்ற உலகில், நீதி மற்றும் நியாயத்தின் ஒளி பல நூற்றாண்டுகள் கடந்தும் சுடர்விட்டு ஒளிராமல் போகுமா? பூகம்பங்களும் புயல்களும் மடியில் உறங்கிக் கொண்டிருக்கும் ஓர் உலகம், அங்கே மனிதன் தொடர்ந்து அநீதிக்கு மேல் அநீதி இழைத்துக் கொண்டிருக்க, யாரும் அவன் கையைப் பிடித்துத் தடுக்க முன்வராமலிருப்பது இயற்கையா, சாத்தியமா?

யதார்த்தத்தில் வாழ்பவர்களுக்கும் ஆழமாகச் சிந்திப்பவர்களுக்கும், அர்த்தம் பொதிந்த ஒரு பிரபஞ்சம் பொருளற்ற முடிவில் நிறைவுபெறும் என்பது நம்பமுடியாததாக ஆகிவிடுகிறது. பிரபஞ்சம் எங்கும் மௌன மொழியில் ஒளிபரப்பப்படும் அதே கருத்துதான், பேச்சு மொழியில் அறிவிப்பாக சத்திய அழைப்பாளர்கள் தரும் செய்தி என்பதை அவர்கள் உணர்கிறார்கள். அவர்களுடைய மிகப்பெரிய கவலை, உண்மை வெளிப்பட்டு நீதியின் சூரியன் உதிக்கும் நாளில் அவர்கள் தோற்றுப் போகக் கூடாது, இழிவுற்றுவிடக்கூடாது என்பதுதான். அவர்கள் தங்கள் இறைவனுக்குக் குரல் கொடுத்தவர்களாக அவனை நோக்கி ஓடுகிறார்கள். அவர்கள் தன்னலம் பார்க்காமல், வசதிகளைக் கருத்தில் கொள்ளாமல் அனைத்து எல்லைகளையும் உடைத்து சத்திய அழைப்பாளரின் பாதையில் இணைகிறார்கள். எனவே, பிரபஞ்சத்தின் 'ஒளியும்' 'இருளும்' ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்படும்போது, பிரபஞ்சத்தின் இறைவன் அவர்களுக்கு ஒளியில் ஓர் இடத்தைக் கொடுப்பான், இருளில் தடுமாற விடமாட்டான்.

அறிவு, அறிவின்மை ஆகியவற்றின் உண்மையான அளவுகோல், மனிதர்கள் தாமாக உருவாக்கிக்கொண்ட ஒன்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இங்கே, அறிவுள்ளவன் என்பவன் இறை நினைவிலேயே வாழ்பவன், பிரபஞ்சத்தின் படைப்புத் திட்டத்தில் செயல்படும் இறை நோக்கத்தைப் புரிந்துகொள்பவன். மாறாக, அறிவற்றவன் தன் மனதை மற்ற விஷயங்களில் மூழ்கடித்து, பிரபஞ்சத்தின் உரிமையாளனின் படைப்புத் திட்டம் பற்றிய செய்தி எதையும் அறியாதது போல் உலகில் வாழ்பவன்.

فَاسْتَجَابَ لَهُمْ رَبُّهُمْ اَنِّيْ لَاۤ اُضِيْعُ عَمَلَ عَامِلٍ مِّنْكُمْ مِّنْ
ذَكَرٍ اَوْ اُنْثٰى ۚ بَعْضُكُمْ مِّنْۢ بَعْضٍ ۚ فَالَّذِيْنَ هَاجَرُوْا وَاُخْرِجُوْا
مِنْ دِيَارِهِمْ وَاُوْذُوْا فِيْ سَبِيْلِيْ وَقٰتَلُوْا وَقُتِلُوْا لَاُكَفِّرَنَّ
عَنْهُمْ سَيِّاٰتِهِمْ وَلَاُدْخِلَنَّهُمْ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۚ
ثَوَابًا مِّنْ عِنْدِ اللّٰهِ ؕ وَاللّٰهُ عِنْدَهٗ حُسْنُ الثَّوَابِ ﴿۱۹۵﴾ لَا يَغُرَّنَّكَ
تَقَلُّبُ الَّذِيْنَ كَفَرُوْا فِي الْبِلَادِ ﴿۱۹۶﴾ ؕ مَتَاعٌ قَلِيْلٌ ۫ ثُمَّ مَاْوٰىهُمْ
جَهَنَّمُ ؕ وَبِئْسَ الْمِهَادُ ﴿۱۹۷﴾ لٰكِنِ الَّذِيْنَ اتَّقَوْا رَبَّهُمْ لَهُمْ جَنّٰتٌ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا نُزُلًا مِّنْ عِنْدِ اللّٰهِ ؕ
وَمَا عِنْدَ اللّٰهِ خَيْرٌ لِّلْاَبْرَارِ ﴿۱۹۸﴾ وَاِنَّ مِنْ اَهْلِ الْكِتٰبِ لَمَنْ
يُّؤْمِنُ بِاللّٰهِ وَمَاۤ اُنْزِلَ اِلَيْكُمْ وَمَاۤ اُنْزِلَ اِلَيْهِمْ خٰشِعِيْنَ
لِلّٰهِ ۙ لَا يَشْتَرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ ثَمَنًا قَلِيْلًا ؕ اُولٰٓئِكَ لَهُمْ اَجْرُهُمْ
عِنْدَ رَبِّهِمْ ؕ اِنَّ اللّٰهَ سَرِيْعُ الْحِسَابِ ﴿۱۹۹﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا
اصْبِرُوْا وَصَابِرُوْا وَرَابِطُوْا ۟ وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿۲۰۰﴾ ع ۲۰

[195]இறைவன் அவர்களின் இறைஞ்சுதலை ஏற்றுக்கொண்டு ''உங்களில் ஆணாயினும் பெண்ணாயினும் எவரது (நற்)செயலையும் நான் வீணாக்கிவிட மாட்டேன். நீங்கள் ஒருவர் மற்றொருவருடன் தொடர்புள்ளவராவீர்கள். எனவே புலம்பெயர்ந்தவர்கள், தம் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள், எனது பாதையில் துன்புறுத்தப்பட்டவர்கள், போரிட்டவர்கள், அதில் கொல்லப்பட்டவர்கள் ஆகியோரின் பாவங்களை உறுதியாக நான் அவர்களிடமிருந்து அகற்றி விடுவேன். அவர்களைச் சொர்க்கச் சோலைகளில் நுழையச் செய்வேன். அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்'' என்று கூறுவான். இது அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் கூலியாகும். மிகச்சிறந்த கூலி அல்லாஹ்விடமேயுள்ளது. [196](நபியே!)

மறுப்பாளர்கள் (வசதியுடையவர்களாய் மகிழ்ச்சியுடன்) நகரங்களில் சுற்றித் திரிவது உம்மை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கி விடவேண்டாம். [197]அது (இம்மையின்) அற்ப சுகம்தான். பின்னர் அவர்களின் உறைவிடம் நரகமாகும். அது மிகவும் கொடிய இருப்பிடம். [198]ஆயினும் தம் இறைவனை அஞ்சுவோருக்குச் சொர்க்கச் சோலைகள் இருக்கின்றன. அவற்றில் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அங்கு அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். இது அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் போற்றுதல் ஆகும். நல்லோர்களுக்காக அல்லாஹ்விடம் இருப்பதே மிகச் சிறந்ததாகும். [199](நம்பிக்கையாளர்களே!) வேதமுடையோரில் சிலர் (இவ்வாறு) உள்ளனர்; அவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கின்றனர். உங்களுக்கு அருளப்பட்ட இ(வ்வேதத்)தையும் தமக்கு அருளப்பட்ட (முந்தைய வேதத்)தையும் ஏற்றுக் கொள்கின்றனர்; அல்லாஹ்விற்குப் பணிந்தவர்களாக இருக்கின்றனர்; அவர்கள் இறைவசனங்களை அற்ப ஊதியத்திற்கு விற்றுவிடுவதில்லை. இறைவனிடம் அவர்களுக்குரிய கூலியுள்ளது. அல்லாஹ் கணக்கெடுப்பதில் மிக விரைவானவன். [200](ஓரிறை) நம்பிக்கையாளர்களே! பொறுமை காத்திருங்கள்; பொறுமை காட்டுவதில் (ஒருவருக்கொருவர்) போட்டியிடுங்கள்; (நம்பிக்கையில்) உறுதியாக நிலைத்து நில்லுங்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நீங்கள் வெற்றியாளர் ஆவீர்கள்.

இறைநம்பிக்கையாளர்களின் பொறுப்பான வாழ்க்கை அவர்களின் சொந்தச் சுதந்திரத்தைப் பறித்து விடுகிறது. பலர் தங்கள் சத்திய அறிவிப்பில் தங்கள் சொந்த இருப்பு மறுக்கப்படுவதைக் கண்டு, அவர்களின் எதிரிகளாக மாறுகிறார்கள். இந்த நிலைமை சில நேரங்களில் மிகவும் கடுமையானதாகி, அவர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே நாடற்றவர்களாக ஆக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் எதிரிகளின் கொடுமையான செயல்களை எதிர்த்து நிற்க வேண்டியிருக்கிறது. அவர்கள் தங்கள் உயிர், உடைமை முதலானவற்றின் தியாகத்தை விலையாக்கி இறை மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. இந்தச் சோதனைகளில் வெற்றி பெற நம்பிக்கையாளர்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், உலக நலன்களைக் கருதி மறுமையின் நலன்களை மறந்துவிடக் கூடாது; அவர்கள் சிரமங்களையும் விரும்பத் தகாத நிலைகளையும் எதிர்கொள்ளும்போது பொறுமையாக இருக்க வேண்டும்; அவர்களுக்குள் எழும் எதிர்மறை உணர்ச்சிகளை அடக்க வேண்டும்; பாதிப்புக்களுக்குள்ளான மனநிலையால் உந்தப்பட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது. இத்துடன் அவர்கள் வெளியிலுள்ள

எதிர்தரப்பினருடனான போட்டியில் உறுதியுடன் இருக்க வேண்டும். இந்த உறுதியே இறைவுதவியைத் தன் பக்கம் ஈர்க்கிறது. அதே நேரத்தில், அனைத்து நம்பிக்கையாளர்களும் ஒருவருக்கொருவர் இணைந்திருப்பதும், மார்க்கப் போராட்டத்திற்காக ஒன்றுபடுவதும், கூட்டு வலிமையுடன் எதிர்க்கும் ஆற்றல்களை எதிர்கொள்ள ஓருயிராய் ஒன்றுதிரள்வதும் அவசியம். இறைநம்பிக்கை என்பது உண்மையில் ஒரு பொறுமையின் சோதனை. இந்தச் சோதனையில் இறைவனுக்கு அஞ்சுபவர்கள் மட்டுமே தேர்ச்சிபெற முடியும்.

உலகில் பெரும்பாலும் இறைவனுக்கு அஞ்சாதவர்களும், மறுமையைப் பற்றிய அக்கறை இல்லாதவர்களும் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் பெறுவது நிகழ்கிறது. எல்லா வகையான கௌரவங்களும், சிறப்புகளும் அவர்களைச் சுற்றி ஒன்று சேர்கின்றன. மறுபுறம், நம்பிக்கையாளர்கள் பெரும்பான்மையான சூழ்நிலைகளில் ஆற்றல் அற்றவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்குப் பெருமையிலும் கௌரவத்திலும் எந்தப் பங்கும் கிடைப்பதில்லை. ஆனால், இந்த நிலைமை மிகவும் தற்காலிகமானது. மறுமை நாள் வரும்போது நிலைமைகள் முற்றிலும் மாறும். அச்சமின்மையால் உலகப் பெருமைகளை அள்ளுபவர்கள் அவமானக் குழியில் கிடப்பார்கள், அதே சமயம் இறையச்சத்தால் தங்கள் தகுதிகளை இழப்பவர்கள் எல்லா வகையான நிலைத்த கௌரவங்களுக்கும் வெற்றிகளுக்கும் சொந்தக் காரர்களாவார்கள். அவர்கள் இறைவனின் விருந்தினர்களாக இருப்பார்கள், இந்த பூமியிலும் வானங்களிலும் இறைவனின் விருந்தோம்பலை விடச் சிறந்தது எதுவுமில்லை.

4. பெண்கள் (அன்னிஸா)



بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

يٰۤاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ
وَّاحِدَةٍ وَّ خَلَقَ مِنْهَا زَوْجَهَا وَ بَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيْرًا
وَّنِسَآءً ۚ وَاتَّقُوا اللّٰهَ الَّذِىْ تَسَآءَلُوْنَ بِهٖ وَالْاَرْحَامَ ؕ
اِنَّ اللّٰهَ كَانَ عَلَيْكُمْ رَقِيْبًا ۝۱ وَاٰتُوا الْيَتٰمٰۤى اَمْوَالَهُمْ وَلَا
تَتَبَدَّلُوا الْخَبِيْثَ بِالطَّيِّبِ ۪ وَلَا تَاْكُلُوْۤا اَمْوَالَهُمْ اِلٰۤى
اَمْوَالِكُمْ ؕ اِنَّهٗ كَانَ حُوْبًا كَبِيْرًا ۝۲ وَ اِنْ خِفْتُمْ اَلَّا
تُقْسِطُوْا فِى الْيَتٰمٰى فَانْكِحُوْا مَا طَابَ لَكُمْ مِّنَ النِّسَآءِ
مَثْنٰى وَثُلٰثَ وَرُبٰعَ ۚ فَاِنْ خِفْتُمْ اَلَّا تَعْدِلُوْا فَوَاحِدَةً
اَوْ مَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ؕ ذٰلِكَ اَدْنٰۤى اَلَّا تَعُوْلُوْا ۝۳ وَاٰتُوا
النِّسَآءَ صَدُقٰتِهِنَّ نِحْلَةً ؕ فَاِنْ طِبْنَ لَكُمْ عَنْ شَىْءٍ
مِّنْهُ نَفْسًا فَكُلُوْهُ هَنِيْٓـًٔا مَّرِيْٓـًٔا ۝۴

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்...

[1]***மனிதர்களே! உங்கள் இறைவனுக்கு அஞ்சி நடந்துகொள்ளுங்கள். அவன் உங்களை ஒரே ஆன்மாவிலிருந்து படைத்தான்; அதிலிருந்தே அதனுடைய இணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து எண்ணற்ற ஆண்களையும் பெண்களையும் (படைத்து உலகில்) பரவச் செய்தான். எவனை முன்னிறுத்தி நீங்கள் ஒருவருக்கொருவர் வேண்டிக் கொள்கிறீர்களோ அந்த அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்துகொள்ளுங்கள். உறவுகளைப் பேணுவதில் கவனமாக இருங்கள். உறுதியாக அல்லாஹ் உங்களைக் கண்காணித்துக்***

கொண்டிருக்கிறான். [2]அநாதைகளின் சொத்துக்களை (அவர்கள் பருவமடைந்த பின்) அவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். (அவர்களுடைய) நல்லதற்குப் பதிலாக (உங்களுடைய) கெட்டதை மாற்றி விடாதீர்கள். அவர்களின் சொத்துக்களை உங்கள் சொத்துக்களுடன் சேர்த்து விழுங்கிவிடாதீர்கள். உறுதியாக இது பெரும் பாவமாகும். [3](உங்கள் பொறுப்பில் உள்ள) அநாதை(ப் பெண்)களிடம் (அவர்களின் அழகிலும் செல்வத்திலும் ஆசை கொண்டு மணக்க விரும்பி) அவர்களுக்குரிய(மணக்கொடை, சொத்துரிமை ஆகிய)வற்றை வழங்கி நியாயமாக நடக்க முடியாது என நீங்கள் அஞ்சினால், நீங்கள் விரும்பும் (வேறு) பெண்கள் இருவரை, மூவரை அல்லது நால்வரைத் திருமணம் செய்துகொள்ளுங்கள். (அம்மனைவியரிடையே) நியாயமாக நடக்கமுடியாது என நீங்கள் அஞ்சினால் ஒரு பெண்ணை மட்டுமே அல்லது உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்ட (அடிமைப்) பெண்ணை மட்டுமே போதுமாக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் நீதி பிறழாமல் இருப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும். [4]பெண்களுக்கு அவர்களின் மணக்கொடைகளை மனமுவந்து அளித்துவிடுங்கள். அவர்கள் அதிலிருந்து ஏதேனும் உங்களுக்கு மனமுவந்து விட்டுக் கொடுத்தால் நீங்கள் அதனை நல்லெண்ணத்துடனும் மகிழ்ச்சியுடனும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

எல்லா மனிதர்களும் பிறப்பின் அடிப்படையில் சமமானவர்களே. முடிவாக, ஒரே ஆணும் பெண்ணும்தான் அனைவருக்குமான தந்தையும் தாயுமாக இருக்கின்றனர். இந்த வகையில், ஒவ்வொரு மனிதனும் இன்னொரு மனிதனைத் தன்னுடைய உறவாகக் கருத வேண்டும். அனைவரும் ஒரு பொதுவான குடும்பத்தின் உறுப்பினர்களாக, நியாயத்துடனும், நல்லெண்ணத்துடன் ஒன்றாக வாழவேண்டும். அவர்களுக்கிடையேயான இரத்த உறவுகளில், இந்த வம்சத் தொடர்பு இன்னும் நெருக்கமானதாகிறது, எனவே, இரத்த உறவுகளில் நன்னடத்தையின் முக்கியத்துவம் இன்னும் அதிகமாகிவிடுகிறது. மனிதர்களுக்கிடையேயான இந்தப் பரஸ்பர நன்னடத்தையின் முக்கியத்துவம் தார்மீகமானது மட்டுமல்ல, அது மனிதனின் தனிப்பட்ட பிரச்சினையாகவும் இருக்கிறது. ஏனென்றால், எல்லா மனிதர்களுக்கும் மேலாகப் பெரியவனாகவும் உயர்ந்தவனாகவும் இறைவன் இருக்கிறான். அவன்தான் இறுதியில் அனைவரிடமும் கேள்விகணக்கைக் கேட்கக் கூடியவன்; இந்த உலகில் அவர்கள் செய்த செயல்களுக்கு ஏற்ப மறுமையில் அவர்களின் நிரந்தர எதிர்காலத்தை முடிவு செய்யக் கூடியவன்.

எனவே, ஒருவன் மனித விவகாரங்களை வெறும் மனித விவகாரங்களாகக் கருதக்கூடாது, மாறாக இறைவனின் விவகாரங்களாகக் கருத வேண்டும். இறைவனின் தண்டனைக்கு அஞ்சி, இறைவனின் கோபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றும் செயலில் தன்னையே ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

"யாரொருவர் உறவுகளை இணைத்துக் கொள்கிறாரோ, அவரை நான் இணைத்துக் கொள்வேன், யார் உறவுகளைத் துண்டிக்கிறாரோ, அவரை நான் துண்டிப்பேன்' என்று இறைவன் கூறியதாக இறைத்தூதரின் மொழிகளில் (ஹதீஸ் குத்ஸியில்) கூறப்பட்டுள்ளது. (முஸ்னத் அஹ்மத், ஹதீஸ் எண் 6494) இறைவனுடனான உறவுக்குரிய சோதனை, அவனுடைய அடியார்களுடனான உறவைச் சார்ந்தே உள்ளது என்பதை இது காட்டுகிறது.

இறைவனுக்கு அஞ்சுபவன் யாரெனில், அடியார்களின் உரிமைகள் குறித்து இறைவனுக்கு அஞ்சுபவனே. இறைவனை நேசிப்பவன் யாரெனில், அடியார்களை நேசிப்பதன் மூலம் அதற்கான சான்றை அளிப்பவனே. இது சாதாரண மனித உறவுகளிலும் விரும்பத்தக்கதுதான். ஆனால், இரத்த உறவினர்களிடம் கருணையோடு நடந்துகொள்ளும் விஷயத்தில், இதன் முக்கியத்துவம் எந்த அளவுக்கு அதிகரித்து விடுகிறதென்றால், இது இறைவனுக்கு அடுத்தபடியான இடத்தைப் பெற்றுக்கொள்கிறது.

அநாதைச் சிறுவர், சிறுமியர் ஒரு குடும்பத்திலும் சமூகத்திலும் மிகவும் பலவீனமான அங்கமாக இருப்பவர்கள். எனவே, இறைவனுக்கு அஞ்சிக் கொள்ள வேண்டிய விஷயத்தில் மிகக் கடுமையான சோதனை அநாதைச் சிறுவர் சிறுமிகள் தொடர்பானதுதான். மனிதன் அநாதைகள் விஷயத்தில், நியாயமும் கருணையும் கோருகின்ற, அநாதைகளின் உரிமைகளுக்கு அதிகபட்சம் பாதுகாப்புக்கான உத்தரவாதம் அளிக்கின்ற செயல்களையே செய்ய வேண்டும். கூட்டுச் சொத்துக்களைப் பிரிக்கும் போது அதிக மதிப்புள்ளவற்றைச் சொந்தப் பங்கில் வைத்துக்கொண்டு, தரம் குறைந்தவற்றை மற்றவரின் பங்கில் சேர்த்துக் கணக்கீட்டை முடிப்பது பெரும் பாவமாகும்.

وَلَا تُؤْتُوا السُّفَهَآءَ اَمْوَالَكُمُ الَّتِىْ جَعَلَ اللّٰهُ لَكُمْ
قِيٰمًا وَّارْزُقُوْهُمْ فِيْهَا وَاكْسُوْهُمْ وَقُوْلُوْا لَهُمْ قَوْلًا
مَّعْرُوْفًا ۝ وَابْتَلُوا الْيَتٰمٰى حَتّٰٓى اِذَا بَلَغُوا النِّكَاحَ ۚ
فَاِنْ اٰنَسْتُمْ مِّنْهُمْ رُشْدًا فَادْفَعُوْٓا اِلَيْهِمْ اَمْوَالَهُمْ ۚ
وَلَا تَاْكُلُوْهَآ اِسْرَافًا وَّبِدَارًا اَنْ يَّكْبَرُوْا ۭ وَمَنْ كَانَ

غَنِيًّا فَلْيَسْتَعْفِفْ ۚ وَمَنْ كَانَ فَقِيْرًا فَلْيَاْكُلْ بِالْمَعْرُوْفِ ؕ
فَاِذَا دَفَعْتُمْ اِلَيْهِمْ اَمْوَالَهُمْ فَاَشْهِدُوْا عَلَيْهِمْ ؕ وَكَفٰى
بِاللّٰهِ حَسِيْبًا ۝٦ لِلرِّجَالِ نَصِيْبٌ مِّمَّا تَرَكَ الْوَالِدٰنِ
وَالْاَقْرَبُوْنَ ۪ وَلِلنِّسَآءِ نَصِيْبٌ مِّمَّا تَرَكَ الْوَالِدٰنِ
وَالْاَقْرَبُوْنَ مِمَّا قَلَّ مِنْهُ اَوْ كَثُرَ ؕ نَصِيْبًا مَّفْرُوْضًا ۝٧
وَاِذَا حَضَرَ الْقِسْمَةَ اُولُوا الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنُ
فَارْزُقُوْهُمْ مِّنْهُ وَقُوْلُوْا لَهُمْ قَوْلًا مَّعْرُوْفًا ۝٨ وَلْيَخْشَ
الَّذِيْنَ لَوْ تَرَكُوْا مِنْ خَلْفِهِمْ ذُرِّيَّةً ضِعٰفًا خَافُوْا
عَلَيْهِمْ ۪ فَلْيَتَّقُوا اللّٰهَ وَلْيَقُوْلُوْا قَوْلًا سَدِيْدًا ۝٩ اِنَّ
الَّذِيْنَ يَاْكُلُوْنَ اَمْوَالَ الْيَتٰمٰى ظُلْمًا اِنَّمَا يَاْكُلُوْنَ
فِيْ بُطُوْنِهِمْ نَارًا ؕ وَسَيَصْلَوْنَ سَعِيْرًا ۝١٠ ع ١٠/١٢

[5] *(உங்கள் பொறுப்பில் உள்ள அநாதைகள்) விவரம் அறியாதவர்(களாக இருக்கும் நிலையில், அவர்)களிடம் (உங்கள்) வாழ்க்கைக்கு ஆதாரமாக அல்லாஹ் ஆக்கி வைத்துள்ள உங்களிடமுள்ள (அவர்களின்) செல்வங்களை நீங்கள் ஒப்படைத்துவிட வேண்டாம். அவற்றிலிருந்து அவர்களுக்கு உணவளியுங்கள்; ஆடை அணிவியுங்கள்; அவர்களிடம் கனிவான சொற்களைக் (கொண்டு நல்லறிவுரைகளைக்) கூறுங்கள்.*

[6] *அநாதை(ச் சிறுவர்)களை அவர்கள் திருமண வயதை அடையும்வரை (அவர்களிடம் பக்குவ வளர்ச்சியைச்) சோதித்துக் கொண்டே இருங்கள். அவர்களிடம் நீங்கள் தெளிவான அறிவு முதிர்ச்சியைக் கண்டால் அவர்களின் செல்வங்களை அவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். அவர்களின் செல்வத்தை விரயம் செய்ய வேண்டாம்; அவர்கள் பெரியவர்களாகிவிடுவார்களே என்று அஞ்சி அவசரமாக விழுங்கிவிடவும் வேண்டாம். (மேலும் அநாதைகளின் பொறுப்பாளர்) செல்வமுடையவர் ஆயின் அவ்வநாதைகளின் செல்வத்திலிருந்து உண்பதைத் தவிர்த்துக்*

கொள்ளட்டும். ஏழ்மை நிலையில் இருப்பவர் நியாயமான முறையில் உண்டு கொள்ளட்டும். அநாதைகளின் செல்வங்களை நீங்கள் அவர்களிடம் ஒப்படைக்கும்போது அதற்குச் சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கணக்குக் கேட்பதற்கு அல்லாஹ் போதுமானவன். [7]பெற்றோர் மற்றும் நெருங்கிய உறவினர் விட்டுச் சென்ற (சொத்)தில் ஆண்களுக்குப் பங்கு உண்டு; (அதைப் போலவே) பெற்றோர் மற்றும் நெருங்கிய உறவினர் விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு. அ(ந்தச் சொத்)து குறைவாகவோ அதிகமாகவோ எப்படி இருந்தாலும் சரியே. இது (அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பங்காகும். [8]பங்கீடு செய்யும்போது (சொத்துக்கு உரிமையற்ற) உறவினர்களோ, அநாதைகளோ, ஏழைகளோ வந்தால், அவர்களுக்கும் அதிலிருந்து ஏதேனும் கொடுங்கள். அவர்களோடு கனிவாகப் பேசுங்கள். [9]தமக்குப் பின் பலவீனமான குழந்தைகளை விட்டுச்செல்ல நேர்வோர் (அவர்களைக் குறித்து) அஞ்சுவதுபோல் (அநாதைகள் தொடர்பாகவும்) அஞ்சி நடந்துகொள்ளட்டும். எனவே, அவர்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி நேர்மையான வார்த்தைகளையே பேசட்டும். [10]அநாதைகளின் செல்வங்களை முறைகேடாக உண்பவர்கள் தங்கள் வயிறுகளில் நெருப்பைத்தான் நிரப்பிக் கொள்கிறார்கள். அவர்கள் விரைவில் கொழுந்து விட்டெரியும் (நரக) நெருப்பில் எரிவார்கள்.

செல்வமானது ஆடம்பரத்துக்காகவோ பெருமையை வெளிப் படுத்துவதற்காகவோ இல்லை. அது மனித வாழ்விற்கான ஆதாரமாகும். அதுவே உலகில் அவன் தங்கியிருப்பதற்கும் உயிர்வாழ்வதற்கும் மூலாதாரம். ஒருபுறம் செல்வம் வாழ்க்கைக்கான ஆதாரமாய் இருப்பது, அதையே இலக்காகக் கொள்வது சரியல்ல என்பதை உணர்த்துகிறது. இரண்டாவது, சொத்தை இழப்பிலிருந்து பாதுகாப்பதும், அதை அதன் உரிமையாளரிடம் வழங்க முழு ஏற்பாடுகள் செய்வதும் மிகவும் அவசியம். ஒருவரின் சொத்தை முறையாக அவரிடம் சேர்ப்பிக்காமல் இருப்பது, இறைவன் அமைத்திருக்கும் தனது அடியார்களின் வாழ்வாதாரத்திற்கான ஏற்பாட்டைச் சீர்குலைப்பதற்குச் சமமாகும். அநாதைகள் ஒரு சமூகத்தின் பலவீனமான அங்கமாக இருப்பவர்கள். எனவே அவர்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதும், அவர்களுடைய விஷயத்தில் அனைத்து வகையான அநீதிகளிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதும் இன்னும் முக்கியமானதாகிறது. சமூகத்திற்குள் முறையீடுகளும், கருத்து வேறுபாடுகளும் இல்லாத சூழலை உருவாக்குவதற்கும், மக்களுக்கு

முன் தம்மைக் குற்றமற்றவர் என்று நிரூபிப்பதற்கும், ஒருவர் தான் மேற்கொள்ளும் செயல்களை நியாயப்படி எழுதி சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்வதும் அவசியமாகும். ஒருவரது விவகாரம் ஒரு மனிதனின் பொறுப்பில் இருக்கும்போதெல்லாம், தன்னுடைய குறைபாடுகள் அனைத்தும் இறைவனுக்குத் தெரிந்திருக்கிறது என்ற புரிதலுடன் அவன் அதைக் கையாள வேண்டும். குறிப்பிட்ட விவகாரத்துடன் தொடர்புள்ளவர் தனது பலவீனத்தால் அந்த மனிதனுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாது போய்விட்டாலும், மறுமை நாளில் இறைவன் உறுதியாக அவனைப் பிடிப்பான்; அவன் உண்மைக்கு எதிராகச் செயல்பட்டிருந்தால், இறைவன் அவனைக் கடுமையாகத் தண்டிப்பான்; அவன் எந்த வகையிலும் இறைவனின் தண்டனையிலிருந்து தப்பிப்பது சாத்தியமில்லை.

உலகில் பலவீனமானவர்களின் உரிமைகளை நசுக்கி மனிதன் மகிழ்ச்சியைக் காண்கிறான். ஆனால் ஒருவன் தன் வயிற்றிலிடும் ஒவ்வொரு அனுமதிக்கப்படாத பொருளும் அவனது வயிற்றில் நெருப்பைக் கொட்டுவது போன்றது. இந்த உலகில், இத்தகைய செல்வம் நெருப்பாக இருப்பது வெளிப்படையாகத் தெரிவதில்லை. ஆனால் இந்த உண்மை மறுமையில் வெளிப்பட்டுவிடும். இங்கே, மனிதனுக்குச் செயலுக்கான சுதந்திரம் கொடுக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அதற்கான விளைவு மனிதனின் சொந்தக் கட்டுப்பாட்டில் இல்லை. ஒரு கெட்ட முடிவிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள விரும்பும் ஒருவன், மற்றவர்களுக்கும் கெட்டதைச் செய்யக்கூடாது. மனிதன் மற்றவர்களுக்கு நன்மை பயக்கக் கூடியவனாகவும், தன் செலவிடும் திறனுக்கேற்ப மற்றவர்களுக்குக் கொடுப்பவனாகவும் இருக்க வேண்டும். ஒரு நபர் கொடுக்கும் நிலையில் இல்லை என்றால், அவன் மற்றவர்கள் உள்ளத்தைப் புண்படுத்தக் கூடாது என்பதே இஸ்லாம் கூறும் இறுதிப் படிநிலை. அவன் தனது வாயைத் திறந்தால், நேரான, உண்மையான கருத்தைப் பேச அதைத் திறக்க வேண்டும். இல்லையெனில் மௌனமாக இருக்க வேண்டும்.

يُوْصِيْكُمُ اللّٰهُ فِيْٓ اَوْلَادِكُمْ ۗ لِلذَّكَرِ مِثْلُ حَظِّ الْاُنْثَيَيْنِ ۚ فَاِنْ كُنَّ
نِسَآءً فَوْقَ اثْنَتَيْنِ فَلَهُنَّ ثُلُثَا مَا تَرَكَ ۚ وَاِنْ كَانَتْ وَاحِدَةً
فَلَهَا النِّصْفُ ۭ وَلِاَبَوَيْهِ لِكُلِّ وَاحِدٍ مِّنْهُمَا السُّدُسُ مِمَّا تَرَكَ
اِنْ كَانَ لَهٗ وَلَدٌ ۚ فَاِنْ لَّمْ يَكُنْ لَّهٗ وَلَدٌ وَّوَرِثَهٗٓ اَبَوٰهُ فَلِاُمِّهِ
الثُّلُثُ ۚ فَاِنْ كَانَ لَهٗٓ اِخْوَةٌ فَلِاُمِّهِ السُّدُسُ مِنْۢ بَعْدِ وَصِيَّةٍ

يُّوْصِيْ بِهَآ اَوْ دَيْنٍ ؕ اٰبَآؤُكُمْ وَاَبْنَآؤُكُمْ لَا تَدْرُوْنَ اَيُّهُمْ اَقْرَبُ
لَكُمْ نَفْعًا ؕ فَرِيْضَةً مِّنَ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا حَكِيْمًا ⑪
وَ لَكُمْ نِصْفُ مَا تَرَكَ اَزْوَاجُكُمْ اِنْ لَّمْ يَكُنْ لَّهُنَّ وَلَدٌ ۚ
فَاِنْ كَانَ لَهُنَّ وَلَدٌ فَلَكُمُ الرُّبُعُ مِمَّا تَرَكْنَ مِنْۢ بَعْدِ وَصِيَّةٍ
يُّوْصِيْنَ بِهَآ اَوْ دَيْنٍ ؕ وَلَهُنَّ الرُّبُعُ مِمَّا تَرَكْتُمْ اِنْ لَّمْ يَكُنْ لَّكُمْ
وَلَدٌ ۚ فَاِنْ كَانَ لَكُمْ وَلَدٌ فَلَهُنَّ الثُّمُنُ مِمَّا تَرَكْتُمْ مِّنْۢ بَعْدِ وَصِيَّةٍ
تُوْصُوْنَ بِهَآ اَوْ دَيْنٍ ؕ وَ اِنْ كَانَ رَجُلٌ يُّوْرَثُ كَلٰلَةً اَوِ امْرَاَةٌ
وَّلَهٗۤ اَخٌ اَوْ اُخْتٌ فَلِكُلِّ وَاحِدٍ مِّنْهُمَا السُّدُسُ ۚ فَاِنْ كَانُوْۤا
اَكْثَرَ مِنْ ذٰلِكَ فَهُمْ شُرَكَآءُ فِي الثُّلُثِ مِنْۢ بَعْدِ وَصِيَّةٍ يُّوْصٰى بِهَآ
اَوْ دَيْنٍ ۙ غَيْرَ مُضَآرٍّ ۚ وَصِيَّةً مِّنَ اللّٰهِ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَلِيْمٌ ⑫ ؕ
تِلْكَ حُدُوْدُ اللّٰهِ ؕ وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ يُدْخِلْهُ جَنّٰتٍ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا ؕ وَ ذٰلِكَ الْفَوْزُ
الْعَظِيْمُ ⑬ وَمَنْ يَّعْصِ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَ يَتَعَدَّ حُدُوْدَهٗ
يُدْخِلْهُ نَارًا خَالِدًا فِيْهَا ۪ وَلَهٗ عَذَابٌ مُّهِيْنٌ ⑭ ع ۱۳ ۲

[11]உங்கள் பிள்ளைகளிடையே (சொத்துப் பங்கீட்டில்) ஓர் ஆணின் பங்கு இரண்டு பெண்களின் பங்கிற்குச் சமமாகும். (ஆண் பிள்ளைகள் இல்லாமல் இரண்டு அல்லது) இரண்டுக்கும் மேற்பட்ட பெண்கள் இருந்தால், அவர்களுக்கு (இறந்த) அவர் விட்டுச் சென்ற(சொத்)தில் மூன்றில் இரண்டு பங்கு உண்டு. ஒரே பெண்ணாக இருந்தால் அவளுக்குப் பாதி உண்டு. இறந்து போனவருக்குக் குழந்தைகள் இருக்க, அவருடைய (பெற்றோரும் இருந்தால்) தாய், தந்தை ஒவ்வொருவருக்கும் அவர் விட்டுச் சென்ற (சொத்)தில் ஆறில் ஒரு பங்கு உண்டு. இறந்துபோனவருக்கு குழந்தைகள் இல்லாமல் பெற்றோரே அவருக்கு வாரிசுகளாக

இருந்தால் அவரது தாய்க்கு மூன்றில் ஒரு பங்கு உண்டு. அவருக்குச் சகோதர சகோதரிகள் இருந்தால் அவரது தாய்க்கு ஆறில் ஒரு பங்கு உண்டு. இவை யாவும் இறந்தவர் செய்த இறுதி விருப்பத்தையும் கடன்களையும் நிறைவேற்றிய பிறகே செய்யப்படவேண்டும். உங்கள் பெற்றோர்களோ உங்கள் பிள்ளைகளோ உங்களுக்குப் பயனளிப்பதில் மிக நெருங்கியவர்கள் யார் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். இவை அல்லாஹ் வரையறுத்துள்ளவை ஆகும். உறுதியாக அல்லாஹ் நன்கறிந்தவன்; ஞானம் மிக்கவன். [12]உங்கள் மனைவிகளுக்குப் பிள்ளைகள் இல்லையென்றால் அவர்கள் விட்டுச் சென்ற(சொத்)தில் பாதி உங்களுக்கு உண்டு. அவர்களுக்குப் பிள்ளைகள் இருந்தால் அவர்கள் விட்டுச் சென்ற(சொத்)தில் நான்கில் ஒரு பங்குதான் உங்களுக்கு உண்டு. இவை யாவும் அவர்கள் செய்த இறுதி விருப்பத்தையும் கடன்களையும் நிறைவேற்றிய பின்னரே (பங்கிடப்பட வேண்டும்.) உங்களுக்குப் பிள்ளைகள் இல்லையென்றால் நீங்கள் விட்டுச் சென்ற(சொத்)திலிருந்து (உங்கள் மனைவியராகிய) அவர்களுக்கு நான்கில் ஒரு பங்கு உண்டு. உங்களுக்குப் பிள்ளைகள் இருந்தால் நீங்கள் விட்டுச்சென்ற(சொத்)தில் உங்கள் மனைவியருக்கு எட்டில் ஒரு பங்குதான் உண்டு. இதுவும் நீங்கள் செய்த இறுதி விருப்பத்தையும் கடன்களையும் நிறைவேற்றிய பின்னரே ஆகும். நேரடி வாரிசுகள் (பெற்றோர் அல்லது குழந்தைகள்) இல்லாதவராக இறந்துவிட்ட ஆணுக்கோ, பெண்ணுக்கோ ஒரு சகோதரர் அல்லது ஒரு சகோதரி இருந்தால் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பங்கு உண்டு. அவர்கள் அதைவிட அதிகமாக இருந்தால் அவர்கள் மூன்றில் ஒரு பங்கில் (சமமான) கூட்டாளிகள் ஆவர். அதுவும் அவர் செய்த இறுதி விருப்பத்தையும் கடன்களையும் நிறைவேற்றிய பிறகே ஆகும். அவர் (இறுதி விருப்பத்தைக் கொண்டு வாரிசுகளுக்குப்) பாதிப்பளிக்காதவராக இருக்கவேண்டும். இது அல்லாஹ்விடமிருந்து வந்த கட்டளையாகும். அல்லாஹ் முற்றும் அறிந்தவன்; பொறுமையாளன். [13]இவை இறை வரம்புகளாகும். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிவோரை அவன் சொர்க்கச் சோலைகளில் நுழையச் செய்வான். அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அங்கு அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பர். இதுவே மாபெரும் வெற்றியாகும். [14]அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எதிராகச் செயல்பட்டு அவன் விதித்துள்ள வரம்புகளை மீறுபவனை அவன் நெருப்பில் நுழையச் செய்வான். அதில் அவன் என்றென்றும் கிடப்பான். அவனுக்கு இழிவுதரும் வேதனையுண்டு.

மனிதன் உருவாக்கும் சட்டங்களில் ஏதோ ஓர் அம்சத்தின்பால் சாய்வு ஏற்பட்டு விடுகிறது. பண்டைய காலங்களில், பழங்குடியினரிடையே ஆண்மகன் மிகுந்த முக்கியத்துவம் பெற்றவனாக இருந்தான். ஏனென்றால் அவன் அப்பழங்குடியினருக்கு பலத்தின் மூலாதாரமாக இருந்தான். எனவே, பெண்ணுக்கு வாரிசுரிமை மறுக்கப்பட்டு, அனைத்து உரிமைகளும் ஆணுக்கே வழங்கப்பட்டன. தற்போதைய காலத்தில், இதன் எதிர்வினையாக ஆண், பெண் இருவரும் சமமாகக்கப்பட்டனர். முந்தைய வழக்கம் நியாய மற்றதாக இருந்ததென்றால், தற்போதைய நடைமுறை யதார்த்தத்திற்கு மாறானதாக இருக்கிறது. இறைவனின் அறிவும் ஞானமும் மட்டும்தான் அவன் வழங்கும் சட்டம் எல்லா வகையான நடுநிலை தவறிய விஷயங்களிலிருந்தும் விடுபட்டது என்பதை உறுதிப்படுத்துகிறது. இது தொடர்பாக இறைவன் வகுத்துள்ள விதிமுறைகள் சமூக நீதிக்கான உண்மையான மூலாதாரங்கள் மட்டுமல்ல, அவற்றுக்கு மறுமை வாழ்க்கையுடனும் ஆழமான தொடர்புண்டு. மனிதனுக்குக் கிடைக்கப்போகும் நரகமும் சொர்க்கமும்- அநாதைகளின் உரிமைகளை அளித்தல், இறுதிவிருப்பத்தை (உயில்களை) நிறைவேற்றுதல், வாரிசுரிமையை அதன் வாரிசுகளுக்கு வழங்குதல் ஆகியவைற்றைச் சார்ந்துள்ளவை ஆகும். 1/3 பங்கில் உயில் எழுதுவது மார்க்கச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒருவர் தன் பொறுப்பில் உள்ள - சொத்துரிமையாளரின் வாரிசுரிமையைப் பறிக்கும் நோக்கில் இறுதி விருப்பம் தெரிவித்தால் (உயில் எழுதினால்), அது அவரை நரகத்திற்குத் தகுதியானவராக மாற்றக்கூடிய ஒரு பாவமாகும். (مَنْ ضَارَّ فِي وَصِيَّتِهِ أَلْقَاهُ اللَّهُ فِي وَادِي جَهَنَّمَ) البحر المحيط لأبي حيان الأندلسي யார் தனது உயிலில் தீங்கு செய்தாலும், இறைவன் அவரை நரகத்தின் பள்ளத்தாக்கில் தள்ளுவான்) அபு ஹயான் அந்தலூசி எழுதிய அல்-பஹ்ர் அல்-முஹீத், தொகுதி 3, பக்கம் 549.

இதைப் பொறுத்து, மனிதன் தனிப்பட்ட ஆசைகளையும் குடும்ப நலன் களையும் அல்லாமல், இறைவன் வகுத்த விதிகளையே பின்பற்ற வேண்டும்.

وَ الّٰتِیۡ یَاۡتِیۡنَ الۡفَاحِشَۃَ مِنۡ نِّسَآئِکُمۡ فَاسۡتَشۡہِدُوۡا عَلَیۡہِنَّ
اَرۡبَعَۃً مِّنۡکُمۡ ۚ فَاِنۡ شَہِدُوۡا فَاَمۡسِکُوۡہُنَّ فِی الۡبُیُوۡتِ
حَتّٰی یَتَوَفّٰىہُنَّ الۡمَوۡتُ اَوۡ یَجۡعَلَ اللّٰہُ لَہُنَّ سَبِیۡلًا ﴿۱۵﴾
وَالَّذٰنِ یَاۡتِیٰنِہَا مِنۡکُمۡ فَاٰذُوۡہُمَا ۚ فَاِنۡ تَابَا وَ اَصۡلَحَا
فَاَعۡرِضُوۡا عَنۡہُمَا ؕ اِنَّ اللّٰہَ کَانَ تَوَّابًا رَّحِیۡمًا ﴿۱۶﴾ اِنَّمَا

التَّوْبَةُ عَلَى اللّٰهِ لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ السُّوْٓءَ بِجَهَالَةٍ ثُمَّ
يَتُوْبُوْنَ مِنْ قَرِيْبٍ فَاُولٰٓئِكَ يَتُوْبُ اللّٰهُ عَلَيْهِمْ ؕ وَكَانَ
اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ⑰ وَلَيْسَتِ التَّوْبَةُ لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ
السَّيِّاٰتِ ۚ حَتّٰٓى اِذَا حَضَرَ اَحَدَهُمُ الْمَوْتُ قَالَ اِنِّيْ
تُبْتُ الْـٰٔنَ وَلَا الَّذِيْنَ يَمُوْتُوْنَ وَهُمْ كُفَّارٌ ؕ اُولٰٓئِكَ
اَعْتَدْنَا لَهُمْ عَذَابًا اَلِيْمًا ⑱

[15]உங்கள் பெண்களில் யாரேனும் ஒழுக்கக்கேடான (குற்றத்)தைச் செய்துவிட்டால் அதை நிரூபிக்க உங்களிலிருந்து நான்கு (ஆண்) சாட்சிகளைக் கொண்டுவாருங்கள். அவர்கள் சாட்சியம் கூறிவிட்டால் அப்பெண்கள் இறந்துபோகும் வரை அல்லது அல்லாஹ் அவர்களுக்கு ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்தும்வரை வீடுகளுக்குள் தடுத்துவையுங்கள். [16](அதே போன்று) உங்கள் ஆண்களில் இருவர் அ(க்குற்றத்)தைச் செய்து விட்டால் அவர்களைத் தண்டியுங்கள். அவர்கள் இருவரும் மனம் வருந்தித் தங்களைச் சீர்திருத்திக் கொண்டால் அவர்களை விட்டுவிடுங்கள். உறுதியாக அல்லாஹ் பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்பவன்; நிகரற்ற அன்பாளன். [17]எவர் அறியாமையால் தீயசெயலைச் செய்துவிட்டுப் பின்னர் உடனடியாகப் பாவமன்னிப்புக் கோருகின்றனரோ அவர்களைத்தான் அல்லாஹ் மன்னிப்பான். அல்லாஹ் முற்றும் அறிந்தவன்; ஞானம் மிக்கவன். [18]தொடர்ந்து பாவங்கள் செய்துகொண்டே இருந்து இறக்கும் தறுவாயில் இறுதியாக 'நான் பாவமன்னிப்புக் கோருகிறேன்' என்று கூறுகின்றவர்களுக்கும் (இறை)மறுப்பு நிலையிலேயே இறப்பவர்களுக்கும் மன்னிப்புக் கிடையாது. அவர்களுக்காகவே நாம் துன்புறுத்தும் வேதனையைத் தயார்செய்து வைத்துள்ளோம்.

ஓர் ஆணோ பெண்ணோ மார்க்கச் சட்டப்படி பாவச் செயலாகக் கருதப்படும் ஒன்றைச் செய்துவிட்டால், அவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை சட்டத்தின்படி இருக்கவேண்டுமே அன்றி, சட்டத்திற்குப் புறம்பாக அல்ல. சட்டத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றாமல் ஒருவரைக் குற்றவாளியாக அறிவிப்பது சரியல்ல. ஒருவர் குற்றவாளியாக இருப்பது,

மற்றவர்களுக்கு அவர் மீது கொடுமையான நடவடிக்கை எடுக்கும் உரிமையை வழங்காது. தண்டனையின் நோக்கம் நீதியை நிலைநாட்டுவதாகும், கொடுமையாலும் அநீதியாலும் நீதியை நிலைநாட்ட முடியாது. பாவம் செய்பவர் மனம்வருந்தி தன்னைச் சீர்திருத்திக் கொண்டால், அவரிடம் இரக்கத்துடனும் மன்னிப்புடனும் நடந்து கொள்வது அவசியமாகி விடுகிறது. ஒருவரை அவரது கடந்த காலத்தின் அடிப்படையில் இழிவு படுத்துவது சரியல்ல. இறைவன் பாவமன்னிப்பு கோருபவர்களின், பாவத்தை மன்னிக்கும் போதும், சீர்திருத்திக் கொண்டவர்களை நோக்கிக் கருணையுடன் திரும்பும்போதும், அத்தகைய நபரை கேலிக்கும் இழிவுக்கும் இலக்காக்க மனிதர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? அத்தகைய நபரை ஏளனத்திற்கும், பழிக்கும் ஆளாக்குவதன் மூலம், மனிதன், தன்னைத்தானே குற்றவாளியாக நிரூபிக்கிறானே அன்றி வேறு யாரையும் அல்ல.

பாவ மன்னிப்பு(தவ்பா) என்பது 'மனம் வருந்துகிறேன்' என்ற வார்த்தையை நாவால் உச்சரிப்பதன்று. இது நமக்குள் தோன்றும் கடுமையான குற்ற உணர்வின் மறுபெயர். மனிதன் தன் மனம் வருந்துதலில் தீவிரமாக இருப்பதும் தனது பாவத்தை உண்மையிலேயே உணர்ந்திருப்பதும், அவன் தனக்குத் தானே தண்டனை அளித்துக் கொள்வதாகும். இறைவனின் அச்சத்தினால் ஒருவருக்குள் இந்த மனநிலை ஏற்பட்டால், இறைவன் உறுதியாக அவரை மன்னிப்பான். ஆனால், வேண்டுமென்றே இறைவனுடைய கட்டளைக்குக் எதிராகச் செயல்படும் அளவுக்குத் துணிந்திருப்பவர்களின் பாவமன்னிப்பு வேண்டுகோளுக்கு இறைவனின் பார்வையில் எந்த மதிப்பும் இல்லை. அதேபோல் எச்சரிக்கப்பட்ட பின்பும், அதில் நிலைத்திருந்து, இந்த உலகத்தை விட்டுப் போக வேண்டிய நேரம் வரும்போது, "நான் மனம் வருந்துகிறேன்' என்று கூறுபவர்களின் பாவ மன்னிப்பும், மறுமையில் தண்டனையைச் சந்தித்த பிறகு தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்பவர்களின் பாவமன்னிப்பும் பயனற்றவை.

பாவமன்னிப்பின் யதார்த்தம், ஓர் அடியான் தன் இறைவனிடம் திரும்புவதாகும். இதனால் அவனுடைய இறைவனும் அவனை நோக்கித் திரும்பக்கூடும். பாவமன்னிப்பு யாருக்குரியது என்றால், தற்காலிக உணர்வால் ஆட்கொள்ளப்பட்டு, ஒரு தீய செயலைச் செய்துவிட்டால், சுயபரிசோதனை மூலம் தன் தவறை உணர்ந்து கொள்ளும் ஒருவனுக்குரியது. அவன் தீமையைக் கைவிட்டு, நன்மையின் பாதைக்குத் திரும்ப வேண்டும், மார்க்கச் சட்டத்தின்படி தனது வாழ்க்கையைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டும். அத்தகைய மனிதன்தான் பாவமன்னிப்புத் தேடியவன். இது வீட்டிலிருந்து வழிதவறிச் சென்ற மனிதன் மீண்டும் தனது வீட்டிற்குத் திரும்புவதைப் போன்றது.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا يَحِلُّ لَكُمْ اَنْ تَرِثُوا النِّسَآءَ كَرْهًا ؕ وَ لَا
تَعْضُلُوْهُنَّ لِتَذْهَبُوْا بِبَعْضِ مَاۤ اٰتَيْتُمُوْهُنَّ اِلَّاۤ اَنْ يَّاْتِيْنَ بِفَاحِشَةٍ
مُّبَيِّنَةٍ ۚ وَعَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْفِ ۚ فَاِنْ كَرِهْتُمُوْهُنَّ فَعَسٰۤى اَنْ
تَكْرَهُوْا شَيْـًٔا وَّ يَجْعَلَ اللّٰهُ فِيْهِ خَيْرًا كَثِيْرًا ﴿۱۹﴾ وَ اِنْ اَرَدْتُّمُ
اسْتِبْدَالَ زَوْجٍ مَّكَانَ زَوْجٍ ۙ وَّاٰتَيْتُمْ اِحْدٰىهُنَّ قِنْطَارًا فَلَا
تَاْخُذُوْا مِنْهُ شَيْـًٔا ؕ اَتَاْخُذُوْنَهٗ بُهْتَانًا وَّ اِثْمًا مُّبِيْنًا ﴿۲۰﴾ وَ كَيْفَ
تَاْخُذُوْنَهٗ وَقَدْ اَفْضٰى بَعْضُكُمْ اِلٰى بَعْضٍ وَّ اَخَذْنَ مِنْكُمْ مِّيْثَاقًا
غَلِيْظًا ﴿۲۱﴾ وَ لَا تَنْكِحُوْا مَا نَكَحَ اٰبَآؤُكُمْ مِّنَ النِّسَآءِ اِلَّا مَا قَدْ
سَلَفَ ؕ اِنَّهٗ كَانَ فَاحِشَةً وَّ مَقْتًا ؕ وَسَآءَ سَبِيْلًا ﴿۲۲﴾ ع ۴ ۱۴

[19](ஓரிறை)நம்பிக்கையாளர்களே! (இறந்தவருடைய விதவைப்) பெண்களை (இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தாகக் கருதி அவருடைய வாரிசுகள்) வலுக்கட்டாயமாக உரிமைப்படுத்திக் கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப்பட்டதன்று. (உங்கள் மனைவியருள்) நீங்கள் வெறுக்கும் பெண்கள் வெளிப்படையாக ஒழுக்கக்கேடான செயலைச் செய்தாலன்றி, அவர்களுக்கு நீங்கள் வழங்கிய (மணக்கொடை போன்ற) சிலவற்றை எடுத்துக்கொள்ளும் பொருட்டு அவர்களைத் தடுத்து வைக்காதீர்கள். அவர்களுடன் நல்ல முறையில் குடும்ப வாழ்க்கை நடத்துங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால் - ஒன்றை நீங்கள் வெறுக்கக் கூடும்; அல்லாஹ் அதில் உங்களுக்குப் பல்வேறு நன்மைகளை வைத்திருக்கலாம். *[20]*நீங்கள் ஒரு மனைவியை மணவிலக்குச் செய்து வேறொரு பெண்ணை மணக்க விரும்பினால், நீங்கள் (மணவிலக்கு செய்த) அவளுக்கு (மணக்கொடையாக) ஒரு (பொற்) குவியலையே வழங்கியிருந்தாலும் அதிலிருந்து எதையும் (திரும்ப) எடுத்துக்கொள்ளாதீர்கள். நீங்கள் (அவள்மீது) பழிச்சொல் கூறியும் வெளிப்படையாகக் கொடுமை இழைத்தும் அதனை எடுத்துக்கொள்வீர்களா? *[21]*அவர்கள் உங்களிடம் உறுதியான வாக்குறுதியைப் பெற்று ஒருவரோடு ஒருவர் கலந்துறவாடியிருக்கும் நிலையில் நீங்கள் அதனை எவ்வாறு

எடுத்துக்கொள்வீர்கள்? [22]கடந்த காலத்தில் நடந்து முடிந்து விட்டதைத் தவிர, உங்கள் தந்தையர் மணமுடித்துக்கொண்ட பெண்களை இனி நீங்கள் மணந்துகொள்ளாதீர்கள். உறுதியாக இது ஒழுக்கக்கேடான, வெறுக்கத்தக்க, மிகவும் தீய செயலாகும்.

இறந்தவரின் சொத்தை வாரிசாகப் பெறுவதற்கு உறுதியாக வழித்தோன்றல்களுக்கு உரிமை உண்டு. ஆனால் இதன் பொருள், பிற்காலத் தலைமுறையினர் இறந்தவரின் மனைவியைத் தங்கள் வாரிசாகக் கருதி, அவர்கள் விரும்பியபடி அவளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதல்ல. சொத்து என்பது உணர்வற்றதும் கையகப்படுத்தத்தக்கதுமான ஒரு பொருள். அதில் பரம்பரைச் சொத்துரிமை செல்லுபடியாகும். ஆனால் மனிதன் ஓர் உயிருள்ள, சுதந்திரமான படைப்பினம். பெண்ணுக்கும் தன்னுடைய எதிர்காலத்தைத் தன் சொந்த விருப்பப்படி தீர்மானிக்க உரிமை உண்டு. ஒரு பெண்ணுக்கு உடல் தொடர்பான, குணம் தொடர்பான குறைபாடுகள் ஏதேனும் இருந்தால், அவளைப் பொறுத்துக்கொண்டு, இறைவனால் அவளுக்கு வழங்கப்பட்ட பிற சிறப்பியல்புகளைப் பயன்படுத்தி வீட்டை நிர்வகிப்பதில் தனது பங்கை வகிக்க அவளுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். மனிதன் வெறுப்பை மறந்துவிட்டு பரஸ்பர உறவைப் பேண வேண்டும். ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கும், அதைப்போலவே ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும், நிலைத்தன்மைக்குமான அடிப்படை, அதன் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் குறைபாடுகளைப் புறக்கணித்து, தங்கள் நிறைகளை வளர்த்துக்கொள்ள வாய்ப்பளிப்பதில் இருக்கிறது. இறைவனுக்காக இவ்வுலகில் பொறுமையையும் சகிப்புத்தன்மையையும் வழிமுறையாகக் கடைப்பிடிக்கத் தெரிவு செய்து கொண்டவர்கள் மறுமையின் சொர்க்கங்களில் அனுமதிக்கப்படுவார்கள்.

மனிதன் தன் துணையை வெறுத்து, பொறுமையின் பாதையை மேற்கொள்வதற்குப் பதிலாகப் பிரிந்து செல்ல முடிவு செய்தால், இந்தப் பிரிவை நியாயப்படுத்துவதற்காக எதிர்த் தரப்பின் குறைபாடுகளைப் பெரிதுபடுத்துவது பெரும்பாலும் நிகழக்கூடிய ஒன்று. அவன் அவள் மீது பொய்யாகப் பழி சுமத்துகிறான்; அவள் பீதியடைந்து தனியாக ஓடிவிடும்படி அவள் மீது கொடுமை இழைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறான். இதைப் போலவே மனிதன் ஒருவருடைய தொடர்பைத் துண்டிக்கும்போது, பிடிவாதத்தின் காரணமாக இரண்டாவது தரப்பினருக்குக் கொடுத்த பொருட்களைத் திரும்பப் பெற முயற்சி செய்கிறான். இவை அனைத்தும் உடன்படிக்கையை மீறுவதாகும். உடன்படிக்கை என்பது இறைவனின் பார்வையில் மிகவும் புனிதமானது. அது எழுதப்படாத வடிவத்தில்

இருந்தாலும் அதைக் கடைப்பிடிப்பது எழுதப்பட்ட உடன்படிக்கையைப் போலவே அவசியமானது.

'நடந்தது நடந்து விட்டது' என்ற கொள்கை திருமணத்தைப் பற்றியது மட்டுமல்ல. இது ஒரு பொதுவான விதி. குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும் சரி, சமூக வாழ்க்கையில் இருந்தாலும் சரி, வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்படும் போதெல்லாம், கடந்த கால நிகழ்வுகள் பலவும், புதிய புரட்சியின் தரத்தின்படி தவறாகத் தோன்றுகின்றன. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், கடந்த காலத்தைத் தோண்டி எடுத்துக் கடந்த காலத் தவறுகளைப் பற்றித் தீர்ப்புகளை வழங்குவது எண்ணற்ற புதிய சிக்கல்கள் உருவாக்கக் காரணமாக அமைகிறது. எனவே, கடந்த காலத்தை மறந்துவிட்டு, நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் மேம்படுத்துவதில் மட்டும் நமது முயற்சிகளைக் மேற்கொள்வதே சரியான அணுகுமுறையாக இருக்கும்.

"மேலும் அவர்களுடன் நல்ல முறையில் குடும்ப வாழ்க்கை நடத்துங்கள்...' "நீங்கள் அவர்களை வெறுத்தால் – ஒன்றை நீங்கள் வெறுக்கக் கூடும்; அல்லாஹ் அதில் உங்களுக்குப் பல்வேறு நன்மைகளை வைத்திருக்கலாம்.' இந்தச் சொற்றொடர் இங்கே கணவன் மனைவிக்கு இடையிலான உறவைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, இருப்பினும் இதற்குள் ஒரு பொதுவான படிப்பினையும் உள்ளது. ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஒரு தீர்ப்பை வழங்கும் அதே நேரத்தில், மனிதனின் முழு வாழ்க்கையுடன் தொடர்புடைய ஒரு பொதுவான வழிகாட்டுதலையும் வழங்குவது குர்ஆனின் பொதுவான பாணியாகும்.

இந்த உலக வாழ்க்கையில் மனிதர்கள் ஒன்றாக வாழ்வது தவிர்க்க இயலாததாகும். முற்றிலும் தனிமையான வாழ்க்கையை யாராலும் வாழ முடியாது. மனித இயல்புகள் வேறுபட்டவை என்பதால், ஒன்றாக வாழும் போதெல்லாம், அவர்களுக்கிடையே புகார்கள் கண்டிப்பாக எழும். அத்தகைய சூழ்நிலையில், புகார்களைப் புறக்கணித்து, உறவை இணக்கமாகப் பேணுவதற்கான விதிமுறையை மேற்கொள்வதுதான் சாத்தியமான ஒரே வழி.

மனிதனுக்குத் தன் துணையிடம் ஒரு குறை தெரியவரும்போது, அதையே காரணமாக எடுத்துக்கொண்டு கோபப்படுவது அடிக்கடி நடக்கும் ஒன்றுதான். இருப்பினும், அவன் சிந்தித்துப்பார்த்தால், சாதகமற்ற ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒரு நன்மையான அம்சம் இருப்பதைக் காண்பான். சில நேரங்களில் ஒரு நிகழ்வு மனிதனுக்குப் பொறுமையின் பயிற்சிக்கான சோதனையாக இருக்கிறது. சில நேரங்களில் அது இறைவனிடம் திரும்புதலுக்கும், பாவமன்னிப்புக்குமான ஊட்டமாக அமைகிறது. சில நேரங்களில் ஒரு சிறிய துன்பத்தில் பெரிய பாடம் மறைந்திருக்கிறது. இதுபோல இன்னும் பல.

حُرِّمَتْ عَلَيْكُمْ اُمَّهٰتُكُمْ وَ بَنٰتُكُمْ وَ اَخَوٰتُكُمْ وَعَمّٰتُكُمْ وَ خٰلٰتُكُمْ
وَبَنٰتُ الْاَخِ وَبَنٰتُ الْاُخْتِ وَاُمَّهٰتُكُمُ الّٰتِيْٓ اَرْضَعْنَكُمْ وَاَخَوٰتُكُمْ
مِّنَ الرَّضَاعَةِ وَاُمَّهٰتُ نِسَآىِٕكُمْ وَرَبَآىِٕبُكُمُ الّٰتِيْ فِيْ حُجُوْرِكُمْ مِّنْ
نِّسَآىِٕكُمُ الّٰتِيْ دَخَلْتُمْ بِهِنَّ ز فَاِنْ لَّمْ تَكُوْنُوْا دَخَلْتُمْ بِهِنَّ فَلَا جُنَاحَ
عَلَيْكُمْ ز وَحَلَآىِٕلُ اَبْنَآىِٕكُمُ الَّذِيْنَ مِنْ اَصْلَابِكُمْ لا وَ اَنْ تَجْمَعُوْا
بَيْنَ الْاُخْتَيْنِ اِلَّا مَا قَدْ سَلَفَ ط اِنَّ اللّٰهَ كَانَ غَفُوْرًا رَّحِيْمًا ﴿٢٣﴾ لا

وَّ الْمُحْصَنٰتُ مِنَ النِّسَآءِ اِلَّا مَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ج كِتٰبَ اللّٰهِ ع
عَلَيْكُمْ ج وَ اُحِلَّ لَكُمْ مَّا وَرَآءَ ذٰلِكُمْ اَنْ تَبْتَغُوْا بِاَمْوَالِكُمْ مُّحْصِنِيْنَ
غَيْرَ مُسٰفِحِيْنَ ط فَمَا اسْتَمْتَعْتُمْ بِهٖ مِنْهُنَّ فَاٰتُوْهُنَّ اُجُوْرَهُنَّ
فَرِيْضَةً ط وَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيْمَا تَرٰضَيْتُمْ بِهٖ مِنْۢ بَعْدِ الْفَرِيْضَةِ ط
اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا حَكِيْمًا ﴿٢٤﴾ وَمَنْ لَّمْ يَسْتَطِعْ مِنْكُمْ طَوْلًا اَنْ
يَّنْكِحَ الْمُحْصَنٰتِ الْمُؤْمِنٰتِ فَمِنْ مَّا مَلَكَتْ اَيْمَانُكُمْ مِّنْ فَتَيٰتِكُمُ
الْمُؤْمِنٰتِ ط وَاللّٰهُ اَعْلَمُ بِاِيْمَانِكُمْ ط بَعْضُكُمْ مِّنْۢ بَعْضٍ ج فَانْكِحُوْهُنَّ
بِاِذْنِ اَهْلِهِنَّ وَاٰتُوْهُنَّ اُجُوْرَهُنَّ بِالْمَعْرُوْفِ مُحْصَنٰتٍ غَيْرَ
مُسٰفِحٰتٍ وَّلَا مُتَّخِذٰتِ اَخْدَانٍ ج فَاِذَآ اُحْصِنَّ فَاِنْ اَتَيْنَ بِفَاحِشَةٍ
فَعَلَيْهِنَّ نِصْفُ مَا عَلَى الْمُحْصَنٰتِ مِنَ الْعَذَابِ ط ذٰلِكَ لِمَنْ خَشِيَ
الْعَنَتَ مِنْكُمْ ط وَ اَنْ تَصْبِرُوْا خَيْرٌ لَّكُمْ ط وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿٢٥﴾ ع

[23]உங்கள் அன்னையர், புதல்வியர், சகோதரிகள், (உங்கள்) தந்தையின் சகோதரிகள், அன்னையரின் சகோதரிகள், சகோதரனின் புதல்வியர், சகோதரியின் புதல்வியர், உங்களுக்குப் பாலூட்டிய (செவிலித்) தாய்கள், உங்கள் பால்குடிச் சகோதரிகள்,

உங்கள் மனைவியரின் அன்னையர், நீங்கள் உடலுறவுகொண்ட மனைவியருக்கு (அவர்களுடைய முந்தைய கணவன் மூலம்) பிறந்து உங்கள் வளர்ப்பில் உள்ள புதல்வியர் ஆகியோரைத் திருமணம் செய்துகொள்வது உங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந்த மனைவியருடன் நீங்கள் உடலுறவு கொள்ளாத நிலையில் (அவர்களை மணவிலக்குச் செய்திருந்தால்) அப்பெண் மக்களைத் திருமணம்செய்வது உங்கள் மீது குற்றமாகாது. உங்கள் சொந்த மகன்களின் மனைவியரை மணமுடிப்பதும் சகோதரிகள் இருவரை ஒன்றாகச் சேர்த்து மணமுடிப்பதும் தடுக்கப்பட்டுள்ளன, இதற்கு முன் நடந்து விட்டவற்றைத் தவிர. உறுதியாக அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன். [24]மணமாகிய (கணவருடன் வாழும்) பெண்களும் உங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளனர், நீங்கள் உரிமை கொண்டுள்ள (அடிமைப்) பெண்களைத் தவிர! இவை அல்லாஹ் உங்களுக்கு இட்ட கட்டளையாகும். இவர்களைத் தவிர ஏனைய பெண்களைத் தவறான முறையில் அல்லாமல் உங்கள் பொருள்களிலிருந்து (மணக்கொடை வழங்கி) மணம்புரிந்து அடைந்து கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. (மணக்கொடை அளிக்கப்படவில்லையெனில்) அவர்களில் நீங்கள் இன்பம் அனுபவித்த அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட மணக்கொடையை அளித்துவிடுங்கள். (அதனை) வரையறுத்த பின்னர் (அதைக் கூட்டவோ குறைக்கவோ) உங்களிடையே நீங்கள் ஏதேனும் உடன்பாடு செய்துகொண்டால் உங்கள் மீது குற்றம் ஏதுமில்லை. உறுதியாக அல்லாஹ் முற்றும் அறிந்தவன்; ஞானம் மிக்கவன். [25]உங்களில் சுதந்திரமான, நம்பிக்கை கொண்ட பெண்களை மணமுடித்துக்கொள்ள வசதியற்றவர் உங்களிடம் உள்ள நம்பிக்கைகொண்ட அடிமைப் பெண்களில் யாரையாவது மணந்துகொள்ளட்டும். அல்லாஹ் உங்கள் நம்பிக்கையை நன்கு அறிந்தவன். (அடிமைப் பெண்கள் உள்ளிட்ட நம்பிக்கையாளர்களாகிய) நீங்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் சமமானவர்களே. எனவே அடிமைப் பெண்களின் உரிமையாளர்களுடைய அனுமதி பெற்று அவர்களை மணந்துகொள்ளுங்கள். முறைப்படி அவர்களுக்குரிய மணக்கொடைகளை அளித்துவிடுங்கள். அவர்கள் ஒழுக்கமானவர்களாகவும் தவறான நடத்தையில் ஈடுபடாதவர்களாகவும் கள்ளக்காதலர்களை வைத்துக் கொள்ளாதவர்களாகவும் இருக்கவேண்டும். திருமணம் செய்து கொள்ளப்பட்ட (அடிமைப்) பெண்கள் நடத்தை தவறினால் (இத்தகைய குற்றம் செய்த திருமணமான) சுதந்திரப் பெண்களுக்கு விதிக்கப்படும் தண்டனையில் பாதி அவர்களுக்கு விதிக்கப்படும். உங்களில் எவர் (மனைவியின்றி இருந்தால்) தவறுசெய்ய

நேரும் என அஞ்சுகிறாரோ அவருக்கே (அடிமைப் பெண்ணை மணக்கும்) இந்த அனுமதி (உரியதாகும்). (எனினும் திருமணமின்றியே) நீங்கள் பொறுமையைக் கடைப்பிடித்தால் அதுவே உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன்.

மனிதர்களுக்குள் இயற்கையான பல ஆசைகள் உள்ளன. அவற்றில் ஒன்று, ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே நிலவும் பாலியல் ஆசை. மார்க்கச் சட்டம் அனைத்து மனித உணர்ச்சிகளையும் வரம்புகளுக்கு உட்படுத்துகிறது. இதைப்போலவே பாலியல் உணர்வுகளுக்கும் வரம்புகளையும் விதிகளையும் வகுத்துள்ளது. இறைச் சட்டத்தின்படி, ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான செல்லுபடியாகும் ஒரே பாலியல் உறவு, திருமண வடிவிலானது. அது ஒரு தீவிரமான சமூக ஒப்பந்தமாக நிறுவப்பட்ட ஒன்று. இயல்பான உணர்ச்சிகளை அமைதிப்படுத்துவது எவ்வளவு முக்கியமோ, அதேபோல் குடும்ப வாழ்க்கையில் புனிதமான சூழ்நிலை நிலவுவதும் அவசியமானது. இந்த நோக்கத்திற்காக, பரம்பரை, தாய்ப்பால், இரத்தம் ஆகியவற்றின் மூலம் நிறுவப்பட்ட சில உறவுகள் தடைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டன, இதனால் மிக நெருங்கிய உறவினர்களுக்கிடையேயான உறவு பாலியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்.

மனிதனின் பெருமை, கண்ணியம் ஆகியவற்றின் அளவுகோல் மனிதர்கள் ஒருவர் மற்றவரின் கண்ணியத்தை அளவிடப் பயன்படுத்தும் கண்ணுக்குத் தெரியக்கூடிய விஷயங்கள் அல்ல. மாறாக, பெருமையின் அளவுகோல் என்பது கண்ணுக்குத் தெரியாத நம்பிக்கையாகும். அது இறைவனின் அறிவில் மட்டுமே இருக்கும் ஒன்று. ஒருவர் கண்ணியமுள்ளவராய் இருப்பதோ கண்ணியமற்றவராய் இருப்பதோ மனிதன் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயம் அல்ல; இது முற்றிலும் அறியப்படாத ஒரு விஷயம். இதன் தீர்ப்பு மறுமையில் இறைவனின் நீதிமன்றத்தில் வழங்கப்படப்போகிறது. இது ஒரு மனிதனின் உயர்வு மனப்பான்மையைப் பறித்துவிடும் சிந்தனை. பெரும்பாலான சமூகக் கேடுகளுக்கு மூலகாரணமாக இருப்பது உயர்வு மனப்பான்மைதான்.

يُرِيْدُ اللّٰهُ لِيُبَيِّنَ لَكُمْ وَ يَهْدِيَكُمْ سُنَنَ الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ
وَ يَتُوْبَ عَلَيْكُمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿٢٦﴾ وَاللّٰهُ يُرِيْدُ اَنْ يَّتُوْبَ
عَلَيْكُمْ ۟ وَ يُرِيْدُ الَّذِيْنَ يَتَّبِعُوْنَ الشَّهَوٰتِ اَنْ تَمِيْلُوْا مَيْلًا
عَظِيْمًا ﴿٢٧﴾ يُرِيْدُ اللّٰهُ اَنْ يُّخَفِّفَ عَنْكُمْ ۚ وَ خُلِقَ الْاِنْسَانُ ضَعِيْفًا ﴿٢٨﴾

[26]அல்லாஹ் உங்களுக்குத் தெளிவாக விளக்கவும் உங்களுக்கு முன்சென்ற (நல்ல)வர்களின் நேர்வழிகளில் உங்களைச் செலுத்தவும் அருட்பார்வை செலுத்தவுமே விரும்புகிறான். அல்லாஹ் முற்றும் அறிந்தவன்; ஞானம் மிக்கவன். [27]அல்லாஹ் உங்கள்மீது அருட்பார்வையைச் செலுத்தவே விரும்புகிறான். ஆனால் தம் மன விருப்பங்களைப் பின்பற்றுபவர்கள், நீங்கள் (நேர்வழியிலிருந்து) மிகுதொலைவு சென்றுவிடவேண்டும் என்று விரும்புகின்றனர். [28]அல்லாஹ் (தன் கட்டளைகளை) உங்களுக்கு எளிதாக்கவே விரும்புகிறான். ஏனெனில் மனிதன் (மன) வலுவற்றவனாகவே படைக்கப்பட்டுள்ளான்.

குர்ஆனில் விவரிக்கப்பட்டுள்ள வாழ்க்கை முறைகள் புதியவை அல்ல. ஒவ்வொரு காலத்திலும் இறைவன் அவற்றைத் தன் தூதர்கள் மூலம் அறிவித்துக் கொண்டே இருந்தான். இதுவே எல்லாக் காலங்களிலும் இறையச்சமுள்ள மக்களின் நடைமுறையாக இருந்தது. பண்டைய இறை வேதங்களைப் பாதுகாக்காததால், இந்த வழிமுறைகள் தொலைந்து போயின. இப்போது இறைவன், தனது இறுதித்தூதர் மூலம் அவற்றை அரபு மொழியில் இறக்கியருளி அவற்றை என்றென்றைக்குமாகப் பாதுகாத்து விட்டான். இன்று, ஒரு சமூகம் தனது வாழ்க்கையை இந்த முறைகளுக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளும்போது, அது இறைவனின் கருணையில் ஒரு பங்கைப் பெற்ற – எல்லாக் காலங்களிலும் இறைவன் தனது உண்மையுள்ள அடியார்களுக்காகத் திறந்திருந்த – இறைவனின் பாதையைப் பின்பற்றிய நல்லோர்களின் நிரந்தரப் பயணக் குழுவில் இணைவதாகும்.

ஒவ்வொரு மனித சமூகத்திலும், சில விஷயங்கள் பல நூற்றாண்டுகளாகப் பாரம்பரியத்தில் வேரூன்றி விடுகின்றன. அவை மக்களின் மனதில் ஊடுருவி விடுவதால் அவற்றிற்கு எதிராகச் சிந்திப்பது கடினமாகிவிடுகிறது. இறைவனின் அடியார் ஒருவர் சமூகச் சீர்திருத்தப் பணியைத் தொடங்கும் போது, இத்தகையவர்கள் அலறுகிறார்கள். அவர்களுக்குப் பழகிப்போன வழிகளைக் கைவிட்டுப் பழக்கமில்லாத வழிமுறைகளைப் பின்பற்றுவது மிகவும் கடினமாகிவிடுகிறது. தங்கள் முன்னோர்களின் வழிகளிலிருந்து அவர்களை விலக்கச் செய்யும் முயற்சிக்கும் – எந்தவொரு சீர்திருத்த இயக்கத்திற்கும் அவர்கள் பகைவர்களாக மாறுகிறார்கள். இது தொடர்பாக, மதவாதிகளுடைய கூட்டத்தின் நடவடிக்கைகள் இன்னும் தீவிரமாக இருக்கும். மதத்தின் உள்ளம்சம் பலவீனமாக இருக்கும்போது, புறவயமான கிளைவிமர்சனங்கள் உயிர் பெற்று எழுந்துவிடுகின்றன. தொடர்ந்து ஒழுக்கங்கள், விதிகள் ஆகியவற்றின் புறவயமான அமைப்பு உருவாக்கப் படுகிறது. மக்கள் மார்க்கத்தின் உண்மையான பண்புகளை இழந்து,

புறவயமான ஒழுக்கங்களையும், விதிகளையும் பின்பற்றுவதன் மூலம் – இறைவனின் மார்க்கத்தைப் பின்பற்றுவதாக நம்புகிறார்கள். அவர்களாகவே உருவாக்கிக்கொண்ட இந்த மதம், முன்னோர்களோடு தொடர்புபடுத்தப்பட்டு படிப்படியாகப் புனிதத் தன்மை பெற்றுவிடுகிறது. இறைவன் அருளிய எளிமையான, இயற்கையான மார்க்கம் அவர்களுக்கு அந்நியமாகத் தோன்றும் அளவுக்குச் சென்று விடுகிறது, அவர்களால் கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கப்பட்ட மதம் அவர்களுக்கு மிகச்சரியானதாகத் தெரிகிறது. அத்தகைய சூழ்நிலையில், அவர்கள் உண்மையான, தொடக்க கால மார்க்கத்தைப் புதுப்பிக்க எழுந்த இயக்கங்களுக்குக் கடுமையான பகைவர்களாக மாறுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் அவற்றைத் தங்கள் சொந்த மத நம்பிக்கைகளை மறுப்பவையாகப் பார்க்கிறார்கள். எடுத்துக்காட்டாக, இறைவனின் சட்டப்படி, மாதவிடாய்க் காலத்தில் ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால், மற்ற தொடர்புகளைச் சாதாரண காலங்களில் இருப்பது போலவே பேண முடியும். யூதர்கள் இந்த எளிய கட்டளையை விரிவுபடுத்தி, மாதவிடாய்க் காலத்தில், ஒரு பெண் சமைத்த உணவை உண்பது, அவள் கையிலிருந்து நீர் பருகுவது, அவளுடன் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது, அவளைத் தன் கையால் தொடுவது அனைத்தும் சட்டவிரோதமானது – குறைந்தபட்சம் இறையச்சத்திற்கு எதிரானது என்ற சட்டப் பிரச்சினையை உருவாக்கினர். இவ்வாறு, மாதவிடாய்க் காலத்தில் ஒரு பெண்ணிடமிருந்து முழுமையாக விலகி இருப்பது இறையச்சத்தின் அடையாளமாக மாறியது. இறைத்தூதர் மதீனாவில் இறைவனின் உண்மையான சட்டத்தை மீண்டும் உயிர்ப்பித்தபோது, யூதர்கள் எரிச்சல் அடைந்தார்கள். எந்த விஷயத்தின் மீது அவர்கள் மதவாதக் கட்டடத்தைக் கட்டமைத்திருந்தார்களோ அது திடீரென்று இடிந்து விழுவது போல் தோன்றியது. இறைவனின் எளிய மார்க்கம் புத்துயிர் பெறும் போதெல்லாம், இட்டுக்கப்பட்ட ஒரு மதத்தின் மீது தங்கள் மதவாதக் கட்டடத்தைக் கட்டியவர்கள் அதன் கடுமையான பகைவர்களாக மாறிவிடுகிறார்கள். இது அவர்களின் தலைமையைப் பறிப்பதாக ஆகும். தலைமை பறிக்கப்படுவதை யாரும் பொறுத்துக் கொள்வதில்லை.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَاْكُلُوْٓا اَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ اِلَّآ اَنْ
تَكُوْنَ تِجَارَةً عَنْ تَرَاضٍ مِّنْكُمْ ۣ وَلَا تَقْتُلُوْٓا اَنْفُسَكُمْ ۭ اِنَّ اللّٰهَ
كَانَ بِكُمْ رَحِيْمًا ۝ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ عُدْوَانًا وَّظُلْمًا فَسَوْفَ
نُصْلِيْهِ نَارًا ۭ وَكَانَ ذٰلِكَ عَلَي اللّٰهِ يَسِيْرًا ۝ اِنْ تَجْتَنِبُوْا

كَبَآئِرَ مَا تُنْهَوْنَ عَنْهُ نُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَنُدْخِلْكُمْ مُّدْخَلًا
كَرِيْمًا ﴿٣١﴾ وَلَا تَتَمَنَّوْا مَا فَضَّلَ اللّٰهُ بِهٖ بَعْضَكُمْ عَلٰى بَعْضٍ ؕ
لِلرِّجَالِ نَصِيْبٌ مِّمَّا اكْتَسَبُوْا ؕ وَلِلنِّسَآءِ نَصِيْبٌ مِّمَّا اكْتَسَبْنَ ؕ
وَسْـَٔلُوا اللّٰهَ مِنْ فَضْلِهٖ ؕ اِنَّ اللّٰهَ كَانَ بِكُلِّ شَىْءٍ عَلِيْمًا ﴿٣٢﴾ وَلِكُلٍّ
جَعَلْنَا مَوَالِىَ مِمَّا تَرَكَ الْوَالِدٰنِ وَالْاَقْرَبُوْنَ ؕ وَالَّذِيْنَ عَقَدَتْ
اَيْمَانُكُمْ فَاٰتُوْهُمْ نَصِيْبَهُمْ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلٰى كُلِّ شَىْءٍ شَهِيْدًا ﴿٣٣﴾ ع ٥ ٨ ٢

[29](இறை)நம்பிக்கையாளர்களே! உங்களிடையே இணக்கத்துடன் நடைபெறும் வணிகத்தின் மூலமாக (ஈட்டிக் கொள்வது) அல்லாமல் ஒருவர் செல்வத்தை ஒருவர் தவறான முறையில் உண்ணாதீர்கள். (இதற்காக) நீங்கள் ஒருவர் மற்றவரைக் கொலை செய்யாதீர்கள். உறுதியாக அல்லாஹ் உங்கள்மீது நிகரற்ற அன்பாளனாக இருக்கிறான். [30]எவனேனும் வரம்புமீறி முறைகேடாக இவ்வாறு செய்தால் அவனை நாம் நரகத்தில் எரிப்போம். இது அல்லாஹ்வுக்கு மிக எளிதானது. [31]தடை செய்யப்பட்டுள்ள பெரும் பாவங்களிலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால் நாம் உங்களின் சிறுபாவங்களை அகற்றி விடுவோம். உங்களைக் கண்ணியமான இடத்தில் நுழையச் செய்வோம். [32]உங்களில் சிலரைவிடச் சிலரை அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருப்பது கொண்டு ஏக்கம் கொள்ளாதீர்கள். ஆண்களுக்கு அவர்கள் ஈட்டிய(நல்ல)வற்றுக்கேற்ற பங்கு உண்டு. பெண்களுக்கும் அவர்கள் ஈட்டிய(நல்ல)வற்றுக்கேற்ற பங்கு உண்டு. (ஆகவே) அல்லாஹ்விடமே அவனது அருளைக் கேளுங்கள். உறுதியாக அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவன். [33]தாய், தந்தையரும் நெருங்கிய உறவினர்களும் விட்டுச் சென்ற(சொத்)திலிருந்து (வரையறுத்தபடி ஆண், பெண்) வாரிசுகளை ஏற்படுத்தியுள்ளோம். நீங்கள் (வாரிசுரிமை) உடன்படிக்கை செய்து கொண்டவர்களுக்கும் அவர்களுக்குரிய பங்கைக் கொடுத்துவிடுங்கள். உறுதியாக அல்லாஹ் யாவற்றையும் கண்காணித்துக் கொண்டிருக்கிறான்.

ஒருவரின் செல்வம் இரண்டாமவரைச் சென்றடைவதற்கான ஒரு வழி இரண்டாமவர் முதலாமவரின் தேவைகளை நிறைவு செய்து, அவரிடமிருந்து தன் உழைப்புக்கான ஊதியம் பெறுவதாகும். இது வணிகமாகும். மார்க்கச் சட்டப்படி இதுவே வாழ்க்கை நடத்துவதற்கான சரியான வழியுமாகும்.

மாறாகத் திருட்டு, மோசடி, பொய், லஞ்சம், வட்டி, சூதாட்டம் போன்றவற்றின் மூலம் ஈட்டப்பட்ட செல்வம், இறைவனின் பார்வையில் முறைகேடான செல்வமாகும். இவை கொள்ளையின் பல்வேறு வகைகளாகும், வணிகத்திற்குப் பதிலாக கொள்ளையை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். இந்த உலகில் வெற்றி பெற்றாலும், மறுமையில் நெருப்பின் தண்டனையைப் பெறுவார்கள். ஒரு மனித உயிரின் நிலையும் இதேதான். ஒரு நிறுவப்பட்ட அரசாங்கத்திற்கு மட்டுமே மனிதனைக் கொல்ல உரிமை உண்டு. அது, இறைவனின் சட்டத்தின் கீழ் முறையாகக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட பிறகு, அவனுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகும். இதைத் தவிர, யார் ஒருவருடைய உயிரைப் பறிக்க முயற்சி செய்கிறாரோ அவர் இறைவனிடம் கடுமையான தண்டனைக்குரிய தடைசெய்யப்பட்ட ஒரு செயலைச் செய்கிறார். இறைவனின் பார்வையில் மிகப் பெரிய குற்றம் ஆக்கிரமிப்பும் கலகமும் ஆகும். அதாவது வரம்புகளை மீறிச் செல்வதும், ஒருவருக்கு அநியாயமாக தீங்கு விளைவிப்பதுமாகும். ஆக்கிரமிப்பு, அடக்குமுறை ஆகிய செயல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்பவர்களோடு இறைவன் சிறப்பான முறையில் நடந்து கொள்வான், அவர்கள் மறுமை உலகில் நுழையும்போது அவர்களின் சிறிய குறைபாடுகளும் தவறுகளும் நீக்கப்பட்டிருக்கும்.

உலகில் ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்குமிடையே வேறுபாடு வைக்கப்பட்டுள்ளது. சிலருக்கு உடல்வலிமையிலும் மன வலிமையிலும் குறைவான பங்கே கிடைத்திருக்கும், சிலருக்கு அதிகமாகக் கிடைத்திருக்கும். சிலர் நல்ல சூழ்நிலையில் பிறக்கிறார்கள். சிலர் மோசமான சூழ்நிலையில் பிறக்கிறார்கள். சிலரிடம் பெரிய வளங்கள் இருக்கின்றன. சிலரிடம் சாதாரண வளங்கள் உள்ளன. ஒரு மனிதன் தன்னை விட உயர்ந்த நிலையில் ஒருவரைக் கண்டால், உடனடியாக அவனுக்கெதிராக எரிச்சல் கொள்கிறான். இதனால் சமூக வாழ்க்கையில் பொறாமை, பகைமை, மோதல் ஆகியவை உருவாகின்றன. ஆனால் இந்த வேறுபாடுகளைக் கொண்டு தன்னையோ மற்றவர்களையோ மதிப்பிடுவது முட்டாள்தனம். இவை அனைத்தும் உலக வாழ்வில் மட்டுமே முக்கியத்துவம் பெறுபவை. இவை உலகில் கிடைத்தவை, உலகிலேயே இருந்துவிடக்கூடியவை. உண்மையில் முக்கியத்துவம் பெறத்தக்கது மறுமையின் வெற்றியாகும். மறுமையின் வெற்றியில் இவற்றுக்கு எந்தப் பங்கும் இல்லை. மறுமையில் வெற்றி என்பது, ஒருவர் இறைவனுக்காக மனப்பூர்வமாகவும் விருப்பத்துடனும் செய்யும் செயல்களைப் பொறுத்தது. எனவே, மனிதன் பொறாமையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதும், இறைவனிடம் வழிகாட்டுதலுக்காக வேண்டுவதும் தன்னை மறுமைக்கான செயல்களில் ஈடுபடுத்திக் கொள்வதும் சிறந்த அறிவுடைமையாகும்.

اَلرِّجَالُ قَوّٰمُوْنَ عَلَى النِّسَآءِ بِمَا فَضَّلَ اللّٰهُ بَعْضَهُمْ عَلٰى بَعْضٍ وَّ
بِمَآ اَنْفَقُوْا مِنْ اَمْوَالِهِمْ ؕ فَالصّٰلِحٰتُ قٰنِتٰتٌ حٰفِظٰتٌ لِّلْغَيْبِ
بِمَا حَفِظَ اللّٰهُ ؕ وَالّٰتِىْ تَخَافُوْنَ نُشُوْزَهُنَّ فَعِظُوْهُنَّ وَاهْجُرُوْهُنَّ
فِى الْمَضَاجِعِ وَاضْرِبُوْهُنَّ ۚ فَاِنْ اَطَعْنَكُمْ فَلَا تَبْغُوْا عَلَيْهِنَّ
سَبِيْلًا ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيًّا كَبِيْرًا ﴿۳۴﴾ وَاِنْ خِفْتُمْ شِقَاقَ بَيْنِهِمَا
فَابْعَثُوْا حَكَمًا مِّنْ اَهْلِهٖ وَحَكَمًا مِّنْ اَهْلِهَا ۚ اِنْ يُّرِيْدَآ
اِصْلَاحًا يُّوَفِّقِ اللّٰهُ بَيْنَهُمَا ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا خَبِيْرًا ﴿۳۵﴾

[34]***ஆண்கள், பெண்களின் காப்பாளர்கள் ஆவர். இதற்குக் காரணம் அல்லாஹ் சிலரைவிடச் சிலரை மேன்மையாக்கி வைத்திருக்கிறான்; (மேலும் ஆண்களாகிய) அவர்கள் தங்கள் செல்வத்திலிருந்து (பெண்களாகிய) அவர்களுக்குச் செலவும் செய்கின்றனர். எனவே நல்ல பெண்கள் கீழ்ப்படிந்து நடப்பார்கள். (கணவன்) இல்லாத பொழுதில் (தம் ஒழுக்கத்தையும் கணவனின் உடைமைகளையும்) அல்லாஹ் வழங்கிய பாதுகாப்பைக் கொண்டு காத்துக்கொள்வார்கள். எந்தப் பெண்களின் நன்னடத்தை குறித்து அவர்கள் கீழ்ப்படிய மாட்டார்கள் என்று நீங்கள் அஞ்சுகிறீர்களோ அவர்களுக்கு அறிவுரை கூறுங்கள்; (திருந்தாவிடில்) அவர்களைப் படுக்கையில் விலக்கிவையுங்கள்; (பின்னும்) திருந்தாவிடில் அவர்களை (மெலிதாக) அடியுங்கள். பிறகு அவர்கள் உங்களுக்குக் கீழ்ப்படிந்து விட்டால் அவர்களுக்கு எதிராக(க் குற்றம் சுமத்த) எந்த வழியையும் தேடாதீர்கள். உறுதியாக அல்லாஹ் உயர்ந்தவன்; மிகப் பெரியவன். [35](கணவன், மனைவி ஆகிய) அவ்விருவரிடையே பிளவு ஏற்பட்டுவிடுமோ என நீங்கள் அஞ்சினால் அவனுடைய குடும்பத்தாரிலிருந்து ஒரு நடுவரையும் அவளுடைய குடும்பத்தாரில் இருந்து ஒரு நடுவரையும் நியமித்துக் கொள்ளுங்கள். அவ்விருவரும் (கணவன் மனைவிக்கிடையே) இணக்கத்தை ஏற்படுத்த விரும்பினால் அல்லாஹ் அவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்திவிடுவான். உறுதியாக அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவன்; நன்கு உணர்ந்தவன்.***

ஒரு குடும்ப வடிவலோ அரசாட்சி வடிவிலோ எங்கெல்லாம் மக்களுடைய கூட்டம் இருக்கிறதோ, அங்கெல்லாம் அவர்களுக்கு மேலாக வழிநடத்துபவரும், தலைவரும் இருப்பது அவசியமாகிறது. இந்தத் தலைவர் அவசியமாக ஒருவராகத்தான் இருக்க முடியும். இறைவனால் வகுக்கப்பட்டிருக்கும் உலகத்திற்கான திட்டத்தில், ஆணுக்குக் குடும்பத்தின் தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதைக் கருத்தில் கொண்டே அவன் படைக்கப்பட்டுள்ளான். ஆண்களின் உருவ அமைப்பிற்கும் பெண்களின் உருவ அமைப்பிற்கும் இடையிலான உயிரியல் மற்றும் உளவியல் வேறுபாடுகள் இறைவனின் படைப்புத் திட்டத்திற்கேற்ப உள்ளன. இப்படியிருக்க சிலர் இறைவனின் திட்டத்திற்கு எதிராகச் சென்றால், அவர்கள் குழப்பத்தையே ஏற்படுத்துவார்கள். ஏனென்றால் இறைவனின் தொழிற்சாலை அதற்குத் தரப்பட்டிருக்கும் திட்டத்தின்படி ஆணையும் பெண்ணையும் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டே இருக்கும். அதில் ஆணுக்குக் 'காக்கும்' திறன்களும் பெண்ணுக்குக் 'கீழ்ப்படியும்' திறன்களும் வழங்கப்பட்டிருக்கும். இருந்தாலும் சமூக வாழ்வில் இறைவனின் படைப்பியல்பு கருத்தில் கொள்ளப்படாதிருந்தால், அம்முரண்பாட்டின் விளைவு உலக வாழ்வின் சீரழிவாகும்.

சிறந்த பெண்ணென்பவள் இறைவனின் படைப்புத் திட்டத்தில் தன்னைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் ஆண்களின் மேன்மையை ஒப்புக்கொள்பவள்தான். இதைப்போலவே, சிறந்த ஆண் என்பவன் தனது உயர்ந்த தகுதியின் காரணமாக இறைவன் தன்னை விட உயர்ந்தவன் என்பதை மறந்துவிடாதவனே. இறைவனின் நீதிமன்றத்தில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. இந்த வேறுபாடு இவ்வுலக ஏற்பாட்டின் அடிப்படையிலானது மட்டுமே; மறுமையில் அருட்கொடைகளைப் பகிர்ந்து கொள்வதில் அல்ல. பெண்கள் மீதான தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற ஆண்கள் எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். ஓர் ஆணின் நிர்வாக மேன்மையை ஒரு பெண் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், அந்த ஆணிற்குள் பழிவாங்கும் உணர்வு எழக்கூடாது, ஒருபோதும் குற்றஞ்சாட்டிப் பெண்ணை இழிவுபடுத்தக் கூடாது. எந்த மேன்மையும் யாரையும் நீதியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பதில்லை. இருப்பினும், தனிப்பட்ட சூழ்நிலைகளில், ஒரு பெண்ணின் குணத்தில் கீழ்ப்படியாமையைக் கண்டால், அவளைத் திருத்த முயலும் உரிமை ஆணுக்கு உண்டு. இந்தச் சீர்திருத்தம் முதலில் விளக்கிப் புரியவைப்பதுடன் தொடங்கலாம். பின்னர், அழுத்தம் கொடுப்பது, பேசுவதை நிறுத்திக் கொள்வது, விலகி இருப்பது போன்ற வழிகள் கையாளப்படலாம்.

இரண்டு பேருக்குள் கருத்து வேறுபாடு ஏற்படும்போது, இருவரின் மனங்களும் ஒன்றினால் மற்றொன்று பாதிப்புக்குள்ளாகின்றன. இருவரும் ஒருவரைப் பற்றி மற்றொருவர் முற்றிலும் இயல்பான முறையில் சிந்திக்க முடிவதில்லை. அத்தகைய சூழ்நிலையில், இரு தரப்பினரும் தங்களைத் தவிர வேறு ஒருவரை நடுவராக நியமிக்க உடன்படுவதே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சிறந்த வழி. இந்த நிலையில் தனிப்பட்ட முறையில் தொடர்பில்லாத மற்றொரு நபர் பாரபட்சமில்லாத மனதுடன் சிந்தித்து, வழக்கின் உண்மைகளுக்கேற்ப ஒரு முடிவை எட்ட முடியும்.

وَ اعْبُدُوا اللّٰهَ وَ لَا تُشْرِكُوْا بِهٖ شَيْـًٔا وَّ بِالْوَالِدَيْنِ اِحْسَانًا
وَّ بِذِی الْقُرْبٰی وَ الْيَتٰمٰی وَ الْمَسٰكِيْنِ وَ الْجَارِ ذِی الْقُرْبٰی وَ الْجَارِ
الْجُنُبِ وَ الصَّاحِبِ بِالْجَنْۢبِ وَ ابْنِ السَّبِيْلِ ۙ وَ مَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ؕ
اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ مَنْ كَانَ مُخْتَالًا فَخُوْرَا ۙ﴿۳۶﴾ الَّذِيْنَ يَبْخَلُوْنَ
وَ يَاْمُرُوْنَ النَّاسَ بِالْبُخْلِ وَ يَكْتُمُوْنَ مَاۤ اٰتٰىهُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ ؕ
وَ اَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا ۚ﴿۳۷﴾ وَ الَّذِيْنَ يُنْفِقُوْنَ
اَمْوَالَهُمْ رِئَآءَ النَّاسِ وَ لَا يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَ لَا بِالْيَوْمِ الْاٰخِرِ ؕ
وَ مَنْ يَّكُنِ الشَّيْطٰنُ لَهٗ قَرِيْنًا فَسَآءَ قَرِيْنًا ﴿۳۸﴾ وَ مَاذَا عَلَيْهِمْ
لَوْ اٰمَنُوْا بِاللّٰهِ وَ الْيَوْمِ الْاٰخِرِ وَ اَنْفَقُوْا مِمَّا رَزَقَهُمُ اللّٰهُ ؕ
وَ كَانَ اللّٰهُ بِهِمْ عَلِيْمًا ﴿۳۹﴾ اِنَّ اللّٰهَ لَا يَظْلِمُ مِثْقَالَ ذَرَّةٍ ۚ وَ
اِنْ تَكُ حَسَنَةً يُّضٰعِفْهَا وَ يُؤْتِ مِنْ لَّدُنْهُ اَجْرًا عَظِيْمًا ﴿۴۰﴾

[36]அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். தாய் தந்தையர், உறவினர், அநாதைகள், ஏழைகள், உறவினரான அண்டை வீட்டார், அந்நியரான அண்டை வீட்டார், (தொழிலில், பயணத்தில்) உங்களுடன் இருக்கும் தோழர்கள், வழிப்போக்கர்கள், உங்கள் அடிமைகள் ஆகியோருடன் நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள். உறுதியாக, செருக்குக்கொண்டு தற்பெருமை பேசுவோரை அல்லாஹ் நேசிப்பதில்லை; [37](மேலும்) கஞ்சத்தனம் செய்வோர்,

(மற்ற) மக்களையும் கஞ்சத்தனம் செய்யத் தூண்டுவோர், அல்லாஹ் தன் அருளிலிருந்து வழங்கியவற்றை மறைப்போர் ஆகியோரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை; மறுப்பாளர்களுக்கு இழிவுமிக்க வேதனையை நாம் தயார்செய்து வைத்துள்ளோம். [38]மக்களுக்குக் காட்டுவதற்காகவே தம் செல்வங்களைச் செலவு செய்வோரையும் அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கைகொள்ளாதோரையும் (அல்லாஹ் நேசிப்பதில்லை.) சாத்தானை உற்ற நண்பனாக்கிக் கொண்டவன் எவ்வளவு கொடிய நண்பனைப் பெற்றிருக்கிறான்! [39]அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கைகொண்டு, அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து (அறச்)செலவு செய்தால் அவர்களுக்கு என்ன (இழப்பு) ஏற்பட்டுவிடப் போகிறது? அல்லாஹ் அவர்களை முற்றும் அறிந்தவன். [40]உறுதியாக அல்லாஹ் எவருக்கும் ஒரு கடுகு வித்தளவுகூட அநீதியிழைக்க மாட்டான். (அவன் செய்தது) நன்மையாக இருந்தால் அதை அவன் இரட்டிப்பாக்கி விடுவான்; தன்னிடமிருந்து மாபெரும் கூலியையும் வழங்குவான்.

மனிதனிடம் உள்ள அனைத்தும் இறைவனால் கொடுக்கப்பட்டவை. மனிதன் தன்னை இறைவனிடம் ஒப்படைத்து, அவனை வணங்குபவனாக மாற வேண்டும் என்பதே இதன் நோக்கம். இவ்வாறு மனிதன் இறைவனைச் சார்ந்தவனாக மாறும்போது, இயல்பாகவே அவனுக்குள் ஒரு பணிவு மனநிலை உருவாகிறது. இந்த மனநிலை, அவன் வாழும் மக்களுடனான அவனது உறவுகளில் பிரதிபலிக்கிறது. அவனுடைய இந்தப் பண்பு, பெற்றோரிடம் நல்ல நடத்தையின் வடிவத்தை எடுக்கிறது. அவனுடன் தொடர்புகொள்ளும் ஒவ்வொருவரும் இறைவனைத் தனக்கு மேல் நின்று கண்காணித்துக்கொண்டிருப்பதைக் காணும் ஒரு மனிதனைப்போல் அவனைக் காண்கிறார்கள். அவரவர் உறவுக்கு ஏற்பவும், தேவைகளுக்கு ஏற்பவும் ஒவ்வொருவரின் உரிமைகளையும் நிறைவேற்றுபவனாக அவன் மாறுகிறான். எந்த நிலையிலும் தன்னுடன் தொடர்பு கொள்ளும் எவரையும் புறக்கணிப்பது, இறைவனால் தான் புறக்கணிக்கப்படும் அபாயத்தை விலைகொடுத்து வாங்குவதாக அவனுக்குத் தோன்றுகிறது.

இறைவனிடம் தன்னை ஒப்படைக்காத ஒரு நபரிடம் பெருமையின் உளவியல் மேலெழுகிறது. தன்னிடம் உள்ள அனைத்தையும் அவன் தனது கடுமையான உழைப்புக்கும் திறமைக்கும் சான்றாகக் கருதுகிறான். விளைவாக, அவன் தனது வருமானத்தைத் தனக்கு மட்டுமே உரிய ஒன்றாகக் கருதுகிறான். வலுவற்ற உறவினர்களுடனோ, ஏழைகளுடனோ தொடர்பு

கொள்வது தனது தகுதிக்குக் கீழான நிலையாக அவனுக்குத் தெரிகிறது. அவன் தனது நலன்களையோ விருப்பங்களையோ முழுமைப்படுத்த நிறையப் பணம் செலவிடுகிறான். ஆனால் அவனது தன்முனைப்புக்கு ஊட்டமளிக்காத இடங்களில் செலவிடுவதானால் அவனது இதயம் இறுக்கமடைகிறது. அவன் பகட்டுக்கான நிகழ்வுகளில் செலவு செய்வதில் தாராளமானவனாகிறான். மௌனமான மார்க்கப் பணிகளில் செலவு செய்வதில் கஞ்சனாகி விடுகிறான். இறைவனின் அருட்கொடைகளை மனத்தாழ்மைக்குப் பதிலாகப் பெருமைக்கு ஊட்டமாக ஆக்கிக் கொள்பவர்கள், இறைவன் கொடுத்த செல்வத்தை இறைவன் குறிப்பிட்ட வழிகளில் செலவிடாமல், தங்கள் மன விருப்பங்களின் தேவைகளுக்காகச் செலவிடுவதில் தாராளமாக இருப்பவர்கள் ஆகிய இத்தகையவர்கள் சாத்தானின் தோழர்கள். சாத்தான் அவர்களுக்குச் சில தற்காலிக ஆதாயங்களைக் காட்டியபோது, அவர்கள் அதை நோக்கி ஓடினார்கள். இறைவன் வாக்குறுதியளித்த நிரந்தர ஆதாயத்தில் அவர்களால் மனஈடுபாடுகொள்ள முடியவில்லை. அவர்களுக்குக் கடுமையான வேதனையைத் தவிர இறைவனிடம் வேறு எதுவும் இல்லை. ஒரு மனிதன் தான் செய்யாத ஒன்றை முக்கியமற்றதாகக் கருதுகிறான். அவன் தன் செயலை ஒரு கொள்கை அடிப்படையிலான செயலாகக் கருதுகிறான். இது தன்னை மிகச் சரியான திசையில் இருப்பதாக நிரூபிக்கும் முயற்சி. ஆனால் இறைவனிடத்தில் இத்தகைய எந்த முயற்சியும் யாருக்கும் எந்தப் பயனும் அளிக்காது.

فَكَيْفَ إِذَا جِئْنَا مِنْ كُلِّ أُمَّةٍ بِشَهِيدٍ وَجِئْنَا بِكَ عَلَىٰ هَٰؤُلَاءِ
شَهِيدًا ﴿٤١﴾ يَوْمَئِذٍ يَوَدُّ الَّذِينَ كَفَرُوا وَعَصَوُا الرَّسُولَ
لَوْ تُسَوَّىٰ بِهِمُ الْأَرْضُ ۚ وَلَا يَكْتُمُونَ اللَّهَ حَدِيثًا ﴿٤٢﴾ ع
يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَقْرَبُوا الصَّلَاةَ وَأَنْتُمْ سُكَارَىٰ حَتَّىٰ
تَعْلَمُوا مَا تَقُولُونَ وَلَا جُنُبًا إِلَّا عَابِرِي سَبِيلٍ حَتَّىٰ تَغْتَسِلُوا ۚ
وَإِنْ كُنْتُمْ مَرْضَىٰ أَوْ عَلَىٰ سَفَرٍ أَوْ جَاءَ أَحَدٌ مِنْكُمْ مِنَ الْغَائِطِ
أَوْ لَامَسْتُمُ النِّسَاءَ فَلَمْ تَجِدُوا مَاءً فَتَيَمَّمُوا صَعِيدًا طَيِّبًا
فَامْسَحُوا بِوُجُوهِكُمْ وَأَيْدِيكُمْ ۗ إِنَّ اللَّهَ كَانَ عَفُوًّا غَفُورًا ﴿٤٣﴾

[41](நபியே! மறுமையில்) நாம் ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் ஒரு சாட்சியாளரைக் கொண்டு வந்து உம்மை இவர்களுக்குச் சாட்சியாளராகக் கொண்டு வரும்போது (இவர்களுடைய நிலை) எப்படியிருக்கும்? [42](மறுமையாகிய) அந்நாளில் (அல்லாஹ்வை) மறுத்துத் தூதருக்கு எதிராகச் செயல்பட்டவர்கள் ''பூமி (பிளந்து தங்களை விழுங்கி) சமதளமாகிவிடக் கூடாதா?'' என்று ஏங்குவர். அவர்களால் எதையும் அல்லாஹ்விடம் மறைக்க இயலாது. [43]நம்பிக்கையாளர்களே! நீங்கள் கூறுவது உங்களுக்கே விளங்காதவாறு போதையிலிருக்கும் நிலையில் தொழுகையை நெருங்காதீர்கள். (உடலுறவுக்குப் பின்) குளித்தல் கட்டாயமான நிலையிலும் குளிக்கும்வரை தொழுகையை நெருங்காதீர்கள் – நீங்கள் பயணத்தில் இருந்தாலன்றி! நீங்கள் நோயாளியாகவோ பயணத்திலோ இருந்தால் அல்லது மலம், சிறுநீர் கழித்துவிட்டு வந்தால் அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டியிருந்தாலோ (குளிப்பதற்காக) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லையெனில் சுத்தமான மண்ணால் 'தயம்மும்' செய்யுங்கள். (மண்ணில் தோய்த்த கைகளால்) உங்கள் முகங்களையும் கைகளையும் தடவிக் கொள்ளுங்கள். உறுதியாக அல்லாஹ் பிழை பொறுப்பவன்; பெரும் மன்னிப்பாளன்.

சத்திய அழைப்பாளர் வரும்போது, அவர் ஒரு சாதாரண மனிதத் தோற்றத்தில் இருக்கிறார். அவரைச் சுற்றி வெளிப்படையான பெருமைகளோ, பிரமாண்டங்களோ இருப்பதில்லை. எனவே அக்காலப் பெரியவர்கள் அவரை இழிவாகக் கருதிப் புறக்கணித்து விடுகிறார்கள். உலகப் புகழிலும் கௌரவத்திலும் தங்களைவிடக் குறைவான ஒருவர் தங்களை விட உண்மையுள்ளவராகவும் நேர்மையானவராகவும் இருக்க முடியும் என்று அவர்களால் நம்ப முடிவதில்லை. ஆனால் நியாயத்தீர்ப்பு நாள் வந்து இறைவனின் தீர்ப்பு நிலைநாட்டப்படும்போது, 'மதிப்பற்றவர்' என்று அவர்கள் மறுத்த அதே நபர் மறுமையின் தீர்ப்பில் இறைவனின் சாட்சியாக ஆக்கப்படுவதை வியப்புடன் காண்பார்கள். அந்த நபரின் கூற்றின் அடிப்படையிலேயே மக்களுக்கான சொர்க்கம் நரகம் பற்றிய முடிவுகள் எடுக்கப்படும். இவர்கள் அங்கே குற்றவாளியின் நிலையிலும், அவர் இறைவனின் சார்பாகப் பேசுபவரின் நிலையிலும் நின்றிருப்பார்கள். பூமி பிளந்து தங்களை விழுங்கிவிட வேண்டும் என்று மக்கள் விரும்பும் அளவுக்குக் கடுமையான, திகிலூட்டும் தருணமாக அது இருக்கும். ஆனால் அவர்களின் இந்த அவமான நிலை அவர்களுக்கு எந்தப் பயனும் அளிக்காது. அவர்களுடைய வார்த்தைகள், செயல்கள் தொடங்கி

எண்ணங்கள் வரை இறைவனிடம் பதிவு செய்யப்பட்ட நிலையில் இருக்கும். அவர்கள் சத்தியத்தை மறுத்தது அறியாமையால் அல்ல, மாறாக ஆணவத்தால் என்பதை இறைவன் அவர்களுக்குக் காண்பிப்பான். அவர்கள் தங்களைப் பெரியவர்களாகக் கருதி, சத்தியத்தின் அழைப் பாளர்களை இழிவாகப் பார்த்தார்கள். உண்மையை அதன் வெளிப்படையான நிலையில் பார்த்தும், அறிந்தும்கூட, அதை ஏற்றுக்கொள்வதில் தங்கள் சொந்தப் பெருமை குறைந்துவிடுவதாகத் தோன்றியதால் அவர்கள் அதை மறுத்தனர்.

விதிவிலக்கான சூழ்நிலைகளில் விதிவிலக்கான சலுகையை மார்க்கச் சட்டம் வழங்குகிறது. நோய், பயணம், தண்ணீர்ப் பற்றாக்குறை ஆகிய மூன்றும் மனிதர்களுக்கான அசாதாரணச் சூழ்நிலைகள். எனவே, இந்தச் சந்தர்ப்பங்களில், தீங்கு ஏற்படும் என்ற அச்சமிருந்தால், 'உளூ' செய்தல் (முகம், கை, கால் கழுவுதல்) குளித்தல் ஆகியவற்றுக்குப் பதிலாகத் 'தயம்மும்' செய்யும் முறையைப் பின்பற்ற அனுமதி வழங்கப் பட்டது. பொதுவாக உளூ (முகம், கை, கால் கழுவுதல்) தண்ணீரால் செய்யப்படுகிறது. 'தயம்மும்' என்பது மண்ணால் 'உளூ' செய்வது போன்றது. ஒருவருக்குள் ஒரு தூய்மையான நிலையை உருவாக்குவதே 'உளூ' செய்வதன் நோக்கமாகும். 'உளூ' செய்வது சாத்தியமில்லாத பட்சத்தில் இந்தத் தூய்மையின் உளவியலைப் பேணுவதற்கு தயம்மும் ஒரு பொருள் சார்ந்த வழிமுறையாகும்.

"நம்பிக்கையாளர்களே! நீங்கள் கூறுவது உங்களுக்கே விளங்காதவாறு போதையிலிருக்கும் நிலையில் தொழுகையை நெருங்காதீர்கள்' - இந்த வசனம் மதுவிலக்கின் ஆரம்ப விதியை விளக்க இங்கே வந்துள்ளது. அதே நேரத்தில் இது தொழுகையைப் பற்றிய ஒரு முக்கியமான உண்மையையும் சொல்கிறது. இது தொழுகை என்பது புரிதலுடனும் உணர்வுள்ள நிலையிலும் செய்யப்படும் ஒரு வணக்க வழிபாடு என்பதைக் காட்டுகிறது. தொழுகை என்பது சில வார்த்தைகளையும் சில அசைவு களையும் சரியான தோரணையுடன் திரும்பத் திரும்ப நிறைவேற்று வதற்கான பெயரல்ல. இதனுடன் தொழுகையின் போது ஒரு மனிதனின் மனம் விழிப்பைக் கொண்டிருப்பதும் அவசியம். அவன் தொழுகையை அறிந்து தொழ வேண்டும். அவன் தனது நாவாலும் உடலாலும் எந்த இறைவனுக்கு முன் பணிய விரும்புகிறானோ, அதே இறைவனுக்கு முன் அவனது எண்ணங்களும் நோக்கங்களும் கூடப் பணிந்திருக்க வேண்டும். எந்த இறைவனை அவனது உடல் வழிபடுகிறதோ அதே இறைவனை அவனது உணர்வும் தலைவணங்கி வழிபடக்கூடியதாக மாறிவிட வேண்டும்.

اَلَمۡ تَرَ اِلَى الَّذِيۡنَ اُوۡتُوۡا نَصِيۡبًا مِّنَ الۡكِتٰبِ يَشۡتَرُوۡنَ الضَّلٰلَةَ
وَيُرِيۡدُوۡنَ اَنۡ تَضِلُّوا السَّبِيۡلَ ﴿۴۴﴾ وَاللّٰهُ اَعۡلَمُ بِاَعۡدَآئِكُمۡ ؕ
وَكَفٰى بِاللّٰهِ وَلِيًّا ۙ وَّكَفٰى بِاللّٰهِ نَصِيۡرًا ﴿۴۵﴾ مِنَ الَّذِيۡنَ هَادُوۡا
يُحَرِّفُوۡنَ الۡكَلِمَ عَنۡ مَّوَاضِعِهٖ وَيَقُوۡلُوۡنَ سَمِعۡنَا وَعَصَيۡنَا
وَاسۡمَعۡ غَيۡرَ مُسۡمَعٍ وَّرَاعِنَا لَيًّا بِاَلۡسِنَتِهِمۡ وَطَعۡنًا فِى الدِّيۡنِ ؕ
وَلَوۡ اَنَّهُمۡ قَالُوۡا سَمِعۡنَا وَاَطَعۡنَا وَاسۡمَعۡ وَانۡظُرۡنَا لَكَانَ خَيۡرًا
لَّهُمۡ وَاَقۡوَمَ ۙ وَلٰكِنۡ لَّعَنَهُمُ اللّٰهُ بِكُفۡرِهِمۡ فَلَا يُؤۡمِنُوۡنَ اِلَّا قَلِيۡلًا ﴿۴۶﴾

[44](நபியே!) வேதத்திலிருந்து ஒரு பகுதி வழங்கப்பட்டோரை நீர் கவனிக்கவில்லையா? அவர்கள் கெடுவழியை விலைக்கு வாங்குகின்றனர்; நீங்களும் வழிதவறிவிட வேண்டும் என்று விரும்புகின்றனர். [45](ஓரிறை நம்பிக்கையாளர்களே!) அல்லாஹ் உங்கள் பகைவர்களை நன்கறிவான். பாதுகாப்பதற்கும் அல்லாஹ்வே போதுமானவன்; உதவி புரிவதற்கும் அல்லாஹ்வே போதுமானவன். [46]யூதர்களில் ஒரு பிரிவினர் சொற்களை அவற்றிற்குரிய இடங்களிலிருந்து புரட்டி விடுகின்றனர். (நபியே! உம்மிடம்) ''நாங்கள் செவியுற்றோம், (ஆனால்) கீழ்ப்படிய மாட்டோம். கேளுங்கள்: உங்களுக்கு அது கேட்காமல் போகட்டும்'' என்று கூறுகிறார்கள். மார்க்கத்தை குறைகூறித் தங்கள் நாவுகளை வளைத்து (உம்மை நோக்கி - 'ராயினா' (இருபொருள்: 'எங்களைக் கவனியுங்கள்', 'இடையரே') என்றும் கூறுகிறார்கள். ''நாங்கள் செவியுற்றோம், கீழ்ப்படிந்தோம் (நாங்கள் சொல்வதைக்) கேளுங்கள், 'உன்ளுர்னா' (எங்களை அன்பாக நோக்குவீராக)'' என்று அவர்கள் கூறியிருந்தால் அது அவர்களுக்குச் சிறந்ததாகவும் சீரானதாகவும் அமைந்திருக்கும். ஆயினும் அவர்களின் மறுப்பினால் அல்லாஹ் அவர்களைச் சபித்து விட்டான். எனவே அவர்களுள் மிகக் குறைவானவர்களே அன்றி (ஏனையோர்) நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்.

இறைவனின் வேதம் ஒரு கூட்டத்தினருக்கு வழங்கப்படுவதெல்லாம் அவர்கள் அதைப் பயன்படுத்தித் தங்கள் சிந்தனைகளையையும் செயல்களையும் சரிசெய்ய வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால், இறைவேதத்தைக் கொண்ட ஒரு சமூகம், யூதர்கள் வீழ்ச்சியடைந்தது போலவே வீழ்ச்சியடையும்

போது, அவர்கள் இறை வேதத்திலிருந்து வழிகாட்டுதலைப் பெறுவதற்குப் பதிலாக கெடுவழியையே ஊட்டமாகப் பெறத் தொடங்குகிறார்கள். இறைவனின் கட்டளைகள் அவர்களுக்கு வறண்ட – நுணுக்கமான வாதங்களுக்குரிய பேசுபொருளாக மாறிவிடுகின்றன. தொடர்ந்து நம்பிக்கையியல் என்ற பெயரில் தத்துவார்த்த வகையிலான வீண்விவர நுணுக்கங்கள் தலைதூக்கத் தொடங்குகின்றன. அது எத்தகைய செயல்பாடுகளைக் கற்பிக்கும் ஒரு நூலாக மாறுகிறது என்றால், மறுமை வாழ்க்கையுடன் அதற்கு எந்தத் தொடர்பும் இல்லாமல் போகிறது. இத்தகைய மக்கள் தம் மரபார்ந்த உளவியலின் காரணமாகத் தாங்கள் சொல்லும் அனைத்தையும் இறைவனின் வார்த்தையாக நிரூபிப்பது அவசியம் என்று கருதுகின்றனர். அவர்கள் தங்கள் செயல்களுக்கு மத ரீதியாக நியாயத்தைக் கற்பிக்க இறை வேதத்தை மாற்றி விடுகிறார்கள். அவர்கள் இறைவனின் வார்த்தைகளை அவற்றின் சூழலிலிருந்து விலக்கித் தங்களுடைய சொந்த விளக்கத்தைத் தருகிறார்கள். அவர்கள் வார்த்தைகளைத் திரித்து மூல இறைபோதனைகளுடன் எந்தத் தொடர்பும் இல்லாத ஒரு பொருளை உருவாக்குகின்றனர்.

"யூதர்கள் வேதத்திலிருந்து ஒரு பகுதி வழங்கப்பட்டோர்' என்பது அவர்களுக்கு இறை வேதத்தின் வார்த்தைகள் படிக்கக் கிடைத்தன; ஆனால், அவர்கள் இறை வேதத்தின்படி செயல்படவேண்டும் என்கிற அதன் அடிப்படை நோக்கத்திலிருந்து விலகியே இருந்தனர் என்பதைக் குறிக்கிறது,. வார்த்தைகளைப் பொறுத்தவரை, அவர்கள் வேதத்தைத் தாங்கியவர்களாகவே இருந்தனர். ஆனால் செயல்களைப் பொறுத்தவரை, அவர்கள் பொதுவான உலக நோக்கங்களைக் கொண்ட சமூகங்களின் பாதையை மேற்கொண்டனர். இன்னும் சொல்லப் போனால் சாதாரண மக்களோ உலகியல் நடவடிக்கைகளை உலகப்பற்று என்கின்ற பெயரில் செயல்படுத்துகின்றனர். ஆனால், இவர்களோ தம் உலகப்பற்றுக்கு இறை வேதத்திலிருந்து ஆதாரங்களை முன்வைக்கத் தொடங்கும் அளவுக்குத் துணிச்சலைக் கொண்டிருந்தனர்.

அதன் பின்னர் அவர்களின் கெடுவழி அவர்களுடைய மட்டத்தில் மட்டும் நின்றுவிடவில்லை. அவர்கள் தங்களை இறைவனுடைய மார்க்கத்தின் பிரதிநிதிகளாகக் கருதினர், எனவே யூதரல்லாத அரேபியர்கள் இறுதித் தூதரை ஆதரிக்கத் தொடங்கியபோது, யூதர்கள் தங்கள் சொந்த மதவாதத்தின் கண்ணியத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இறைத்தூதருக்கு எதிராக மாறினர். அவர்கள் அவருடைய வாழ்க்கையிலும் போதனைகளிலும் பல்வேறு குறைகளைக் கற்பிக்கத் தொடங்கினர், இதனால் அவர் இறைவனால் அனுப்பப்படவில்லை என்றும், தமது சொந்த உத்வேகத்தின் கீழ் இறைவனுடைய மார்க்கத்தின் கொடியைத் தாங்கியவராக எழுந்து நிற்கிறார் என்றும் கூறி மக்களை சந்தேகத்திற்கு ஆளாக்கத் தொடங்கினர். ஆனால்

இந்தப் போரில் இறைவன் பக்கச் சார்பற்றவனாக இல்லை. அவன் தனக்கு உண்மையானவர்களை ஆதரிப்பான். பகைவர்களுக்கு எதிராக அவர்களை வெற்றிபெறச் செய்வான்.

சத்தியம், அசத்தியம் ஆகியவற்றைப் பிரித்தறிய முடியாத அளவுக்குச் சென்றுவிடும் உணர்வின்மையின் விளைவே இறைவனின் 'சாபம்.'

يَاَيُّهَا الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ اٰمِنُوْا بِمَا نَزَّلْنَا مُصَدِّقًا لِّمَا
مَعَكُمْ مِّنْ قَبْلِ اَنْ نَّطْمِسَ وُجُوْهًا فَنَرُدَّهَا عَلٰٓى اَدْبَارِهَآ
اَوْ نَلْعَنَهُمْ كَمَا لَعَنَّآ اَصْحٰبَ السَّبْتِ ؕ وَ كَانَ اَمْرُ اللّٰهِ
مَفْعُوْلًا ﴿۴۷﴾ اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَ يَغْفِرُ مَا دُوْنَ
ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ ۚ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدِ افْتَرٰٓى اِثْمًا
عَظِيْمًا ﴿۴۸﴾ اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ يُزَكُّوْنَ اَنْفُسَهُمْ ؕ بَلِ اللّٰهُ
يُزَكِّيْ مَنْ يَّشَآءُ وَلَا يُظْلَمُوْنَ فَتِيْلًا ﴿۴۹﴾ اُنْظُرْ كَيْفَ يَفْتَرُوْنَ
عَلَى اللّٰهِ الْكَذِبَ ؕ وَ كَفٰى بِهٖٓ اِثْمًا مُّبِيْنًا ﴿۵۰﴾ ع ۸

[47]வேதமுடையோரே! நாம் (உங்கள்) முகங்களைச் சிதைத்து அவற்றை முதுகுப்புறம் திருப்புவதற்கு முன்னர், அல்லது சனிக்கிழமைக்காரர்களைச் சபித்ததைப்போல (உங்களை)ச் சபிப்பதற்கு முன்னர் நாம் அருளியதன்மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அது உங்களிடமுள்ள(வேதத்)தை உண்மைப் படுத்தக்கூடியதாகும். அல்லாஹ்வின் கட்டளை நிறைவேறியே தீரும். [48]உறுதியாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். அதனைத் தவிர(ப் பிற பாவம்) எதனையும் தான் விரும்புவோர்க்கு மன்னித்து விடுவான். அல்லாஹ்வுக்கு இணைவைப்பவர் மிகப்பெரும் பாவத்தைச் செய்தவராவார். [49]தம்மைத்தாமே தூய்மையானவர்கள் என்று கருதிக்கொள்வோரை நீர் கவனிக்கவில்லையா? மாறாக, தான் விரும்பியோரை அல்லாஹ்தான் தூய்மைப்படுத்துகிறான். அவர்கள்மீது மிகச்சிறு அளவும் அநீதியிழைக்கப்பட மாட்டாது. [50](நபியே!) இவர்கள் அல்லாஹ்வின்மீது எவ்வாறு பொய்யைப் புனைகிறார்கள் என்பதைப் பார்ப்பீராக! வெளிப்படையான பாவத்திற்கு இதுவே போதுமான சான்றாகும்.

சில நேரங்களில் மனிதன் ஒரு விஷயத்தைச் செவியுற்றும் உண்மையில் செவியுறுவதில்லை. அவன் அதைப் புரிந்துகொள்வதில் தீவிரமாக இல்லாதபோதும், அதன்படிச் செயல்பட ஆர்வமில்லாதபோதும் இது நிகழ்கிறது. இந்த மனநிலை அதன் இறுதிக் கட்டத்தை அடையும்போது, அவனது புரிதலற்ற நிலையில் அவன் தனது முக அடையாளங்கள் அழிக்கப்பட்டுவிட்டது போல் ஆகிவிடுகின்றான். இப்போது அவன் தனது தலையின் பின்புறத்திலிருந்து எதனையும் பார்ப்பது போலவும் கேட்பது போலவும் பார்க்கவும் கேட்கவும் செய்கிறான், அங்கே பார்ப்பதற்குக் கண்களோ, கேட்பதற்குக் காதுகளோ இருப்பதில்லை. உண்மையைப் புரிந்துகொள்வதில் மனிதன் இவ்வாறு குருடனாகவும் செவிடனாகவும் மாறிவிடுவது, சத்தியத்தின் மீது அவனது தொடர்ச்சியான அலட்சியத்தால் இறைவன் அவனுக்குத் தனது வழிகாட்டுதலை இல்லாமல் ஆக்கிவிட்டான் என்பதற்கான அறிகுறியாகும். இறைவன் அவனுக்குக் காதுகளைக் கொடுத்தான்; ஆனால் அவன் கேட்கவில்லை. இறைவன் அவனுக்குக் கண்களைக் கொடுத்தான்; ஆனால் அவன் பார்க்கவில்லை. எனவே இப்போது அவன் தன்னை ஆக்கிக் கொண்டபடியே இறைவனும் அவனை ஆக்கிவிடுகிறான். உணர்வின்மை அதன் உச்சக்கட்டத்தை அடையும் போது அது சிதைவின் வடிவமாகிறது.

நாங்கள் இறைத்தூதர்களின் வழித்தோன்றல்கள் என்றும், அதன் அடிப்படையில் எங்கள் சமூகம் புனிதச் சமூகம் என்றும் யூதர்கள் நம்பினர். அவர்கள் தங்கள் இனப்பெருமையையும் சமூக மேன்மையையும் உறுதிப் படுத்தும் எண்ணற்ற விவரிப்புகளையும் கதைகளையும் புனைந்து வைத்திருந்தார்கள். அவர்கள் தங்களின் இந்த ஆசைக் கற்பனைகளில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். யூதராக இருக்கும் ஒவ்வொருவனுக்கும் மறுமை வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையை அவர்கள் நிலைநிறுத்திக் கொண்டனர். அதன்படி எந்த யூதனும் ஒருபோதும் நரக நெருப்பில் தள்ளப்பட மாட்டான்.

"தம்மைத்தாமே தூய்மையானவர்கள் என்று கருதிக்கொள்வோரை நீர் கவனிக்கவில்லையா? மாறாகத் தான் விரும்பியோரை இறைவன்தான் தூய்மைப்படுத்துகிறான்' என்ற சொற்றொடர் அவர்களது கருத்தை மறுக்கிறது. இதன் பொருள், ஒரு குறிப்பிட்ட இனத்துடனும் கூட்டத்துடனும் அவர்கள் கொண்டிருக்கும் தொடர்பின் அடிப்படையில் சலுகையோ கௌரவமோ யாருக்கும் வழங்கப்படுவதில்லை. மாறாக, அது இறைவனின் நீதியான சட்டத்துடன் தொடர்புடையது. இறைவனுடைய சட்டத்தின்படி தம்மைக் கண்ணியத்திற்குத் தகுதியானவர் என்று நிரூபிக்கும் நபர்தான் கண்ணியத்திற்குரியவர். தமது செயல்களால் தம்மைத் தகுதியானவர்

என்று நிரூபிக்க முடியாத ஒருவர், ஒரு கூட்டத்துடன் இணைந்திருப்பதால் மட்டுமே கண்ணியத்திற்குரியவராக மாறிவிடமாட்டார்.

ஒரு குறிப்பிட்ட கூட்டத்தின் ஈடேற்றம் குறித்த நம்பிக்கை, யூதர்களால் நிறுவப்பட்டாலும் சரி, வேறு யாராலும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டாலும் சரி, முற்றிலும் தவறானது. அத்தகைய நம்பிக்கையை உருவாக்குபவர்கள் அதை இறைவனுடன் தொடர்புபடுத்துகிறார்கள். ஆனால் இது இறைவன் மீது சுமத்தப்படும் பொய். ஏனென்றால் இறைவன் அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையை ஒருபோதும் கற்பித்ததில்லை. இறைவன் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்குமிடையில் அவர்களின் கூட்டத்துடனான தொடர்பை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுத்திப் பார்க்கத் தொடங்கினால், அது அநீதியாகும், இறைவன் முற்றிலும் நீதியானவன்; அவன் ஒருபோதும் யாருக்கும் அநீதியிழைப்பதில்லை.

اَلَمۡ تَرَ اِلَى الَّذِيۡنَ اُوۡتُوۡا نَصِيۡبًا مِّنَ الۡكِتٰبِ يُؤۡمِنُوۡنَ بِالۡجِبۡتِ
وَالطَّاغُوۡتِ وَيَقُوۡلُوۡنَ لِلَّذِيۡنَ كَفَرُوۡا هٰٓؤُلَآءِ اَهۡدٰى مِنَ
الَّذِيۡنَ اٰمَنُوۡا سَبِيۡلًا ۝ اُولٰٓئِكَ الَّذِيۡنَ لَعَنَهُمُ اللّٰهُ ؕ وَمَنۡ
يَّلۡعَنِ اللّٰهُ فَلَنۡ تَجِدَ لَهٗ نَصِيۡرًا ۝ اَمۡ لَهُمۡ نَصِيۡبٌ مِّنَ
الۡمُلۡكِ فَاِذًا لَّا يُؤۡتُوۡنَ النَّاسَ نَقِيۡرًا ۝ اَمۡ يَحۡسُدُوۡنَ
النَّاسَ عَلٰى مَاۤ اٰتٰىهُمُ اللّٰهُ مِنۡ فَضۡلِهٖ ۚ فَقَدۡ اٰتَيۡنَاۤ اٰلَ
اِبۡرٰهِيۡمَ الۡكِتٰبَ وَالۡحِكۡمَةَ وَاٰتَيۡنٰهُمۡ مُّلۡكًا عَظِيۡمًا ۝ فَمِنۡهُمۡ
مَّنۡ اٰمَنَ بِهٖ وَمِنۡهُمۡ مَّنۡ صَدَّ عَنۡهُ ؕ وَكَفٰى بِجَهَنَّمَ سَعِيۡرًا ۝
اِنَّ الَّذِيۡنَ كَفَرُوۡا بِاٰيٰتِنَا سَوۡفَ نُصۡلِيۡهِمۡ نَارًا ؕ كُلَّمَا نَضِجَتۡ
جُلُوۡدُهُمۡ بَدَّلۡنٰهُمۡ جُلُوۡدًا غَيۡرَهَا لِيَذُوۡقُوا الۡعَذَابَ ؕ اِنَّ اللّٰهَ
كَانَ عَزِيۡزًا حَكِيۡمًا ۝ وَالَّذِيۡنَ اٰمَنُوۡا وَعَمِلُوا الصّٰلِحٰتِ
سَنُدۡخِلُهُمۡ جَنّٰتٍ تَجۡرِىۡ مِنۡ تَحۡتِهَا الۡاَنۡهٰرُ خٰلِدِيۡنَ فِيۡهَاۤ اَبَدًا ؕ
لَهُمۡ فِيۡهَاۤ اَزۡوَاجٌ مُّطَهَّرَةٌ ۫ وَّنُدۡخِلُهُمۡ ظِلًّا ظَلِيۡلًا ۝

[51]வேதத்திலிருந்து ஒரு பகுதி வழங்கப்பட்டோரை (நபியே!) நீர் கவனிக்கவில்லையா? அவர்கள் சிலைகளையும் தீய சக்திகளையும் நம்புகின்றனர். மறுப்பாளர்களைக் குறித்து ''இவர்கள்தாம் நம்பிக்கையாளர்களைவிட மிகச் சரியான பாதையில் இருக்கின்றனர்'' எனக் கூறுகின்றனர். [52]இத்தகைய மக்களைத்தான் அல்லாஹ் சபித்துள்ளான். அல்லாஹ்வால் சபிக்கப்பட்டவர்களுக்கு உதவிபுரிவோர் எவரையும் நீர் காண மாட்டீர். [53](இறைவனின்) ஆட்சியில் இவர்களுக்கு ஏதாவது பங்கு இருக்கிறதா? (அவ்வாறு இருக்குமானால்) இவர்கள் மக்களுக்கு எள்ளளவும் எதையும் அளிக்கமாட்டார்கள். [54]தன் அருளால் (மற்ற) மக்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளதற்காக (அவர்கள் மீது) இவர்கள் பொறாமை கொள்கின்றனரா? நாம் ஆப்ரஹாமின் குடும்பத்தாருக்கு வேதத்தையும் ஞானத்தையும் அருளினோம். நாம் அவர்களுக்கு மாபெரும் அரசாட்சியையும் வழங்கினோம். [55](எனினும்) அவர்களில் சிலர் (மட்டும்) அதன்மீது நம்பிக்கை கொண்டனர். சிலர் அதனைப் புறக்கணித்து விட்டனர். இத்தகையோருக்கு நரகத்தின் கொழுந்து விட்டெரியும் நெருப்பே பொருத்தமானதாகும். [56]எமது (வேத) வசனங்களை மறுப்போரை உறுதியாக நாம் நரகத்தில் புகுத்தி விடுவோம். அவர்களின் தோல்கள் கருகிவிடும்போதெல்லாம் வேதனையை அனுபவித்துக் கொண்டே இருப்பதற்காக (அவர்களுக்கு) வேறு தோல்களை மாற்றுவோம். உறுதியாக அல்லாஹ் யாவற்றினும் வல்லவன்; ஞானம் மிக்கவன். [57]நம்பிக்கைகொண்டு நற்செயல் புரிவோரை நாம் சொர்க்கச் சோலைகளில் நுழையச் செய்வோம். அவற்றிடையே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அங்கு அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பர். அங்கே அவர்களுக்குத் தூய்மையான இணைகளும் உண்டு. நாம் அவர்களை அடர்ந்த நிழல்களிலும் நுழையச் செய்வோம்.

இறைவேதத்தை வைத்திருக்கும் ஒரு சமூகம் வீழ்ச்சியடையும்போது, அது செயலுக்குப் பதிலாக சுயநம்பிக்கையின் மட்டத்தில் வாழத் தொடங்குகிறது. இதன் விளைவாக, மூடநம்பிக்கைகள் அவர்களிடையே அதிகமாகப் பரவுகின்றன. உண்மையான நற்செயல்கள் மூலம் பெறவேண்டிய நன்மையை மந்திரங்கள், கற்பனையான நம்பிக்கைகள், கீழ்த்தரமான மந்திரச் செயல்கள் மூலம் பெற முயற்சி செய்யத் தொடங்கிவிடுகிறது. இத்தகைய மக்கள் மார்க்கத்தின் சாரத்தைப் 'புனிதச் சொற்கள்' பற்றிய விஷயமாகவும்

'புனிதத் தொடர்புகள்' பற்றியதாகவும் புரிந்துகொள்கிறார்கள், அவற்றை வெறும் நாவினால் உச்சரிப்பதாலும், சம்பிரதாயத் தொடர்பாலும் அற்புத நிகழ்வுகள் வெளிப்படும் என்று எண்ணுகிறார்கள். அதே நேரத்தில், அவர்கள் நிலை எப்படி இருக்கிறதென்றால் தங்கள் நாவினால் மார்க்கத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டே, தங்கள் நடைமுறை வாழ்க்கையைச் சாத்தானிடம் ஒப்படைத்து விடுவதாக இருக்கிறது. உண்மை வாழ்க்கையில் அவர்கள் மனவிருப்பங்களையும், சாத்தானின் தூண்டுதல்களையும் பின்பற்றுகிறார்கள். ஆனால் அதேநேரத்தில் தங்கள்மீது மார்க்கத்தின் முகப்புச் சீட்டை ஒட்டிக்கொண்டு அவர்கள் செய்வதனைத்தையும் மார்க்கம் என்று எண்ணுகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் கலப்படமற்ற சத்தியத்திற்கான அழைப்பு அவர்களிடையே எழும்போது, அவர்கள் அதை மிகவும் அதிகமாக எதிர்ப்பவர்களாய் ஆகிவிடுகிறார்கள். ஏனென்றால் அது அவர்களின் மதத் தகுதியை மறுப்பதாக உணர்கிறார்கள். சத்தியத்தை மறுப்பவர்களின் இருப்பு அவர்களுக்கு அவ்வளவு சவாலாக இருப்பதில்லை. எனவே அவர்கள் மறுப்பாளர்களைக் கையாள்வதில் மென்மையாக இருக்கிறார்கள். ஆனால், சத்திய அழைப்பாளர்கள் மீது அவர்களின் இதயங்களில் எந்த மென்மையும் இருப்பதில்லை. நாம் மதத்தின் குத்தகையாளர்களாக இருக்கும்போது, வேறு ஒரு நபருக்கு மார்க்கத்தின் பிரதிநிதித்துவத் தகுதி எப்படிக் கிடைத்தது என்று அவர்களுக்குள் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிகிறது. இறைவன் தனது மார்க்கத்தின் பிரதிநிதியாக ஒருவரைத் தேர்ந்தெடுப்பது புறவயத் தோற்றங்களின் அடிப்படையில் அல்ல; ஒரு மனிதனின் உள்ளத்தின் திறனை அடிப்படையாகக் கொண்டுதான் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

மனிதன் இறைவனின் கருணையிலிருந்தும் அருட்கொடைகளிலிருந்தும் முற்றிலும் விலக்கி வைக்கப்பட்டுவிடுவதுதான் சாபம் என்பது. உணவும் தண்ணீரும் துண்டிக்கப்படும்போது ஒருவரின் உலக வாழ்க்கை எப்படி முடிவடைந்து விடுகிறதோ அது போல, இறைவனின் உதவியை இழக்கும் போது ஒருவரது சுயநம்பிக்கை சார்ந்த வாழ்க்கையும் முடிவடைந்து விடுகிறது. சபிக்கப்பட்ட மனிதன் நுட்பமான உணர்வுகளின் அடிப்படையில் முற்றிலும் அழிக்கப்பட்ட மனிதனாக மாறிவிடுகிறான். இதனால் அவனுக்குள் சத்தியம் – அசத்தியம் என வேறுபடுத்திப் பார்க்கும் திறன் எஞ்சியிருப்பதில்லை. மிகத் தெளிவான அறிகுறிகள் தோன்றிய பிறகும், அவனால் அதை ஒப்புக்கொள்ள முடிவதில்லை. அர்த்தமற்ற சர்ச்சைகளுக்கும் உண்மையான வாதங்களுக்கும் இடையில் அவன் வேறுபாடு பார்ப்பதில்லை.

اِنَّ اللّٰهَ يَاْمُرُكُمْ اَنْ تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰٓى اَهْلِهَا ۙ وَ اِذَا
حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ اَنْ تَحْكُمُوْا بِالْعَدْلِ ؕ اِنَّ اللّٰهَ نِعِمَّا
يَعِظُكُمْ بِهٖ ؕ اِنَّ اللّٰهَ كَانَ سَمِيْعًا بَصِيْرًا ﴿۵۸﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا
اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ وَاُولِى الْاَمْرِ مِنْكُمْ ۚ فَاِنْ تَنَازَعْتُمْ
فِىْ شَىْءٍ فَرُدُّوْهُ اِلَى اللّٰهِ وَالرَّسُوْلِ اِنْ كُنْتُمْ تُؤْمِنُوْنَ بِاللّٰهِ
وَالْيَوْمِ الْاٰخِرِ ؕ ذٰلِكَ خَيْرٌ وَّاَحْسَنُ تَاْوِيْلًا ﴿۵۹﴾ ع اَلَمْ تَرَ اِلَى ۵
الَّذِيْنَ يَزْعُمُوْنَ اَنَّهُمْ اٰمَنُوْا بِمَآ اُنْزِلَ اِلَيْكَ وَمَآ اُنْزِلَ مِنْ
قَبْلِكَ يُرِيْدُوْنَ اَنْ يَّتَحَاكَمُوْٓا اِلَى الطَّاغُوْتِ وَقَدْ اُمِرُوْٓا اَنْ
يَّكْفُرُوْا بِهٖ ؕ وَيُرِيْدُ الشَّيْطٰنُ اَنْ يُّضِلَّهُمْ ضَلٰلًا بَعِيْدًا ﴿۶۰﴾ وَ اِذَا
قِيْلَ لَهُمْ تَعَالَوْا اِلٰى مَآ اَنْزَلَ اللّٰهُ وَ اِلَى الرَّسُوْلِ رَاَيْتَ
الْمُنٰفِقِيْنَ يَصُدُّوْنَ عَنْكَ صُدُوْدًا ﴿۶۱﴾ ۚ فَكَيْفَ اِذَآ اَصَابَتْهُمْ
مُّصِيْبَةٌ ۢ بِمَا قَدَّمَتْ اَيْدِيْهِمْ ثُمَّ جَآءُوْكَ يَحْلِفُوْنَ ۖ بِاللّٰهِ
اِنْ اَرَدْنَآ اِلَّآ اِحْسَانًا وَّتَوْفِيْقًا ﴿۶۲﴾ اُولٰٓئِكَ الَّذِيْنَ يَعْلَمُ اللّٰهُ
مَا فِىْ قُلُوْبِهِمْ ۗ فَاَعْرِضْ عَنْهُمْ وَعِظْهُمْ وَقُلْ لَّهُمْ فِىْٓ اَنْفُسِهِمْ
قَوْلًا بَلِيْغًا ﴿۶۳﴾

[58] *(நம்பிக்கையாளர்களே!) உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட அடைக்கலப் பொருள்களை உரியவர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்றும் மக்களிடையே தீர்ப்பு வழங்கும்போது நியாயமான முறையில் தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். அல்லாஹ் வழங்கும் இந்த அறிவுரைகள் மிகச் சிறப்பானவை. உறுதியாக அல்லாஹ் அனைத்தையும் செவியுறுபவன்; உற்றுநோக்குபவன்.* [59] *(இறை) நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள் தூதருக்கும் உங்களில் அதிகாரம் வழங்கப்பட்டோருக்கும்*

கீழ்ப்படியுங்கள். உங்களிடையே ஏதாவதொன்றில் பிணக்கு ஏற்பட்டால் நீங்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கைகொண்டவர்களாயின் அதனை அல்லாஹ்விடமும் தூதரிடமும் கொண்டு செல்லுங்கள். இதுவே சிறந்ததும் நல்ல முடிவும் ஆகும். [60](நபியே!) ''உமக்கு அருளப்பட்டதையும் உமக்கு முன்னால் அருளப்பட்டதையும் (நாங்கள்) நம்பிக்கை கொண்டோம்'' என்று சாதிப்போரை நீர் பார்க்கவில்லையா? ஆனால், தீய சக்திகளை மறுத்து ஒதுக்குமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தும் அவர்கள் தீய சக்திகளிடமே தீர்ப்புத் தேடிச் செல்ல விரும்புகின்றனர். சாத்தானோ அவர்களை நல்வழியிலிருந்து மிகுதொலைவில் தள்ளிவிடவே விரும்புகிறான். [61]''அல்லாஹ் அருளிய வேதத்தை நோக்கியும் தூதரை நோக்கியும் வாருங்கள்'' என்று அவர்களிடம் கூறப்பட்டால் அந்நயவஞ்சகர்கள் உம்மைவிட்டு விலகிச் செல்வதையே நீர் காண்பீர். [62]அவர்களின் கைகள் தேடிக்கொண்ட (தீ)வினைகளின் விளைவாக அவர்களுக்கு ஒரு துன்பம் நேரும் போது (அவர்களின்) நிலைமை என்னவாகும்? அப்போது அவர்கள் உம்மிடம் வந்து ''அல்லாஹ்வின்மீது ஆணையாக, நன்மையையும் இணக்கத்தையும் தவிர வேறெதனையும் நாங்கள் விரும்பவில்லை'' என்று சத்தியம் செய்கின்றனர். [63]அவர்களின் உள்ளங்களில் உள்ளவற்றை அல்லாஹ் நன்கறிவான். எனவே நீர் அவர்களைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு அறிவுரை கூறுவீராக! அவர்களின் உள்ளங்களில் பதிந்து விடும்படியான சொற்களைக் கூறுவீராக!

ஒவ்வொரு பொறுப்பும் ஓர் அடைக்கலப் பொருளாகும். அதை முறையாக நிறைவேற்றுவது அவசியம். இதைப்போன்றே, ஒரு விஷயத்தை எதிர்கொள்ளும்போது – அது நண்பரைப் பற்றியதாயினும் சரி, பகைவனைப் பற்றியதாயினும் சரி – நீதியின் எதிர்பார்ப்பு எதுவோ அதையே செய்ய வேண்டும். அடைக்கலப் பொறுப்புறுதியும், நீதிக்கான முறைகளும் ஒருவரின், சொந்தப் பயன்களுக்கும், நன்மைகளுக்கும் எதிரானதாகத் தோன்றினாலும், அவர் நீதிக்கும் உண்மைக்குமான முறைகளின்மீதே நிலைத்திருக்க வேண்டும். ஏனென்றால் இறைவன் நமக்குக் கூறியிருப்பதில்தான் நன்மை இருக்கிறது, நம் சொந்த விருப்பத்தில் அல்ல. நம்பிக்கையாளர்களின் ஆட்சி நிறுவப்பட்டிருக்கும் இடங்களில், நம்பிக்கையாளர்கள் அதன் சட்டங்களைப் பாதுகாக்க வேண்டும். அரசு விவகாரங்களில் அமைதியான முறையில் பங்கேற்க வாய்ப்பிருந்தால், நம்பிக்கையாளர்கள் அதில் பங்கேற்க வேண்டும். அத்தகைய வாய்ப்புகள் இல்லாத நிலையில், அதாவது, நம்பிக்கையாளர்களின் ஆட்சி நிறுவப்படாத இடங்களில், அவர்கள் தங்களுக்குள் நம்பகமான நபர்களைத் தங்கள் தலைவர்களாக

ஆக்கிக் கொண்டு, அவர்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி மார்க்கம் சார்ந்த வாழ்க்கையை வாழ வேண்டும். ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்படும் போது, இறைவனிடமிருந்தும் தூதரிடமிருந்தும் வரும் முடிவை ஏற்றுக்கொள்வது ஒவ்வொரு தரப்பினரின் மீதும் கடமையாகும். அனைவருக்கும் கருத்து வேறுபாட்டிற்கான சுதந்திரம் உண்டு.ஆனால், கூட்டு முடிவை மீற யாருக்கும் உரிமை இல்லை. ஒரு கூட்டமைப்பு என்பது நம்பிக்கையாளர்களின் சமூகத்திற்கான கூட்டுத் தேவையாகும்.

மதீனாவின் ஆரம்ப நாட்களில், சர்ச்சைக்குரிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஒரே நேரத்தில் இரண்டு நீதிமன்றங்கள் செயல்பட்டு வந்தன. ஒன்று, ஏற்கனவே நடந்து கொண்டிருந்த யூதத் தலைவர்களுடையது; இரண்டாவது, இறைத்தூதரின் புலப்பெயர்வுக்குப் பிறகு நிறுவப்பட்டது. நம்பிக்கையாளர்களில், தங்கள் சொந்த நலன்களைத் தியாகம் செய்து மார்க்கப் பற்றுள்ளவர்களாக மாறத் தயாராக இல்லாதவர்கள், தங்கள் வழக்கு பலவீனமாக இருக்கும் நிலையில், இறைத்தூதரின் நீதிமன்றத்திலிருந்து சாதகமான முடிவைப் பெற முடியாது என்று அஞ்சும்போது, யூதனான கஅப் பின் அஷ்ரஃபின் நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுவார்கள். இது முற்றிலும் நம்பிக்கைக்கு எதிரானது. மனிதன் இறைவனின் முடிவில் மனநிறைவு அடையாமல், தனது சொந்த விருப்பத்திற்கேற்ப முடிவை வேண்டுபவனாய் இருந்தால், தான் நம்பிக்கை கொண்டவன் என்ற அவனது கூற்று பொய்யாகும். அவன் தனது அணுகுமுறையை நியாயப்படுத்த எத்தனை அழகான வார்த்தைகளைத் தன்னிடம் வைத்திருந்தாலும்சரி. இருப்பினும், அத்தகைய நபர்களுடன் மோதலில் ஈடுபடாமல் அவர்களுக்குத் திறம்பட நல்லுபதேசம் வழங்கும் பணி அதன் பின்னும் தொடர வேண்டும்.

وَمَآ اَرۡسَلۡنَا مِنۡ رَّسُوۡلٍ اِلَّا لِيُطَاعَ بِاِذۡنِ اللّٰهِ ؕ وَلَوۡ اَنَّهُمۡ
اِذۡ ظَّلَمُوۡۤا اَنۡفُسَهُمۡ جَآءُوۡكَ فَاسۡتَغۡفَرُوا اللّٰهَ وَاسۡتَغۡفَرَ
لَهُمُ الرَّسُوۡلُ لَوَجَدُوا اللّٰهَ تَوَّابًا رَّحِيۡمًا ﴿۶۴﴾ فَلَا وَرَبِّكَ
لَا يُؤۡمِنُوۡنَ حَتّٰى يُحَكِّمُوۡكَ فِيۡمَا شَجَرَ بَيۡنَهُمۡ ثُمَّ لَا يَجِدُوۡا
فِىۡۤ اَنۡفُسِهِمۡ حَرَجًا مِّمَّا قَضَيۡتَ وَيُسَلِّمُوۡا تَسۡلِيۡمًا ﴿۶۵﴾ وَلَوۡ اَنَّا
كَتَبۡنَا عَلَيۡهِمۡ اَنِ اقۡتُلُوۡۤا اَنۡفُسَكُمۡ اَوِ اخۡرُجُوۡا مِنۡ دِيَارِكُمۡ مَّا
فَعَلُوۡهُ اِلَّا قَلِيۡلٌ مِّنۡهُمۡ ؕ وَلَوۡ اَنَّهُمۡ فَعَلُوۡا مَا يُوۡعَظُوۡنَ بِهٖ

لَكَانَ خَيْرًا لَّهُمْ وَ اَشَدَّ تَثْبِيْتًا ﴿٦٦﴾ وَّ اِذًا لَّاٰتَيْنٰهُمْ مِّنْ لَّدُنَّاۤ
اَجْرًا عَظِيْمًا ﴿٦٧﴾ وَّ لَهَدَيْنٰهُمْ صِرَاطًا مُّسْتَقِيْمًا ﴿٦٨﴾ وَ مَنْ
يُّطِعِ اللّٰهَ وَ الرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ
مِّنَ النَّبِيّٖنَ وَ الصِّدِّيْقِيْنَ وَ الشُّهَدَآءِ وَ الصّٰلِحِيْنَ ۚ وَ حَسُنَ
اُولٰٓئِكَ رَفِيْقًا ﴿٦٩﴾ ذٰلِكَ الْفَضْلُ مِنَ اللّٰهِ ؕ وَ كَفٰى بِاللّٰهِ عَلِيْمًا ﴿٧٠﴾ ع

[64]எந்தத் தூதரையும் அல்லாஹ்வின் கட்டளைப்படி மக்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதற்காகவே அன்றி (வேறு நோக்கத்தில்) நாம் அனுப்பவில்லை. (நபியே!) மக்கள் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்ளும்போதெல்லாம் உம்மிடம் வந்து அல்லாஹ்வின் மன்னிப்பை வேண்ட, தூத(ராகிய நீ)ரும் அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரினால் உறுதியாக அவர்கள் அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன் என்பதைக் கண்டு கொள்வார்கள். [65](நபியே!) உம் இறைவனின் மீது ஆணையாக, அவர்கள் தங்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்குகளுக்கு உம்மை நீதிபதியாக ஏற்றுப் பின்னர் உமது தீர்ப்பைக் குறித்துத் தங்களது உள்ளங்களில் எந்தக் குறையும் இன்றி அதனை முழு மனதாக ஏற்றுக்கொள்ளும் வரை அவர்கள் ஒருபோதும் நம்பிக்கையாளர்களாக முடியாது. [66]''உங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்ளுங்கள்'' என்றோ ''உங்கள் வீடுகளை விட்டு வெளியேறி விடுங்கள்'' என்றோ நாம் (நயவஞ்சகர்களாகிய) அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தால் அவர்களில் மிகு சிலரே (அவ்வாறு) செய்திருப்பார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரையின்படி செயல்பட்டிருந்தால் அது அவர்களுக்குச் சிறந்ததாகவும் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாகவும் இருந்திருக்கும். [67]அப்போது நாம் அவர்களுக்கு எம்மிடம் இருந்து மாபெரும் கூலியை வழங்கியிருப்போம்; [68](அவர்களுக்கு) நேர்வழியைக் காட்டியிருப்போம். [69]அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படிகின்றவர்கள் (மறுமையில்) அல்லாஹ்வின் அருளைப் பெற்றவர்களான தூதர்கள், உண்மையாளர்கள், சாட்சியாளர்கள், நல்லோர்கள் ஆகியோருடன் இருப்பர். அவர்களது தோழமை எவ்வளவு சிறப்பானது! [70]இது அல்லாஹ்வின் அருளாகும். (இத்தகையோரை அறிந்துகொள்ள) அல்லாஹ்வின் முடிவற்ற அறிவே போதுமானதாகும்.

இறைத்தூதர் வருவதெல்லாம் மக்கள் வெறுமனே அவரது பற்றாளர்களாக மாறி, அவருக்கு முன் சொற்களின் பூங்கொத்துகளை வழங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக அல்ல. மனிதன் அவரிடமிருந்து வாழ்க்கை முறையைக் கற்றுக்கொள்ளவும், அதை நடைமுறையில் கடைப்பிடிக்கவும்தான் இறைத்தூதர் வருகிறார். இந்தச் செயல்முறையில், மனிதன் எந்த அளவுக்கு உறுதியானவனாக இருக்க வேண்டுமென்றால், நெருக்கடியான சூழ்நிலைகளிலும்கூட இறைத்தூதருக்குக் கீழ்ப்படிவதிலிருந்து விலகக் கூடாது. இரண்டு பேரின் நலன்கள் ஒன்றோடொன்று மோதும் போதும் இருவர்க்கும் இடையே கசப்பு ஏற்பட்டாலும், மனிதன் தனது மனவிருப்பத்தை அடக்கி, அந்நேரத்திலும் விரும்பியே தூதரின் வழிமுறையில் தன்னைப் பிணைத்துக்கொள்ள வேண்டும். ஒரு சர்ச்சை ஏற்படும்போது தூதரின் வழிகாட்டுதலை யார் ஏற்றுக்கொள்கிறாரோ அவரே தூதர்மீது நம்பிக்கை கொண்டவர் ஆவார். தூதரின் வழிமுறை அவனது சொந்த ஆசைக்கும், நன்மைகளுக்கும் முரணாக இருந்தாலும், அவன் அதைத் தனது இதயப்பூர்வமான சம்மதத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவன் தனது உணர்வுகளை எந்த அளவுக்கு உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டுமென்றால், அவனால் எப்போதாவது ஒரு தவறு நேர்ந்துவிட்டால், உடனே திடுக்கிட்டு எழ வேண்டும்; அவன் தூதரைக் கைவிட்டுச் சாத்தானைப் பின்தொடர்ந்துவிட்டான் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்; அவன் உடனடியாக மீளவேண்டும்; மன்னிப்பை நாட வேண்டும். உளவியல் அதிர்ச்சிகள் நேரும்போது தனது மார்க்கத்தில் உறுதியாக இருக்க முடியாத ஒருவன், தனது தாய்நாட்டை விட்டு வெளியேறித் தனது உயிரையும் சொத்தையும் தியாகம் செய்து தனது நம்பிக்கையை நிரூபிக்க வேண்டியிருக்கும் மிகக் கடுமையான சூழ்நிலைகளிலும் உறுதியாக இருப்பான் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

சுயநலத்தாலும், வசதிக்கேற்ப வாழ்க்கையை வாழ்வதன் விளைவாகவும் ஒருவர் இழக்கும் மிகப்பெரிய பொருள் நேர்வழியாகும். அதாவது, அவன் தனது இறைவனையே அடைந்து விடும் வரை. அந்தப் பாதையைப் பற்றி மனிதன் நடந்துகொண்டே இருக்க வேண்டும். இந்தப் பாதை இறைவனின் வேதத்திலும் இறைத்தூதரின் வழிமுறைகளிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் மனிதன் தனது சிந்தனையை முன்னெச்சரிக்கைகளுக்குக் கட்டுப்படுத்தும்போது, தெளிவுபடுத்தப்பட்ட பிறகும் அவனால் நேரான பாதையைக் காண முடிவதில்லை. அவன் மார்க்கத்தை வாசிக்கும்போது, கலப்படமற்ற வடிவில் அல்லாமல், தனது ஆசைகள், ஆர்வங்கள் ஆகியவற்றின் கீழ் வாசிக்கிறான். அவனது மனதில் சூழ்நிலைகளுக்கேற்ப மார்க்கம் பற்றிய ஒரு சுய கருத்தாக்கம் நிலை பெற்றுவிடுகிறது. அவன் இறைநம்பிக்கை இருப்பதாக உரிமை கோரியும், இறைநம்பிக்கையை இழந்து

விடுகிறான். எல்லா வகையான வசதிக்கேற்ற நலன்களையும் தாண்டி உயர்ந்து நின்று மார்க்கத்தைத் தழுவியவர்கள் குடியமர்த்தப்படும் சொர்க்கத்திற்கு இப்படிப்பட்டவர்கள் எப்படித் தகுதியானவர்களாக இருக்க முடியும்? அவர்கள் இறைவனுடனான வாக்குறுதியை நிறைவேற்றுபவர்கள்; இறுதிவரை சத்தியத்திற்கு சாட்சியம் அளிப்பவர்கள்; அவர்களின் வாழ்க்கை மிகவும் தூய்மையானது.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا خُذُوْا حِذْرَكُمْ فَانْفِرُوْا ثُبَاتٍ
اَوِ انْفِرُوْا جَمِيْعًا ﴿٧١﴾ وَاِنَّ مِنْكُمْ لَمَنْ لَّيُبَطِّئَنَّ ۚ فَاِنْ اَصَابَتْكُمْ
مُّصِيْبَةٌ قَالَ قَدْ اَنْعَمَ اللّٰهُ عَلَيَّ اِذْ لَمْ اَكُنْ مَّعَهُمْ شَهِيْدًا ﴿٧٢﴾
وَلَئِنْ اَصَابَكُمْ فَضْلٌ مِّنَ اللّٰهِ لَيَقُوْلَنَّ كَاَنْ لَّمْ تَكُنْۢ بَيْنَكُمْ
وَبَيْنَهٗ مَوَدَّةٌ يّٰلَيْتَنِيْ كُنْتُ مَعَهُمْ فَاَفُوْزَ فَوْزًا عَظِيْمًا ﴿٧٣﴾
فَلْيُقَاتِلْ فِيْ سَبِيْلِ اللّٰهِ الَّذِيْنَ يَشْرُوْنَ الْحَيٰوةَ الدُّنْيَا
بِالْاٰخِرَةِ ؕ وَمَنْ يُّقَاتِلْ فِيْ سَبِيْلِ اللّٰهِ فَيُقْتَلْ اَوْ يَغْلِبْ فَسَوْفَ
نُؤْتِيْهِ اَجْرًا عَظِيْمًا ﴿٧٤﴾ وَمَا لَكُمْ لَا تُقَاتِلُوْنَ فِيْ سَبِيْلِ
اللّٰهِ وَالْمُسْتَضْعَفِيْنَ مِنَ الرِّجَالِ وَالنِّسَآءِ وَالْوِلْدَانِ
الَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَاۤ اَخْرِجْنَا مِنْ هٰذِهِ الْقَرْيَةِ الظَّالِمِ
اَهْلُهَا ۚ وَاجْعَلْ لَّنَا مِنْ لَّدُنْكَ وَلِيًّا ۙ وَّاجْعَلْ لَّنَا مِنْ لَّدُنْكَ
نَصِيْرًا ﴿٧٥﴾ ؕ اَلَّذِيْنَ اٰمَنُوْا يُقَاتِلُوْنَ فِيْ سَبِيْلِ اللّٰهِ ۚ وَالَّذِيْنَ
كَفَرُوْا يُقَاتِلُوْنَ فِيْ سَبِيْلِ الطَّاغُوْتِ فَقَاتِلُوْۤا اَوْلِيَآءَ الشَّيْطٰنِ ۚ
اِنَّ كَيْدَ الشَّيْطٰنِ كَانَ ضَعِيْفًا ﴿٧٦﴾

[71](ஓரிறை)நம்பிக்கையாளர்களே! நீங்கள் (போருக்குப் புறப்படும்போது) முன்னெச்சரிக்கையாக இருந்துகொள்ளுங்கள். பின்னர்(ச் சூழ்நிலைக்கேற்பச் சிறு சிறு) அணிகளாகவோ (அனைவரும்) ஓரணியாகவோ புறப்படுங்கள். [72]உங்களில் பின்தங்கி

விடக்கூடிய சிலரும் இருக்கின்றனர். உங்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் ''அல்லாஹ் என்மீது அருள்புரிந்து விட்டான் (அதனால்) அவர்களுடன் நான் கலந்துகொள்ளவில்லை'' என்று (பின்தங்கிய நயவஞ்சகன்) கூறுகிறான். [73](மாறாக) அல்லாஹ்விடமிருந்து ஏதேனும் அருள் உங்களுக்குக் கிடைத்தால், (இதற்குமுன்) உங்களுக்கும் அவனுக்குமிடையில் எந்த நட்பும் இருந்ததில்லை என்பதுபோல ''நானும் இவர்களுடன் இருந்திருந்தால் மாபெரும் வெற்றியைப் பெற்றிருப்பேனே!'' என்று அவன் கூறுகின்றான். [74]எனவே மறுமை(பேற்று)க்காக இவ்வுலக வாழ்வை விற்பவர்கள் இறைவழியில் போர் புரியட்டும். எவர் இறைவழியில் போரிட்டு அதில் கொல்லப்படுகிறாரோ அல்லது வெற்றி பெறுகிறாரோ அவருக்கு நாம் பெரும் கூலியை வழங்குவோம்.[75](எதிரிகள் வாழும் பகுதியில் சிக்கிக் கொடுமைக்கு உட்படுத்தப்படும்) வலுவற்ற ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்காக இறைவழியில் போர் புரியாமலிருக்க உங்களுக்கென்ன நேர்ந்தது? (கொடுமைக்கு ஆளாகும்) அவர்களோ, ''எங்கள் இறைவா! தீவினையாளர்கள் வாழ்கின்ற இந்த ஊரிலிருந்து எங்களை வெளியேற்றுவாயாக! எங்களுக்கு உன்னிடமிருந்து ஒரு பாதுகாவலரை ஏற்படுத்துவாயாக! எங்களுக்கு உன்னிடமிருந்து ஓர் ஆதரவாளரையும் ஏற்படுத்துவாயாக!'' என்று இறைஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். [76]நம்பிக்கையாளர்கள் இறைவழியில் போரிடுகின்றனர். மறுப்பாளர்கள் சாத்தானுக்காகப் போரிடுகின்றனர். எனவே (நம்பிக்கையாளர்களே!) சாத்தானின் கூட்டாளிகளுடன் போரிடுங்கள். உறுதியாக சாத்தானின் சூழ்ச்சி மிகவும் வலுவற்றதே ஆகும்.

தற்போதைய உலகம் சோதனைகளின் உலகம். எனவே இங்கு அனைவருக்கும் சுதந்திரமாகச் செயல்பட வாய்ப்பு உள்ளது. இங்கே, தீவினையாளர்கள் இறைவனின் அடியார்களைத் தங்கள் கொடுமைகளுக்கு இலக்காக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் அதே நேரத்தில், இறைவனின் நல்லடியார்கள் தீவினையாளர்களால் கொடுக்கப்படும் துன்பங்களைப் பொருட்படுத்தாமல் உறுதியாக இருப்பதன் மூலம் தாங்கள் நம்பிக்கைக்காகக் கொடுத்த வாக்குறுதியை நிரூபிக்க வேண்டியிருக்கிறது. இறைவனின் பகைவர்களுக்கு எதிராக நம்பிக்கையாளர்கள் எல்லா நேரங்களிலும் விழிப்புடன் இருக்க வேண்டியுள்ளது. அவர்கள் அமைதியான உத்திகள், போர் ஏற்பாடுகள் ஆகியவற்றின் மூலம் தங்கள் சொந்தப் பாதுகாப்பை முழுமையாக நிர்வகிக்க வேண்டும். அவர்கள் தங்கள் பகைவர்களைத் தனித்தனியாகவும் ஒன்றுசேர்ந்தும் எதிர்கொள்ள வேண்டும். அதே

நேரத்தில், நம்பிக்கையாளர்களின் அணிகளுக்குள்ளேயே, உஹுதுப் போரில் தெளிவாகத் தெரிந்தது போல, உலக இழப்பின் ஆபத்தை எதிர்கொள்ளாமலேயே மறுமைக்காகப் பேரம் பேச விரும்பும் மக்களும் இருப்பதுண்டு. இப்படிப்பட்ட மக்களின் நிலைமை எத்தகையது? அவர்கள் உலகப் பயனுள்ள அம்சங்களைக் கருதி உலகியல் நன்மைக்கான செயல்களில், நிறையப் பங்கேற்கிறார்கள். உலகியல் ரீதியாக இழப்பு ஏற்படும் அச்சம் இருந்தால், மார்க்கப் பணியிலிருந்து விலகுவதற்கு அழகான சாக்குப் போக்கைக் கண்டுபிடித்துக்கொள்கிறார்கள். அவர்களின் இந்த மனநிலைக்குக் காரணம், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட போதிலும் நடைமுறையில் அவர்கள் தற்போதைய உலகத்தின் மட்டத்தில் வாழ்கிறார்கள் என்பதே. மறுமைதான் உண்மையிலேயே அவசியம் என்று அவர்கள் நம்பினால், உலக வெற்றியும் தோல்வியும் அவர்களுக்குப் பொருட்படுத்தத்தக்கவையாக இருக்க மாட்டா. இறைவழியில் உண்மையான அறப்போராளி எனப்படுபவன் மறுமையை மட்டுமே விரும்புபவன்; உலக இலாபங்களையும் நன்மைகளையும் தியாகம் செய்து இறைவனின் பாதையில் முன்னேறுபவன், அவன் ஒரு 'காயமு'ம் ஏற்படாமல், பெரும் அங்கீகாரங்கள் மட்டும் கிடைக்கக்கூடிய – சில வார்த்தைகள் பேசினால் புகழையும் கௌரவத்தையும் பெற்றுத் தரக்கூடிய ஓர் அறப்போரின் வீரனாக இருக்க விரும்பாதவன்.

இறைவனுக்காக மட்டுமே எழுந்து நிற்கும் இறைவனின் அடியானுக்கு நேரிடும் போராட்டம்தான் இறைவனின் பாதையில் நடக்கும் போர். அவன் மக்களை நரகத்திலிருந்து எச்சரிக்கவும், சொர்க்கத்தை நோக்கி அழைக்கவும் செய்பவன். அவன் யாருடனும் பொருள்சார்ந்த – அரசியல் சார்ந்த தகராறுகளில் ஈடுபடாதவன். ஆனாலும் தீவினையாளர்கள் அவனுடன் சண்டையிட எழுவார்கள். சாத்தானின் பாதையில் போரிடுபவர்கள் யாரெனில் இறையடியானின் வார்த்தைகளால் அவர்களின் தன்முனைப்பின் மீது பேரிடி விழுவதால் அவனுடன் சண்டையிடுபவர்கள். அவனுடைய செய்தி பரவுவதில் அவர்களுக்குத் தங்கள் சொந்தப் பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றிற்குரிய ஆபத்து தெரிகிறது. அவனது வாதங்களை மறுக்க அவர்களிடம் ஆக்ரோஷத்தைத்(பலவந்தம்) தவிர வேறு எந்த வாதமும் இல்லை.

اَلَمۡ تَرَ اِلَى الَّذِيۡنَ قِيۡلَ لَهُمۡ كُفُّوۡۤا اَيۡدِيَكُمۡ وَ اَقِيۡمُوا الصَّلٰوةَ وَ اٰتُوا الزَّكٰوةَ‌ۚ فَلَمَّا كُتِبَ عَلَيۡهِمُ الۡقِتَالُ اِذَا فَرِيۡقٌ مِّنۡهُمۡ يَخۡشَوۡنَ النَّاسَ كَخَشۡيَةِ اللّٰهِ اَوۡ اَشَدَّ خَشۡيَةً‌ۚ وَقَالُوۡا رَبَّنَا لِمَ

كُتِبَ عَلَيْنَا الْقِتَالَ ۚ لَوْلَآ اَخَّرْتَنَآ اِلٰٓى اَجَلٍ قَرِيْبٍ ۗ قُلْ
مَتَاعُ الدُّنْيَا قَلِيْلٌ ۚ وَالْاٰخِرَةُ خَيْرٌ لِّمَنِ اتَّقٰى ۣ وَلَا تُظْلَمُوْنَ
فَتِيْلًا ﴿٧٧﴾ اَيْنَ مَا تَكُوْنُوْا يُدْرِكْكُّمُ الْمَوْتُ وَلَوْ كُنْتُمْ فِيْ
بُرُوْجٍ مُّشَيَّدَةٍ ۗ وَاِنْ تُصِبْهُمْ حَسَنَةٌ يَّقُوْلُوْا هٰذِهٖ مِنْ
عِنْدِ اللّٰهِ ۚ وَاِنْ تُصِبْهُمْ سَيِّئَةٌ يَّقُوْلُوْا هٰذِهٖ مِنْ عِنْدِكَ ۗ قُلْ
كُلٌّ مِّنْ عِنْدِ اللّٰهِ ۗ فَمَالِ هٰٓؤُلَآءِ الْقَوْمِ لَا يَكَادُوْنَ يَفْقَهُوْنَ
حَدِيْثًا ﴿٧٨﴾ مَآ اَصَابَكَ مِنْ حَسَنَةٍ فَمِنَ اللّٰهِ ۘ وَمَآ اَصَابَكَ مِنْ سَيِّئَةٍ
فَمِنْ نَّفْسِكَ ۗ وَاَرْسَلْنٰكَ لِلنَّاسِ رَسُوْلًا ۗ وَكَفٰى بِاللّٰهِ شَهِيْدًا ﴿٧٩﴾

[77]***''(போர் கடமையாக்கப்படாத காலத்தில் போர்புரிவதிலிருந்து) உங்கள் கைகளைத் தடுத்துக்கொள்ளுங்கள்; தொழுகையைக் கடைப்பிடியுங்கள்; கடமையாக்கப்பட்ட கொடையைக் கொடுத்து வாருங்கள்'' என்று யாருக்குக் கட்டளையிடப்பட்டதோ அவர்களை (நபியே!) நீர் காணவில்லையா? பின்னர் அவர்களுக்குப் போர் கடமையாக்கப்பட்டபோது அவர்களில் ஒரு பிரிவினர் அல்லாஹ்வுக்கு அஞ்சுவது போல அல்லது அதைவிட மிகுதியாக மனிதர்களுக்கு அஞ்சுகின்றனர். ''இறைவா! எங்கள் மீது ஏன் போரைக் கடமையாக்கினாய்? நீ எங்களுக்குச் சிறிது காலநீட்டிப்பு வழங்கியிருக்கக் கூடாதா?'' என்று அவர்கள் கேட்கின்றனர். நீர் கூறும்: ''இவ்வுலக இன்பம் அற்பமானதே! இறையச்சமுடையோருக்கு மறுமையே சிறந்ததாகும். உங்கள்மீது மிகச்சிறு அளவும் அநீதி இழைக்கப்படமாட்டாது. [78]நீங்கள் எங்கிருந்தபோதிலும் சாவு உங்களை அடைந்தே தீரும். நீங்கள் உறுதியான கோட்டைக்குள் இருந்தாலும் சரியே.'' (போருக்குச் சென்ற நயவஞ்சகர்களான) அவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால், ''(நபியே!) இது அல்லாஹ்விடமிருந்து வந்தது'' என்று கூறுகின்றனர். அவர்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால், ''இது உம்மால்தான் ஏற்பட்டது'' என்று கூறுகின்றனர். ''அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து வருபவவைதாம்'' என்று (நபியே!) நீர் கூறும். இந்த மக்களுக்கு என்ன நேர்ந்தது? எதையும் இவர்கள் புரிந்து கொள்வதில்லையே. [79]''(மனிதனே!) உனக்கு ஏதேனும்***

நன்மை ஏற்பட்டால் அது அல்லாஹ்விடமிருந்து ஏற்பட்டதேயாகும். உனக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது (நீ இழைத்த தவறான செயல்கள் காரணமாக) உன்னால்தான் ஏற்பட்டது'' (என்றும் நபியே! நீர் கூறுவீராக!) நாம் உம்மை மனித குலத்துக்குத் தூதராகவே அனுப்பியுள்ளோம். அல்லாஹ்வின் சாட்சியமே போதுமானது.

புலப்பெயர்வுக்கு முன்பு, மக்காவில் இஸ்லாத்தின் பகைவர்கள் நம்பிக்கையாளர்களைப் பெரிதும் துன்புறுத்திக் கொண்டிருந்தனர். அடித்தல், உதைத்தல், அவர்களின் பொருளாதாரத்தை அழித்தல், மக்காவின் புனிதப் பள்ளிவாசலில் தொழுவதைத் தடுத்தல், அழைப்புப் பணிக்கு அனுமதி மறுத்தல், வீடுகளை விட்டு வெளியேறும்படி கட்டாயப்படுத்துதல் இவை அனைத்தையும் நம்பிக்கையாளர்களுக்கு எதிராகச் செய்வதை அவர்கள் நியாயப்படுத்தி வைத்திருந்தனர். இஸ்லாத்தைத் தழுவியவர்கள் இஸ்லாத்தைக் கைவிட்டுத் தங்கள் மூதாதையர் மதத்திற்குத் திரும்ப வேண்டும் என்று எல்லா வகையான அழுத்தங்களையும் கொடுத்தார்கள். இஸ்லாத்தின் பகைவர்களின் இந்த ஆக்கிரமிப்பு, நம்பிக்கையாளர்கள் அவர்களுக்கு எதிராக வாளை எடுக்கக் கொள்கையளவில் நியாயப்படுத்தியது. எனவே, அவர்கள் இறைத்தூதரிடம் திரும்பத் திரும்பப் போரிட அனுமதி கேட்டார்கள். ஆனால் போர் புரிய எனக்கு உத்தரவிடப்படவில்லை என்றும் பொறுமையைக் கடைப்பிடித்துத் தொழுகையையும் கடமையாக்கப்பட்ட கொடையையும் நிறைவேற்றி வருவீர்களாக என்றும் இறைத்தூதர் எப்போதும் கூறிவந்தார்கள். இதற்குக் காரணம், உரிய நேரம் வருவதற்கு முன்பே எந்த ஒரு நடவடிக்கையையும் எடுப்பது இஸ்லாத்தின் வழி அல்ல என்பதுதான். மக்காவில் இருந்த நம்பிக்கையாளர்களுக்குத் தங்கள் பகைவர்களுக்கு எதிராகத் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப் போதுமான பலம் இல்லை. அந்த நேரத்தில், மக்காவாசிகளுக்கு எதிராக வாளை எடுப்பது தம்முடைய துன்பத்தை இன்னும் அதிகரித்துக்கொள்வதற்குச் சமமாக இருந்தது. அது தனிப்பட்ட அட்டூழியங்களை மட்டுமே செய்துகொண்டிருந்த ஆற்றல்வாய்ந்த பகைவனுக்குத் தன் சார்பாக முழு அளவிலான போரைத் தொடங்குவதை நியாயப்படுத்தும் வாய்ப்பு வழங்குவதாகும். நடைமுறை நடவடிக்கை எப்போதும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னரே எடுக்கப்படும். இதற்கு முன், நம்பிக்கையாளர்களிடமிருந்து தனிப்பட்ட நிலையில் கட்டளைகளை நிறைவேற்றும் படி மட்டுமே கோரப்படுகின்றது, அவை எல்லா சூழ்நிலைகளிலும் மனிதனுக்கு அவசியமானவை. அதாவது, இறைவனுடன் உறவை ஏற்படுத்துதல், அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுதல், மார்க்கப் பாதையில் ஏற்படும் சிரமங்களைத் தாங்கிக் கொள்ளுதல் போன்றவை.

குர்ஆனில் தியாகத்திற்கான கட்டளைகள் இறக்கியருளப்பட்டபோது, சுயநலவாதிகள் தங்கள் வாழ்க்கைத் திட்டம் சிதைந்து போவதைக் கண்டார்கள். அவர்கள் தங்கள் பலவீனத்தை மறைக்க விதவிதமான கருத்துக்களைப் பேச ஆரம்பித்தார்கள். உஹுதில் தோல்வியுற்றபோது, அது இறைத்தூதரின் தவறான திட்டமிடலின் விளைவு என்று கூறி இறைத்தூதரின் வழிகாட்டுதலைப் பற்றி மக்கள் அவநம்பிக்கை கொள்ளும்படி செய்தனர். நன்மை பயக்கும் விஷயங்களைச் சுட்டி, 'இது இறைவனின் அருள்' என்று கூறிக்கொண்டு தங்கள் கீழ்ப்படிதலை வெளிப்படுத்தினர், நடைமுறை இஸ்லாத்தைத் தவிர்ப்பதற்காக அவர்கள் தூதரைத் தவறாகக் காட்டினர். இறைவனை ஏற்றுக்கொண்ட பின்பும் மனிதன் தனது சொந்த விருப்பங்களைத் தொடர்ந்து பின்பற்றுவது சாத்தியம்தான். ஆனால் இறைவனின் அழைப்பாளரை ஏற்றுக்கொண்ட பிறகு, அவரை ஆதரிப்பது அவசியமாகிறது, இது ஒரு மனிதனுக்கு மிகவும் கடினமான பணியாகும்.

مَنْ يُّطِعِ الرَّسُوْلَ فَقَدْ اَطَاعَ اللّٰهَ ۚ وَمَنْ تَوَلّٰى فَمَاۤ اَرْسَلْنٰكَ
عَلَيْهِمْ حَفِيْظًا ؕ﴿۸۰﴾ وَيَقُوْلُوْنَ طَاعَةٌ ۫ فَاِذَا بَرَزُوْا مِنْ عِنْدِكَ
بَيَّتَ طَآئِفَةٌ مِّنْهُمْ غَيْرَ الَّذِىْ تَقُوْلُ ؕ وَاللّٰهُ يَكْتُبُ مَا يُبَيِّتُوْنَ ۚ
فَاَعْرِضْ عَنْهُمْ وَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ؕ وَكَفٰى بِاللّٰهِ وَكِيْلًا ﴿۸۱﴾ اَفَلَا
يَتَدَبَّرُوْنَ الْقُرْاٰنَ ؕ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللّٰهِ لَوَجَدُوْا فِيْهِ
اخْتِلَافًا كَثِيْرًا ﴿۸۲﴾ وَاِذَا جَآءَهُمْ اَمْرٌ مِّنَ الْاَمْنِ اَوِ الْخَوْفِ
اَذَاعُوْا بِهٖ ؕ وَلَوْ رَدُّوْهُ اِلَى الرَّسُوْلِ وَاِلٰۤى اُولِى الْاَمْرِ مِنْهُمْ
لَعَلِمَهُ الَّذِيْنَ يَسْتَنْۢبِطُوْنَهٗ مِنْهُمْ ؕ وَلَوْلَا فَضْلُ اللّٰهِ عَلَيْكُمْ
وَرَحْمَتُهٗ لَاتَّبَعْتُمُ الشَّيْطٰنَ اِلَّا قَلِيْلًا ﴿۸۳﴾

[80]தூதருக்குக் கீழ்ப்படிகின்றவர் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிகின்றவர் ஆவார். (நபியே!) யாரேனும் (உம்மைப்) புறக்கணித்தால் - (அறிந்து கொள்ளும்) - நாம் உம்மை அவர்களின் கண்காணிப்பாளராக அனுப்பவில்லை. [81]''நாங்கள் (உங்களுக்குக்) கீழ்ப்படிந்தோம்'' என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் உம்மைவிட்டுச் சென்றவுடன் அவர்களில் ஒரு பிரிவினர் தாம் கூறியதற்கு மாறாக இரவில் சதித் திட்டம் தீட்டுகின்றனர். அல்லாஹ் அவர்களின் மறைமுகத் திட்டங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கின்றான்.

எனவே, அவர்களை நீர் பொருட்படுத்தாமல் அல்லாஹ்வையே நம்பியிருப்பீராக! பொறுப்பேற்க அல்லாஹ்வே போதுமானவன். ***[82]அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க மாட்டார்களா? இது அல்லாஹ்வைத் தவிர வேறொருவரிடமிருந்து வந்திருந்தால் இதில் பல்வேறு முரண்பாடுகளைக் கண்டிருப்பர்.*** ***[83]அவர்களிடம் அமைதி குறித்த செய்தியோ அல்லது அஞ்சத்தக்க செய்தியோ ஏதேனும் வந்தால் அதனை(அவசரப்பட்டு)ப் பரப்பி விடுகின்றனர். (அவ்வாறன்றி) அதனை அவர்கள் தூதரிடமோ பொறுப்பாளர்களிடமோ தெரிவித்திருந்தால் அவர்களில் ஆராய்ந்தறிவோர் அதன் உண்மை நிலையை அறிந்திருப்பர். ''உங்கள்மீது இறைவனின் அருளும் அன்பும் இல்லாதிருந்தால் உங்களில் சிலரைத் தவிர அனைவரும் சாத்தானைப் பின்பற்றியிருப்பீர்கள்.''***

இறைவனின் அழைப்பாளரை ஏற்றுக்கொள்வதென்பது 'தம்மைப் போன்ற ஒரு மனிதனை' ஏற்றுக்கொள்வதாகும். இதனால்தான் மனிதன் இறைவனை ஏற்றுக்கொள்கிறான். ஆனால் இறைவனின் அழைப்பாளரை ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. ஆனால் மனிதனின் உண்மையான சோதனை இறைவனின் அழைப்பாளரைக் கண்டுணர்ந்து அவருக்குத் துணையாகத் தன்னை நிறுத்துவதாகும். மனிதன் அழைப்பாளரின் விஷயத்தை இறைவனின் விஷயமாகக் கருதாதபோது, அவன் அதைப் பற்றித் தீவிரமாகவும் எடுத்துக்கொள்வதில்லை. முன்னால் இருக்கும் போது ஒரு சடங்குக்கு 'சரி' என்று கூறிவிடுகிறான், ஆனால் தனித்திருக்கும் போது, தனது முந்தைய வழிமுறையில் நடையிடத் தொடங்குகிறான். அவன் அழைப்பாளருக்கு எதிராக எவற்றினைப் பரப்புவது முற்றிலும் பொறுப்பற்ற செயலாகுமோ அத்தகைய செய்திகளைப் பரப்புகிறான். இறைவனின் அழைப்பாளருடன் இவ்வளவு அலட்சியமாக நடந்து கொள்பவர்கள், 'எங்களுக்குத் தெரியாது' என்று கூறி இறைவனிடம் தப்பிக்க முடியாது. ஒருவர் நிதானமாக நின்று யோசித்தால், ஓர் அழைப்பாளரின் உண்மைத்தன்மையைத் தீர்மானிக்க இறைவன் அவருடைய நாவிலிருந்து வெளிப்படுத்தும் வார்த்தைகளே போதுமானவை என்பதை அறிந்துகொள்ளலாம்.

குர்ஆன் இறைவனின் வார்த்தை என்பதற்கான தெளிவான சான்று என்னவென்றால், அதன் எந்தக் கூற்றும் எந்தவொரு நிறுவப்பட்ட உண்மைக்கும் முரணாக இல்லை என்பதுதான். இதில் எந்த விஷயமும் மனித இயல்புக்கு எதிரானதாக இல்லை. முந்தைய இறைவேதங்கள் மூலம் அறியப்பட்ட எந்த உண்மையுடனும் முரண்படும் கூற்று எதுவும் இதில் இல்லை. அனுபவ அறிவியலின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட எந்தவொரு நிகழ்விற்கும் முரணான எத்தகையதோர் அறிகுறியும்

இதில் இல்லை. உண்மைகளுடனான இந்த முழுமையான இணக்கம். இது இறைவனின் வார்த்தை என்பதற்கு உறுதியான சான்றாகும். இருப்பினும், எந்தவொரு உண்மையும் உண்மையாகத் தோன்றுவது, அதைப் புரிந்துகொள்ளத் தீவிரமாக முயற்சி செய்யும் மனிதனைப் பொறுத்தது. குர்ஆன் பல்வேறு முரண்பாடுகளிலிருந்து நீங்கியிருப்பது யார் குர்ஆனைப் பற்றிச் 'சிந்தித்துப் பார்க்கிறாரோ' அந்த நபருக்குத் தெளிவாகத் தெரியும். சிந்திக்க விரும்பாத எவருக்கும் நியாயத் தீர்ப்புநாள். வந்து தற்போதைய சோதனையான நிலைமைகளுக்கு முடிவுகட்டும் வரை அர்த்தமற்ற மறுப்புகளை எழுப்புவதற்கான கதவு திறந்திருக்கும்.

ஓர் இஸ்லாமிய சமூகம் என்பது, மற்றவர்களுடன் ஒப்பிடும்போது தங்கள் போதாமையை உணரும் அளவுக்கு சுய விழிப்புணர்வுள்ள நபர்களைக் கொண்ட சமூகமாக இருக்க வேண்டும். அவர்கள் எதனையும் மிகவும் தகுதியான நபரிடம் ஒப்படைத்து அவர் வழிகாட்டுதலை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தத் தன்னை அறிதல் மட்டுமே சமூக வாழ்க்கையில் சாத்தானைப் பின்பற்றுவதிலிருந்து ஒருவரைப் பாதுகாக்கிறது. ஒரு மனிதன் தன்னைத் தானே அறியாவிட்டால், அவன் தகுதி இல்லாமல் இருந்தாலும் நுட்பமான விஷயங்களில் குதித்து விடுகிறான், பின்னர்த் தன்னையும் அழித்துக் கொள்வான்; மற்றவர்களையும் அழிவுக்குள்ளாக்குவான். சமூகத்தின் கூட்டு விஷயங்களில் பேசுவதை விட அமைதியாக இருப்பது அவசியமாகும். மனிதன் தான் கேட்டதை மற்றவர்களிடம் திரும்பத் திரும்பச் சொல்கிறான்.இது சாத்தானுக்கு உதவி புரிவதாகும்.

فَقَاتِلْ فِيْ سَبِيْلِ اللّٰهِ ۚ لَا تُكَلَّفُ اِلَّا نَفْسَكَ وَحَرِّضِ الْمُؤْمِنِيْنَ ۚ
عَسَى اللّٰهُ اَنْ يَّكُفَّ بَاْسَ الَّذِيْنَ كَفَرُوْا ۗ وَاللّٰهُ اَشَدُّ بَاْسًا
وَّاَشَدُّ تَنْكِيْلًا ﴿٨٤﴾ مَنْ يَّشْفَعْ شَفَاعَةً حَسَنَةً يَّكُنْ لَّهٗ نَصِيْبٌ
مِّنْهَا ۚ وَمَنْ يَّشْفَعْ شَفَاعَةً سَيِّئَةً يَّكُنْ لَّهٗ كِفْلٌ مِّنْهَا ۗ وَكَانَ
اللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ مُّقِيْتًا ﴿٨٥﴾ وَاِذَا حُيِّيْتُمْ بِتَحِيَّةٍ فَحَيُّوْا بِاَحْسَنَ
مِنْهَآ اَوْ رُدُّوْهَا ۗ اِنَّ اللّٰهَ كَانَ عَلٰى كُلِّ شَيْءٍ حَسِيْبًا ﴿٨٦﴾ اَللّٰهُ لَآ اِلٰهَ
اِلَّا هُوَ ۗ لَيَجْمَعَنَّكُمْ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ لَا رَيْبَ فِيْهِ ۗ وَمَنْ اَصْدَقُ
ع ١١ ٨ مِنَ اللّٰهِ حَدِيْثًا ﴿٨٧﴾

[84]எனவே, (நபியே!) நீர் இறைவழியில் போர்புரிவீராக! உம்மைத் தவிர வேறு யாருக்கும் நீர் பொறுப்பாளியல்லர். நம்பிக்கையாளர்களுக்கு ஆர்வமூட்டுவீராக! மறுப்பாளர்களின் வலிமையை அல்லாஹ் முறித்து விடக்கூடும். அல்லாஹ் வல்லமை மிக்கவன்; கடுந்தண்டனை அளிப்பவன். [85]ஒரு நன்மையான நோக்கத்திற்காகப் பரிந்துரை செய்கிறவருக்கு அதில் பங்கு உண்டு. தீய நோக்கத்திற்காகப் பரிந்துரை செய்கிறவருக்கு அதில் பங்கு உண்டு. அல்லாஹ் யாவற்றையும் கண்காணிப்பவன். [86](நம்பிக்கையாளர்களே!) உங்களுக்கு யாராவது முகமன் கூறினால் அதைவிடச் சிறந்த முறையில் நீங்கள் (பதில்) முகமன் கூறுங்கள்; அல்லது அதனையே திருப்பிக் கூறுங்கள். அல்லாஹ் அனைத்தையும் கணக்கில் கொள்பவன். [87]அல்லாஹ் – அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. உங்கள் அனைவரையும் அவன் மறுமை நாளில் ஒன்று திரட்டுவான். அந்நாள் வருவதில் எத்தகைய ஐயமும் இல்லை. அல்லாஹ்வின் சொல்லைவிட வேறு யாருடைய சொல் உண்மையானதாக இருக்கமுடியும்?

மனிதன் மார்க்கத்தைப் பின்பற்றுவது போன்ற ஒரு தோற்றம், தனது யதார்த்த வாழ்க்கையில் எந்த மாற்றமும் செய்யாமல், நடைமுறையில் இருக்கும் இடத்திலேயே இருப்பதாகும். இத்துடன், சில மேலோட்டமான வெளிப்பாடுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம், நான் மார்க்கவாதியாகி விட்டேன் என்று நினைத்துக் கொள்வதாகும். அத்தகைய மதத்தை யாரும் எதிர்ப்பதில்லை; மக்கள் அதை அவசியமாகக் கருதுவதில்லை. ஆனால் மார்க்க ரீதியான எதிர்பார்ப்புகள் தியாகத்தைக் கோரும்போது, அதுவும் மனிதன் தனது நன்கு கட்டமைக்கப்பட்ட வாழ்க்கையை இழக்க வேண்டியிருக்கும்போது, மக்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிகிறார்கள். ஒன்று, அழைப்பை எதிர்க்கும் ஒரு பிரிவு. இவர்கள்தாம் மலிவான தோற்றங்கள் மூலம் தங்கள் மதப்பற்றை நிலைநாட்டிக் கொண்டிருந்தவர்கள். இவர்கள் தியாகத்தை எதிர்பார்க்கும் மார்க்கத்தின் பகைவர்களாக மாறுகிறார்கள். ஏனென்றால், அத்தகைய மார்க்கத்தை ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு உயர்ந்த நிலையிலிருந்து கீழிறங்குவதாகத் தோன்றுகிறது. இரண்டாவது பிரிவினர் யாரெனில், அவர்தம் இயல்பு உயிர்ப்புடன் இருக்கும். அவர்கள் சுயநலம், தம்வசதி இவற்றினின்றும் விலகி நின்று விஷயங்களைப் பார்ப்பவர்கள். ஒரு விஷயம் உண்மை என்று நிரூபிக்கப்பட்டாலே போதும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். இந்த நிலைமை சில நேரங்களில் எந்த அளவுக்கு கடுமையானதாகி விடுகிறதென்றால், சத்தியத்தை ஆதரித்து, அதற்கு ஆதரவாகப் பேசுவது அறப்போருக்கு ஒத்ததாகிவிடுகிறது. மாறாக, சத்தியத்தின் விஷயத்தில் மௌனமும் உண்மைக்கு எதிரான

அணுகுமுறையும் மனிதனை உலகியல் வெகுமதிக்குத் தகுதியானவனாக ஆக்கிவிடுகிறது. இருப்பினும், இந்தக் கருத்து வேறுபாட்டால் பொதுவான சமூக உறவுகள் பாதிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது என்றும், அவர்களிடம் ஒழுக்கக்கேடாக நடந்து கொள்ளக் கூடாது என்றும் எல்லாச் சூழ்நிலைகளிலும் உண்மையான நம்பிக்கையாளர்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. ஒரு நம்பிக்கையாளனின் நடத்தை மற்றவர்களின் எதிர்வினைகளால் உருவாகக்கூடாது. இதுபோன்ற போக்குகளைப் புறக்கணிப்பதன் மூலம் உருவாக்கப்பட வேண்டும். யாருக்கு என்ன வெகுமதி அளிக்க வேண்டும், யாருக்காக என்ன முடிவெடுக்க வேண்டும் என்பதும் இறைவனைச் சார்ந்திருக்கிறது.

நெருக்கடியான சூழ்நிலைகளில் சத்தியத்திற்கான அழைப்பை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கான ஒரே உத்தரவாதம் அழைப்பாளர் குறைந்தபட்சம் தனது சொந்த இருப்பின் அளவிலாவது தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்க வேண்டும் என்பதுதான். இது எல்லாச் சூழ்நிலைகளிலும் இருக்க வேண்டும். அவரை ஆதரிக்க யாராவது இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. இதுபோன்ற சூழ்நிலைகளில், அழைப்பாளரின் உறுதிப்பாடு அவரை இறைவனுடைய தனிப்பட்ட உதவிக்குத் தகுதியானவராக ஆக்குகிறது. உஹுதுப்போர் நடந்து முடிந்த ஒரு மாதத்திற்குப் பிறகு நடந்த பத்ர் – சுஃக்ரா போர் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அந்த நேரத்தில், மதீனாவில் ஒரு சூழ்நிலை நிலவியது. இறைத்தூதருடன் எழுபது நபர்கள் மட்டுமே புறப்பட்டனர். ஆனால், இந்தச் சிறிய குழு இறைவனிடமிருந்து சிறப்பு உதவியைப் பெற்றது, அது மக்காவாசிகளிடம் பீதியை உருவாக்கியதால் அவர்களால் எதிரே வர இயலவில்லை. மறுப்பாளர்களின் வலிமையை நசுக்குவது இறைவனின் வழிமுறை. ஆனால், இறைவனின் இந்த வழிமுறை மார்க்கத்தின் கொடியை ஏந்தியவர்கள், தங்கள் வசதிகளில் பற்றாக்குறை இருந்தும், இறைவனின் பகைவர்களின் வலிமையை முறியடிக்கப் புறப்படும்போது, வெளிப்படுகிறது.

فَمَا لَكُمْ فِي الْمُنٰفِقِيْنَ فِئَتَيْنِ وَاللّٰهُ اَرْكَسَهُمْ بِمَا كَسَبُوْا ؕ
اَتُرِيْدُوْنَ اَنْ تَهْدُوْا مَنْ اَضَلَّ اللّٰهُ ؕ وَمَنْ يُّضْلِلِ اللّٰهُ فَلَنْ
تَجِدَ لَهٗ سَبِيْلًا ۝٨٨ وَدُّوْا لَوْ تَكْفُرُوْنَ كَمَا كَفَرُوْا فَتَكُوْنُوْنَ
سَوَآءً فَلَا تَتَّخِذُوْا مِنْهُمْ اَوْلِيَآءَ حَتّٰى يُهَاجِرُوْا فِيْ سَبِيْلِ
اللّٰهِ ؕ فَاِنْ تَوَلَّوْا فَخُذُوْهُمْ وَاقْتُلُوْهُمْ حَيْثُ

وَجَدْتُّمُوْهُمْ ۬ وَلَا تَتَّخِذُوْا مِنْهُمْ وَلِيًّا وَّلَا نَصِيْرًا ﴿٨٩﴾ لَّا
اِلَّا الَّذِيْنَ يَصِلُوْنَ اِلٰى قَوْمٍ بَيْنَكُمْ وَبَيْنَهُمْ مِّيْثَاقٌ اَوْ جَآءُوْكُمْ
حَصِرَتْ صُدُوْرُهُمْ اَنْ يُّقَاتِلُوْكُمْ اَوْ يُقَاتِلُوْا قَوْمَهُمْ ؕ وَلَوْ
شَآءَ اللّٰهُ لَسَلَّطَهُمْ عَلَيْكُمْ فَلَقٰتَلُوْكُمْ ۚ فَاِنِ اعْتَزَلُوْكُمْ
فَلَمْ يُقَاتِلُوْكُمْ وَاَلْقَوْا اِلَيْكُمُ السَّلَمَ ۙ فَمَا جَعَلَ اللّٰهُ لَكُمْ
عَلَيْهِمْ سَبِيْلًا ﴿٩٠﴾ سَتَجِدُوْنَ اٰخَرِيْنَ يُرِيْدُوْنَ اَنْ يَّاْمَنُوْكُمْ
وَيَاْمَنُوْا قَوْمَهُمْ ؕ كُلَّمَا رُدُّوْٓا اِلَى الْفِتْنَةِ اُرْكِسُوْا فِيْهَا ۚ
فَاِنْ لَّمْ يَعْتَزِلُوْكُمْ وَيُلْقُوْٓا اِلَيْكُمُ السَّلَمَ وَيَكُفُّوْٓا
اَيْدِيَهُمْ فَخُذُوْهُمْ وَاقْتُلُوْهُمْ حَيْثُ ثَقِفْتُمُوْهُمْ ؕ وَاُولٰٓئِكُمْ
جَعَلْنَا لَكُمْ عَلَيْهِمْ سُلْطٰنًا مُّبِيْنًا ﴿٩١﴾ ع ١٢

[88] *(நம்பிக்கையாளர்களே!) உங்களுக்கு என்ன ஆயிற்று? நயவஞ்சகர்கள் தொடர்பானதில் நீங்கள் இரு பிரிவினராகி விட்டீர்களே! அல்லாஹ் அவர்களின் தீச்செயல்களால் தலைகீழாக்கி(ப் பாவத்தினுள்) திருப்பி விட்டான். அல்லாஹ் வழிதவறச் செய்துவிட்டவர்களை நேர்வழிக்குக் கொண்டுவர நீங்கள் விரும்புகிறீர்களா? (நபியே!) எவரை அல்லாஹ் வழிதவறச் செய்துவிட்டானோ அவருக்கு எந்த (நல்)வழியையும் நீர் காண மாட்டீர்.* [89] *அவர்கள் மறுப்பாளராகி விட்டதைப்போலவே நீங்களும் மறுப்பாளராகி அவர்களுக்குச் சமமாகிவிட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். எனவே அவர்கள் (தங்கள் இல்லங்களைவிட்டு) அல்லாஹ்வின் பாதையில் புறப்படும் வரை அவர்களில் யாரையும் நீங்கள் நண்பர்களாக்கிக் கொள்ளவேண்டாம். அவர்கள் (பகைமை உணர்வில்) திரும்பிவிட்டால் அவர்களை எங்குக் கண்டாலும் பிடித்துக் கொன்றுவிடுங்கள். அவர்களில் யாரையும் நண்பராகவோ உதவியாளராகவோ ஆக்கிக்கொள்ளாதீர்கள்.* [90] *ஆயினும் நீங்கள் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டுள்ள சமூகத்தினரிடம் அடைக்கலம் பெற்றுள்ளவர்கள் அல்லது உங்களுடன் போர்புரியவோ, தம் சமூகத்தாருடன் போர் புரியவோ*

மனமில்லாமல் உங்களிடம் வருபவர்கள் ஆகியோரை விட்டு விடுங்கள். அல்லாஹ் விரும்பியிருந்தால் அவர்களை உங்கள் மீது ஆதிக்கம் செலுத்த வைத்திருப்பான். அவர்களும் உங்களுக்கு எதிராகப் போரிட்டிருப்பர். எனவே அவர்கள் உங்களுடன் (போரிடாது) விலகியிருந்து, சமாதானத்திற்கு முன்வந்தால் (அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்). அல்லாஹ் அவர்களுக்கெதிராகச் செயல்பட உங்களுக்கு அனுமதியளிக்கமாட்டான். [91]வேறு சிலரையும் நீங்கள் காண்பீர்கள். அவர்கள் உங்களிடமிருந்து பாதுகாப்புப் பெற வேண்டும், (உங்கள் எதிரிகளாகிய) தங்கள் சமூகத்தாரிடமிருந்தும் பாதுகாப்புப் பெற வேண்டும் என்று விரும்புகிறவர்கள். ஆனால் அவர்கள் கலகம் விளைவிக்கும் வாய்ப்பைப் பெறும்போதெல்லாம் அதில் தீவிரமாக இறங்கிவிடுவார்கள். இத்தகையோர் உங்களை (எதிர்ப்பதிலிருந்து) விலகாமலும் உங்களிடம் சமாதானத்தை வேண்டாமலும் (உங்களுடன் போர் புரிவதிலிருந்து) தம் கைகளைத் தடுத்துக்கொள்ளாமலும் இருந்தால் அவர்களைப் பிடியுங்கள்; அவர்களை எதிர்கொள்ளும் இடங்களில் கொன்றுவிடுங்கள். அவர்களுக்கு எதிராக நாம் உங்களுக்குத் தெளிவான அதிகாரத்தைத் தந்துள்ளோம்.

மனிதன் இறைவனின் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அவனது வாழ்க்கையில் சில கட்டங்கள் மீண்டும் மீண்டும் வருகின்றன, அதன் மூலமாக அவன் தனது முடிவில் தீவிரமாக இருக்கிறானா இல்லையா என்பது சோதிக்கப்படும். இந்தத் தொடர்ச்சியின் ஒரு சோதனைதான் 'புலப்பெயர்வு.' அதாவது, உலகியல் பயன்களும் நன்மைகளும் மார்க்கப் பாதையில் ஒரு தடையாகத் தோன்றும்போது, பயன்களையும், நன்மைகளையும் கைவிட்டு இறைவனை நோக்கி முன்னேற வேண்டும். உறவினர்களையும் குடும்பத்தினரையும் விட்டுச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அவர்களையும் விட்டுவிட வேண்டும். அத்தகைய ஒரு நெருக்கடியான தருணம் எதிர்வரும்போது, மனிதன் தனது சொந்த நலன்களைப் புறக்கணித்து சத்தியத்தை நோக்கி நகர்ந்தால், அவன் சத்தியத்துடனான தனது இதயப்பூர்வமான தொடர்பை வலுப்படுத்திக் கொள்வான்; மாறாக, அத்தகைய சந்தர்ப்பத்தில் மனிதன் தனது சொந்தப் பயன்களிலும் நன்மைகளிலும் கவனம் செலுத்தினால், அவன் சத்தியத்துடனான தனது இதயப்பூர்வமான தொடர்பைப் பலவீனப்படுத்துகிறான். முதல் வழியைப் பின்பற்றுபவன், சத்தியத்தை மேலும் ஏற்றுக்கொள்ளும் தன்மையைத் தனக்குள் வளர்த்துக் கொள்கிறான். அவன் தொடர்ந்து உண்மையை நோக்கி நகர்கிறான். எவன் இரண்டாவது வழியைத் தேர்வு செய்கிறானோ, அவனுக்குள் சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கான தன்மை, குறைந்து கொண்டே செல்கிறது. இறுதியில்

அவன் மிகவும் உணர்ச்சியற்றவனாக மாறிவிடுகிறான். அவனுக்குள் உண்மையை ஏற்றுக்கொள்ளும் திறன் முழுவதுமாக இல்லாமல் போய்விடுகிறது.

மார்க்கத்தின் கடினமான எதிர்பார்ப்புகள் முன்வரும்போது, மக்களிடையே வெவ்வேறு குழுக்கள் உருவாகின்றன. சில, நேர்மையானவர்களுக்கும், சில, எதிரிகளுக்கும் உரியவை. வேறு சிலர் தோற்றத்தில் சத்தியத்துக்கு நெருக்கமாகத் தென்பட்டாலும் உள்ளுக்குள் அதிலிருந்து வெகு தொலைவில் இருப்பார்கள். அத்தகைய சூழ்நிலையில் நம்பிக்கையாளர்கள் ஒவ்வொருவரையும் அவரவர் நிலைகளுக்கேற்பக் கையாள வேண்டியது அவசியம். அவர்கள் கலகத்தை வேருடன் பிடுங்கி எறிவதில் கண்டிப்பாகவும், தார்மீகப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் மென்மையாகவும் இருக்க வேண்டும். அவர்கள் பலவீனமானவர்களை நடத்தும்போது விட்டுக் கொடுக்க வேண்டும். மற்றவர்களால் தாக்கத்திற்கு உள்ளாவதற்கு பதிலாகத் தாமே அவர்கள் மீது தாக்கம் செலுத்த முயற்சி செய்ய வேண்டும். இறைவன் யாரையாவது மௌனமாக்கி உட்கார வைத்துவிட்டால், தேவையில்லாமல் அவர்களோடு சண்டையைத் தூண்டக்கூடாது.

وَمَا كَانَ لِمُؤْمِنٍ اَنْ يَّقْتُلَ مُؤْمِنًا اِلَّا خَطَـًٔا ۚ وَمَنْ قَتَلَ مُؤْمِنًا خَطَـًٔا
فَتَحْرِيْرُ رَقَبَةٍ مُّؤْمِنَةٍ وَّ دِيَةٌ مُّسَلَّمَةٌ اِلٰٓى اَهْلِهٖٓ اِلَّآ اَنْ يَّصَّدَّقُوْا ؕ
فَاِنْ كَانَ مِنْ قَوْمٍ عَدُوٍّ لَّكُمْ وَهُوَ مُؤْمِنٌ فَتَحْرِيْرُ رَقَبَةٍ مُّؤْمِنَةٍ ؕ وَ
اِنْ كَانَ مِنْ قَوْمٍ بَيْنَكُمْ وَبَيْنَهُمْ مِّيْثَاقٌ فَدِيَةٌ مُّسَلَّمَةٌ اِلٰٓى اَهْلِهٖ وَ
تَحْرِيْرُ رَقَبَةٍ مُّؤْمِنَةٍ ۚ فَمَنْ لَّمْ يَجِدْ فَصِيَامُ شَهْرَيْنِ مُتَتَابِعَيْنِ ۙ
تَوْبَةً مِّنَ اللّٰهِ ؕ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ﴿۹۲﴾ وَمَنْ يَّقْتُلْ مُؤْمِنًا
مُّتَعَمِّدًا فَجَزَآؤُهٗ جَهَنَّمُ خٰلِدًا فِيْهَا وَغَضِبَ اللّٰهُ عَلَيْهِ وَلَعَنَهٗ وَ
اَعَدَّ لَهٗ عَذَابًا عَظِيْمًا ﴿۹۳﴾

[92]தவறுதலாக நடைபெற்றுவிட்டால் அன்றி, ஒரு நம்பிக்கையாளர் மற்றொரு நம்பிக்கையாளரைக் கொலை செய்வது தகாது. எவர் தவறுதலாக ஒரு நம்பிக்கையாளரைக் கொலை செய்துவிடுகிறாரோ அவர் நம்பிக்கைகொண்ட ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும்; (மேலும்) கொல்லப்பட்டவரின் குடும்பத்தினர் விட்டுக்கொடுத்தால் அன்றி, அவர்களுக்கு இழப்பீட்டை

அளித்துவிட வேண்டும். கொல்லப்பட்ட அவர் உங்கள் எதிரி சமூகத்தைச் சார்ந்தவராக இருந்து நம்பிக்கையாளராகவும் இருந்தால் நம்பிக்கைகொண்ட ஓர் அடிமையை விடுதலை செய்துவிட வேண்டும். (கொல்லப்பட்ட) அவர் உங்களுடன் உடன்படிக்கை செய்துகொண்ட சமூகத்தைச் சார்ந்தவராக இருந்தால் அவரது குடும்பத்தாருக்கு இழப்பீட்டை அளித்து நம்பிக்கைகொண்ட ஓர் அடிமையை விடுதலை செய்துவிடவும் வேண்டும். (பொருளும் அடிமையும் ஆகிய) வசதி இல்லாதவர் இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பு நோற்க வேண்டும். இதுவே அல்லாஹ் அளிக்கும் பாவமன்னிப்பாகும். அல்லாஹ் முற்றும் அறிந்தவன்; ஞானம் மிக்கவன். [93]ஒரு நம்பிக்கையாளரை வேண்டுமென்றே கொலை செய்பவனுக்குரிய தண்டனை நரகமேயாகும். அதில் அவன் என்றென்றும் கிடப்பான். அவன்மீது இறைவனின் சினமும் சாபமும் உண்டாகும். அல்லாஹ் அவனுக்கு மாபெரும் வேதனையைத் தயார் செய்து வைத்துள்ளான்.

ஒரு நம்பிக்கையாளனுக்கு மற்றொரு நம்பிக்கையாளனின் உயிரை மதிப்பது அவன் கடமைகளில் மிகப் பெரிய கடமையாகும். ஒரு நம்பிக்கையாளன் இன்னொரு நம்பிக்கையாளனைக் கொன்றால், அவன் மிகப் பெரிய சமூகக் குற்றத்தைச் செய்தவனாகிறான். ஒரு மனிதன் மற்றொரு மனிதனைக் கொல்லும்போது, அந்த நபரின் மீது சாத்தியமான கடைசித் தாக்குதலை நடத்துகிறான். இது எத்தகைய குற்றமென்றால், அதன் பிறகு குற்றவாளி தனது குற்றத்திற்குப் பரிகாரம் செய்ய எந்த வழியும் இருப்பதில்லை. இதனால்தான் வேண்டுமென்றே செய்த கொலைக்கான தண்டனை நிரந்தர நரகமாக இருக்கிறது. யார் ஒரு நம்பிக்கையாளனை வேண்டுமென்றே கொன்றாலும் இறைவன் மிகவும் கோபமடைந்து சபிக்கப்பட்டவனாக அவனை அறிவித்து, நிரந்தரமாக நரகத்தில் தள்ளிவிடுகிறான். தவறுதலாக நடந்த கொலையின் குற்றமானது இலேசானதாகும். ஒரு நபர் தவறுதலாக ஒரு நம்பிக்கையாளனைக் கொன்று, பின்னர் தமது தவற்றை உணர்ந்து, இறைவனிடம் அழுது, நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி பரிகாரம் செய்தால், இறைவன் அவரை மன்னிப்பான் என்ற நம்பிக்கை இருக்கிறது. தவறு செய்த பிறகு பணத்தைச் செலவழிப்பதும், தொடர்ந்து நோன்பு நோற்பதும் தம் சொந்தக் கைகளால் தம்மைத் தாமே தண்டிப்பது போன்றதாகும். மனிதன் தான் தவறு செய்துவிட்டதாக வலுவாக உணரும்போது, அவன் சரியான திருத்தம் சார்ந்த நடவடிக்கை எடுக்க விரும்புவான். அத்தகைய சூழ்நிலையில் மனிதன் தன்னைச் சீர்திருத்திக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பதை இறைவன் கூறினான்.

இங்கே உண்மையில் கொலை தொடர்பான சட்டம் கூறப்பட்டுள்ளது. இதே போன்ற பிற சமூகக் குற்றங்களும் உள்ளன. மேற்கண்ட சட்டத்தை

முன்வைத்துப் பார்த்தால் மற்ற விஷயங்கள் தொடர்பாக மார்க்கச் சட்டம் என்ன எதிர்பார்க்கிறது என்பது பற்றிய ஓர் ஊகம் கிடைக்கிறது.

ஒரு நம்பிக்கையாளன் தனது சகோதரனின் உயிரைப் பறிக்கும் முயற்சியைத் தவிர்ப்பது எப்படிக் கடமையோ, அதேபோல் ஒரு நம்பிக்கையாளன் மற்றொரு நம்பிக்கையாளனின் கண்ணியத்திற்குப் பங்கம் விளைவிக்கக் கூடாது என்பதும் கடமையே. அவனுடைய செல்வத்தைப் பறித்துக்கொள்ளக் கூடாது; அவனை வீடற்றவனாக ஆக்கக் கூடாது; அவனது வாழ்வாதாரத்தில் குறுக்கீடுகளையும் தடைகளையும் ஏற்படுத்தக் கூடாது; அவனுடைய அமைதியைக் கெடுக்கத் திட்டமிடக் கூடாது; அவனது வாழ்வில் சொத்தாக இருக்கும் எந்தப் பொருளையும் பறிக்க முயற்சி செய்யக் கூடாது. ஒரு மனிதன் தற்செயலாகத் தனது சகோதர நம்பிக்கையாளனுக்குத் தீங்கு விளைவிக்கும் ஒரு செயலைச் செய்தால், அவன் உடனடியாகத் தனது தவற்றை உணர வேண்டும். தனது தவற்றை உணர்ந்ததற்கான சான்றாக, அவன் இறைவனிடம் மன்னிப்பு கேட்டுத் தனது சகோதரனின் இழப்பிற்குப் பரிகாரம் செய்ய வேண்டும். இதற்கு மாறாக, ஒரு மனிதன் வேண்டுமென்றே தனது சகோதரனுக்குத் தீங்கு விளைவிக்கவோ, தொந்தரவு செய்யும் நோக்கத்துடனோ ஒரு செயலைச் செய்தால், குற்றத்தின் அளவு வேறுபட்டாலும், இது முன்கூட்டியே திட்டமிட்ட கொலையைப் போன்ற ஒரு குற்றமாகும்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا ضَرَبْتُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ فَتَبَيَّنُوْا وَلَا تَقُوْلُوْا
لِمَنْ اَلْقٰٓى اِلَيْكُمُ السَّلٰمَ لَسْتَ مُؤْمِنًا ۚ تَبْتَغُوْنَ عَرَضَ الْحَيٰوةِ
الدُّنْيَا ۡ فَعِنْدَ اللّٰهِ مَغَانِمُ كَثِيْرَةٌ ؕ كَذٰلِكَ كُنْتُمْ مِّنْ قَبْلُ فَمَنَّ اللّٰهُ
عَلَيْكُمْ فَتَبَيَّنُوْا ؕ اِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا ﴿٩٤﴾ لَا يَسْتَوِى
الْقٰعِدُوْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ غَيْرُ اُولِى الضَّرَرِ وَالْمُجٰهِدُوْنَ فِيْ
سَبِيْلِ اللّٰهِ بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ ؕ فَضَّلَ اللّٰهُ الْمُجٰهِدِيْنَ بِاَمْوَالِهِمْ
وَاَنْفُسِهِمْ عَلَى الْقٰعِدِيْنَ دَرَجَةً ؕ وَكُلًّا وَّعَدَ اللّٰهُ الْحُسْنٰى ؕ وَفَضَّلَ
اللّٰهُ الْمُجٰهِدِيْنَ عَلَى الْقٰعِدِيْنَ اَجْرًا عَظِيْمًا ﴿٩٥﴾ ۙ دَرَجٰتٍ مِّنْهُ
وَمَغْفِرَةً وَّرَحْمَةً ؕ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا ﴿٩٦﴾ ع ١٣ ١٠

[94]நம்பிக்கையாளர்களே! இறைவழியில் (போரிட) நீங்கள் பயணம் செய்யும்போது (உங்களிடம் போர் புரிவோர் நம்பிக்கையாளர்களா மறுப்பாளர்களா என்பதைத்) தெளிவாக ஆராய்ந்து கொள்ளுங்கள். (தாம் நம்பிக்கையாளர் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதற்காக) யாராவது உங்களுக்கு ஸலாம் (முகமன்) கூறினால் (அவரிடம் உள்ள இவ்வுலகத்து அற்பப் பொருளுக்கு ஆசைப்பட்டு) ''நீர் நம்பிக்கையாளர் அல்லர்'' என்று கூறி (அவரைக் கொன்று) விடாதீர்கள். நீங்கள் இவ்வுலகச் செல்வத்தை விரும்பினால் அல்லாஹ்விடம் ஏராளமான செல்வம் இருக்கிறது. நீங்களும் முன்பு இவ்வாறுதான் (அஞ்சி) இருந்தீர்கள். அல்லாஹ் உங்கள்மீது அருள்புரிந்தான். எனவே, (களத்தில் இருப்போர் யார் என ஆராய்ந்து) தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிபவன். [95]நம்பிக்கையாளர்களில் (நோய் போன்ற) தக்க காரணம் எதுவுமின்றி இறைவழியில் போரிடாமல் (தம் இல்லங்களில்) தங்கிவிடுவோரும் இறைவழியில் தங்கள் பெருஞ்செல்வத்தாலும் உயிர்களாலும் போராடுபவர்களும் சமமாகமாட்டார்கள். (போருக்குச் செல்லாமல் இல்லங்களில்) தங்கிவிடுவோரை விடத் தங்கள் செல்வங்களாலும் உயிர்களாலும் போராடுவோரைத் தகுதியால் அல்லாஹ் மேம்படுத்தி வைத்துள்ளான். (நம்பிக்கையாளர்) அனைவருக்கும் அல்லாஹ் நன்மையையே வாக்களித்துள்ளான். எனினும், வெறுமனே இருப்பவர்களைவிடப் போராடுவோரை மாபெரும் கூலியின் மூலம் மேன்மைப்படுத்தியுள்ளான். [96]அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து உயர்ந்த தகுதியும் பாவமன்னிப்பும் அருளும் உண்டு. அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன்.

அரபியர்களுக்கு எதிரான பழங்குடியினரில் இருந்த சிலர், உள்ளுக்குள் நம்பிக்கையாளர்களாக இருந்தனர். ஆனால் இன்னும் அவர்கள் புலம்பெயர்ந்து தங்கள் கோத்திரத்திலிருந்து பிரிந்து செல்லாமல் இருந்தனர். ஒரு போரின் போது, அத்தகைய ஒருவர் நம்பிக்கையாளர் ஒருவரது வாளின்கீழ் வந்துவிட்டார். அவர் தம்மை அவருடைய மார்க்கச் சகோதரன் என்பதைக் குறிக்கும் வகையில், 'அஸ்ஸலாம் அலைக்கும்' என்று (முகமன்) கூறினார். என்றாலும் உணர்ச்சிமிக்க நம்பிக்கையாளர்கள் சிலர் அவரைக் கொன்றுவிட்டனர். அவர் ஒரு நம்பிக்கையாளர் அல்ல என்றும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மட்டுமே ஸலாம் (முகமன்) சொல்கிறார் என்றும் அவர்கள் புரிந்துகொண்டனர். ஸலாம் மட்டுமே சொல்லும் அளவுக்குக் கூட நம்பிக்கையாளராக இருக்கும் ஒருவருக்கு எதிராகக்

கையை ஓங்குவது அனுமதிக்கப்படவில்லை. போர் நடக்கும்போது கூட இதற்கு அனுமதி இல்லை. பகைவன் இதைப் பயன்படுத்திக்கொள்வான் என்ற பயம் இருக்கும்போது கூட இப்படிச் செய்யக்கூடாது. ஒரு நம்பிக்கையாளர் கொல்லப்படுவது இறைவனின் பார்வையில் மிகப் பெரிய பேரழிவாகும். அதை ஒப்பிடும்போது முழு உலகத்தின் அழிவும் கூட மிகச் சிறிய நிகழ்வுதான். (சுனன் அல்-திர்மிதி, ஹதீஸ் எண். 1395).

இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் ஒருவரின் நம்பிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதது என்று அறிவித்து அந்த நபரைத் தண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் அளவுக்கு யாராவது ஒருவர் இஸ்லாமிய வைராக்கியத்தைக் காட்டினால், அதன் பின்னால் எப்போதும் உலக நோக்கங்கள் இருக்கும். சில நேரங்களில் பொருள் பேராசை, சில நேரங்களில் பழிவாங்கும் நெருப்பு, சில நேரங்களில் ஓர் எதிரியைக் களத்திலிருந்து அகற்ற வேண்டும் என்ற ஆசை, இந்த உணர்ச்சிகள்தாம் அதற்குக் காரணமாக அமைகின்றன. ஒரு மனிதனிடம் இறைவனுக்கு அஞ்சும் உள்ளம் இருந்தால், அவன் இஸ்லாத்தை வெளிப்படுத்துபவரின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு தன் பொறுப்பை இறைவனிடம் ஒப்படைத்து அமைதியாக இருப்பான்.

செயல்களின் அடிப்படையில் நம்பிக்கையாளர்களில் இரண்டு நிலையினர் உள்ளனர். ஒரு பிரிவினர் தங்கள் கடமைகளின் எல்லைக்குள் இஸ்லாமிய வாழ்க்கையை ஏற்றுக்கொள்பவர்கள். அவர்கள் இறைவனை வணங்கி, அனுமதிக்கப்பட்டவை தடைசெய்யப்பட்டவை ஆகியவற்றின் வரம்புகளுக்குள் தங்கள் வாழ்க்கையை நடத்துபவர்கள். இரண்டாம் நிலையினர், தியாக நிலையில் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர்கள். அவர்கள் தாமும் இஸ்லாத்தைத் தழுவி, மற்றவர்களையும் இஸ்லாத்தின் பால் அழைக்க முயற்சி செய்கிறார்கள்; இந்தப் பாதையின் சிரமங்களைத் தாங்கிக் கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் உயிராலும் செல்வத்தாலும் இஸ்லாத்தின் முன்னணியில் நின்றிருப்பவர்கள். அவர்கள் தங்கள் கடமைகளின் எல்லைக்குள் நிற்காமல், தங்கள் கடமைகளுக்கு அப்பால் சென்று இஸ்லாத்திற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்பவர்கள். இந்த இரண்டு குழுக்களும் நேர்மையானவர்கள். இருவரும் இறைவனின் கருணையில் தங்கள் பங்கைப் பெறுவார்கள். ஆனால் இரண்டாவது குழுவின் இயல்பு அடிப்படையில் சற்று வேறுபட்டது. அவர்கள் இறைவனின் வழியில் எதையும் அளந்து தராதவர்கள். எனவே இறைவனும் அவர்களுக்கு அளந்து தரமாட்டான். அவர்கள் செலவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் இறைவனின் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள். எனவே இறைவன் அவர்கள் கவலைப்படாதவாறு தனது கருணைக்குள் எடுத்துக்கொள்வான்.

اِنَّ الَّذِيْنَ تَوَفّٰىهُمُ الْمَلٰٓئِكَةُ ظَالِمِيْٓ اَنْفُسِهِمْ قَالُوْا فِيْمَ
كُنْتُمْ ؕ قَالُوْا كُنَّا مُسْتَضْعَفِيْنَ فِى الْاَرْضِ ؕ قَالُوْٓا اَلَمْ
تَكُنْ اَرْضُ اللّٰهِ وَاسِعَةً فَتُهَاجِرُوْا فِيْهَا ؕ فَاُولٰٓئِكَ
مَاْوٰىهُمْ جَهَنَّمُ ؕ وَسَآءَتْ مَصِيْرًا ﴿٩٧﴾ اِلَّا الْمُسْتَضْعَفِيْنَ
مِنَ الرِّجَالِ وَالنِّسَآءِ وَالْوِلْدَانِ لَا يَسْتَطِيْعُوْنَ حِيْلَةً
وَّلَا يَهْتَدُوْنَ سَبِيْلًا ﴿٩٨﴾ فَاُولٰٓئِكَ عَسَى اللّٰهُ اَنْ يَّعْفُوَ
عَنْهُمْ ؕ وَكَانَ اللّٰهُ عَفُوًّا غَفُوْرًا ﴿٩٩﴾ وَمَنْ يُّهَاجِرْ فِىْ سَبِيْلِ
اللّٰهِ يَجِدْ فِى الْاَرْضِ مُرٰغَمًا كَثِيْرًا وَّسَعَةً ؕ وَمَنْ يَّخْرُجْ
مِنْۢ بَيْتِهٖ مُهَاجِرًا اِلَى اللّٰهِ وَرَسُوْلِهٖ ثُمَّ يُدْرِكْهُ الْمَوْتُ
فَقَدْ وَقَعَ اَجْرُهٗ عَلَى اللّٰهِ ؕ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا ﴿١٠٠﴾ ع ١١

[97](இறைவழியில் புலம்பெயர்ந்து செல்லாமல்)தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டவர்களின் உயிர்களை வானவர்கள் கைப்பற்றும்போது, ''நீங்கள் எந்நிலையில் இருந்தீர்கள்?'' என்று கேட்பர். ''நாங்கள் பூமியில் வலுவற்றவர்களாக இருந்தோம்'' என்று அவர்கள் கூறுவர். அல்லாஹ்வின் பூமி விரிவானதாக இல்லையா? அதில் நீங்கள் புலம் பெயர்ந்து போயிருக்கலாம் அல்லவா? என்று (வானவர்கள்) கேட்பர். இ(த்தகைய)வர்களின் இருப்பிடம் நரகமாகும். அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும். [98]ஆனால் எந்த வாய்ப்பு வசதிகளும் கிடைக்காத (மெய்யாகவே) வலுவற்ற ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைத்தவிர (மற்றவர்களே தண்டனைக்குள்ளாவர்.) [99]அ(த்தகைய)வர்களை அல்லாஹ் மன்னித்து விடக்கூடும். அல்லாஹ் பிழைகளைப் பொறுப்பவன்; பெரும் மன்னிப்பாளன். [100]இறைவழியில் புலம் பெயர்பவர் பூமியில் எண்ணற்ற புகலிடங்களையும் வசதியையும் பெறுவார். யாரேனும் தம் வீட்டிலிருந்து அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நோக்கிப் புலம்பெயர்ந்து செல்லும்போது அவருக்கு இறப்பு ஏற்பட்டுவிட்டால் அவரின் கூலி அல்லாஹ்விடம் உறுதியாகி விட்டது. அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன்.

ஒரு நம்பிக்கையாளனின் இயல்பு, அவனுக்கு ஒரு சுதந்திரமான சூழலைக் கோருகிறது அங்கே அவனது நம்பிக்கை சார்ந்த வாழ்வை வெளிப்படுத்தத் திறந்த வாய்ப்புகள் இருக்க வேண்டும். இது நடக்காத போதெல்லாம், மனிதன் தனது சூழலை மாற்றிக்கொள்ள வேண்டும். இதுவே புலப்பெயர்வு என்று அழைக்கப்படுகிறது. உண்மையான பொருளில், புலப்பெயர்வு என்பது ஒரு மனிதன் தன்னைச் சாதகமற்ற சூழலிலிருந்து வெளியேற்றி, சாதகமான சூழலுக்குத் தன்னை அழைத்துச் செல்வதாகும். ஒரு நிறுவனம் இருக்கிறது, அது சில ஆளுமைகள் செல்வாக்கு செலுத்தும் இடம். அங்கிருக்கும் ஒரு மனிதன், இங்குத்தான் ஆளுமைகளை வழிபடுபவனாக இருக்க முடியும், ஆனால் இறைவனுக்குக் கீழ்ப்படிந்தவனாக இருக்க முடியாது என்று நினைக்கிறான். இந்நிலையில், அந்த மனிதன் தனது சொந்த நலன்களுக்காக அத்தகைய சூழலுடன் சமரசம் செய்து கொண்டு, அங்கேயே உழன்று கொண்டிருந்து, தனக்குச் சத்தியம் என்று தெரிந்ததை சத்தியம் என்று அறிவிக்காமல், இறுதியில் அதே நிலையில் இறந்து விடுகிறான் என்றால், அவன் தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொண்டவன் ஆவான். இதைப்போலவே, ஒரு தேசிய மதத்தைக் கொண்ட ஒரு சமூகம் இருக்கிறது தனது தேசியவாத மதத்தைத் தழுவுபவர்களை மட்டுமே அது ஏற்றுக் கொள்கிறது, அப்படிச் செய்யாத எவரையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அத்தகைய சூழ்நிலையில், ஒருவன் இந்தச் சமூகத்தின் உற்ற தோழனாகிறான், இதே நிலையில் அவன் இறப்பு வருகிறது என்றால், அவன் தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொண்டவன். இதேபோல், குறிப்பிட்ட ஒரு சூழலில் சத்திய அழைப்பு எழுகிறது. அந்த நேரத்தில், சிதறடிக்கப்பட்ட நம்பிக்கையாளர்கள் அதற்குப் பின்னால் ஒன்று கூடுவது அவசியமாகிறது. அவர்கள் தங்கள் திறமைகளை அதன் சேவைக்காகப் பயன்படுத்த வேண்டும். அவர்கள் தங்கள் செல்வத்தால் அதற்கு உதவ வேண்டும். ஆனால் நம்பிக்கையாளர்கள் தங்கள் சொந்த நலன்களிலும் வசதி வாய்ப்புகளின் உறைக்குள் உறைந்து கிடக்கிறார்கள். அவர்கள் தங்கள் உறையிலிருந்து வெளியே வந்து சத்தியத்தின் பயணக் குழுவில் இணைந்து அதன் வலிமையின் ஆதாரமாக மாறும் பணியைச் செய்வதில்லை. இந்த நிலையில் அவர்கள் தங்கள் முழு ஆயுளின் நாட்களைக் கழித்தால், அவர்கள் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்ட நிலையில் இறைவனை அடைவார்கள். இருப்பினும், இதிலிருந்து விலக்கு அளிக்கப்படுபவர்கள் சிலர் இருக்கிறார்கள், அவர்கள் எந்தத் திட்டமும் வகுக்க முடியாத மிகவும் வலிமை குன்றியவர்கள், வெளியிலிருந்து எந்த வழியும் அவர்களுக்குத் திறக்காத நிலையிலிருப்பவர்கள்.

மனிதன் தனது புறச்சூழலில் நிலவும் சாதகமற்ற நிலைகளைக் கண்டு முழு உலகமும் தனக்கு சாதகமற்றதாக இருக்கும் என்று கருதிக்கொள்கிறான். ஆனால் இறைவனின் பரந்த உலகில், பலதரப்பட்ட மக்கள் வசிக்கின்றனர். அழைப்பாளர்மீது கல்லெறியப்படும் 'மக்கா' இருந்தால், அழைப்பாளரை வரவேற்கும் 'மதீனா' நகரமும் இருக்கவே செய்கிறது. எனவே, மனிதன் சுற்றுச்சூழலுடன் சமரசம் செய்வதற்குப் பதிலாகச் சுற்றுச்சூழலின் மாற்றத் திற்கான கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய இடத்தைத் தனது நடவடிக்கைகளுக்கான களமாக மாற்றுவது அவனுக்குப் புதிய சாத்தியக் கூறுகளுக்கான கதவைத் திறக்கக் காரணமாக அமைய வாய்ப்பிருக்கிறது.

وَ اِذَا ضَرَبْتُمْ فِي الْاَرْضِ فَلَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ اَنْ
تَقْصُرُوْا مِنَ الصَّلٰوةِ ۖ اِنْ خِفْتُمْ اَنْ يَّفْتِنَكُمُ الَّذِيْنَ
كَفَرُوْا ؕ اِنَّ الْكٰفِرِيْنَ كَانُوْا لَكُمْ عَدُوًّا مُّبِيْنًا ﴿۱۰۱﴾ وَ اِذَا كُنْتَ
فِيْهِمْ فَاَقَمْتَ لَهُمُ الصَّلٰوةَ فَلْتَقُمْ طَآئِفَةٌ مِّنْهُمْ مَّعَكَ وَلْيَاْخُذُوْۤا
اَسْلِحَتَهُمْ ۫ فَاِذَا سَجَدُوْا فَلْيَكُوْنُوْا مِنْ وَّرَآئِكُمْ ۪ وَلْتَاْتِ
طَآئِفَةٌ اُخْرٰى لَمْ يُصَلُّوْا فَلْيُصَلُّوْا مَعَكَ وَلْيَاْخُذُوْا حِذْرَهُمْ
وَاَسْلِحَتَهُمْ ۚ وَدَّ الَّذِيْنَ كَفَرُوْا لَوْ تَغْفُلُوْنَ عَنْ اَسْلِحَتِكُمْ
وَ اَمْتِعَتِكُمْ فَيَمِيْلُوْنَ عَلَيْكُمْ مَّيْلَةً وَّاحِدَةً ؕ وَ لَا جُنَاحَ عَلَيْكُمْ
اِنْ كَانَ بِكُمْ اَذًى مِّنْ مَّطَرٍ اَوْ كُنْتُمْ مَّرْضٰۤى اَنْ تَضَعُوْۤا اَسْلِحَتَكُمْ ۚ
وَخُذُوْا حِذْرَكُمْ ؕ اِنَّ اللّٰهَ اَعَدَّ لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا ﴿۱۰۲﴾ فَاِذَا
قَضَيْتُمُ الصَّلٰوةَ فَاذْكُرُوا اللّٰهَ قِيٰمًا وَّقُعُوْدًا وَّ عَلٰى جُنُوْبِكُمْ ۚ
فَاِذَا اطْمَاْنَنْتُمْ فَاَقِيْمُوا الصَّلٰوةَ ۚ اِنَّ الصَّلٰوةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِيْنَ
كِتٰبًا مَّوْقُوْتًا ﴿۱۰۳﴾ وَ لَا تَهِنُوْا فِي ابْتِغَآءِ الْقَوْمِ ؕ اِنْ تَكُوْنُوْا
تَاْلَمُوْنَ فَاِنَّهُمْ يَاْلَمُوْنَ كَمَا تَاْلَمُوْنَ ۚ وَتَرْجُوْنَ مِنَ اللّٰهِ
مَا لَا يَرْجُوْنَ ؕ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ﴿۱۰۴﴾ ع ۱۲

[101](நம்பிக்கையாளர்களே!) பூமியில் பயணம் செய்யும்போது மறுப்பாளர் உங்களைத் துன்புறுத்துவர் என நீங்கள் அஞ்சினால் தொழுகையைச் சுருக்கிக்கொள்வது உங்கள் மீது குற்றமாகாது. உறுதியாக மறுப்பாளர் உங்களுக்கு வெளிப்படையான எதிரிகளாக இருக்கின்றனர். [102](நபியே! போர்முனையில்) நீர் நம்பிக்கையாளர்களிடையே இருந்து அவர்களுக்குத் தொழுகை நடத்தினால் அவர்களில் ஒரு பிரிவினர் உம்முடன் (தொழுகையில்) நிற்கட்டும்; அவர்கள் தம் ஆயுதங்களையும் தயாராக வைத்துக்கொள்ளட்டும். (தொழுது) தலைபணிந்தபின் அவர்கள் உங்கள் பின்புறம் (காவலாக) நிற்கட்டும். (பின்னர்த்) தொழாமல் இருக்கும் அடுத்த பிரிவினர் வந்து உம்முடன் தொழுதுகொள்ளட்டும். அவர்களும் ஆயுதங்களுடன் எச்சரிக்கையாக இருக்கட்டும். நீங்கள் உங்கள் ஆயுதங்களையும் தளவாடங்களையும் விட்டு கவனமற்று இருக்கும் நேரத்தில் மறுப்பாளர்கள் திடீரென உங்களைத் தாக்கிவிட விரும்புகின்றனர். ஆயினும் மழையால் உங்களுக்கு ஏதேனும் சிரமம் இருந்தாலோ நீங்கள் நோயாளியாக இருந்தாலோ உங்கள் ஆயுதங்களை(க் கீழே) வைத்துவிடுவது உங்கள்மீது குற்றமாகாது. (எனினும்) எச்சரிக்கையாக இருங்கள். உறுதியாக அல்லாஹ் மறுப்பாளர்களுக்கு இழிவுமிக்க வேதனையைத் தயார்செய்து வைத்துள்ளான். [103](இவ்வாறு) நீங்கள் தொழுகையை நிறைவேற்றியபின் நின்றிருக்கும்போதும் அமர்ந்திருக்கும்போதும் சாய்ந்து படுத்திருக்கும்போதும் அல்லாஹ்வை நினைவுகூருங்கள். அச்சம் நீங்கி அமைதி ஏற்பட்டுவிட்டால் நீங்கள் தொழுகையை உரிய முறையில் நிறைவேற்றுங்கள். உறுதியாகக் குறிப்பிட்ட நேரங்களில் தொழுகையை நிறைவேற்றுவது நம்பிக்கையாளர்களின்மீது விதிக்கப்பட்ட கடமையாகும். [104]பகைவர்களை விரட்டிச் செல்வதில் தளர்ந்துவிடாதீர்கள். நீங்கள் துன்புறுகிறீர்கள் என்றால் அவர்களும் உங்களைப் போன்றே துன்புறுகின்றனர். ஆனால் அல்லாஹ்விடமிருந்து அவர்கள் எதிர்பார்க்க முடியாததை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். அல்லாஹ் முற்றும் அறிந்தவன்; ஞானம் மிக்கவன்.

மார்க்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து செயல்களும் - அவை தொழுகை, கடமையாக்கப்பட்ட கொடை வகையைச் சேர்ந்தவையாயினும் சரி, அழைப்புப் பணி, அறப்போர் வகையைச் சேர்ந்தவையாயினும் சரி, அவை அனைத்தின் இறுதி இலக்கு இறைவனை நினைவுகூர்வதாகும். எல்லாச் செயல்களின் அடிப்படை நோக்கமும், இறைவன் தனது நினைவுகளில்

நிலைநிற்கும் வகையில் வாழும் மனிதனைத் தயார்செய்வதாகும். வாழ்க்கையின் ஒவ்வொரு திருப்பமும் அவனுக்கு இறைவனை நினைவூட்டுவதாகிவிட வேண்டும். அச்சம் ஏற்படும் சந்தர்ப்பம் அவனுக்கு இறைவனின் மீதான அச்சத்தை ஏற்படுத்த வேண்டும், நம்பிக்கையின் சந்தர்ப்பம் அவனுக்குள் இறைவனின் மீது ஒரு விருப்பத்தை உருவாக்க வேண்டும். அவனுடைய நம்பிக்கை இறைவனின் மீதே இருக்க வேண்டும். அவனுடைய கவனம் இறைவனின் பக்கமே குவிந்திருக்க வேண்டும். அவனுக்கு எது கிடைத்தாலும், அதை இறைவனிடமிருந்து வந்ததாகக் கருத வேண்டும், அவனுக்கு எது கிடைக்கவில்லையோ, அதை இறைக் கட்டளையின் விளைவாகக் கருத வேண்டும். அவனுடைய அகவயமான இருப்பு முழுவதும் இறைவனின் மகிமையிலும் அழகிலும் மூழ்கித் திளைக்க வேண்டும். இது எந்த அளவு முக்கியமானது என்பதைப் போரின் மிக நெருக்கடியான தருணத்தில் கூட ஏதேனுமொரு வடிவத்தில் தொழுகையை நிறைவேற்றக் கட்டளையிடப்பட்டதிலிருந்து அறிந்துகொள்ளலாம். மரணத்தின் விளிம்பில் நின்றுகொண்டு இந்த உலகத்திலிருந்து தன் இறைவனிடம் ஓர் அடியான் எடுத்துச் செல்ல வேண்டிய உண்மையான பொருள் என்ன என்பதை மனிதனுக்கு நினைவூட்ட வேண்டும் என்பதற்காக இக்கட்டளை.

நம்பிக்கையாளர்களின் முழுமையான நம்பிக்கை இறைவனின் மீதே இருக்கும் என்றாலும் பகைவர்களிடமிருந்து பாதுகாப்புக்கான புறவயமான சாதனங்களைத் தயாராக வைக்க வேண்டுமெனக் கட்டளை யிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், இறைவனின் உதவி புறவயமான சாதனங்களின் வழியாக மட்டுமே வருகிறது. நம்பிக்கையாளர்கள் தங்கள் பாதுகாப்புக்குச் சாத்தியமான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யவில்லையென்றால், இறைவனின் உதவி அவர்களுக்கு வந்து சேரக்கூடிய ஒரு கட்டமைப்பை அவர்கள் உருவாக்கவில்லை என்றுதான் அர்த்தம். இந்த உலகில் ஒரு நம்பிக்கையாளருக்கு ஏற்படும் துன்பங்கள், சத்தியத்தில் உறுதியாக நிற்பவர்கள் யார், மற்றவர்களை அநியாயமாகத் துன்புறுத்துபவர்கள் யார் என்பதைக் காண இறைவன் சோதனைக்கான சூழ்நிலைகளை உருவாக்கி, ஏற்படுத்திய திட்டத்தின் விலையாகும்.

இஸ்லாத்திற்கும், இஸ்லாம் அல்லாதவற்றிற்கும் இடையிலான மோதலில், சில சமயங்களில் இஸ்லாமியர்களுக்குத் தோல்வியும் இழப்பும் வந்துசேர்ந்து விடுகிறது. இந்த நேரத்தில், சிலர் மன வலிமையை இழக்கத் தொடங்குகிறார்கள். ஆனால் இதுபோன்ற அசம்பாவிதங்களிலும் கூட, இறைவனின் விருப்பம் சம்பந்தப்பட்டிருக்கிறது. அடியானுக்குள் அதிக அக்கறையும் கவனமும் எழவேண்டியும், அதன் விளைவாக, அவன்

இறைவனிடமிருந்து அதிக அருட்கொடைகளைப் பெறத் தகுதியானவனாக மாறவும் அவை நிகழ்கின்றன.

إِنَّآ أَنزَلْنَآ إِلَيْكَ ٱلْكِتَٰبَ بِٱلْحَقِّ لِتَحْكُمَ بَيْنَ
ٱلنَّاسِ بِمَآ أَرَىٰكَ ٱللَّهُ ۚ وَلَا تَكُن لِّلْخَآئِنِينَ خَصِيمًا ﴿١٠٥﴾
وَٱسْتَغْفِرِ ٱللَّهَ ۚ إِنَّ ٱللَّهَ كَانَ غَفُورًا رَّحِيمًا ﴿١٠٦﴾ وَلَا تُجَٰدِلْ
عَنِ ٱلَّذِينَ يَخْتَانُونَ أَنفُسَهُمْ ۚ إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ مَن كَانَ
خَوَّانًا أَثِيمًا ﴿١٠٧﴾ يَسْتَخْفُونَ مِنَ ٱلنَّاسِ وَلَا يَسْتَخْفُونَ
مِنَ ٱللَّهِ وَهُوَ مَعَهُمْ إِذْ يُبَيِّتُونَ مَا لَا يَرْضَىٰ مِنَ ٱلْقَوْلِ ۚ
وَكَانَ ٱللَّهُ بِمَا يَعْمَلُونَ مُحِيطًا ﴿١٠٨﴾

[105](நபியே!) அல்லாஹ் உமக்குக் காட்டிய முறைப்படி மக்களிடையே நீர் தீர்ப்பு வழங்குவதற்காக இவ்வேதத்தை நாம் சத்தியத்துடன் உமக்கு அருளியுள்ளோம். எனவே மோசடிக்காரர்களுக்காக வாதாடும் ஒருவராக ஆகிவிடாதீர். [106](இதில் தவறு ஏதேனும் நேர்ந்துவிட்டால்) அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவீராக! உறுதியாக அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன். [107](பிறருக்கு மோசடி செய்வதன்மூலம்) தமக்குத் தாமே துரோகம் இழைப்பவர்களுக்காக (நபியே!) நீர் வாதிடாதீர்! துரோகிகளையும் பாவிகளையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. [108]அவர்கள் மனிதர்களிடம் (வெட்கப்பட்டு) மறைக்கின்றனர். ஆனால் அல்லாஹ்விடம் மறைக்கமுடியாது. அவர்கள் இரவில் அவனுக்கு விருப்பம் இல்லாதவற்றைப் பேசிச் சதி செய்யும்போது அவன் அவர்களுடன்தான் இருக்கிறான். அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் சூழ்ந்தறிபவனாக இருக்கிறான்.

ஒன்றாகக் கூடி வாழ்வதென்பது மனிதர்களின் தேவை. இந்தத் தேவைதான் ஒரு சமூகத்தையும், கூட்டத்தையும் உருவாக்குவதற்கு வழிவகுக்கிறது. சமூகத்தில் கூட்டுத்தன்மை மூலம், ஒரு மனிதன் தனது ஆற்றலை ஆயிரக்கணக்கான மடங்கு பெருக்கிக் கொள்கிறான். படிப்படியாக, கூட்டுத் தேவையாக உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு, கூட்டு மதத்தின் தகுதியைப் பெற்று விடுகிறது. அது தானாகவே மக்களின் நோக்கமாக மாறி விடுகிறது. தொடர்ந்து, 'சரியாக இருந்தாலும் தவறாக இருந்தாலும் இது என் கூட்டம்',

‘இவர்கள் சரியான வழியில் இருந்தாலும் தவறான வழியில் இருந்தாலும், இவர்கள் என் மக்கள்’ என்ற மனநிலை உருவாகிறது. இதன் விளைவாக, மக்கள் தங்கள் சொந்த வட்டத்தை முக்கியமானதாகவும், மற்ற வட்டங்களை முக்கியத்துவமற்றவையாகவும் பார்க்கிறார்கள். ஒருவரின் சொந்த வட்டத்தைச் சேர்ந்த மனிதன் தவறான வழியில் இருந்தாலும், அவனுக்கு ஆதரவளிப்பது அவசியமாகக் கருதப்படுகிறது. மற்றொரு வட்டத்தைச் சேர்ந்த மனிதன் உண்மையின் மீது நிலைத்திருந்தாலும், அவனுக்கு ஆதரவு வழங்கப்படுவதில்லை.

ஒரு கூட்டத்தில் இந்த மனநிலை வளர்ந்தால், அது அந்தக் கூட்டத்தின் சொந்த நலன்களுக்கும், சமூகப் பாரபட்சங்களுக்கும் அளவுகோல் எனும் தகுதியை வழங்கியுள்ளது என்று பொருள். மனிதன் இறைவனின் வழிகாட்டுதலுக்கே அளவுகோல் எனும் தகுதியை வழங்க வேண்டும், அதன் வெளிச்சத்தில் தனது நடத்தையை அமைத்துக் கொள்வதே சரியானது. உலக நலன்களை முன்னிட்டும் சமூகப் பாரபட்சங்களின் பாதிப்பின்கீழும் அது இருக்கக் கூடாது. ஒரு மனிதன் தவறு செய்தால், அவனுடைய கையைத் தடுக்க வேண்டும் அவன் நம்மைச் சேர்ந்தவனாயினும் சரியே. ஒரு மனிதன் சரியான கருத்தைச் சொன்னால், அவன் அந்நியனாக இருந்தாலும், அவனுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். ஒரு பிரிவினர் தனக்குச் சொந்தமானவராகவும், மற்றொரு பிரிவினர் அந்நியராகவும் இருக்கும் நிலையில் நம்மவர் – அந்நியர் என்ற நோக்கில் பார்க்காமல், சரியா தவறா என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். மற்ற எதையும் பொருட்படுத்தாமல் உண்மையின் பக்கம் நிற்க வேண்டும்.

உண்மையைக் கைவிடுவதென்பது தன்னைத்தானே கைவிடுவதாகும். ஒரு மனிதன் இன்னொருவனுக்கு துரோகம் செய்யும்போது, அவன் முதலில் தனக்குத்தானே துரோகம் செய்து கொள்கிறான். ஏனென்றால் இறைவன் ஒவ்வொரு இதயத்திலும் தனது பிரதிநிதியை அமர வைத்திருக்கிறான். அதுதான் மனிதனின் மனசாட்சி. மனிதன் சத்தியத்திற்கு எதிராகச் செல்ல நினைக்கும் போதெல்லாம், உள்ளே மறைந்திருக்கும் சத்தியத்தின் அந்தப் பிரதிநிதி அவனைத் தடை செய்கிறது. அந்த உள் குரலை மனிதன் அடக்குகிறான்; அதனைப் புறக்கணிக்கிறான். அதற்குப் பிறகுதான் அவன் நீதியின் பாதையைக் கைவிட்டு அநீதியின் பாதையைப் பின்பற்றுவது சாத்தியமாகிறது. இதைத் தவிர மனிதன் தவறான ஒருவனை ஆதரிக்கிறான் என்றால், அது அந்த நபரின் மீதான அக்கறையின் காரணமாகத்தான். உலகத் தொடர்புகளின் காரணமாகவும் நலன்களை முன்னிறுத்துவதன் காரணமாகவும், அவனால் தவறானவனைப் புறக்கணிக்க முடிவதில்லை, எனவே அவன் செய்வது தவறு என்று அவனுக்குத் தெரிந்தாலும் அவனது

கூட்டாளியாக மாறுகிறான். ஆனால் அநீதியாக இருப்பினும், ஒருவரைக் கைவிடாமல் இருப்பது, இறைவனைக் கைவிடுவதை விலையாகக் கொடுத்து நடப்பதாகும். இவ்வுலகில் ஒருவனை இப்படி ஆதரிக்கும் அதே நேரத்தில், அவன் மறுமையில் இறைவனின் துணையை இழந்துவிடுகிறான்.

هٰٓاَنْتُمْ هٰٓؤُلَآءِ جٰدَلْتُمْ عَنْهُمْ فِي الْحَيٰوةِ الدُّنْيَا ۣ فَمَنْ
يُّجَادِلُ اللّٰهَ عَنْهُمْ يَوْمَ الْقِيٰمَةِ اَمْ مَّنْ يَّكُوْنُ عَلَيْهِمْ
وَكِيْلًا ﴿١٠٩﴾ وَمَنْ يَّعْمَلْ سُوْٓءًا اَوْ يَظْلِمْ نَفْسَهٗ ثُمَّ يَسْتَغْفِرِ
اللّٰهَ يَجِدِ اللّٰهَ غَفُوْرًا رَّحِيْمًا ﴿١١٠﴾ وَمَنْ يَّكْسِبْ اِثْمًا
فَاِنَّمَا يَكْسِبُهٗ عَلٰى نَفْسِهٖ ۭ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ﴿١١١﴾
وَمَنْ يَّكْسِبْ خَطِيْۗـَٔةً اَوْ اِثْمًا ثُمَّ يَرْمِ بِهٖ بَرِيْۗـًٔا
فَقَدِ احْتَمَلَ بُهْتَانًا وَّاِثْمًا مُّبِيْنًا ﴿١١٢﴾ وَلَوْلَا فَضْلُ اللّٰهِ ع ١٦ ١٣
عَلَيْكَ وَرَحْمَتُهٗ لَهَمَّتْ طَّاۗىِٕفَةٌ مِّنْهُمْ اَنْ يُّضِلُّوْكَ ۭ
وَمَا يُضِلُّوْنَ اِلَّآ اَنْفُسَهُمْ وَمَا يَضُرُّوْنَكَ مِنْ شَيْءٍ ۭ
وَاَنْزَلَ اللّٰهُ عَلَيْكَ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَعَلَّمَكَ مَا لَمْ تَكُنْ
تَعْلَمُ ۭ وَكَانَ فَضْلُ اللّٰهِ عَلَيْكَ عَظِيْمًا ﴿١١٣﴾ البلاغة

[109](நம்பிக்கையாளர்களே!) நீங்கள் இவ்வுலக வாழ்க்கையில் அவர்களுக்காக வாதாடுகிறீர்கள். (ஆனால்) மறுமை நாளன்று அவர்களுக்காக அல்லாஹ்விடம் யார் வாதாடுவார்? அல்லது அவர்களுக்குப் பொறுப்பேற்பவர் யார்? [110]குற்றம் புரிந்துவிட்டு அல்லது தமக்குத்தாமே அநீதி இழைத்துக்கொண்டு பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருபவர் அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன், நிகரற்ற அன்பாளன் என்பதைக் காண்பார். [111]பாவம் செய்பவன் தனக்குக் கேடாகவே அதனைச் செய்கிறான். அல்லாஹ் முற்றும் அறிந்தவன்; ஞானம் மிக்கவன். [112]ஒரு தவற்றையோ, பாவத்தையோ செய்துவிட்டு அதன் பழியைக் குற்றமற்ற ஒருவரின் மீது சுமத்திவிடுபவன் பெரும் அவதூற்றையும் வெளிப்படையான பாவத்தையும் தலையில் சுமந்தவனாவான். [113](நபியே!) அல்லாஹ்வின் அருளும் பரிவும் உம்மீது

இல்லாதிருந்தால் - அவர்களில் ஒரு பிரிவினர் உம்மை வழிகெடுக்க முடிவு செய்திருந்தனர். ஆனால் அவர்கள் தம்மைத்தாமே வழிகெடுத்துக் கொண்டனர். அவர்கள் உமக்கு எந்தத் தீங்கையும் இழைத்துவிடவும் முடியாது. அல்லாஹ் உமக்கு வேதத்தையும் ஞானத்தையும் அருளியுள்ளான். (முன்பு) நீர் அறிந்திராது இருந்தவற்றையும் அவன் உமக்குக் கற்றுக்கொடுத்துள்ளான். உம்மீதுள்ள அல்லாஹ்வின் அருள் மகத்தானது.

உலகம் ஒரு சோதனைக்கூடம். இங்கே ஒவ்வொரு மனிதனும் தவறு செய்ய வாய்ப்பிருக்கிறது. இறைவனுடைய தொடர்பிலும் சரி, அவனுடைய அடியார்கள் தொடர்பிலும் சரி. ஒருவன் தவறு செய்துவிட்டால் சரியான வழிமுறை, அவன் தனது தவற்றை நினைத்து வெட்கப்படுவதுதான். அவன் இன்னும் அதிக அக்கறையுடன் இறைவனை நோக்கி விரைந்தோட வேண்டும். தனது தவற்றை மன்னித்து, எதிர்காலத்தில் நன்மை செய்யும் திறனை அருளுமாறு இறைவனிடம் கேட்க வேண்டும். இவ்வாறு இறைவனிடம் யார் அடைக்கலம் தேடுகிறானோ அவனை இறைவனும் தனது பாதுகாப்பில் எடுத்துக்கொள்கிறான். அவனுடைய மார்க்க உணர்வை விழித்தெழுப்புவதன் மூலம், இறைவன் அவனை முன்பை விட மிகவும் எச்சரிக்கையாக உலகில் வாழும் தகுதியுடையவனாக்கி விடுகிறான்.

இரண்டாவது நிலைப்பாடு என்னவென்றால், மனிதன் தவறு செய்து விட்டு அதை ஒப்புக்கொள்ள மறுப்பது. அதற்குப் பதிலாகத் தன் தவற்றைச் சரியென்று நிரூபிக்க முயற்சி செய்வது. தனது சக தோழர்களின் ஆதரவுடன், தனது தவற்றைத் தனக்கு உணர்த்துபவர்களை எதிர்த்துப் போராடத் தொடங்குவது. தங்கள் தவறுகளில் மிகவும் பிடிவாதமாக இருப்பவர்களும் அவற்றை ஆதரிப்பவர்களும் இறைவனின் பார்வையில் மிகக் கொடூரமான குற்றவாளிகள். தங்கள் தவறுகளை மறைக்க அவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகள் மறுமையில் முற்றிலும் அர்த்தமற்றதாகிவிடும், அவர்கள் எந்த ஆதரவாளர்களை நம்பி அகந்தை கொள்கிறார்களோ இறுதியில் அவர்களால் தங்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதை உணர்ந்து கொள்வார்கள்.

ஒருவர் இன்னொருவரின் சொத்தைத் திருடலாம். பின்னர்த் தான் பிடிபட்டு விடுவோம் என்று அஞ்சும்போது, அதை வேறொருவரின் வீட்டில் வைத்து, இன்னார் அதைத் திருடிவிட்டதாகக் கூறலாம். ஒரு நபர் ஒரு பெண்ணைத் தனது மன விருப்பத்திற்கு இலக்காக மாற்ற விரும்பலாம். கற்புள்ள அந்த பெண் அந்தச் செயலுக்குச் சம்மதிக்காதபோது, அவன் பொய்யான கதைகளை உருவாக்கி அந்தப் பெண்ணைப் பற்றி அவதூறு பரப்பக்கூடும். இரண்டு பேர் சேர்ந்து ஒரு வேலையைத் தொடங்குகிறார்கள். பிறகு, ஒருவர்

தனது தனிப்பட்ட நலன்கள் பாதிக்கப்படுவதாக உணர்ந்து வேலையை நிறுத்த ஒரு திட்டத்தை வகுக்கிறார், பின்னர் அதை நிறுத்துவதற்கான பொறுப்பு மற்றவரிடம் உள்ளது என்று பிரபலப்படுத்துகிறார். இவை அனைத்தும் தன் மீதான பழியை மற்றவர்கள் மீது சுமத்தும் முயற்சிகள். ஆனால் இத்தகைய முயற்சிகள் மனிதனின் குற்றத்தைத்தான் மிகுதியாக்கும்; அவை அவனைக் குற்றமற்றவன் என்று நிறுவுவதில்லை. இறைவனின் அருளில் மிகப்பெரியது அவன் வழிகாட்டுதலின் கதவுகளைத் திறந்து, தவறு செய்த பிறகு, உங்கள் தவற்றை ஒப்புக்கொள்ளுங்கள்; உங்களைச் சரியென்று நிறுவ வாதிட வேண்டாம்; உங்களுக்கு ஒருவருடன் பிரச்சினை ஏற்பட்டால், உங்கள் சக தோழர்களின் பலத்தைக் கொண்டு அகந்தை கொள்ள வேண்டாம், மாறாக இறைவனுக்கு அஞ்சிப் பணிவான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள்; ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தால், நீங்கள் வெற்றி பெற்றதாக நினைத்து மகிழ்ச்சியடையாதீர்கள். ஒரு கொடுங்கோலனாக மாறாமல் உங்களைப் பாதுகாக்க இறைவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள் என்று மனிதனுக்குப் புரிய வைப்பதுதான்.

لَا خَيْرَ فِيْ كَثِيْرٍ مِّنْ نَّجْوٰىهُمْ اِلَّا مَنْ اَمَرَ بِصَدَقَةٍ اَوْ
مَعْرُوْفٍ اَوْ اِصْلَاحٍ بَيْنَ النَّاسِ ؕ وَ مَنْ يَّفْعَلْ ذٰلِكَ
ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ فَسَوْفَ نُؤْتِيْهِ اَجْرًا عَظِيْمًا ﴿۱۱۴﴾ وَ
مَنْ يُّشَاقِقِ الرَّسُوْلَ مِنْۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدٰى وَ يَتَّبِعْ
غَيْرَ سَبِيْلِ الْمُؤْمِنِيْنَ نُوَلِّهٖ مَا تَوَلّٰى وَ نُصْلِهٖ جَهَنَّمَ ؕ وَ
سَآءَتْ مَصِيْرًا ﴿۱۱۵﴾ ع ۱۴ ۱۷ ۱۳

[114]அறக்கொடைக்காகவும் நன்மைக்காகவும் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் (பேசப்படுவன) அல்லாத மனிதர்களின் பெரும்பாலான மறைமுகப் பேச்சுக்களில் எந்த நன்மையும் இல்லை. இறை உவப்பை விரும்பி அவ்வாறு செய்பவருக்கு நாம் மாபெரும் கூலியை வழங்குவோம். [115]நேர்வழி (எதுவெனத்) தமக்குத் தெளிவான பின்னரும் தூதருக்கு எதிராகச் செயல்பட்டு (ஓரிறை)நம்பிக்கையாளர்களின் பாதையிலிருந்து வேறொரு பாதையில் செல்பவனை நாம் அவன் சென்ற திசையிலேயே செலுத்தி நரகத்தில் சேர்த்து விடுவோம். அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும்.

சத்தியத்தின் கலப்படமற்ற அழைப்பு எழும்போது, அது பூமியில் இறைவனின் தராசை நிலைநிறுத்துவதாக இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் அந்தத் தராசில் தான் எடைபோடப்படுவதாக உணர்கிறான். சத்தியத்திற்கான அழைப்பு, ஒவ்வொருவரின் மேலிருக்கும் புறவயமான திரையை அகற்றி விடுகிறது. ஒவ்வொரு நபரையும் யதார்த்தத்தின் அடிப்படையில் அவர் இருந்த இடத்தில் நிற்க வைக்கிறது. இந்த நிலைமை எந்த அளவுக்குக் கடினமாக இருக்கிறதென்றால் மக்கள் அலறத் தொடங்கிவிடுகிறார்கள்; இறை அழைப்பாளருக்கு சூழல் முழுவதும் தீப்பிழம்புகளுக்கு நடுவில் அவர் நிற்பது போல் ஆகிவிடுகிறது.

சத்தியத்திற்கான அழைப்பின் தராசில் தாம் எடையற்றவர்களாகிக் கொண்டு வருவதாக உணர்பவர்களுக்குள் பிடிவாதம், ஆணவம் போன்ற உணர்வுகள் விழித்துக்கொள்கின்றன. அவை விரைவாக எதிர்ப்பின் திசையில் நகரத்தொடங்குகின்றன. உண்மையாளர் என்கிற அவர்களின் தகுதியைச் சந்தேகத்துக்குரிய ஒன்றாக நிறுவும் எந்தவொரு அழைப்பையும் அவர்கள் அழித்துவிட வேண்டும் என்று எண்ணத்தொடங்குகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, தங்கள் நாவுகளின் பயன்பாடு என்பது அழைப்புக்கும் அழைப்பாளருக்கும் எதிராகப் பொய்களைப் பரப்புவதாகி விடுகிறது. அழைப்பை அடக்குவதற்குத் திட்டங்களை உருவாக்குகிறார்கள். மக்கள் அழைப்பாளருக்கு நிதி உதவி செய்ய வேண்டாம் என்று தடை செய்கிறார்கள். இறைவனின் கயிற்றைச் சுற்றி ஒன்றுபடும் இறைவனின் அடியார்களைச் சந்தேகத்தில் சிக்கவைத்து அவர்களைச் சிதறடித்து விடுகிறார்கள்.

மாறாகத் தங்கள் இயல்பை உயிர்ப்புடன் வைத்திருந்தவர்களுக்கு இறைவனின் உதவியால் வழிகாட்டுதல் கிடைக்கிறது. அதைக் கொண்டு அவர்கள் அவனைத் தலைவணங்கவும் அவனை ஆதரிக்கவும் தங்கள் வாழ்க்கையை அதற்கேற்ப மாற்றிக்கொள்ளவும் முடிகிறது. அத்தகையவர்களுக்கு அவர்களின் நாவுகளின் பயன்பாடு என்பது உண்மையை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதாகும். தவிர, இந்தப் பணி இறைவனுடையது. உங்கள் பணத்தையும் நேரத்தையும் இதற்காகச் செலவிடுங்கள் என்றும் அவர்கள் மக்களிடம் சொல்வதாகும். மக்கள் தங்கள் ஆற்றலை நல்ல செயல்களுக்கும் தொண்டுப் பணிகளுக்கும் அர்ப்பணிக்க ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் தங்களுக்குள்ளான மனக்குறைகளையும், முறையீடுகளையும் தீர்த்துக்கொள்ள முயல வேண்டும். சத்தியத்தை அங்கீகரிக்கும் செயல் அவர்களுக்குள் விழித்தெழச் செய்யும் உளவியலின் இயல்பான விளைவு, அவர்கள் இத்தகைய ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபட்டுவிடுவதுதான்.

இறைவனின் பார்வையில், சத்தியத்திற்கான அழைப்பை எதிர்ப்பதும், சத்தியத்திற்கான அழைப்பைச் சுற்றிக் கூடியிருப்பவர்களைத் தன் பகைமையின் நெருப்பில் எரிக்க முயல்வதும் மன்னிக்க முடியாத குற்றமாகும். மற்ற பெரும்பாலான பாவங்கள் மனித அலட்சியத்தாலோ பலவீனத்தாலோ செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் சத்தியத்தின் அழைப்பை எதிர்ப்பதற்குக் காரணம் கலகம்தான். கலகம் என்பது எத்தகையதொரு குற்றமென்றால், மனிதன் தனது தவற்றை ஒப்புக்கொண்டு கலகம் செய்வதை விட்டு விலகாவிட்டால் இறைவன் அதை ஒருபோதும் மன்னிக்க மாட்டான். மார்க்கத்திற்கான அழைப்பு அதன் கலப்படமற்ற, தூய்மையான வடிவத்தில் எழும்போதெல்லாம், அது இறைவனின் தனிப்பட்ட உதவியுடன் தொடங்கும் ஓர் இறைப்பணியாகவே தொடங்குகிறது. அப்படிப்பட்ட ஒன்றை எதிர்ப்பது இறைவனுக்கு எதிராக நிற்பதற்குச் சமம். இறைவனுக்கு எதிராக நின்று யாரால் வெற்றி பெற முடியும்?

اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَ يَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ
لِمَنْ يَّشَآءُ ؕ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلٰلًۢا بَعِيْدًا ﴿۱۱۶﴾
اِنْ يَّدْعُوْنَ مِنْ دُوْنِهٖۤ اِلَّاۤ اِنٰثًا ۚ وَ اِنْ يَّدْعُوْنَ اِلَّا شَيْطٰنًا
مَّرِيْدًا ﴿۱۱۷﴾ لَّعَنَهُ اللّٰهُ ۘ وَقَالَ لَاَتَّخِذَنَّ مِنْ عِبَادِكَ نَصِيْبًا
مَّفْرُوْضًا ﴿۱۱۸﴾ وَّلَاُضِلَّنَّهُمْ وَلَاُمَنِّيَنَّهُمْ وَلَاٰمُرَنَّهُمْ فَلَيُبَتِّكُنَّ
اٰذَانَ الْاَنْعَامِ وَلَاٰمُرَنَّهُمْ فَلَيُغَيِّرُنَّ خَلْقَ اللّٰهِ ؕ وَمَنْ يَّتَّخِذِ
الشَّيْطٰنَ وَلِيًّا مِّنْ دُوْنِ اللّٰهِ فَقَدْ خَسِرَ خُسْرَانًا مُّبِيْنًا ؕ ﴿۱۱۹﴾
يَعِدُهُمْ وَ يُمَنِّيْهِمْ ؕ وَمَا يَعِدُهُمُ الشَّيْطٰنُ اِلَّا غُرُوْرًا ﴿۱۲۰﴾
اُولٰٓئِكَ مَاْوٰىهُمْ جَهَنَّمُ ۖ وَ لَا يَجِدُوْنَ عَنْهَا مَحِيْصًا ﴿۱۲۱﴾
وَالَّذِيْنَ اٰمَنُوْا وَ عَمِلُوا الصّٰلِحٰتِ سَنُدْخِلُهُمْ جَنّٰتٍ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَاۤ اَبَدًا ؕ وَعْدَ اللّٰهِ
حَقًّا ؕ وَمَنْ اَصْدَقُ مِنَ اللّٰهِ قِيْلًا ﴿۱۲۲﴾

[116]உறுதியாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். அதுதவிர அனைத்தையும் தான் விரும்பியோருக்கு மன்னித்துவிடுவான். எவன் அல்லாஹ்வுக்கு

இணைவைக்கிறானோ அவன் கெடுவழியில் மிகு தொலைவுக்குச் சென்றுவிட்டவன் ஆவான். [117]அல்லாஹ்வை விட்டுவிட்டுப் பெண்(தெய்வங்)களையும் வரம்புமீறிய சாத்தானையுமே அவர்கள் அழைக்கின்றனர். [118]அல்லாஹ் அவனைச் சபித்தான். (அப்போது) அவன் அல்லாஹ்விடம், ''உன் அடியார்களில் கணிசமான எண்ணிக்கையினரை நான் எடுத்துக்கொள்வேன்; [119]அவர்களை நான் வழிகெடுப்பேன்; அவர்களுக்கு(த் தவறான) ஆசை ஊட்டுவேன்; (நேர்ச்சைக் கடனான) தங்கள் கால்நடைகளின் காதுகளை அறுக்கும்படி கட்டளையிடுவேன்; அல்லாஹ்வின் படைப்பில் மாற்றம் செய்யும்படி கட்டளையிடுவேன்'' என்று கூறினான். அல்லாஹ்வைத் தவிர்த்துச் சாத்தானைத் தன் நண்பனாக்கிக் கொள்பவன் வெளிப்படையான இழப்பை அடைவான். [120]அவன் அவர்களுக்கு வாக்குறுதியளிக்கிறான்; வீண் ஆசைகளை ஊட்டுகிறான்; சாத்தானின் வாக்குறுதிகள் அனைத்தும் ஏமாற்றமேயன்றி வேறில்லை. [121]அத்தகையோரின் உறைவிடம் நரகமேயாகும். அதிலிருந்து தப்பிச் செல்வதற்கான எந்த வழியையும் அவர்கள் காணமாட்டார்கள். [122]நம்பிக்கைகொண்டு நற்செயல்புரிவோரை நாம் சொர்க்கச் சோலைகளில் நுழையச் செய்வோம். அவற்றிடையே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அங்கு அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பர். அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. அல்லாஹ்வைவிடச் சொல்லில் மிக உண்மையாளன் யார்?

எவன், ஏகன் இறைவனைப் பற்றிக் கொள்கிறானோ, அவனுடைய செயல்களின் வேர்கள் இறைவனில் நிறுவப்பட்டு விடுகின்றன. அவனுக்குத் தற்காலிகமாகச் சில சறுக்கல்கள் ஏற்படலாம். ஆனால் அதன் பின்னர் அவன் திரும்பும் போது, மீண்டும் உண்மையான தொடக்கப் புள்ளியை அடைந்துவிடுகிறான். இறைவனைத் தவிர்த்துப் பிறவற்றில் சிக்கிக் கொண்டவன் இந்தப் பிரபஞ்சத்தின் ஒரே உண்மையான பூமியாகிய இந்த பூமியை இழந்தவனைப் போன்றவன். வெளிப்படையாக அவன் ஒரு நல்ல செயலைச் செய்தாலும், அது இறைவனின் மூலஊற்றிலிருந்து வெளிவரும் செயலாக இருப்பதில்லை. மாறாக, அது ஒரு மேலோட்டமான செயலாக இருக்கும், சிறிய அதிர்ச்சி ஏற்பட்ட உடனே அது பொய் என்று நிரூபிக்கப்பட்டு விடும். இதனால்தான் ஏகத்துவத்துத்தின் அடிப்படையில் செய்யப்படும் செயல்கள் மறுமையில் தங்கள் பயன்களைக் காட்டுகின்றன. மேலும் இணைவைத்தலின் கொள்கையுடன் செய்யப்படும் செயல்கள் இவ்வுலகிலேயே வீணாகி விடுகின்றன, மறுமையை அடைவதில்லை.

இந்த உலகில் மனிதனின் உண்மையான போட்டி சாத்தானுடன்தான். இருப்பினும், சாத்தானுக்கு எந்த ஆற்றலும் இல்லை. அவன் செய்யக் கூடியதெல்லாம், வாய்மொழி வாக்குறுதிகளால் ஒருவரை ஏமாற்றிக் கற்பனையான ஆசைகளில் சிக்க வைப்பதுதான். இப்படியாக மக்களைச் சத்தியத்திலிருந்து விலக்கி விடுவதாகும். சாத்தானின் கெடுவழியில் இரண்டு குறிப்பிட்ட வடிவங்கள் உள்ளன. ஒன்று மூடநம்பிக்கை, மற்றொன்று இறைவனின் படைப்புகளுக்கிடையில் வேறுபாட்டை உருவாக்குவது. மூடநம்பிக்கை என்பது ஒன்றிலிருந்து அதற்கு எவ்விதச் சம்பந்தமுமில்லாத ஒரு விளைவை எதிர்பார்ப்பது. உதாரணமாக, சுயமாக உருவாக்கப்பட்ட அனுமானங்களின் அடிப்படையில், இறைவனைத் தவிர வேறு ஏதாவது ஒன்றை வாழ்வில் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புவது. சொல்லப் போனால் இந்த உலகில் இறைவனைத் தவிர வேறு யாருக்கும் எந்த ஆற்றலும் இல்லை. நடைமுறையில் ஒருவர் தன் வாழ்க்கையை இந்த உலகத்தைத் தேடுவதற்கு அர்ப்பணித்துவிட்டு, மறுமை பற்றிய ஆசைக் கற்பனைகளின் அடிப்படையில் அது தானாகவே கிடைத்துவிடும் என்று நம்புவது.

சாத்தானுடைய சூழ்ச்சியின் மற்றொரு வழிமுறை, இறைவன் வகுத்துள்ள வரைபடத்தை மாற்றுவதாகும். இறைவன் மனிதனைப் படைத்தபோது, அவனது முழுக் கவனத்தையும் இறைவனின் மீது செலுத்தும் இயல்பை வழங்கியிருந்தான். அந்த இயல்பை மாற்றுவது மனிதனின் கவனத்தைப் பல்வேறு பொருள்கள்மீது திருப்புவதாகும்; அல்லது ஓர் இலக்கை அடைய இயற்கையாகவே நிர்ணயிக்கப்பட்ட முறையை மாற்றிவிட்டு, சுயமாக உருவாக்கப்பட்ட முறையைக் கொண்டு அந்த இலக்கை அடைய முயற்சி செய்வதாகும். பிரபஞ்சத்திற்குரிய இறைவனின் திட்டத்திற்கு இசைவாக மனிதர்கள் வாழ வேண்டிய விதம் அழிக்கப்படுவதுமாகும்.

لَيْسَ بِاَمَانِيِّكُمْ وَ لَاۤ اَمَانِيِّ اَهْلِ الْكِتٰبِ ؕ مَنْ يَّعْمَلْ
سُوْٓءًا يُّجْزَ بِهٖ ۙ وَ لَا يَجِدْ لَهٗ مِنْ دُوْنِ اللّٰهِ وَلِيًّا وَّ لَا نَصِيْرًا ﴿۱۲۳﴾
وَ مَنْ يَّعْمَلْ مِنَ الصّٰلِحٰتِ مِنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى وَ هُوَ مُؤْمِنٌ
فَاُولٰٓئِكَ يَدْخُلُوْنَ الْجَنَّةَ وَ لَا يُظْلَمُوْنَ نَقِيْرًا ﴿۱۲۴﴾ وَ مَنْ
اَحْسَنُ دِيْنًا مِّمَّنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَ هُوَ مُحْسِنٌ وَّاتَّبَعَ
مِلَّةَ اِبْرٰهِيْمَ حَنِيْفًا ؕ وَ اتَّخَذَ اللّٰهُ اِبْرٰهِيْمَ خَلِيْلًا ﴿۱۲۵﴾ وَ لِلّٰهِ
مَا فِي السَّمٰوٰتِ وَ مَا فِي الْاَرْضِ ؕ وَ كَانَ اللّٰهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيْطًا ﴿۱۲۶﴾ ع ۱۵ ۱۸

[123](நம்பிக்கையாளர்களே!) உங்கள் விருப்பப்படியோ வேதமுடையோரின் விருப்பப்படியோ (இறுதிமுடிவு) இராது. தீமை செய்தவன் அதற்குரிய தண்டனையைப் பெறுவான். அவன் அல்லாஹ்வைத்தவிர வேறு எந்தப் பொறுப்பாளரையும் உதவியாளரையும் (அங்குக்) காணமாட்டான். [124]ஆணாயினும் பெண்ணாயினும் நம்பிக்கைகொண்டு நற்செயல்புரிந்தவர்கள் சொர்க்கம் புகுவர். அவர்கள்மீது சிறிதளவும் அநீதி இழைக்கப்பட மாட்டாது. [125]எவர் அல்லாஹ்விற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நற்செயல்புரிந்து, முழுமையான நம்பிக்கைகொண்ட ஆப்ரஹாமின் வழிமுறையைப் பின்பற்றுகிறாரோ அவரைவிட மார்க்கத்தால் அழகியவர் யார்? அல்லாஹ் ஆப்ரஹாமை(த் தன்) நண்பராக ஆக்கிக்கொண்டான். [126]வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. அனைத்தையும் அல்லாஹ் சூழ்ந்தறிபவன்.

இறைவனையும் மறுமையையும் நம்பும் மக்கள் உலகியல் நோக்கங்களில் மூழ்கும்போது, அவர்கள் இறைவனையும் மறுமையையும் மறுப்பதன் மூலம் அவ்வாறு செய்வதில்லை. அவர்கள் செய்வதெல்லாம் மறுமை வாழ்க்கையைப் பற்றிய பிரச்சினையை சடங்குசார் நம்பிக்கையின் கட்டத்திற்குள் போட்டுவிட்டு, நடைமுறையில் தங்கள் அனைத்து முயற்சிகளையும் செயல்பாடுகளையும் உலக ஆதாயத்திற்காக அர்ப்பணித்து விடுவதுதான். உலகப் பெருமையையும் உலக ஆதாயத்தையும் அள்ளுவதில் அவர்கள் முற்றிலும் தீவிரமாக இருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரை அவற்றை அடைய, முழுமையான போராட்டம் தேவைப்படுகிறது. ஆனால், மறுமையின் வெற்றியை அடைய வெறும் ஆசைக் கற்பனைகள் மட்டுமே போதுமானவை என்று அவர்களுக்குத் தோன்றுகிறது. ஒரு மார்க்கப் பெரியவரின் பரிந்துரை, ஒரு பெரிய இனக்குழுவுடனான தொடர்பு, சில புனித வார்த்தைகளை ஓதுதல் போன்ற மலிவான செயல்கள், ஒரு நபரை நரகத்தின் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பிலிருந்து காப்பாற்றி, அவரை சொர்க்கத்தின் பசுமையான தோட்டங்களில் சேர்க்கும் என்ற நம்பிக்கையை உருவாக்குகின்றன. ஆனால் அத்தகைய ஆசைக் கற்பனைகள், எவ்வளவு அழகான வார்த்தைகளில் சொல்லப்பட்டாலும், யாருக்கும் பயனளிக்கப் போவதில்லை. இறைவனின் அமைப்புமுறை மிகவும் வலுவான அமைப்புமுறையாகும். அவனிடத்தில் அனைத்து முடிவுகளும் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுபவை, வெறும் ஆசைகளை அடிப்படையாகக் கொண்டவை அல்ல. இறைவனின் நீதிமன்றத்தில், ஒவ்வொரு மனிதனின் செயலும் பார்க்கப்படும். செயல்களைப்

பொறுத்தே தீர்ப்பு வழங்கப்படும். இறைவனிடம் தீர்ப்புக்கு அடிப்படையாக இருக்கக்கூடியது இறைவனின் நீதிச் சட்டத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

இறைவன் தனது அருள்மழைகளைப் பொழியக்கூடிய இறைவனின் அந்த அடியான் யார்? இதற்கு ஒரு வரலாற்று உதாரணம் ஆப்ரஹாம். இந்த அடியார்கள் எத்தகையவர்கள் என்றால் உலகில் இறைவனின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக வாழ்ந்தவர்கள். இவர்கள் தங்களை இறைவனை நோக்கி ஒருமுகப்படுத்தி இறைவனுக்கு முழுமையாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். இறைவனுக்கு முற்றிலும் தங்கள் விசுவாசத்தை உரித்தாக்கியவர்கள். இவர்கள் கொடுமைகளிலிருந்தும், கலகத்திலிருந்தும் விலகி, நீதியுடனும் பணிவுடன் வாழும் வகையில் இந்த உலகில் தங்கள் விவகாரங்களை நிலைநிறுத்திக் கொண்டவர்கள்.

முகம் ஒரு மனிதனின் முழு இருப்புக்குமான பிரதிநிதியாகும். முகத்தை இறைவனை நோக்கித் திருப்புவதென்பது, ஒரு மனிதன் தனது முழு இருப்பையும் இறைவனை நோக்கித் திருப்புவதாகும்.

இறைவனே முழு பிரபஞ்சத்திற்கும் உரிமையாளன். அவனுக்கு எல்லா வகையான ஆற்றல்களும் உள்ளன. ஆனால் தற்போதைய உலகில், இறைவன் 'மறைவு' என்னும் திரைக்குப் பின்னால் தன்னை ஒளித்துக் கொண்டான். உலகில் எழும் தீமைகள் அனைத்தும் மனிதன் இறைவனைக் காணாததால்தான் எழுகின்றன. தான் விரும்பியதைச் செய்ய சுதந்திரமாக இருப்பதாக அவன் நினைக்கிறான். மனிதன் தனது கட்டுப்பாட்டில் எதுவும் இல்லை என்பதை உணர்ந்தால், மறுமை நாளில் அவனுக்கு என்ன நேருமோ அது இன்றே அவனுக்கு நேர்ந்துவிடும்.

وَيَسْتَفْتُوْنَكَ فِي النِّسَآءِ ؕ قُلِ اللّٰهُ يُفْتِيْكُمْ فِيْهِنَّ ۙ وَمَا يُتْلٰى
عَلَيْكُمْ فِي الْكِتٰبِ فِيْ يَتٰمَى النِّسَآءِ الّٰتِيْ لَا تُؤْتُوْنَهُنَّ مَا
كُتِبَ لَهُنَّ وَتَرْغَبُوْنَ اَنْ تَنْكِحُوْهُنَّ وَالْمُسْتَضْعَفِيْنَ مِنَ
الْوِلْدَانِ ۙ وَاَنْ تَقُوْمُوْا لِلْيَتٰمٰى بِالْقِسْطِ ؕ وَمَا تَفْعَلُوْا مِنْ
خَيْرٍ فَاِنَّ اللّٰهَ كَانَ بِهٖ عَلِيْمًا ﴿١٢٧﴾ وَاِنِ امْرَاَةٌ خَافَتْ مِنْۢ
بَعْلِهَا نُشُوْزًا اَوْ اِعْرَاضًا فَلَا جُنَاحَ عَلَيْهِمَاۤ اَنْ يُّصْلِحَا بَيْنَهُمَا
صُلْحًا ؕ وَالصُّلْحُ خَيْرٌ ؕ وَاُحْضِرَتِ الْاَنْفُسُ الشُّحَّ ؕ وَاِنْ تُحْسِنُوْا
وَتَتَّقُوْا فَاِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا ﴿١٢٨﴾ وَلَنْ تَسْتَطِيْعُوْۤا

اَنۡ تَعۡدِلُوۡا بَيۡنَ النِّسَآءِ وَلَوۡ حَرَصۡتُمۡ فَلَا تَمِيۡلُوۡا كُلَّ الۡمَيۡلِ فَتَذَرُوۡهَا كَالۡمُعَلَّقَةِ ؕ وَاِنۡ تُصۡلِحُوۡا وَتَتَّقُوۡا فَاِنَّ اللّٰهَ كَانَ غَفُوۡرًا رَّحِيۡمًا ﴿۱۲۹﴾ وَاِنۡ يَّتَفَرَّقَا يُغۡنِ اللّٰهُ كُلًّا مِّنۡ سَعَتِهٖ ؕ وَكَانَ اللّٰهُ وَاسِعًا حَكِيۡمًا ﴿۱۳۰﴾

[127]*(நபியே!) பெண்களைக் குறித்து மக்கள் உம்மிடம் மார்க்கத் தீர்ப்புக் கேட்கிறார்கள். (அவர்களுக்கு) நீர் கூறுவீராக! 'பெண்களைக் குறித்து அல்லாஹ் உங்களுக்குத் தீர்ப்பு வழங்குகிறான். அநாதைப் பெண்களுக்கு வரையறுக்கப்பட்டதை நீங்கள் அவர்களுக்கு வழங்காமலே அவர்களை மணந்துகொள்ள விரும்புவது பற்றியும் (அவர்களுடன் உள்ள) வலுவற்ற குழந்தைகள் குறித்தும் அநாதைகளிடம் நீதியோடு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்தும் இவ்வேதத்திலுள்ள வசனங்கள் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்படுகின்றன. (அவர்களுக்கு) நீங்கள் எந்த ஒரு நன்மையைச் செய்தாலும் அதனை அல்லாஹ் நன்கறியக்கூடியவன்.*
[128]*ஒரு பெண் தன் கணவன் தன்னை வெறுத்துவிடுவான் என்றோ அல்லது புறக்கணித்துவிடுவான் என்றோ அஞ்சினால் அவ்விருவரும் தங்களிடையே ஏதேனும் ஒரு சமாதான முடிவை ஏற்படுத்திக்கொள்வது குற்றமாகாது. சமாதானமே சிறந்ததாகும். ஆனால் பேராசை மனித இயல்பில் கலந்துள்ளது. நீங்கள் நல்ல முறையில் நடந்து இறையச்சத்தோடு செயல்பட்டீர்களானால் நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவனாக உள்ளான்.*
[129]*(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் என்னதான் விரும்பினாலும் மனைவியருக்கு இடையே ஒருபோதும் நீதியுடன் நடந்துகொள்ள முடியாது. ஆகவே ஒருத்தியின் பக்கம் முற்றிலும் சாய்ந்து அடுத்தவளைப் பேணாமலும் (மணவிலக்கு அளிக்காமலும்) அந்தரத்தில் தொங்கவிடப்பட்டவள் போல் ஆக்கிவிடாதீர்கள். நீங்கள் சமாதானம் செய்து இறையச்சத்துடன் நடந்தால் (அறிந்து கொள்ளுங்கள்) அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன்.* [130]*(சமாதானமாக வாழமுடியாத நிலையில்) அவர்கள் இருவரும் பிரிந்துவிட்டால் அல்லாஹ் தன் விரிந்த (அருள்) வளத்தால் ஈடுசெய்து (ஒருவர் மற்றொருவரிடம் தேவையற்ற) தன்னிறைவுடையவராக ஆக்கிவிடுவான். அல்லாஹ் விரிந்த (அருள்) வளமுடையவன்; ஞானம் மிக்கவன்.*

கேள்வி கேட்டவர்கள் சில சமூக நடப்புகளில் மார்க்கக் கட்டளையை அறிந்துகொள்ள நாடினர். இது தொடர்பான கட்டளையை வழங்கும்போது நன்மை, நீதி, அறிவுரை, இறையச்சம் ஆகியவை வலியுறுத்தப்பட்டன. இதற்குக் காரணம், எந்தவொரு சட்டமும் அதைச் செயல்படுத்துபவர் இறைவனுக்கு அஞ்சி உண்மையிலேயே நீதியைத் தேடும்போது மட்டுமே அதன் நோக்கத்தை நிறைவேற்றுகிறது. இவ்வாறு இல்லையென்றால், சட்டத்துடன் வெளிப்படையாக இணங்கி நிறைவேற்றினாலும் உண்மையான மேம்பாடு ஏற்படாது. தீமை செய்பவன் உண்மையான பிரச்சினை இறைவனிடம் தொடர்புடையது என்று தீமையைப் பற்றி அஞ்சும்போதுதான் சமூகத்தில் உண்மையான சீர்திருத்தம் ஏற்படும். தீமை செய்த பிறகு, அவனுடைய பிடியிலிருந்து தப்பிக்க எந்த வழியும் இல்லை. அதேபோல் நன்மை செய்பவன், மக்களிடமிருந்து எந்த வெகுமதியையும் பெறாவிட்டாலும், இறைவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்றும், அதற்கான வெகுமதியை உறுதியாக அவன் தனக்கு வழங்குவான் என்றும் நினைக்க வேண்டும். நரகத்தைப் பற்றிய பயம் ஒருவரை அநீதி செய்வதிலிருந்து தடுக்கிறது. சொர்க்கத்தின் நம்பிக்கை, நேர்மையான வாழ்க்கையின் விளைவாக வரும் தவிர்க்க முடியாத இழப்புகளைத் தாங்கும் தைரியத்தை அளிக்கிறது.

கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாட்டிற்கு எப்போதும் பேராசைதான் காரணம். ஒரு தரப்பு, மற்ற தரப்பைக் கருத்தில் கொள்ளாமல், தனது சொந்தக் கோரிக்கைகளை மட்டுமே நிறைவேற்ற விரும்புகிறது. இந்த மனநிலை இருவரும் ஒருவர் மற்றொருவர் மீது அதிருப்தி அடையச் செய்துவிடுகிறது. இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் குறைபாடுகளைப் புரிந்துகொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துக் கொண்டு, பரஸ்பர தீர்வை எட்ட முயல்வதே சரியான அணுகுமுறை. ஒருவர் மற்றொருவரை விட்டுக்கொடுத்துக் கருணை காட்ட வேண்டும் என்று இறைவன் கோருவது போல, இறைவனும் தன் அடியார்களிடம் மிகுந்த சலுகையும் கருணையும் காட்டுகிறான். இறைவனிடம், மனிதன் பிடிபடுவது அவனது இயற்கையான பலவீனங்களின் காரணமாக அல்ல, மாறாக அவன் வேண்டுமென்றே செய்கின்ற கலகத்தின் காரணமாகத்தான். மனிதன் இறைவனுக்கு அஞ்சி, மனதில் சீர்திருத்த ஆசை கொண்டிருந்தால், அவன் சரியான நோக்கத்துடன் செய்யக்கூடிய எதுவும் இறைவனிடம் அவனுக்காக மன்னிப்புப் பெறக்கூடியதாகக் கருதப்படும்.

இத்துடன் மனிதன் தன்னை மற்றவர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பவன் என்கின்ற தவறான புரிதலில் ஒருபோதும் இருந்துவிடக்கூடாது ஒவ்வொரு மனிதனின் பிரச்சனைகளையும் தீர்ப்பவன் இறைவன் மட்டும் தான், புறவயமாக அவன் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் சரியே.

وَلِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَ مَا فِي الْاَرْضِ ؕ وَلَقَدْ وَصَّيْنَا
الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ وَ اِيَّاكُمْ اَنِ اتَّقُوا اللّٰهَ ؕ
وَ اِنْ تَكْفُرُوْا فَاِنَّ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَ مَا فِي الْاَرْضِ ؕ
وَكَانَ اللّٰهُ غَنِيًّا حَمِيْدًا ﴿۱۳۱﴾ وَلِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي
الْاَرْضِ ؕ وَكَفٰى بِاللّٰهِ وَكِيْلًا ﴿۱۳۲﴾ اِنْ يَّشَاْ يُذْهِبْكُمْ اَيُّهَا النَّاسُ
وَيَاْتِ بِاٰخَرِيْنَ ؕ وَكَانَ اللّٰهُ عَلٰى ذٰلِكَ قَدِيْرًا ﴿۱۳۳﴾ مَنْ كَانَ
يُرِيْدُ ثَوَابَ الدُّنْيَا فَعِنْدَ اللّٰهِ ثَوَابُ الدُّنْيَا وَالْاٰخِرَةِ ؕ
ع ۱۹/۱۶ وَكَانَ اللّٰهُ سَمِيْعًا بَصِيْرًا ﴿۱۳۴﴾

[131]வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. (நம்பிக்கையாளர்களே!) உங்களுக்கு முன் வேதம் வழங்கப்பட்டோருக்கும் உங்களுக்கும் ''அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்'' என்றே அறிவுறுத்தியுள்ளோம். நீங்கள் மறுத்தால் (அவனுக்கு இழப்பு ஏதுமில்லை) வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்கே உரியவையாகும்.அல்லாஹ் தேவை எதுவுமற்றவன்; புகழுக்குரியவன். [132]வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. சார்ந்திருப்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன். [133]மனிதர்களே! அவன் விரும்பினால் உங்கள் அனைவரையும் அகற்றி விட்டு மற்றவர்களைக் கொண்டு வருவான். இவ்வாறு செய்வதற்கு அல்லாஹ் முழு ஆற்றலுடையவன். [134]எவர் இவ்வுலக நன்மையை (மட்டும்) விரும்புகிறாரோ (அவர் அறிந்துகொள்ளட்டும்) - அல்லாஹ்விடம் இவ்வுலக நன்மையும் மறுமையின் நன்மையும் உள்ளன. அல்லாஹ் அனைத்தையும் செவியுறுபவன்; உற்றுநோக்குபவன்.

ஒரு மனிதன் உள்ளிருந்து இறைவனுக்குரியவனாக மாறும்போதுதான், இந்த உலகில் அவன் மேற்கொள்ள வேண்டிய நேர்மையான வாழ்க்கையை மேற்கொள்ள முடியும். இறைவனைப் பிரபஞ்சத்தின் அதிபதியாக அறிந்து, இறைவனுக்கு மட்டும் அஞ்சி, அவன்மீது மட்டுமே நம்பிக்கை வைத்து, மறுமையை உண்மையாதாகக் கருதி அதை நோக்கி கவனத்தைத் திருப்புவது ஆகியவையே மனிதனை இறைவன் விரும்பும் வழியில்

இவ்வுலகில் நேர்மையான வாழ்க்கையை வாழவும், மறுமையில் அவனை வெற்றிபெறச் செய்யவும் தகுதிவுடையவன் ஆக்குகின்றன. அதனால்தான் இறைத்தூதர்களின் படிப்பினைகளில் இதன் மீதே எப்போதும் அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

தற்போதைய உலகம் சோதனைக்கானதாகும். இங்கே, ஒவ்வொரு மனிதரும் யார் நல்லவர், யார் கெட்டவர் என்று சோதிக்கப்படுகிறார்கள். இதற்காகவே, தற்போதைய உலகம் எல்லா வகையான செயல்களையும் மனிதன் சுதந்திரமாகச் செய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவனுக்குக் கருமையை வெள்ளை என்றும், தனது செயலற்ற தன்மையைச் செயலென்றும் அழைக்கும் வாய்ப்புக் கூட இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. இங்கே ஒரு மனிதன் தீமைகளில் ஈடுபடுவதும், அதனை விவரிக்க அழகான வார்த்தைகளைக் கண்டுபிடிப்பதும் சாத்தியம். இங்கே மனிதன் ஒரு வெளிப்படையான உண்மையை மறுத்துவிடுவதும், தனது மறுப்புக்கு நம்பத்தகுந்த விளக்கத்தைத் தேடுவதும் சாத்தியமாகும். இங்கே மனிதன் கௌரவத்திற்கான தேடல், புகழுக்கான பிரியம், இலாபம் ஈட்டல், தன் வசதி போன்றவற்றைக் கொண்டு தனது வாழ்க்கையை கட்டமைத்துக்கொள்ள முடியும், ஆயினும் தான் முற்றிலும் சத்தியத்திற்காக உழைக்கிறேன் என்று மக்களை நம்ப வைப்பதில் வெற்றி பெறவதும் சாத்தியம்தான். இங்கே ஒரு நபர் இறைவனின் மார்க்கத்தைத் தனது உலகியல் இலக்குகளையும் பொருளியல் இலக்குகளையும் அடைவதற்கான ஒரு மூலாதாரமாக ஆக்கிக்கொள்ள முடியும். ஆயினும், அவன் உலகில் தொடர்ந்து செழித்து வளர்கிறான். இதுவும் சாத்தியமாகிறது. இங்கே ஒருவர் சட்டப்பூர்வமானதைக் கைவிட்டு, சட்டவிரோதமான வழிகளைப் பின்பற்றவும், நீதிக்குப் பதிலாக ஒடுக்குமுறையின் பாதையைப் பின்பற்றவும் முடியும், ஆனாலும் அவரைத் தடுக்க யாரும் இல்லை. இதுபோன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில், மனிதன் விரும்பினால் உண்மைக்கும் நேர்மைக்கும் தன்னைக் கட்டுப்பட்டவனாக்கிக் கொள்ளலாம். விரும்பினால், கலகத்தையும் அநீதியையும் நோக்கித் திரும்பவும் செய்யலாம். உண்மை என்னவென்றால், மார்க்கத்தின் எல்லாக் கட்டளைகளிலும், மனிதன் இறைவனுக்கு அஞ்சுகிறானா இல்லையா என்பதுதான் மிக முக்கியமான கூறு. இறைவனின் அச்சம் மட்டுமே அவனைப் பொறுப்பான வாழ்க்கையை வாழத் தகுதியானவனாக்குகிறது. இறைவனின் அச்சம் மட்டும் இல்லையென்றால், பொய்யை உண்மையின் தோற்றத்தில் முன்வைக்கக்கூடிய, அநீதியின் அடிப்படையில் அரும் பெரும் முன்னேற்றங்களை அடையக்கூடிய ஒரு உலகத்தில், ஒவ்வொரு அடக்குமுறையாளரும் தனது அடக்குமுறையை மறைக்க அழகான வார்த்தைகளைக் கண்டுபிடிக்கும் இடத்தில் – பொய் சொல்வதிலிருந்து ஒருவரைத் தடுக்கக்கூடியது எது?

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ بِالْقِسْطِ شُهَدَآءَ لِلّٰهِ وَلَوْ
عَلٰٓى اَنْفُسِكُمْ اَوِ الْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ ۚ اِنْ يَّكُنْ غَنِيًّا اَوْ
فَقِيْرًا فَاللّٰهُ اَوْلٰى بِهِمَا ۣ فَلَا تَتَّبِعُوا الْهَوٰٓى اَنْ تَعْدِلُوْا ۚ وَاِنْ
تَلْوٗٓا اَوْ تُعْرِضُوْا فَاِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا ﴿١٣٥﴾

[135](ஓரிறை) நம்பிக்கையாளர்களே! நீதியில் உறுதியாக நிலைத்திருப்பவர்களாகவும் அல்லாஹ்வுக்காகச் சாட்சியம் அளிப்பவர்களாகவும் இருங்கள். அ(ச்சாட்சியமான)து உங்களுக்கோ உங்கள் தாய் தந்தையருக்கோ உறவினர்களுக்கோ எதிராக இருந்தாலும் சரியே. (எவருக்கெதிராகச் சாட்சியம் கூறுகிறீர்களோ) அவர் செல்வராயினும் ஏழையாயினும் சரி (உண்மையே கூறுங்கள், ஏனெனில்) அவ்விருவருக்கும் நலம் விரும்புவதில் உங்களைவிட அல்லாஹ்வே மேலானவன். எனவே நீங்கள் மனவிருப்பத்தைப் பின்பற்றி நீதியிலிருந்து பிறழ்ந்து விடாதீர்கள். நீங்கள் (உண்மையை) மறைத்தாலோ (அதிலிருந்து) விலகினாலோ (அறிந்து கொள்ளுங்கள்!) - நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவனாக உள்ளான்.

சமூக வாழ்க்கையில் அடிக்கடி இப்படி நடப்பதுண்டு. மனிதனுக்கு முன்னால் ஒரு பிரச்சினை வருகிறது. அதில் ஒரு பாதை அவனது நலன்களுக்கும் விருப்பங்களுக்குமானதாகவும் மற்றொன்று உண்மைக்கும் நீதிக்குமானதாகவும் இருக்கின்றன. இறைவனைப் பற்றி அலட்சியமாக இருப்பவர்கள், இறைவன் எப்போதும் தங்களைக் கண்காணித்து வருகிறான் என்று நம்பாதவர்கள், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் தங்கள் விருப்பங்களின் திசையை நோக்கி நடக்கத் தொடங்கிவிடுகிறார்கள். உண்மையைப் புறக்கணித்துத் தங்கள் சொந்த நலன்களுக்கும் வசதிக்கும் ஏற்ப நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதை அவர்கள் வெற்றியாகக் கருதுகிறார்கள். ஆனால் இறைவனுக்கு அஞ்சி, இறைவனைத் தங்கள் கண்காணிப்பாளனாகக் கொண்டவர்கள், எல்லாவற்றிலும் நீதியின் அம்சத்தைக் காண்கிறார்கள், உண்மைக்கும் நீதிக்கும் தேவையானது எதுவோ அதையே செய்கிறார்கள். அவர்களுக்கு மரணம் வரும் நிலையில் அவர்கள் யாருக்கும் அநீதி செய்யாத நிலையிலும், தன்னைத்தானே முழுமையாக நீதியிலும் சமத்துவத்திலும் நிலைநிறுத்திய நிலையில் மரணிக்க வேண்டும் என்பதே எப்போதும் அவர்களுடைய முயற்சியாக இருக்கிறது.

அவர்களுடைய நீதியின் மீதான பற்றுதல் மிகவும் உயர்ந்ததாக இருப்பதால், நீதியிலிருந்து விலகும் எந்தவொரு நடத்தையையும் அவர்களால் பார்க்கவும் பொறுத்துக்கொள்ளவும் முடிவதில்லை. ஒருவர் இன்னொருவருக்கு அநீதி இழைக்கும் ஒரு வழக்கு முன் வரும்போதெல்லாம், உண்மையை அறிவிக்க இத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்கள் தயங்குவதில்லை. நீதியை அறிவிப்பது அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்குத் தீங்கு விளைவித்தாலும், அவர்களின் சொந்த நலன்களுக்கே தீங்கு விளைவித்தாலும், நீதியின் நோக்கில் என்ன சொல்ல வேண்டுமோ அவர்கள் அதையே சொல்கிறார்கள். அவர்களுடைய நாவு திறந்தால், இறைவனுக்காகவே திறக்கிறது, வேறெந்த நோக்கத்திற்காகவும் அல்ல. இதைபோலவே, ஒரு வழக்கில் தொடர்புடையவர் ஆற்றல் வாய்ந்தவராக இருந்தால், அவருக்கு அவரது உரிமையை வழங்கிவிடுவதும், வழக்கில் தொடர்புடையவர் பலவீனமாக இருந்தால், அவருக்கு அவரது உரிமையை வழங்காமலிருப்பதும் தவறாகும். ஒரு நம்பிக்கையாளர், ஆற்றலுடையவராக இருந்தாலும் சரி, பலவீனமாக இருந்தாலும் சரி, எல்லோரிடமும் நீதியுடன் நடந்துகொள்பவர் ஆவார்.

ஒரு மனிதன் அநீதியை ஆதரிக்கும்போது, "நான் தவறு செய்பவருக்கு உடந்தையாக இருக்கிறேன்' என்று கூறி அவ்வாறு செய்வதில்லை. மாறாக, அவன் தனது அநீதிக்கு நீதியின் நிறம் கொடுக்க முயற்சி செய்கிறான். அத்தகைய சந்தர்ப்பத்தில், ஒவ்வொரு மனிதனும் இரண்டு மனப்பான்மைகளில் ஒன்றை மேற்கொள்கிறான். ஒன்று அவன் அநீதிச் செயல் என்பதை மாற்றுவான். விஷயத்தின் தன்மையை அவன் எத்தகைய வார்த்தைகளில் விவரிப்பான் என்றால், இது அநீதி தொடர்பான விஷயம் அல்ல, மாறாக முற்றிலும் நீதி தொடர்பான விஷயம், என்றும், யார்மீது கொடுமை இழைக்கப்படுகிறதோ அவர் கொடுமை இழைக்கப்படுவதற்குத் தகுதியானவர் என்றும் கூறுவான். இரண்டாவது நிலை என்னவென்றால் மனிதன் அமைதியாக இருந்துகொள்வது. இங்கே அநீதி நடக்கிறது என்று அறிந்தும், அவன் பின்வாங்கி நழுவிச் செல்கிறான், தான் சொல்ல வேண்டிய நியாயத்தைச் சொல்வதில்லை. இந்த வகையான நடத்தை, இறைவன் தன்னைக் கண்காணிக்கிறான் என்பதை அவன் உணரவில்லை என்பதையே நிறுவுகிறது.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِيْ
نَزَّلَ عَلٰى رَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِيْٓ اَنْزَلَ مِنْ قَبْلُ ؕ وَمَنْ يَّكْفُرْ
بِاللّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ وَالْيَوْمِ الْاٰخِرِ فَقَدْ ضَلَّ

ضَلٰلًا بَعِيْدًا ﴿١٣٦﴾ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا ثُمَّ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا
ثُمَّ ازْدَادُوْا كُفْرًا لَّمْ يَكُنِ اللّٰهُ لِيَغْفِرَ لَهُمْ وَلَا لِيَهْدِيَهُمْ
سَبِيْلًا ﴿١٣٧﴾ بَشِّرِ الْمُنٰفِقِيْنَ بِاَنَّ لَهُمْ عَذَابًا اَلِيْمًا ﴿١٣٨﴾ الَّذِيْنَ
يَتَّخِذُوْنَ الْكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ ؕ اَيَبْتَغُوْنَ
عِنْدَهُمُ الْعِزَّةَ فَاِنَّ الْعِزَّةَ لِلّٰهِ جَمِيْعًا ﴿١٣٩﴾

[136]நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் அவன் தன் தூதருக்கு அருளியுள்ள வேதத்தின் மீதும் அவன் முன்னர் அருளியுள்ள வேதங்களின் மீதும் நம்பிக்கைகொள்ளுங்கள். எவர் அல்லாஹ்வையும் அவனது வானவர்களையும் அவனது வேதங்களையும் அவனது தூதர்களையும் மறுமை நாளையும் நம்ப மறுக்கின்றாரோ அவர் வழிதவறி மிகு தொலைவு சென்று விட்டார். [137](ஓரிறை)நம்பிக்கை கொண்டு பின்னர் மறுத்து, பின்னர் நம்பிக்கைகொண்டு மீண்டும் மறுத்துத் தொடர்ந்து மறுப்பையே உறுதிப்படுத்திக் கொண்டவர்களை அல்லாஹ் மன்னிக்கவேமாட்டான்; அவர்களை நேர்வழியில் செலுத்தவும் மாட்டான். [138](இத்தகைய) ''நயவஞ்சகர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு'' என (நீர் அவர்களுக்கு 'நற்செய்தி' கூறுவீராக! [139]அவர்கள் நம்பிக்கையாளர்களைத் தவிர்த்து மறுப்பாளர்களை நண்பர்களாக்கிக் கொள்பவர்கள். அவர்களிடமா இவர்கள் (நயவஞ்சகர்கள்) கண்ணியத்தைத் தேடுகின்றனர்? கண்ணியம் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன.

"நம்பிக்கையாளர்களே! நம்பிக்கைகொள்ளுங்கள்' என்பது "முஸ்லிம்களே, முஸ்லிம்களாகி விடுங்கள்' என்று சொல்வதைப் போன்றது. இறைவனின் பார்வையில் ஒருவர் நம்பிக்கையாளராகக் கருதப்படுவதற்கு, தன்னை நம்பிக்கையாளர் என்று சொல்லிக் கொள்வதோ, நம்பிக்கையாளர் என்று கருதுவதோ மட்டும் போதாது. இறைவன் தனது உறுதிக்கும், விசுவாசத்திற்கும் மையமாக மாறும் வகையில் இறைவனைக் கண்டறிபவர் மட்டுமே இறைவனின் பார்வையில் நம்பிக்கையாளராகக் கருதப்படுவார். அவர் இறைத்தூதரை எப்படி நம்புகிறார் என்றால், அவரைத் தவிர மற்ற எல்லா வழிகாட்டுதல்களும் அவருக்கு உண்மையற்றதாகி விடுகின்றன. அவர் இறைவேதத்தைத் தனது எண்ணங்களும் உணர்ச்சிகளும் அதற்கு

முற்றிலும் கீழ்ப்படிந்ததாக ஆகும் வகையில் தழுவிக் கொள்கிறார். இறைவனின் காவலர்கள் எல்லா நேரங்களிலும் தனது வலது மற்றும் இடது பக்கங்களில் இருப்பதாக உணரத் தொடங்கும் வகையில், வானவர்கள் மீதான நம்பிக்கையைத் தனது இதயத்தில் பதிய வைப்பவர். மறுமையின் தராசில் தனது ஒவ்வொரு சொல்லையும் செயலையும் நிறுத்திப் பார்க்கும் அளவுக்கு மறுமையை ஒப்புக்கொள்பவர். எவர் இவ்விதமான நம்பிக்கையாளராக மாறுகிறாரோ அவர் இறைவனின் பார்வையில், வழிகாட்டுதலுக்கும் வெற்றிக்கும் உரிய பாதையில் இருக்கிறார். இந்த வழியில் நம்பிக்கையாளராக மாறாத எவரும், அவர் எவ்வளவுதான் கீழ்ப்படிபவராகவும், நம்பிக்கை யாளராகவும் தன்னைக் கருதினாலும் வழிபிறழ்ந்த மனிதர்தாம்.

ஏற்றுக்கொள்வதா இல்லையா என்ற இந்தப் போராட்டம் ஒரு மனிதனின் வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது. ஓர் எண்ணம் எழும்போதெல்லாம், ஒரு மனிதனின் மனம் இரண்டு திசைகளில் ஒன்றில் செல்ல முனைகிறது. ஆசைகளை நோக்கி அல்லது சத்தியத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதை நோக்கி. ஒரு செயல் நடக்கும் நேரத்தில், ஒருவரின் எண்ணங்களும் உணர்ச்சிகளும் ஆசையின் திசையில் சென்றால், அந்த நம்பிக்கையாளர் நம்பிக்கையை மறுத்தது போல் ஆகும். மாறாக, அவர் தனது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் சத்தியத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தினால், அது நம்பிக்கையாளர் நம்பிக்கை கொள்வது ஆகும். அவர் நம்பிக்கையாளராக மாறி உலக வாழ்க்கையில் நுழைகிறார். அதன் பிறகு, அவருக்கு முன் ஓர் உண்மையான நிகழ்வு வருகிறது. ஒரு நபர் அத்தகைய சந்தர்ப்பத்தில் ஒரு பணிவான அணுகுமுறையை மேற்கொண்டு, உண்மையை ஒப்புக்கொள்கிறார். இரண்டாவது நபரிடம் ஆணவத்தின் உளவியல் விழித்துக்கொண்டு, அவர் உண்மையை நிராகரிக்கிறார். முதல் நிலை நம்பிக்கை நிலை, இரண்டாவது நிலை நம்பிக்கை மறுப்பு நிலை. உண்மையான நம்பிக்கையாளன் அல்லாத ஒருவன் இந்த உலகத்தின் கண்ணியத்தையும் மகிமையையும் விரும்புகிறான். எனவே, யாருடன் பழகுவதன் மூலம் தனது கண்ணியமும் மகிமையும் மிகுகுமோ, அவர்கள் பொய்மைக்குரியவர்களாக இருந்தாலும் கூட, அவர்களை நோக்கிச் சாய்கிறான். யாருடைய தொடர்பினால் தனது கௌரவமும் கண்ணியமும் மிகாதோ அவர்கள் நேர்மையாளர்களாக இருந்தாலும் கூட அவர்களிடம் ஈர்க்கப்படுவதில்லை.

وَقَدْ نَزَّلَ عَلَيْكُمْ فِي الْكِتٰبِ اَنْ اِذَا سَمِعْتُمْ اٰيٰتِ اللّٰهِ يُكْفَرُ بِهَا
وَ يُسْتَهْزَاُ بِهَا فَلَا تَقْعُدُوْا مَعَهُمْ حَتّٰى يَخُوْضُوْا فِيْ حَدِيْثٍ
غَيْرِهٖۤ ۚ اِنَّكُمْ اِذًا مِّثْلُهُمْ ؕ اِنَّ اللّٰهَ جَامِعُ الْمُنٰفِقِيْنَ وَالْكٰفِرِيْنَ

فِيْ جَهَنَّمَ جَمِيْعًا ۙ﴿۱۴۰﴾ الَّذِيْنَ يَتَرَبَّصُوْنَ بِكُمْ ۚ فَاِنْ كَانَ لَكُمْ فَتْحٌ
مِّنَ اللّٰهِ قَالُوْٓا اَلَمْ نَكُنْ مَّعَكُمْ ۖ وَاِنْ كَانَ لِلْكٰفِرِيْنَ نَصِيْبٌ ۙ
قَالُوْٓا اَلَمْ نَسْتَحْوِذْ عَلَيْكُمْ وَنَمْنَعْكُمْ مِّنَ الْمُؤْمِنِيْنَ ۭ فَاللّٰهُ
يَحْكُمُ بَيْنَكُمْ يَوْمَ الْقِيٰمَةِ ۭ وَلَنْ يَّجْعَلَ اللّٰهُ لِلْكٰفِرِيْنَ عَلَى
الْمُؤْمِنِيْنَ سَبِيْلًا ﴿۱۴۱﴾ ع ۱۷

[140]இறை வசனங்கள் (எவராலும்) மறுக்கப்படுவதையும் ஏளனம் செய்யப்படுவதையும் நீங்கள் செவியுற்றால் அதை விட்டுவிட்டு, வேறு பேச்சில் ஈடுபடும்வரை அவர்களுடன் நீங்கள் அமர வேண்டாம் என்று அல்லாஹ் இந்த வேதத்தில் கட்டளையிட்டுள்ளான். அப்(படி அமரும்)போது நீங்களும் அவர்களைப்போல் ஆகிவிடுவீர்கள். நயவஞ்சகர்களையும் மறுப்பாளர்களையும் அல்லாஹ் நரகத்தில் ஒன்று சேர்ப்பான். [141](நயவஞ்சகர்களாகிய) அவர்கள் உங்களை கவனித்துக் கொண்டிருக்கின்றனர். உங்களுக்கு அல்லாஹ்வினால் ஏதேனும் வெற்றி கிடைத்தால் (அவர்கள் உங்களிடம் வந்து) ''நாங்களும் உங்களுடன் இருக்கவில்லையா?'' என்று கேட்கின்றனர். மறுப்பாளர்களுக்கு (வெற்றியில்) ஏதேனும் பங்கு கிடைத்துவிட்டால், (அவர்களிடம் சென்று) ''நாங்கள் (நம்பிக்கையாளர்களுக்கு உதவிபுரிந்து) உங்களை வெல்ல முடியும் என்றிருந்தும் நம்பிக்கையாளர்களிடமிருந்து உங்களைக் காப்பாற்றவில்லையா?'' என்று கேட்கின்றனர். மறுமை நாளில் அல்லாஹ்வே உங்களிடையே தீர்ப்பளிப்பான். அல்லாஹ் ஒருபோதும் நம்பிக்கையாளர்களுக்கு எதிராக மறுப்பாளர்களுக்கு எந்த வழியையும் ஏற்படுத்த மாட்டான்.

ஒரு மனிதக் கூட்டத்தில் இறைவனின் அழைப்பு எழும்போதெல்லாம், அது மிகவும் வலுவான அடித்தளங்களின் மீது எழுகிறது. அதை வாதத்தின் மூலமாக யாராலும் மறுக்க முடியாது. எனவே, அதை ஏற்றுக்கொள்ள விரும்பாதவர்கள் அதை ஏளனம் செய்வதன் மூலம் வலுவில்லாததாக்க முயற்சி செய்கிறார்கள். அதைச் செய்பவர்கள் தங்கள் அணுகுமுறையால், சத்தியம் தொடர்பான விஷயத்தை அவர்கள் தீவிரமானதாகக் கருதுவதில்லை என்பதைக் காட்டுகிறார்கள். மேலும் ஒரு மனிதன் ஒரு விஷயத்தில் தீவிரமாக இல்லாதபோது அவனுடன் வாதிடுவது முற்றிலும் பயனற்றது. அத்தகைய

சூழ்நிலையில் சரியான அணுகுமுறை என்னவென்றால், உரையாடலின் கருப்பொருள் மாறும் வரையிலும் பேசப்படுபவர் கேட்கும் திறன் பெறும் வரையிலும் ஒரு மனிதன் அமைதியாக இருப்பதுதான். இறைவனின் அழைப்பை ஏளனம் செய்யும் ஒரு கூட்டத்தில் அமர்ந்திருப்பது, ஒருவர் சத்தியத்தின் விஷயத்தில் வைராக்கியம் கொண்டவராக இல்லை என்பதை நிரூபிக்கிறது.

நயவஞ்சகன் கொள்கையின் கோரிக்கைகள் என்னவென்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை, மாறாக அவன் எந்த விஷயத்தில் இலாபம் தெரிகிறதோ அதை நோக்கிச் சாய்ந்துவிடுகிறான். நம்பிக்கையாளர்களின் வட்டமாக இருந்தாலும் சரி, நம்பிக்கையற்றவர்களின் வட்டமாக இருந்தாலும் சரி, அவன் தனது உலக ஆசைகள் எங்கு பூர்த்தி அடையுமோ அந்த வட்டத்துடன் தன்னை இணைத்துக் கொள்கிறான். அவன் எந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கிறானோ, அதை மகிழ்விக்கும் வார்த்தைகளைப் பேசுகிறான். தனிப்பட்ட காரணங்களுக்காக உண்மையான நம்பிக்கையாளர்களுடன் அவன் இணைந்துகொள்ள வேண்டியிருந்தாலும், மனதால் அவன் அவர்களின் நலம் விரும்பியாய் இருப்பதில்லை. ஏனென்றால் உண்மையான நம்பிக்கையாளர்களின் இருப்பு ஒரு சமூகத்தில் சத்தியத்தின் அளவுகோலாக ஆகிறது. எனவே, தவறான மதவாதத்தில் நிலைநின்றவர்கள், தங்கள் மத நம்பிக்கைகளைச் சந்தேகிக்க வைக்கும், இத்தகைய அளவுகோல்கள் உடைத்தெறியப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், நம்பிக்கையாளர்களுக்குக் கெடுதலை விரும்புபவர்கள் இந்த உலகில்தான் தங்களால் இயன்ற பலத்தைக் காட்ட முடியும். மறுமையில், அவர்களுக்கு எதிராக அவர்களால் எதுவும் செய்ய முடியாது.

நயவஞ்சகன் என்பவன் வெளித் தோற்றத்தில் மதப்பற்று கொண்ட வனாகவும் உள்ளே மதப்பற்று கொள்ளாதவனாகவும் இருப்பவன். இப்படிப் பட்ட ஒருவனின் முடிவும் ஒரு மறுப்பாளருடைய முடிவாக இருக்கும். இறைவனின் பார்வையில் புறத்தோற்ற மார்க்கப் பற்றுக்கும் புறத்தோற்ற மார்க்கப் பற்றின்மைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஏனென்றால் புறவயத் தளத்தில் இரண்டும் வித்தியாசமாகத் தோன்றினாலும் உள் தளத்தில் அவை ஒன்றுதான். இறைவனிடம், வெளித்தோற்றங்களுக்கு மதிப்பில்லை, உள்ளத்தில் உள்ளதற்கு மட்டுமே மதிப்பு.

إِنَّ الْمُنٰفِقِيْنَ يُخٰدِعُوْنَ اللّٰهَ وَهُوَ خَادِعُهُمْ ۚ وَإِذَا قَامُوْٓا إِلَى
الصَّلٰوةِ قَامُوْا كُسَالٰى ۙ يُرَآءُوْنَ النَّاسَ وَلَا يَذْكُرُوْنَ اللّٰهَ إِلَّا
قَلِيْلًا ﴿١٤٢﴾ مُّذَبْذَبِيْنَ بَيْنَ ذٰلِكَ ۖ لَآ إِلٰى هٰٓؤُلَآءِ وَلَآ إِلٰى

هٰٓؤُلَآءِ ؕ وَمَنْ يُّضْلِلِ اللّٰهُ فَلَنْ تَجِدَ لَهٗ سَبِيْلًا ﴿۱۴۳﴾ يٰٓاَيُّهَا
الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوا الْكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ
الْمُؤْمِنِيْنَ ؕ اَتُرِيْدُوْنَ اَنْ تَجْعَلُوْا لِلّٰهِ عَلَيْكُمْ سُلْطٰنًا مُّبِيْنًا ﴿۱۴۴﴾
اِنَّ الْمُنٰفِقِيْنَ فِى الدَّرْكِ الْاَسْفَلِ مِنَ النَّارِ ۚ وَلَنْ تَجِدَ لَهُمْ
نَصِيْرًا ﴿۱۴۵﴾ ۙ اِلَّا الَّذِيْنَ تَابُوْا وَاَصْلَحُوْا وَاعْتَصَمُوْا بِاللّٰهِ وَاَخْلَصُوْا
دِيْنَهُمْ لِلّٰهِ فَاُولٰٓئِكَ مَعَ الْمُؤْمِنِيْنَ ؕ وَسَوْفَ يُؤْتِ اللّٰهُ الْمُؤْمِنِيْنَ
اَجْرًا عَظِيْمًا ﴿۱۴۶﴾ مَا يَفْعَلُ اللّٰهُ بِعَذَابِكُمْ اِنْ شَكَرْتُمْ وَاٰمَنْتُمْ ؕ
وَكَانَ اللّٰهُ شَاكِرًا عَلِيْمًا ﴿۱۴۷﴾

[142]இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்(க எண்ணு)கின்றனர். (உண்மையில்,) அவன்தான் அவர்களை வஞ்சிக்கிறான். அவர்கள் தொழுகையில் நிற்கும்போது சோம்பலாக நின்று மக்களுக்குக் காட்டு(வதற்காகவே தொழு)கின்றனர். அவர்கள் அல்லாஹ்வை நினைவுகூர்வது மிக அரிதே! [143]இவர்கள் (மறுப்பாளர்களாகிய) அவர்கள் பக்கமும் இல்லாமல் (நம்பிக்கையாளர்களாகிய) இவர்கள் பக்கமும் இல்லாமல் (நம்பிக்கை, மறுப்பு ஆகிய) இரண்டிற்குமிடையே தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். எவனை அல்லாஹ் வழிதவற விட்டுவிடுகிறானோ அவனுக்காக எந்த (நல்) வழியையும் (நபியே! நீர்) காணமாட்டீர். [144]நம்பிக்கையாளர்களே! நீங்கள் நம்பிக்கையாளர்களைத் தவிர்த்து (உங்களுடன் போரிடும்) மறுப்பாளர்களை (உங்களுக்கு உற்ற) நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். உங்களுக்கு எதிராக அல்லாஹ்விடம் தெளிவான ஆதாரத்தை ஏற்படுத்திக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா? [145]உறுதியாக நயவஞ்சகர்கள் நரகத்தின் அடித்தளத்தில்தான் இருப்பர். (நபியே!) அவர்களுக்கு உதவிசெய்வோர் எவரையும் நீர் காணமாட்டீர். [146]ஆயினும் (அவர்களில்) எவர் (பாவ) மன்னிப்புக் கோரிச் சீர்திருந்தி அல்லாஹ்வை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டு தங்கள் வழிபாட்டை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கிக் கொள்கிறார்களோ அவர்களைத் தவிர! அத்தகையோர் நம்பிக்கையாளர்களுடன் இருப்பர். அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு மாபெரும் கூலி வழங்குவான். [147]நீங்கள்

அவனுக்கு நன்றி செலுத்துபவர்களாகவும் உண்மையான நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்தால் அல்லாஹ் உங்களுக்கு வேதனையை அளித்து என்ன செய்யப் போகிறான்? அல்லாஹ் நன்றியை ஏற்பவன்; அனைத்தையும் அறிந்தவன்.

இறைவனிடம் தங்களை ஒப்படைத்துக் கொள்ளாத மக்கள், தங்கள் உலகியல் ஆதாயங்களிடம் தங்களை ஒப்படைத்துக் கொள்பவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய உலகியல் ஆதாயங்கள் யாருடன் சம்பந்தப்பட்டிருக்கின்றனவோ, அவர்களுடன் தொடர்புகளை வளர்த்துக் கொள்கிறார்கள் அவர்கள் மார்க்கவாதிகளாயினும் சரி, மார்க்கமற்றவர்களாயினும் சரி. அத்தகையவர்கள் தங்கள் நாவுகளால் இஸ்லாத்தின் வார்த்தைகளை உச்சரிக்கிறார்கள். சில இஸ்லாமியச் செயல்களையும் வெளிப்படையாகச் செய்கிறார்கள். ஆனால் அவர்களின் செயல்கள் இறைவனுக்கானவை அல்ல. மாறாக, மக்களின் பார்வையில் ஒரு நம்பிக்கையாளராக இருப்பதற்குத்தான். அவர்களின் உண்மையான மதம் சந்தர்ப்பவாதம் ஆகும். ஆனால் மக்கள் முன் அவர்கள் இறைவனுக்குக் கீழ்ப்படிபவர்களாகக் காட்டிக்கொள்ள முயல்கிறார்கள். இது இறைவனை ஏமாற்றுவதைப் போன்றது. அவர்கள் இறைவனுக்குரியவர்களாக இல்லாமல் தங்களை இறைவனுக்குரியவர்களாக நிரூபிக்க விரும்புகிறார்கள். அவர்கள் இஸ்லாத்தை உண்மையான மார்க்கமாக அறிந்திருக்கிறார்கள், ஆனாலும் அவர்கள் தங்கள் சொந்த நலன்களை விட்டுக்கொடுக்க விரும்புவதில்லை. இதன் காரணமாக, அவர்கள் இவ்விரண்டுக்கும் இடையில் தொங்கிக்கொண்டு இருக்கிறார்கள். தங்கள் நம்பிக்கைகளின் பக்கம் தங்களை முற்றிலுமாக ஒருமுகப்படுத்துவதும் இல்லை. தங்கள் உலகப் பயன்களின் பக்கம் முற்றிலுமாக ஒருமுகப்படுத்துவதும் இல்லை. இத்தகைய மக்கள் இறைவனின் உதவியை இழந்து விடுகின்றனர். ஏனென்றால் இறைவனின் உதவியைப் பெறத் தகுதியானவராக இருக்க, இறைவனின் பாதையில் உறுதியாக இருப்பது அவசியம். அவர்களிடம் இல்லாதது இதுதான். எப்போது சத்தியத்தை நம்புபவர்களும் சத்தியத்தை மறுப்பவர்களும் தனித்தனியே பிரிந்துவிட்டிருக்கிறார்களோ அத்தகைய சூழ்நிலையில் சத்தியத்தை மறுப்பவர்களை ஆதரிப்பது இறைவனின் தெளிவான வாதத்துக்கு எதிராக நிலைநிற்பதாகும். இது ஒருவரின் குற்றத்திற்கான எத்தகு ஆதாரம் என்றால், இதன் பிறகு வேறு எந்த ஆதாரத்திற்கான தேவையும் இருப்பதில்லை.

இத்தகைய மக்கள் தங்கள் போலித்தனமான செயல்களின் அடிப்படையில் இறைவனின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாது. இஸ்லாத்தின் புறவயத் தோற்றத்தைக் கொண்டிருந்த போதிலும், உண்மையில் அவர்கள்

இஸ்லாத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தனர். எனவே அவர்களின் முடிவு அவர்களின் புறவயத் தோற்றத்திற்கு ஏற்ப இருக்காது, அவர்களின் யதார்த்தத்திற்கு ஏற்ப இருக்கும். இருப்பினும், ஒருவருடைய கெடுவழியின் காரணமாக இறைவன் அவர்களுக்குப் பகைவனாக மாறுவதில்லை. இப்படிப்பட்டவர்கள் தங்கள் தவறுகளுக்காக வெட்கப்பட்டு, தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்டு, எல்லாப் பக்கங்களிலிருந்தும் தங்கள் கவனத்தை இறைவனின் பக்கம் திருப்பி, ஒருமித்த மனத்துடன் மார்க்கப் பாதையில் நடக்கத் தொடங்கினால், இறைவன் உறுதியாக அவர்களை மன்னிப்பான்.

لَا يُحِبُّ اللّٰهُ الْجَهْرَ بِالسُّوْٓءِ مِنَ الْقَوْلِ اِلَّا مَنْ ظُلِمَ ؕ وَكَانَ
اللّٰهُ سَمِيْعًا عَلِيْمًا ﴿۱۴۸﴾ اِنْ تُبْدُوْا خَيْرًا اَوْ تُخْفُوْهُ اَوْ تَعْفُوْا عَنْ
سُوْٓءٍ فَاِنَّ اللّٰهَ كَانَ عَفُوًّا قَدِيْرًا ﴿۱۴۹﴾ اِنَّ الَّذِيْنَ يَكْفُرُوْنَ بِاللّٰهِ
وَ رُسُلِهٖ وَ يُرِيْدُوْنَ اَنْ يُّفَرِّقُوْا بَيْنَ اللّٰهِ وَرُسُلِهٖ وَ
يَقُوْلُوْنَ نُؤْمِنُ بِبَعْضٍ وَّ نَكْفُرُ بِبَعْضٍ ۙ وَّ يُرِيْدُوْنَ اَنْ يَّتَّخِذُوْا
بَيْنَ ذٰلِكَ سَبِيْلًا ﴿۱۵۰﴾ اُولٰٓئِكَ هُمُ الْكٰفِرُوْنَ حَقًّا ۚ وَ اَعْتَدْنَا
لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا ﴿۱۵۱﴾ وَ الَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَ رُسُلِهٖ وَ لَمْ
يُفَرِّقُوْا بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ اُولٰٓئِكَ سَوْفَ يُؤْتِيْهِمْ اُجُوْرَهُمْ ؕ وَ
كَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا ﴿۱۵۲﴾

[148]அநீதி இழைக்கப்பட்டவரைத்தவிர வேறு யாரும் தீய சொற்களை வெளிப்படையாகக் கூறுவதை அல்லாஹ் விரும்புவதில்லை. அல்லாஹ் அனைத்தையும் செவியுறுபவன்; முற்றும் அறிந்தவன். [149]நீங்கள் (ஒருவருக்குச் செய்த) நன்மையை வெளிப்படுத்தினாலும் அல்லது அதனை மறைத்துக் கொண்டாலும் அல்லது (உங்களுக்கு இழைக்கப்பட்ட) தீமையை மன்னித்து விட்டாலும் (அது உங்களுக்கு) நன்மையே. அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; பேராற்றலுடையவன். [150]சிலர் அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் மறுத்து, அல்லாஹ்வுக்கும் அவனது தூதர்களுக்குமிடையே வேறுபாடு காட்ட விரும்பி, ''நாங்கள் (தூதர்களில்) சிலரை ஏற்றுக்கொள்வோம், சிலரை ஏற்றுக்கொள்ள

மாட்டோம்'' என்று கூறி அவர்களுக்கிடையே (தமது மனஇச்சைப்படி) ஒரு (புதிய) வழியை உண்டாக்க விரும்புகின்றனர். [151]அவர்கள்தாம் உண்மையில் மறுப்பாளர்கள். நாம் மறுப்பாளர்களுக்காக இழிவுமிக்க வேதனையைத் தயார் செய்து வைத்துள்ளோம். [152]அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர்களின் மீதும் நம்பிக்கைகொண்டு அவர்களிடையே வேறுபாடு காட்டாதவர்களுக்கு அல்லாஹ் அவர்களுக்குரிய கூலிகளை வழங்குவான். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன்; நிகரற்ற அன்பாளன்.

ஒருவருக்கு மார்க்கம் சார்ந்த குறைபாடோ உலகம் சார்ந்த குறைபாடோ இருப்பது தெரிய வந்தால், அதை விளம்பரப்படுத்துவது இறைவனுக்கு மிகவும் பிடிக்காத ஒன்றாகும். அனைவருக்கும் அறிவுரை வழங்கும் உரிமை உண்டு. ஆனால் அறிவுரை யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் பொதுவான முறையிலோ, சம்பந்தப்பட்ட நபரைச் சந்தித்துத் தனிப்பட்ட முறையிலோ வழங்கப்பட வேண்டும். இறைவன் காலையிலும் மாலையிலும் மக்களின் குற்றங்களை மன்னிக்கிறான். அடியார்களும் இதே ஒழுக்கத்தைத் தங்களுக்குள் உருவாக்கிக்கொள்ள வேண்டும். இருப்பினும் ஒருவன் அநீதி இழைக்கப்பட்டவனாக இருந்தால் அநீதி இழைத்தவனின் கொடுமைகளை மக்களுக்கு முன் எடுத்துரைக்க விலக்கு (அனுமதி) உண்டு. அநீதி இழைக்கப்பட்டவன் பொறுமையைக் கடைப்பிடித்து அநீதி இழைத்தவனை மன்னித்தால், அது அவனுக்கு நல்லது. ஏனெனில் இதன் மூலம் அவன் இந்த உலகத்தின் தீங்கை விட மறுமையின் தீங்கைப் பற்றியே அதிக அக்கறை கொண்டுள்ளான் என்பதை நிரூபிக்கிறான். பெரிய துன்பத்தில் சிக்கித்தவிப்பவருக்குச் சிறிய துன்பங்கள் பொருளற்றவையாக மாறிவிடுகின்றன. இதே நிலைதான் வரவிருக்கும் பயங்கரமான நாளின் கவலைகளால் இதயம் நிறைந்திருக்கும் ஒரு நபரின் நிலையும்.

மக்காவாசிகள் ஆப்ரஹாமின் தூதுத்துவத்தை நம்பினர். அதேபோல், யூதர்கள் மோசேயின் தூதுத்துவத்தையும், கிறிஸ்தவர்கள் இயேசுவின் தூதுத்துவத்தையும் ஏற்றுக்கொண்டனர். ஆனால், அவர்கள் அனைவரும் இறுதித்தூதர் அவர்களின் தூதுத்துவத்தை ஏற்க மறுத்துவிட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் கடந்த கால இறைத்தூதரை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தனர். ஆனால் அவர்களில் யாரும் நிகழ்கால இறைத்தூதரை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவர்கள் நம்பிய இறைத்தூதர்களும் தங்கள் காலத்தில் இறுதித்தூதர் எதிர்கொண்ட இதே வகையான விரோத எதிர்வினையைச் சந்தித்திருந்தனர். இத்தகைய ஒவ்வொரு முயற்சியும்

சத்தியத்திற்கும் சுயநலத்திற்கும் இடையில் ஒரு வழியைக் கண்டடைய நடப்பதாகும். இதனால் வேண்டப்படுவது ஆசைகளின் கட்டமைப்பும் உடைந்துவிடக் கூடாது; அதேசமயம் மனிதன் இறைவனின் சொர்க்கத்தையும் அடைய வேண்டும் என்பதுதான்.

உண்மை என்னவென்றால், கடந்த காலத்தின் தூதுத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்ட தூதுத்துவமாகும், அதே நேரத்தில் நிகழ்காலத்தின் இறைத்தூதரை ஏற்றுக்கொள்ள, மனிதன் ஒரு புதிய மனம்சார்ந்த பயணத்தை மேற்கொள்ள வேண்டும். கடந்த கால தூதுத்துவம், காலப்போக்கில் அங்கீகரிக்கப்பட்ட தூதுத்துவமாக மாறிவிடுகிறது. அது பிறப்பிலிருந்தே மனித மனத்தின் இயல்பான ஒரு பகுதியாகி விடுகிறது. ஆனால் நிகழ்காலத்தின் இறைத்தூதர் ஒரு சர்ச்சைக்குரிய நபராக இருக்கிறார்; அவர் பார்ப்பவர்களுக்கு வெறும் 'ஒரு மனிதராக'த் தோன்றுகிறார். எனவே, இதை ஏற்றுக்கொள்வதற்கு, மனிதனுக்கு ஒரு புதிய மனம்சார்ந்த பயணத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அவன் மீண்டும் உணர்வு நிலையில் இறைவனைக் காண வேண்டும். கடந்த கால இறைத்தூதர்களை ஏற்றுக்கொள்வது வழிவழியாக வந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு நடக்கிறது, மேலும் நிகழ்காலத் தூதரை ஏற்றுக்கொள்வது சுய விருப்பம்சார்ந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு நடக்கிறது. ஆனால் இறைவனிடம், மதிப்புப் பெறுவது சுய விருப்பம் கொண்டு ஏற்கும் நம்பிக்கைதான், வழிவழியாகப் பின்பற்றும் நம்பிக்கை அல்ல.

يَسْـَٔلُكَ اَهْلُ الْكِتٰبِ اَنْ تُنَزِّلَ عَلَيْهِمْ كِتٰبًا مِّنَ السَّمَآءِ فَقَدْ
سَاَلُوْا مُوْسٰٓى اَكْبَرَ مِنْ ذٰلِكَ فَقَالُوْٓا اَرِنَا اللّٰهَ جَهْرَةً
فَاَخَذَتْهُمُ الصّٰعِقَةُ بِظُلْمِهِمْ ۚ ثُمَّ اتَّخَذُوا الْعِجْلَ مِنْۢ بَعْدِ مَا
جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ فَعَفَوْنَا عَنْ ذٰلِكَ ۚ وَاٰتَيْنَا مُوْسٰى سُلْطٰنًا
مُّبِيْنًا ﴿١٥٣﴾ وَرَفَعْنَا فَوْقَهُمُ الطُّوْرَ بِمِيْثَاقِهِمْ وَقُلْنَا
لَهُمُ ادْخُلُوا الْبَابَ سُجَّدًا وَّقُلْنَا لَهُمْ لَا تَعْدُوْا فِى السَّبْتِ
وَاَخَذْنَا مِنْهُمْ مِّيْثَاقًا غَلِيْظًا ﴿١٥٤﴾

[153](நபியே!) வேதமுடையோர் வானத்திலிருந்து ஒரு வேதத்தைத் தங்களிடம் இறக்கிக்கொண்டு வரவேண்டும் என்று உம்மிடம் கேட்கின்றனர். இவர்(களின் முன்னோர்)கள் இதைவிட பெரிய(அற்புதத்)தை மோசேயிடம் கேட்டுள்ளனர். ''எங்களுக்கு

அல்லாஹ்வை நேரில் காட்டுவீராக'' என்று அவர்கள் கூறினர். அவர்களின் தீவினையால் பேரிடி அவர்களைத் தாக்கியது. அவர்களிடம் தெளிவான சான்றுகள் வந்துவிட்ட பின்னரும் காளைக்கன்றைக் கடவுளாக எடுத்துக் கொண்டனர். நாம் அதனையும் மன்னித்தோம். மோசேவுக்கு நாம் தெளிவான சான்றை வழங்கியிருந்தோம். [154]அவர்களிடம் வாக்குறுதி பெறுவதற்காக நாம் அவர்களின் மீது மலையை உயர்த்தினோம். ''(இந்நகரின்) வாயிலில் தலை தாழ்த்தியவர்களாக நுழையுங்கள்'' என்று அவர்களிடம் கூறினோம். சனிக்கிழமையின் விஷயத்தில் வரம்புமீறிவிட வேண்டாம் என்றும் அவர்களிடம் கூறினோம். நாம் அவர்களிடம் உறுதியான வாக்குறுதியைப் பெற்றிருந்தோம்.

இறைத்தூதர் மனிதர்களிடையே ஒரு மனிதராக இருப்பவர். அவர் ஒரு சாதாரண மனிதரின் வடிவத்தில் மக்களுக்கு முன் தோன்றுகிறார். அதனால்தான் ஒரு சாதாரண மனிதரை இறைவனின் பிரதிநிதியாக எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று மக்களுக்குப் புரிவதில்லை. அவர்களுக்கு முன்னால் இருக்கும் மனிதர் இறைவனின் சார்பாகப் பேச நியமிக்கப்பட்ட ஒருவர் என்பதை அவர்கள் எப்படி உறுதியாக நம்புவது? எனவே அவர்கள் சொல்கிறார்கள்: 'நீங்கள் முன்வைக்கும் வார்த்தை வானத்திலிருந்து வருவதைக் காட்டுங்கள். அல்லது இறைவன் தானே வானத்திலிருந்து இறங்கி வந்து உங்களை உறுதிப்படுத்தட்டும். அப்போது நாங்கள் உங்களை நம்புவோம்.' ஆனால் இந்த வகையான கோரிக்கை மிகவும் தீவிரத் தன்மை இல்லாத கோரிக்கை. ஏனென்றால் மனிதனுக்குரிய சோதனை, பார்க்காமல் நம்புவதும் யதார்த்தங்களை அவற்றின் ஆன்மிக வடிவத்தில் உணர்வதுமாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில், கேட்பவர்களுக்கு யதார்த்தங்களைக் காட்டி ஏற்றுக்கொள்ளவைப்பதால் என்ன பயன்? மேலும், பிரபஞ்சத்தின் அமைப்பு சிறிது காலத்திற்கு மாற்றப்பட்டு, மனிதனின் கோரிக்கைகளுக்கு ஏற்பக் காட்சிகள் காட்டப்பட்டாலும் அது இன்னும் பயனற்றதாகவே இருக்கும் ஏனென்றால், இந்தக் காட்சி எப்படியும் தற்காலிகமாகத்தான் இருக்கும்; நிரந்தரமாக இருக்காது. மனிதனைக் கிளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் அவனது சுதந்திரம் இதற்குப் பிறகும் நிலைத்திருக்கும். இதன் விளைவாக, அவன் அந்தக் காட்சியைப் பார்க்கும் நேரம் வரை பயந்து அதை ஏற்றுக்கொள்வான். பின்னர்ப் பார்ப்பதற்கு முன்பு செய்ததுபோல், மீண்டும் தனது சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தத் தொடங்குவான். யூதர்களின் உதாரணம் இதை வரலாற்று ரீதியாக உறுதிப்படுத்துகிறது.

சினாய் மலையடிவாரத்தில் அசாதாரணச் சூழ்நிலைகளை உருவாக்கியதன் மூலம், தங்கள் வழிபாட்டு இல்லத்திற்குள் மனத்தாழ்மையுடன் நுழைய வேண்டும் என்றும் (யாத்திராகமம், 19:16-19) இறைவனைப் பயபக்தியுடன் வணங்க வேண்டும் என்றும் யூதர்களிடம் உறுதிமொழி பெறப்பட்டது. மேலும், அவர்கள் பிழைப்புக்காக என்ன போராடினாலும், அதை இறைவனின் வரம்புகளுக்குள் செய்ய வேண்டும், அவனிடமிருந்து விடுபடுவதன் மூலம் அல்ல. ஆனால் யூதர்கள் அத்தகைய உடன்படிக்கைகள் அனைத்தையும் மீறினர்.

"நாம் மோசேவுக்குத் தெளிவான சான்றை வழங்கி இருந்தோம்" இறைவனின் இந்த வாக்குத்தான் ஒவ்வொரு இறைத்தூதருடனும் நடக்கிறது. இறுதித்தூதர் ஒரு சாதாரண மனிதனைப் போன்றிருந்தாலும் போதிலும், அவரது வார்த்தைகளிலும் செயல்களிலும் இறைவனைச் சார்ந்த அவரது நிலையை உறுதியாக நிரூபிக்கும் தெளிவான ஆதாரங்கள் இருக்கும். ஆனால் அநீதியான மனிதன் ஒவ்வோர் இறை அடையாளத்திற்கும் ஒரு விளக்கத்தைத் தேடிக்கொள்கிறான், அதன் பிறகு அதை மறுத்துத் தனது கலக வாழ்க்கையைத் தொடர்கிறான்.

فَبِمَا نَقْضِهِمْ مِّيْثَاقَهُمْ وَ كُفْرِهِمْ بِاٰيٰتِ اللّٰهِ وَ قَتْلِهِمُ الْاَنْۢبِيَآءَ
بِغَيْرِ حَقٍّ وَّ قَوْلِهِمْ قُلُوْبُنَا غُلْفٌ ؕ بَلْ طَبَعَ اللّٰهُ عَلَيْهَا بِكُفْرِهِمْ فَلَا
يُؤْمِنُوْنَ اِلَّا قَلِيْلًا ﴿۱۵۵﴾ وَّ بِكُفْرِهِمْ وَ قَوْلِهِمْ عَلٰى مَرْيَمَ بُهْتَانًا
عَظِيْمًا ﴿۱۵۶﴾ وَّ قَوْلِهِمْ اِنَّا قَتَلْنَا الْمَسِيْحَ عِيْسَى ابْنَ مَرْيَمَ رَسُوْلَ
اللّٰهِ ۚ وَ مَا قَتَلُوْهُ وَ مَا صَلَبُوْهُ وَ لٰكِنْ شُبِّهَ لَهُمْ ؕ وَ اِنَّ الَّذِيْنَ
اخْتَلَفُوْا فِيْهِ لَفِيْ شَكٍّ مِّنْهُ ؕ مَا لَهُمْ بِهٖ مِنْ عِلْمٍ اِلَّا اتِّبَاعَ الظَّنِّ ۚ
وَ مَا قَتَلُوْهُ يَقِيْنًا ﴿۱۵۷﴾ بَلْ رَّفَعَهُ اللّٰهُ اِلَيْهِ ؕ وَ كَانَ اللّٰهُ عَزِيْزًا
حَكِيْمًا ﴿۱۵۸﴾

[155]ஆனால் அவர்கள் தங்கள் வாக்குறுதியை முறித்து விட்டதனாலும் அல்லாஹ்வின் வசனங்களை மறுத்து விட்டதனாலும் தூதர்களை நியாயமின்றிக் கொலை செய்ததனாலும், ''எங்கள் உள்ளங்கள் மூடப்பட்டுள்ளன'' என்று அவர்கள் கூறியதனாலும் நாம் அவர்களைச் சபித்தோம். உண்மையில், அவர்களது மறுப்பினால் அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் முத்திரை இட்டுவிட்டான்.

எனவே, அவர்களில் மிகக்குறைவானவர்கள் தவிர மற்றவர்கள் நம்பிக்கைகொள்ள மாட்டார்கள். [156]அவர்கள் (இயேசுவை ஏற்க) மறுத்ததாலும் மர்யத்தின் மீது பெரும் பழிச்சொல் கூறியதனாலும் (அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் முத்திரையிட்டுவிட்டான்.) [157]இறைத்தூதராகிய ''மர்யத்தின் மைந்தர் இயேசுவை நாங்கள் கொன்றுவிட்டோம்'' என்று அவர்கள் கூறியதனாலும் (நாம் அவர்களைச் சபித்தோம். உண்மையில்) அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை; சிலுவையில் அறையவுமில்லை. மாறாக, (அவ்வாறு நடந்ததாக) அவர்களுக்குக் (குழப்பிக்) காட்டப்பட்டது. (இதற்கு) மாறான கருத்துக் கொண்டவர்கள் அது தொடர்பான ஐயங்களில் இருக்கின்றனர். வெறும் ஊகத்தைத் தவிர அவர்களிடம் வேறு அறிவு இல்லை. உறுதியாக அவர்கள் அவரைக் கொலை செய்யவில்லை. [158]மாறாக அல்லாஹ் அவரைத் தன்னிடம் உயர்த்திக் கொண்டான். அல்லாஹ் யாவற்றிலும் வல்லவன்; ஞானம் மிக்கவன்.

யூதர்களுக்கு இறை வழிகாட்டுதல் இறக்கியருளப்பட்டு, அதில் இவ்வுலகில் இறைவனின் விருப்பத்தைப் பின்பற்றினால், மறுமையில் இறைவன் அவர்களுக்குச் சொர்க்கத்தை வழங்குவான் என்று கூறப்பட்டிருந்தது. அவர்கள் முதல் பகுதியை மறந்துவிட்டார்கள். ஆனால், இரண்டாம் பகுதியைத் தங்கள் பிறப்புரிமையாகக் கருதினார்கள். யூதர்கள் எல்லா வகையான கெடுவழிகளிலும் ஈடுபட்டனர். ஆனாலும், தங்கள் மறுமை வெற்றியின் மீதான அவர்களின் நம்பிக்கை மிக அதிகமாக இருந்ததால், இனி ஒரு புதிய இறைத்தூதரை ஏற்க வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் உணர்ந்தனர். அவர்கள் ஏளனமாக, "எங்கள் இதயங்கள் மூடப்பட்டுள்ளன' என்று கூறுவார்கள். அவர்களுடைய இந்தக் கூற்று, அவர்கள் தூதர்மீது நம்பிக்கைகொள்ள இயலாமையின் வெளிப்பாடல்ல; அவர்கள் தூதரை எப்படி நடத்தினாலும் எந்தச் சூழ்நிலையிலும் தங்களுடைய மறுமை வெற்றி சந்தேகத்திற்கு இடமில்லாதது என்பதில் அவர்கள் கொண்டிருந்த மனநிறைவின் வெளிப்பாடாகும்.

இந்த வகையான தவறான நம்பிக்கையில் உழல்பவர்கள் எல்லா வகையான குற்றங்களுக்கும் துணிந்து விடுகிறார்கள். இறைவன் மீதான அவர்களின் நம்பிக்கை அவர்களை எந்த உடன்படிக்கையுடன் கட்டிப் போடுகிறதோ அதை உடைத்தெறிவது அவர்களுக்குக் கடினமாய் இருப்பதில்லை. இறைவன் தெளிவான வாதங்களை வெளிப்படுத்திய போதிலும், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதில்லை. சத்தியத்தை நோக்கி அழைப்பவர்களுக்கும், இறைவழிபாட்டிற்கு மாறான

இவர்களுடைய வழிகளை அம்பலப்படுத்துபவர்களுக்கும் எதிராக அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்குவதில்லை. பொய்யாகக் குற்றம் சாட்டி, அழைப்பாளரை அவமதிப்பதிலிருந்தும் அவர்களை எதுவும் தடுப்பதில்லை. யூதர்கள் இயேசுவைக் கொல்ல முயன்றனர், பின்னர் "தன்னை ஒரு தூதர் என்று அழைத்துக் கொண்ட மரியாளின் மகன் மெசியாவை நாங்கள் கொன்றோம்' என்று பெருமையாகக் கூறினர். ஆனால் இறைவனின் அழைப்பாளர்களுக்கு எதிராக இத்தகைய மக்கள் என்ன சதித்திட்டம் தீட்டினாலும், அவர்கள் ஒருபோதும் வெற்றி பெற மாட்டார்கள். இறைவனின் ஆற்றலும் அவனது ஞானமிக்க அமைப்புமுறையும் எப்போதும் சத்தியத்தின் அழைப்பாளர்களுக்குப் பின்னால் இருந்து கொண்டிருக்கின்றன. எல்லாச் சதித்திட்டங்களும் எதிர்ப்புகளும் இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் பணியை முடிக்கும் வரை தங்கள் பங்குக்கான பணியைத் தொடர வழிகாட்டுதலைப் பெறுகிறார்கள்.

சத்தியத்துக்கு எதிராகக் கலக அணுகுமுறையைக் கடைப்பிடிப்போரிட மிருந்து சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் திறனை இறைவன் பறித்துக் கொள்கிறான். அவர்கள் தங்கள் விரோதச் செயல்களைத் தொடர்கிறார்கள். எதுவரை என்றால் இறைவனுடைய வானவர்கள் அவர்களைக் குற்றவாளிகளாகப் பிடித்து இறைவனின் நீதிமன்றத்திற்கு முன் கொண்டுவந்து நிறுத்திவிடும் வரை தொடரும்.

وَ اِنْ مِّنْ اَهْلِ الْكِتٰبِ اِلَّا لَيُؤْمِنَنَّ بِهٖ قَبْلَ مَوْتِهٖ ۚ وَ يَوْمَ
الْقِيٰمَةِ يَكُوْنُ عَلَيْهِمْ شَهِيْدًا ۚ﴿۱۵۹﴾ فَبِظُلْمٍ مِّنَ الَّذِيْنَ هَادُوْا
حَرَّمْنَا عَلَيْهِمْ طَيِّبٰتٍ اُحِلَّتْ لَهُمْ وَ بِصَدِّهِمْ عَنْ سَبِيْلِ اللّٰهِ
كَثِيْرًا ۙ﴿۱۶۰﴾ وَّ اَخْذِهِمُ الرِّبٰوا وَقَدْ نُهُوْا عَنْهُ وَ اَكْلِهِمْ اَمْوَالَ النَّاسِ
بِالْبَاطِلِ ؕ وَ اَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ مِنْهُمْ عَذَابًا اَلِيْمًا ﴿۱۶۱﴾ لٰكِنِ
الرّٰسِخُوْنَ فِي الْعِلْمِ مِنْهُمْ وَ الْمُؤْمِنُوْنَ يُؤْمِنُوْنَ بِمَاۤ اُنْزِلَ اِلَيْكَ
وَ مَاۤ اُنْزِلَ مِنْ قَبْلِكَ وَ الْمُقِيْمِيْنَ الصَّلٰوةَ وَ الْمُؤْتُوْنَ الزَّكٰوةَ
وَ الْمُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَ الْيَوْمِ الْاٰخِرِ ؕ اُولٰٓئِكَ سَنُؤْتِيْهِمْ اَجْرًا عَظِيْمًا ﴿۱۶۲﴾ ع ۲۲ ۱۰ ۲

[159]வேதமுடையோரில் எவரும் தமது இறப்பிற்கு முன்னால் அவர்மீது நம்பிக்கைகொள்ளாமல் இருக்கமாட்டார்கள். (எனினும்) மறுமை நாளில் அவர்களுக்கு எதிரான சாட்சியாளராக அவர் இருப்பார். [160]எனவே, யூதர்களின் தீவினைகள் காரணமாகவும் மிகுதியானவர்களை அவர்கள் இறைவழியிலிருந்து தடுத்துக்கொண்டிருந்த காரணத்தாலும் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த தூய்மையான பொருள்களைக்கூட நாம் அவர்களுக்குத் தடை செய்துவிட்டோம். [161]வட்டி அவர்களுக்குத் தடுக்கப்பட்டிருக்க அதனை அவர்கள் வாங்கிக் கொண்டிருந்ததனாலும் மக்களின் செல்வங்களைத் தவறான முறையில் அவர்கள் விழுங்கிக் கொண்டிருந்ததனாலுமே (இவ்வாறு தடை செய்தோம்.) அவர்களில் மறுப்பாளர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையை நாம் தயார்செய்து வைத்துள்ளோம். [162]ஆயினும் (நபியே!) அவர்களில் கல்வியறிவில் நிலைபெற்றவர்களும் நம்பிக்கையாளர்களும் உமக்கு அருளப்பட்ட(வேதத்)தையும் உமக்கு முன்னர் அருளப்பட்ட (வேதத்)தையும் நம்புகின்றனர். அவர்கள் தொழுகையைக் கடைப்பிடித்துக் கடமையாக்கப்பட்ட கொடையை வழங்கி அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்பவர்கள். இத்தகையோருக்கு உறுதியாக நாம் மாபெரும் கூலியை வழங்குவோம்.

எந்த யூதனும் எந்தக் கிறிஸ்தவனும் இறுதித்தூதர் மீது நம்பிக்கை கொள்ளாதவரை இறக்க மாட்டார்கள் என்று இக்ரிமா கூறுகிறார். யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் வானிலிருந்து அருளப்பட்ட அறிவு இருந்தது. அரபு இறுதித்தூதரின் அழைப்பு முற்றிலும் இறைவனின் அழைப்பு என்று புரிந்துகொள்வதில் அத்தகையவர்கள் தவறு செய்ய வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு இறுதித்தூதரை நம்பி, அவரது பணியில் தங்கள் செல்வத்தையும் வாழ்க்கையையும் செலவிடுவது உலக நலன்களுக்கு எதிரானதாகத் தோன்றியது. இந்தக் காரணத்தினால்தான் அவர்கள் இறைத்தூதரை ஆதரிக்க மறுத்துவிட்டார்கள். ஆனால் ஒருவருக்கு மரணம் வரும்போது, அத்தகைய நலன் சார்ந்த விஷயங்கள் அனைத்தும் பயனற்றதாகத் தோன்றத் தொடங்குகின்றன. அந்த நேரத்தில், ஒரு மனிதனின் மனதில் இருந்து அனைத்துச் செயற்கையான திரைகளும் அகற்றப்பட்டு, உண்மை அதன் முழுமையான வடிவத்தில் வெளிவந்துவிடுகிறது. மரணத்தின் வாசலை அடைந்ததும், ஒரு மனிதன் மரணத்திற்கு முன்பு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத ஒன்றை ஒப்புக்கொள்கிறான். ஆனால், அந்த நேரத்திலான வாக்குமூலத்திற்கு இறைவனின் பார்வையில் எந்த மதிப்பும் இல்லை.

ஒரு கூட்டம் இறைவனின் மார்க்கத்திற்குப் பதிலாக சுயமாக உருவாக்கப் பட்ட மதத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அது தன் மதத் தகுதியை

வெளிப்படுத்தச் சில சுயமாக உருவாக்கப்பட்ட சின்னங்களையும் நிறுவுகிறது. அது தனது மனநிலைக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப அனுமதிக்கப்பட்டவை பற்றியும், தடைசெய்யப்பட்டவை பற்றியும் புதிய விதிகளை உருவாக்குகிறது. அவற்றுக்கான சிறப்பு ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம், அந்தக் கூட்டம் மற்றவர்களை விட அதிக மத நம்பிக்கை கொண்டது என்பதை நிரூபிக்க விரும்புகிறது. இத்தகைய மக்களின் மதம் இறைவனுக்குரியவர்களாக மாறுவதை அடிப்படையாகக் கொண்டது அல்ல. சில வெளிப்படையான நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. எனவே இறைவனால் தடைசெய்யப்பட்ட முறைகள் மூலம் உலக நன்மைகளைப் பெறுவதற்கும் இறைவனுக்காகச் செய்யப்படும் வேலைகளின் பாதையைத் தடுப்பதற்கும் அவர்கள் அஞ்சுவதில்லை. இத்தகையோருக்கான முடிவு இறைவனிடம் மார்க்கப்பற்று கொண்டவர்களுடன் அல்லாமல் மாறுபட்டு இல்லாதவர்களுடன் ஏற்படும்.

அப்துல்லாஹ் பின் சலாம் போன்ற சில யூதர்கள் இறைத்தூதர் மீது நம்பிக்கை கொண்டு அவருக்கு ஆதரவளித்தனர். பாரபட்சம், போலித்தனம், சுயநலவாதம் போன்ற மனநிலையிலிருந்து விடுபட்டு மனிதக் கலப்படத்தைக் கடந்து உண்மையான இறை மார்க்கத்தைப் பற்றி அறிந்துகொள்பவர்களுக்கு, உண்மையைப் புரிந்துகொள்வதற்கும் அதற்குத் தங்களை ஒப்படைப்பதற்கும் எதுவும் தடையாக இருப்பதில்லை. அவர்கள் ஒவ்வொரு மனத்தின் உறையிலிருந்தும் வெளியே வந்து உண்மையைக் கண்டுகொள்கிறார்கள். இவர்கள்தாம் இறைவனின் சொர்க்கத்தில் அனுமதிக்கப்படுவார்கள்.

اِنَّاۤ اَوۡحَيۡنَاۤ اِلَيۡكَ كَمَاۤ اَوۡحَيۡنَاۤ اِلٰى نُوۡحٍ وَّالنَّبِيّٖنَ مِنۡۢ بَعۡدِهٖ‌ ۚ
وَاَوۡحَيۡنَاۤ اِلٰۤى اِبۡرٰهِيۡمَ وَاِسۡمٰعِيۡلَ وَاِسۡحٰقَ وَيَعۡقُوۡبَ وَالۡاَسۡبَاطِ
وَعِيۡسٰى وَاَيُّوۡبَ وَيُوۡنُسَ وَهٰرُوۡنَ وَسُلَيۡمٰنَ‌ ۚ وَاٰتَيۡنَا دَاوٗدَ
زَبُوۡرًا ﴿۱۶۳﴾ وَرُسُلًا قَدۡ قَصَصۡنٰهُمۡ عَلَيۡكَ مِنۡ قَبۡلُ وَرُسُلًا لَّمۡ
نَقۡصُصۡهُمۡ عَلَيۡكَ‌ ؕ وَكَلَّمَ اللّٰهُ مُوۡسٰى تَكۡلِيۡمًا ﴿۱۶۴﴾ۚ رُسُلًا مُّبَشِّرِيۡنَ
وَمُنۡذِرِيۡنَ لِئَلَّا يَكُوۡنَ لِلنَّاسِ عَلَى اللّٰهِ حُجَّةٌۢ بَعۡدَ الرُّسُلِ‌ ؕ
وَكَانَ اللّٰهُ عَزِيۡزًا حَكِيۡمًا ﴿۱۶۵﴾

[163](நபியே!) நோவாவுக்கும் அவருக்குப் பின்னால் வந்த தூதர்களுக்கும் நாம் (இறைச்செய்தி) அறிவித்தது போலவே உமக்கும் அறிவித்தோம். ஆப்ரஹாம், இஸ்மவேல், ஈசாக், ஜேக்கப், அவருடைய வழித்தோன்றல்கள், இயேசு, யோப், யோனா, ஆரோன், சாலமன் ஆகியோருக்கும் அறிவித்தோம். தாவீதுக்கு ஜபூர் வேதத்தை அளித்தோம். [164]நாம் அனுப்பிய சில தூதர்களைப்பற்றி முன்னரே உமக்கு எடுத்துரைத்திருக்கிறோம். வேறு சில தூதர்களைப்பற்றி நாம் உமக்கு எடுத்துரைக்கவில்லை. மோசேயுடன் அல்லாஹ் உரையாடியும் இருக்கிறான். [165]நற்செய்தி கூறுவோராகவும் எச்சரிக்கை செய்வோராகவும் தூதர்களை நாம் அனுப்பி வைத்தோம்; தூதர்களின் (வருகைக்குப்) பின் மனிதர்கள் அல்லாஹ்வுக்கு எதிராகக் (குறை)கூற அவர்களுக்கு ஆதாரம் எதுவும் இருக்கக் கூடாது என்பதற்காக (இவ்வாறு) அனுப்பி வைத்தோம். அல்லாஹ் யாவற்றினும் வல்லவன்; ஞானம் மிக்கவன்.

இறைவன் மனிதனைப் படைத்தான், பின்னர் சொர்க்கத்தையும் நரகத்தையும் உருவாக்கினான். அதன் பின்னர் அவன் மனிதனைப் பூமியில் குடியமர்த்தினான். இங்கே மனிதனுக்குத் தான் விரும்பியதைச் செய்ய சுதந்திரம் இருக்கின்றது. ஆனால் இந்தச் சுதந்திரம் நிரந்தரமானது அல்ல; தற்காலிகமானது, இது சோதனைக்கானது. இது நல்லதையும் கெட்டதையும் பிரித்தெடுப்பதற்காக இருக்கின்றது. சுதந்திரம் இருந்தும் யதார்த்தமான அணுகுமுறையை ஏற்றுக்கொண்டு, தன்னை இறைவனின் அடியானாக மாற்றிக் கொள்பவன் யார், சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தன்னை ஒரு கலகக்கார மனிதன் என்று காட்டுபவன் யார் என்பதை இறைவன் கவனித்துக் கொண்டிருக்கிறான். உலகில் இரண்டு வகையான மக்களும் இணைந்தே வாழ்கின்றனர். இங்கே இறைவனின் அருட்கொடைகளிலிருந்து இருவரும் சமமாகப் பயனடைய வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் சோதனைக்கான வரையறுக்கப்பட்ட காலம் முடிந்ததும், இரண்டு குழுக்களும் ஒருவரிலிருந்து மற்றவர் பிரிக்கப்படுவார்கள். முதல் குழுவினர் சொர்க்கத் தோட்டங்களில் நிரந்தரமாகத் தங்க வைக்கப்படுவார்கள். இரண்டாவது குழுவினர் நிரந்தரமாக நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

வாழ்க்கைக்கான இறைவனின் இந்தத் திட்டம் மனிதனைப் பெரும் நெருக்கடியில் தள்ளுவதாக இருக்கிறது. ஏனென்றால், இதன் பொருள் உலகின் குறுகிய வாழ்க்கையின் முடிவு இரண்டு தீவிர வடிவங்களில் வரப்போகிறது. நிரந்தரப் பேரின்பம் அல்லது நிரந்தரத் தண்டனை. ஆகையால், வாழ்க்கையின் யதார்த்தத்தைப் பற்றி யாரும் அறியாமல் இருந்து விடக்கூடாது என்பதற் காகவும், நம் வாழ்க்கையை அதற்கு ஏற்ப மாற்றிக் கொள்ள நாம் இறைவனின்

திட்டத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்று நியாயத்தீர்ப்பு நாளில் சொல்ல முடியாதபடியும், வழிகாட்டுதலுக்கான பிற இயற்கை ஏற்பாடுகளுடன் இறைத்தூதர்களையும் நூல்களையும் அனுப்ப இறைவன் ஏற்பாடு செய்தான்.

இறைவனுடைய இந்தத் திட்டத்தின் மிகச் சரியான பொருள் என்னவென்றால், தொடக்கம் முதல் இறுதி வரை வந்த அனைத்து இறைத்தூதர்களின் செய்தியும் அதிகாரப்பூர்வ கடமையும் ஒன்றாக இருக்க வேண்டும். எல்லா மனிதர்களும் ஒரே தேர்வுத் தராசில் நிற்கும்போது, அவர்களின் தேர்வுத் தாள்கள் மட்டும் ஒன்றுக்கொன்று எவ்வாறு வேறுபட முடியும்? உண்மை என்னவென்றால், அனைத்து இறைத்தூதர்களின் செய்தியும் ஒரே மாதிரியாக இருந்தது. அவர்கள் இந்த ஒரே செய்தியைக் கொண்டுதான் அனைத்து மனிதகுலத்திற்கும் விழிப்பூட்டினர். அதாவது ஒவ்வொரு மனிதனும் ஒருபுறம் சொர்க்கமும் மறுபுறம் நரகமும் கொண்ட ஒரு நெருக்கடியான இடத்தில் நின்றுக்கொண்டிருக்கிறான். அவன் ஒரு வழியில் சென்றால் சொர்க்கத்தை அடைவான். மறு வழியில் சென்றால், நரகத்தில் போய் விழுந்து விடுவான். எல்லா இறைத்தூதர்களின் அழைப்பும் ஒன்றாகவே இருந்தது. இருப்பினும், காலத்தின் தேவைகளைப் பொறுத்து, இறைவனின் ஆதரவு அவர்களுக்கு வெவ்வேறு வடிவங்களில் கிடைத்தது. இறைவனின் இந்த வழிமுறை இன்றும் நிலைத்திருக்கிறது. இன்று எச்சரிக்கை செய்வதும் நற்செய்தியை அறிவிப்பதுமான இறைத்தூதர்களின் பணியைச் செய்ய எழுந்திருப்பவர்கள், அவர்களின் சூழ்நிலைகளைப் பொறுத்து இறைவனிடமிருந்து உறுதியாகத் தனிப்பட்ட ஆதரவைப் பெறத் தகுதியானவர்கள். இதனால் அவர்கள் தங்கள் அழைப்புப் பொறுப்பைப் பயனுள்ள முறையில் தொடரச் செய்யலாம்.

لٰكِنِ اللّٰهُ يَشْهَدُ بِمَآ اَنْزَلَ اِلَيْكَ اَنْزَلَهٗ بِعِلْمِهٖ ۚ وَ الْمَلٰٓئِكَةُ
يَشْهَدُوْنَ ؕ وَ كَفٰى بِاللّٰهِ شَهِيْدًا ﴿۱۶۶﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا وَ
صَدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ قَدْ ضَلُّوْا ضَلٰلًا بَعِيْدًا ﴿۱۶۷﴾ اِنَّ
الَّذِيْنَ كَفَرُوْا وَظَلَمُوْا لَمْ يَكُنِ اللّٰهُ لِيَغْفِرَ لَهُمْ وَلَا لِيَهْدِيَهُمْ
طَرِيْقًا ﴿۱۶۸﴾ اِلَّا طَرِيْقَ جَهَنَّمَ خٰلِدِيْنَ فِيْهَآ اَبَدًا ؕ وَكَانَ ذٰلِكَ
عَلَى اللّٰهِ يَسِيْرًا ﴿۱۶۹﴾ يٰٓاَيُّهَا النَّاسُ قَدْ جَآءَكُمُ الرَّسُوْلُ بِالْحَقِّ
مِنْ رَّبِّكُمْ فَاٰمِنُوْا خَيْرًا لَّكُمْ ؕ وَ اِنْ تَكْفُرُوْا فَاِنَّ لِلّٰهِ مَا فِي
السَّمٰوٰتِ وَ الْاَرْضِ ؕ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ﴿۱۷۰﴾

[166](நபியே!) அல்லாஹ் உமக்கு அருளிய(வேதத்)தைக் குறித்து அவன்தான் சாட்சி கூறுகிறான். அவன் அதனைத் தனது ஞானத்தின் அடிப்படையில் அருளினான். வானவர்களும் (அதற்குச்) சாட்சி சொல்கின்றனர். சாட்சியத்திற்கு அல்லாஹ்வே போதுமானவன். [167]சத்தியத்தை மறுத்து இறைவழியிலிருந்து மக்களைத் தடுத்துக் கொண்டிருந்தவர்கள் வழிதவறி மிகு தொலைவு சென்று விட்டனர். [168](சத்தியத்தை) மறுத்துத் தீவினை செய்தவர்களை அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான். அவர்களுக்கு(ச் சரியான) வழியையும் காட்டமாட்டான், [169]நரகத்தின் வழியைத்தவிர. அதில் அவர்கள் என்றென்றும் இருப்பர். இவ்வாறு செய்வது அல்லாஹ்விற்கு மிக எளிதானது. [170]மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து சத்தியத்துடன் இத்தூதர் உங்களிடம் வந்துள்ளார். எனவே (அவர்மீது) நம்பிக்கைகொள்ளுங்கள். அது உங்களுக்கு நன்மையாகும். (அவரை) நீங்கள் ஏற்க மறுத்தால் (அல்லாஹ்வுக்கு இழப்பு ஏதுமில்லை; ஏனெனில்) வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. அல்லாஹ் முற்றும் அறிந்தவன்; ஞானம் மிக்கவன்.

இறைத்தூதரின் தூதுத்துவத்தின் போது, யூதர்கள் இறைவனின் மார்க்கத்திற்கான பிரதிநிதிகள் என்ற தகுதியைக் கொண்டிருந்தனர். அவர்கள் மதத்தின் பெரிய பெரிய பதவிகளை வகித்தனர். தங்களைத் தவிர வேறு யாரையும் பெரியவர்களாக ஒப்புக்கொள்வது அவர்களுக்கு ஏற்புடையதாக இல்லை. இறைவனின் செய்தியை மனிதகுலத்திற்கு வழங்குவதற்காக இறைத்தூதர் இறைவனால் அனுப்பப்பட்டதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். நாங்கள் மதத்தின் ஏகபோகவாதிகள் என்றும், நாங்கள் ஒரு நபரின் மார்க்கம் சார்ந்த உண்மைத்தன்மையை ஏற்காவிட்டால், உண்மையாகவே அவன் ஏற்கப்படாதவனாக ஆகிவிடுவான் என்றும் அவர்கள் நினைத்தார்கள். ஆனால் இந்தப் பிரபஞ்சம் இறைவனின் பிரபஞ்சம் என்பதையும், அதன் அமைப்பை இறைவனின் கீழ்ப்படிதலுள்ள வானவர்கள் நடத்துகிறார்கள் என்பதையும் அவர்கள் மறந்துவிட்டார்கள். எனவே, இங்கே ஒருவரைப் பற்றிய உண்மையான உறுதிப்படுத்தல் இறைவனிடமிருந்து வருவதும் பிரபஞ்சத்தின் முழு அமைப்பால் ஆதரிக்கப் படுவதுமாகும். உண்மையில், இறைவனும் அவனுடைய முழுப் பிரபஞ்சமும் அவனுடைய இறைத்தூதருடன் இருக்கிறது. சுயமாக உருவாக்கப்பட்ட யாருடைய கூற்றுகளுடனும் அல்ல.

இறைவனின் அழைப்புக்கு இந்த எதிர்வினையைக் காட்டுபவர்கள், அதாவது அதை மறுத்து மக்கள் அதை ஆதரிப்பதைத் தடுப்பவர்கள்

கீழ்ப்படிதலின் சரியான இலக்கிலிருந்து வெகுதூரம் விலகிச் சென்று விட்டார்கள் என்பதையே நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். முழுப் பிரபஞ்சமும் மறுக்கும் ஒன்றை அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் எத்தகைய திட்டத்திற்கு எதிராக ஒரு முன்னணியை உருவாக்குகிறார்கள் என்றால் வானத்திற்கும் பூமிக்கும் அதிபதியானவன் அதற்குப் பின்னால் நின்றுகொண்டிருக்கிறான். இந்த உலகில் இதைவிடப் பெரிய அறியாமை எதுவும் இல்லை என்பது வெளிப்படை. இப்படிப்பட்டவர்கள் மார்க்கத்தின் பெயரால் மார்க்கப்பற்றுக்கு எதிராகச் செயல்படுகிறார்கள். இவ்வகையான கொடிய அணுகுமுறையை விரும்புபவர்களின் மனம், ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக மறுப்பின் திசையை நோக்கி நடக்கத் தொடங்குகிறது. அவர்கள் நாளுக்கு நாள் உண்மையிலிருந்து விலகிக் கொண்டே செல்கிறார்கள். இறுதியில் நிரந்தர அழிவின் குழியில் போய் விழுகிறார்கள். இறைவனின் அழைப்பை மறுப்பது இறைவனையே மறுப்பதற்குச் சமம். அதைப் புரிந்துகொள்வது யாருக்கும் கடினமாக இருக்கக் கூடாது என்பதற்காகவே, இறைவனின் அழைப்பு தன்னிடம் மிகவும் தெளிவான வாதங்களைக் கொண்டிருக்கும். இவ்வாறிருப்பினும், இறைவனின் அழைப்பை மறுப்பவர்கள் இறைவனுக்கு முன்பாக ஆணவத்துடன் செயல்படுகிறார்கள். இறைவனிடத்தில் ஆணவம் மிகப் பெரிய குற்றமாகும்.

மனிதன் தன் இதயத்தின் சாளரங்களைத் திறந்து வைத்திருந்தால், இறைவனின் அழைப்பு அவனது தேடலுக்குச் சரியான பதிலாக இருக்கும் என்பதைக் காண்பான். மனித வார்த்தைகளில் மறைந்திருந்த சத்தியத்தை, அதன் தூய்மையான வடிவத்தில் அறிவிக்க இறைவன் ஏற்பாடு செய்திருப்பதை அவன் உணர்வான். இது இறைவனின் அறிவு ஞானம் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்; எந்த ஒரு நபரின் தனிப்பட்ட வைராக்கியத்தின் முடிவுமல்ல.

يٰٓاَهۡلَ الۡكِتٰبِ لَا تَغۡلُوۡا فِىۡ دِيۡنِكُمۡ وَ لَا تَقُوۡلُوۡا عَلَى اللّٰهِ اِلَّا
الۡحَـقَّ ؕ اِنَّمَا الۡمَسِيۡحُ عِيۡسَى ابۡنُ مَرۡيَمَ رَسُوۡلُ اللّٰهِ وَكَلِمَتُهٗ ۚ
اَلۡقٰٮهَاۤ اِلٰى مَرۡيَمَ وَ رُوۡحٌ مِّنۡهُ ۫ فَاٰمِنُوۡا بِاللّٰهِ وَ رُسُلِهٖ ۚ وَ لَا
تَقُوۡلُوۡا ثَلٰثَةٌ ؕ اِنۡتَهُوۡا خَيۡرًا لَّكُمۡ ؕ اِنَّمَا اللّٰهُ اِلٰهٌ وَّاحِدٌ ؕ سُبۡحٰنَهٗۤ
ۚ اَنۡ يَّكُوۡنَ لَهٗ وَلَدٌ ۘ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَ مَا فِى الۡاَرۡضِ ؕ وَ كَفٰى
بِاللّٰهِ وَكِيۡلًا ۝ لَنۡ يَّسۡتَنۡكِفَ الۡمَسِيۡحُ اَنۡ يَّكُوۡنَ عَبۡدًا لِّلّٰهِ وَلَا
الۡمَلٰٓئِكَةُ الۡمُقَرَّبُوۡنَ ؕ وَ مَنۡ يَّسۡتَنۡكِفۡ عَنۡ عِبَادَتِهٖ وَ يَسۡتَكۡبِرۡ

فَسَيَحْشُرُهُمْ اِلَيْهِ جَمِيْعًا ﴿١٧٢﴾ فَاَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ
فَيُوَفِّيْهِمْ اُجُوْرَهُمْ وَيَزِيْدُهُمْ مِّنْ فَضْلِهٖ ۚ وَاَمَّا الَّذِيْنَ
اسْتَنْكَفُوْا وَاسْتَكْبَرُوْا فَيُعَذِّبُهُمْ عَذَابًا اَلِيْمًا ۙ وَّلَا يَجِدُوْنَ
لَهُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ وَلِيًّا وَّلَا نَصِيْرًا ﴿١٧٣﴾

[171]வேதமுடையோரே! நீங்கள் உங்கள் மார்க்க(விஷய)த்தில் வரம்பு கடந்து சென்று விடாதீர்கள். அல்லாஹ்வைக் குறித்து உண்மையைத் தவிர வேறு எதையும் கூறாதீர்கள். மர்யத்தின் மைந்தர் இயேசு மஸீஹ் அல்லாஹ்வின் தூதரும் அவனது வார்த்தையும் ஆவார். அதை அவன் மர்யத்திடம் அளித்தான். அவர் அவனிடமிருந்து வந்த ஓர் ஆன்மாவே ஆவார். எனவே அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர்களின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். ''(தெய்வங்கள்) மூன்று'' என்று கூறாதீர்கள். அவ்வாறு கூறுவதை விட்டுவிடுங்கள். அதுவே உங்களுக்குச் சிறந்ததாகும். அல்லாஹ் மட்டுமே ஒரே இறைவன். அவனுக்கு மகன் இருப்பதாகச் சொல்லப்படுவதிலிருந்து அவன் மிகவும் (அப்பாற்பட்டுத்) தனித்துயர்ந்தவன். வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனுக்கே உரியன. (அனைத்திற்கும்) பொறுப்பேற்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன். [172]அல்லாஹ்வின் அடியாராக இருப்பதை மஸீஹும் நெருக்கமான வானவர்களும் ஒருபோதும் இழிவாக எண்ணமாட்டார்கள். ஆனால் அவனை வணங்குவதை இழிவெனக் கருதிச் செருக்குக் கொள்வோர் அனைவரையும் அல்லாஹ் ஒன்று திரட்டித் தன்முன் கொண்டுவருவான். [173]நம்பிக்கைகொண்டு நற்செயல்கள் புரிவோருக்கு அவர்களுடைய கூலியை அவன் நிறைவாக வழங்குவான். தன் அருளால் அவர்களுக்கு (நன்மையை) மிகுதிப்படுத்தவும் செய்வான். ஆனால் அவனை வணங்குவதை இழிவெனக் கருதிச் செருக்குக்கொள்வோருக்குத் துன்புறுத்தும் வேதனையைத் தருவான். அவர்கள் அல்லாஹ்வுக்கு எதிராக உதவி செய்யவோ காப்பாற்றவோ யாரையும் காணமாட்டார்கள்.

மனிதனுக்கு ஒரு பலவீனம் உண்டு, ஒரு விஷயத்தில் ஒரு தனித்துவமான அம்சத்தைக் காணும்போது, அதைப் பற்றிய மிகைப்படுத்தப்பட்ட கற்பனையை அவன் நிறுவிக்கொள்கிறான். அதன் இடத்தைத் தீர்மானிப்பதில் அவன் வரம்புகளை மீறிப் போய்விடுகிறான். இதன் பெயர்தான் மிகைப்படுத்தல் என்பது. இணைவைத்தலும் ஆளுமை வழிபாட்டின் அனைத்து வடிவங்களும் அடிப்படையில் இந்த மிகைப்படுத்தலின் விளைச்சலாகும்.

மிகைப்படுத்தல் என்பது மார்க்கத்தில் உள்ள ஒரு விஷயத்தின் உண்மையான படிநிலையில் அதை வைக்காமல், அதை மிகைப்படுத்தி அதற்குரியதைவிட ஓர் உயர்ந்த தகுதியை வழங்க முயற்சி செய்வதாகும். இறைவன் தனது அடியார்களில் ஒருவரைத் தந்தை இல்லாமல் படைத்தால், அவரை இறைவனின் மகன் என்று கூறிவிடுவதும் இத்தகையதே. இறைவன் ஒருவருக்கு உயர்ந்த பதவியை வழங்கினால், அவர் ஒரு மேன்மையான ஆளுமை என்றும் மனிதத் தவறுகளிலிருந்து விடுபட்டவர் என்றும் புரிந்து கொள்வது மிகைப்படுத்தல்தான். உலகின் மினுக்கொளியைத் தவிர்க்க வலியுறுத்தப்பட்டால், அதை மிகைப்படுத்தி உலகைத் துறப்பது வரை எடுத்துச் செல்வதும் இத்தகைய மிகைப்படுத்தல்தான். வாழ்க்கையின் ஓர் அம்சத்தைப் பற்றிச் சில கட்டளைகள் வழங்கப்பட்டால், அவை மிகைப்படுத்தப்பட்டு, அவற்றின் அடிப்படையில் ஒரு முழு மதத் தத்துவத்தையே உருவாக்கி விடுவதும் இதில் அடங்கும். ஒரு மார்க்க விஷயத்தை அதற்குரிய உண்மையான படிநிலைக்கு அப்பால் உயர்த்துவதன் மூலம் மிகையான தகுதியை வழங்கும். இத்தகைய அனைத்து வடிவங்களும் மிகைப்படுத்தல் பட்டியலில் சேர்க்கப்படும்.

எல்லா வகையான ஆற்றல்களும் இறைவனுக்கு மட்டுமே சொந்தமானவை. அவனைத் தவிர மற்ற அனைத்தும் அவனுக்கே பணிந்தவை, கீழ்ப்படிந்தவை. மனிதன் தனது மெய்யுணர்வின் முழுமையான நிலையை அடையும்போது, இறைவன் எல்லாவற்றின் மீதும் பேராற்றல் உடையவன் என்பதையும் அவனுடன் ஒப்பிடும்போது மனிதன் முற்றிலும் உதவியற்றவன் என்பதையும் கண்டுபிடிக்கிறான். இந்த விழிப்புணர்வில் இறைத்தூதர்களும், வானவர்களும் முன்னணியில் உள்ளனர். எனவே அவர்கள் இறைவனின் பேராற்றலையும் தங்கள் சொந்த உதவியற்ற தன்மையையும் ஒப்புக் கொள்வதில் கூட முன்னணியில் இருக்கிறார்கள். ஒப்புக்கொள்ளுதல் என்பது மனிதனின் உண்மையான சோதனை. தனது உதவியற்ற தன்மையை உணர்ந்தவன் இறைவனுடன் தனது உறவைப் பெற்றுவிட்டான். தனது உதவியற்ற தன்மையை உணராத எவனும் இறைவனின் முன்னிலையில் தனக்கான இடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டவன். முதல் மனிதன் பார்வையுடையவன், அவன் வெற்றிகரமாகத் தன் இலக்கை அடைந்துவிடுவான், இரண்டாமவன் பார்வையற்றவன், அவன் அவமானக் குழியில் போய் விழும் வரை அலைவதைத் தவிர வேறு முடிவே இல்லை.

يَاَيُّهَا النَّاسُ قَدْ جَآءَكُمْ بُرْهَانٌ مِّنْ رَّبِّكُمْ وَ اَنْزَلْنَاۤ اِلَيْكُمْ
نُوْرًا مُّبِيْنًا ﴿۱۷۴﴾ فَاَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَ اعْتَصَمُوْا بِهٖ
فَسَيُدْخِلُهُمْ فِيْ رَحْمَةٍ مِّنْهُ وَفَضْلٍ ۙ وَّ يَهْدِيْهِمْ اِلَيْهِ

صِرَاطًا مُّسْتَقِيْمًا ﴿١٧٥﴾ يَسْتَفْتُوْنَكَ ؕ قُلِ اللّٰهُ يُفْتِيْكُمْ فِى الْكَلٰلَةِ ؕ
اِنِ امْرُؤٌا هَلَكَ لَيْسَ لَهٗ وَلَدٌ وَّلَهٗۤ اُخْتٌ فَلَهَا نِصْفُ مَا تَرَكَ ۚ
وَهُوَ يَرِثُهَاۤ اِنْ لَّمْ يَكُنْ لَّهَا وَلَدٌ ؕ فَاِنْ كَانَتَا اثْنَتَيْنِ فَلَهُمَا
الثُّلُثٰنِ مِمَّا تَرَكَ ؕ وَاِنْ كَانُوْۤا اِخْوَةً رِّجَالًا وَّنِسَآءً فَلِلذَّكَرِ
مِثْلُ حَظِّ الْاُنْثَيَيْنِ ؕ يُبَيِّنُ اللّٰهُ لَكُمْ اَنْ تَضِلُّوْا ؕ وَاللّٰهُ بِكُلِّ شَىْءٍ
عَلِيْمٌ ﴿١٧٦﴾ ع ٢٤

[174]மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு ஒரு சான்று வந்துவிட்டது; நாம் உங்கள்மீது ஒரு தெளிவான ஒளியை அருளியுள்ளோம். [175]எனவே அல்லாஹ்வின்மீது நம்பிக்கை கொண்டு அவனை உறுதியாகப் பற்றிக்கொண்டவர்களை உறுதியாக அல்லாஹ் தனது பரிவிலும் அருளிலும் நுழையச் செய்வான். அவர்களுக்குத் தன்னிடம் வருவதற்கான நேர்வழியையும் காட்டுவான். [176](நபியே!) அவர்கள் உம்மிடம் மார்க்கத் தீர்ப்புக் கேட்கின்றனர். நீர் கூறுவீராக! ''அல்லாஹ் உங்களுக்கு நேரடி வாரிசற்ற சொத்தைப் பற்றி இவ்வாறு கட்டளையிடுகிறான்: குழந்தைகள் யாரும் இல்லாத ஒருவர் இறந்து போய்விட அவருக்கு ஒரு சகோதரி மட்டும் இருந்தால் அவளுக்கு அவரின் சொத்தில் பாதிப் பங்கு உண்டு. குழந்தைகள் யாருமில்லாத ஒரு பெண் இறந்தால் அவள் சகோதரன் அவளுக்கு வாரிசாவான். (இறந்து போனவருக்கு) இரண்டு சகோதரிகள் இருந்தால் அவர்களுக்கு அவரது சொத்தில் மூன்றில் இரண்டு பங்கு உண்டு. ஆண்கள், பெண்கள் என உடன்பிறந்தோரில் பலர் இருந்தால் அவர்களில் இரண்டு பெண்களுக்குச் சமமான பங்கு ஓர் ஆணுக்கு உண்டு. நீங்கள் வழிதவறி விடக் கூடாது என்பதற்காக அல்லாஹ் உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறான். அல்லாஹ் அனைத்தையும் முற்றும் அறிந்தவன்.''

மனிதர்களுக்கு முன்பாக இறைவனின் அழைப்பு எழும்போது, அது இருளை அகற்றி எதார்த்தங்களைக் கடைசி எல்லை வரை ஒளிரச் செய்யும் அளவுக்கு வெளிப்படையான வடிவத்தில் எழுகிறது. இத்துடன் அது சான்றுகளின் ஆயுதங்களைக் கொண்டு தயார் நிலையில் இருக்கிறது, அதை மறுப்பது யாருக்கும் சாத்தியமில்லை. அவர்கள் அதை கேலி செய்யலாம்.

ஆனால் வாதங்களின் மொழியில் அதனை மறுக்க முடியாது. இறைவன்தான் சூரியனை வெளியே கொண்டு வருகிறான். அதனால் ஒளியும் இருளும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிகின்றன. இறைவனின் இதே ஆற்றல் அவனுடைய அழைப்பிலும் வெளிப்படுகிறது. இதற்குப் பிறகு, உண்மையும் பொய்யும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்துவிடுகின்றன. எப்படியென்றால் இதனால் கண்கள் உள்ள எவரும் அவற்றை அறிந்துகொள்ளாமல் இருக்க வாய்ப்பில்லை. இருப்பினும் சூரியனைப் பார்க்க மனிதன் கண்களைத் திறக்க வேண்டும். அதேபோல், இறைவனின் அழைப்பிலிருந்து வழிகாட்டுதலைப் பெற மனிதன் அதில் கவனம் செலுத்துவது அவசியம். கவனம் செலுத்தாதவன் இறைவனின் அழைப்பிற்கிடையில் இருந்தும்கூட அழைப்பை இழந்தவனாகவே இருப்பான்.

இத்துடன், சத்தியத்தை உறுதியாகப் பற்றிக் கொள்வதும் அவசியமாகும். ஏனென்றால் தற்போதைய உலகம் சோதனை உலகம். இங்கே, சாத்தான் ஒவ்வொரு மனிதனின் பின்னாலும் ஒட்டிக்கொண்டிருக்கிறான், பல்வேறு வழிகளில் அவர்களை ஏமாற்றி சத்தியத்திலிருந்து அவர்களைப் பிறழ வைக்கிறான். மனிதன் சாத்தானின் தூண்டுதல்களை எதிர்த்துப் போராடி சத்தியத்தை ஆதரிக்க முடிவு செய்யாவிட்டால், சாத்தான் உறுதியாக அவனை நடுவிலேயே பறித்துக் கொண்டு போய் விடுவான். இருப்பினும், இந்தச் சோதனைகள் நிறைந்த உலகில் மனிதன் தனியாக இல்லை. இறைவனை நோக்கி நடக்க விரும்புவோர் ஒவ்வொரு திருப்பத்திலும் இறைவனின் வழிகாட்டுதலைப் பெறுவார்கள். இறைவனின் உதவியுடன் அவர்கள் தங்கள் இலக்கை அடைவதில் வெற்றி பெறுவார்கள். மனிதன் சத்தியத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் நிலையை அடையும் போது, தூய்மையான சத்தியத்தில் உறுதியாக நிற்கவும் மற்ற பாதைகளில் வழிதவறிச் செல்வதைத் தவிர்க்கவும் இறைவனின் உதவியுடன் அவனுக்குள் இந்தத் திறன் வெளிப்படத் தொடங்கிவிடுகிறது.

வாரிசுரிமை, மரபுரிமை குறித்த தீர்ப்புகளை விளக்கும் வேளையில் ‘நீங்கள் வழிதவறி விடக் கூடாது என்பதற்காக இறைவன் உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறான்’ என்கின்ற கூற்று, வாரிசுரிமை, மரபுரிமை சொத்து தொடர்பான பிரச்சினை ஆகியவை சாதாரண பிரச்சினைகள் அல்ல என்பதைக் காட்டுகிறது. இறைவன் வகுத்துள்ள விதிகளைப் பின்பற்றத் தவறுவது மனிதனைக் கெடுவழியின் படுகுழிக்குள் தள்ளிவிடும் என்பதை உணர்த்துவது இது.

‘தஸ்கீருல் குர்ஆன்’ ஆசிரியர்
மவ்லானா வஹீதுத்தீன் கான்

1925ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி உத்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள ‘ஆஸம்கர்’ எனும் ஊரில் பிறந்து வளர்ந்து, மரபு வழியில் இஸ்லாமியக் கல்வியைப் பயின்று, பல ஆண்டுகளாக தில்லியில் வசித்து வந்த இஸ்லாமிய மார்க்கத்தின் மாபெரும் அறிஞர் மவ்லானா வஹீதுத்தீன்கான் அவர்கள். தமது தொன்னூற்று ஆறாவது வயதில் 21-04-2021 அன்று காலமான மவ்லானா அவர்கள் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்லாமிய மார்க்கப் பணியையும் எழுத்துப் பணியையும் எவ்விதத் தொய்வுமின்றி செய்துவந்தவர்.

இஸ்லாம் குறித்த பல தவறான கருத்துக்களைக் களைந்து ‘இஸ்லாம் ஓர் அமைதி மார்க்கம்’ என்பதைத் தம்முடைய கட்டுரைகள் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் தொடர்ந்து பரப்பி வந்தவர்; உலக அமைதிக்காகவும் மத நல்லிணக்கத்திற்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.

உலக அமைதிக்கான மவ்லானாவின் பங்களிப்பை அங்கீகரித்துப் பல்வேறு நாடுகளும் அமைப்புகளும் அவருக்கு விருதுகளை வழங்கி கவுரவித்துள்ளன. அவற்றுள் சில:

1) Demiurgus Peace International Award by the Nuclear Disarmament Forum AG.
2) Padam Bhushan
3) Rajiv Gandhi National Sadbhavna Award
4) Sayyidina Imam Al Hassan Ibn Ali Peace Award in Abu Dhabi
5) Padma Vibhushan (second&highest civilian award& 2021)

பன்மொழிப் புலமை கொண்ட மவ்லானா அவர்கள், உருதுவிலும் ஆங்கிலத்திலுமாக 200க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவை அனைத்தும் பல்வேறு தலைப்புகளைக் கொண்ட ஆய்வு நூல்கள். மவ்லானாவின் சுய முன்னேற்ற நூல்கள், பலருடைய வாழ்க்கையை மாற்றி அமைத்த சிறப்பிற்குரியவை.

1976இல் மவ்லானா அவர்கள் உருது மொழியில் தொடங்கிய ‘அர்ரிஸாலா’ எனும் மாத இதழ், கடந்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக இடைவெளியின்றி தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

இதன் ஆங்கில வடிவம் Spirit of Islam எனும் பெயரில் பெங்களூருவிலிருந்து வெளியிடப்பட்டு வருகிறது.

மவ்லானா அவர்கள் உருது மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திருக்குர்ஆனின் எளிய தமிழாக்கம் செம்பதிப்பாகத் தமிழில் வெளிவந்து மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. தற்போது மவ்லானா அவர்களின் உருது விரிவுரையான 'தஸ்கீருல் குர்ஆன்' தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

'தஸ்கீருல் குர்ஆன்' ஆங்கில மொழிபெயர்ப்பாளர்
டாக்டர் ஃபரீதா கானம் (பிறப்பு : 02-05-1952)

பத்ம விபூஷன் விருதுபெற்ற இந்தியாவின் முதுபெரும் மார்க்க அறிஞர் மவ்லானா வஹீதுத்தீன் கான் அவர்களின் மகள் ஆவார். இவர் டெல்லி பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் முதுகலைப் பட்டமும், ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியக் கல்வியியல் துறையில் முனைவர் பட்டமும் பெற்றவர். தாம் படித்த ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக் கழகத்திலேயே இஸ்லாமியக் கல்வியியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

தற்போது புது டெல்லியின் Centre for peace and spirituality International (உலக அமைதி மற்றும் ஆன்மிக மையம்) அமைப்பின் தலைவராகவும் இருந்து வருகிறார். இஸ்லாமிய மார்க்கத்தில் அமைதி, ஆன்மிகம் ஆகியவற்றை விளக்கும் பல முக்கியமான நூல்களை இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். பல்வேறு ஆங்கில நாளிதழ்களில் தொடர்ந்து ஆன்மிகக் கட்டுரைகளை எழுதி வருகிறார்.

குறிப்பாக இவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குர்ஆனும் அதன் விளக்கவுரையான தஸ்கீருல் குர்ஆனும் பெரிய அளவில் அனைவராலும் பாராட்டப்பட்டவை.

‘தஸ்கீருல் குர்ஆன்’ தமிழ் மொழிபெயர்ப்பாளர்
டாக்டர் சையத் ரஃபீக் பாஷா (பிறப்பு : 05–05–1963)

எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், தயாரிப்பாளர், இயக்குநர், கவிஞர், சொற்பொழிவாளர் எனப் பன்முக ஆளுமையாக விளங்குபவர். 1980இல் பத்திரிகையாளராகவும் நிருபராகவும் தமது பயணத்தைத் தொடங்கி பிறகு தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்து இறுதியில் கோவா, பெங்களூர், சென்னை தூர்தர்ஷன் மையங்கள் - அகில இந்திய வானொலி - சென்னை ஆகியவற்றின் நிகழ்ச்சித் தலைவராக இருந்து 2023ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றவர்.

உருதுவைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தபோதும் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளிலும் அசாதாரணப் புலமையைக் கொண்டிருக்கிறார். உருதுவிலும் தமிழிலும் பல்வேறு கவிதைத் தொகுப்புகளையும் மொழிபெயர்ப்புகளையும் வெளியிட்டிருக்கிறார். கலை, இலக்கியத்திற்கான தம்முடைய நிகரற்ற பங்களிப்பிற்காகப் பல்வேறு உயரிய விருதுகளைப் பெற்றிருக்கிறார். உருதுவிலும் தமிழிலும் பல்வேறு கவிதைத் தொகுப்புகளையும் மொழிபெயர்ப்புகளையும் வெளியிட்டிருக்கிறார். ‘காலிப் கவிதைகள்’ இவற்றில் குறிப்பிடத்தக்கது. கலை, இலக்கியத்திற்கான தம்முடைய நிகரற்ற பங்களிப்பிற்காகப் பல்வேறு உயரிய விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடும் இஸ்லாமிய இலக்கியங்களின் விரிவான வாசிப்பையும் கொண்டிருப்பவர். தற்போது மவ்லானா வஹீதுத்தீன் கான் அவர்களின் புகழ்பெற்ற குர்ஆன் விரிவுரையான ‘தஸ்கீருல் குர்ஆனை’த் தொடர்ந்து மொழிபெயர்த்து வருகிறார்.

‘தஸ்கீருல் குர்ஆன்’ தமிழ் மேலாய்வாளர்
டாக்டர். ஹபீபுல்லாஹ் (அபி) (பிறப்பு : 02–05–1952)

இலக்கிய உலகில் ‘அபி’ எனும் பெயரால் அறியப்படுகிறார். தேனி மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். தற்போது மதுரையில் வசித்து வருகிறார். அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் நாற்பது ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தம்முடைய இணையற்ற கவிதைகளால் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றுக் கொண்டவர். ‘அபி கவிதைகள்’ எனும் பெயரில் இவருடைய முழுமையான கவிதைத் தொகுப்பு

வெளியாகியுள்ளது. தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் அழங்கால் பட்ட மூத்த அறிஞர் இவர்.

தமிழக அரசின் விருது உட்பட இதுவரைப் பல்வேறு குறிப்பிடத்தக்க இலக்கிய விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

2022-இல் குட்வேர்ட் பதிப்பகத்தின் மூலமாக வெளியிடப்பட்ட திருக்குர்ஆனின் தமிழ் மொழிபெயர்ப்பைச் செம்மைப்படுத்தினார். தற்போது இவருடைய மேலாய்வின் கீழ் மவ்லானா வஹீதுத்தீன் கான் அவர்களால் உருதுவில் எழுதப்பட்ட புகழ்பெற்ற திருக்குர்ஆன் விரிவுரையான 'தஸ்கீருல் குர்ஆன்' தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

- 'தஸ்கீருல் குர்ஆன்' எனும் இந்த விரிவுரையில் திருக்குர்ஆனின் அடிப்படையான பேசுபொருளும் அதன் அடிப்படையான நோக்கமும் சிந்தனைக்கான குவிமையமாகக் கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக - இறைவனைக் கண்டறிதல், இறைநெருக்கம், இறைநினைவு, மறுமையின் சிந்தனை, இஸ்லாமிய அழைப்புப்பணி, ஆக்கபூர்வமான சிந்தனை, அமைதி, ஆன்மிகம் போன்றவை.

- இதில் திருக்குர்ஆனின் அழைப்பு - நினைவூட்டல் ஆகியவை குறித்த அம்சங்கள் சமகால நடையில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

- ஆழ்ந்து சிந்திப்பதன் மூலம் பிரபஞ்சத்தில் பரவிக் கிடக்கின்ற இறைவனின் சான்றுகளின் மூலம் எவ்வாறு படிப்பினை பெறுவது என்பது குறித்தும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

- இவ்வாறு இந்த விரிவுரை திருக்குர்ஆனின் ஓர் உண்மையான மாணவனுக்குக் குர்ஆனை அறிந்து கொள்வதற்கான திறவுகோலாக இருக்கிறது.

- இந்த விரிவுரை ஒரே நேரத்தில் பொதுமக்கள்- அறிஞர்கள் ஆகிய இரு பிரிவினருக்கும் மிகுந்த பயன் தரக்கூடியதாக இருக்கிறது.

CPS International
centre for peace & spirituality
www.cpsglobal.org
info@cpsglobal.org

Goodword
www.goodwordbooks.com
info@goodwordbooks.com
chennaigoodword@gmail.com

9 789349 952478

₹ 440.00